ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

அஸ்வமேதபர்வம்.

இஃது

தஞ்சைமாநகரம்.

பாலாநந்தசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு.

திரிசிரபுரம்

தியாகராசபிள்ளையும்

திரு-அருணசலமுதலியாரும்

கேட்டுக்கொண்டபடி

சைதாப்பேட்டை

தேசப்பசெட்டியார்

குமாரராகிய

வீரபத்திரசெட்டியார்

அவர்களது

லக்ஷ்மிவிலாசஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸாதாரண௵ கார்த்திகைமீ

இதன்விலை-ரூபா-அ.

ஹரி

உ

ஸ்ரீராமஜெயம்.

அஸ்வமேதபர்வம்.

வியாசபகவான் தோத்திரம்.

(சுலோகம்.)

வியாசம்வஸிஷ்டநப்தாரம்சக்தேபௌத்ரமகல்மஷம் *
பராசராதமஜம்வந்தேசுகதாதம்தபோநிதிம் .... *
வியாசாயவிஷ்ணுரூபாயவியாசரூபாயவிஷ்ணவே......*
நமோவைபிர்ம்மநிதயே வஸிஷ்டாயநமோநம..... .....*

இந்தப்படி வேதவியாசரைத்தோத்திரஞ்செய்து ஐந்தாம் வே
தமாகிய ஸ்ரீமத் மஹாபாரத சரித்திரத்தைச்சொல்லுகின்றோம். அஃ
தெப்படியென்றால், பூர்வத்தில் சந்திரவம்ஸ மகாராஜாவாகிய ஜெ
னமேஜெய மகாராஜாவானவர் மந்திரி பிரதானிகள் முதலான சேனை
களும் புடைசூழத்தக்கதாகச் சகல சம்பிரமத்துடன் ரத்ந சிங்காதன
த்தில் கொலுமுகமாக வீற்றிருக்கும்பொழுது அவரிடத்திற்குப் பர
மபாகவதசிகாமணியாகிய வேதவியாசர் சிஷ்யரென்கின்ற ஜெயமுனீ
ந்திரனென்னு மகாரிஷியானவர் எழுந்தருளிவந்தார். அப்போது அ
ரைக்கண்டு ஜெனமேஜெயமாராஜாவானவர் சிங்காதனத்தை விட்
ங்கி தண்டன்செய்து அவருக்கு அர்க்கியபாத்தியமுதலானசகல உ
ரங்களுஞ்செய்து பூசைசெய்து ஓராசனங்கொடுத்து அதன்மேலெழு
ந்தருளப்பண்ணி அந்த முனீஸ்வரரைப்பார்த்து ஜெனமேஜெய
ராஜாவானவர்ஓய்சுவாமிஜெயமுனீந்திரரே!பூர்வத்திலெங்கள்பாட்
ன தர்ம்மராஜாவானவர் அஸ்வமேதயாகஞ்செய்ததிவ்விய சரித்திர
ச்சொல்லியருளவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்தார். அதுகே
ஜெயமுனீந்திரரானவர் சந்தோஷிப்பட்டுச் சொல்லுகின்றார். ஓய்ஜெ
னமேஜெயமகாராஜனே! நீர் இப்பொழுது கேட்ட அஸ்வமேதயாக
ரமு

அஸ்வமேதபர்வம்.

...த்திரமானது வேதசாரமாகியும் மகாரஹஸியமாகியும்இருக்கிறது அதையாதாமொருத்தர் திரிகரணசுத்தியாயிருந்து கேட்பாராகில் அவர்கள்முற்பவத்திற்செய்துள்ள- கோஹத்தி- பிர்மஹத்தி- ஸ்திரீஹத்தி- சிசுஹத்தி- முதலானசகலபாபங்களுநீங்கி இம்மையிற்சகலபோகபோக்கியங்களையும் அனுபவித்து கிருதகிருத்தியராய் மறுமையில்ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய பாதாரவிந்தங்களையும்பெறுவார்கள் அப்படிப்பட்ட புண்ணியசரித்திரத்தைச் சொல்லுகிறோம் நீ கேட்பாயாகவென்று ஜெயமுனீந்திரரானவர் தனது ஆசிரியராகிய வேதவியாசரைத் தியானஞ்செய்துக்கொண்டு ஜெனமேஜெய மஹாராஜாவுக்குச் சொல்லத்தொடங்கினார்.

அஃதெப்படியென்றால், கேளுமையா ஜெனமேஜெய மஹாராஜாவே முன்னே உங்கள் பாட்டனான தர்மராஜாவானவர் கவுரவர்களுடனே பதினெட்டுநாள்வரைக்கும் யுத்தஞ்செய்துஜெயம்பெற்று பட்டாபிஷேகராய் இருபத்தஞ்சுவருஷம் இராச்சிய பரிபாலனஞ்செய்துவருகிறநாளில் ஒருநாள் தர்மராஜாவானவர் கொலுவாயிருக்கும்பொழுது அவரிடத்திற்கு ஸ்ரீவேதவியாசமஹாமுனிவர் எழுந்தருளிவந்தார் அவரைக்கண்டு தர்ம்மராஜாவானவர் எழுந்திருந்து அவருக்குப் பூசைநமஸ்காரமுதலிய சகலஉபசாரங்களுஞ் செய்து அவரை ஒரு ஆசனத்திலெழுந்தருளச்செய்துஅவரைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கின்றார். ஓய்சுவாமி- அடியேன்வெகு பிரஜாக்ஷயம்பண்ணி அதனால் வெகுபாபங்களைச் சம்பாதித்துக்கொண்டேன் அதுவுமல்லாமல் கவுரவஸ்திரீகளெல்லாரும் எந்நேரமுங் கூகாவென்று அழுதுகொண்டிருக்கிறார்கள். அந்தஅகோரத்தைஎன்னால்கேட்டுச்சகிக்கமுடியவில்லை அல்லாமலும் சத்தியசந்தனராகியும் பரம பாகவதராகியும் பராக்கிரமசாலியாகியும் புண்ணியமூர்த்தியாகியும் எங்களைக்கிருபையுடனே வளர்த்து ரக்ஷித்தவராகியும் விளங்கியபீஷ்மாசாரியரை ரணக்களத்திலே ...டுக்கவைத்தேன் அதுவுமல்லாமல் பெரியவராகியும் பூததயவுள்ளவ...ராகியும் அகண்டிதவீரபராக்கிரமமுடையவராகியும் வில்லுக்குஆசிரி...ராகியும் அதிரதசிரேஷ்டராகியும் எங்கள் குருசிகாமணியாகியும் வி...ங்கிய துரோணாசாரியரைக் கொன்றுவிட்டேன் அதுவுமல்லாமல் பி...ாவுக்குப்பிதாவாயிருந்த கர்ணனைத்தமையனென்றுஎள்ளளவுமெண்...மல் இராச்சியபரிபாலன அபேக்ஷயினாலே கண்டித்துவிட்டேன் ...னும்- அண்ணன்- தம்பி- மாமன்- மைத்துனன்- உற்றார்- பெற்றார்சி...நேகிதர்முதலான மற்றுமுள்ள ராஜாக்களையுங்கொன்று வெகுபாபங்க...க்கட்டிக்கொண்டேன் ஆகையினால், சுவாமி! இந்தராச்சியவாஞ்சை மிகவுங்கெட்டது இது என்னராச்சியம் என்னசுகம் நான் இனிமேல் ஒருநிமிஷமாகிலும் இந்தராச்சியத்தைப்பரிபாலனம்செய்யமாட்டேன் ஆனபடியினால் இந்தராச்சியத்தை என்தம்பிமார்கையில்ஒப்பிவைத்துப்போ... நான் பரமபவித்திரனாய்க் காட்டுக்குப்போய் மரவுரி

யுபித்துக்கொண்டுசருகுஜலபக்ஷணஞ்செய்துதபசுபண்ணி சகலபா[வங்]களையும்போக்கடித்துக்கொண்டு கிருதகிருத்தியனாகின்றேன் அதற்குதேவரீர் அனுக்ஞைபண்ணவேண்டுமென்று தர்மபுத்திரமஹாராஜாவானவர்விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு வியாசமுனிவரானவர் புன்னகைகொண்டுதர்மராஜாவைப்பார்த்துச்சொல்லுகின்றார்.

ஓய்தர்ம்மநந்தனா! நாம்உனக்கு எத்தனையாகச்சொன்னாலுந்தெளிவுண்டாகவில்லை துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனஞ்செய்வதுராஜதர்மமேயல்லாமல் வேறல்ல, ஆனாலும்பூர்வத்தில் சூரியவம்சராசாவாகியஸ்ரீராமரானவர்இராவணாதிராக்ஷஸசம்ஹாரஞ்செய்துஅந்தப்பாவங்கள்போகத்தக்கதாகஅஸ்வமேதயாகஞ்செய்துபுண்ணியதேகராய்க்கிருதகிருத்தியராய்ப்பூலோகத்திற்கீர்த்திபெற்றிருந்தார் அவரைப்போல நீரும் அஸ்வமே தயாகஞ் செய்து சகலபாவங்களையும் போக்கடித்துக் கொள்ளும் இனிநீர் சந்தேகப்படவேண்டியதில்லையென்றுசொல்லஅதுகேட்டு தர்ம்மபுத்திரர் சந்தோஷசித்தராய்ஓய்சுவாமீ; முனிநாதா,தேவரீர் திருவாய்மலர்ந்தருளியபடியே அந்த அஸ்வமேதயாகத்தைச்செய்வோமென்றால் அதற்கு வெகுதிரவியஞ் செல்லுமே அவ்வளவு திரவியம் எனக்கு எப்படிகிடைக்கப்போகிறதென்று தர்ம்மராஜாவானவர் விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டுவேதவியாசர்சொல்லுகின்றார் ஓய்தர்ம்மநந்தனா நீர் திரவியத்தைக்குறித்து அணுவளவும்விசாரப்படவேண்டியதில்லை முன்பு சூரியவங்கிஷாதிபரான மருத்துமகாராஜாவென்கிறவர்அஸ்வமேதயாகஞ்செய்துஅபரிமிதமாய்ப்பிராமணாளுக்குவெகுதிரவியத்தைத்தானங்கொடுத்தார்அப்பொழுது அவர்கள் எடுக்கமாட்டாமல்அந்ததிரவியத்தை இமோர்ப்பர்வதத்தண்டையில் போட்டுவிட்டுப்போனார்கள் அந்ததிரவியத்தைஇப்போது நீர்எடுப்பித்துக்கொண்டுவந்து யாகஞ்செய்து முடிக்கலாமென்றுசொல்ல அதுகேட்டுதர்ம்மராஜாவானவர்சிந்தாக்கிராந்தராயக் கிலேசப்பட்டுவேதவியாசரைப்பார்த்துச்சொல்லுகின்றார் ஓய்சுவாமி முனிநாதரே தேவரீர் நல்லகாரியஞ் செய்யச்சொன்னீர் இது உமக்கு நன்றாயிருக்கிறதோ நான் முன்னேயேபிரஜாக்ஷயம்பண்ணி அந்தப் பாபத்தைப்போக்கடிப்பதற்குவழிகாணாம லிருக்கிறபோது பின்னையும்பிராமணாள் உடமையைஅபகரித்துக் கொண்டு அந்ததோஷமுஞ் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமோ இப்படிக்கொத்தகாரியம் நான் சொப்பனத்திலுஞ்செய்ப மாட்டேனென்று தர்ம்மபுத்திரர்சொல்ல அதுகேட்டு வேதவியாசர்சொல்லுகின்றார்.

ஓய் தர்ம்மதயாநிதீ நாம்பாபத்துக்கு அனுகூலமான காரியஞ்சொல்லுவோமோ அப்படி ஒருக்காலும் நீர்நினைக்கவேண்டாம் அந்தமருத்துமகாராஜா அஸ்வமேதயாகஞ்செய்து அநேகமாயிரம்பிராமணர்களுக்கு அவ்வவர்கள் ஆசைதணியத்தக்கதாக வெகுதிரவியத்தைத்தானங்கொடுக்கும்போது அந்தப்பிராமணர்களெல்லாம் வெகுசந்தோ

...த்துடனே தானம்வாங்கிக்கொண்டு எடுக்கமாட்டாமல் மெத்தவும் தாபந்திரியப்பட்டு அவரவர்கள் சுமக்கத்தகுந்த திரவியத்தை எடுத்துக்கொண்டு மிச்சமான திரவியத்தை இம்மோர்ப் பருவதத் தண்டையில் குப்பலாய்ப்போட்டு இந்ததிரவியத்தை எவர்கள்கண்டாலும் அவர்கள் சுகமாய் எடுத்துக்கொண்டு போகக்கடவர்களென்று சொல்லிப்போய் விட்டார்கள் அதுவுமல்லாமல் பூமியிலிருக்கிறபொருள்கள் தர்ம்மராஜாக்களுக்கென்றுவேதத்திற்சொல்லியிருக்கிறது ஆகையினால் நீரொன்றுக்கும் யோசனைபண்ணாமல் அந்ததிரவியத்தைஎடுப்பித்துக்கொண்டுவந்து யாகஞ்செய்யுமென்றுசொல்ல அதுகேட்டுதர்ம்மராஜாவும் அப்படியேநல்லதென்று சம்மதித்து ஓய் முனிசிரேஷ்டரே அந்த அசுவமேதயாகஞ்செய்கிறவிதம் எப்படி அதைநன்றாய் எனக்குத்தெரியச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதற்கு வேதவியாசபகவானானவர் தர்மமராஜாவைப்பார்த்துசொல்லுகிறார்.

கேளுமையா தர்ம்மநந்தனா அஸ்வமேதயாகஞ்செய்கிற விருத்தாந்தத்தைச்சொல்லுகிறோம் என்னவென்றால் அந்தயாகத்துக்குத்தகுந்தகுதிரையானது சரீரமுழுதும் வெளுப்பாகவும் வால் கறுப்பாகவும்-கழுத்தும்-வயிறுங்-குங்குமநிறமாகவும் -இடதுகாது பச்சைநிறமாகவும் வலதுகால் மஞ்சள்நிறமாகவும் உதடு பவளம்போலும் இருக்கவேண்டும் இப்படிக்கொத்த ஸ்வலக்ஷணமுள்ள அசுவத்தைக்கொண்டுவந்து ஸ்நானம் பண்ணுவித்து பூசைசெய்து மந்திர பூர்வகமாய்த் தோத்திரம்பண்ணிமந்திர ஆவாகனஞ்செய்து யாககுண்டத்தைப்பிரதக்ஷிணம்பண்ணுவித்துஉம்முடையபிரதாப சவுரியத்தை ஒருபொற்பட்டத்திலெழுதி அந்தப்பட்டத்தைஅஸ்வத்தினுடையநெற்றியிலேகட்டியிற்பாடு கந்தபுஷ்ப அக்ஷதைகளால் மந்திரபூர்வகத்துடன் அந்தஅஸ்வத்தைப்பூசித்துப் பிராமணர்களுக்கு அநேக தானங்கொடுத்து அதைஒருவருஷபரியந்திரம்பூமிப்பிரதக்ஷிணம்பண்ணுவித்து அங்கங்கே எதிர்த்துவந்தராஜாக்களையெல்லாஞ் சங்கரித்துஜெயம்பண்ணிகுதிரையைநடப்பித்துக்கொண்டுவந்து யாககுண்டத்தில் மந்திர பூர்வகத்துடன்யெக்கியம்பண்ணிதேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகங்களைக்கொடுத்து அந்தயாகஞ்செய்விக்கின்ற பிராமணர்களுக்குப் பின்னும் அநேகமாயிரம் பிராமணர்களுக்குத்தானங்கொடுக்கவேண்டும் அஃதெப்படியென்றால்,ஒவ்வொருத்தருக்கு-ஆனை-யொன்று-குதிரை,மூன்று தேர்-எழு-காளை,ஒன்பது ஸ்திரீகள்-நாலு-தங்கம் ஒருபாரம் இந்தப்பிரகாரங்கொடுத்துமஹாகீர்த்திப்பிரகாசத்தைப்பொருந்துமென்று சொல்ல அதுகேட்டுதர்ம்மபுத்திரர்சிந்தாக்கிராந்தனாய் விசாரப் பட்டு வேதவியாசனைப்பார்த்துச்சொல்லுகின்றார்.ஓய்சுவாமி! முனிநாதரே நன்றாச்சுது அஸ்மேதக்குதிரையைப்பிடித்துக்கொண்டுஎந்தராஜாக்களாகிலும் எதிர்த்தால்அந்தராஜாக்களுடனேபோராடும்படிசொன்னீரே! அப்ப[illegible]ப்பட்டபிரஜாக்ஷயமாய்க்-டும்பிரயத்தினமாயிருக்கிறகா

ரியம்நான்செய்யப்பயப்படுவேன் எனக்குப்பிரஜாக்ஷயமென்கிறகாரி
யத்தைநினைத்தாலும்சரீரம்நடுங்குகிறது மனது விசாரமாயிருக்கின்
றதுஆகையால்நான்எந்தவிதமாகஇந்தஅஸ்வமேதயாகத்தைச்செய்து
முடிப்பேன்சொல்லுமையாவென்றுவிண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு
வேதவியாசர்சொல்லுகின்றார்ஓய்தர்ம்மநந்தனா! நீர்அடிக்கடி இப்படி
சொல்லவேண்டாம்நாம் கட்டளையிட்டபடி நீர்அந்தயாகத்தைச் செய்
துமுடித்தால்(பிர்மஹத்தி)முதலாக எவ்வகைப்பட்ட மஹாபாதக
ங்களும் சூரியனைக்கண்டபனிபோலநீங்கிப்போம் இதுவல்லாமலும்
ஸ்ரீஅகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரிரு
க்கும்போது உம்முடையகாரியம் அனுகூலமாகாமற்போகுமோ! அ
ந்தகிருஷ்ணமூர்த்தியே புண்ணியபாவங்களுக்குக்காரணமானவர்ஆத
லால், அவருடையஅனுமதியினாலேஇந்தயாகத்தைச்செய்து நிறைவே
ற்றுமென்று வேதவியாசர்சொல்ல அதுகேட்டுதர்ம்மபுத்திரரானவர்
அந்தயாகத்திற்குத் தகுந்தகுதிரை எவ்விடத்திற் சம்பாதிக்கப் போகி
றேனென்றுசொல்ல அதுகேட்டுவேதவியாசர்சொல்லுகின்றார்.

ஓய்தர்ம்மநந்தனா! அஸ்வமேதயாகத்திற்குத்தகுந்தகுதிரையான
துபத்திராவதி பட்டணத்தையாளுகின்றஎவ்வர்ணாசுவமஹாராஜாவினி
டத்தில்யிருக்கின்றது அதைஉபாயமாகக்கொண்டுவரவேண்டும் அந்த
ராஜாவுக்குப் பத்து அக்குரோணிசேனைகளிருக்கின்றது அதுவுமல்லா
மல்அந்தராஜன் மஹாவீராதிவீரன் விஷ்ணுபக்தி யுடையவன் அப்
படிப்பட்டமகாபுருஷனிடத்திலிருக்கின்ற குதிரையைஎப்படியாவது
அழைப்பிக்கவேண்டுமென்றுசொல்ல அதுகேட்டுதர்ம்மராஜாவானவ
ர்சந்தோஷித்தராய்இதற்கெப்படியென்று ஆலோசனைசெய்யும்போ
து அந்தக்கொலுவிலிருக்கின்ற மஹாவீரபராக்கிரமசாலியாகிய வீம
சேனன்சொல்லுகின்றான். ஓய்அண்ணா! தர்ம்மதயாநிதீ! அடியேன்சொ
ல்லுகிறவிண்ணப்பத்தைக்கேளும் அஃதென்னவென்றால்; அந்தஎவ்வ
ர்ணாசுவனுடைய புஜபலபராக்கிரமமும் அவனுடைய சேனைகளின் பிர
தாபமும் எம்மாத்திரமென்றுயோசிக்கின்றீர் அவர்களையெல்லாம்என்
னுடைய கதாயுதத்துக்கிரையாகும்படி ஒருநொடியில்நறுக்கடித்து
அந்தராஜாவைக்கெலித்து அவனிடத்திலிருக்கிற அந்தஅஸ்வமேதக் குதி
ரையைநானேபோய்க்கொண்டுவருகிறேன் என்னுடைய பராக்கிரம
த்தைப்பாரும் அப்படிஜெயம்பெற்று அந்தஅஸ்வத்தைக் கொண்டுவ
ராமற்போவேனாகில் மாதா பிதாக்களைத் தூஷித்தபேர்கள் போகின்ற
பாபத்திலும் குருத்துரோகந் தெய்வத்துரோகஞ் செய்தவர்கள் போ
கின்றபாபத்திலும் போவேனென்று மகத்தாகிய சபதஞ்செய்தான்.
அதுகேட்டு தர்ம்மபுத்திரர்மனங்கலங்கிஓய்வீமசேனா! நீ கொஞ்சமா
கிலும்எதிரியினுடையபலாபலங்களை யோசிக்காமல் இப்படியாகப்பத
றிசபதஞ்செய்யலாமோ! அந்தராஜன் அதிகபலாட்டியன் அதுவுமல்லா
மல்(ஜயாபஜயம்) ஒருவர்பங்கல்லவே அப்படிக்கிருக்கநீஇப்படிசபத

அஸ்வமேதபர்வம்.

நசொல்லிவிட்டாயே அதற்குளன்னசெய்யலாமென்றுதர்ம்மராஜவானவர்யோசிக்கும்பொழுது அதுதெரிந்து கர்ணன்குமாரனாகிய விஷ்வகேதுசொல்லுகிறான்! ஓய்ஐயா!ராஜசேகரா! நீங்கள் இப்படியோசிக்கவேண்டுமோ? அந்தராஜன்பேரில் என்னை அனுப்பிவையுங்கள் என்சிறியதகப்பனாகியவீமசேனமகாராஜனை அப்புறம்வைத்துவிட்டுநான்ஒருவனாகத்தனித்துப்போய் பிரசண்டயுத்தஞ்செய்து அந்தராஜனையும்அவனுடைய ரதகஜதுரகபதாதிகளையுஞ்சின்னாபின்னப்படுத்திவிட்டுஜயலக்ஷ்மீசமேதனாய் ஜயபேரிகை முழங்கத்தக்கதாக அந்தஅஸ்வத்தைக்கொண்டுவருகிறேன் என்சாமர்த்தியத்தைச்சற்றே பாருங்களென்றுசொல்ல! அதுகேட்டுதர்ம்மராஜாவானவர்விசாரப்பட்டுஓய்குமாரகா!புத்திரரத்நமே! நாங்கள்உன்னை யுத்தத்துக்கு அனுப்பி விக்கிறதுதர்ம்மமல்லவே நீசிறுபிள்ளையாச்சுதே உன்னைச்சகலபோகபோக்கியங்களையும் அனுபவிக்கச்செய்வதும் நல்லஎவ்வர்ணஸ்திரீ களைக்கூடிலீலாவினோதமாயிருக்கச்செய்வது மல்லாமல்உன்னை யுத்தமுகத்திற்கு அனுப்புவதுநியாயமல்லவே இதுவுமல்லாமல் உன்தகப்பனாகியகர்ணனைத்தமையனென்று அறிந்துகொள்ளாமல்அர்ச்சுனன்கையில்கொல்லும்படிசெய்தேன்அந்ததுக்கமேயின்னமும்பொறுத்துமுடியாமல்உன்னைப்பார்த்துப் பொறுத்திருக்கிறேன்..ஆகையினால். நீசண்டைக்குப்போகவேண்டாமென் றுசொல்ல!அதுகேட்டுவிஷ்வகேது சொல்லுகிறான்.ஓய்ஐயா! நீர் இப்படிசந்தேகப்பட வேண்டாம் என்னுடையதகப்பனாகிய கர்ணன்நடுவுநிலைமையாகிய தர்மத்தைவிட்டு அதர்மமத்திற்குஉள்ப்புகுந்து துன்மார்க்கனான துரியோதனாதிகளுடன்கூடிக்கொண்டு உங்களுக்குவெகு ஆபத்துகளுண்டாக்கினபடியால் இரும்புடனேகூடின நெருப்புக்கும் அடிபடுமென்பதுபோலஅந்தக்கர்ணனும் மடிந்துபோனான், அதற்குநீங்கள்என்விசனப்படுகிறீர்கள் அப்படிவிசனப்படாமல் எனக்கு சண்டைக்கு அனுமதிபண்ணி அனுப்பிவையுங்கள் உத்தமக்ஷத்திரியராகப்பிறந்துசண்டைக்குப்பயப்படுவார்களோ! நீங்கள்ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்என்சவுரியபராக்கிரமத்தைநீங்களே சொல்லப்போகிறீகளென்றுசொல்ல!அதுகேட்டு தர்ம்மராஜாவானவர். சம்மதப்பட்டு இருக்கும்போதுவீமசேனன்பேரனும்கடோர்க்கசன் குமாரனுமாகிய மேகவர்ணன்சொல்லுகிறான்.

ஒய்பாட்டா! தர்ம்மசுகீபா!என்னுடைய விண்ணப்பத்தைக் கேளும்எங்கள்பாட்டன்- வீமசேனனும் - இந்தவிஷ்வகேதுவும் -அந்தராஜாவின்சேனைகளுடனே போராடி யுத்தம்பண்ணுகிறபோதுநான்என்னுடைய ராக்ஷதமாய்கைகளை யுண்டாக்கிஒருவருக்குந்தெரியாமல்பட்டணத்துட்புகுந்து அந்த அசுவத்தைப்பிடித்துக்கொண்டுஇவ்விடத்திற்கு வருகிறேன்ஓய்சுவாமி! எனக்குச்சிலவுசொடுமென்று இரண்டுகைகளையுங்கட்டிக்கொண்டுபத்தி விநயத்துடன்கேட்கஅதுகேட்டுதர்ம்மராஜா ஆச்சரியப்பட்டு ஒய்மேகவர்ணா! நீ சிறுபிள்ளை நீபோக

வேண்டாம் குதிரைவேண்டுமானால்-வீமசேனனும் -விஷ்வகேதுவும்
போகிறார்கள் நீ சுகமாய் சகல சவுக்கியங்களையுமனுபவித்துக்கொண்
டிருவென்றுசொல்ல! அதற்குமேகவர்ணன் நகைத்துபாட்டனாகிய தர்
ம்மராஜாவுக்குநமஸ்காரம்பண்ணிஎப்படியும் நான்போகவேண்டுமெ
ன்று அனுமதிபெற்றுக்கொண்டான். அப்போதுசூரியாஸ்தமான மா
ச்சுது அதுகண்டுவேதவியாசர் சந்தியானுஷ்டானக்கிரியைகளை முடி
த்துக்கொள்ள வேண்டிதம்முடைய ஆசிரமத்திற்கு எழுந்தருளினார்.
அப்பொழுது தர்ம்மராஜாவானவர்-பீமன்-அர்ச்சுனன்-நகுலன்-சகா
தேவர்களுடனும்மந்திரிசாமந்திரிகளுடனும் கொலுவைவிட்டெழுந்தி
ருந்துபோய்சந்தியானுஷ்டான ஜபதபங்களைமுடித்துக்கொண்டுமறு
படியும்வந்து சகலசேனைகளும் புடைசூழத்தக்கதாககொலுவாயிருந்
துதர்ம்மராஜாவானவர்தன்னைவியாசபகவான் அஸ்வமேதயாகம்பண்
ணச்சொன்னதும்தான்சம்மதித்ததும் எவ்வர்ஜுசுவன் பட்டணத்துக்
குவீமசேனன்-விஷ்வகேது-மேகவர்ணன்-இவர்கள்போகிறோமென்
றுசொல்லியவார்த்தையும்நினைந்துஇதுவெல்லாம்அசாத்தியமான
காரியமாயிருக்கிறதுஇதற்கென்னசெய்யலாம் இவைகளுக்கெல்லாம்
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியிருக்கிறாரென்று அவரைமனதிலே தியானித்துஓ
ய்கிருஷ்ணா! துவாரகாபுரிவாசா!வாசுதேவா!தேவகிநந்தனா!கோவிந்தா
ஹரீஹரீகோபாலா!அநாதரக்ஷகா!ஆபத்பாந்தவா!ஓய்சுவாமியென்று
அநேகவிதமாய்க்கொண்டாடிஅர்ச்சுனனைப்பார்த்துச்சொல்லுகிறார்
ஓய்அர்ச்சுனா!நீகாலமே துவாரகாபுரிக்குப்போய்நமதுகுருசுவாமியா
கியஸ்ரீகிருஷ்ணதேவரைஅழைத்துக்கொண்டுவாநமக்குஅவரையல்லா
மல்ஒருகாரியமும்நடவாதென்றுசொல்லஅப்படியேநல்லதென்றுஅர்
ச்சுனராஜனும் சம்மதித்திருக்கஅந்தச்சமயத்தில்வாசல்காக்கிறதலையா
ரிகள்வந்து தெண்டனிட்டு ஓய்ஐயா!ராஜேந்திரா,ராஜமார்த்தாண்டா,
ராஜகெம்பீரா!ராஜசேகரா;இதோ அரமனைவாசலில் லோககர்த்தா வா
கியஸ்ரீகிருஷ்ணதேவர்வந்திறங்கி அரமனைக்குள்வரலாமாவென்றுகேட்
கச்சொன்னார்அந்தசேதிதேவரீர்சித்தமறியவேண்டுமென்றுவிண்ணப்
பஞ்செய்துநிற்கஅதுகேட்டுதர்ம்மநந்தனர் ஆனந்தசமுத்திரத்தில்மு
ழுகினவராய்த்திடுக்கென்றெழுந்திருந்து தம்பிமாருந்தானுமாகஎதிர்
க்கொண்டுபோய்மிகுந்ததரித்திரனுக்குதிரவியநிக்ஷேபத்தைக்கண்டா
லெவ்வளவு அபேக்ஷயிருக்குமோஅவ்வளவுஅபேக்ஷயாய்அரமனை
வாசலில்வந்து நிற்கிறஸ்ரீகிருஷ்ணபகவானைக்கண்டு ஓய்புண்டரீகாக்ஷா
ஓய்சுவாமீ!உமக்குக்காவலுண்டோ ஏன்லோகநடனஞ்செய்கிறீரென்
றுசொல்லஅதுகண்டு ஸ்ரீகிருஷ்ணதேவர் தர்ம்மராஜாவுக்குசாஷ்டாங்
கமாகதெண்டனிட்டார்.அப்பொழுதுதர்ம்மராஜாவும்ஸ்ரீகிருஷ்ணமூ
ர்த்தியைஎடுத்து மார்போடணைத்துக்கொண்டார் வீமசேனனும்ஸ்ரீகி
ருஷ்ணதேவருந்தழுவிக்கொண்டார்கள்-அர்ச்சுனன்-நகுலன்-சகாதே
வன்-இவர்கள்மூவரும்ஸ்ரீகிருஷ்ணதேவரைஅழைத்துக்கொண்டுவந்து

மருவைத்துரும்பாகச்செய்வீர் - துரும்பை மேருவாகச் செய்வீர் அப்படிப்பட்ட நீர் நினைத்தகாரியம் நிறைவேறாமற்போகுமோ! கபடநாடக சூஸ்த்ராவதாரியான தேவரீர் கடாக்ஷம் எங்கள்பேரில்பூரணமாயிருக்கிறபோது அந்தயாகந்தான் எவ்வளவு வீமசேனன் செய்தபிரகிஞைதான் எம்மாத்திரம் ஆகையினால்- இந்தப்பரிகாசவார்த்தைகளை விட்டு விட்டு என்கையினால் அந்த அஸ்வமேதயாகம்பண்ணுவித்து என்னைப்பரம பவித்திரனாகச் செய்வதுமன்றி அந்தவீமசேனன் பிரதிக்கினைப்படியே குதிரையையும் அழைப்பித்துக் கொடும்சுவாமீயென்றுசொல்ல, வீமசேனனும் ஓய் கிருஷ்ணா! தேவரீரது கடாக்ஷவீக்ஷண்ய மிருப்பதினாலல்லவோ அப்படி சபதஞ்செய்தது அது நிறைவேறாமற்போகுமோ! எங்களை ஏன் இப்படிமிரட்டுகிறீரென்று பரிகாசமாகச்சொன்னான் அர்ச்சுனனும் ஓய் கிருஷ்ணா! தேவரீர் மச்சான்வரிசைகொண்டு இப்படி விளையாடுகிறீரல்லாமல் உண்மையாகச் சொன்னசொல் லல்லவே ஆகையினால் பிர்ம்மா நினைத்தால் ஆயசுக்குக் குறைவுண்டோ வென்பதுபோல தர்ம்மபுத்திரர் நினைத்தகாரியத் திற்கு ஒருகுறைவுவருமோ! ஒருக்காலுங் குறைவுவருகிறதில்லை சுவாமீ யென்று சொன்னான் நகுலனும் சகாதேவனும் அப்படியே சொன்னார்கள் இதுகளெல்லாம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கேட்டு புன்சிரிப்பு கொண்டு சந்தோஷித்தராய்ச் சொல்லுகின்றார் ஓய்தர்ம்மநந்தனா! நான் உங்கள் மனதை யறியவேண்டி இப்படிச் சொன்னேனல்லாமல் நீங்கள் நினைத்தகாரியம் முடியாமற் போகிறதில்லை நீங்கள் தர்ம்மசொரூபமா யிருக்கிறவர்கள் உங்களுக்கு ஒருநாளுங்குறைவுவருகிறதில்லை ஆதலால் சம்சயப்படாமல் குதிரையைக் கொண்டு வருகிறதிற்கு வீமசேனனை யனுப்பும் - குதிரையின்பிறகே அர்ச்சுனனையனுப்பும் நீர் சுகமாயந்தயாகத்தைமுடியுமென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் பரிபூரண தயவுடன் திருவுளம்பற்றியருளினார் அதுகேட்டுப் பாண்டவர்கள் சந்தோஷசமுத்திரத்தில் மூழுகினார்கள் அப்போது அந்தப்புரத்திலிருந்த துரௌபதை வந்து போஜனத்திற்கு எழுந்தருள வேண்டுமென்றழைத்தாள் அப்படியே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் - தர்ம்மபுத்திரரும்-வீமன் - அர்ச்சுனன் -நகுலன்- சகாதேவர்களுடன் எழுந்திருந்துபோய் ஸ்நாநானுஷ்டான கிரியைகளை முடித்துக்கொண்டு போஜனஞ்செய்து கைகால் சுத்திபண்ணிக்கொண்டு வெகு சம்பிரமத்துடன் சந்தபுஷ்ப பரிமளாதிக ளணிந்து கர்ப்பூரமுதலிய பரிமள வஸ்துக்களோடுந் தாம்பூலந்தரித்துக்கொண்டு தர்ம்மநந்தனரிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் நவரத்நகசிதமாகிய சப்பிரகூட மஞ்சத்தின் பேரில் நித்திரைசெய்தருளினார் பாண்டவர்களும் அவ்வவர்கள் சப்பிரமஞ்சத்தின்பேரில் நித்திரைசெய்தார்கள்.

அதன்பின்பு சூரியபகவானும் திருடர்களைவெளிப் படுத்தவும்- சோரஸ்திரீகளைப்பங்கப்படுத்தவும்- சகலஜீவகோடிகளுக்கும் ஆனந்

தமுண்டாக்கவும் - கிழக்குத்திசையில் உதயமாகிறார். அப்பொழுது ஆகாயத்திற்றோன்றுகிற நக்ஷத்திரங்கள் மறைந்துவிட்டது; தடாகங்கள்தோறு நிறைந்துள்ள தாமரைப்புஷ்பங்களெல்லா மலர்ந்தது, இப்படி சூரியனுதயமாகுமுன்னமே சங்கீத சாகித்திய வித்துவஜனங்கள் முதலானவர்களும் கூட்டமாகக் கூடிக்கொண்டு நவரத்ந மயமாகிய சப்பிரகூடமஞ்சத்தின்மேலில் சயனித்திருக்கிற ஸ்ரீகிருஷ்ணதேவரிடத்திற்கு வந்து தங்கள் தங்கள் வித்தைகளை ஏற்பாடுசெய்து - தும்புரு - வீணை - யாழ் - ராவணாஸ்த முதலிய கருவிகளில் சுருதிகூட்டிக்கொண்டு முப்பத்திரண்டு ராகங்களாலும் அவைகளுக்கிசைந்த வர்ணசுரங்களாலும் திருப்பள்ளியெழுச்சியென்னுந் திருப்பாசுரங்களாலுந் தோத்திரஞ்செய்து நித்திரை யெழுப்புகின்றார்கள். அஃதெப்படியென்றால் - ஓய் துவாரகாபுரிவாசா! தேவகிநந்தனா! எழுந்தருளும் பூதகியென்கிற ராக்ஷஸி முலையையுண்டு அவளுடைய பிராணனை உறிஞ்சிக்கொண்டு அவளுக்கு வைகுந்தங்கொடுத்த ஓய் கிருஷ்ணா எழுந்தருளும் (சகடாசுரனென்கிற ராக்ஷதன்) தம்மைக்கொல்லவந்தானென்றறிந்து அவனைத் திருவடிகளாலுதைத்துச் சங்கரித்தகோவிந்தா எழுந்தருளும், கோபாலர்கள் வருஷத்திற்கொருதரம் தேவேந்திரனைநோக்கிப் பிருந்தாவனத்தில் பொங்கலிட்டுக்கொண்டு வரும்போது அந்த நியமத்தைத்தவிர்த்து கோவர்த்தனகிரிக்கு இடுவிக்க அதற்குத்தேவேந்திரன் கோபித்துக்கொண்டு கல்மழைவருஷிக்க, அதுகண்டு கோவர்த்தனகிரியை யேந்திக் குடையாகப்பிடித்து அவர்களைக்காத்து ரக்ஷித்த கோபாலசூடாமணீ! எழுந்தருளும், தேனுகாசுரன் பகாசுரன் - முதலான அநேக ராக்ஷத வீரர்களைச்சங்கரித்த புண்டரீகாக்ஷா எழுந்தருளும், வாணாசுரனென்பவன் தம்மையெதிர்த்துவர அவனுடனே தேவரீர் போராடிச் (சக்கிராயுதத்தினால்) அவனது ஆயிரங்கைகளையுந் துண்டந்துண்டமாகக் கண்டிக்கிற போது (ஸ்ரீகயிலாசபதியான (சாமபவமூர்த்திவந்து) ஓய் கிருஷ்ணா! இவன் நம்முடையபக்தன் இவனை இரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டபடியினாலே அவனை நாலுகைகளும் இரண்டுகலையுமாக விட்டு ரக்ஷித்த கமலநேத்திரா! எழுந்தருளுமென்று தோத்திரஞ்செய்தபொழுது அந்த ஸ்ரீகிருஷ்ணபகவானானவர் நித்திரைதெளிந்து எழுந்தருளி வெளியேவந்து காலோசிதமான நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு தர்மபுத்திரருந் தாமுமாக ஸ்நாநாநுஷ்டான கிரியைகளை முடித்து போஜனசாலைக்குட்புகுந்து போஜனஞ்செய்து கைகால் சுத்திசெய்துக்கொண்டு கந்தபுஷ்ப பரிமளாதிகளையணிந்து தாம்பூலந் தரித்துக்கொண்டு திவ்யவஸ்திராபரணங்களை யலங்கரித்துக்கொண்டு தர்மராஜாவுந் தாமுமாக ஆஸ்தான மண்டபத்துக்குவந்து ஸ்ரீகிருஷ்ணபகவான் நவரத்ந கசிதமான பொற்பீடத்தின்மேலில் உள்க்கார்ந்தருளினார். தர்மபுத்திரருந் தங்கமயமான ஒருசிங்காதனத்தில் உள்

கார்ந்தார். அர்ச்சுனன் - நகுலன் - சகாதேவன் - சாத்தகி - கிருதவர்ம்மன் - சஞ்சயன் - விதுரன் - கிருபாசாரியார் - முதலானவர்களும் மந்திரி சாமந்திரிமுதலிய சகலமானபேர்களும்வந்து தர்ம்மபுத்திரருக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் நமஸ்காரம்பண்ணி அவ்வவர்கள் ஸ்தானத்தில் உள்க்கார்ந்தார்கள்.

வீமசேனன் அஸ்வமேதக்குதிரைகொண்டுவர (விடைபெற்றுயேகுதல்,)

வீமசேனனும் - விஷ்வகேதுவும் - மேகவர்ணனும் - போஜனஞ்செய்து யுத்தசன்னத்தராய்வந்து தர்ம்மபுத்திரருக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும்நமஸ்காரம்பண்ணிஒய் கிருஷ்ணா! ஜநார்த்தனா எங்களுக்குச் செலவுகொடும் நாங்கள் குதிரையைக்கொண்டு வரப்போகிறோம் ராத்திரிதானே தேவரீர் ஆலோசனைபண்ணி ஏற்பாடு செய்தீர்களேமறுபடியும் அதற்கு ஆலோசனையென்ன இருக்கின்றது! நாங்கள் பத்திராவதிபட்டணத்திற்குப் போய் வருகிறோம் தேவரீர் இங்கே தர்ம்மபுத்திராளையும் மற்றுமுண்டானபேர்களையும் பார்த்துக்கொள்ளும் அங்கே எங்களுக்கு ஜெயம்பொருந்தத் தக்கதாக அனுக்கிரகம் பண்ணி ரக்ஷியுமென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ண பகவானிடத்தில் விடைபெற்றுக் கொண்டுதாயாராகிய குந்திதேவியாரிடத்திற்குப்போய் நமஸ்காரஞ் செய்து ஒய் அம்மா நாங்கள் கிருஷ்ணபகவானுடைய அனுமதியினால் எவ்வர்ஜுசுவன் பட்டணத்திற்குப்போய் குதிரைகொண்டுவரப்போகிறோம் எங்களுக்கு ஜெயமுண்டாகத்தக்கதாக ஆசிர்வாதம் பண்ணுமென்று சொல்ல அதுகேட்டு குந்திதேவியாருஞ்சந்தோஷகரமாய்(விஜயபவாவென்று)ஆசீர்வாதஞ்செய்து அனுப்பிவைத்தாள் பிற்பாடுவீமசேனன் துரௌபதையண்டைக்குப் போய் எங்களுககுச் செலவுகொடு நாங்கள் குதிரையைக்கொண்டு வரப்போகிறோமென்றுசொல்ல, அப்படியே அந்த பதிவிரதாசிரோமணியும் போய்வாருங்களென்றுவிடைகொடுத்தனுப்பினாள். அவிடம்விட்டு- வீமசேனன் - விஷ்வகேது - மேகவர்ணன் - இவர்கள் மூன்றுபேரும் அர்ச்சுனன் - நகுலன் - சகாதேவர்களிடத்திலும் - மற்றுமுள்ள பெரியோர்கள் சிறியோர்களிடத்திலுஞ் சொல்லி செலவுபெற்றுக்கொண்டு அஸ்தினாபுரத்தைவிட்டுப் புறப்பட்டு சிங்காரவனங்கள் - பூஞ்சோலைகள் - கழிகள் - ஆறுகள் - மடுவுகள் - இதுகளைத்தாண்டி - காடுகள் - மேடுகள் - வனங்கள் - வனாந்தரங்கள் - பர்வதங்கள் - குன்றுகள் - கடந்துபோய் அப்புறம் பத்திராவதிபட்டணத்திற்குச்சமீபமாகவந்து திவ்யபரிமளம் வீசத்தக்கதாக வெண்தாமரை செந்தாமரைகள் முதலிய புஷ்பங்கள் புஷ்பித்து ஆமை - முதலை - மச்சங்கள் முதலான சகல ஜலஜெந்துக்களும் சஞ்சரிக்கும்படி சமுத்திரம்போல விஸ்திரணமாக விளங்கப்பட்ட ஒரு தடாகத்தைக்கண்டு அ

துனிடத்திற்போய் தங்கள் தாகத்தைத்தீர்த்துக்கொண்டு அப்புறம் அந்த தடாகதீரத்திலிருந்து பத்திராவதி பட்டணத்தைப் பார்த்து வீமசேனன் விஷிவகேதுவுடனே சொல்லுகிறான்.

ஓய்குழந்தாய் விஷிவகேதா! கண்டாயோ இந்தப் பட்டணத்தில் சிவாலயம்பிர்ம்மாலயமுதலிய கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும்தங்கமயமாக விளங்குகின்றது! எந்நேரமும் வெகு சம்பிரமமாக பதினெட்டு மேளவாத்தியங்களு முழங்குகின்றது இந்தப்பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாரும் விஷ்ணுபக்தர்களும் சத்திய சந்தனர்களுமாயிருக்கின்றார்கள் இதுவுமல்லாமல் இந்தப் பட்டணத்தை யாளுகின்ற எவ்வர்ணசுவ மஹாராஜனும் பத்து அக்குரோணி சேனைகளும் மந்திரிசாமந்திரிகளும் பிள்ளைகள்-பேரன்மார் - அண்ணன் - தம்பி-மார்களும்புடைசூழத் தக்கதாகச் சுகமாயிருந்து ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருகிறான் நாம் இவனிடத்திலிருக்கிற அஸ்வமேதக்குதிரையை எப்படிகாணப்போகிறோமென்றுசொல்லி அந்தத்தடாகத்தின் விசித்திரங்களை முழுதும் நன்றாகப்பார்த்து அங்கேகாலடிகளைக்கண்டுபிடித்துபின்னுஞ்சொல்லுகிறான். ஓய்விஷிவகேதா, மேகவர்ண; இதோ கண்டீர்களோ! இந்ததடாகக்கரையைச்சுற்றிலும் சேனைகளுடைய அடிகளும்ஆனை குதிரைகளுடைய அடிகளுமாகவிருக்கின்றது, இந்தப்பட்டணத்திற்கு வேறே துரவு, கிணறுகளில்லையோ! இந்தக்குளத்திலுடைய ஜலத்தைத்தானே சகலஜனங்களுங்கொண்டுபோகிறார்கள் அதோகுதிரைகள்வந்துதண்ணீர்குடித்துப்போனகாலடிகளைப் பார்த்தீர்களோ! ஆகையினால், இந்தப்பட்டணத்துஜனங்களுக்கும் ஆனை, குதிரைகளுக்கும இந்தத்தண்ணீரையல்லாமல்வேறேதண்ணீரில்லை! நாம் இவிடத்தில் தானேஒளித்துக்கொண்டிருந்தால் நாம்நினைத்துவந்த குதிரையும்இந்ததடாகத்தில்தண்ணீர்குடிக்கவரும் அப்பொழுது அதன்பிறகேவந்த ஜனங்களைக் கண்டதுண்டஞ்செய்துகுதிரையைக் கொண்டுபோவோமென்று ஆலோசனைசெய்துக்கொண்டு அங்கேஒரு பர்வதத்தின்பேரில் மூன்று பேரும் ஏறி ஒருகுகையிலே ஒளித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது பத்திராவதி பட்டணத்திலிருந்து அநேக ஆனைக்கூட்டங்கள் கும்பல்கும்பல்களாய்வந்து அந்தக்குளத்தில்விழுந்து ஜலக்கிரீடைபண்ணி தண்ணீர்குடித்துப் பட்டணத்துக்குப் போய்விட்டதுக. பிற்பாடு அநேகமாயிரங்குதிரைகளும் பசுக்களும்வந்து தண்ணீர்குடித்துப் போய்விட்டதுகள். அதுகண்டு வீமசேனனைப்பார்த்து விஷிவகேதுசொல்லுகிறான். ஓய்ஜயா! வீமசேனா! இந்தப்பட்டணத்திலிருந்துவேறே அநேக-ஆனைகள்-குதிரைகள்-பசுக்கள்-முதலானதுகளும்வந்து தண்ணீர்குடித்துப் போகின்றதுகளல்லாமல்நாம்நாடிவந்தகுதிரைமாத்திரம் வரக்காணோம் ஆகையினால், அவர்கள் அந்தக்குதிரையை அனுப்பாமல் அவிடத்தில்தானேகட்டிவைத்துகவனந்- த

ண்ணீர்-புல்,முதலானதுகளும் கொடுப்பிக்கிறதாகத்தோன்றுகிறதெ
ன்றுசொல்லும்பொழுது அந்தக்கோட்டைவாசலைவிட்டு(அஸ்வமேத
க்குதிரையானது வெண்சாமரைகள்-வெள்ளைக்குடைகள் - பிடித்துவ
ரத்தக்களாகவும்,ஈட்டிக்காரர்,கத்திக்காரர்,குதிரைக்காரர்ரதக்காரர்கள்
பின்னும் அநேகவீராதிவீரர்களாகிய சேவர்களுடனே வெளிப்பட்டு
வருகிறதைக்கண்டு விஷ்வகேது சந்தோஷப்பட்டு, ஓய்ஐயா;வீமசே
னா! இதோநாம் நினைத்துவந்த குதிரைவருகிறது இனி என்னுடைய
சாமார்த்தியத்தைப்பாரும் தேவரீர் இந்தமலையின்மேலிரும்; நான்
அந்த அஸ்வத்தைக்கொண்டுவருகிறேனென்றுசொல்ல! அதுகேட்டுவீ
மசேனன்சந்தோஷப்பட்டு ஓய் அப்பா!விஷ்வகேதோ! நீ சற்றுநேரம்
பொறுத்திருவென்று கையமைத்து, மேகவர்ணனைப்பார்த்து ஓய்மே
கவர்ணா! நீ உன் தகப்பனாகிய கடோற்கசனைப் பார்க்கிலும்; அதிகமா
ன,ராக்ஷஸமாயையறிந்து மஹாசாமர்த்தியனுக்குமேத எதோபார்ப்
போம் அந்தக்குதிரையைக்கொண்டுவாவென்றுசொல்ல! அதுகேட்டு
மேகவர்ணனும் மஹாசந்தோஷ உச்சாகத்துடனே எழுந்திருந்து ஐ
யா;பாட்டா! இன்றைக்குஎன்னுடைய வல்லமையைப் பாரும்! ஒருவ
ரையுமதிக்காமல் குதிரையைக்கொண்டுவருகிறேன் நீங்கள் இங்கே தா
னே இருங்கோளென்றுசொல்லிவிட்டு தன்தகப்பன் கடோற்கசன்
சொன்னசாம்பரியென்கிற ராக்ஷஸமந்திரத்தை ஜெபம்பண்ணினான்,
அப்பொழுது அந்தமந்திரசக்தியினாலே காருடமேகங்களுண்டாகி எ
ங்கேபார்த்தாலுங் கன்னங்கறேலென்று இருட்டிக்கொண்டது அந்தச்
சமயத்தில் மேகவர்ணனும் ஆகாசமார்க்கத்திலெழும்பி குடுகுடுவென்
று சிங்கநாதத்தை அட்டகாசம்பண்ணி கொக்கரித்தான் அந்தச்சத்த
த்தினாலே திரிலோகத்திலுள்ளவர்களும் பயந்தார்கள் அப்போதுதே
வேந்திரன் திகிலடைந்து தேவகுருவாகிய(பிரகஸ்பதியை) அழைப்பி
த்து ஆலோசனை செய்து இரண்டுதூதரையழைத்து ஓய்தூதரே! நீங்க
ள்போய்இந்த சங்கதிகளையெல்லாம் விசாரித்துக்கொண்டு வாருங்க
ளென்றுசொல்லியனுப்ப, அவர்களும்வந்து மேகவர்ணனைக்கண்டு ஓ
ய்வீராதிவீரா! நீ யார் உன்பெயரென்ன? இப்படிப்பட்டஉற்பாதகா
ரியங்களை என் செய்கிறாய்எங்களைஎல்லாம்என் வாதைப்படுத்துகிறாய்!உ
ன்னுடைய ஆரவாரத்தை எங்கள்ராஜாவாகிய தேவேந்திரன்கேட்டு வி
சாரித்துவரச்சொன்னார் நீ இப்படி செய்யவேண்டாமென்றுசொல்ல,
அதுகேட்டு அந்ததூதர்களைப்பார்த்துமேகவர்ணன் சொல்லுகிறான்.

ஓய்தூதர்களே! நான்லோகங்களை வாதைபடுத்தவில்லை,பூலோகத்தில்
தர்மராஜாவானவர் அஸ்வமேதயாகஞ்செய்யவேண்டி ஸ்ரீகிருஷ்ணப
கவானுடைய அனுஜ்ஞைபெற்றுஎவ்வனாசுவன்வசத்திலிருக்கிறகுதிரை
யைக்கொண்டுபோகும்படி வந்திருக்கிறதேயல்லாமல்உலகத்திலுள்ள
வர்களை வருத்துகிறதற்கு வரவில்லையென்று சொன்னான் அதுகேட்டு
தேவதூதர்களும் தேவேந்திரனிடத்திற்குவந்து நமஸ்காரஞ்செய்து

அஞ்சலியஸ்தராய் நின்றுகொண்டு அந்தச் சேதியைச் சொன்னார்கள். அதைக்கேட்டு தேவேந்திரனும் சந்தோஷிகரமாய் நமக்குச் சகாயமாய் நாம்செய்யப் போகிறகாரியம் அவனேசெய்தால் நமக்கு நன்மை தானே அப்படியே ஆகட்டுமென்று சொல்லி தூதர்களையனுப்பிவிட்டுதேவேந்திரனானவன் தர்மராஜாயாகம் பண்ணுகிறதைக் குறித்து சந்தோஷிப்பட்டுக்கொண்டிருந்தான். இவிடத்தில்மேகவர்ணனும் தனதுராக்ஷஸ மாயைகளைவந்தசேனைகள்பேரில் நிறைத்து அவர்கள் கண்ணுக்குஒன்றுந் தோன்றவொட்டாமற்செய்து பூமியிலிறங்கி அந்தக்குதிரையைமாத்திரம் அவதானலீலையாகத்தூக்கி இடையனானவன் ஆட்டுக்குட்டியைத் தோளின்பேரில்போட்டுக்கொண்டதுபோலதோளின்பேரில் போட்டுக்கொண்டு ஆகாசவீதியில்சமேலென் றெழும்பினான் அப்போது அங்கிருந்த சேவகர்களெல்லாருந் திகிலடைந்துகுதிரையைக்காணாமல் ஆகாசத்திலபார்த்து ராக்ஷதனைக்கண்டு அந்தசேவகர்கள்ஓடிவந்துபட்டணத்துட்புகுந்து எவ்வர்ணுசுவ மகாராஜனிடத்தில் முறையிட்டு ஐயா! ராஜேந்திரா! நாங்கள் அஸ்வமேதக் குதிரையைத் தண்ணீர்குடிப்பிக்கும்படி பட்டணத்திற்குவெளியேகொண்டுபோகும்போது ஆரோஒருராக்ஷதன்மாய்கையாய்வந்து எங்களுக்குத் தெரியாமல்குதிரையைத்தூக்கித்தோளின்பேரில் போட்டுக்கொண்டு ஆகாசமார்க்கமாயெழும்பிப்போனானென்றுசொல்ல; அதுகேட்டு எவ்வர்ணுசுவமஹாராஜனும் வெகுகோபங்கொண்டுஓய்சேவகர்களே! நீங்கள் ஒருநாளுமில்லாத விந்தையானவார்த்தை இன்றைக்குச்சொல்லீர்கள். ஆ! ஆ! ஆச்சரியகரமா யிருக்கின்றது; ராக்ஷதனாவது நம்முடைய குதிரையைப்பிடிக்கிறதாவது அப்படிப்பட்ட காரியம் இன்றைக்கு நடந்ததல்லவா! நல்லது ஆகட்டுமென்றுசொல்லி எவ்வர்ணுசுவன் தன்னிடத்திலிருக்கிற(கந்தர்வராஜாக்களில்)நாலாயிரம்ரதக்காரரை அழைப்பித்து நீங்கள்போய் அந்தராக்ஷதனைக்கொன்றுகுதிரையைக் கொண்டுவாருங்களென்றுசெலவுகொடுத்தனுப்பினான்.

அப்படியே நல்லதென்று அவர்களும்யுத்தசன்னத்தராய் மஹாரோஷத்துடன்புறப்பட்டுவந்து ஆகாசத்திலிருக்கிற மேகவர்ணனைக்கண்டு தங்கள் தங்கள் ரதங்களை ஆகாசத்தில் நிறுத்திப்பிரசண்டமாகிய வில்லுகளைஎடுத்து குணத்தொனிசெய்து சகலலோகங்களுஞ் செவிடுபடத்தக்கதாகமேகவர்ணன்பேரில் அநேகமாயிரம் பாணங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். அதுகண்டுமேகவர்ணனும்சலிலென்று நகைத்து அணுவளவாகிலும் சாஞ்சல்லியப்படாமல்மஹாஉக்கிராகாரத் துடனேபுஜத்தின்பேரிலிருக்கிறகுதிரையை இடதுகக்கத்திலிடுக்கிக் கொண்டுவலதுகையினால் ஒருமலையைப்பிடுங்கிக்கொண்டுஅந்தமலையினால் அவர்கள்விட்டபாணங்களையும் ஆயுதங்களையுந்தடுத்து முறித்துவிட்டு உக்கிராகாரமாய்த்திரிந்துகொண்டு அவர்களுடைய ரதகஜதுரகபதாதிகளையெல்லாம்பொடிபொடியாகச்சின்னபின்னப்படுத்தி ஒருக்ஷணப்

பொழுதில் அந்தநாலாயிரம் ரதக்காரரையுஞ்சுவர்க்கத்துக்கனுப்பிவிட்டுஜெயம்ஜெயமென்று சிங்கநாதஞ்செய்தான், அந்தசேதியை எவ்வர்ணாசுவன்கேள்விப்பட்டு மஹாகோபங்கொண்டுமறுபடியும். ஆயிரம்-ஆனைகளையும்மூவாயிரம் ரதங்களையும், பதினாயிரங்குதிரைகளையும் பத்துலக்ஷங்காலாள்களையுங்கூட்டியனுப்பிவைத்தான்.

அவர்களும்வந்து மேகவர்ணனைச் சூழ்ந்துகொண்டார்கள்- அதுகண்டுமேகவர்ணனும் நகைத்து அந்த அஸ்வத்தைக்கொண்டு வந்துமலையின் மேலிருக்கிறவீமசேனன் கையில் ஒப்புவித்துபிறகு ஒருமரத்தைப்பிடுங்கிக்கொண்டு அந்தசேனைகளையெல்லாங் கண்டதுண்டங்களாக்கிஒருத்தனாயாகிலுந் தப்பிப்பிழைத்துப் போகவொட்டாமல்துவம்சப்படுத்திவிட்டான். அதிலுந்தப்பிப்பிழைத்துப்போன சிலசேவகர்கள்ஓடிப்போய் எவ்வர்ணாசுவனுடைய பாதத்தில்விழுந்து ஓய் சுவாமீ! எங்களால் அந்தராக்ஷதனைஎவ்வளவும்ஜெயிக்க முடியாதென்றுமுறையிட அதுகேட்டு எவ்வர்ணாசுவனும் கோபமிகுந்துதன்னுடையசேனைகளையெல்லாம்புறப்படச்சொல்லி தானும் யுத்தசன்னத்தனாய்-தம்பிமார்-பிள்ளைகள்; மந்திரி, சாமந்திரிகள், மகுடவர்த்தனர்கள் முதலான சதுரங்கசேனைகளுடனேபுறப்பட்டு பட்டணத்திற்கு வெளியேவந்து ரணபேரிகையறைவித்து தன்னுடையசேனைகளையெல்லாம் மேகவர்ணன்பேரில்ஏவினான் அவர்கள்மேகவர்ணனைச்சுற்றிக்கொண்டு அநேக அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் எய்தார்கள். அதுகளுக்குமேகவர்ணன்சளியாமல்எதிர்த்துப்போராடுகிறபோது வீமசேனனைப் பார்த்து விஷ்வகேதுசொல்லுகிறான். ஐயா! நீங்கள் இங்கேதானே குதிரையைக்காத்துக்கொண்டிருங்கள் மேகவர்ணன் இளைப்படைந்திருக்கிறான் நான்போய்வருகிறேனென்றுசெலவுபெற்றுக் கொண்டுவந்து தன்கையிலிருந்தவில்லை குணத்தொனிசெய்து தான்வந்தசேதி மேகவர்ணனுக்குத்தெரியப்படுத்தி தனதுவில்லிலிஷ்டமாக மஹாதீக்ஷண்யமான பாணங்களைத்தொடுத்து பிரயோகஞ்செய்துஅந்தராஜன் அனுப்பினசேனைகளையெல்லாம், கால்வேறு, கைவேறு; தலைவேறாகக்கண்டித்து வயிற்றைப்பீறி, ரத்தவெள்ளம் பெருகும்படிசெய்து, கழுகு, கூளிகளுக்கு-விருந்தாக்கிவைத்தான். அதில்சேனைகள்தப்பிஓடிப்போய்விட்டதுமேகவர்ணனும் மலையின்பேரிலேறிகுதிரையைப்பிடித்துக்கொண்டுபோய்குகையிலொளித்து வைத்துக்கொண்டு இனிமேல்திரிநேத்திர தாரியாகிய(பரமசிவன்)வந்தாலும் குதிரையைவிடவேண்டியதில்லையென்றுசொல்லியிருந்தான். இங்கேதன்னுடைய சேனைகளெல்லாம் முறிந்துபோனதுகண்டு எவ்வர்ணாசுவன் பின்னும் அநேகஞ் சேனைகளையேவினான் அவர்களும் யுத்தமுகத்தில் நெருங்கிமஹாவேகத்துடனே எதிர்த்துநின்றார்கள். அதுகண்டு வீமசேனன்சிந்தாக்கிரந்தனாய் சிறுபிள்ளைபேரில்எத்தனைதளம்வந்தெதிர்த்ததென்று தனதுகதாயுதத்தைக்கையிலெடுத்துக்கொண்டு பூமியில்குதித்து ஓடிவருகிறபோது அதுக

ண்டுவிஷ்வகேது சிறியதகப்பனுக்கு தெண்டனிட்டு ஐயா! நான் இர்ந
சேனைகளாகிறஸ்திரீயின்பேரில் அபேக்ஷித்தேன் ஆசையால்;நானே ய
னுபவிக்கவேண்டும் உங்களுக்குமரியாதையல்ல, மருமகளைமாமனார்
தீண்டுவாரோ! ஐயா! வென்றுசொல்ல,அதுகேட்டுவீமசேனனும் ஓய்
விஷ்வகேதா! புருஷனுக்கு அடங்காத ஸ்திரீயைமாமனார் தெண்டிக்க
வேண்டாமோவென்றான்,அதற்குவிஷ்வகேதுவும் ஐயா! புருஷன் கை
யில்ஸ்திரீ அடங்காமற்போனால் பிறகுமாமனார்விசாரிக்கவேண்டும் ஆ
னலால், நீங்கள்மலையின்பேரில்தானேயிருந்துவேடிக்கை பார்த்துக்
கொண்டிருங்கள் இந்தஅற்பமானசேனைகளைக்குறித்து நீங்கள்வரவே
ண்டுமோவென்று சொல்லியனுப்பிவிட்டு பிற்பாடுவில்லைகுணத்தொ
னிசெய்து அந்தவில்லினிடமாகதிவ்யபாணங்களைத்தொடுத்துபிரயோ
கம்பண்ணி அந்தசேனைகளையெல்லாங்கொன்று ரத்தப் பிரவாகமுண்
டாக்கி ஆ! ஆ! வென்றுசிங்கநாதஞ்செய்துவில்லைப்பூமியிலூன்றிக்கொ
ண்டுபார்க்கப் பயங்கரமாகவிருந்தான். அப்பொழுது எவ்வர்னாசுவனு
னவன் தனதுசேனைவெள்ளங்கள் மடிந்துகிடப்பதையும் விஷ்வகேது
வையும்பார்த்து ஆச்சரியப்பட்டுசொல்லுகிறான்.ஓய்மந்திரிமார்களே
கேட்டீர்களோ நான்ஐந்நூறுவருஷமாய் ராச்சியபரிபாலனம்பண்
ணினேன் இதுவரையில் இப்படிப்பட்ட சேவகனைஎவ்விடத்திலுங் க
ண்டதில்லை! இந்தராஜகுமாரனைக்கண்களினால் பார்க்கப்பயங்கரமாயி
ருக்கின்றது வில்வித்தையோவென்றால் இவன்கற்றதேவில்வித்தை இ
வன்மஹாவீராதிவீரன் அதோபார்த்தீர்களோ இந்தமலையின்பேரில்
ஒருதிவ்வியபுருஷன்பெரியவில்லை யூன்றிக்கொண்டு நமது பட்டணத்
தையும் நமதுசேனாசமுத்திரங்களையும்ஒருமசகமாத்திரமாகநினைந்து
வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்கிறான் ஆகையினால்,என்னஅனர்த்த
காலம்வருகிறதோதெரியவராது இதைஆலோசிக்குமிடத்து மும்மூர்த்
திகளும்ஒருமுகமாகக்கூடி நம்முடையபேரில் துஜமெடுத்து வந்தவர்
களாகவேண்டும்இல்லாவிட்டால் பூலோகத்திலுள்ளவர்களில் எப்படி
ப்பட்டவர்களானாலும்நமதுபட்டணத்தைக் கண்ணெடுத்துப் பார்க்க
மாட்டார்கள்நல்லது ஆகட்டுமென்றுசொல்லிதன்சேனைகளையெல்லாம்
ஓரிடமாகக்கூட்டி விஷ்வகேதுவின்பேரிலேவினான் அவர்களும்மஹா
கோஷித்துடனே அவ்வவர்கள் கையிலிருக்கிற ஆயுதங்களையும் பாண
ங்களையும பிரயோகம்பண்ணி கொக்கரித்து நின்றார்கள். அதுகண்டு
விஷ்வகேதுவும் நகைத்து தன்னுடைய வில்லிலே ஒரு தீக்ஷண்யமா
னபாணத்தைத்தொடுத்து அந்தசேனைகளையெல்லாஞ் சிந்துசிந்தாக்கி
எங்கே பார்த்தாலும் பிணமலைகளும் - மாங்கிஷக்குப்பைகளும் - எலு
ம்புராசிகளும் - ரத்தமடுக்களுமாகச்செய்தான். அதுகண்டுதேவர்க
ளெல்லாஞ்சபாசென்று மெச்சினார்கள். வீமசேனனும் ஆனந்தபர
வசனாகினான் அப்பொழுது எவ்வர்னாசுவனும் சிந்தாக்கிராந்தனாய் ஆ
லோசித்து நாம் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே இவன் எவ்வ

ளாவு சேனைகளைக் கண்டித்துவிட்டான். இவனுடைய மகிமைதான் எ
ன்னமோ தெரியாது ஆகையினால் இவனது ஊரையும் பேரையுந் தெ
ரிந்து பிற்பாடு சண்டைபண்ணுவோமென்று மனதில் நிச்சயம்பண்
ணிக்கொண்டு தண்டிகைவிட்டிறங்கி ஒருபெரிய ஆனையின்மேலேறிக்
கொண்டு வந்து விஷ்வகேதுவைப்பார்த்து ஓய் ராஜகுமாரகா! உன்னை
ப்பார்த்தால் எனக்குச்சண்டைசெய்கிறத்திற்கு மனமில்லை! நீசிறுபிள்
ளையாயிருக்கிறாய நீயாருடைய குமாரகன் உன்பெயரென்ன; உன் ஊ
ரென்ன! நீங்களேன் என் குதிரையைப்பிடித்தீர்கள் அந்தமலையின்
பேரிலிருக்கிறவன் யாவன் இதுகளையெல்லாம் எனக்கு நன்றாய்த்தெ
ரியச்சொல்லும் பிற்பாடு யுத்தம் பண்ணுவோமென்று எவ்வர்ணசுவ
ன் கேட்க விஷ்வகேது சொல்லுகிறான்.

ஓய் ராஜனே! எங்களுடைய குலங் கோத்திரங்கேட்கிறீரோ; ஆனா
ல் சொல்லுகிறேன் கேள், நான் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு
ம் அதிபதியாகிய தேவேந்திரனுக்குக்கவசகுண்டலத்தைக்கொடுத்து
கீர்த்திபெற்ற மஹாதானபரனாகிய கர்ணமஹாராஜனுடைய புத்திர
ன் என்பெயர் விஷ்வகேது வென்று சொல்வார்கள். தர்மஸ்வரூபி
யாகிய தர்மராஜ வானவர் அஸ்வமேதயாகம் பண்ணுகிற நிமித்த
ம் ஸ்ரீகிருஷ்ண தேவருடனே ஆலோசனைசெய்து அவருடைய அனுமதி
யின் பேரில் உன்வசத்திலிருக்கிற அஸ்வமேதக் குதிரையைக்கொண்
டுவரும்படி எங்களையனுப்பிவைத்தார். ஆகையால், நான் இவிடத்தி
ல் வந்தேன் அதோமலையின்பேரி லிருக்கிறவனைப் பார்த்தாயோ! அவ
னைத் தர்மபுத்திரருடையதம்பியாகிய வீமசேனனென்றறிந்துகொ
ள், அதுவுமல்லாமல்உன்குதிரையைத்தூக்கிக்கொண்டுபோனவன் வீம
சேனன்பேரனாகிய மேகவர்ணனென்றிந்துகொள். ஆதலால், என்பெய
ரையும் ஊரையுஞ்சொன்னேனல்லவோ! இன்னமும் என்னுடையவா
ர்த்தையைக்கேளும் அஃதென்னவென்றால், அகிலாண்டகோடிபிரம்
மாண்ட நாயகராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடையபரிபூரணகடாக்ஷ
த்தினாலும் அவரது சகாயத்தினாலும் நான்சண்டைசெய்கிறேன், நா
ன்தெய்வசகாயமுள்ளவன் நீ மனுஷசகாயமுள்ளவன் இன்றைக்கு உ
ன்னுடையசேனைகளையும்- அண்ணன் - தம்பி- மாமன் - மைத்துனன்
உற்றார்-பெற்றார்- பிள்ளைகள்-பேரமார்- மந்திரி பிரதானிகள் - முத
லிய சகலரையுங்கொன்று உன்கெர்வத்தையுமடக்கி உன் பத்திராவதிப
ட்டணத்தையுங் கொள்ளைகொண்டு போகிறேனென்று சொல்ல; அந்
தவசனத்தை எவ்வர்ணசுவனுங்கேட்டுகோபிக்காமல் குலங்கோத்திரத்
துக்காக சந்தோஷிப்பட்டு விஷ்வகேதுவைப்பார்த்து ஓய் விஷ்வகே
தா! நல்லது நீ அப்படியேசெய்கிறாய் இப்பொழுது நீ பூமியில் நின்
றுகொண்டிருக்கிறாய் நான் ஆனையின்பேரி லிருக்கிறேன் இப்படி இ
ருக்கிற உன்னுடனே எதிர்ப்பது என்னைப்போன்ற ராஜாக்களுக்கு நி
யாயமல்லவே ஆனபடியினாலே உனக்குவேண்டிய சகல ஆயுதங்களும்

நிறைந்திருப்பதாகவும் நல்ல குதிரைகளைக் கட்டி யிருப்பதாகவும் வி
ளங்குகின்ற ஒரு ரதத்தைச்சாரதியுடனே அழைப்பித்துக்கொடுக்கிறே
ன் நீ அதன்மேலேறிக் கொண்டு பிரமுகனாயிருந்து கொடியயுத்தஞ்
செய்வாயென்றுசொல்ல அதுகேட்டுவிஷ்வகேதுவும் ஐயா! எவ்வர்ண
சுவபூபாலகா என்னை உம்மிடத்தில் ரதம்வாங்கி அதன்பேரிலேறிக்கொ
ண்டுயுத்தம்பண்ணச்சொன்னீரல்லவா; அப்படி நான் செய்யமாட்டே
ன். தேவேந்திரனுக்கே கவசகுண்டலத்தைத் தானமாகக் கொடுத்து
கீர்த்திபெற்ற மஹாதியாகியினுடைய புத்திரனாகிய நானோ உம்மிட
த்தில் ரதம்வாங்கி யேறுகிறவன் அதுகூடாது நீர் தேரின்பேரில்தானே
யிருந்து யுத்தம்பண்ணும் உம்முடைய வல்லபத்தைப்பார்ப்போமெ
ன்று சொன்னான். அதுகேட்டு எவ்வர்ணசுவனும் நீயோசிறுபிள்ளை நா
ன் பெரியவன் ஆகையினால், நான் உன்பேரில் முந்தி பாணந்தொ
டுக்கிறதில்லையென்றுசொல்லி ஆனையை விட்டிறங்கி ரதத்தின்பேரி
லேறிக்கொண்டுவில்லைக்குணத்தொனிபண்ணி சிங்கநாதஞ்செய்து அ
ட்டகாசம்பண்ணினான். அதுகண்டு விஷ்வகேதுவும் சிரித்து என்சிறு
பிள்ளைத்தன்மையைச் சற்றுநேரத்தில் காண்பிக்கிறேன் பாருமென்று
சொல்லி பாதசாரியாய் வில்லைக்குணத்தொனிபண்ணி சிங்கநாதஞ்செ
ய்து ஆவேஷித்துடனே காலாக்கினிருத்திரனைப்போல கண்களில் நெ
ருப்புப்பொறிபறக்கவும் மீசைபடபடவென்று துடிக்கவும் பற்களை
நறநறவென்று கடித்து தன்னுடைய வில்லினிடமாக அதிதீக்ஷண்
யமான அஸ்திரங்களைத்தொடுத்து எவ்வர்ணசுவனுடைய மார்புபிளக்
கும்படியாகப் பிரயோகஞ்செய்தான். அதுகண்டு எவ்வர்ணசுவனுங்
கோபதீப்தனாய் மிஞ்சிவிட்டதென்று சீக்கிரமாகத் தன்னுடைய வில்
விலேல அதிதீக்ஷண்யமாய்க்கிருஷ்ணசர்ப்பம்போலிருக்கப்பட்ட எழுபது
பாணங்களைத்தொடுத்துப்பிரயோகஞ்செய்தான். அதுகள் ஒன்றோ
டொன்று உராய்ந்து விஷங்களைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு
நெருப்புப்பொறிகள் பறக்க அதிவேகமாய் வருகிறபோது விஷ்வகே
துவும் அதிசீக்கிரமாய் தன்னுடைய வில்லின்மேல அநேகமாயிரம்பாண
ங்களைத்தொடுத்துவிட்டு எவ்வர்ணசுவன் விட்ட பாணங்களையெல்லாம்
பொடி பொடியாகச்செய்து அவன்கையிலிருந்த வில்லையுங் கண்டித்
து அவன்தேரிற் கட்டியகுடைகளையும் கொடிகளையும் விழும்படிய
றுத்து அவனுடையதேரின்பேரிலும் அநேகபாணங்களை நிரப்பினான்
அப்போது அவனுடைய சேனைகளெல்லாம் நடுநடுங்கி இன்றோடே
ராஜாவுக்கு முடிவுகாலம் வந்து சம்பவித்ததென்று ஒருவர்க்கொரு
வர் பேசிக்கொண்டார்கள். அந்தச்சமயத்தில் எவ்வர்ணசுவன் எவ்வள
வும் பயங்கொள்ளாமல் வேறொருவில்லை யெடுத்து அக்கினியாஸ்திர
த்தைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்தான். அந்தஅஸ்திரமானது நெ
ருப்புப்பொறிகள் பறக்கும்படி காளகூட விஷத்துக்குச் சமானமாய்
ஜ்வாலைவிட்டுக் கொண்டு விஷ்வகேதுவிட்ட பாணங்களை யெல்லாங்க

ண்டித்து வருகிறதைக்கண்டு விஷ்வகேதுவும் பயப்படாமல் நின்று
தன்னுடையவில்லிலே ஒரு வருணாஸ்திரத்தைத்தொடுத்துவிட அந்த
வருணாஸ்திரம்வந்து அக்கினியாஸ்திரத்துடன் போராடி விழுந்து
போய்விட்டது. அதுகண்டு விஷ்வகேதுவும் தன்னுடைய வில்லிலே
அதிசீக்கிரமாக மறுபடியும் ஒருவாய்வாஸ்திரத்தைத் தொடுத்துப்பி
ரயோகஞ்செய்தான். அதிலுண்டான பெருங்காற்றினால் எவ்வர்ணசுவ
னுடையசேனைகளெல்லாம் மின்மினிப்பூச்சிகள் போல சிதறிப்போ
ய்விட்டதுகள். அப்பொழுது எவ்வர்ணசுவன் பயப்படாமல் தன்னு
டையவில்லைக்குணத்தொனியண்ணி யிறுக்கிப்பிடித்து பர்வதாஸ்திர
மென்கிற ஒருபாணத்தைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அதில்
அநேகமாயிரம் எண்ணிக்கையில்லாத பர்வதங்கள் குன்றுகள் பிறந்
து அந்தப்பெருங்காற்றைத்தணித்துவிட்டது. அதுகண்டு விஷ்வகே
துவும் கோபாக்கினிருத்திரனாய் எரிந்துவிழுந்துதேவேந்திரனுடைய
வஜ்ராயுதத்திலும் கொடுமையாயுள்ள ஒரு அஸ்திரத்தைத் தொடுத்து
ப் பிரயோகஞ்செய்தான் அதில் அளவிறந்த வஜ்ராயுதங்கள் பிறந்து
கிறுகிறுவென்று சுழன்றுவந்து அந்தபர்வதங்களையும் குன்றுகளையும்
தூளாக்கி விட்டது. அதுகண்டு எவ்வர்ணசுவனும் மஹாகோப தீப்த
னாய் தன்னுடையவில்லிலே அநேகமாயிரத்திவ்யபாணங்களைத்தொடு
த்துப் பிரயோகம் பண்ணினான் அதுகள் வந்து விஷ்வகேதுவினுடை
ய சரீரமெல்லாம் ரத்தப்பிரவாக பாகும்படி தைக்கிறபோது அதனா
ல் விஷ்வகேதுவும் மிகவும் நொந்து ஆயாசத்துடனே பூமியில் சாய்
ந்துவிழுந்து மூர்ச்சையடைந்தான் அதுகண்டு எவ்வர்ணசுவனுடைய
சேனைகளெல்லாஞ் சந்தோஷித்துடனே சிங்கநாதஞ்செய்து அட்டகா
சம்பண்ணினார்கள் அப்போது மலையின்பேரிலிருந்த வீமசேனன் க
ண்டு அதிககோபதீப்தனாய் கதாயுதத்துடனே மலையை விட்டுக்குதித்
து ஆனைக்கூட்டங்களின்மேற் பாய்கிற சிங்கத்தைப்போல ஓடிவருகிற
போது எவ்வர்ணசுவன் குமாரனான சுவேகனென்கிறவன் எதிர்த்துகு
றுக்கேவிழுந்துதடுத்து வீமசேனனுடனே போராடிக்கொண்டிருந்
தான் அப்போது விஷ்வகேதுவும் மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து
கண்ணைவிழித்துப்பார்த்து குகையில்படுத்துக்கொண்டிருக்கிறபுலியி
ன்பேரில் ஒரு கல்லைப்போட்டால் அதுஎப்படி சீறிஎழுந்திருக்குமோ
அப்படி கோபதீப்தனாய் காளகூட விஷம்போல பகபகவென்றெரிந்
து விழுந்து தன்னுடைய வில்லிலே அகோரமான பாணங்களைத்தொ
டுத்துப் பிரயோகஞ்செய்து எவ்வர்ணசுவனுடைய கைவில்லைக்கண்டி
த்து அவனது ரதசாரதியைக் கொன்றுவிட்டு எட்டுக் குதிரைகளையும்
கண்டதுண்டமாக்கி ரதத்தையுஞ் சக்கை சக்கையாய்ப் பேர்த்தெறிந்
து அவனுடைய நெற்றியையும் உடைத்தான் அதனால் எவ்வர்ணசுவன்
மிகவுநொந்து ரத்தங்கக்கிக்கொண்டு கண்கள் சுழல வாயை ஆவென்
றுதிறந்துகொண்டு பூவுங் காய்களு நிறைந்திருக்கிற ஓரிளவாழை மர

மானது காற்றினலடிபட்டு விழுந்தால் எப்படி சாய்ந்துவிழுமோ அப்படிபோல ரதத்தினுடைய குத்துக்காலின்மேரில் சாய்ந்து விழுந்து மரணத்துக்குச்சரியான மூர்ச்சையையடைந்தான்.

அதுகண்டுவிஷ்வகேதுவும்யௌவனாசுவன் இறந்துபோனானோஎன்னமோபார்ப்போமென்று ஓடிவந்து யௌவனாசுவனைப்பார்த்து நத்தளித்து தலையண்டையில் உள்க்கார்ந்து தன்வஸ்திரத்தொங்கலினால் அவனுடையமுகத்தைத்துடைத்து சற்றுநேரம் விசிறிபிறகு விசாரத்துடனேசொல்லுகிறான். ஐயோ! நானறியாமல் பாணங்களைவிட்டு இந்தராஜனைக்கொன்றுவிட்டேன். என்மேரில்நிந்தைவந்ததே! ஓய் துவாரகாபுரிவாசா! ஓய்கிருஷ்ணமூர்த்தி! ஓய்பத்தர்களைரட்சிக்கிறசுவாமீ! இந்தராஜனைப்பிழைக்கப்பாரும் நீர் பக்தஜனங்களை ரக்ஷிக்கிறது உண்மையானால்இப்போது என்முறையைக்கேட்டு இந்தராஜனைப்பிழைக்கப்பாரும் ஓய்சக்கிரதரா! ஓய்கஜேந்திரரக்ஷகா; ஓய்தேவாதிதேவா ஓய்சுவாமியென்று தோத்திரஞ்செய்கிற விஷ்வகேதுவினுடையமுறையை அஸ்தினாபுரத்திலிருக்கிற ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்டு விஷ்வகேது நினைத்தபடியே யௌவனாசுவன் பிழைக்கக்கடவதென்று திருவுளஞ்செய்தருளினார். அதனால்அந்த யௌவனாசுவனும்பிழைத்து கண்ணைவிழித்துப்பார்த்து நித்திரைசெய்தவன் விழித்தெழுந்திருந்ததுபோல அவனும்எழுந்திருந்து உள்க்கார்ந்தான். அதுகண்டுவிஷ்வகேதுவும் ஓய்ஐயா! ராஜேந்திரா; சுகமாயிருக்கிறதோசரீரம்மெத்தவும்நொந்ததோ; உமது ஆயாசந்தீர்ந்ததோவென்றுகேட்க அவனும் ஆயாசமொன்றுமில்லை சுகமாயிருக்கிறதென்றுசொல்ல அதுகேட்டு விஷ்வகேதுவும் நீர்தேரைவிட்டழிந்து அப்புறத்தில்நின்றுகொண்டு வில்லைக்குணத்தொனிசெய்துசண்டைபண்ணவாருமென்றழைக்க அதற்குயௌவனாசுவனுஞ் சிரித்துதலையையசைத்து ஆ ஆ இதேது இந்தராஜகுமாரனைப் போலெங்குங்கண்டதில்லை பகையாளியுடன் போராடுகிறபோது தன்கையாயுதத்தினால் விழுந்துவிட்டால் அவனைக்கொன்றுஜெயம்பெறுகிறதேயல்லாமல்மறுபடியும் அவனுக்குபசாரஞ்செய்துபிழைப்பிக்கிறவர்களுமுண்டோவென்று தனக்குத்தானேயோசனைசெய்துதேரைவிட்டிறங்கிவந்து விஷ்வகேதுவைக் கட்டிஅணைத்துக்கொண்டுஐயா! ராஜகுமாரா! உன்னைப்போன்ற சற்புத்திரனை நானெங்குங்கண்டதில்லை, இனிஉனக்குமெனக்குஞ்சண்டை வேண்டியதில்லை நானும்எனதுநாடுநகரமும் உங்களுடையஆதீனம் இனிசுகமாய்தர்மராஜாவைஅஸ்வமேதயாகம் பண்ணச்சொல்லும்உன்கையிலிருக்கிற பாணங்களை அம்புறாத்தூணியில்வையும் வில்லைத்தளர்த்துமென்று வெகுவாய் சமாதானவார்த்தைகள், சொல்லஅதுகேட்டு விஷ்வகேதுவும்ஐயா! ராஜேந்திரா! சமாதானப்படுவதுஎன்னிச்சையல்ல; என்சிறியதகப்பனாகிய வீமசேனன் அதோ படையின்மேரிலிருக்கிறார் அவரண்டைக்குப்போகலாம்வாருமென்றுசொல்லியௌவனாசுவனை அழைத்து

க்கொண்டுபோய் வீமசேனன் முன்னேவிட்டுஜயா! இந்தராஜாவானவர்சமாதானமாய் நமது அடிமையாய் வருகிறனென்றுசொல்லச்சொல்லிவேண்டிக்கொள்ளுகிறார் தேவரீர்தயவுசெய்யுமென்றுசொல்லஅதற்குவீமசேனனும் அதுகூடாதுஎனக்கு இஜமானாகியதர்மராஜா விருக்கின்றார் அவரிடத்திற் சொல்லவேண்டுமென்றுசொல்ல, அதுகேட்டுஎவ்வனாசுவனும் வீமசேனனுக்குப் பிரியவசனஞ்சொல்லிதழுவிக்கொண்டுதர்மராஜாவுக்கும்-பதினாயிரம்-ஆனைகளும்-லக்ஷங்குதிரைகளும், வெகுமதிபண்ணினேன். ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கும் பதினாயிரந்தெண்டனிட்டேனென்று இரக்கமாகச்சொல்ல; அதுகேட்டு வீமசேனனுக்குக்கிருபைவந்து சரணமடைந்தவர்களைக்காக்கிறதேதர்மமென்றுசொல்லி சமாதானமாய் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு சந்தோஷப்பட்டார்கள். அப்போதுமேகவர்ணனும் அஸ்வமேதக்குதிரையுடனேவெளிப்பட்டுவீமசேனனிடத்தில்வந்துசேர்ந்தான்.

அவனையும் எவ்வனாசுவன் தழுவிக்கொண்டுஇந்தமூன்றுபேரையும்ஆனையின்பேரிலேற்றிக்கொண்டு இரதவர்கள்போக மற்றசேனைகளுடனும், பந்துவர்க்கங்கள், குமாரவர்க்கங்கள், மந்திரி, பிரதானிகளுடனும், நடந்துபோய் பத்திராவதிபட்டணத்துட்புகுந்து அங்குள்ள ஸ்திரீஜனங்கள் அக்ஷதைகளிறைக்கவும் முத்தாலத்தி, பவளாலத்திமுதலான அநேகஆலத்திகளெடுக்கவும மஹாவைபவத்துடனேபோய் எவ்வனாசுவபூபாலனும் ஆனந்தசமுத்திரத்தில் முழுகினவனாய் சேனைகளையெல்லாம்வெளியே நிறுத்திவிட்டு வீமசேனன்-விஷவகேது-மேகவர்ணன்-இவர்கள்மூன்றுபேருக்குந்தனதுபட்டபுதேவியாகிய பிரபாவதிகையினால் ஆலத்தியெடுப்பித்து அந்தப்புரத்துக்குள் அழைத்துக்கொண்டுபோய் அவர்களைஸ்நானம்பண்ணுவித்து தானுமஸ்நானம்பண்ணி போசனசாலையிற்புகுந்து சகலசம்பிரமத்துடன் போஜனஞ்செய்து கைகால்சுத்திபண்ணிக்கொண்டு சந்தனபுஷ்பங்களணிந்துகொண்டுதாம்பூலந்தரித்துக்கொண்டு ஆஸ்தானமண்டபத்திற்குவந்துசகலராஜாக்களுடனுங்கொலுவாய் தன்னுடைய (நவரத்ந) பீடத்திலேவீமசேனனை உள்க்காரவைத்துக்கொண்டு மற்றஇரண்டுபேருக்கும் வேறேநவரத்நபீடம்போடுவித்து சங்கீதமேளம்நாககுரமுதலான மேளவாத்தியக்காரரையும ஊர்வசிரம்பை, திலோத்தமைக்குச்சரியானநாடகப்பெண்களையும அழைப்பித்து அந்த மூன்றுபேருக்கும்பொழுதுபோக்கிவைக்கும்படிதிட்டஞ்செய்து எவ்வனாசுவமஹாராஜனும் தனதுசேனாதிபதியாகியசுதேவனென்கிறவனை அழைத்துச்சொல்லுகிறான் ஓட்சுதேவா; நாளையதினம்தர்மராஜாவானவர்செய்கிற அசுவமேதயாகத்திற்குநாமெல்லோரும் போகவேண்டும். ஆதலால் நமதுசேனைகளையும் பட்டணத்துஜனங்களெல்லாரையும் சீக்கிரமாய்ப்பிரயாணப்படுத்து அதுவுமல்லாமல்தர்மநந்தனருக்குகாணிக்கையாகக்கொண்டுபோகவஸ்துக்களையுமுஸ்திதுபண்ணென்றுகட்டளையிட்டுப்பிற்பாடு தன்னு

டைய,ஸ்திரீகள்,பிள்ளைகள்,சகலமானவர்களுக்கும்உத்தரவு செய்துபி
ரயாணப்படச்சொன்னான்.அப்படியே அவர்களெல்லாரும் பிரயாண
ப்பட்டார்கள். சுதேவனும்எவ்வர்ணசுவனுடைய உத்தாரப்படி இந்த
சேதிசகலமானபேர்களுக்குந் தெரியும்படி பறையலறவித்து தன்னு
டையவளவுக்குப்போய்தன் பெண்சாதி பிள்ளைகளுக்கும் பிரயாணச்சே
தியைச்சொல்லிவிட்டுதன்மாதாவாகிய துன்மார்க்கியெல்கிறவ ளண்
டைக்குப்போய் தெண்டனிட்டுஓய் அம்மா! தாயே! எவ்வர்ணசுவமஹா
ராஜாவானவர்சகலசேனைகளுடனே பிரயாணப்பட்டுதர்ம்மராஜா செ
ய்கிறயாகத்தைப்பார்க்கப்போகிறார் நாமும்போய்க்கண்குளிரப்பார்
த்துஸ்ரீகிருஷ்ணபகவானையுஞ்சேவித்து நாம்செய்தபாவங்கள் போக
த்தக்கதாகக்கங்கைமுதலியபுண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்
துசுகமாய்வரலாம்வாருந்தாயேயென்று அழைக்க, அதுகேட்டு அந்த
துன்மார்க்கியும் தன்குமாரனாகிய சுதேவனைப்பார்த்து அடாபயலே;
நீஎன்னசொன்னாய்; என்னசொன்னாய்; தர்ம்மராஜா யாகம் பண்ணுகி
றான்எவ்வர்ணசுவன்போகிறான் நானும் போகிறேன் நீயும்வா என்று
என்னை அழைக்கிறாயல்லவா; அடாபிள்ளாய்; நீஒருபயித்தியக் காரன்
அந்தஎவ்வர்ணசுவனும் ஒருபயித்தியக்காரன்யாகஞ்செய்கிறதர்ம்மரா
ஜாவோஉங்களிலும் பெரியபயித்தியக்காரன் அதெப்படி யென்று
கேட்பாயாகில்.

அந்ததர்ம்மராஜா இதுபரியந்தம் வனவாசஞ்செய்து அலைச்சல்
பட்டுமுடிவிலே துரியோதனாதிகளைஜெயித்து முந்தாளல்லவோ பட்ட
ங்கட்டிக்கொண்டான். இனியாகிலும் பெண்சாதிபிள்ளைகளுடனேசு
கமாய்வேளைக்குச் சாப்பிட்டுக்கொண்டு மூலைவீட்டில்சும்மாயிராமல்
பயித்தியம்பிடித்துவிருதாவாகயாகஞ்செய்கிறதென்றுபார்ப்பார்பே
ச்சைக்கேட்டு வீணாகதிரவியத்தையெல்லாஞ் செலவழித்துவிடுகிறான்.
ஐயையோ! தர்ம்மராஜாவை இதுவரையில்மெத்தபுத்தியுள்ளவனென்
றெண்ணியிருந்தேன் இதனால் அவன்புத்திதெரியவந்தது இந்தபயித்தி
யங்கொண்டு பணத்தையெல்லாஞ் செலவிடுகிறானல்லவோ; ஆனாலவன்
பிழைக்கமாட்டான். அந்தகிருஷ்ணனைப் பார்த்தாகிலும் பிழைக்கவே
ண்டாமோ; அந்தகிருஷ்ணன் அநேகம்பணத்தைச்சம்பாதித்துபெண்
சாதிகளுக்குஉடைமையிட்டு ஒருத்தருக்கும்ஒரு காசுகொடாமல் ஒரு
யாகமும் பண்ணாமல்பிக்ஷையிடாமல்திரவியத்தையெல்லாம்பத்திரப்
படுத்திவிட்டுஒருநாளாகிலும்வீட்டில்சாப்பிடாமல்ஊரூராய்த்திருந்
துவயிறுவளர்த்துக்கொண்டுகாலங்கழிக்கிறான்பார்த்தாயோ;அவனே
எனக்குப் பிரியமானவன்அவனைமெச்சினேன் அவனைப்பார்த்தாகிலு
ம்தர்ம்மராஜா பிழையாமல் விருதாவாகக்கெட்டுப்போகிறான். ஆனாலு
மாகட்டும் நான் வருகிறதில்லை; அந்தப்பயித்தியக்காரன் செய்கிறயா
கத்தைநான்பார்க்கலாகாது; என்னைத் தண்ணீரில்விழுந்துசாகச்சொ
ன்னாயோ; எனக்குவரக்கூடாது அப்படியல்லவென்றுநான் வந்துவி

ட்டால்இங்கேவீட்டில் மருமக்கள்மார் மிஞ்சினவர்கள் பணங்காசுகளை அபாரியாய்ச் செலவுபண்ணிவிடுவார்கள். ஆகையால் அப்படிச்செய்யவொட்டாமல் தண்டிப்பதைவிட்டும் பிள்ளைகளையும்; பெண்களையும் வேளைக்குவேளை சோறுதின்னவொட்டாமல் அதட்டி அரைவயிறுங் கால்வயிறுமாய் ஒருவேளை சோறுதின்னச்சொல்லி கட்டுபண்ணுகிறதைவிட்டும் பிக்ஷைக்காரரை ஊர்வழி தெருவழி வரவொட்டாமல் காலொடியும்படி அடிக்கிறதைவிட்டும், அண்டை அசலுடன் உலக்கைத்தடியையெடுத்துக்கொண்டுசண்டைக்குப் போகிறதைவிட்டும். என்புருஷனை நித்தநித்தங் கண்டனை தண்டனை பண்ணுகிறதைவிட்டும்உன்பிறகேவரச்சொல்லுகிறாயோ; நல்லவேலைசெய்தாய் பிள்ளாய்;நான்வந்து விட்டால்என்வீடெல்லாங் கொள்ளையாய்ப்போம். அப்போதே என் ஜீவனும்போம். நான்வருகிறதில்லை. நீவேணுமானால் பயித்தியம் பிடித்துப்போகிறாயென்று சொல்லியனுப்ப அவனுஞ் சிரித்துக்கொண்டு வந்து அவள்சொன்னவசனங்களெல்லாமெவ்வர்ஞசுவனிடத்திலும் வீமசேனன்முதலானவர்களிடத்திலுஞ் சொன்னான்.

அதுகேட்டு அவர்களெல்லாருங் கலீலென்றுநகைத்து இப்படிக்கொத்தவள், தர்மராஜா; ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, இவர்களிடத்தில்வந்திருந்தால் பொழுதுபோக்கிக்கொண்டிருப்பாள்ஆகையினால், அவளையுங்கூடவே அழைத்துக்கொண்டுவாவென்று வீமசேனன்சொல்ல, சுதேவனும்ஐயா! நானென்னால்கூடியமட்டுஞ் சொல்லிப்பார்த்தேன் அவள்வருகிறதில்லையென்று சொன்னான். அதுகேட்டுஎவ்வர்ஞசுவனும் அப்படியானால் அவளைக்கையுங்காலுங்கட்டி (டோலியில்) போட்டுக்கொண்டுவாவென்றான். அதுகேட்டு சுதேவனும்அப்படியேதாயாரிடத்திற்போயழைக்க. அவள்வரமாட்டேனென்றுசொல்ல; அவளைப்பலாத்காரமாய்ப்பிடித்துக் காலுங்கையுங்கட்டி எடுத்துக்கொண்டுவந்து டோலியில்போட்டுக்கொண்டு அவள்கூகாவென்றுகூச்சலிடும்படி கொண்டுவந்து எவ்வர்ஞசுவன்முன்னேநிறுத்தினான். அதுகண்டு எவ்வர்ஞசுவனும்சிரித்து சகலஜனங்களையும் பிரயாணப்படுத்திதானும்ரதகஜதுரகபதாதிகளும்மந்திரி பிரதானிகளும் குமாரவர்க் கங்களும் பந்துவர்க்கங்களும்ஸ்திரீஜனங்களும் வீமசேனன்விஷ்வகேதுமேகவர்ணனும் தன்குமாரனானசுவேகனும், தளபதியான, சுதேவனும் புடைசூழத்தக்கதாக அஸ்வமேதக்குதிரையைக் கூட்டிக்கொண்டு பிரயாணப்பட்டுபதினெட்டு மேளவாத்தியங்களு முழங்கும்படியாகப்பத்திராவதிபட்டணத்தைவிட்டுப்புறப்பட்டு வெளிக்கூடாரம்போட்டு சேனைகளையெல்லாங்கும்பலாகக் கூட்டிப்பிரயாணப்படுத்திஅஸ்தினபுரத்திற்குச்சமீபமாகவந்து எவ்வர்ஞசுவனும் வீமசேனமஹாராஜாவினுடைய அனுமதியின்பேரில்தன் சேனைகளையெல்லாம்அங்கேஒருசிங்காரவனத்தில்இறங்கும்படிசெய்தான் அப்பொழுதுவீம சேனனும்தா

ன்முன்னாகநடந்துவந்து அஸ்திநபுரத்திற்புகுந்து தர்ம்மராஜாவை க்கண்டுநமஸ்காரம்பண்ணினான் அவரும்தம்பியையெடுத்துமார்போ டணைத்துக்கொண்டுஆசீர்வாதம்பண்ணினார்அப்போது வீமசேனனு ம் தான் போய்வந்த சகலசேதிகளை யெல்லாஞ் சொல்லி எவ்வர் ணசுவமஹாராஜனும் அசுவமேதக்குதிரையுடனே தண்டுவிட்டு நம் முடையவூருக்குச் சமீபத்தில் வந்திறங்கி யிருக்கிறான் நான் முன்னு நாகவந்தேனென்றுசொல்லிவிட்டு அந்தப்புரத்திற்குப் போய் குந் தாதேவிக்கு நமஸ்காரஞ்செய்து அந்த அம்மாளுடனே சகலசேதிக ளையுஞ் சொல்லிவிட்டு பிற்பாடு ஸ்ரீகிருஷ்ணதேவர் எங்கிருக்கிறாரெ ன்று விசாரித்து உப்பரிகையின்பேரி லிருக்கிறதாகக் கேள்விப்பட் டு அவிடத்திற்போய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக்கண்டு நமஸ்காரஞ் செ ய்ய அவரும்வீமசேனனை யெடுத்துமார்புடனேதழுவிக்கொண்டு ஓய் வீமசேனா! நீ அசுவமேதக்குதிரையைக்கொண்டுவந்தாயோ வென்று கேட்க அதற்கு வாய்வுகுமாரனாகிய வீமசேனன் சொல்லுகிறான்.

ஐயா! கிருஷ்ணமூர்த்தி; உம்முடைய அனுக்கிரகத்தினாலே நா னும்- விஷ்வகேதுவும் - மேகவர்ணனும்-பத்திராவதிபட்டணத்திற்கு ப்போய் குதிரையைப்பிடித்துக்கொண்டு எவ்வர்ணசுவனிடத்தில்சண் டை சமாதானஞ்செய்து அந்தராஜனையும் உடன்படுத்தி குதிரையுட னே யழைத்துக்கொண்டுவந்தோம் அதோ அவர்களும் வருகிறார்க ள். நான் உங்களுக்குச் சேதிசொல்லும்படி முன்பாக வந்தேனென் றுசொல்லி அவருக்குச் சந்தோஷமுண்டாக்கிவிட்டு அங்கிருந்து து ரௌபதையினிடத்திற்குவந்து அவளுடனேயுஞ்சொல்லிவிட்டு-அர்ச் சுனன்- நகுலன்-சகாதேவன்-முதலானவர்களுக்குந் தெரிவித்துவிட் டு பிற்பாடு போஜனசாலைக்குட்போய் சகலசம்பிரமத்துடன் போஜ னம்பண்ணி கை கால் சுத்திசெய்துக்கொண்டு மறுபடியும் தன் தமை யனாகிய தர்ம்மபுத்திரரிடத்திற்குவந்து ஸ்ரீகிருஷ்ணபகவானோடும் தர்ம்மராஜாவினோடும் ஆலோசனைசெய்து நாமனைவரும் எதிர்க்கொ ண்டுபோய் எவ்வர்ணசுவ மஹாராஜனை அழைத்து வரவேண்டுமென் று வீமசேனன் சொல்ல, அதுகேட்டு தர்ம்மபுத்திரரும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாருடைய அனுமதியின்பேரில் மந்திரி பிரதானிகளுடனே தம்பிமார்களும் புடைசூழத்தக்கதாகப் புறப்பட்டு வருகிறபோது எவ்வர்ணசுவனுஞ் சேர்ந்துவந்து தனக் கெதிராகவந்ததர்ம்ம நந்தன னுக்கு தான்கொண்டுவந்த காணிக்கைகளை வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணினான். அதுகண்டு தர்ம்மபுத்திரரும் சந்தோஷிகரா மாய் எவ்வர்ணசுவனையெடுத்து மார்போடே தழுவிக்கொண்டு ஓய் ராஜேந்திரா! உன்னுடைய சிநேகத்தை விரும்பியே வீமசேனனைய னுப்பிக் குதிரையைப்பிடிக்கும்படிசொன்னேன். இனிமேல் நான் செய்கிறயாகமானது ஒருவிக்கினமும் வராமல் நிறைவேறுமென்று சொல்ல, அதற்கு எவ்வர்ணசுவனும் ஐயா! தர்ம்மநந்தனா! உங்களுடை

ப்தரிசனமும் சிநேகமும்வேண்டி அடியேனும் இவிடம்வந்தேனென்றுசொல்லி பிற்பாடு தேவாதி தேவனான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக்கண்டு நமஸ்காரஞ்செய்தான் அவரும் எவ்வர்ணகுவனை யெடுத்து மார்போடணைத்துக்கொண்டு ஆசீர்வாதஞ்செய்தருளினார்.

பிற்பாடு எவ்வர்ணகுவன் - அர்ச்சுனனையும் - நகுலனையும் - சகாதேவனையுந் தழுவிக்கொண்டு ஒருவர்க்கொருவர் சந்தோஷவார்த்தைகளைப்பேசிக்கொண்டு சகலஜனங்களுடனேயும் அஸ்தினபுரத்தி லிருந்தான், தர்ம்மராஜாவும்அந்தஅஸ்வமேதக்குதிரையைத் தன்னரண்மனையிற்கட்டிவைத்து சகலராஜ கூட்டங்களுடனேயும் நவரத்ந மண்டபத்தில் கொலுவாயிருந்தார். பின்பு எவ்வர்ணகுவன் பெண்சாதியாகிய பிரபாவதியும் குந்திதேவிக்கும் - துரௌபதைக்கும் - நமஸ்காரஞ்செய்து அவர்கள் ஆதரணைசெய்ய அந்தப்புரத்திலேயிருந்தாள். மற்றச்சனைகளும் அவரவர்களுக்குவிட்ட விடுதியிலிறங்கியிருந்தார்கள். அந்தச்சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தர்ம்மராஜாவைப் பார்த்து ஓய் தர்ம்மநந்தநா! சித்திராபர்வத்திலல்லவோ நாம் குதிரையை விடப்போகிறது அப்பொழுது என்னை யழைத்தனுப்பினால் நான்வருகிறேன் இப்பொழுது துவாரகைக்குப் போகிறேனென்று தர்ம்மநந்தனனிடத்திலும் - வீமன் - அர்ச்சுனன் - நகுலன் - சகாதேவன் இவர்களிடத்திலும் - குந்திதேவி - சுபத்திரை - துரௌபதை - யிவர்களிடத்திலும் செலவுபெற்றுகொண்டு சாத்தகி - கிருதவர்ம்மன் - இவர்களோடும் ஒருதிவ்விய ரதத்திலேறிக்கொண்டு மஹாசந்தோஷத்துடனே துவாரகைக்கு எழுந்தருளினார். பின்புதர்ம்மராஜாவானவர் இரண்டுமாதவரைக்கும மஹாவைபவத்துடனே ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில் தர்ம்மராஜா கொலுமண்டபத்திலிருக்கிறவேளையில் அவரிடத்திற்கு மறுபடியும் ஸ்ரீ வேதவியாசர் எழுந்தருளிவந்தார். அதுகண்டு தர்ம்மபுத்திரரும் கொலுவைவிட் டெழுந்திருந்து எதிர்கொண்டுபோய் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அந்த முனிசிகாமணியை அழைத்துவந்து ஒரு பொற்பீடத்தின்பேரில் எழுந்தருளச்செய்து கந்தபுஷ்ப அக்ஷதைகளால் பூசைசெய்து யோகக்ஷேமங்களை யொருவர்க்கொருவர் உசாவினபின்பு தர்ம்மராஜாவானவர் அந்தமுனி நாதனைப்பார்த்து ஓய் வியாசமுனீந்திரா! தேவரீர்கட்டளை யிட்டபடியே அஸ்வமேதக்குதிரையையழைப்பித்தேன். இமோர்ப்பர்வதத்தண்டையிலிருக்கிற திரவியத்தையு மெடுப்பித்துக் கொள்கிறேன் அது இருக்கட்டும், முன்பு அஸ்வமேதயாகத்தை மருத்துமஹாராஜா செய்துமுடித்தாரென்று திருவுளம்பற்றியருளினீரே! அந்த மருத்து மஹாராஜா எந்தவிதமாக அந்தயாகத்தை நிறைவேற்றினார். அந்த விவரத்தை அடியேனுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு வியாசபகவான் திருவுளம்பற்றியருளுகின்றார்.

வியாசபகவான்-தர்ம்மநந்தனருக்கு
(அஸ்வமேதயாகத்தின்-முறைமைகூறல்,)

ஓய்தர்ம்மநந்தனே! அந்தமருத்துமஹாராஜா யாகஞ்செய்துமுடித்தவிவரத்தைச்சொல்லுகிறோம் நீர் கேட்பீராக அஃதெப்படியென்றால், பூர்வத்திலந்த மருத்துமஹாராஜன் ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கும்போது தான் சுவர்க்கபோகம் அனுபவிக்கவேண்டி அஸ்வமேதயாகம் செய்யும்படி நினைந்து தெய்வலோகத்திற்குப்போய் (பிரகஸ்பதிபகவானைக்கண்டு) நமஸ்காரஞ்செய்து அவரைத்தான்செய்கிற யாகத்திற்குப் புரோகிதராயிருக்கும்படி அழைக்க அவரும் அப்படியே வருகிறேனென்று சம்மதித்து பின்பு தேவேந்திரனிடத்திற்குப்போய் செலவுகேட்க அந்ததேவேந்திரனும் ஆலோசனைசெய்து அந்தயாகத்தை நீரிருந்து நிறைவேற்றிவைத்தால் அவன் நம்முடைய பதவிக்குவருவான் ஆதலால், நீர்போகவேண்டாமென்று சொல்லிவிட்டான். ஆகையினால், பிரகஸ்பதிபகவானும் வரமாட்டோமென்று சொன்னார். அதுகேட்டு மருத்து மஹாராஜனும் மிகுந்த விசாரத்துடன் பூலோகத்திற்கு வந்து துக்கித்துக்கொண்டிருக்கிறபோது அவரிடத்திற்கு நாரதர்வந்து சொல்லுகின்றார். ஓய் மருத்துமஹாராஜனே ! நீரேன் விசனப்படுகிறீர். (பிரகஸ்பதி) வராமற்போனால் போகட்டும் அவர்தம்பியான சங்கவர்ணர் யோகீஸ்வரராய்க் காசியிலிருக்கிறார், நீர் அவரிடத்திற்குப்போய் அவரை அழைத்துவந்து புரோகிதராக வைத்துக் கொண்டு யாகஞ்செய்யும் அவர் எத்தனை கோபித்துக்கொண்டாலும் நீர் பொறுத்திரும் என்சேதி உனக்குச் சொன்னவனொன்றுகேட்டால் நாரதர் சொல்லிவிட்டு அக்கினியில் விழுந்தாரென்றுசொல்லும் போய்வாருமென்றுசொல்லிநாரதர்போய்விட்டார்

அதுகேட்டு மருத்துமஹாராஜனும் அப்படியேகாசிக்குப்போய்ப்பேய்பிடித்தவரைப்போல் திரிந்துகொண்டிருக்கிற சங்கவர்ணரைக் கண்டுதெண்டனிட்டு எதிரேநிற்க, அதுகண்டு அந்த சங்கவர்ணரும் ராஜாவின்பேரில் காறிபுமிழ்ந்துவிட்டுப் பேய்நினைவாயோடிப்போனார் அதுகண்டு மருத்துமஹாராஜனும் பின்விடாமல் தொடர்ந்துபோக அப்போதுசங்கவர்ணரும் நீ யாமொன்றுகேட்க. மருத்துமஹாராஜனும் அவரைப்பார்த்து ஓய்சுவாமீ! அடியேனும் அஸ்வமேதயாகஞ்செய்யவேண்டி சுவர்க்க. பூமிக்குப்போய் பிரகஸ்பதியைப் புரோகிதராக இருக்கும்படி அழைத்தேன் அவரும் தேவேந்திரன்பேச்சைக் கேட்டுக்கொண்டுவரமாட்டேனென்றுசொல்லிவிட்டார். அதுகேட்டு பூலோகத்திற்குவந்துநான்விசாரப்பட்டுக்கொண்டிருக்கும்போது நாரதர்வந்துதேவரீரை அழைத்துக்கொண்டுவந்து நிறைவேற்றும் படி

சொல்லிவிட்டு அக்கினியில் விழுந்துபோனனென்று நடந்த சவிஸ்தாரங்களைச்சொல்ல, அதுகேட்டு சங்கவர்ணருஞ் சிரித்து ஓய் மருத்து மஹாராஜாவே நீ அழைப்பித்தபடியே நான்வந்து உன்கையினால் அந்த யாகத்தைச்செய்து முடிக்கிறேன் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், அப்படி செய்யும்போது மத்தியில் பிரகஸ்பதிவந்தால்அவரை வைத்துக்கொண்டு செய்கிறதில்லையென்று நீ உறுதியாகச்சொல்வாயாகில் நானே அந்தயாகத்தை நிறைவேற்றி உன்னை மோக்ஷாதிபனாகச்செய்கிறேனென்றுசொல்ல, அதுகேட்டு மருத்துமஹாராஜனும் அப்படியே நல்லதென்று சத்தியவசனமாகச்சொல்ல அதற்குசங்கவர்ணரும் சம்மதப்பட்டு அந்தராஜாவின் பின்னேவந்து யாகமுஸ்தீதுபண்ணிவைத்து அந்தயாககுண்டத்தில் அக்கினியைவளர்த்த அந்த அக்கினியும் இந்திரனிடத்தில் கட்டுப்பட்டிருந்த படியினால் தணிந்துவிட்டது, அதற்குச்சங்கவர்ணருங்கோபங்கொண்டு அக்கினியைச்சபிக்கும்படி நினைக்கும்போது அதுகண்டு அக்கினிதேவருங் கிடுகிடுவென்று நடுங்கிப்பயந்துவந்து அந்தயாககுண்டத்தில் பிரகாசமாயெரிந்தார் அப்போது சங்கவர்ணரும் மந்திரங்களைச்சொல்லி அந்தராஜன்கையினால் யாகஞ்செய்விக்கும்போது அந்த ஓமப்புகையானது தெய்வலோகமட்டாயெழும்பியது, அதுகண்டு தேவேந்திரன் ஆலோசித்து பிரகஸ்பதியைவைத்துக்கொண்டு யாகம்பண்ணச்சொல்லி ஒரு தூதனுடனே சொல்லியனுப்பினான். அந்த தூதனும் வந்து சங்கவர்ணருடைய கோபாக்கினிக்குப்பயந்து திரும்பிப்போய்த்தேவேந்திரனுடனே கூடாதென்றுசொல்ல; அதுகேட்டுத்தேவேந்திரன்கோபங்கொண்டு வஜ்ராயுதத்தை யெடுத்துவருகிறபோது அதுதெரிந்து சங்கவர்ணருஞ்சிரித்து வஜ்ராயுதத்தைப்பிரயோகஞ் செய்யாமலும் அவனை நடந்துவரவொட்டாமலும் ஸ்தம்பித்துவிட்டார். அதுகண்டு தேவேந்திரன் பயந்து கெர்வமடங்கினவனாய் மெத்தவும் பரிதாபப்பட அப்போது சங்கவர்ணருக்குத் தயவுவந்து எப்போதும் போலிருக்கப்பண்ணி அந்த இந்திரன் முதலான திக்குப் பாலகர்கள் கையினால் யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்களை எடுத்துதரச்சொல்லி சகலசம்பிரமத்துடனே மருத்து மஹாராஜன் கையினால் யாகத்தைச் சாங்கமாய்நடப்பித்து இந்திரன் முதலான தேவர்களுக்கெல்லாம் அந்தராஜன்கையில் அவிர்ப்பாகங்களைக் கொடுப்பித்து சந்தோஷம் பண்ணுவித்தான். அந்தமருத்து மஹாராஜனும் சந்தோஷிமாய் அந்தயாகத்தை நிறைவேற்றிவிட்டு சங்கவர்ணருக்குக் கணக்கில்லாத திரவியத்தைத் தக்ஷிணையாகக்கொடுத்து இன்னம் அநேகமாயிரம் பிராமணர்களுக்குந் திரவியத்தைப் பர்வதாகாரமாய்க் குவித்து தக்ஷிணையாகக்கொடுத்து கீர்த்திபெற்றான், அந்தப்பிராமணர்களும் அவரவர்கள் சுமக்கத்தகுந்த திரவியத்தை எடுத்துக்கொண்டு மிச்சமான திரவியத்தை இமோர்ப்பர்வதத்தண்டையில் குப்பலாகக்குவித்துவிட்டு இந்த திரவியத்தை

கண்டபேர்கள் சுகமாய் எடுத்துக்கொள்ளக் கடவார்களென்று சொல்லிப்போனார்கள். ஆகையினால், ஓ தர்ம்மராஜாவே! நீர் அந்த திரவியத்தை யெடுத்துக்கொண்டு யாகம்பண்ணுமென்றுசொன்னார்.

அதுகேட்டுதர்ம்மநந்தனருஞ் சந்தோஷிப்பட்டு ஐயா முனிநாதனே! பூலோகத்தில்-பிர்ம்ம,க்ஷத்திரிய, வைசிய,சூத்திரர்களாகிய இந்தநான்குவர்ணத்தாரும் அவரவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைமையைக்கிரமப்படி அடியேனுக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்றுகேட்க,அதற்குவேதவியாசர்சொல்லுகிறார் ஓ தர்ம்மநந்தனனே கேளும்! பிராமணனுக்கிருக்கவேண்டியது, ஸ்நானம்,சந்தியாவனம்;ஜபதபவேதபாராயணம்-ஹோமம்,பொறுமை-சத்தியம்,இந்தநற்குணங்களையுடைத்தாயிருக்கின்றவனே பிராமணன். அவன் அந்தத்தில்பிர்ம்மலோகத்தையடைவான். க்ஷத்திரியனுக்கிருக்கவேண்டியது, துஷ்டநிக்கிரகம்சிஷ்டபரிபாலனம்,சத்தியம்,பூததயாளம்,சத்துருஜெயம்பிராமணசேவை,இந்தநற்குணங்களை யுடைத்தாயிருக்கின்றவனே உத்தமக்ஷத்திரியன். அவன் அந்தத்தில்புண்ணியலோகத்தையடைவான் வைசியனுக்கிருக்கவேண்டியது ஒருவல் துலைவக்கொள்வல்;விற்றல்,அதில் சமமானஆதாயம், வைத்துக்கொண்டு. தராசுநிலையாக நிற்றல் இந்தநற்குணங்களையுடைத்தா யிருக்கின்றவனே உத்தமவைசியன் அவன் அந்தத்தில்இந்திரலோகத்தையடைவான். சூத்திரனுக்குக்கிருக்க வேண்டியதுதனது நடைபிறழாமை,பொய்சொல்லாமை பூததயாளம் பெரியோர்கள்பக்தி பிராமணசேவை இந்தநற்குணங்களை யுடைத்தாயிருக்கின்றவனே உத்தமசூத்திரன். அவனும்அந்தத்தில் புண்ணிய லோகத்தையடைவான் கேட்டீரோதர்ம்மராஜாவே! இதுகளுக்கெல்லாம் ஒரு சூக்ஷமமான ரஹஸியஞ்சொல்லுகிறோம் அதென்னவென்றால்.

எந்தஜாதியிற் பிறந்தவனானாலுஞ்சரியே அவனிடத்திற் பரஸ்திரீகமனமில்லாமையும் இரந்தவர்களுக்கு இல்லையென்னாமல் தன்னாலியன்றமாத்திரங்கொடுக்கின்ற ஜீவகாருண்யமும் - தேவதா பக்தியும்பிராமணவிசுவாசமும் பிதிர்க்கள்பக்தியும், வேதாகமசாஸ்திரங்களிடத்தில்நம்பிக்கையுமாகிய இந்தநற்குணங்கள் உண்டாயிருக்கவேண்டும் மேலும்,ஜென்மவாரம்,ஜென்மநக்ஷத்திரம்,மாசப்பிரவேசம்,ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி,இதுமுதலான சுபதினங்களில் ஸ்திரீசையோகஞ்செய்யாமல் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியினிடத்தில் பக்திவிசுவாசமாயிருந்தவன் எவனோ அவன் சம்சயமில்லாமல் புண்ணியலோகத்தைச்சேருவானென்று வேதவியாசர்திருவுளம்பற்றியருளி தர்ம்மராஜாவினிடத்திற்செலவுபெற்றுக் கொண்டு தம்முடைய ஆசிரமத்திற்கெழுந்தருளினார். அதன்பின்பு தர்ம்மராஜாவும் ஏகாந்தஸ் தானத்திலிருந்து ஆலோசனை செய்து (சித்திராபர்வமும்) சமீபித்திருக்கிறதாலையால்இனிநாம்சும்மாயிராமல் யாகத்திற்குவேண்டிய முஸ்தீது பண்ணவேண்டுமே இதுகளுக்கெல்லாம் ஸ்ரீகிருஷ்ணபகவானிருக்கவே

ண்டும் அவனையல்லாமல் ஒருகாரியமும்நடவாதேயென்று நிச்சயித்து
க்கொண்டுதம்பியாகிய வீமசேனனையழைத்து ஓய்வீமசேனா! நீசீக்கி
ரமாய்ரதமேறிக்கொண்டு துவாரகாபுரிக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணமூர்
த்தியைக்கண்டுசித்திரா பர்வம்சமீபித்துவிட்டதென்று சொல்லி அவ
ரையும் அவர்பெண்சாதி பிள்ளைகள்முதலானபட்டணத்திலுள்ளசகல
ஜனங்களையும் அழைத்துக்கொண்டுவாவென்றுகட்டளையிட்டார் அப்ப
டியேநல்லதென்றுவீமசேனனும் ரதமேறிக்கொண்டு அதிகவேகமா
ய்துவாரகைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அரமனைவாசற்ப
டியில்ரதத்தைவிட்டிறங்கி வாசல்காக்கிறசேவகர்களுடனே அஸ்தினபுர
த்திலிருந்துவீமசேனன்வந்திருக்கிறான் அவன்அரமனைக்குவருகிற த
ற்குச்சமயமாவென்று கேட்டுவரச்சொன்னானென்று அறியப்படுத்து
ங்கோளென்றுசொல்லி யனுப்ப அந்தசேவகர்களும் அப்படியேநல்
லதென்று அரமனைக்குள்ளேபோக அங்கே அந்தப்புரத்தில் ஸ்ரீகிருஷ்
ணபகவானானவர் ஒருநவரத்நபீடத்தில்உள்க்கார்ந்துக்கொண்டு தங்க
ப்பள்ளயத்தில்தேவகி தேவியார்இஷ்டான்னம்பரிமாற,ருக்மிணி-சத்
தியபாமையிருவரும் மயில்விசிறிகொண்டுவிசிறமஹாசந்தோஷத்து
டனே தும்பைமலர்போன்ற சாதத்தில்தங்கக்கட்டிபோல் பருப்பைப்
போட்டுக்கொண்டுபுத்துருக்கு நெய்விட்டுஐந்துவிரலாலும்பிசைந்து
கையிலெடுத்து சாப்பிடப்போகிறசமயத்தில் சேவகர்கள்வந்து தண்
டனிட்டுஐயா! கிருஷ்ணமூர்த்தி! உம்முடையமச்சினனாகிய வீமசேன
மஹாராஜன்அரமனை வாசலிலேவந்துநிற்கிறார் அரமனைக்குள்ளேவருகி
றதற்குச்சமயமாவென்று கேட்டுவரச்சொன்னாரென்றுசொல்ல; அது
கேட்டு அந்தபகவான்சிரித்துஓ சேவகர்களே! அப்படியானால்வீமசே
னனைச்சனுூடியில் வரச்சொல்லுங்கோளென்றுசொல்லி அனுப்பிவிட்
டுதன்கையில் அள்ளின அமுதைச்சாப்பிடாமல் அப்படியேபிடித்துக்
கொண்டிருக்க, அதில்அந்தசேவகர்கள் சொன்னவார்த்தையைக்கேட்
டுவீமசேனனும் அரமனைக்குள்ளேவருவதுகண்டுஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
யும்நகைத்து வாவா வீமசேனா! நீயும்நல்லவேளைக்குவந்தாய்நீமஹா
ஆபாசத்துடனேயிருக்கிறாய் ஆதலால்நாமிருவரும்போஜனம் பண்
ணுவோம்வாவென்றழைக்க, அதுகேட்டுவீமசேனனும் நல்லதென்
று சமீபத்தில்வரவே அதற்குஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் நகைத்துஓ வீ
மசேனா! நான்விளையாட்டுக்காகச் சாப்பிடவாவென்று அழைத்தால் நீ
மெய்யென்றுவெட்கமில்லாமல் வந்துவிட்டாயே அப்படிவரலாகுமா
உலகத்தில்ஒருவன் சாப்பிடும்போது ஒருவன் வந்தால் அவனை உபசார
மாகச்சாப்பிடுவோம் வாருமென்றழைத்தால்அவன் நான்சாப்பிட்டே
ன் நீர்சாப்பிடுமென்று சொல்லுவானேயல்லாமல் சாப்பிடவரமாட்டா
ன் அப்படியல்லவென்று உனக்குஇந்தச்சாதத்தைக் கொடுத்தாலும்
போதுமோ! முன்னேஏகசக்கிரமென்கிற அக்கிராரத்தில் (பகாசுர
னுக்கு) ஒருவண்டில்நிறையவந்த சாதமுங்கறிகளுங்கொண்டுபோகச்

சொல்லிஉன்னையனுப்பினால் அதுகளையெல்லாம் புசித்து அதிலும்உ
தராக்கினியடங்காமல் யமுனாநதியிலிருந்த ஜலத்தையெல்லாங் குடித்
தும்போதாதஉனக்கு இந்தப்பள்ளயச் சாதந்தான் போதுமோவெ
ன்றுகேட்க அதற்குவீமசேனனும் சிரித்துஐயா! கிருஷ்ண மூர்த்தி
யே! நல்லவார்த்தைசொன்னீர் உம்முடையதலையின்பேரில்பூசினிக்கா
யளவுகுற்றத்தைவைத்துக்கொண்டுஎன்பேரில் குற்றஞ்சொல்லி மிரட்
டுகிறீரோ! நான்சாப்பாட்டைத்தள்ளப்போகாதென்று நினைத்துஇந்
தால்என்னை இப்படிச்சொல்லலாமே! ஆனால்நான்சொல்லுகிறேன்கே
ளும்முன்னாலே ஈரேழுபதினாலுலோகங்களையும் சத்தசாகரங்களையும்
சகலசராசரங்களையும் வயிற்றிலடக்கிக்கொண்டுஅதுவும் போதாமல்
இடைச்சிகள்வீட்டிலுள்ள தயிர்வெண்ணெய்களைத் திருடி யுண்டும்
கோபாலர்களெல்லாம் இந்திரனுக்குப்பொங்கலிட்டால் அதைவேண்
டாமென்றுதடுத்து கோவர்த்தனகிரிக்குப் பொங்கலிடுகிறது போல்
பேர்வைத்துப்பொங்கலிடுவித்து அந்தசாதத்தையெல்லாந் தின்றும்வ
யிறுநிரப்பிக்கொண்டவர் நீரல்லவோ! அப்படிப்பட்டஉம்முடைய வ
யிற்றுக்குமுன் என்வயிறு எம்மாத்திரங்கிருஷ்ணாவென்று பரிகாசம்ப
ண்ணினான். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் நகைத்தருளினார்.அங்
கிருந்தருக்மிணி சத்யபாமைமுதலான ஸ்திரீஜனங்களெல்லாருங் கலீ
லென்றுநகைத்தார்கள். அப்போதுஸ்ரீகிருஷ்ணபகவானும் வீமசே
னனைவாவென்றழைத்து தம்முடனேகூடஉள்க்காரவைத்துக்கொண்டு
இரண்டுபேருமாக ஒருபள்ளயத்திற்சாப்பிட அப்போதுதேவகிதேவி
யார், சாதமுங் கறிகளும்.பால்,மோர், நெய்களும், வேண்டிய மட்டு
க்கும்பரிமாற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் வீமசேனனும் திருப்தியாக
ப்போஜனம்பண்ணிக்கைகால் சுத்திசெய்துகொண்டு நவரத்னகசிதமா
ன மண்டபத்தில்உள்க்கார்ந்தார்கள்.

அதிலேருக்மிணிதேவியாரும் நல்லசுகந்தமாகிய சந்தனமும்ப
னிநீரும்தாம்பூலமும்பரிமளத்திரவியமும்பாரிசாதபுஷ்பமுங்கொண்
டுவந்துவைக்க, அதுகளை இருவருஞ்சந்தோஷமாகத்தரித்துக் கொண்
டுஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் வீமசேனனைப்பார்த்துநீவந்த காரிய
மென்னவென்றுகேட்க, வீமசேனனும் ஐயா!நான்வந்தகாரியம்உம
க்குத்தெரியாதோ? ஆனாலுஞ்சொல்லுகிறேன் கேளும் அஃதென்ன
வென்றால்; தர்மராஜாவானவர் யாகஞ்செய்கிறநாள்சமீபித்திருக்கிற
தென்றுதங்களையும் தங்கள்புத்திரமித்திர களத்திராதிகளையும்பட்டண
த்திலுள்ளசகலஜனங்களையும் அழைத்துக்கொண்டுவரச் சொன்னாரெ
ன்றுசொல்ல அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் நல்லதென்று சாத்த
கியையும்கிருதவர்மனையும் அழைப்பித்துஓய்தம்பிமார்களே! தர்ம
ராஜாவானவர்நம்மையாகத்திற்கு அழைத்துவரச்சொன்னாரென்று
வீமசேனன்வந்திருக்கிறான் ஆதலால்: நீங்கள்நமதுசேனைகளையும்-து
ராதுனாகளையும்பிரத்தியுமனன்; அனிருத்திரன்சாம்பன்சாருகன்சாரு

தக்ஷணன், கேதன்; முதலான குமாரவர்க்கங்களையும் யதுவிஷ்டி போ
ஜனையும் அந்தகன் முதலான தாயாதிவர்க்கங்களையும் அவரவர்கள் ஸ்திரீ
களையும் பிரயாணப்படுத்துங்கோளென்று சொல்லி தன்னுடைய பட்ட
புஸ்திரீகள் எட்டுப்பேரையும் பதினாயிரத்தொருநூறு ராஜகுமாரத்தி
களையும் பிரயாணப்படச்சொல்லி தாம் வசுதேவரண்டைக்குப் போய்
தெண்டனிட்டு அவரிடத்திற் செலவுகேட்க அவரும் கிருஷ்ணஉன்னைவி
ட்டு எப்படியிருப்பேனென்று சொல்ல, அதற்குத் தகுந்த சம்பதிவசனஞ்
சொல்லி அவரிடத்திலுஞ் செலவுபெற்றுக்கொண்டு வீமசேனனுடனே
தாமும் ஒரு வெள்ளைக்குதிரையின் பேரிலேறிக்கொண்டு துவாரகையை
விட்டு வெளியிலே வந்து நின்றார். அப்போது தேவகிதேவியார் முதலா
ன அந்தப்புரத்து ஸ்திரீகளெல்லாரும் ரதங்களிலேறி நடந்தார்கள் சாத்
தகி கிருதவர்மன் இவர்களுத்தாரப்படிக்கு பிரத்தியுமனன் முதலா
னராஜகுமாரர்களும் பின்னுமுண்டான உத்தவன் அக்குரூரன் முதலா
னவர்களுந் தங்கள் தங்கள் ரதங்களிலேறி நடந்தார்கள் இன்னமும் பலரா
மன் முதலாக துவாரகையிலுள்ள ஜனங்களெல்லாரும் நடந்துவந்து கி
ருஷ்ணபகவானிடத்திற் சேர்ந்தார்கள் அப்போது பதினெட்டுவகைமே
ளவாத்தியங்களும் தாம்தாவென்று முழங்கவும் சங்கீதமேளம் வசந்த
ரிமேளம் - நாகசுரமேளங்கள், சப்திக்கவும் பாடகர்கள் கொண்டாடவு
ம் ரம்பை, யூர்வசிக்குச் சரியான நாடகப்பெண்கள் நாட்டியம் பண்ண
வும் இப்படி முதலான சகலசம்பிரமத்துடனேயும் நடந்துவருகிறபோது
ஸ்ரீகிருஷ்ணபகவான் வீமசேனனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓய் வீமசேனா! நீ அந்தநாட்டியஞ்செய்கிறபெண்களைப் பார்க்
கிறாயே அவர்களுனக்குக்கூடா! அவர்களை நீ என் பார்க்கிறாய் உன் ஆகார
த்துக்கும் உன் பெரியசரீரத்திற்கும் அவர்கள் ஈடுசெய்யமாட்டார்கள் உ
ன்னைப் பார்த்து அவர்கள் பயப்படுகிறார்கள் எனக்கு முதலாய்ப் பயமா
யிருக்கிறது ஆகையினால் உனக்குத் தகுந்தவர்களாரென்றால் அதோ பார்
த்தாயோ நூற்றிருபது வயது சென்று பற்கள் விழுந்து தலையும் உ
டம்புந் திரைந்து ஸ்தனங்களுஞ் சரிந்து பழுத்தபழமாய் கெட்டிசரீர
மாய் நல்ல ஸ்திரீகள் வருகிறார்கள். அவர்களிடத்திற் போய் அவர்கள்
முகத்தைப் பார் உனக்குத் தகுந்தவர்கள் அவர்களே யொழிய இவர்க
ள் ஈடுசெய்யமாட்டார்கள். இதுவல்லாமலும் உனக்கு ராக்ஷஸ ஸ்திரீ
களைச் சேருகிறது பிரியம் அப்படி ராக்ஷஸ ஸ்திரீகளைச் சேருகிறவன்
பின்னும் ஒருத்தனைச் சேரக் கூடுமோ வென்று பரிகாசமாகச் சொல்
ல, அதுகேட்டு வீமசேனன் சிரித்து ஓய் கிருஷ்ணா! என்னை இப்படி
சொல்லுகிறீரோ! நீர் மஹாசுத்தமோ! முன்பு திரிவிக்கிரம அவதார
மெடுத்தபோது உம்முடைய சரீரத்தையும் உம்முடைய ஆகாரத்தை
யும் சகலஜனங்களும் அறிந்திருப்பார்கள் அப்படிப்பட்ட உம்முடைய
ஆகாரத்திற்கும் பலத்திற்கும் தகுந்தாற்போல் பூதகியென்கிற ராக்ஷ
சிமேல் விழுந்து விளையாடி அவள் முலையை வாயிலே வைத்துண்டு அவ

லைக் கொன்றவர் நீரல்லவோ அப்படியெல்லாம் உம்மிடத்தில் அநேகம்பிழைகளை வைத்துக்கொண்டு என்னைப்பரிகாசம்பண்ணலாமோ வென்று சொல்ல, அதற்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சிரித்து இன்னம் இப்படிப்பட்ட பரிகாசவார்த்தைகளை ஒருவர்க்கொருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு கேளிக்கை பார்த்துக்கொண்டுவந்து ஒருதடாகத்தைக்கண்டு அவிடத்தில் தண்டுவிட்டு கூடாரங்களடித்துக்கொண்டு அந்ததடாகத்தைச்சுற்றிலுமிறங்கினார்கள்.

அப்போது பிருந்தாவனத்திலிருக்கின்ற கோபாலர்கள் இந்த விசேஷத்தையெல்லாங் கேள்விப்பட்டு நாம் கிருஷ்ணனைக்கண்டு வெகுநாளாச்சுதே! நம்முடைய தோழனை கிருஷ்ணனைக்கண்டு பேசிவருவோம் வாருங்கோளென்று ஒருவர்க்கொருவர் அழைத்துக் கொண்டு பால்-மோர்-தயிர்க்குடங்களைக் காவடிகளில்காணிக்கைகளாகஎடுப்பித்துக்கொண்டு தலைசிகைகளை முடிந்துவிட்டுதலையிலே கறுப்பு கம்பளிகளைப்போட்டுக்கொண்டு கையிலேகோலுங் கயிறும்பிடித்துக்கொண்டு வந்து ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைக் கண்டு தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளைக் கொடுத்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடையதிருமேனி முழுதும்நன்றாகப்பார்த்து தலையையசைத்து ஆச்சரியப்பட்டுச்சொல்லுகிறார்கள் ஓய் கிருஷ்ணா! முன்னே நீ எங்களிடத்திலிருந்தாற்போலிருக்கவில்லையே இதுவென்ன தலையிலே கல்லுங் கறடும்போலிருக்கிறது இதுவென்ன காதிலே பச்சையும் வெள்ளையுமா யிருக்கிறது; இதுவென்ன கழுத்திலே கயிறு போலே போட்டுக் கொண்டிருக்கிறாய் இதுகளினால் உனக்குத் தலை நோகாதோ காதறுந்துபோகாதோ - கழுத்து நோகாதோ-; இது எது நீ வேறுவேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாய் நம்முடையவம்சம் போலிருக்கவில்லையே! ராஜாக்கள்போலிருக்கிறாயே யென்று கேட்க அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ் சிரித்துக் கொண்டுசும்மா யிருக்க பின்னும் அந்த கோபாலர்கள் அங்கிருக்கிற ஆனை-குதிரை-ஒட்டகங்களைப்பார்த்து இதேது கிருஷ்ணா! நம்முடைய மாடு கன்றுகள்போலிருக்க வில்லையே யென்றுசொல்ல, அதற்கும் கிருஷ்ணமூர்த்தி ஒன்றுஞ்சொல்லாமல் சும்மாயிருந்துவிட்டு சற்றுநேரம் பொறுத்து அவர்களுக்கும் அவர்கள் ஸ்திரீகளுக்கும் வேண்டிய வஸ்திரா பரணங்களை வெகுமானமாகக் கொடுத்து அவர்களையனுப்பிவிட்டு பின்பு ஸ்ரீகிருஷ்ணபகவான் வீமசேனனுடனே ஆலோசனைசெய்து நான்முன்னேபோகிறேன் நீ இங்கே யிருந்து சேனைகளுடனே மெள்ளவாவென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணபகவான் முன்னுதாக அஸ்தினா புரத்திற்குவந்து தர்ம்மராஜாவுக்கும குந்திதேவிக்கும் தெண்டனிட்டார் அதுகண்டு அவர்களும் ஸ்ரீகிருஷ்ணபகவானை எடுத்துமார்போடணைத்துக்கொண்டு யோகக்ஷேமங்களை விசாரிக்க ஸ்ரீகிருஷ்ணபகவானும் தமதுயோக க்ஷேமங்களை சொல்ல அதற்கு தர்ம்மராஜாவும் சந்தோஷிப்பட்டு ஐயா! கிருஷ்ணா! நமது

குமாரவர்க் கங்களும் ஸ்திரீசனங்களும் எங்கேயென்று கேட்க அதற்
கு ஸ்ரீகிருஷ்ணதேவரும்ஐயா! தர்மநந்தனு! நமதுசேனைகள் - தாயார்
ஸ்திரீசனங்கள்- பந்துவர்க்கங்கள்- குமாரவர்க்கங்கள் - முதலான - சகல
மானபேரையும் யமுனாநதிக்கரையில் விட்டுவிட்டு நான்மாத்திரம்மு
ன்னுதாகவந்தேன் அவர்களும் இந்நேரம்வந்து சேருவார்களென்று
சொல்ல, அதுகேட்டு தர்ம்மராஜாவானவர்-தம்பிமார்களுடனும் குந்
திதேவி- துரௌபதை-சுபத்திரா முதலான ஸ்திரீஜனங்களுடனும் பு
றப்பட்டு அவர்களை எதிர்க்கொண்டுபோய் தர்ம்மராஜாவானவர் தேவ
கிதேவியாருக்கும் பலராமருக்கும் நமஸ்காரம்பண்ணி மற்றவர்களையு
ம்ஆதரணைசெய்து ஸ்திரீசனங்களுக் கெல்லாம் வெகுமதிசெய்து உப
சாரவார்த்தைகள்சொல்லி பின்பு ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே சகலமா
னபேருங் கலந்துபேசிக்கொண்டு சகலசம்பிரமத்துடனே திரும்பிபட்
டணத்திற்குவருகிறபோது அதற்குமுன்னமே அந்தஅஸ்வமேதக்குதி
ரையும் தண்டுடனேகூடதிரிந்துகொண்டு வெளியே புறப்பட்டுவந்தது
அதையாரும்பிடித்துக் கட்டாமலிருந்து விட்டார்கள், தர்ம்மபுத்திர
ரும் கிருஷ்ணபகவா னுடனேகூட சகலசேனைகளையும் நடப்பித்துக்
கொண்டு பட்டணமேபோய் சேர்ந்தார் அந்தசமயத்தில் அந்த அஸ்
வமேதக்குதிரையுங் கடைசியில் கொஞ்சஞ் சேனைகளுடனே போகை
யில்அநுசேதி (அநுசாளுவனென்கிறராஜன்) தெரிந்துஆலோசனைசெ
ய்து நாம் இந்தக் குதிரையைப் பிடித்துக்கட்டினால் கிருஷ்ணதேவன்
சண்டைக்குவருவான் அப்போது அவன் நமதுதலைமயனைக்கொன்ற ப
கையெல்லாம் தீரத்தக்கதாக அவனுடனே போராடிபகையை முடிக்
கலாமென்று நினைத்துக்கொண்டு அந்த அநுசாளுவனும்மெள்ளமெள்
ள வந்துகுதிரையின் பிறகேபோகிற ஜனங்களை யெல்லாம் அதட்டித்
துரத்திவிட்டு அந்தக்குதிரையைப் பிடித்துக் கொண்டுபோய் ஓரிடத்
திற்கட்டிவைத்துபின்புதன் சேனைகளையெல்லாம் முஸ்தீது பண்ணிக்
கொண்டுதானும் யுத்தசன்னத்தனாய் ஆயுத்தப்பட்டிருந்தான்.

அநுசாளுவராஜன் யுத்தம்.

அந்தசேதியைகுதிரையின் பிறகேவந்த சேனைகளெல்லாம் ஓடி
வந்துதர்ம்மராஜாவையும் கிருஷ்ணபகவானையும் பார்த்து நமஸ்காரம்
பண்ணி ஓய் சுவாமீ நாங்கள் அஸ்வமேதக்குதிரையைப் பத்திரமாகக்
காத்துக்கொண்டேயிருந்தோம் அங்ஙனமிருக்க நமதுபட்டணத்திற்
குச்சமீபத்தில் அநுசாளுவனென்கிறராஜன்வந்து அந்தக்குதிரையை
ப்பிடித்துக் கொண்டு எங்களையும் நோகவெய்து துரத்திவிட்டுப்போ
னானென்றுசொல்ல அதுகேட்டுதர்ம்மராஜாவும் சிந்தாக்கிராந்தராய்வி
சாரப்பட்டுக்கொண்டிருந்தார். அதுகண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுந்த
லையையசைத்து இதற்குநாம் என்னசெய்கிறது அந்த அநுசாளுவன்

மஹாபலவந்தன்வீராதிவீரன் அப்படிப்பட்டவனை ஒருவராலுஞ் செயிக்கமுடியாதேயென்றுசொல்லிக்கொண்டிருக்க- அதுகேட்டு விஷ்வகேதுவும்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! தேவகிநந்தனா தேவரீர்இப்படிசொல்லலாமோ! அந்த அனுசாலுவன் பலத்தை எம்மாத்திரமென்று ஆலோசிக்கிறீர் இதோ என்னை அனுப்பிவையும் நான்போய் அவனுடைய கெர்வத்தையடக்கி குதிரையையும் விடுவித்துக்கொண்டு அவனையும் பின்கட்டாய்க் கட்டிக்கொண்டுவருகிறேன் அப்படிசெய்யாமற்போனேனாகில் பிராமணஸ்திரீகளைச்சேர்ந்தவன் போகிறகதியிலும் ருதுகாலமறிந்து போகியாதவன் போகிறகதியிலும் போவேனென்று சபதம்பண்ணினான். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானுஞ் சிரித்து ஓய் விஷ்வகேதா நீ கொஞ்சமாகிலும் எண்ணிப்பாராமல் இப்படிப்பட்ட பிரதிக்ஞை செய்துவிட்டாயே அந்த அனுசாலுவனும் மஹாபலசாலி வீராதிவீரன் சத்துருபயங்கரன் துன்மார்க்கன் அப்படிப்பட்டவனை நீ எப்படி ஜெயிக்கப்போகிறாயென்றுகேட்க அதற்கு விஷ்வகேதுவும் ஆலோசனைசெய்து ஓய் ஐயா! ருக்மிணி மனோகரா; கபடநாடக சூஸ்த்ராவதாரீ; தேவரீரது கிருபாகடாக்ஷம்என்மேரில் பூரணமாயிருக்கும்போது எனக்குச்சக்கியமாகாதகாரியம் என்ன இருக்கிறது ஆகையினால், தேவரீர் ஆசீர்வாதம்பண்ணி அனுப்பிவைத்தால் ஜெயங்கொண்டு வருகிறேனென்று சொல்ல, அந்ததயிரிய வார்த்தைக்குச் சபாசென்றுமெச்சி ஸ்ரீகிருஷ்ணபகவானும் மஹாசந்தோஷித்துடனே விஷ்வகேதுவைப்பார்த்து ஓய் விஷ்வகேதா! நீதேவர்களுக்கெல்லாம் மிஞ்சினபலாட்டியனாய் அந்த அனுசாலுவனையுஞ் செயித்துவரக்கடவாயென்று தம்முடைய பலத்தைநிறுத்தி ஆசீர்வாதஞ்செய்து பிரத்தியுமனனையுங் கூடக்கூட்டி அனுப்பிவிட்டு தாமும் வீமசேனனுமாக ரதமேறிக்கொண்டு பின்னேநடந்தார்கள்- விஷ்வகேதுவும் பிரத்தியுமனனும் சிறிதுசேனைகளுடனேயுத்தசன்னத்தராய்ப்புறப்பட்டுப்போய் அனுசாலுவனுடைய சேனைகளுடனே எதிர்த்தார்கள். அப்போது பிரத்தியுமனனும் ரோஷித்துடனே தன்னுடைய வில்லிலே அநேகமாயிரந்திவ்வியபாணங்களைப்பிரயோகஞ்செய்து அனுசாலுவனுடைய சேனைகளையெல்லாங் கண்டித்துச் சின்னாபின்னப்படுத்துகிறபோது அதுகண்டு அனுசாலுவனும் கோபதீப்தனாய் எரிந்து விழுந்து தன்னுடைய ரதத்தைத்தாண்டிப் பிரத்தியுமனனைப்பார்த்து நில்லுநில்லென்று அதட்டி அடா பிரத்தியுமனா? உன்னைப்பார்- உன்பலத்தைப்பார்- உன்சவுரியத்தைப்பார் நீயாஎன்னுடனே போராடுகிறவன் பெண்டுகளுடனேஎதிர்த்து நிற்கிற நீ என்னுடனே எதிர்த்துப் போராட்மாட்டுவாயோவென்று மேகத்தொனிபோல கெர்ஜித்து அநேகம்பாணங்களைத்தொடுத்துப் பிரயோகம்பண்ணி பிரத்தியுமனனை நோகச்செய்தான்; அதற்கு அவன் பயப்படாமல் ஓய் அனுசாலுவா நீ மிஞ்சவேண்டாம் என்னைக் கையிலாகாதவ

னென்று நினைத்தாயோ? நான் கருப்புவில்லினாலும் புஷ்பபாணத்தினாலும் பதினாலு லோகங்களையுஞ் செயித்தாலும் இப்பொழுது என் கைபாணத்தினால் உன்னைக்கண்டதுண்டம்பண்ணுகிறேனென்று சொல்லி ஒரு தீக்ஷண்யமான பாணத்தையெடுத்து தன்கை வில்லினிடமாகத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து அனுசாலுவன் பேரிலெய்தான். அதற்கு அனுசாலுவன் எவ்வளவுஞ் சட்டைபண்ணாமல் மஹாரோஷத்துடனே அதிசீக்கிரத்தில் ஐந்து குரூரபாணங்களைத்தொடுத்துப்பிரயோகஞ்செய்தான். அதுகளுந் தகதகவென் றெரிந்துக்கொண்டுவந்து பிரத்தியுமனனுடைய மார்பிலேதைத்து முதுகிலுருவிப் போய்விட்டதுகள். அதனால் பிரத்தியுமனனும் ஆயாசத்துடனே ரதத்தின்பேரில்விழுந்து மூர்ச்சையடைந்தான்.

அதுகண்டு விஷ்வகேதுவுங் கோபங்கொண்டு தன்னுடையரதத்தைத்தூண்டி வில்லைக்குணத்தொனிபண்ணி அனேகமாயிரம்பாணங்களைப்பிரயோகஞ்செய்து அனுசாலுவனை நோகவெய்தான். அந்தச் சமயத்தில் வீமசேனனும் வந்து கலந்துக்கொண்டு உக்கிராகாரனாய் எரிந்துவிழுந்து தன்னுடையரதத்தைத்தூண்டி விஷ்வகேதுவைப்பின்னுக்குத்தள்ளிவிட்டு தன்கைவில்லிலே தீக்ஷண்யமான பாணங்களைத்தொடுத்து அந்த அனுசாலுவன்பேரில் பிரயோகஞ்செய்தான்- அதுகண்டு அனுசாலுவன் சிரித்து வீமசேனனைப்பார்த்து அடாவீமா! நீ கையிலாகாத சிறிதுபேர்களை ஜெயித்தோமென்று கெர்வங்கொண்டிருக்கிறாயல்லவோ அந்தகெர்வத்தை இப்போது வெளிப்படுத்தி வைக்கிறேன் பாரென்று சொல்லிமஹா உக்கிராகாரத்துடனே அக்கினிக்குச்சமானமானமூன்று திவ்யாஸ்திரங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்தான். அந்த அஸ்திரங்களானது கறகறவென் றுசுழன்றுக்கொண்டுவந்து வீமசேனன் மார்பிலேபட்டு முதுகிலுருவிப் போய்விட்டது அதனால் வீமசேனனும் சுழல்காற்றடித்துமரம்விழுந்ததுபோல ரதத்தின்பேரில் விழுந்து மூர்ச்சையடைந்தான். அதுகண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் தன்னுடைய ரதசாரதியாகிய தாருகனைஎச்சரிக்கைசெய்து தன்கையிலிருக்கின்ற சார்ங்கமென்கிறவில்லை வளைத்துகுணத்தொனிசெய்து அநேகமாயிரம் பாணங்களைத்தொடுத்து அனுசாலுவன்பேரில் பிரயோகஞ்செய்யும்போது அனுசாலுவனும் மஹாவீரத்துடனேதன்னுடைய வில்லிலே அநேகபாணங் களைத்தொடுத்து ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரயோகித்த பாணங்களையெல்லாம் பொடிபொடியாகத் தும்சப்படுத்திவிட்டு கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஓய்கிருஷ்ணா! நீ சூதினாலேஎன் தமையனைக்கொன்று விட்டாயல்லவோ! அந்தகெர்வத்தை இப்போதுஅடக்கி விடுகிறேன் உனக்குச்சண்டைக்கும்எத்தனை தூரம் நீயோஎன்னை ஜெயிக்கிறவன் காட்டிலே சஞ்சரித்துக்கொண்டு காய்கனிகளைத்தின்று தபசுசெய்கிறயோகீஸ்வரர்களண்டைக்கிப்போகாமல் என்முன்னேவந்தா யல்லவோ ஆனால், இனி என்னு

லையவல்லபத்தைப்பாரென்று சொல்லிமஹாஉக்கிராகாரத்துடனே
அளவிறந்த சஸ்திர அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்து கிருஷ்ணபக
வான் விடுகிறபாணங்களை யெல்லாம்நடுபாதியில்கண்டித்து விட்டுமே
லு மேலும் அநேகபாணங்களைப் பிரயோகஞ்செய்து கிருஷ்ணபக
வானுடைய ரதசாரதியாகிய தாரகனையும் உதிரமயமாக்கிகருடக் கொ
டியையுங்கிழித்து குதிரைகளையுஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்து
அந்தகிருஷ்ணதேவனுடைய மார்பையுங்கிழித்தான். அதனால்குதிரை
கள்மெத்தவுங்கஸ்திப்பட்டு தலையைவளைத்துக்கொண்டதுகள். அதுக
ண்டுதாரகனும் கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! கோபிகாரமண
எப்படிப்பட்ட சண்டையிலும் நம்முடைய குதிரைகளுக்கு இப்படி
ப்பட்டஆயாசம்வந்ததில்லையே! இப்பொழுதுபூமியில்நிற்கமாட்டாம
ல்தத்தளிக்கின்றதே ஒப்சுவாமி! இதுயென்ன புதுமையாயிருக்கின்ற
தென்றுசொல்ல அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவருங்கோபமிகுந்து நா
ன் அந்ததுன்மார்க்கனை இந்தக்ஷணமே கொல்லுகிறேனென்று அட்ட
காசம்பண்ணிதமது திவ்வியாஸ்த்தத்தில் விளங்குகின்றசார்ங்கத்திலிட
மாக அநேக அஸ்திரங்களைத் தொடுத்துப்பிரயோகஞ்செய்தார் அது
கண்டுஅனுசாலுவனும் அந்தபாணங்களையெல்லாங் கண்டித்துசீக்கிர
மாகத்தன்னுடைய வில்லிலேஎழுநாராசந்தொடுத்துப் பிரயோகம்ப
ண்ணினான் அதுகள்ஒன்றோடொன்று உராய்ந்துக்கொண்டுஎரிகள் பு
கைகளுடனே வந்துகிருஷ்ணபகவானுடைய மார்பிலேபட்டு முதுகி
லுருவிப்போய் விட்டதுகள் அதனால்அந்தபகவானும்மெத்த ஆயாச
த்துடனேகையிலிருந்த சார்ங்கத்தைநழுவவிட்டு கொடிக்கம்பத்து
டனேசாய்ந்துமூர்ச்சையடைந்தார்.

அதுகண்டு அனுசாலுவனுடையசேனைகளெல்லாருஞ்சிங்கநாதங்கள்
அட்டகாசங்கள்செய்தார்கள். அதுகண்டுவிஷ்வகேதுவும்பஹாதுவே
ஷித்துடனேஎரிந்து விழுந்துபற்களை நெறநெறவென்று கடித்துமீ
சைபடபடவென்றுதுடிக்கும்படி உக்கிராகாரனைத் தன்னுடையரத
த்தைத்அண்டிஎன்னுடைய ஆண்டவனுக்குஇப்படிப்பட்ட ஆயாசம்
வரலாகுமாவென்றுகெர்ஜித்து தன்னுடையவில்லிலே அதிகோரமா
யிருக்கிறபாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து அனுசாலுவ
ன்சரீரமுழுதுந் துளைத்து சாரதியையுங்குதிரைகளையும் ரத்தமயமாக்
கினான்அதையெல்லாம் அனுசாலுவன் நிக்கிரகித்து நின்று அநேகசஸ்
திரஅஸ்திரங்களைப்பிரயோகஞ்செய்து விஷ்வகேதுவை நோகப்பண்
ணினான் இப்படிவிஷ்வகேதுவும் அனுசாலுவனும்எதிரிட்டு மஹா
ரோஷித்துவேஷிங்களுடனே சிங்கத்தோடுசிங்கமும் சர்ப்பத்தோடுச
ர்ப்பமும்வியாக்கிரமத்தோடு வியாக்கிரமமும்எதிர்த்தாற் போலும்
(ஸ்ரீராமமூர்த்தியும்) ராவணனும்எதிர்த்தாற்போலும்தேவேந்திரனு
ம் விருத்திராசுரனும் எதிர்த்தாற்போலும்எதிர்த்துதிக்குகள் தோறு
ம்பாணங்களைநிறைத்து ஒருஜாமமட்டும்போராடுகிறபோது அதிலே

ங்கிக்கொண்டு நகுல சகாதேவர்களைப்பார்த்து அவர்களையும்தமைய
னிடத்தில்தானே பத்திரமாயிருக்கும் படிகட்டளையிட்டு ஸ்ரீவியாச
பகவான்செய்த ஆசீர்வாதமுங்கைக்கொண்டு அர்ச்சுனராஜனும் காண்
டீபபாணியாய் ரதாரூடனாய் சகலசேனைகளுடனேயும் புறப்பட்டு சிங்
கநாதம்; சங்கநாதம், வேணுநாதம், முதலானபலவிதவாத்தியங்களுமு
ழங்கத்தக்கதாக அண்டகடாகங்களும் அதிரும்படி ஜெயபேரிகையடி த்
துக்கொண்டுமகாவைபவத்துடனே நடக்கும்போது அந்த அஸ்வமே
தக்குதிரையையும் தண்டுவிட்டு தன்னிச்சையாகமேற்குமுகமாய்த்திரு
ம்பிப்போகையில் அந்தக்குதிரையானது மலஜலாதிகளை விஸர்ஜித்தவி
டத்திலும் அடிகள்வைத்தஇடத்திலும் ஓமசாந்திகள் பண்ணுவித்தும்
தானதர்ம்மங்களைச்செய்துக்கொண்டும் அந்தக்குதிரையானது தன்னி
ச்சையாகநடந்துவேசாறிபடுத்துக்கொண்ட இடங்களில் தண்டுவிட்டி
றங்கி அந்தஇடங்கள்தோறுங் கோயில்குளங்கள் உண்டாக்கிவைத்தும்
இந்தப்பிரகாரம் அர்ச்சுனராஜனும் யுத்தசன்னத்தனாய் சகலசேனா ச
மேதனாய் அந்தக்குதிரையின்பின்னே பதினாயிரஞ்சேவகர்களை நிறுத்தி
தன்னுடையரதத்தைப்பிறகே நடத்திக்கொண்டுபோனான்.

அப்படிபோகிறபோது அந்தக்குதிரையும் மாகிருஷ்ணபதிபட்
டணத்துக்கோட்டைவாசலுக்குச் சமீபத்தில்ஒருமாத்தோரத்தில் பச்
சென்றபுல்லைக்கண்டு அந்தப்புல்லைமேய்ந்துக்கொண் டிருந்தது அங்
ஙனமிருக்கையில், அந்தப்பட்டணத்தை யரசாக்ஷிசெய்கின்ற நீலத்து
வசமஹா ராஜாவினுடைய குமாரனைபிறவீரனென்கிறவன் தன்னு
டையபட்டஸ்திரீயாகிய மதனமஞ்சரியுடனேகூடிவந்து மஹாகோ
லாகலத்துடனே அவிடத்தில்ஒருமடுவில் ஜலக்கிரீடைசெய்துவிளையா
டிக்கொண்டிருக்கும்போது மதனமஞ்சரியானவள் அந்தக் குதிரை
யைக்கண்டு ஆச்சரியப்பட்டுதன்புருஷனாகிற பிரவீரனுக்குக் காண்பி
த்தாள் அந்தப்பிரவீரனும் குதிரையைப்பார்த்து ஆச்சரியப் பட்டும
டுவைவிட்டுவெளியேவந்து வஸ்திராபரணங்களைஎடுத்துத் தரித்துக்
கொண்டுஅந்தக்குதிரையினிடத்திற்குப்போய் அதினுடைய நெற்றி
யில்கட்டியிருக்கிற பொற்பட்டத்தைவாசித்துப்பார்க்க, அதில்எப்ப
டியெழுதியிருந்ததென்றால்; பரதவம்சமென்கின்ற திருப்பாற்கடலு
க்குச்சந்திரனைப்போலவும் - சத்துருக்களென்கிற ராஜவம்சஅந்தகா
ரத்திற்குச்சூரியனைப்போலவும், விளங்குகின்றமஹாகீர்த்திப்ரதாப ச
வுரியமுள்ளதர்ம்மராஜாவானவர் அஸ்வமேதயாகம்செய்யும்படி விட்
டகுதிரையென்றும் இந்தக்குதிரையின்பின்னே வருகிறவன் ஸ்ரீகயிலா
சபதியாகியபரமசிவனோடும் எதிர்த்துயுத்தஞ்செய்து ஜெயமடைந்து
அவரிடத்திற்பாசுபதாஸ்திரத்தைப்பெற்றுக்கொண்ட மகானுபாவன்
பின்னுந்தேவலோகத்துக் காண்டாவனத்தை அக்கினிதேவனுக்குத்த
த்தம்பண்ணிதேவேந்திரனை ஜெயித்து-தேவர்கள்-கந்தர்வர்கள்-யக்ஷா
ள்- பன்னகாள் - உரகாள்- தயித்தியாள்- இப்படிப்பட்டவர்களையுமு

ரியஅடித்து அந்தஅக்கினிபகவானுக்குத் திருப்திபண்ணுவித்து, அவரிடத்திற் காண்டீபமும் அக்ஷயதூணிரதமும் பெற்றுக்கொண்ட வீராதிவீரனிவனும் தேவலோகத்துநாடகசாலையில் அஸ்திரவித்தைபழகிதேவர்களுக்குப் பயங்கரமான காலகேயநிவாதகவசாளென்கிற ஒன்பதுகோடி ராக்ஷதவீரர்களையும் அதம்பண்ணிதேவர்களுக் கெல்லாம்நிர்ப்பயமுண்டாக்கிவைத்து தேவேந்திரன்கையில் தேவகிரீடமும் தேவசங்கும்பெற்ற சூராதிசூரன் இன்னும்இவ்வகைப்பட்ட அதிவீரபராக்கிரம சவுரியமுடைய அர்ச்சுனமஹாராஜனென்றும் எழுதி அந்தஅர்ச்சுனமஹாராஜனை ஜெயிக்கத்தக்க சாமர்த்தியமுள்ள வனும் க்ஷத்திரியவம்சத்திற்பிறந்தவனும் முகத்திலேமீசைவைத்துக் கொண்டிருக்கிறவனும் ரணக்களத்தில் முன்வைத்தகாலைப் பின்வாங்காமல் நின்றுஉண்மையாக எதிரிட்டுயுத்தம் பண்ணுகிறவனுமானால் இந்தஅஸ்வமேதக்குதிரையைப்பிடித்துக் கட்டக்கடவனென்றும் எழுதியிருந்தது, அதையெல்லாம் அந்தப்பிரவீரனானவன் நன்றாகவாசித்துப்பார்த்து புன்சிரிப்பாகச்சிரித்து தலையைஅசைத்து ஐயையோ! அந்ததர்மராஜாவானவன் கொஞ்சமாகிலும் புத்தியில்லாமல்தானே வீரனென்றும் இந்தக்குதிரையின்பின்னே வருகிறஅர்ச்சுனனே மஹாவீரியப்ரதாப சவுரியமுள்ளவனென்றும் எவ்வளவும்பயமில்லாமல் எழுதினானல்லவா! ஆனாலும் அவனுடையசவுரியத்தைச் சற்றேபார்ப்போமென்றுசொல்லி அங்கேயிருந்த சேவகர்கள்கையில் அந்தக்குதிரையைப்பிடித்துக்கொடுத்து பட்டணத்திற்குள்ளே கொண்டுபோய் கட்டிவைக்கும்படி அவர்களுக்குத்திட்டஞ்செய்து தன்னுடைய ஸ்திரீயையுங்கூட்டியனுப்பிவிட்டு பிறகுதானும் பட்டணத்திற்குப்போய் தன்னுடைய ரதகஜதுரகபதாதிகளையுங் கூட்டிக்கொண்டுவந்து யுத்தசன்னத்தனாய் ரதாரூடனாய் வில்லைக்குணத்தொனிபண்ணி அட்டகாசஞ்செய்து எதிரிட்டுக்கொண்டுநின்றான்.

நீலத்துவசமகாராஜன்யுத்தம்.

இந்தவிசேஷமெல்லாம் அந்த அஸ்வத்தின்பிறகே நடந்துவந்த சேவகர்களால்-பிரத்தியுமனன் - விருஷகேது - அர்ச்சுனன் - முதலானவர்களும் கேள்விப்பட்டு ஆக்கிரவியாக்கிரம நிக்குரோதராய் எரிந்துவிழுந்து மகாரோஷித்துவேஷங்களுடனே வந்து பிரவீரனைக்கண்டு ஓய் ராஜகுமாரகா நீ ஏன் விருதாவாக எங்களுடைய அஸ்வமேதக்குதிரையைப் பிடித்துக்கொண்டுபோனாய்! நீயோ எங்களோடெதிர்த்துச்சண்டைசெய்கிறவன். உன்னால் ஆகமாட்டாது வேண்டாம்வேண்டாம் இன்னஞ் சிறிதுகாலம் இந்தப்பூமண்டலத்தில் நீ பிழைத்திருக்கவேண்டுமானால் எங்கள் குதிரையைக்கொண்டுவந்து ஒப்புவித்துப்

போவென்றுசொல்ல, அதுகேட்டு பிறவீரனும் மஹா உக்கிராகார
த்துடனே தன்னுடைய கையிலிருக்கின்ற வில்லிலே அநேகமாயிரம்
பாணங்களைத் தொடுத்து விஷ்வகேது முதலானபிரமுகாள்பேரில் பி
ரயோகஞ்செய்து நோக்வெய்கிறபோது பிரத்தியுமனனும் மஹாரோ
ஷித்துடனே தன்னுடைய ரதத்தைத்தூண்டிப் பிறவீரன்பேரில் எதி
ர்த்து அநேகமாயிரம் திவ்யாஸ்திரங்களைப் பிரயோகம் பண்ணினான்.
அதுகண்டு பிறவீரனும் பயங்கொள்ளாமல் வீரசிங்கம்போல ஆக்கிர
கித்து தன்னுடைய வில்லிலே கோடையிடிகளுக்குச் சமானமான து
கோரபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்து பிரத்தியுமன
னுடைய சாரதியையுங் குதிரைகளையுங்கொன்று அவனேறிக்கொண்டி
ருந்த ரதத்தையும் பொடிபொடியாக்கி அவனையும் ரத்தமயமாக்கி
னான், அதுகண்டு விஷ்வகேதுவும் கோபதீப்தனாய் எரிந்து விழுந்து
பிறவீரன்பேரில் சிங்கத்தைப்போல எதிர்த்துப் போராடுகிற போது
பிறவீரனானவன் மிஞ்சி விஷ்வகேதுவின்பேரிலும் அனுசாலுவன்பே
ரிலும்- எவ்வர்ணசுவன்பேரிலும்-மேகவர்ணன்பேரிலும் - அநேகமா
யிரம் எண்ணிக்கையில்லாத சஸ்திர அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்
து அவர்களுடைய சரீரமெல்லாம் ரத்தமயமாகும்படி சல்லடைக்க
ண்களாகத் துளைத்துவிட்டான்,

இப்படியிருக்க! இந்தசவிஸ்தாரமெல்லாம் நீலத்துவசமஹாரா
ஜன் கேள்விப்பட்டு மஹாகோபங்கொண்டு யுத்தசன்னத்தனாய் ரதா
ரூடனாய் அநேகசேனைகளுடனே புறப்பட்டு பட்டணத்தைவிட்டு வெ
ளியேவந்து அர்ச்சுனனுடனே எதிர்த்து அநேகவிதமான திவ்யாஸ்தி
ரங்களைப்பிரயோகஞ்செய்து அந்த அர்ச்சுனனையும் அவனுடையசே
னைகளையும் நோகப்படுத்தி தானும் அந்த அர்ச்சுனராஜனுடைய பர
ாக்கிரமத்தினால் வருத்தப்பட்டு தன்னுடையமருமகனாகிய அக்கினிதே
வனை நினைத்து அவனை அழைப்பித்து அந்தஅர்ச்சுனனையும் அவனுடை
யசேனைகளையும் பஸ்மீகரப்படுத்திவிட்டுவாவென்று உத்தரவு செய்து
அந்த நீலத்துவசமஹாராஜனானவன் தன்குமாரனாகிய பிறவீரனையு
ம் கூடவே அழைத்துக்கொண்டு தன்பட்டணத்திற்குப்போய் சேர்ந்
தான். பிற்பாடு அக்கினிதேவனும் தன்னுடைய மாமனார் சொல்லிப்
போன கட்டளைப்படியே மஹாகோபதீப்தனாய் பிரபலாகாரமாய்வி
ஸ்தீரணமான புகைகளுடனும்எரிகளுடனும்பிரகாசித்தெழும்பிஜடஜ
டவென்கிற தொனியுடனே பரவிவந்து அர்ச்சுனமஹாராஜனுடைய
ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் எரித்துச்சாம்பலாக்கிக்கொண்டுவரு
கிறபோது அர்ச்சுன மஹாராஜனுங்கண்டு விசாரப்பட்டு தன்னுடை
யகையிற்பிடித்திரா நின்ற காண்டீபத்தை ரதத்தின்பேரில் ஊன்றிவி
ட்டு தன்னுடையகைகளைக் கட்டிக்கொண்டு அந்த அக்கினிதேவனைப்
பார்த்து ஓய் அக்கினிபுருஷா! உமக்குப் பதினாயிரஞ் சரணம் சரண
ம் தேவரீர் பூர்வசிநேகத்தைக் கொஞ்சமாகிலும் எண்ணிப்பாராமல்

என்னுடைய சேனைகளையெல்லாம் இப்படி சாம்பலாக்கி விடலாமா?
முன்னாலே உமக்குண்டான அஜீர்ணரோகத்தைக்குறித்து தேவலோ
கத்துக் காண்டாவனத்தைத் தகனம்பண்ணுவித்து அந்த முப்பத்து
முக்கோடி தேவர்களுடனும் எதிர்த்துப் போராடின என்னை உம்மு
டைய சிநேகனென்றெண்ணிப்பாராமற்போனீரோ? நான் செய்தநன்
றியையுமறந்துவிட்டீரோ? அதுவுமல்லாமல் தேவரீர் அடியேனுக்கு
க்காண்டீபமும் அக்ஷயதூணி ரதமுங்கொடுத்து பாரதயுத்தத்தில் து
ரியோதனாதிகளைஜெயித்து ஜெயம்பொருந்தும்படி செய்வித்தமஹா
னுபாவர் நீரல்லவா? அப்படிப்பட்ட மஹாபுருஷராகிய உமக்கு அ
நேகம் சரணம் சரணம் மேலும் என்னுடைய நாமமாகிய தனஞ்செ
யனென்கிற திருநாமத்தைப் படைத்து கீர்த்திபெற்றமகோத்தமனே
உமக்கு அநேகம் சரணம் சரணம் இந்தவேளையில் என்னையும் என்
னுடையசேனைகளையும் வருத்தப்படுத்தாமல்பாது காத்தருளிரக்ஷியும்
ரக்ஷியுமென்று அர்ச்சுனமஹாராஜன் ஸ்தோத்திரஞ்செய்ய, அந்தத்
தோத்திரவசனங்களை அணுவளவுஞ்சட்டைபண்ணாமல் அக்கினிதேவன்
பின்னும்விஸ்தீரணமாய்ப்பிரகாசித்தெரிந்துவிழுந்துசேனைகளையெ
ல்லாம் பஸ்மீகரப்படுத்திக்கொண்டுவருகையில், அதைஅர்ச்சுனமஹா
ராஜன் கண்டு மஹாகோபதீப்தனாய் எரிந்து விழுந்து தன்னுடைய
தேரின்மேலில்ஊன்றிவைத்தகாண்டீபத்தைக்கையிலெடுத்துக்கொண்
டு வருணாஸ்திரத்தைத் தொடுத்துப்பிரயோகஞ்செய்து சப்தமேகங்க
ளு மொன்றாகக்கூடி ஏககாலத்தில் வருஷித்ததுபோல மழைபொழி
வித்தான், அதையுஞ்சட்டைபண்ணாமல் விழுங்கிக்கொண்டு அக்கினி
தேவன் வருகிறபோது அந்த அர்ச்சுனராஜனும் மஹாரோஷித்துவே
ஷித்துடனே தன்னுடைய காண்டீபத்தில்நாராயணாஸ்திரத்தைத்தொ
டுக்கவேண்டுமென்று நினைத்து அம்புறாத் தூணியிலிருந்த நாராயணா
ஸ்திரத்தைக் கையிலெடுத்தவுடனே அதுகண்டு அக்கினிதேவனும் ப
யமடைந்தவனாய் நடு நடுங்கிநின்று தன்னுடைய ஜ்வாலையெல்லாம் த
னக்குள்ளே யடக்கிக்கொண்டு கிர்வமடங்கி ஒருபிராமணனைப்போல
வந்துநின்று அர்ச்சுனமஹாராஜனைப்பார்த்து ஓய் அர்ச்சுனமஹாரா
ஜனே நீர் தயவுசெய்து என்னை ரக்ஷியும் அந்த அஸ்திரத்தை மாத்திர
ந்தொடுக்கவேண்டாம் நான் என்னுடைய தீக்ஷிண்யத்தினால் சகலசரா
சரங்களையும் பஸ்மீகரப்படுத்துகிறவனானாலும் இந்தநாராயணாஸ்திரத்
திற்பிறந்த அக்கினி ஜ்வாலையானது என்னைப் பஸ்மீகரப்படுத்திவிடும்
ஆதலால்அந்தஅஸ்திரத்தைநீர்பிரயோகஞ்செய்யாமல்என்னைக்காப்பா
ற்றி யருளவேண்டும் நான் உம்முடைய ஸ்வரூபத்தை எண்ணிப்பாரா
மல் என்னுடைய அஞ்ஞானத்தினால் இப்படிசெய்தேன் இனிமேல்
உம்முடைய சிநேகத்தைவேண்டி உம்மிடத்தில் சரணாகதியென்றுவந்
தடைந்தேன் ஆகையால், நான்செய்தகுற்றங்களையெல்லாம் மன்னித்
து நீர் என்னைக்காப்பாற்றி ரக்ஷிக்கவேணுமென்றும்நீர் ஸ்ரீகிருஷ்ண

பகவானுடைய சாரிபிலே யிருக்கிறீர் அப்படிப்பட்ட உம்மை ஜெ
யிக்கிறதற்கு எவர்களாலுமுடியாது அந்தகிருஷ்ணமூர்த்தியினுடை
ய ஹரியென்னுந் திருநாமத்தின் பிரபாவத்தை அளவிட்டுபிர்ம்மாதி
வர் முதலிய தேவர்களாலும் வர்ணிக்கக்கூடாது அஃதெப்படி யெ
ன்றால்,

அந்தஹரியென்னும் மகாவாக்கியமானது சத்தியமாகவும்-வே
தசாரமாகவும்-மகா அந்தரங்க ரஹஸியமாகவும்-சகலஜீவராசி களுக்
கும்ஆதாரமாகவும் விளங்கப்பட்டது அப்படிப்பட்டவாக்கியத்தை
த்தனை இழிந்தகுலத்திற் பிறந்தவனானாலும் திரிகரணசுத்தியாய் ஒருதி
ரம்தியானஞ்செய்வானாகில் அந்தப்புண்ணியபுருஷின் பூலோகத்தில்
அஸ்வமேதயாகமுதலான அநேகயாகங்களைச் செய்தபலனும்கோதா
னமுதலானஷோடசமகாதானங்களைச் செய்தபலனும்பெற்று அந்த
த்தில்அந்தஹரியென்னுந் திருநாமத்தையுடைய ஸ்ரீமன்நாராயண
மூர்த்திதிருவடிகளிலுஞ்சேர்ந்து பரமபவித்திரனாகுவான் மேலும்,
ஸ்ரீகிருஷ்ணாவதாரமாகவந்து பாரதயுத்தத்தில் உமக்குரதசாரத்தியஞ்
செய்தருளியமஹானுபாவனுடைய அந்ததிவ்யநாமத்தைப் பயபக்
தியுடன்ஒருதரம் நினைத்தாலும்முற்கூறிய அந்தமகாபலன்களெல்லாமுண்
டாகும் அல்லாமலும் அந்தஹரிபக்தியுண்டாகிய சண்டாளனுக்கு
ஹரி பக்தியில்லாத பிராமணனும் யீடல்ல - அப்படிப்பட்ட ஹரி
யைச்சேவிக்கிறதைவிட்டு வேறுதேவதைகளைச் சேவிக்கிறவன் பிழை
ப்புஎப்படிப்பட்டதென்றால், தாகமெடுத்தவன் கங்காநதியண்டைக்
குவந்தும்அந்த தீர்த்தத்தைச்சாப்பிட்டு தாகநிவர்த்திசெய்யாமல்அ
ந்ததீர்த்தத்தைவிட்டுவிட்டு அப்பால்கிருஷ்ணவேணி தீர்த்தத் தைச்
சாப்பிட்டதுபோலாகும் இந்தகிருஷ்டாந்தத்தினால் நாம்பிறந்தபய
னைப்பெறும்படி அந்தஹரியையேசதாகாலமுமிருதயகமலத்தில் வை
த்துச்சேவிக்கவேண்டும். அவருடையதிருவடிகளையே கைகளால் பரி
சித்துபூசிக்கவேண்டும் அவருடையதிருவுருவத்தையே கண்களாற்பா
ர்த்துசந்தோஷிக்க வேண்டும் அவருடையபிரபாவ சரித்திரங்களை
யே காதுகளாற் கேள்விப்பட்டு மகிழவேண்டும். அவருடைய பாத
கமலங்களின் திவ்யபரிமளத்தையே நாசியினால் ஆக்கிராணித்துஆன
ந்திக்கவேண்டும், அவருடைய திருநாமஸ்மரணையே நாவினால் ரசித்
துச்சுகித்து நித்திய திருப்தியைப்பெறவேண்டும் அப்படிப்பட்டம
ஹானுபாவனையே தோழமையாகப்பெற்றிருக்கின்ற வுமக்கு ஒருநா
ளுங்குறைவுவருகிறதில்லை, ஆதலால் ஓய் அர்ச்சுனமஹாராஜனே நான்
இப்போது பஸ்மீகரப்படுத்திவிட்ட உம்முடைய சேனைகளையெல்லா
ம் எழுப்பிவிடுகிறேன் அதல்லாமலும், என்மாமனாராகிய நீலத்துவச
மஹாராஜனுக்கும் உமக்கும் சமாதானம்பண்ணுவித்து அவனையும்
உமக்குப் படைத்துணையாக்கி உம்முடைய பிறகேவருமபடி செய்வி
க்கிறேன் இப்பொழுது நீர் தயவுசெய்து என்னை ரக்ஷிக்கவேண்டுமெ

ன்று வேண்டிக்கொள்ளுகிற அக்கினிதேவனைப்பார்த்து ஓய் அக்கினி புருஷனே! நான் இந்நேரம் உன்னைவெகுவாய்வேண்டிக்கொண்டுஅநேகமாயிரம் சமாதானவார்த்தைகள் சொன்னாலும் அதுகளைச் சற்றாகிலும் எண்ணிப்பாராமல் நிக்கிரகஞ்செய்துவிட்டு இப்போது உனக்கு ஆபத்துநேரிட்ட விடத்தில் என்னை வேண்டிக்கொள்ளுகிறாய் இது எப்படியிருக்கிறதென்றால்;

ஒருதிருடனானவன் வழியே நடந்துபோகின்றவர்களை அடித்துப்பறிக்கவேண்டுமென்று நினைத்துஒருதடியைக்கையிலெடுத்துக்கொண்டு அவர்கள் சமீபத்திற்போய் உடனே சமயமில்லாவிட்டால் கையிலிருந்ததடியைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்களுக்குத்தெண்டனிட்டு கொஞ்சம் வெற்றிலை பாக்கு கொடுங்கோளென்று கேட்டது போலிருக்கின்றதென்று அர்ச்சுனராஜன் சொல்ல, அதுகேட்டு அக்கினிதேவனும் அநேகபிரியவசனஞ்சொல்லி அர்ச்சுனனிடத்திற்சம்மதி பெற்றுக்கொண்டு தன்னால் படுசூரணமாய் இறந்துவிட்ட ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் பிழைக்கப்பண்ணுவித்து அர்ச்சுனராஜனை அவ்விடத்தில்தானே நிறுத்திவிட்டு தன்மாமனாராகிய நீலத்துவசமகாராஜனிடத்திற்குப்போனானென்று ஜெயமுனீந்திரர்சொல்ல, அதுகேட்டு ஜெனமேஜெயமஹாராஜாவும்ஆச்சரியப்பட்டு ஜெயமுனீந்திரருக்குநமஸ்காரஞ்செய்துஓய் ஐயா! முனிநாதரே அந்தநீலத்துவசமகாராஜனுக்கு அக்கினிதேவன் மருமகனானவிதம் எப்படி அதை அடியேன் அறிந்துகொள்ளும்படி திருவுளம் பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு ரிஷிசிரேஷ்டராகிய ஜெயமுனீந்திரர்சொல்லுகிறார்.

(அக்கினிதேவன்வரலாறுகூறுதல்.)

கேளுமையாஜெனமேஜெயமகாராஜவே! அந்த மாகிருஷ்ணைபதியென்னும் பட்டணத்தையாளுகிற நீலத்துவசமகாராஜனுக்குசுவாலாதேவியென்கிறவளிடத்தில் சுவாகாதேவியென்கிற ஒருபெண்பிறந்தது, அந்தப்பெண்ணைத் தாயுந்தகப்பனும்சந்தோஷித்துடனேமகா செல்வமாகப்போஷித்துக் கொண்டுவருகையில் அந்தப்பெண்ணானவள்பூர்வபக்ஷ சந்திரனைப்போலே நாளொரு மேனியாய்ப் பொழுதொருவர்ணமாய் வளர்ந்துபன்னிரண்டுவயதுள்ள பாலகுமாரியாய்யௌவனத்தையடைந்தாள் அதுதெரிந்து நீலத்துவசமகாராஜனும் தன்குமாரத்தியாகிய சுவாகாதேவியைப்பார்த்து ஓய்அம்மா! புண்ணியவதி! நான்உனக்குத் தகுந்ததிவ்யபுருஷனை அழைப்பித்து வந்துஉனக்குக்கலியாணஞ் செய்துவைக்கிறேன் இப்பொழுதுஎந்தராஜன் மேரிலஉனக்கு அபேக்ஷையிருக்கின்றது அதைச்சொல்லுமம்மா வென்றுகேட்க அதுகேட்டு அந்தசுவாகாதேவியும் தன்பிதாவாகிய நீலத்துவசமகாராஜனைப்பார்த்து ஓய் ஐயா! எனக்குப்பூலோகத்திலுள்ள ரா

ஜாக்களும்வேண்டாம் தெய்வலோகத்திலுள்ள தேவர்களும் வேண்டாம் அந்ததேவர்களுக்கு முதன்மையாயிருக்கப்பட்ட அக்கினிதேவனை எனக்குப்புருஷனாகப் பண்ணுமென்று சொல்ல, அதுகேட்டு நீலத்துவசமகாராஜனும் ஓ அம்மா! பாக்கியவதி! உனக்குப்பயித்தியங்கொண்டோ அந்த அக்கினிதேவனைக்கோரினாய் அவன் மூன்றுகாலும் - ஏழுநாக்குமாய்-சர்வபக்ஷணீகரனாய் மகாகுரோதியாய் எந்தவேளையுமெரிந்துகொண்டேயிருப்பான். அப்படிப்பட்டபுருஷனை நீவிரும்பினாய் அவனைக்கனவிலும் நீவிரும்பவேண்டாமென்றுவெகுவாய்ச் சொல்ல, அதுகேளாமல் அந்தசுவாகாதேவியும் நான் அக்கினிபுருஷனைதவிரவேறொருபுருஷனைவிரும்புகிறதில்லையென்று உறுதிவார்த்தையாகச்சொல்ல, அதுகேட்டுநீலத்துவசமகாராஜனும் அப்படியேநல்லதென்றுசம்மதப்பட்டிருந்தான். அதன்பின்பு சுவாகாதேவியுங்காட்டுக்குப்போய் அக்கினிதேவனை நோக்கித்தபசுசெய்தாள் அதுதெரிந்து அக்கினிதேவனும்பிரத்தியக்ஷமாகவந்து நீஎன்னை அழைப்பித்தகாரியமென்னவென்று கேட்க அதற்குச் சுவாகாதேவியும் ஓ அக்கினிபுருஷ! நீர்என்னைக்கலியாணஞ்செய்துக்கொள்ளவேண்டுமென்றுசொல்லுள் அதற்கு அக்கினிதேவனுஞ் சந்தோஷகரமாய் அப்படியேநல்லதென்று சம்மதித்து அவள்பிறகேவந்து நீலத்துவசமகாராஜனைக்கண்டு அந்தராஜன் செய்தபூசையைக்கைக்கொண்டு அந்தநீலத்துவச மகாராஜனைப் பார்த்து ஓ ராஜேந்திரா! உன்குமாரத்தியாகிய சுவாகாதேவியை எனக்குப் (பாணிக்கிரணஞ்) செய்துகொடுப்பாயாகில்நான் இன்றுமுதலாகவுன்னுடைய மாகிருஷ்ணபதிபட்டணத்தில் தானேயிருந்துக்கொண்டு உனக்குவிரோதியாய்ச் சத்துருக்களாய்வருகிற ராஜகூட்டங்களை யெல்லாம் பஸ்மீகரப்படுத்தி உன்னைச்செயம்பொருந்தும்படிசெய்கிறேனென்று உறுதியாகச்சொல்லி அந்தப்பெண்ணை அப்போது தானே பாணிக்கிரணஞ் செய்துகொண்டு அதுமுதல் அந்தமாகிருஷ்ண பதிபட்டணத்தில் நீலத்துவசமகாராஜனுடைய அரமனையில்தானே வாசமாயிருந்தான். கேட்டீரோ! ஜெனமேஜெய மகாராஜாவே யென்று சொல்லிபின்னையும் ஜெயமுனீந்திரரானவர் பூர்வசரித்திரத்தைச்சொல்லுகின்றார்.

கேளுமையா ஜென்மேஜெய! மகாராஜாவே இந்தப்பிரகாரம் அந்த அக்கினிதேவனும் அர்ச்சுனமகாராஜாவுக்குச் சமாதானவார்த்தைகள் சொல்லிசிநேகம் பண்ணிக்கொண்டுபிற்பாடுதன்மாமனாராகிய நீலத்துவசமகாராஜனிடத்திற்குப்போய் அவனைக்கண்டு ஐயா! நீலத்துவசமகாராஜாவே என்றால் அந்த அர்ச்சுனராஜனைச் செயிக்கமுடியாது உம்முடையஉத்தாரப்படிக்கு அந்த அர்ச்சுனராஜனுடைய சேனைகளையெல்லாம் எரித்துப்பஸ்மீகரப்படுத்துகிறபோது அந்த அர்ச்சுனராஜனும் கோபித்து அவன்கையிற் பிடித்திராநின்ற காண்டீபத்தில் நாராயணாஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகிக்கும்படி பிரயத்தன

ஞ்செய்தான் அதுகண்டுநான்பயமடைந்து அந்த அர்ச்சுனராஜனுடனேசிநேகம் பண்ணிக்கொண்டு என்னுடைய ஜ்வாலையினால் எரிந்துபோய்விட்ட அவனுடையசேனைகளை யெல்லாம் பிழைக்கச் செய்து நான்மாத்திரம் சாகாமல்தப்பிப்பிழைத்துவந்தேன் என்னென்றால், அந்த அர்ச்சுனராஜன் வீராதிவீரன் அவனுடனே எதிர்த்துப்போராடுகிறது (ஸ்ரீ கயிலாசபதியாகியபரமசிவனுக்கும்) சக்கியமல்ல! அதுவுமல்லாமல், தேவேந்திராதி தேவர்களையுஞ்செயித்தவன் அவன் என்னுடைய அஜீர்ணரோகத்தையுநிவிர்த்திசெய்தவன் அப்படிப்பட்டமகானுபாவனுடனே நீர் துவேஷம்பண்ணாமல் அவனைச்சிநேகம்பண்ணிக்கொண்டு அவனுடைய அஸ்வமேதக்குதிரையையும் காணிக்கை கப்பங்களையுங்கொண்டுபோய்ச் செலுத்திசமாதானம் பண்ணிக்கொள்ளுமென்று சொன்னான். அந்தவார்த்தைகளை யெல்லாம் நீலத்துவச மகாராஜன் கேள்விப்பட்டு மெய்தானென்றுசம்மதித்து அநேகமாயிரந் தங்கத்தட்டுகளில் நவரத்நங்களையும் பழவகைகளையும் எடுப்பித்துக் கொண்டு அந்த அஸ்வமேதக்குதிரையையுங் கூட்டிக்கொண்டு சிலசேனைகளுடனே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டான் அதுகேட்டு நீலத்துவச மகாராஜன்பெண்சாதியாகிய சுவாலாதேவியும் குறுக்கேவந்து மறித்துக்கொண்டு ஓய்பிராணநாயகா! நீர் இப்போது நடக்கிற காரியம் எனக்குஎவ்வளவும் நன்றாயிருக்கவில்லை! பூலோகத்தில் உத்தமக்ஷத்திரியரா யிருக்கப்பட்டவர்கள் ஒருசங்கதியைப்பற்றி ஏதாகிலும் சபதம் பண்ணிக்கொண்டால் அதைத்தப்பி நடப்பார்களோ! ஒருநாளும் சபதத்தப்பிநடவார்கள். அப்படியாக மிஞ்சிவருங்காலத்தில் தங்களுடைய பிராணத்தையாவது தியாகஞ்செய்து சத்தியத்தையே நிலைநிறுத்துவார்கள் அப்படியிருக்க, தேவரீர் க்ஷத்திரியவம்சத்திற்பிறந்தவராயிருந்தும் அந்த அர்ச்சுனனுடைய குதிரையைமுன்பின் எண்ணிப்பாராமல் பதட்டமாகப்பிடித்துக் கட்டிவிட்டு மறுபடியும் அவனோடெதிர்த்துப்போராடி திரும்பவும் அவனைச்செயிக்கமுடியாமல் பயந்தொழிவந்து அபகீர்த்திக்குள்ளாகி பின்னும் அவன்குதிரையுங் காணிக்கை கப்பங்களும் கொண்டுபோய்க் கொடுத்துஉபசாரவார்த்தைகள் சொல்லிசிநேகம் பண்ணிக்கொள்ளுகிறது ராஜநீதியோ! இந்தச்சங்கதியைஉம்மைப்போன்ற ராஜாக்கள்கேள்விப்பட்டால் பரிகாசம்பண்ணமாட்டார்களோ! இப்படிப்பட்ட பரிகாசத்துக் கிடமானகாரியஞ்செய்கிறதைப் பார்க்கிலும்அந்த அர்ச்சுனராஜனுடனே எதிர்த்துநின்றுயுத்தஞ்செய்து ரணக்களத்தில் மடிந்துபோனாலும் வீரசொர்க்கமுண்டாகும் அதனால், விருங்கீர்த்தியுமுண்டு ஆகையால், நீர் எப்போதும்போல அந்தஅஸ்வமேதக்குதிரையை அரமனையிற்கட்டிவிட்டுயுத்தசன்னத்தராய் ரணக்களத்திற்போய் அர்ச்சுனராஜனுடனே போராடி அவனைக்கொன்று பெரும்பிரக்கியாதியும்படைத்துக்கொள்ளுமென்றுசொல்ல. அதுகேட்டு நீலத்துவசமகாராஜனும் அப்படியே நல்ல

தென்றுசம்மதித்து திரும்பவும் அந்தக்குதிரையைக்கொண்டு வந்து தன்னுடைய அரமனையிற்கட்டிவைத்து தன்னுடைய மந்திரி பிரதானிகளையும். தம்பிமார் மாமன் மைத்துனன் குமாரவர்க்கங்கள் பந்துவர்க்கங்கள் முதலானவர்களையுங் கூட்டிக்கொண்டுதான் யுத்தசன்னத்தனாய் ரதாரூடனாய் பட்டணத்தை விட்டுப்புறப்பட்டுவந்து அர்ச்சுனராஜனுடைய சேனைகளுடனே எதிர்த்து அனேகமாயிரம் சஸ்திர அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தான்.

அதுகண்டு அர்ச்சுனராஜனும் சற்றுநேரம் ஆலோசனை செய்து அந்த அக்கினிதேவன் சமாதானம்பண்ணிவைக்கிறேனென்று சொல்லிப்போனதென்ன? இவன்சண்டைக்குவந்ததென்ன? அவன்பேச்சைக்கேளாமல் நம்மைச் செயிக்கலாமென்று நினைத்துவந்தவனாக வேண்டும் ஆனாலும் ஆகட்டும் இப்போது என்பாணமென்கிற சொல்லினாலே இந்தராஜாவைக்கேட்பிக்கிறேனென்று சொல்லிமஹாரோஷித்து வேஷிறுத்தன்னுடைய கையிற்பிடித்திராநின்ற காண்டீபத்தில் தேவேந்திராதிதேவர்கள்கொடுத்த திவ்யபாணங்களைத்தொடுத்து நீலத்துவசமஹாராஜாவினுடையசேனைகளின்பேரிற்பிரயோகஞ்செய்து அந்தசேனைகளெல்லாம் பெருங்காற்றினாலடிப்பட்ட மாந்தளிர்கள்போல்பூமியில்விழுந்திருக்கும்படிசெய்தான். அதுகண்டு நீலத்துவச மகாராஜனுங்கோபங்கொண்டு அர்ச்சுனராஜன்பேரில் தன்னுடைய ரதத்தைத்தூண்டி அநேகமாயிரம்பாணங்களைப் பிரயோகஞ்செய்தான் அதுகண்டுஅர்ச்சுனராஜனும் அதிகோஷித்துடனே தன்னுடையகாண்டீபத்தில் குரூரமான நாராசங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து அந்தநீலத்துவசமஹாராஜனுடைய மார்பிலேதைக்கும்படிஎய்தான் அதனால் அந்தநீலத்துவசனும் ஆயாசமடைந்து தொப்பென்று தேரின்பேரில்விழுந்து மூர்ச்சையடைந்தான் அதுகண்டுஅவனுடையசாரதியுந்தேரை நடாத்திக்கொண்டு பட்டணமேபோய்ச்சேர்ந்தான்.

அப்பொழுதுசூரியபகவானும் மேற்குத்திசையில் அஸ்தமானமாகிறார் உடனேசந்திரோதயமுண்டாயிற்று. தடாகங்களிலுள்ள தாமரைப்புஷ்பங்களெல்லாம்மூடிக்கொண்டது செங்கழுநீர் புஷ்பங்களெல்லாமலர்ந்தது அதிலே நீலத்துவசமஹாராஜனும்மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து தன்னுடையரதசாரதியைப்பார்த்துஓய்சாரதீ! நீயென்தேரைக்கொண்டுவந்து விட்டாயென்றுகேட்க அதற்குஅந்தரதசாரதியும்தன்னுடையராஜனைப்பார்த்து ஐயா!ராஜசேகரா! நீர்யுத்தமுகத்தில் நிர்வகிக்க மாட்டாமல்மூர்ச்சையடைந்து ரதத்தின்பேரில்விழுந்துவிட்டபடியினால்நான் ரதத்தைக்கொண்டுவந்து விட்டேனென்று சொல்ல, அதுகேட்டுநீலத்துவசமஹாராஜனும் சந்தோஷித்தனாய் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு ஐயையோ! என்மருமகனாகிய அக்கினிதேவன் பேச்சைக்கேட்டுச்சும்மாயிராமல் பாதகியாகிய பெண்சாதிபேச்சைக்கேட்டு பிள்ளைகளையும், தம்பிமார்களையும், பந்துவர்

க்கங்களையுங், கொன்று விட்டேனென்றுசொல்லி மனந்தளர்ந்து தன்பெண்சாதியாகிய சுவாலாதேவியிடத்திற்குப்போய் அவளைப் பார்த்து மஹாகோபங்கொண்டு அடிபசாசே! உன்னுடையபேச்சைக் கேட்டு நான்பயித்தியக்காரனாய்ப்போய்விட்டேன் இனிநீ இருந்தால் என்னுடையஅரமனையும் ஆஸ்தானமும் அழிந்துபோம் ஆகையால்நீ இங்கேயிருக்கவேண்டாம் எங்கேயாகிலும் ஓடிப்போவென்றுசொல்ல, அதற்குஅந்த சுவாலாதேவியும் நானேன்என்வீட்டை விட்டுப் போவேன் நான்போகிற தில்லையென்று சொல்லஅதுகேட்டு அந்தராஜனும்அவளைஅடித்துக்கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோய் பட்டணத்திற்குவெளியிலே தள்ளிவிட்டு பிற்பாடுஅந்தநீலத் துவசமஹாராஜனும் தன்னுடையஅரமனைக்குவந்து அஸ்வமேதக் குதிரையைப்பிடித்துக்கொண்டுசிறிதுகாணிக்கை கப்பங்களையும்எடுத்துக் கொண்டுபோய்அந்த அர்ச்சுனராஜனுக்கு முன்பாகவைத்து அவனைத்தழுவிக்கொண்டு ஓய்அர்ச்சுனராஜனே! நான்உன்னுடையசிநேகம் வேண்டிவந்தேன் நானும் என்னுடையபுத்திர மித்திரகளத்திராதிகளும் உங்களுடைய அடிமையாயிருக்கின்றோமென்று அநேகஞ்சமாதானவார்த்தைகள்சொல்ல, அதுகேட்டு அந்தஅர்ச்சுனராஜனும் அப்படியேநல்லதென்றுசம்மதித்து மகிருஷ்ணபதி பட்டணத்துக்கதிபதியாகிய நீலத்துவசமஹாராஜாவைப் பார்த்துஓய்ராஜேந்திரா! நீர் எங்களுடையசிநேகத்தைவேண்டிவந்ததுமெய்யானால் எங்களுடனேகூடபடைத்துணையாய் வரவேண்டுமென்று சொல்ல, அப்படியேநல்லதென்று அந்த நீலத்துவசனும்சம்மதித்துப்பட்டணத்திற்குப்போய்மறுநாள் அந்தராஜனும் தன்னுடைய சேனைகளுடனே புறப்பட்டுவந்து அர்ச்சுனராஜனுடனே கலந்துக்கொண்டான். அதுகண்டு அந்த அர்ச்சுனராஜனும் அஸ்வமேதக்குதிரையைவிட்டு அதின்பிறகே சகலசேனாசமுத்திரங்களோடும் மகா ஆடம்பரத்துடனே பதினெட்டு வாத்தியங்களு முழங்கத்தக்கதாக நடந்தான்.

(சுவாலாதேவிஉல்முகராஜனிடத்திற்போந்தது.)

அப்பால் இவிடத்தில் அந்தசுவாலாதேவியானவள்தன் புருஷன் அடித்துத்துரத்திவிட்டபடியினால் மகா துக்கத்துடனேபோய் காசிப்பட்டணஞ்சேர்ந்து அந்தப்பட்டணத்தையரசாக்ஷிசெய்கிற தன்தமையனாகிய (உல்முகனென்கிறராஜனைக்கண்டு) கூ கா வென்று கூச்சலிட்டு மார்பில் அறைந்துக்கொண்டு அவன்பாதத்தில் விழுந்துகண்ணீர் தாரைதாரையா யொழுகும்படியாக அழுதாள். அதுகண்டுஅந்தஉல்முகனும் தன்தங்கையாகிய சுவலாதேவியைப்பார்த்து ஓய் அம்மா!சுவாலாதேவி! நீயேன் அழுகிறாய் உனக்கு என்னகுறைவுசொல்லென்றுகேட்க அதுகேட்டு சுவாலாதேவியும் ஓய் அண்ணாவே!என் துக்கத்தை யென்னவென்று சொல்லப்போகிறேன் நான் என்கணவனாகிய நீ

ஸ்த்துவச மகாராஜனுடனே ஒருவார்த்தைசொன்னேன் அந்தவார்த்தைக்காக அவர் என் மயிரைப்பிடித்து இழுத்து அடித்துத்தள்ளிஎங்கேயாகிலும் போய்விடென்று என்னை ஓட்டிவிட்டார். ஐயையோ! இதென்னபாவம் என்முறையைக்கேட்டு அவனைத் தண்டனை பண்ணவன் செய்கின்றவர்கள் ஒருவரும் இந்தப் பூமியின்கண் இல்லையோவென்று மிகுந்த அழுகையுடனே சொல்ல, அதுகேட்டு அந்த உல்முகனும் பதறிப்பேசாமல் தன்னுடைய தங்கையைப்பார்த்து ஓய் அம்மா! அவர் அப்படிப்பட்ட கஸ்திப்படுத்தினாலும் நீ இப்படி தனிவழியாய் வந்துவிடலாமோ! புருஷனானவன் தன்னுடைய பெண்சாதியின்பேரில் கோபித்துக்கொண்டு ஒருவேளை அடித்தாலுந் திட்டினாலும் வீட்டுக்குள்ளேதானே யிருந்துக்கொண்டு சாதிக்கவேண்டுமே யல்லாமல் சமுசாரியானவள் இப்படி வரப்போகாது! நல்லது நீ யேய்வேலை பண்ணிவந்துவிட்டாய் ஆனாலுமாகட்டும் மாமிவீட்டுப்பெண் தாய்வீட்டுக்குவரலாம் தாய்வீட்டுப்பெண் மாமிவீட்டுக்குப்போகலாம் ஆகையினால் அதற்குத்தாழ்வில்லை, ஓய் அம்மா! நீ நம்முடைய வீட்டில்தானே சுகமாயிரு உன்புருஷனுக்குக் கோபந்தீர்ந்து அவர் உன்னை அழைத்துக்கொண்டுபோகிறதற்குவந்தால் அப்போது அவரிடத்திற் சகலதிட்டமும் பண்ணிக்கொண்டு பிற்பாடு உன்னையனுப்பி வைக்கிறேனம்மாவென்றுசொல்ல, அந்த வசனங்களைக்கேட்டு சுவாலாதேவியும் உல்முகனைப்பார்த்து ஓய் அண்ணாவே! நான் என் புருஷன் அடித்துத் துரத்திவிட்டாரென்று உன்னண்டைக்குவந்தவளல்ல! பூலோகத்தில் புருஷனானவன் ஸ்திரீயின்பேரில் கோபித்துக்கொண்டால் அந்தஸ்திரீயும் வீட்டில்தானே யிருக்கவேண்டுமேயல்லாமல் இப்படி தனிவழியே வந்துவிடுகிறது நியாயமல்ல! ஆனாலும், நீயேன் இப்படி வந்தாயென்று கேட்பீரானால் அதுவுஞ்சொல்லுகிறேன் கேளும் அஃதென்னவென்றால்.

அஸ்தினபுரத்தை அரசாக்ஷிசெய்கிற தர்ம்மராஜாவானவர் அஸ்வமேதயாகம் பண்ணுகிறதற்குப் பிரயத்தினப்பட்டுகுதிரையைவிட்டு அந்தக்குதிரையின் பிறகே அவர்தம்பியாகிய அர்ச்சுனர்ஜனையும் இன்னமுஞ்சில பிரமுகாளையுஞ் சேனைகளையுங்கூட்டி யனுப்பினாராம் அந்தக்குதிரையானது எங்களுடைய மாகிருஷ்மதி பட்டணத்திற்குச்சமீபத்தில்வருகிறபோது என்புருஷனாகிய நீலத்துவசமஹாராஜன் அந்தக்குதிரையைப்பிடித்துக்கட்டிவிட்டு அவர்கள் பேரில் சண்டைக்குப்புறப்பட்டுப்போய் அவர்களுடைய சஸ்திர அஸ்திரங்களுக்குநிர்வகிக்க மாட்டாமல்முறிந்துவந்துபிற்பாடு அவர்களைச்சமாதானம்பண்ணிக்கொள்ளும்படி நினைத்துசிலகாணிக்கைகளையும் அந்த அஸ்வமேதக்குதிரையும் கொண்டுபோகுஞ்சமயத்தில் எனக்குத் தெரிந்து நான்போய் அவனைப்போகவொட்டாமல் மறித்துக்கொண்டு அவனைப்பார்த்து ஓய் பிராணவல்லபா! நீர் கொஞ்சமாகிலும் சவுரிய பராக்

கிரமமில்லாமல் இப்பொழுது இந்தக்குதிரையையும் காணிக்கை கப்பங்களையும் அந்த அர்ச்சுனமஹாராஜனுக்குக் கொண்டுபோய்க்கொடுத்து சமாதானம் பண்ணிக்கொள்ளுகிறதைப்பார்க்கிலும் அந்த அர்ச்சுனனுடனே சண்டைசெய்து யுத்தகளத்தில் இறந்து விட்டாலும் அதனால் உமக்கு வீரசொர்க்கமுண்டு உலகத்திற் கீர்த்திப்ரதாபமும் உண்டென்று சொன்னேன் அதுகேட்டு என்புருஷனும் அப்படியே நல்லதென்று சம்மதித்து புத்திர மித்திர களத்திராதிகளுடனுங் கூடிக்கொண்டுபோய் அந்த அர்ச்சுனனுடனே போராடி அவர்களெல்லாரையும் பறிகொடுத்து தானும் மூர்ச்சையாய் அரமனைக்குவந்து பிற்பாடு என்னைப்பார்த்து அடிநீலி! உன்பேச்சைக்கேட்டு கெட்டேனேயென்று சொல்லி என்னை அடித்துத் துரத்திவிட்டார். அதற்குநான் விசாரப்படவில்லை; அந்த அர்ச்சுனராஜனானவன் யாகம்பண்ணினால் சுகமாய் தன்பட்டணத்தில்மாத்திரங் குதிரையைச்சுற்றுவித்து யாகஞ்செய்து முடிக்கவேண்டுமேயல்லாமல் இப்படி சீமைகளின்பேரில் குதிரையைவிட்டு அந்தக் குதிரையினுடைய நெற்றியில் விருதென்று ஒன்றை யெழுதிக்கட்டலாமோ? அல்லாமலும் அதையாராவது வாசித்துப்பார்த்துக் குதிரையைப்பிடித்துக்கட்டினால் அவர்களையும்அவர்கள் சேனைகளையுங் கொன்றுவிடலாமோ, அதுவுமல்லாமல்என்னுடைய புத்திர பௌத்திராதிகளையும் பந்துவர்க்கங்களையுமவன் என்கொன்றுவிட்டான் ஆகையினால், அந்தபகையானது என் மனதிலிருக்கிறது நீ இப்பொழுதுதானே உன்சேனைகளுடனே யுத்தசன்னத்தனாய் ரதமேறிக்கொண்டு புறப்பட்டு அந்த அர்ச்சுனனுக் கெதிரேபோய் மறித்துக்கொண்டு பிரசண்டயுத்தஞ்செய்து அந்த அர்ச்சுன ராஜனையும் அவன் சேனைகளையுஞ் சின்னபின்னப்படுத்தி என்மனதையுஞ்சந்தோஷிப்படுத்துமென்றுசொல்ல, அதுகேட்டு அந்த உல்முகனும் தீர்க்க ஆலோசனைசெய்து ஓய் அம்மா! அப்படியேநல்லது, அந்த அர்ச்சுனராஜன் நம்முடைய பட்டணத்திற்கு வந்தானேயாகில் அப்பொழுது உன்கருத்தின்படியே அவனோடு போராடி அவனையும் அவன்சேனைகளையுந் தும்சப்படுத்தி உன்மனதைச் சந்தோஷப் படுத்துகிறேன் நீ இப்பொழுது அந்தப்புரத்திற்குப்போயிரு அம்மாவென்று சொல்ல; அதுகேளாமல் சுவலாதேவி யானவள் பின்னையுஞ் சலமாய்ப்பிடித்து ஓய் அண்ணவி! அந்த அர்ச்சுனன் இங்கேவருகிறதேது! நீ அவனைச்செயிக்கிறதேது! அதுவிருதாவானவார்த்தை அப்படி சொல்லுகிறது எனக்குச்சம்மதமல்ல! நீ இந்தக்ஷணமேபோய் அவனுடனே போராடி அவனைக்கொன்றாலாச்சுது இல்லாவிட்டால் நான் உன்வீட்டிலுமிருக்கிறதில்லை எங்கேயாகிலும் போய்விடுகிறேனென்று ஓரேபிடியாய்ப்பிடித்துக்கொண்டுநிற்க அதுகண்டு உல்முகனும்மகாகோபங்கொண்டு ஓய் அம்மா! நீ ஏன் என்பேச்சைக்கேளாமல் இப்படி சலமாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறாய் நீ எத்தனை குரூரகர்ம்மி இப்

படிதானே அந்தநீலத்துவசனுடனே போராடி அவனையும் அவன்பந்துவர்க்கங்களையுங் கெடுத்து ஒண்டியாக்கிவிட்டாய் இப்போது என்னிடத்திற்குவந்து என்னோடுபோராட்டஞ்செய்து என்னையும் என்சேனைகளையுங் கொல்லுவிக்கத் துணிந்திருக்கிறாய்ஆகையினால், இனிமேல் உன்முகத்தைப்பார்க்கிறதில்லை, அல்லாமலும் மாமியார் வீட்டிலிருந்து தனிவழியே வந்தவளை வீட்டில்வைத்துக்கொண்டானென்கிற அபகீர்த்தியும் எனக்குச்சம்பவித்தது, நீ பிறந்தவீட்டிற்கும் புகுந்தவீட்டிற்கும் புழுவாய்த்தோன்றினாய் அடிதோஷி! நீ இங்கேயு யிருக்க வேண்டாம் எங்கேயாகிலும் போய்விடென்றுசொல்ல; அந்தவசனங்களைச்சுவாலாதேவியுங்கேட்டு மகாதுக்கப்பட்டு ஒய் அண்ணாவே! நான்பிறந்து உங்கள் இரண்டு வீட்டிற்கும் ஆபத்தாநேரிட்ட தல்லவோ ஆதலால், நான் எங்கேயாகிலும் போய் சாகிறேன் இனியாகிலும் நீங்கள் சுகப்படுங்கோளென்று சொல்லி அவிடம்விட்டு கங்காநதியில்விழுந்து சாவோமென்றெண்ணிக்கொண்டு கங்கைக்கரையோரமாய் வருகிறபோது தனக்குத்தானே யோசனைசெய்துக்கொண்டு அந்த அர்ச்சுனனைக் கொல்லுகிறதற்கு ஒருவகையுமில்லாமல் போச்சுதல்லவோவென்று தாபந்திரியப்பட்டு பின்பு ஆலோசனைபிரிந்து நான்செத்தாலும் அந்த அர்ச்சுனன் சாகிறதற்கு உபாயஞ்செய்துவிட்டுபிறகுதானுஞ் சாகிறதென்று நிச்சயப்படுத்திக்கொண்டு அந்தசுவாலாதேவியானவள் கங்கைக்கரையினோரமாய் நடந்துபோகையில் அந்த நதியினுடைய அலையானது வந்து இவள் காலில்பட்டது, அப்படிப்பட்டவுடனே சுவாலாதேவியானவள் தன்காலையுதறி ஐயையோ இந்தப்பாவியான கங்கைவந்து என்காலைத்தீண்டினாளே இதற்கென்ன செய்வேன். முன்னமே நான் நினைத்தகாரியம் ஆகாமலிருக்கின்றது அதுவும்போதாமல் எனக்கு இதுவும் ஒருகர்ம்மம்வந்து சம்பவித்ததே இதற்கென்ன பரிகாரஞ்செய்கிறது, நான் எந்தஇடத்திற்குப்போய்ஸ்நானம்பண்ணி இவளைத்தீண்டினபாதகத்தைப் போக்கடித்துக்கொள்ளப்போகிறேன் நான் அறியாமல் இந்ததோஷியாகிய கங்கைக்கரையினோரமாய் வந்துவிட்டேனே இவளைப்பரிசித்ததினால் மகத்தாகியபாதகம்வந்து அனுசரித்ததே இதற்கென்ன செய்யப்போகிறேனென்று விசாரப்பட்டுக்கொண்டிருக்க, அந்தச்சமயத்தில் வெகுதூரத்திலிருந்துபுறப்பட்டு அந்தக்கங்காநதியில் ஸ்நானம்பண்ணி பிர்ம்மஹத்தி முதலிய மகாபாதகங்களையெல்லாம் நிக்கிரகித்து பரமபவித்திரராகும்படி விரும்பிவந்த தபோதனர்கள் பிர்ம்மரிஷிகள் முதலான சகலமான ஜனங்களும் அந்தபாதகியாகிய சுவாலாதேவி சொல்லுகிறபாபவார்த்தைகளையெல்லாங்கேட்டுப் பயங்கொண்டு அந்தப் பயித்தியக்காரர்களும் அவள்சொன்னவார்த்தைகளைச் சூதென்றெண்ணாமல்உண்மையாகநினைத்துக்கொண்டு ஐயையோ! நாங்கள் இந்த சவிஸ்தாரந் தெரியாமல் வெகுதூரதேசங்களிலிருந்து அலைச்சல்பட்டு வந்துசேர்

ந்தோமேயென்று தாபந்திரியப்பட்டுக்கொண்டு தாங்கள்கொண்டுவந்
த மடிசஞ்சிகளைக்கட்டி மேலேபோட்டுக்கொண்டு பூசைப்பெட்டக
ங்களை எடுத்துத்தூக்கிட்டுக்கொண்டு அந்த கங்காதீரத்தைவிட்டுவிலகி
அப்புறத்திற்போய் நின்றார்கள். அப்பொழுது அந்தக்கங்காதேவியா
னவள் சண்டாளியாகிய சுவாலாதேவிசொன்னவசனங்களைக் கேட்டு
உண்மையென்று நம்பின புத்தியில்லாத அந்தப்பயித்தியக்காரரிஷிக
ள் முதலிய சகல ஜனங்களுஞ்சொல்லிக் கொண்டவசனங்களையும் கே
ள்விப்பட்டு நடுநடுங்கி மிகுந்தவிசாரமடைந்து ஐயையோ! சகலபாத
ங்களும் என்னைக் கண்டமாத்திரத்திற் பறந்துபோய்விடுமே அப்படி
ப்பட்ட என்னை இந்தசுவாலாதேவியானவள் இப்படி சொல்லுவானே
ன் ஆனாலும் நம்மை யறியாமற்படிக்கு என்னபாதகம் வந்திருக்கிற
தோ அதைத்தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆலோசித்து அந்தக்
கங்காதேவியானவள் ஸ்திரீ ரூபந்தரித்துக்கொண்டு வெளியேவந்து
அந்தசுவாலாதேவியைப்பார்த்து ஓய் அம்மா சுவாலாதேவி! நீ என்
னைப்பாபிஷ்டியென்றுசொன்னாயே நான் என்னபாவம் பண்ணினே
ன் சகலலோகங்களிலுள்ளவர்களுஞ்செய்கிறபாபங்களையெல்லாந் தொ
லைப்பித்து அவர்களைப் பரிசுத்தர்களாகச்செய்கிறஎன்னை இப்படிசொ
ல்லலாமா! அதைனனக்குச்சற்றே தெரியப்பண்ணுமம்மா! நான் கங்
காதேவியென்று பிரியவசனமாகச்சொல்ல, அதுகேட்டு அந்தசுவாலா
தேவியும் அவளைரோக்ஷிணற்போல இடைந்து நின்றுஅடிபாதகி! நீஅ
ப்பாலேபோடீ; உன்னைப்பார்த்தபேர்களுக்கும் அநேகம்பாவமுண்
டு,உன்னுடனேபேசவும் போகாதுஅடிபாபிஷ்டி அப்புறத்தே போ
டியென்று அதட்டிச்சொல்ல, அதுகேட்டுகங்காதேவி மெத்தவும்பய
மடைந்துஅடி அம்மாசுவாலாதேவி உனக்குசரணம்சரணம்நான்செ
ய்திருக்கிறபாதகமின்னதென்றெனக்குக்கிஞ்சித்தாகிலும்தோற்றவில்
லை, அதைஎனக்கு நன்றாய்த்தெரியும்படி சொல்லவேண்டுமம்மாவெ
ன்றுமெத்தவுந்தாபந்திரியமாய்க்கேட்க அதற்குசுவாலாதேவியும் தன்
பகையைமுன்னிட்டுக் கொண்டுஅந்தகங்காதேவியைப் பார்த்து அடி
கங்கா! நீபண்ணினபாதகம் உனக்குத்தெரியாதோ! நீ மறந்துபோய்
விட்டாயோ ஆனால்சொல்லுகிறேன்கேள். நீ பெற்றபிள்ளைகளைக்கொ
ன்றுவிடுகிறவள் குழந்தையாயிருக்கிறபோது கழுத்தைபிசைந்துதண்
ணீரில்போட்டுக் கொன்றபாவி நீ யல்லவோ;பெற்றபிள்ளைகளைக்கொ
ன்றுவிடுகிற பாபிகள் இந்தபூலோகத்தில் எவர்களாகிலுமுண்டோ! அ
துவல்லாமல் கடைசியில்உனக்குஒருபிள்ளை வீஷ்மனென்பவன் உப்
புப்பானையைப்போல தப்பிப்பிழைத்திருந்தால் அவனையுங் கபடத்தி
னால்சிகண்டிகொன்று விட்டானென்று பேர்வைத்து அந்த அர்ச்சுன
மகாராஜன் கொன்றுவிட்டுப்போனான். அப்படிஉன்பிள்ளையைக்கொ
ன்ற அந்தப்பகையாளியாகிய அர்ச்சுனராஜன்சுகமாயிருக்க, நீசற்று
கிலும் விசாரமில்லாமலிருக்கிறாயானைபினாலும் பிள்ளையில்லா தவ

ர்கள்பாபிஷ்டிகளென்றுதர்ம்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றபடியினாலும் உன்னைப்பாதகியென்று சொன்னேனென்றுசொல்ல,

அதுகேட்டுகங்காதேவியும்மெய்தானென்றுசம்மதித்துமஹாகோபங்கொண்டவளாய் அந்தசுவாலாதேவியைப்பார்த்து அடி அம்மா; இந்தச்சங்கதியை இதுவரையிலும் நானறியமாட்டேன் இப்பொழுது நீ சொல்லக்கேட்டேன் ஆகையினால்,என்புத்திரனாகிய பீஷ்மனைக்கொன்றஅந்த அர்ச்சுனனும் இன்னம் ஆறுமாசத்திற்குள் அவன் பிள்ளைகையினால் இறந்துபோகக்கடவனென்று சாபமிட்டாள்.அது கேட்டுசுவாலாதேவியும் மஹாசந்தோஷப்பட்டுஓ கங்காதேவி!இனிமேல் நீ புண்ணியவதியென்றுசொல்லி வெகுவாய்தோத்திரஞ் செய்து அந்தப்பாதகியும் கங்காதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினாள். இது சங்கதிகளைக் கேட்டுக்கொண்டு அங்கிருந்த பிர்ம்மரிஷிகள் முதலான சகலஜனங்களும் சந்தேகந்தீர்ந்துஅந்தநதியிலேஸ்நானம்பண்ணிதங்கள்தங்கள் இருப்பிடத்திற்குப் போனார்கள். அதன்பிறகு சுவாலாதேவியும்இனி யெப்படியாகிலும் அந்தஅர்ச்சுனனைக்கொன்று பகைமுடிக்கிறதே யெனக்குக்கீர்த்தி யென்றுசொல்லி அவிடத்தில் அக்கினியைவளர்த்திக்கொண்டு அந்தஅக்கினியில்விழுந்து சரீரத்தைவிட்டு அஸ்திரவுருவமெடுத்து மணிபுரமென்னும் பட்டணத்தையரசாக்ஷிசெய்கின்ற (பப்பிரவாகனனுடைய) அம்புறாத்தூணியிற் போய்ப்புகுந்துக்கொண்டு அர்ச்சுனராஜன்எப்பொழுதுவரப்போகிறானென்றுசமயம்பார்த்துக் கொண்டிருந்தாள். கேட்டீரோஜெனமேஜெயமஹாராஜாவே? இதுவரையில் சுவாலாதேவியினுடைய சவிஸ்தாரஞ்சொன்னேனல்லவோ! இனிமேல் அஸ்வமேதக் குதிரையின் பிறகே போகிற அர்ச்சுனராஜனுடைய சரித்திரத்தைச்சொல்லுகிறோம் கேளுமையாவென்று ஜெயமுனீந்திரனென்னு மஹாரிஷியானவர் சொல்லத்தொடங்கினார். கேளும்ஜெனமேஜெய மஹாராஜாவே! அப்பால் அந்த அஸ்வமேதக்குதிரையானது தெற்குமுகமாய்ப் போகிறபோது அந்தக்குதிரையைச்சூழ்ந்து பதினாயிரஞ்சேவகர்கள் பாதுகாத்துக்கொண்டுபோனார்கள் அவர்களுக்குப்பிறகே அர்ச்சுனராஜன் விஷ்வகேது பிரத்தியுமனன்-மேகவர்ணன் - அனுசாலுவன்- எவ்வனாசுவன் - நீலத்துவசன்-இவர்களுடனே சகலசேனாசமுத்திரங்களும் புடை சூழ்ந்து வரத்தக்கதாக நடக்கிறபொழுது அந்தக்குதிரையும் நடந்து-வனங்கள் வனாந்தரங்கள் - காடுகள்-செடிகள்-ஆறுகள்-கழிகள்-மடுக்கள் · தேசங்கள், பட்டணங்கள், மலைகள், குன்றுகள், மேடுகள், பள்ளங்கள், இதுமுதலிய இடங்களெல்லாங்கடந்துபோய்விந்தியபர்வதத்திற்குச்சமீபத்தில்நடக்கையில்சரீரம்தினவெடுத்தபடியினால்அவிடத்திலொருபெரியபிர்ம்மாண்டமாகிய குத்துக்கல்லைக்கண்டு அஸ்வமேதக்குதிரையானது அந்தக்கல்லின்பேரில் தன்னுடைய சரீரத்தினவு அடங்கும்படியாகத் தேய்த்துக்கொண்டது.அதனால் அந்தக்குதிரையும் கல்லோடு

கல்லாய்ஒட்டிக்கொண்டு கொஞ்சமாகிலும் கைகால்முதலிய அவயவங்களை அசைத்தற்கிடமில்லாமல் அங்கேதானேநின்றுவிட்டது,

அதுகண்டு அந்தக்குதிரையின்பிறகேவந்த சேவகர்களெல்லாம் பயந்துஇது என்னகாரணமென்றுகையை முறித்துக்கொண்டு அந்தக்குதிரையினண்டைக்குப்போய் அதை, அதட்டியும், அடித்தும், இழுத்தும், குந்தத்தினுலிடித்தும், இப்படி அநேகவிதமான உபத்திரவஞ்செய்தார்கள். அப்படிசெய்தும் அந்தக்குதிரையானது எவ்வளவும்அசையாமல் கல்லைப்போலிருந்தது, அதுகண்டுஅந்தசேவகர்களெல்லாரும்மிகவும் பயந்தோடிவந்து அர்ச்சுனமகாராஜனைக்கண்டு தெண்டனிட்டு ஓ!ஐயா! கிரீடீ! நாங்கள்குதிரையை முன்னே நடத்திக்கொண்டு எல்லோரும்சாக்கிரதையாகப்பின்னே நடந்துபோகையில்அந்தக் குதிரையானது விந்தியபர்வதத்திற்குச் சமீபத்தில்ஒரு குத்துக்கல்லைக்கண்டு அதில்உராய்ந்துகொண்டு அந்தக்கல்லோடு கல்லாய் ஒட்டிக்கொண்டுபோய் விட்டது, அதைக்கண்டுநாங்கள் வெகுபிரயாசைப்பட்டு அடித்தும் பார்த்தோம்இழுத்தும் பார்த்தோம் அதையென்னசெய்தும் கல்லோடேகல்லாய் ஒட்டிக்கொண்டிருக்கின்றதேயல்லாமல் சற்றாகிலும் அசையவில்லை சுவாமியென்றுசொல்ல; அதுகேட்டு அர்ச்சுனமகாராஜனும் மனஸ்தாபமடைந்து ஐயையோ! இதுஎன்னபாவம் தர்மநந்தனர்செய்கிற யாகத்திற்கு விக்கினம்நேரிட்டதல்லவோ வென்றுதனக்குள்ளே தானேநினைந்து விசாரப்பட்டுக்கொண்டு அந்தக்குதிரையி னண்டைக்குவந்து அதைப்பார்த்து ஆச்சரியமடைந்து இதென்னவிபரீத முண்டாயிற்றென்று சொல்லி அங்கிருந்தசேவகர்களைவிட்டு இழுக்கச்சொல்லியும் அடிக்கச்சொல்லியும்இடிக்கச்சொல்லியும் இப்படி நானாவிதமான தந்திரயுக்திகளைச்செய்தும்அந்தக்குதிரையானது அசையாமல்கல்லைப்போல்இருந்துவிட்டது. அதுகண்டு அர்ச்சுனராஜனும் சிந்தாக்கிராந்தனாய் யோசனை செய்து இதுஎன்ன காரணத்தினாலேயோ இப்படியிருக்கின்றது. ஒன்றுந்தெரியவில்லைஇதில் எதோ ஒருவித்தையுண்டாயிருக்கும்போலத்தோற்றுகின்றது, அந்தவித்தையை இந்தவனாந்தரத்திலிருந்து தபசுசெய்கிற யோகீஸ்வரர்களைக் கண்டுசேவித்து அவர்கள்முகாந்திரமா யிந்தவகையைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துதன் னோடிருக்கின்றசேனைகளை யெல்லாம்அவிடத்தில்தானே நிறுத்திவிட்டு அங்கிருக்கிறகாய்கனிகளைக் கொள்ளையிடாமலும் புஷ்பவகைகளைப் பறிக்காமலும்பத்திரமாய்க் காத்துக்கொண்டிருக்கும்படி சேனைகளுக் கெல்லாம்திட்டஞ்செய்துவிட்டு, விஷ்வகேது - எவ்வர்ணசுவன் - நீலத்துவசன் - அநுசாலுவன் - இவர்கள்நால்வரையும் தன்னோ டழைத்துக்கொண்டு அர்ச்சுனமஹாராஜனென்பவன் அந்தவனத்திற்புகுந்துபோய் அங்கங்கேயிருக்கிற விச்சித்திரங்களையும் புலிகளும்மான்குட்டிகளும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் கலந்துவிளையாடுகின்றதையும்ம

யில்களும்பாம்புகளும்ஒன்றாய்க்கூடிச்சிநேகித்திருக்கின்றதையும்சிங்கங்களும்யானைகளுங் கூடிக்கொண்டு பந்தடிக்கின்றதையும் வண்டுகளும்தும்பிகளும் சுகந்தமாகிய புஷ்பங்களைப்பறித்துக் கொண்டுவந்துரிஷிகளிடத்தில்கொடுத்துதேவதார்ச்சனைபண்ணுவிப்பதையும்இன்னும்இப்படிப்பட்ட அநேகவிசித்திரமான அதிசயங்களைப்பார்த்து ஆச்சரியகரமாய் ஒருவர்க்கொருவர் சந்தோஷிப்பட்டுக்கொண்டு,வன்னிமரங்கள், பனைமரங்கள், மாமரங்கள், பலாமரங்கள்-ஈச்சமரங்கள் அரசமரங்கள். ஆலமரங்கள்! திராக்ஷமரங்கள், எலுமிச்சைமரங்கள், நாரத்தைமரங்கள்; மாதளமரங்கள், புன்னைமரங்கள், சந்தனமரங்கள், வேம்பைமரங்கள் இன்னும் இப்படிப்பட்ட அனந்தவிதமான விருக்ஷங்களும், பூத்துங்,காய்த்தும் பழுத்தும், அலங்காரமாயிருக்கின்றதைப்பார்த்து சந்தோஷமடைந்து பின்னையும்; மல்லிகை. முல்லை இருவாக்ஷிசண்பகம், தாமரை; சாமந்தி, மருக்கொழுந்து, பாரிசாதம் கொல்லை, இன்னும் இப்படிப்பட்ட அநேகவகையான புஷ்ப ஜாதிகளும்புஷ்பித்து அதிலுண்டான தேன்கள்பெருகி ஆறுபோடுகின்றதையும்பார்த்து சந்தோஷிப்பட்டுக்கொண்டு நடக்கும் பொழுது அங்கேஒரு சுத்தபூமியில் புலியாசனம்பரப்பி அதன்மேலில் உள்க்கார்ந்துக்கொண்டு கிருஷ்ணசலத்தைத் தரித்துசரீரமுழுதும் விபூதியை உத்தூளித்துக்கொண்டு உருத்திராக்ஷமாலி காலங்கிருதராய் சிவந்த ஜடாபாரத்தை யுடையவராய் ஜபமாலிகையைக் கையினிடமாகப் பிடித்துக்கொண்டு இரண்டுகண்களையும் உணர்த்துவமாகத் திருப்பிவிட்டுஇரண்டுபுஜங்களி னிடத்திலும் யோகதண்டத்தை யூன்றிக்கொண்டுஉலக கர்த்தாவாகிய பரப்பிரமத்தினுடைய உபயபாதங்களையும் இருதயகமலத்தில் நிறுத்திக்கொண்டு நிவாததீபம்போல அசையாமலிருந்துஜெபம் பண்ணுகிற (சௌபரிமஹாரிஷியைக்கண்டு) அர்ச்சுனமஹாராஜனும் மிகுந்தபயபக்தி விசுவாசத்துடனே அந்தமுனீஸ்வரரைப்பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கதண்டன் சமர்ப்பித்து இரண்டுகைகளையும் அஞ்சலியாகச் சிரசின்மேல் கூப்பிக்கொண்டு அந்த முனிசிகாமணியைப்பார்த்து ஓய்புராணபுருஷா! ஓய்மகானுபாவா! ஓய்சுவாமீ! தேவரீருடையதெரிசனத்திற்கு தர்மநந்தனருடைய தம்பியாகிய அர்ச்சுனன்வந்திருக்கின்றேன் ஆதலால், தேவரீரது கிருபாதிருஷ்டியினாற்பார்த்து அடியேனுடைய மனோதுக்கத்தை நிவிர்த்திசெய்து ரக்ஷிக்கவேண்டும் சுவாமீயென்று அநேகவிதமாகத்தோத்திரஞ்செய்தான்.

அப்படித்தோத்திரம்பண்ணுகிற அர்ச்சுனனுடையமுறையைஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிற சௌபரிமஹாமுனிவருங்கேட்டு| கண்களைவிழித்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! நீ சர்வாந்திரியாமியாய்சர்வ ஜீவதயாபரனாய் விளங்கப்பட்ட லோககர்த்தாவாகிய (பரமசிவனோடு) எதிர்த்துப்போராடி ஜெயங்கொண்ட வீராதிவீரனென்

கின்ற கீர்த்திப்ரதாபம்பொருந்திய தர்ம்மநந்தனருடைய தம்பியான
அர்ச்சுனன் நீதானோ! அப்படிப்பட்ட மகானுபாவனாகிய உன்னைக்கா
ணவேண்டுமென்று நெடுநாளாய்க்காத்துக்கொண்டிருந்தேன். இன்
றைக்குஉன்னைக் கண்குளிரப்பார்த்துச் சந்தோஷிக்கும்படி தெய்வ
ங்கூட்டிவைத்ததென்று சொல்லி அர்ச்சுனராஜனுக்கும் ஒரு கிருஷ்
ணாசனம்போடுவித்து அதன்மேரில் உள்க்காரப்பண்ணி கனிவர்க்கங்க
ளையுந்தேனையும் புசிக்கும்படி கொடுத்துஉபசாரஞ்செய்து
நீர்என்னிடத்திற்கு வந்தகாரியமென்னவென்று கேட்க அதுகேட்டு
அர்ச்சுனராஜனும் அந்தசௌபரிரிஷியைப்பார்த்து ஒய்ஐயா! முனிநா
தா! என்தமையனாராகிய தர்ம்மராஜாவானவர் அஸ்வமேதயாகம்பண்
ணும்படி நினைத்துகுதிரையைப்பூமிப்பிரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு
வரச்சொல்லி என்னை அனுப்பி வைத்தார். நானுமவருடைய கட்டளை
ப்படி இந்தபட்டுக்கும் அந்தக் குதிரையைக் காப்பாற்றிக் கொண்டு
வந்தேன் இப்போது தேவரீருடைய ஆசிர்மத்திற்குச் சமீபத்தில் வந்
துஒருகுத்துக்கல்லுடனே உராய்ந்துகொண்டு அந்தக்கல்லோடு கல்
லாய்ஒட்டிக்கொண்டது, அதைஅநேக யுத்திகளினால் சேவகர்களைக்
கொண்டுஅதட்டியும்-அடித்தும்-இடித்தும்-இழுத்தும் பார்த்தோம்
அதுஎந்தவிதத்திலும அசையவில்லை ஆகையினால்,இதென்ன காரண
மோவென்று சமயங்கொண்டு தேவரீருடைய பாதத்தில்விழுந்து சர
ணமடைந்து தெரிந்துகொள்ளவேண்டி வந்தேனென்று விண்ணப்ப
ஞ்செய்தான். அதுகேட்டு அந்தசௌபரிமஹாரிஷியுஞ் சிரித்துஅர்ச்
சுனனைப்பார்த்து அதற்குஒருகதையுண்டு அதைச்சொல்லுகிறேன் சா
வதானமாய்க்கேளுமென்று அந்தக்குத்துக்கல்லுடனே குதிரையொ
ட்டிக்கொண்டவிர்த்தாந்தத்தைச்சொல்லுகின்றார்.

கேளுமையா! அர்ச்சுனா! பூர்வத்தில் அந்தக்குத்துக்கல்லின் சமீபத்
தில் ஜண்டிகவுசிகனென்னும் பெயரையுடைய ஒருமுனீஸ்வரர்ஆசிர்ம
ங்கட்டிக்கொண்டிருந்தார், அவரிடத்தில் உத்தாலகனென்னும் பெய
ரையுடைய ஒருவன் சிஷ்யனாகியிருந்து பணிவிடைசெய்துக் கொண்டு
வந்தான். அங்ஙனம் செய்துவருகின்றகாலத்தில் ஒருநாள் அந்த சண்
டிகவுசிகரிஷியானவர்தீர்த்தயாத்திரை பண்ணவேண்டுமென்கிற உத்
தேசங்கொண்டுசில ரிஷீஸ்வரர்களுடனே கூடிப்போனார்.அதுகண்
டுஅவருடைய சிஷ்யனாகிய உத்தாலகனும்தனது ஆசிரியர்பின்னாகவே
நடந்துபோனான். அப்படிக்கு ஆசிரியரைவிடாமல் அவன் தொடர்ந்
து நடப்பதை ஜண்டிசவுசிகமுனிவருந் திரும்பிப்பார்த்துஒய்உத்தால
கா! நீ எங்களோடுகூடசிரமப்பட்டுக் கொண்டுதீர்த்தயாத்திரை செய்ய
வேண்டாம் நீ இவிடத்தில்தானே நின்றுகலியாணஞ்செய்துக் கொண்
டுசகல சவுக்கியங்களையும் அனுபவித்துச் சுகமாயிருவென்று சொல்ல,
அதற்குஅந்தஉத்தாலகனும் சம்மதப்படாம லிருந்தான். அதுகண்டு
அந்தஜண்டிகவுசிகரும் அவனுக்கு அபேக்ஷவரும்படி அநேகபிரிய

வசனங்களைச்சொல்லி அவனைச்சம்மதப்படுத்தி பின்புஒருபிராமணன் வீட்டில்ஜண்டிகை யென்கிறபெண்ணை விசாரித்துஅந்த உத்தாலகனுக்குக்கலியாணம்பண்ணுவித்து நீங்கள்சுகமாய்வாழ்ந்திருங்கோ ளென்று அவர்களிருவருக்கும் ஆசீர்வாதஞ்செய்து அவர்களை அங்கேதானே நிறுத்திவிட்டு பிற்பாடுஅந்தரிஷீசுவரர்களுடனே சேர்ந்துதீர்த்தயாத்திரைக்குப் போய்விட்டார் அதன்பிறகு அந்த உத்தாலகனுஞ் சண்டிகையுங் கூடியிருந்து சமுசாரஞ் செய்து வருகிறநாளில் அந்த உத்தாலகன் தன்பெண்சாதியாகிய ஜண்டிகையைப் பார்த்து அடிபெண்ணே! எனக்குப்பசிக்கின்றது நீ சீக்கிரமாகச்சமையல் பண்ணென்றுசொன்னால் அவள் சோற்றுப்பானையை உடைத்தெறிந்து அவனைப் பார்த்துநீ பானைகொண்டுவந்தால்சமைக்கிறேனென்று சொல்லுவாள் பின்னையும் அவன் போஜனஞ் செய்யவேண்டும் அக்கினிகொண்டுவா வென்றுசொன்னால் வீட்டிலிருக்கிற நெருப்பிலுந் தண்ணீர்வார்த்து ஆற்றிவிட்டு நெருப்பில்லையென்றுசொல்லுவாள் அதுவுமல்லாமல்சாணமெடுத்துவந்து வீடுமுழுதும் சுத்திபண்ணென்று சொன்னால் எங்கேபார்த்தாலுங்குப்பையுங் கூளமுங்குவித்து எச்சிலையுமிழ்ந்து வைப்பாள் வஸ்திரத்தைக்கொடுத்து உலர்த்தச்சொன்னால் நனைத்துப் போடுவாள் போஜனம்பண்ண இலைகொண்டுவா வென்றுசொன்னால் இலையைக்கிழித்துப்போடுவாள் இந்தப்பிரகாரம் அந்த ஜண்டிகையானவள் நாள்தோறும்அகடவிகடமாகச் செய்துவருகிறபோது உத்தாலகனும் நிர்வகிக்கமாட்டாமல் விசனப்பட்டு ஐயையோ! இந்தப்பசாசானவள் எனக்கென்று எங்கேயிருந்துவந்தாள் தெய்வமேயென்று துக்கித்துக்கொண்டிருக்கையில், அந்தஜண்டிகவுசிகமுனிவருந் தீர்த்தயாத்திரை பண்ணிவிட்டு மறுபடியும் இந்த உத்தாலக னிருக்குமிடத் திற்கு வந்துசேர்ந்தார்.

அதுகண்டு உத்தாலகனும் தன்னுடைய ஆசிரியருக்குச் சாஷ்டாங்கதண்டன் சமர்ப்பித்து ஓய்ஐயா! குருநாதா தேவரீர் தீர்த்தயாத்திரைக்குப் போம்பொழுது பலவத்காரமாய் அடியேனுக்குக் கலியாணஞ்செய்துவைத்த பெண்சாதியின் வாழ்க்கைப்பாட்டினால் அடியேன் படுகின்றமனோதுக்கத்தை இன்னபடியென்றுசொல்லிமுடியாது ஆனாலும் கொஞ்சஞ்சொல்லுகிறேன் கேளுமென்று சில செய்கைகளைச்சொல்லி விண்ணப்பஞ்செய்தான் அதுகேட்டு அந்தஜண்டிகவுசிகமுனிவரும் ஆலோசனைசெய்து ஓய்உத்தாலகா! நீ உன்பெண்சாதியை ஒன்றுசெய்யச்சொன்னால் அவள் ஒன்றுசெய்கிறாளல்லவோ? ஆனால் நீ அதற்கொரு தந்திரஞ்செய்யவேண்டும். அஃதென்னவென்றால், உனக்கு அவளால் ஆகவேண்டிய காரியத்தை வேண்டாமென்றுசொல் அதை அவள்வேண்டுமென்று மறுத்துச்செய்வாள் இதுவே உபாயமென்று உத்தாலகனுக்குச் சொல்லிவிட்டு ஜண்டிகவுசிக முனிவருந் தன்னுடைய ஆசிரமத்திற்குப்போய்விட்டார், பிற்பாடு அந்த உத்தா

ஸ்கனும் தன்னுடைய குருவாக்கியப்படி பெண்சாதியை அழைத்து ஓப்பெண்ணே! எனக்குப் போஜனம்வேண்டாமென்றுசொல்லுவான் அதுகேட்டு அந்தஜண்டிகையும் அது என்னகாரியமென்றுசொல்லி அதிசீக்கிரத்தில் சமையல்செய்து அவனுக்கு உபசாரமாகப் படைப்பாள்; நெருப்பு வேண்டாமென்று சொன்னால் நெருப்புகொண்டுவருவாள் வஸ்திரத்தை நனைத்துக்கொண்டுவாவென்றால் உலர்ந்தவஸ்திரத்தைக்கொண்டுவந்துகொடுப்பாள். ஒருபதார்த்தமும் வேண்டாமென்று சொன்னால் சகலபதார்த்தங்களும் சமைத்துவைப்பாள் ஸ்திரீசையோகஞ் செய்யத்தகாத புண்ணியதினங்களில் வேண்டினவன் போல் சைகைபண்ணினால் வேண்டாமென்று தூரப்போய்நிற்பாள். செய்யத்தகுந்தநாள்களில் வேண்டாமென்றுசொன்னால் வேண்டுமென்றுகூடியிருப்பாள், வீடுசுத்திசெய்யவேண்டாமென்றால் வீடெல்லாம் நன்றாயலங்கரித்துவைப்பாள். இந்தப்படி நாள்தோறும் அந்த உத்தாலகன் தனக்குவேண்டிய வைகளையெல்லாம் வேண்டாமென்று தந்திரமாகச்சொல்ல அதற்கு அந்த ஜண்டிகையும் வேண்டாமென்றவைகளையேவேண்டுமென்று மாறாகச்செய்துவருவாள், இந்தப்பிரகாரம் அவர்களிருவருங் கூடி இல்வாழ்க்கைசெய்துகொண்டு வருங்காலத்தில் அந்த உத்தாலகனுடைய தகப்பனருக்குத் திதிவந்தது அன்றைக்கும் அவன் தன்னுடைய பெண்சாதியாகிய ஜண்டிகையை அழைத்து அவளைப்பார்த்து அடிபெண்ணே! என் தகப்பனுக்கு இன்றையதினம் திதிவந்தது அதற்குநாமென்னசெய்யப்போகிறோம் ஒன்றுஞ் செய்யவேண்டாமென்று சொல்ல, அவளும் அதுகேட்டு நீர் என்னகாரியஞ் சொன்னீர் இதுஎனக்கு நன்றாயிருக்கவில்லை! பிள்ளையிருந்தால் தகப்பனுக்கு திவசங்கொடுக்கவேண்டாமோ; நாம் சம்பிரமமாய்க் கொடுக்கவேண்டுமென்றுசொன்னாள், அதற்கு அவனும் ஒருவனுக்கு மாத்திரஞ்சாறுஞ்சாதமுமாய்ச்சமைத்துப் போடென்றுசொல்ல, அதற்கு அவள்சம்பிரமமாய்ப்பத்துபேருக்குச்சாப்பாடுபண்ணவேண்டுமென்றுசொல்ல, அதுகேட்டு அவனும் நல்லதுபொழுதுபோனபின்பு ஆகட்டுமென்று சொல்ல, அதிசீக்கிரத்தில் பண்ணவேண்டுமென்று சொல்லி உதயகாலத்திற்கே வீடுவாசலைச் சுத்திபண்ணி பதினைந்துநாழிகைக்கெல்லாம் சகலபதார்த்தங்களோடும் அன்னஞ்சமைத்துவைத்து பத்துப்பேர் பிராமணர்களை அழைத்து தன்புருஷன் கையினால் அவர்களைப்பூசைபண்ணுவித்து பிண்டப் பிரதானமும் பண்ணுவித்து பிற்பாடு உத்தாலகன் அவர்களுக்குச் சாதத்தைக் கொஞ்சமாகப்படையென்றுசொல்ல, அவளும் விஸ்தாரமாகத் திருப்திபோஜனமாய் சகலபதார்த்தங்களையும் படைத்து அவர்கள் போஜனம்பண்ணியெழுந்து கைகால் சுத்திசெய்துகொண்டபின்பு அவர்களுக்குத்தாம்பூலமும் புஷ்பமும் சந்தனமும் விஸ்தாரமாகக்கொடுத்து அவர்களுக்கு உபசாரஞ்சொல்லி அனுப்பிவிட்டு பின்பு அந்த உத்தாலகன் அன்னை

அசலிலுள்ள எவர்களையும் அழைத்துச் சாப்பாடு படைக்க வேண்டாமென்று சொல்ல அவளும் அதென்ன பரிகாசமென்றுசொல்லி அந்தத் தெருவிலிருக்கின்றவர்களை யெல்லாம் குழந்தைகுட்டிகளுடன் அழைத்துக்கொண்டுவந்து போஜனம்படைத்து அவர்களைத்திருப்திபண்ணி அனுப்பினாள் பின்பு உத்தாலகனும் அவளையழைத்து அடிபெண்ணே! எனக்குக்கொஞ்சமாக போஜனம் படையென்று சொல்ல, அதற்கு அவளும் இதென்னபரிகாசமென்றுசொல்லி சகலபதார்த்தங்களும் நெய் தயிர் பணியாரவகைகளும் பத்துபேருக்காகும்படி அந்த உத்தாலகனுக்குப்படைத்தாள் அதுகண்டு அவனும் தனக்குள்ளே தானே சந்தோஷப்பட்டுக்கொண்டு வயிறுநிறைய திருப்தியாகச் சாப்பிட்டெழுந்திருந்து போகிறவன் தன்பெண்சாதியினுடைய குணத்தைத் தெரிந்தவனாயிருந்தும் மறந்துவிட்டு அவளை அழைத்து அடிஜண்டிகா இந்தப்பிண்டப்ரதானம்பண்ணின அன்னத்தைக்கொண்டுபோய் கங்கையில் போட்டுவாவென்று சொன்னான் அதுகேட்டு அவளும் பிண்டப்ரதானம்பண்ணின அன்னத்தை யெடுத்துக்கொண்டு போய் வீதியினிடமாகக் குட்டைகளின்பேரில் விழுந்து புரண்டுகொண்டிருக்கிற நாய்களுக்கு முன்பாகவைத்தாள் அதைக்கண்டு அந்தநாய்கள் ஓடிவந்து தின்றுவிட்டதுகள் அதுகண்டு உத்தாலகன் மிகுந்தகோபங்கொண்டு அடிபாவி துன்மார்க்கி கெடுத்தாயோ உன்னால் என்னுடைய பிதிர்க்களெல்லாம் நரகத்தில் விழுந்தார்களே இதற்கெப்படி அடி தோஷியென்றுசொல்லி நீ இந்ததோஷத்தினால் குத்துக்கல்லாய் விழுந்துகிடக்கக்கடவாயென்று சாபமிட்டான்.

அதுகண்டு அந்த ஜண்டிகையானவள்பயந்து தன்புருஷனாகிய உத்தாலகனைப் பிரதக்ஷிணஞ்செய்து தெண்டனிட்டு ஐயா பிராமணோத்தமா தேவரீர் அடியாளுடைய துர்க்குணத்தைக்கண்டு இப்படிப்பட்ட சாபங்கொடுத்தீரே இந்தச்சாபமான தெந்தநாளில் எனக்குவிமோசனமாகுமென்று இரக்கமாகக்கேட்க அதற்கு அந்த உத்தாலகனும் நீ அநேகங்காலம் இப்படி குத்துக்கல்லாகவேகிடந்து பின்பு தர்ம்மபுத்திரரானவர் அஸ்வமேதயாகஞ்செய்கிறதற்குப்பிரயத்தனப்பட்டு குதிரையைவிட்டு அதன்பிறகே அவர் தம்பியாகிய அர்ச்சுனனைக்கூட்டி அனுப்பினைப்பார் அப்பொழுது அந்தக்குதிரையும் பூமிப்பிரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு திக்குவிஜயஞ்செய்து வருகையில் குத்துக்கல்லாய்க்கிடக்கிறஉன்பேரில்விழுந்து உராய்ந்துக்கொண்டு கல்லோடுகல்லாயொட்டிக்கொள்ளும் அதுசேதியை அர்ச்சுனராஜன்கேள்விப்பட்டுவந்து உன்னைப்பிடித்துக்கொண்டு அந்தக் குதிரையைபிழுப்பான் அப்போது குதிரையும் விடுதலையாகின்றது நீயும்சாபவிமோசனமாகி என்னிடத்திற்கு வந்து சேருவாயென்று உத்தாலகனென்னும்பிராமணன் சொல்லியனுப்ப அவளும்வந்து குத்துக்கல்லாய்விழுந்துகிடக்கிறாள். கேட்டீரோ அர்ச்சுன மஹாராஜனே! ஆதலால் அந்தக் கல்லோடுகல்லாய் நீங்கள் விட்ட அசு

வமேதக்குதிரையும் ஓட்டிக்கொண்டது, நீ இந்தக்ஷணமே அந்தக் குத்துக்கல்லினிடத்திற்குப்போய் அந்தக்கல்லை ஒருகையினால் பிடித்துக்கொண்டு குதிரையை ஒருகையினால்பிடித்திழுத்தால் அந்தக் குதிரையுமெழுந்திருக்கும் அவனுக்கும் சாபவிமோசனமாகுமென்று சௌபரிமஹாரிஷியானவர்சொல்ல, அதுகேட்டு அர்ச்சுனனும் சந்தோஷித்துப் எழுந்திருந்து அந்தமகாரிஷிக்கு சாஷ்டாங்கதண்டன் சமர்ப்பித்து அவரிடத்தில் அனுமதிபெற்றுக்கொண்டு விருஷகேது முதலான அந்தநால்வர்களுடனும் அந்தவனத்தைவிட்டு வெளியேவந்து குதிரையினிடத்திற்குப்போய் அந்தக்குத்துக்கல்லை ஒருகையினாற் பிடித்துக்கொண்டுமற்ற ஒருகையினால்அந்தக்குதிரையையும் பிடித்திழுக்க, அதனால் அந்தக்குதிரையும் வெளியேவந்து சரீரத்தைநிமிர்த்து அனுமானித்தது அந்தக் குத்துக்கல்லானஜண்டிகையும் முன்போலஸ்திரீரூபந்தரித்துவந்து அர்ச்சுனராஜனிடத்தில் செலவுவாங்கிக்கொண்டு உத்தாலகனிடத்திற்குப்போய்ச்சேர்ந்தாள். பிற்பாடு அர்ச்சுனமகாராஜனுங்குதிரையைவிட்டு சகலசேனைசமூகங்களோடும் நடக்கும்போது அந்தக்குதிரையானது செண்பகாபுரமென்கிற பட்டணத்திற்கு மூன்றுயோசனை தூரத்தில்நடந்தது, அப்போது அந்தசெண்பகாபுரத்தையாளுகின்ற அம்சத்துவமஹா ராஜாவினுடைய சேவகாரர்கள்பார்த்து அந்தக்குதிரையினுடைய சேதியெல்லாந்தெரிந்து ஓடிவந்து அந்த அம்சத்துவமஹாராஜாவுக்கு தெண்டனிட்டு ஐயா! ராஜேந்திரா! அஸ்தினாபுரத்தையாளுகின்ற தர்மராஜாவானவர் அஸ்வமேதயாகம் செய்யும்படி பிரயத்தனப்பட்டு குதிரையைவிட்டாராம் அந்தக்குதிரையும் அர்ச்சுனராஜனும் இன்னுஞ்சிலசேனைகளும் நம்முடைய பட்டணத்திற்கு மூன்றுயோசனை சமீபத்தில் வருகின்றதென்று சொல்லிப்போனார்கள். அதுகேட்டு அம்சத்துவ மஹாராஜனுஞ் சந்தோஷிப்பட்டு மந்திரிகளையழைத்து ஓ மந்திரிமார்களே! நாம் தர்மராஜாவானவர் விட்டகுதிரையைப்பிடித்துக்கொண்டு அதின்பிறகே வருகிற அர்ச்சுன ராஜனையும் எதிர்த்துப்போராடி நன்றாய்பூசைபண்ணினோமானால் அர்ச்சுனனையுங்குதிரையுங் காப்பாற்றிக்கொள்ளுகிறது நிமித்தம் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி வருவார் அவரைப் பிடித்துக்கொள்ளலாம் இது நன்றாயிருக்கிற தென்று சொல்ல, அதற்கு அவர்களும் ஆலோசித்து அப்படிசெய்யலாமென்று சொன்னார்கள். அதுகேட்டு அந்த அம்சத்துவமஹாராஜனும் அங்கிருக்கின்ற சேனைகளைப் பார்த்து ஓ ராஜாக்களே! மந்திரிகளே! சேனாதிபதிகளே! நீங்களெல்லாரும் என்னுடைய வார்த்தையைக்கேளுங்கள் அஃதென்னவென்றால்; நம்முடைய பட்டணத்திலுண்டான சகலஜனங்களும் வில்லைப்பிடித்தவர்கள் ஆயுதத்தைப்பிடித்தவர்கள் எவர்களோ அவர்களெல்லாரும் அவ்வவர்கள் சேனைகளுடனே ரணக்களத்திற்கு யுத்தசன்னத்தர்களாய் ஆயத்தப்பட்டுவந்து சேரவேண்டும். அப்படிவந்து சேராமல் என்னுடைய ஆக்கினையைத்தள்ளி நடந்தார்க

ளாகில் அவர்கள் எவ்வகைப்பட்டவர்களா யிருந்தாலும் அவர்களைக் கொண்டுபோய் ஊருக்குப்புறம்பாகக் காய்ந்துகொண்டிருக்கிறஎண்ணெய்க்கொப்பரிகையில தள்ளிவிடுகிறதென்று திட்டஞ்செய்து சங்கிலிகிதர்களென்கிற பிராமணர்களை அழைப்பித்து அவர்களிடத்தில் தம்முடைய முத்திரை மோதிரத்தையுங் கொடுத்தனுப்பினர். அவர்களும் அந்தப்பிரகாரமே எண்ணெய்க்கொப்பரிகை யண்டையிற் போயிருந்தார்கள் அப்படிகட்டளையிட்ட அம்சத்துமஹாராஜன் எப்படிப்பட்டதன்மையையுடையவ னென்றால்.

அம்சத்துவமகாராஜன்யுத்தம்.

அஸ்திரசஸ்திரவித்தைகளில் மகாவல்லமையை யுடைத்தானவன் சத்தியசந்தனன் ஸ்ரீமன் நாராயணருடைய திவ்யநாமத்தைக் கனவிலுமறவாதவன்-சகலஜீவர்களிடத்திலும் பூததயவுள்ளவன்- அகண்டித வீரயராக்கிரம தூரந்தரன், அஷ்டலக்ஷ்மீவிலாசபோகபோக்கியங்களுமுடையவன், தர்மநீதியில் யமதர்மராசனுக்குச் சமானமானவன் இப்படிப்பட்ட குணத்சங்களை யுடையவனுகிய அந்த அம்சத்துவ மஹாராஜனானவன் முற்சொன்னபடியே திட்டஞ்செய்து பட்டணமுழுதும்பறைபறைவித்து யுத்தசன்னுத்தனாய் (நவரத்நமயமானதேரின்பேரிலேறி) மந்திரிபிரதானிகளுடனே புறப்பட்டுப்பட்டணத் திற்கு வெளியேவந்து தண்டுவிட்டிறங்கினான். அந்தராஜாவினுடையபிள்ளைகள் நால்வரில் மூன்றுபேர்மாத்திரம ரதமேறிக்கொண்டு தங்கள் தங்கள் சேனைகளுடனே புறப்பட்டு நடந்தார்கள். பின்னும், ரதக்காரர், ஆனைக்காரர், குதிரைக்காரர், காலாள்களாகிய நால்வகைச் சேனைகளில் ஒருவராகிலும் பட்டணத்தில்நில்லாமல் எல்லாரும்ரணக்களத்திற்கு நடந்தார்கள். அப்பொழுது அந்தராஜாவினுடைய குமாரனான சுதர்ம்மனென்கிறவன் அவனுடையபிதாவிலும் மகாசத்தியசந்தனன் தர்ம்மமாகிறபாசத்திற் கட்டுப்பட்டவன் வேதவொழுங்கைக் கடவாதவன் விஷ்ணுவினுடைய திருவடிக்கமலங்களில் அத்தியந்த பிரீதிவிசுவாச முடையவன் இப்படிப்பட்ட சற்குணசம்பன்னனான அந்தராஜ குமாரன் தன்னுடையபிதாவின் கட்டளைப்படி ரணக்களத்திற்குப்போகவேண்டுமென்று அயுத்தப்பட்டுயுத்த சன்னுத்தனாய் ரதமேறிக் கொண்டு புறப்பட்டுதன் பெண்சாதியாகியபிரயா வதிக்குச்சொல்லிவிட்டு அவளிடத்திற் செலவுவாங்கிக்கொண்டு போகலாமென்று நினைந்து அவளரமனைக்குப்போய் அவளைப்பார்த்து அடிபெண்ணேபாக்கியவதி! தர்ம்மராஜாவானவர் அஸ்வமேதயாகஞ் செய்கிறதற்குப் பிரயத்தினப் பட்டுகுதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பிறகே அர்ச்சுனராஜனையுங்கூட்டி அனுப்பி யிருக்கிறார்ஆகையினால் அந்தஅஸ்வத்தைபிடித்துக் கொண்டுஅதன்பின்னே வருகிறஅர்ச்சுனனுடனே போராடவேண்டு மெ

ன்றுஆபுத்தப்பட்டு என்பிதாவானவர் வாய்ப்பறையாக வில்லைப்பிடி த்தவர்கள் ஆதத்தைப்பிடித்தவர்கள் முதலான பட்டணத்திலுள்ள சகலஜனங்களும் யுத்தசன்னத்தராய்அவ்வவர்கள் சேனைகளோடும் வந்து ரணக்களத்திற் சேரவேண்டியது, அப்படிவந்து சேராதவர்கள் எவர்களாயிருந்தாலும் அவர்களை எண்ணெய்க் கொப்பரிகையில் தள்ளிவிடுகிறதென்று கட்டளையிட்டுப்போனார்.

ஆதலால் அவருடையகட்டளையைக்கடவாமல் நானும்போகவேண்டும் எனக்குச்செலவுகொடுத்தனுப்பென்றுகேட்க. அதுகேட்டு அந்தபிரபாவதியும் தன்புருஷனைக் கண்டமாத்திரத்தில் காமவிகாரமிகுந்தவளாய் அதிக அபேக்ஷைகொண்டு இதற்கெப்படியென்றுஎழுந்திருந்துதன்புருஷனுக்கு நமஸ்காரம்பண்ணி ஓய் பிராணநாயகா! நீரென்னவார்த்தைசொன்னீர்? பிதாவினுடையஆக்கினைப்படிரணக்களத்திற்குப்போகிறேனென்றுசொல்லுகிறீரோ அதுகூடாது! இன்றையத்தினம்நீவிர் என்னுடனேகூடி யனுபவித்து என்அபேக்ஷையைத்தீர்க்கவேண்டும் மன்மதனுடைய பாணக்கினியிருந்து என்னைத்தகிக்கின்றது, அதைஎன்னாற்சகித்து முடியவில்லை. ஏனென்றால், இன்றையதினம்அடியாளும் ருதுஸ்நானம் பண்ணியிருக்கின்றேன் ஆதலால் இப்பொழுதுஎன்னைக் கூடியனுபவித்துச் சந்தோஷிப்பியுமென்றுஇரக்கமாகச்சொன்னாள். அதுகேட்டு அந்தராஜகுமாரனும்தன்பெண்சாதியைப்பார்த்து ஓய்பிராணநாயகி! நீ கொண்டிருக்கிற எண்ணமானது இகபரசவுக்கியமில்லாமற் போகத்தக்கதாயிருக்கின்றது, எத்தனைமூடபுத்தி யுடையவர்களாயிருந்தாலும் பட்டப்பகற் காலத்தில் ரதிகேளிசெய்வார்களோ! அப்படிசெய்தால் நரகவாதனைவருமல்லவோ! இதுவுமல்லாமலும் உன்கருத்தின்படியே இன்றையதினம் உன்னிடத்திலிருந்துவிட்டால் என் பிதாவினுடைய ஆக்கினைதப்பாது, ஆதலால்; நீ நினைத்தகாரியம்இன்னம் ஒருவேளையில்ஆகட்டுமென்றுசொல்ல. அதற்குஅவளும்சம்மதப்படாமல்புருஷனைப்பார்த்துஓய்நாயகா! நீர்என் விருப்பத்தின்படி பட்டப்பகற்பொழுதில்செய்யவிட்டாலும்இன்னஞ் சற்றுநேரத்தில் பொழுதுபோகின்றது, ராத்திரிக்கிருந்துஎன்னுடனேகூடிச் சகலசவுக்கியங்களையும் அனுபவித்து விடிந்தபின்புயுத்தகளத்திற்குச் சுகமாய்ப்போகலாமென்று மறுத்துச் சொன்னாள். அதுகேட்டு சுதர்ம்மனுஞ்சம்மதப்படாமல் அவளைப்பார்த்து ஓய்சவுந்தரியவதி! நீசொன்னபடியே ராத்திரிக்குச்சேவிவிலாசமாயிருந்து அனுபவித்துஉன்னுடைய விரகதாபத்தைத்தீர்த்தேனாகில் விடிந்தபின்பு எனக்குஅரசன் ஆக்கினைப்படிக்கு எண்ணெய்க்கொப்பரிகையில் விழவேண்டியிருக்குமே அதற்கென்னசெய்யலாமென்றுகேட்கஅதுகேட்டுபிரபாவதியும் ஓய்பிராண நாயகா! நீரிப்பொழுதுசொன்னவார்த்தை உண்மையேயாம் நான் இன்றைக்குத்தான் ருதுஸ்நானம்பண்ணி பரிசுத்தமாயிருக்கின்றேன் இன்றையதினம் நீர்என்னு

டனேகூடாமற்போனால் உமக்குபுருஷீத்தியாதோஷிமும்யமவாதனை
யுமுண்டாகுமல்லவோ! ஆகையினால், உமக்குஎதுயுக்தமா யிருக்கின்ற
தோ அந்தப்படி செய்யுமென்றுசொல்ல, அதுகேட்டு சுதர்ம்மனும்
அற்பசுகத்தை விரும்பினால் கற்பதுக்கம் வருமென்றறிந் தவனாயிருந்
தும்பெண்சாதி சொன்னவார்த்தையு மெய்தானென்று ஆலோசனை
செய்து இன்றையதினம் அரசன் ஆக்கினையைக்கடந்து நடந்தால் நா
ளையதினம் என்னையெண்ணெய்க்கொப்பரிகையில் தள்ளுவார்கள். அங்ஙனந் த
ள்ளினவுடனே இந்தச்சரீரத்தைவிட்டு தேவசரீரம்பெற்றுக் கொண்டு
சகலசம்பிரமத்துடன் சுவர்க்கத்திற்போயிருந்து இந்திர போகத்தை
யாகிலும் அநுபவிக்கலாம் அரசனாக்கினையைக்கடவாமல் பெண்சாதி
யினுடைய சொல்லைக்கடந்து நடப்போமானால் புருஷீத்தியாதோஷி
மும்நரகவாதனையு முண்டாகுமாதலால் அரசனுடைய ஆக்கினையைத்
தள்ளிபெண்சாதியின் விருப்பத்தின்படி செய்கிறதேஉத்தம மென்று
நினைந்து அந்தப்படியே அன்றுராத்திரியிருந்து அந்தப்பிரபாவதி யு
டனேகூடி சரசசல்லாப விநோதலீலைகளை யநுபவித்து அவள்மன
தைச் சந்தோஷம்பண்ணுவித்து மறுநாள்விடியற்காலையி லெழுந்து
ஸ்நானம்பண்ணிஜப தபங்களைமுடித்துக்கொண்டு ஓமசாந்தி செய்து
சூரியபகவானுக்கு அர்க்கியங்கொடுத்துபிராமணர்களுக்கு தானங்கொ
டுத்துஅவர்களுடைய ஆசீர்வாதங்களைக் கைக்கொண்டு யுத்தசன்னத்த
னாய் சாருடனாய்ப் புறப்பட்டுரணக்களத்தை நோக்கிவருகையில் அத
ற்குமுன்னமே அம்சத்துவட ஹம்ஸராஜனானவன் தன்னுடைய சேனைக
ளெல்லாம்வந்து சேர்ந்தபிறகு எண்ணிக்கைபார்க்கும்போது தன்பிள்
ளைகளநாலவரில் மூன்றுபேர்மாத்திரம் வந்திருந்தார்கள துவுமல்லாம
லெழுபதுபேர் சேனாதிபதிகளும் ஒவ்வொருசேனாதிபதிக்கு எழுபத்
தோராயிரந்தேர்களும், எழுபத்தோராயிரம், ஆனைகளும், லக்ஷந்; கு
திரைகளும், லக்ஷங் காலாள்களும், எழுபதுசேனாநாயகருமாக எண்
ணிக்கைபார்த்துக்கொண்டு தன்னுடைய குமாரனாகிய சுதர்ம்மனென்
கிறவனைக்காணாமல் சிந்தாக்கிராந்தனாய் மந்திரிகளைப்பார்த்து ஓய்மந்தி
ரிகளே; கேட்டீரோ என்னுடைய ஆக்கினைப்படிக்கு நம்முடைய பட்
டணத்திலுண்டான ஜனங்களும்என் குமாரர்களில்மூன்றுபேரும் வ
ந்திருக்கிறார்கள் இன்னம்என் குமாரனாகிய சுதர்ம்மன்மாத்திரம் வர
வில்லை. பார்த்தீர்களோ! நம்முடையதகப்பன் நம்மையென்னசெய்ய
ப்போகிறானென்று நினைந்து அந்தசுதர்ம்மன் அசட்டையா யிருந்து
விட்டதுபோலத் தோற்றுகின்றது, அப்படியிருந்தால்நம்முடையஆ
க்கினைதப்பிப்போகுமோ! பூலோகத்தில் அரசாட்சிசெய்கின்ற அரசர்
களுக்குஉறவினனென்றும் சிநேகனென்றும் பிள்ளைகளென்றும பக்ஷ
பாதமுண்டோ அப்படிக்கிருக்கஅந்தபயித்தியக்காரனான சுதர்ம்ம
ன் பெய்வேலை பண்ணிக்கொண்டான் ஆதலால்நீங்கள் இந்தக்ஷணமே
என் குமாரனான சுதர்ம்மனைப்பிடித்துக்கட்டிக் கொண்டுபோய் சங்கிலி

கீதர்கள் வசத்தில்ஒப்புவித்து எண்ணெய்க் கொப்பரிகையில் தள்ளிவிட்டுவாருங்கோளென்றுசொல்லியனுப்பினார்.

அதுகேட்டு அந்தமந்திரிகளும் அப்படியேநல்லதென்று போம்பொழுது அவர்களுக்கு எதிராகத்தேரேறிக்கொண்டு வருகிறராஜகுமாரனைப்பார்த்து விசாரப்பட்டுஓய்ராஜநந்தனே! நீர் உமதுபிதாவினுடையஆக்கினையைக்கடந்து நடக்கலாமா! நேற்றுதினம் நீர் வரவில்லை; நேற்றுதினஞ் செய்தகாரியம் இன்றைக்குச் செய்யலாகாதோ! சத்தியந்தவிராதவராய் விஷ்ணுபக்தியுடையவராய் புண்ணியபுருஷராய்விளங்கப்பட்ட நீர் இப்படிப்பட்டபேய்வேலை செய்து விட்டீர்ஆதலால் உம்முடையபிதாவாகிய அம்சத்துவமஹாராஜனவர் எங்களையனுப்பி உம்மைக்கட்டிக் கொண்டுபோய்எண்ணெய்க் கொப்பரிகையிற்றள்ளிவிடும்படி கட்டளையிட்டார். அதற்கெப்படியென்று விசாரப்படுகிற மந்திரிகளைப்பார்த்து சுதர்ம்மனனவன் தேரைவிட்டிழிந்து ஓய்புண்ணியவான்களாகிய மந்திரிமார்களே கேளுங்கள்; நீங்கள் என்னைக்கொண்டுபோய் எண்ணெய்க் கொப்பரிகையில் தள்ளுகிறத்திற்குமுன் பின் யோசனைபண்ணவேண்டாம் இந்தச்சரீரமோ நிலையாமையென்னும் பெயரையுடையது இதுபிதாவினுடைய ஆதீனமாயிருக்கப்பட்டது ஆகையினால், இந்தச்சரீரத்தை அவர்என்ன செய்யவேண்டுமென்றாலும்செய்துக் கொள்ளலாம் இதுவல்லாமல் பராபரவஸ்துவாகிய (ஸ்ரீமன் நாராயணமூர்த்திக்குச்சரியாய்) விளங்கப் பட்டஎன்பிதாவினுடைய ஆக்கினைதப்புமோ! அதுதப்பாது என்னுடையசரீரம் விருதாவில் போகாமல் பிதாவுக்குப்பிரீதியாய்ப் போகிறது எனக்குமெத்தசந்தோஷம் அல்லாமலும் இந்தச்சரீரம்எத்தனைநாளைக்கிருந்தாலும் சுதந்தரமில்லாமல் இரவலாயிருக் கின்றபடியினால் நீங்கள் என்னைக் கட்டிக் கொண்டுபோய் அந்தசங்கிலிகீதர்கள் வசத்தில் ஒப்புவித்து எண்ணெய்க் கொப்பரிகையில் தள்ளிவிடச்செய்யுங்கோளென்று மகாதயிரியத்துடன் சொல்ல அதுகேட்டு அந்தமந்திரிமார்களும் விசாரப்பட்டு பகவத் சங்கல்பத்தினால் இப்படி சம்பவித்ததென்று துணிந்து குதிரைக்கயிற்றினால் சுதர்ம்மனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு பட்டணத்திற்குப் புறம்பாகக் காய்ந்துக் கொண்டிருக்கிற எண்ணெய்க்கொப்பரிகை யண்டைக்குக்கொண்டுபோய் அவிடத்தில் யமகிங்கிலியர்கள்போல் பார்க்கப் பயங்கரமாய்க் குரூரமா யிருக்கப்பட்ட சங்கிலிகீதர்களென்கிற பிராமணர்கள்வசத்தில் ஒப்புவித்து ஓய் சங்கிலிகீதர்களே! இவன் ராஜனுக்கினையைத் தள்ளி நடந்தபடியினால் இவனை எண்ணெய்க்கொப்பரிகையில் தள்ளும்படி அம்சத்துவமஹாராஜனவர் கட்டளையிட்டார். ஆகலால் நீங்களிவனைப்பிடித்துத்தள்ளிவிடுங்கோளென்றுசொல்லிப்போனார்கள்.

அதுகேட்டு அந்தசங்கிலிகீதர்களென்கிற இரண்டு பிராமணர்களும் மனஸ்தாபப்பட்டு சுதர்ம்மனைப்பார்த்து ஓய் ராஜகுமாரகா! நீர்

என்னகாரணத்தினால் அரசனுக்கினையைக் கடந்துநடந்தீர் ப்ரதிரீலைச யோகம்பண்ணவேண்டுமென்கிற விருப்பமிருந்தால் அதற்கு காலமில்லையோ நம்முடைய தகப்பனார் தானே நம்மையென்னசெய்யப் போகின்றாரென்று எளிதாக நினைத்திருந்தீரோ? இப்படி நினைந்திருக்கலாமோ; அது என்னவென்றால், ராஜாவினுடைய சிநேகமும் நாகப்பாம்பினுடைய விஷமும் - துர்ச்சனசாவகாசமும் - பகையாளியினுடைய விருந்தும் - சற்சனருடைய துவேஷமும் ஒருவேளை போலிருக்கமாட்டாது. ஆதலால், தேவரீர் சகலநியாயங்களுந்தெரிந்திருந்தும் இப்படி செய்துக்கொண்டால் நாங்களென்னசெய்யப்போகிறோம். உபசாரவார்த்தைமாத்திரம் சொல்லுறோமேயல்லாமல் உம்மை எண்ணெய்க்கொப்பரிகையில் தள்ளாமலிருக்கக்கூடுமோ; அப்படி நாங்கள் தள்ளாமலிருப்போமானால் உன்பிதாவானவர் எங்களைத்தள்ளுவிப்பார் ஆகையினால், நாங்கள் அரசனுக்கினையைக்கடந்து நடக்கமாட்டோம். இதற்கெப்படியென்றுகேட்க அதற்கு சுதர்ம்மனும் ஆலோசனைசெய்து சங்கிலிகிதர்களைப்பார்த்து ஓய் ஐயமாரே! நீங்கள் மிகவும் புண்ணியவான்கள் அதுஎப்படியென்றால்; எவர்களாகிலும் ஒருகுற்றஞ்செய்தால் அவர்களுடையகுற்றத்தைப் பரிகரித்துபுண்ணியலோகங்கொடுக்கப்பட்டவர்கள், ஆதலால், நீங்களிப்போது ஒருஆலோசனையுஞ்செய்யாமல் என்னை எண்ணெய்க்கொப்பரிகையில் தள்ளினால் செய்தபாவத்தைப்போக்குவித்து என்னைப் பரிசுத்தனாகச் செய்யுங்கோளென்று வேண்டிக் கொண்டான். அதற்கு அந்த சங்கிலிகிதர்கள் மனம்வராமல் ஆலஸ்யமாயிருந்தார்கள் - அதுகண்டு அந்தசுதர்ம்மனும் நானே குதிக்கிறேனென்று துணிந்து அரையில் தரித்திருக்கிற வஸ்திரத்தை நன்றாக வலிந்து கட்டிக்கொண்டு சர்வஜீவ தயாபரமூர்த்தியாகிய (ஸ்ரீகிருஷ்ணபகவானை) மனதினிடமாக தியானஞ்செய்து ஓய் ஸ்ரீ ஹரீ கிருஷ்ணா - தேவகிநந்தனா - கோவிந்தா - ஹச்சுதா பரந்தாமா - கோபிகாரமணா விருஷிகேசா - கேசவா - ஸ்ரீமன்நாராயணா - அடியேனை ரக்ஷித்து என்னுடைய அஞ்ஞானத்தை நிவர்த்தித்து தேவரீருடைய உபயபாதாரவிந்தங்களைத்தந்து ரக்ஷிக்க வேண்டுமென்று தோத்திரம்பண்ணிக்கொண்டு அந்தக் கொப்பரிகையை மூன்றுதிரம் பிரதக்ஷிணஞ்செய்து கிழக்கு முகமாகநின்று உயர எழும்பியக்கினிஜ்வாலையாய் எரிந்துகொண்டிருக்கிற அந்த எண்ணெய்க் கொப்பரிகையில் தொப்பென்று குதித்தான். அந்தச்சமயத்தில் தேவேந்திராதிதேவர்கள் ஆகாசமார்க்கத்தில்வந்து நின்று சுதர்ம்மனுடைய பக்திக்கு மெச்சிக்கொண்டாடினார்கள். அந்த சுதர்ம்மனும் எண்ணெயிலிழுந்து வாடாமல் வதங்காமல் எவ்வளவும் தாபமில்லாமல் மகாசீதளமாய் ஒருவிசாலமான தடாகத்தில் விகசித்திருக்கிற செந்தாமரைப்புஷ்பம்போலவும் திருப்பாற்கடலிலுத்பமான சந்திரனைப் போலவும்பிரகாசித்து அந்த எண்ணெய்க் கொப்பரிகையில் ஆனந்தத்து

டனே நீந்திவிளையாடிக்கொண்டிருந்தான்,

அதுகண்டு அந்தசங்கிலிகிதர்களிருவரும் ஆச்சரியப்பட்டு இதே து புதுமையாயிருக்கின்றது இதுவரையி லிந்த எண்ணெய்யில் எவர்கள் விழுந்தாலும் அவர்கள் நீருய்ப்போவார்கள். அப்படியிருக்க இது ஆச்சரியகரமா யிருக்கின்றது- அல்லது இந்த எண்ணெய் நன்ருய்க் காயவில்லையோ அதையுந்தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆலோசித்து ஒருதேங்காயைக்கொண்டுவந்து அந்தஎண்ணெய்யிற்போட்டார்கள்- அந்ததேங்காயானதுவிழுந்து உள்ளேபோய்ப் படீலென்றுவெடித்து திக்கென்றெரிந்து ஆகாசத்தி லெழும்பிப்போய் விட்டது, அதுகண்டு அந்த சங்கிலிகிதர்களிருவரும் சந்தோஷசித்தராய்சுதர்ம்மனைப்பார்த்து இவன் ஹரிபக்தி யுள்ளவன் பெரியோர்கள்சேவையுள்ளவன் பிதாவினுடைய சொல்லைக்கடவாதவனுதலாலிவன் இப்படி சுகமாயிருக்கிறுன் மேலும் பூலோகத்தில் சத்தியசந்தனர்களா யிருக்கப்பட்ட நல்லோர்களுக்கு எந்தகாலத்திலுங் கேடுவருகிறதில்லையென்று வேதஞ்சொல்லுகிறபடியினுல் இந்த ராஜகுமாரன் அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகராகிய (ஸ்ரீமன் நாராயணமூர்த்தியினுடைய) பரிபூரணகடாக்ஷத்தினுல் இப்படி நிர்ப்பயமாய் விளையாடிக்கொண்டிருக்கிறுன். அதுவல்லாமல் நம்முடைய கையினுல் இவனைப்பிடித்துத்தள்ளவில்லையே அதுசேதியை அம்சத்துவமஹாராஜன் கேள்விப்பட்டால் நீங்களேன் பிடித்துத் தள்ளவில்லையென்று நம்மிருவரையும் இந்த எண்ணெய்க்கொப்பரிகையில் தள்ளுவிப்பார். ஆகையால், நாம் அதற்கு முன்னுதாகவே விழுந்து அந்ததோஷத்தைப் பரிகரித்துக்கொண்டு (ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய) பாதாரவிந்தங்களிற்சேருகிறதே நிச்சயமென்றுசொல்லி சங்கிலிகிதர்களென்கிற இரண்டு பிராமணரும் அந்த எண்ணெய்க்கொப்பரிகையை மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து (ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய) திருவடிகளைத் தியானித்துக்கொண்டு ஜயாலென்று எழும்பிக்குதித்தார்கள் அங்ஙனங் குதித்த அவர்களும் ஒரு வேதனையுமில்லாமல் தண்ணீரில் நீந்துகிறது போல விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அதுகண்டு ஆகாசவாணியும் மெச்சிக்கொண்டாடினுள், தேவேந்திரன்முதலான தேவர்களும் பாரிசாத புஷ்பங்களைச் சலசலவென்று அந்த மூவர்மேரிலும் வருஷித்தார்கள் தேவதுந்துமியும் திம் திம்மென்று முழங்கியது. தும்புரு நாரதர்கள் வீணையை மீட்டினுர்கள். கந்தர்வர்கள் பாடினுர்கள். யக்ஷஸ்திரீகள் கூத்தாடினுர்கள். இப்படி சகல வைபவத்துடன் அந்த மூன்றுபேரும் பிரகாசித்துக் கொண்டிருப்பதை மந்திரிகள் கண்டு ஆச்சரியப்பட்டு ஓடிவந்து இந்த அதிசயமெல்லாம் அம்சத்துவமஹாராஜனிடத்திற்சொன்னுர்கள், அதுகேட்டு அந்தராஜனும் அதிசயப்பட்டு மகாசந்தோஷித்துடனே மந்திரிகளைப்பார்த்து ஓ மந்திரிகளே; நீங்கள்போய் அந்தமூன்றுபேரையும்

இடத்திற்கு அழைத்துவாருங்கோளென்று உத்தரவுசெய்தார். அது கேட்டு அவர்களும் எண்மெணய்க் கொப்பரிகையி னிடத்திற்குப்போய் அவர்களைப்பார்த்து உங்களை ராஜாவானவர் அழைத்துவரும்படி கட்டளையிட்டாரென்றுசொல்ல, அதற்கு அந்தமூன்றுபேரும் நல்லதென்றுவெளியேவந்து மங்களஸ்நானம்பண்ணி ஜபதபங்களை முடித்துக்கொண்டு திவ்யமாகிய வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டு ரதாரூடர்களாய் சகலசேனைகளும் புடைசூழ்ந்துவரும்படி சகல சம்பிரமத்துடன் அம்சத்துவமஹாராஜன் இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள் அதுகண்டு அம்சத்துவமஹாராஜனும் அந்தசங்கிலிகிதர்களென்கிற பிராமணர்களிருவருக்கும் நமஸ்காரம்பண்ணினுர். அப்பொழுது சுதர்ம்மனும் தேரைவிட்டிழிந்து தன் பிதாவுக்கு மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்துசாஷ்டாங்கதண்டன்சமர்ப்பித்தான். அதுகண்டு அம்சத்துவமஹாராஜனும்தன் குமாரனுகிய சுதர்ம்மனையெடுத்துமார்போடணைத்துக்கொண்டு உச்சியை முகந்து முத்தமிட்டு ஐயா! புத்திரரத்நமே! உன்னுல் எனக்குச் சகலபிரதிஷ்டையும் கீர்த்தியுமுண்டாயிற்று ஆனுலும் நீ நேற்றியதினம் ராபகற் போனதென்னவென்று கேட்க அதற்கு அந்தசுதர்ம்மனும்ராத்திரியிருந்துவந்தசங்கதிகளைச்சொல்ல அதுகேட்டு அந்தராஜனும் மகிழ்ச்சிகொண்டு அந்தக்ஷணமே கங்காதீர்த்த முதலான திவ்ய தீர்த்தங்களை அழைப்பித்து பிர்மமசொரூபமாகவிளங்கப்பட்ட பிராமணர்களால் மந்திரபூர்வகமாய் அந்தசுதர்ம்மனுக்கு அபிஷேகம் பண்ணுவித்து இந்தசண்பகாபுரத்திற்கு நீயே அரசனென்று சகலசம்பிரமத்துடன் மகுடஞ்சூட்டிவைத்தார்.

பிற்பாடு சுதர்ம்மனும் பட்டாபிஷேகனுய் சகலவேடிக்கையுடன் இருந்துக்கொண்டு தன்னைவந்து சேவித்துக்கொள்ளுகிற மகுடமண்டலீகநக்கெல்லாம் ஆதரணைசொல்லி மகாஉச்சாகத்துடனே சேனுபதிகளைப்பார்த்து அர்ச்சுனராஜனுடைய அஸ்வமேதக்குதிரை எவ்விடத்தில்வருகின்றது அதைப்பிடித்துக்கொண்டுவாருங்கோளென்று உத்தரவுசெய்து ஆயிரம்ரதக்காரர்களை யனுப்ப அவர்களும் அப்படியே நல்லதென்றுபோய் அந்தக்குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள் அதுகண்டு சுதர்ம்மனும் அந்தக்குதிரையைப்பார்த்து இனிமேல் என்கையிலகப்பட்ட குதிரையை அந்த அர்ச்சுனன் விடுவித்துக்கொண்டு போய் தர்ம்மராஜாவினுடைய கையினுல்யாகம் பண்ணுவிக்கப்போகிறுனே அது அந்த கிருஷ்ணபகவானுக்கே பிரசித்தமாகத்தெரியவரும் அதுவுமல்லாமல் அர்ச்சுனனுக்காக பாத்தியப்பட்டு தேவேந்திராதி தேவர்களெல்லாரும் ஒருமுகமாகக் கூடிவந்து குறுக்கேவிழுந்து குதிரையைப் பிடிப்பார்களானுலும் அவர்களையும் என்னுடைய குரூரபாணங்களினுல் கண்டதுண்டம பண்ணுகிறேனென்றுசொல்லி பிற்பாடு அந்தக்குதிரையையும் தன்தகப்பனுன அம்சத்துவமஹாராஜனையும் சேனைகளுக்கு மத்தியில் நிறுத்தி தன்னுடை

யசேனைகளையெல்லாம் பத்துவியூகமாகநிறுத்தி தான்முதன்மையாக யுத்தசன்னத்தனாய் கனகமயமான ஒரு திவ்யரதத்தி லேறிக் கொண்டு கோதண்டத்தைக்கையிலே பிடித்துநின்றுமகாஉச்சாகத்துடனேரண பேரிகை வெங்கலப்பேரிகை முதலானதுகளையு முழக்குவித்தான். இவிடத்தில் இப்படி நடந்துகொண்டிருக்க, அவிடத்தில் அந்த அஸ்வமேதக்குதிரையைக் காத்துக்கொண்டு பின்னாகநடந்துவந்த சேவகர்களெல்லாம் அந்த ஆயிரம் ரதக்காரர்களால் அடிபட்டு நொந்து ஓட்டமெடுத்து அர்ச்சுனனிடத்திற்குப்போய்சுவாமீ! நம்முடையகுதிரையானது அம்சத்துவ மஹாராஜனிடத்தில் அகப்பட்டுக் கொண்ட தென்று முறையிட்டார்கள்.

அதுகேட்டு அர்ச்சுனராஜனும்மகாரோஷித்துவேஷித் துடனே அந்தசேவகர்களைப்பார்த்து ஓய்சேவகர்களே! நம்முடையகுதிரையைப்பிடிக்கிறவனும் இருக்கின்றானோ? அல்லதுபயமில்லாமலெவனாகிலுமொருவன்பிடித்துக்கட்டுவானேயாகில் அவனுக்கு யமலோகமே கதியென்பது இந்தப்பூமண்டலத்திலெவர்களுமறியார்களோ! ஆனாலுமாகட்டும்இப்பொழுதே என்னுடையபாணாக்கினியினாலெரித்து அந்தஅம்சத்துவ மஹாராஜனுடையகெர்வத்தையுமடக்கிவைக்கிறேனென்று உக்கிராகாரத்துடன் சொல்லிஅதன்பின்புபெரியகாட்டைப்போலவிஸ்தீரணமாய் நெருங்கியிருக்கின்றசதுரங்கபலசேனைகளுடனும்விஷீவகேதுமுதலான ஆனைகளுடனும்புறப்பட்டு சிங்கநாதங்கள் அட்டகாசங்கள் முழங்கவும் எழாரவங்கள்கெர்ஜிக்கவும் ரதத்தொனிகள் படபடாகாரங்கள்செய்யவும்நடக்கிறஅதிர்ச்சியினால்பூமியதிர்ந்துபத்தல்பத்தலாய்வெடிக்கவும்அஷ்டகுலபர்வதங்களும்அஷ்டதிக்குகளும்நடுநடுங்கவும் அஷ்டகஜங்களும்விரிட்டோடவும்சேனைகளுடைய பாததூளியினால் சமுத்திரமுழுதும் சேறாய்ப்போகவும் மகாஆரவாரத் துடனே அதிவேகமாய் நடந்துசுதர்மனுடைய சேனைகளிருக்குமிடத்திற்குச்சமீபமாக வந்துநின்று அர்ச்சுனராஜனும் தண்டு விட்டிறங்கி எதிராக இருக்கின்ற சேனைகளையும்அந்தசேனைகளுக்கு மத்தியி லிருக்கப்பட்ட அம்சத்துவமஹாராஜனையும் அஸ்வமேதக்குதிரையையும் முதன்மந்திரியா யிருக்கின்றசுதர்மனையும்பார்த்து எவ்வளவும்முன்பின்யோசித்துப்பாராமல் இந்தக்ஷணமே என்னுடையபாணாக் கினியினால்பஸ்பீகரப்படுத்தி விடுகிறேனென்றுசொல்லி தன்னுடைய சேனைகளையும்பத்து வியூகமாகநிறுத்தி தன்னுடையரதத்தையு முன்னே நிறுத்திதன் கையிலிடமாகப்பிடித்திரா நின்ற அக்கினிதேவன் கொடுத்தகாண்டீபத்தைக் குணத்தொனிபண்ணி சாரதியையு மெச்சரித்து ரதத்தையும்வேகமாக நடத்தினான் அதுகண்டு பிரத்தியுமனனுஞ் சிரித்துஅர்ச்சுன ராஜனைப்பார்த்து ஓய்ஐயா! அர்ச்சுனா! தேவரீர் இந்தக் கொஞ்சஞ்சேனைகளை ஒருபொருட்டாகநினைத்து யுத்தத்துக்குப்போகவேண்டுமோ இப்படியாகதேவரீர்எதிர்த்துப் போகின்றதையோசித்

துப்பார்க்குமிடத்தில் மின்மினிப்புழுக்கள்பேரில் சூரியபகவான் எதிர்த்துப்போகின்றது போலிருக்கின்றதே யல்லாமல் வேறல்ல! ஆதலால்தேவரீருக்குத்தெரியும்படி எங்களுடையசவுரியத்தையும்பராக்கிரமத்தையும்வில்வித்தையையும்என்றைக்குக்காண்பிக்கப்போகிறோம்எங்களுடையகீர்த்திப்ரதாபமானது என்றைக்குப்பிரகாசமாகப்போகின்றது. தேவரீர்சற்றேநில்லும்என்னுடையவீரப்பிரதாபத்தைப்பாரும் என்னுடையசஸ்திர அஸ்திரங்களுக்குஇந்தராஜனையும் சேனைகளையும்இரையாக்கிவைக்கிறேனென்று ஆக்ருஷமாகச் சொல்லிக்கொண்டிருக்கையில் வீராதிவீரனானவிஷ்வகேதுவும் அந்த அர்ச்சுனராஜனைப் பார்த்து ஓய்ஐயா! தேவரீர் இந்தச்சேனைகளை ஒருபொருளாய் நினைந்து சண்டைக்குப்போக வேண்டுமோ! சின்னமுளையைப்பிடுங்கிப் போடுகிறதற்குபெரியகோடாலி தேடவேண்டுமோ! ஆகையினால், தேவரீர் போகவேண்டாம் சற்றுநேரம் நில்லும் நான்போய்இந்த ராஜனையும் சேனைகளையும் என்னுடையசஸ்திர அஸ்திரங்களினால் சின்னாபின்னப் பண்ணுகிறேனென்று சொல்லிதன்னுடையரதத்தை அதிகவேகமாகத்தூண்டிதன்கையிலிராநின்ற கோதண்டத்தில் அதிதீக்ஷண்யமான அநேகமாயிரம் பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அந்தபாணங்களானது இரைச்சலிட்டுக்கொண்டுவந்து சுதர்ம்ம னுடையசேனைகள்பேரில்விழுந்து தைக்கிறபோது அந்தசேனைகளுடையதைரியங்களெல்லாம் நிறைந்ததடாகத்திலிருக்கின்ற தாமரைப்புஷ்பங்களின்வாசனை நீங்கினதுபோலப் போய்விட்டது அதுகண்டு விஷ்வகேதுவும் அநேகமாயிரம்பாணங்களை மேன்மேலாகப் பிரயோகஞ்செய்துசுதர்ம்ம னுடைய சேனைகளையெல்லாம் பின்னிட் டோடும்படியாகச்சின்னா பின்னப்படுத்தினான். அதுகண்டுசுதர்ம்மனும் ஓடிப்போகின்ற தன்னுடையசேனைகளையெல்லாம் நிறுத்தி அந்த விஷ்வகேதுவுக்கெதிரே தன்னுடையரதத்தைத் தூண்டிவிஷ்வகேது வைப் பார்த்து ஓய்ராஜகுமாரகா நீ பதறவேண்டாம் அந்தஅர்ச்சுன ராஜன் முன்னதாகவந்தால் அவனைநிறுத்திவிட்டு நீ முதன்மையாக வந்து எதிர்த்தாயே! நீ மகாவீரன்தான்உன்னுடையபலத்தை ஒருநிமிஷத்திலறிகிறேன் ஆனாலும்உன்னுடைய குலங்கோத்திரமறிந்துகொள்ளாமல்உன்னோடு சண்டைபண்ணக்கூடாது ஆதலால், உன்பெயரென்ன; உன்பிதாவின் பெயரென்னஉனக்கு ஆசிரியரெவர் உன்னுடையவம்சமென்ன! அதையெனக்குச்சற்றே தெரியப்படுத்தவேண்டு மென்று சொல்லஅதுகேட்டு விஷ்வகேதுவும்சுதர்ம்மனைப்பார்த்து ஓய்ராஜநந்தனா! என்னுடையகுலங்கோத்திரங் கேட்கவேண்டுமோ ஆனால்சொல்லுகிறேன்கேளும்.

நான்சகலஜீவராசிகளுக்கும் ஆனந்தத்தையுண்டாக்குகிறவராய் ஸ்ரீமன்நாராயணமூர்த்திக்கு நேத்திரமாய் திரிமூர்த்திஸ்வரூபமாய் காமனைக்குச்சிநேகராய் சகலதேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் ஆதா

ரமான தெய்வமாய் விளங்கப்பட்ட சூரியபகவானுடைய பேரன் மகா
ஞானவிநோதியாகிய கர்ன்ன மஹாராஜனுடைய குமாரன் என்பெய
ரோமென்று சகலவீராதிவீரர்களெல்லாஞ்செயித்த விஷ்வகேது
வென்றுசொல்லுவார்கள், அதுவுமல்லாமல் பரமாத்துமனாகிய ஸ்ரீகிரு
ஷ்ணமூர்த்தியேயெனக்கு ஆசிரியருந்தெய்வமுமா யிருக்கின்றவர் நான்
அந்தபகவானுடைய அனுக்கிரகத்தினாலேயே சகலசத்துருக்களையும்
தும்சப்படுத்துகின்றதென்றுசொல்லி பின்னையும் அந்தசுதர்ம்மனைப்
பார்த்து நான்என்னுடையவிர்த்தாந்தமெல்லாம்விவரமாகச் சொன்
னேனல்லவோ! உன்னுடையவிர்த்தாந்தத்தையும் எனக்குத் தெரியும்
படி.சற்றே சொல்லென்றுகேட்க அதுகேட்டுசுதர்ம்மனும் விஷ்வகே
துவைப்பார்த்து ஓய்விஷ்வகேதா என்னுடையகுலமுங் கோத்திரமு
ஞ்சொல்லுகிறேன் கேளும்நான் பரவாசுதேவரானஸ்ரீகிருஷ்ணமூர்த்
திக்குஅடிமையா யிருக்கப்பட்ட அம்சத்துவமஹா ராஜனுடையகு
மாரன்என்பெயர் சுதர்ம்மனென்றுசொல்லுவார்கள். இனிமேல் உன்
னுடனேஎதிர்த்து நின்றுபோராடுகிறதற்கு எனக்குத்தகும் எதோபா
ர்ப்போம் வாவென்றுசொல்ல, அதுகேட்டு விஷ்வகேதுவும் தன்னு
டையகோதண்டத்தி னிடமாகக்கோடை யிடிகளுக்குச் சமானமான
சுருரபாணங்களைத் தொடுத்துசுதர்ம்மனுடைய சேனைகளை யெல்லா
ந்தத்தளிக்கப்பண்ணி அவனுடைய ரதசாரதியையுங் குதிரைகளையும்
நோகச்செய்து கொடியையுமறுத்து வில்லையுங்கண்டித்து அவனையு
ஞ்சல்லடைக்கண்களாகத் துளைத்துசரீரமுழுதும்ரத்தமயமாக்கினான்
அதற்குஅந்த சுதர்ம்மனும்சற்றுநேரம் ஆயாசமாயிருந்து உடனேம
காகோபதீப்தனாய் வேறொருவில்லையெடுத்து அநேகமாயிரம்பாணங்
களைத்தொடுத்து விஷ்வகேதுவின் பேரில் பிரயோகஞ்செய்தான். அ
தனால்விஷ்வகேதுவும் நொந்து ஆக்கிரவியாக்கிரம நிக்குரோதனாய் அ
திசீக்கிரமாகத் தன்னுடையவில்லிலே அதிகதீக்ஷண்யமானகோடானு
கோடி பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்துசுதர்ம்மனுடை
யரதத்தையும் சக்கைசக்கையாகப் பிளந்துசாரதியையும் குதிரைகளை
யுங்கொன்று அவன்கையிலிராநின்ற வில்லையுங்கண்டித்து அவனுடை
யமார்பையும்பத்தலாகக் கிழித்து ரத்தமயமாக்கினான் அதனால்சுதர்ம்
மனும்ஆயாசமடைந்து மகாரோஷித்துடனே வேறொருவில்லை எடுத்
துவளைத்து குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக சூரியகிரண
ம்போல அதிதீக்ஷண்யமான பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்
செய்துவிஷ்வகேதுவினுடையசாரதியையும் அதம்பண்ணிகுதிரைக
ளையுங்கண்டித்து அவனுடையமார்பிலும் ஐந்துபாணங்கள்தைக்கும்
படிசெய்தான். அதனால்விஷ்வகேதுவும் நிர்வகிக்கமாட்டாமல்மெத்த
வும்ஆயாசப்பட்டு தேரின்பேரில்தொப்பென்று விழுந்துமரணத்திற்
குச்சரியான மூர்ச்சையடைந்தான். அதுகண்டுபிரத்தியும்னனுங்கோ
பமிகுந்து நெறநெறவென்று பற்களைக்கடித்துக்கொண்டு மீசைபட

படவென்று துடிக்கும்படி அதிக ரோஷித்துடனே தன்னுடைய ரதத்
தைத்தூண்டி சாரதியையுமெச்சரித்து வில்லைக்குணத்தொனி பண்ணி
அநேகமாயிரம் அளவிறந்தபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்
செய்து சுதர்ம்மனுடைய சேனைகளையெல்லாஞ் சூழ்ந்துகொண்டு தே
ர்களையெல்லாம் குத்துக்கால்வேறு கொடுங்கைவேறாகச் சக்கைசக்கை
யாகப் பேர்த்தெறிந்து ஆனைகளையெல்லாம்-கால்வேறு-வால்வேறு, ம
ஸ்தகம்வேறு-தும்பிக்கைவேறு தந்தங்கள்வேறாக விழும்படி செய்து
குதிரைகளையெல்லாங் கண்டதுண்டம்பண்ணி காலாள்களை யெல்லாம்
கால்வேறு-கைவேறு-தலைவேறு-மாமிசம்வேறு எலும்புவேறாகக் கண்
டித்து எங்கேபார்த்தாலும் பிணமலைகளாகக் குவித்து ரத்தவெள்ளம்
ஆறாகவழிந்தோடும்படி செய்து மகா ஆக்ருஷித்துடனே சிங்கநாதம்
பண்ணினான். அதனால் சுதர்ம்மனுடைய சதுரங்கபலசேனைகளும் நிர்
வாகஞ்செய்யமாட்டாமல் இறந்தவர்கள்போக மற்றவர்களெல்லாரும்
பயங்கொண்டு ஓட்டமெடுக்கத்தொடங்கினார்கள்.

அதுகண்டு சுதர்ம்மனும் மகாரோஷித்து வேஷங்களை யுடையவ
னாய் ஓடிப்போகின்ற தன்னுடைய சேனைகளைப்பார்த்து நீங்களேன் ப
யந்தோடுகின்றீர்கள் இந்த பிரத்தியுமனனுடைய சேவகத்தை ஒருநிமி
ஷத்தில் காண்பிக்கிறேன் நீங்கள் ஓடிப்போகவேண்டாமென்று கைய
மர்த்தி எல்லாரையு நிறுத்தி தன்னுடைய ரதத்தை அதிவேகமாகத் துரத்
தி அந்த பிரத்தியுமனனைப்பார்த்து ஓய்மன்மதா! நீ என் தலைகீழாய்வி
ழுகிறாய் சற்றே பொறுத்திரு உன்னுடைய பாணத்தையும் உன்னுடை
ய வில்லையும் உன்னுடைய சவுரியபராக்கிறமத்தையும் நினைத்துப்பார்
க்குமிடத்தில் சிரிப்புவருகின்றது, உன்னுடையயுத்தத்தையும் பெண்
டுகளேமெச்சவேண்டும் என்முன்னே எதிர்த்து நிர்வகிக்கமாட்டாய் மு
ன்புபரமசிவனுடைய நெற்றிக்கண்ணினால் எரிந்து சாம்பலானபொழுதே
உன்னுடைய கெர்வமெல்லாம் அடங்கிப்போச்சுதே நீ இன்னமும் வெ
ட்கமில்லாமல் ஆண்பிள்ளையாகவந்து என்முன்னே எதிர்த்து நிற்கிறா
யல்லவா! ஆனாலுமென்ன இப்போது ஒருநொடிக்குள்ளே என்னுடைய
பாணாக்கினியினால் உன்னைப்பஸ்மீகரப்படுத்தி விடுகிறேன் உன்னை ஒரு
பொருளாயெண்ணி நான் சட்டைபண்ணுகிறதில்லை! எனென்றால், உ
ன்பிதாவாகிய கிருஷ்ணபகவானை என்பிதாவாகிய அம்சத்துவஜ மஹா
ராஜன் இருதயகமலத்திற்கட்டி வைத்துக் கொண்டிருக்கிறார் அப்படி
க்கொத்த மஹானுபாவனுடைய புத்திரனாகிய என்னுடைய சவுரியப
ராக்கிரமத்தைக் காண்பிக்கிறேன் நீ சற்றுநேரம் நில்லென்று சொல்
லி தன்னுடைய ரதத்தையும் அந்தப்பிரத்தியுமனனுடைய ரதத்திற்கு
நேராகத்தூண்டினான்;

இப்படியாகச் சொன்ன வசனங்களையெல்லாம் பிரத்தியுமனன்
கேட்டு நன்றாயிருக்கின்றதென்று சிரித்து அந்தசுதர்ம்மனைப்பார்த்து
ஓய் சுதர்ம்மா! நீ என்னைச் சவுரியமில்லாதவனென்று சொன்னாயல்ல

வோ! நான் இதுவரையில் ஒருகருப்புவில்லினாலும் ஐந்து புஷ்பபா
ணங்களினாலும் வண்டுகளையே நாணியாகக்கொண்டீரேழுபதினாலு
லோகங்களையுஞ்செயித்தேன் இப்போது வயிரமானவில்லும் எழுகு
பாணமுமுள்ளடானால் எப்படியாகவேண்டும் அதையுஞ் சற்றுநேரத்
தில் நீயே பார்க்கப்போகிறாயென்றுசொல்லி பிரத்தியுமனனானவன்
காலாக்கினி ருத்திரனைப்போ லெரிந்துவிழுந்துதன்னுடைய வில்லினி
டமாக வஜ்ராயுதத்திற்குச்சமானமான அநேகமாயிரம் பாணங்களை
த்தொடுத்துப் பிரயோகஞ்செய்து சுதர்ம்மனுடைய தேரையுந் தும்ச
ப்படுத்தி அவனுடைய தேர்ப்பாகனையுங் குதிரைகளையுங் கொன்று
அவனையும்நோகவெய்தான் அதனால்சுதர்ம்மனானவன் மெத்தவும் இ
ளைப்படைந்து மகாரோஷித்துவேஷித்துடனே மனோதயிரியம்விடா
மல்வேறே ஒருதேரிலேறிக்கொண்டு வில்லைக்குணத்தொனிபண்ணிஅ
ந்தவில்லினிடமாக அநேகமாயிரந்தீக்ஷண்யமான திவ்வியபாணங்களை
த்தொடுத்து பிரத்தியுமனன்பேரிற் பிரயோகஞ்செய்து அவனைநோ
கவெய்தான். அதுகண்டு அந்த பிரத்தியுமனனும் பயப்படாமல்நின்
றுதன்னுடைய வில்லிலேகாளகூட விஷத்துக்குச்சமானமான திவ்வி
யபாணங்களைத் தொடுத்துசுதர்ம்மன்பேரில் பிரயோகஞ்செய்து அவ
னுடையரதசாரதியையுங் கொன்றுகுதிரைகளையுங் கண்டித்துவில்லையு
ம்தும்சப்படுத்தி தேரையுஞ்சக்கைசக்கையாகப் பிளந்து அவனையுஞ்
சல்லடைக்கண்களாகத்துளைத்து சரீரமுழுதும் ரத்தமயமாக்கினான்.
அதுகண்டு சுதர்ம்மனானவன் எவ்வளவும் தயிரியம் விடாமல் ஒருகத்
தியுங் கேடகமும் எடுத்துக்கொண்டு தேரைவிட்டு பூமியிற் குதித்து
வருகையில் பிரத்தியுமனன்கண்டு இரண்டு அர்த்தசந்திர பாணத்தினா
ல் அந்தகத்தியையுங் கேடகத்தையும் பொடிபொடியாக்கினான் அதற்
கும் பின்னிடாமல் மறுபடியும் ஒருகதாயுதத்தை எடுத்துக் கொண்டு
வருகையில் அதைப்பிரத்தியுமனன் பார்த்துத்தானும் ஒருகதா யுதத்
தை எடுத்துக்கொண்டு தேரைவிட்டு பூமியிற்குதித்து அந்த சுதர்ம்ம
னுடனே சிங்கமும் சிங்கமும் எதிர்த்ததுபோல் எதிர்த்துநின்று இர
ண்டுதிரவரும் சமமாய் கதாயுதத்தினால் பராக்கிரமத்துடனே போரா
டினார்கள். அதனால் இரண்டுபேர்கையிலு மிருந்த கதாயுதங்களும்
பொடியாகிவிட்டது, அதுகண்டு பிரத்தியுமனனும் சுதர்ம்மனும் வே
றொரு கத்தியுங்கேடகமும் எடுத்துக்கொண்டு இரண்டு வியாக்கிரமத்
தைப்போல ஆக்கிரகித்துநின்று ஒருவர்க்கொருவர் செலிக்கவேண்டு
மென்கிற ஆசையினால் ஒருவரை ஒருவர் கட்டிப்புரண்டும்- வெட்டியு
ம் - குத்தியும் - தள்ளியும் - முட்டியும் - இடித்தும் - இழுத்தும் - இந்த
விதமாக வெகுநேரம் போராடி பின்பு ஒருவருடைய கத்திவெட்டு
ஒருவர்பேரில் விழுந்து அந்தஇரண்டுபேரும்மூர்ச்சையடைந்தார்கள்.

அதில்அந்தசுதர்ம்மன்மாத்திரம்சற்றுநேரத் தில்மூர்ச்சைதெளி
ந்தெழுந்திருந்து மகாஆக்ருஷித்துடனே வேறொரு தேரிலேறிக்கொ

ண்டு வில்லைக் குணத்தொனிபண்ணி அர்ச்சுனராஜனுடைய சேனைகள்
பேரில் எதிர்த்தான். அதுகண்டு கிருதவர்ம்மனும் எதிர்த்து சுதர்ம்ம
னுடனே சற்றுநேரம்போராடி அவனுடைய பாணக்கினிக்கு நிர்வா
கஞ் செய்யமாட்டாமல் நொந்து தேரைவிட்டுக் குதித்து ஓடிப்போ
னான் அதுகண்டு சுதர்ம்மனுஞ் சிரித்து தன்னுடைய ரதத்தைச் சக்
கிராகாரமாய் சுழற்றிக் கொண்டு வந்து அனுசாலுவனுடனே சிறிது
நேரம்போராடி அவனையும் மூர்ச்சிக்கப்பண்ணுவித்து பின்பு எவ்வ
ர்ஜுசுவனுடனே எதிர்த்து அவனோடும் சற்றுநேரம் யுத்தம் பண்ணி
அவனையுமூர்ச்சையடைவித்து; அப்புறம் நீலத்துவசமகாராஜனுடனே
எதிர்த்து யுத்தஞ்செய்து அவனையும் மூர்ச்சிக்கப் பண்ணுவித்து, அந்
தசுதர்ம்மனெனவன் தாமரைத் தடாகத்திற் புகுந்த ஆனையைப் போல
ஆக்கிரகித்து எங்கேபார்த்தாலும் சுதர்ம்மனேசப் பிரகாசித்து நின்று
ரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையுஞ் சின்னபின்ன
மாய்க் கண்டதுண்டப்படுத்தி எந்த இடத்திலும் பிணமலைகளாகக் கு
வித்து ரத்தவெள்ளமான து ஆறாய்ப்பெருகி யோடும்படிசெய்துபின்
னையும் வில்லைப்பிடித்துவந்து தன்னை எதிர்த்தவர்களையெல்லாம அத
ம்பண்ணி மருந்துக்காகிலும் ஒருவரையும் விடாமற்படிகொன்றுவிட்
டுஎங்கேபார்த்தாலும் யமனுடைய வண்டகசாலையைப்போலவும் வே
டனெனவன் மாம்சக்குப்பையைப் போட்டுவைத்ததுபோலவும் அர்ச்
சுனனுடைய சேனைகளையெல்லாம் மலைக்குமலை ஒதுக்கிசிங்கநாதம்-
சங்கநாதம்- அட்டகாசம்- முதலானவைகளைச்செய்து மகா உச்சாகத்
துடனே தன்னுடைய ரதத்தைத் தூண்டி அர்ச்சுனராஜன்பேரில் எதி
ர்த்து நின்று தன்னுடையவில்லினிடமாக அக்கினிஜ்வாலையை வீசுகின்
ற அநேகமாயிரம் பாணங்களை எடுத்து- இருபத்து- இருநூறு-இரு
ஆயிரம்- இருபதினாயிரம்- இருலக்ஷம்- இருபத்துலக்ஷமென்று கண
க்கு வழக்கில்லாமற் றொடுத்துப் பிரயோகஞ்செய்து இரு நூறுபா
ணத்தினால் அர்ச்சுனராஜனுடைய மார்பைப் பத்தலாகக் கிழித்து நூ
றுபாணத்தினால் அனுமக்கொடியையும் அறுத்து நூற்றைம்பது பா
ணத்தினால் குதிரைகளையும் ரத்தமயமாக்கி நூறுபாணத்தினால் சாரதி
யையும் நோகப் பண்ணி அர்ச்சுனனுடைய ரதத்தையும் மிஞ்சிவசை
வொட்டாமல் சிக்குப்படுத்தி கியாவென்று சிங்கநாதம்பண்ணினான் அ
துகண்டு அர்ச்சுனராஜனும் மகாகோபதீப்தனாய் இரண்டு கண்களிலு
ம்குபீல் குபீலென்று நெருப்புப் பொறிகள் பறக்கவும் பல்லுகளை
நெறநெறவென்று கடித்துக்கொண்டு மீசை படபட வென்று துடிக்க
வும் சரீரமுழுதும் வெயர்க்கவும் பிரளயகால ருத்திரனைப்போல நின்
று அட்டகாசம்பண்ணி அந்தசுதர்ம்மனை உறுமிப்பார்த்து தன் கையிற்
பிடித்திரா நின்ற காண்டீபமென்கிற வில்லை வளைத்து குணத்தொனிப
ண்ணிதனக்கு அஷ்டதிக்குப் பாலகர்கள் கொடுத்திருக்கின்ற அதிதீ
க்ஷண்யமான அஸ்திரங்களை அந்த வில்லினிடமாகச் சந்தித்துப் பிர

யோகஞ்செய்தான். அந்தஅஸ்திரங்களானது கிருஷ்ணசர்ப்பம்போல்
இரைச்சலிட்டுப்புகைகளுடனும்எரிகளுடனும்ஒன்றோடொன்று உரா
ய்ந்துக்கொண்டு வந்துசுதர்ம்மனுடைய கைவில்லைக் கண்டித்துரதசா
ரதியையுங் குதிரைகளையுஞ் சின்னாபின்னப்படுத்தி குடையையும்கொ
டிச்சீலைகளையுந் துண்டித்து அவனுடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்
கண்களாகத் துளைத்து அவனையும் பிரம்மிக்கும்படிசெய்துவிட்டது
அதனால் அந்த சுதர்ம்மனென்பவன் மிகவும் நொந்து மகா ஆயாசத்துட
னே சற்றுநேரம் கொடிஸ்தம்பத்தின்பேரில் மூர்ச்சையாய் விழுந்து
கிடந்து திரும்பவும் ஆயாசந்தீர்ந்து எழுந்திருந்து உக்கிர காரனாய்
வேறேஒருரதத்தி லேறிக்கொண்டு திகுதிகுவென்று எரிகிற அக்கினிக்
கொச்சமானமாய் தங்கக்கட்டுகளுடனே கூடியிருக்கின்ற ஒருவில்லையெ
டுத்து அந்தவில்லைக் குணத்தொனிபண்ணி அந்த வில்லினிடமாக அதி
கோரமானபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்து அர்ச்சுன
ராஜனை நோகவெய்தான். அதனால் அந்தஅர்ச்சுனராஜன் மெத்தவும்
நொந்து தயிரியத்தைவிடாமல் காண்டீபத்தில்ஒரு அக்கினியாஸ்திர
த்தைத் தொடுத்து சுதர்ம்மன்பேரில் பிரயோகஞ்செய்தான். அதுகண்
டுசுதர்ம்மனும் ஒரு வருணாஸ்திரத்தை எடுத்து அபிமந்திரித்து தன்
னுடைய வில்லினிடமாகத் தொடுத்து அர்ச்சுன ராஜன் பேரில் பிர
யோகஞ் செய்தான். அந்த அஸ்திரமானது மின்னிக் கொண்டு வந்து
சப்தமேகங்களுமொன்றாகக்கூடி ஏககாலத்தில் வருஷித்ததுபோல்ஜ
லத்தைவருஷித்து அந்த அக்கினியாஸ்திரத் தினுடைய ஜ்வாலையெல்
லாந்தணித்துவிட்டது. அதுகண்டு அர்ச்சுனராஜன் திரும்பவும்அநே
கமாயிரந் திவ்வியபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ் செய்தான்.
அதுகண்டு சுதர்ம்மனும் அந்தபாணங்களில் ஒன்றாகிலும் தன்னுடை
யதேரினிடத்திற்குவர வொட்டாமல் கண்டித்துவிட்டுசண்டப்பிரசண்
டனாய் தன்னுடைய வில்லைவளைத்து அநேக அஸ்திரங்களைச் சந்தித்து
தேவர்கள் முதலானவர்களுக்குந் தெரியவொட்டாமல் மணலைவாரி யி
றைத்ததுபோல் அர்ச்சுனராஜன் பேரில் பிரயோகஞ் செய்து அர்ச்சு
னராஜனைக் காண்டீபத்தைப் பிடிக்கவொட்டாமலும் அஸ்திரங்களையெ
டுக்கவொட்டாமலும் கால்கைகளை அசைக்கவொட்டாமலும் செய்தா
ன் அதனால் அர்ச்சுனராஜன் மெத்தவுந்தாபமடைந்து சுதர்ம்மனுடை
யஆண்மைக்கு மெச்சி தலையை அசைத்து சுதர்ம்மனைப் பார்த்து ஓய்
ராஜகுமாரகா! உன்னை நான் மெச்சினேன் பளா பளா உன்பாணத்தி
னுடைய சுறுக்கே சுறுக்கு நான் பாரதயுத்தத்தில்-வீஷ்மாசாரியார்-
துரோணாசாரியார்- கர்ணன்- சல்லியன் முதலான வீராதிவீரர்களுட
னும் போராடினேன் அவர்கள் பிரயோகித்த பாணங்களினுடைய சு
றுக்கும் இதற்கீடல்ல! அதுவுமல்லாமல் ஒருகாட்டுப்பன்றி நிமித்தமா
ய்பரமேஸ்வரன் வேடனாகவந்து என்னுடனேபோராடி அவர்பிரயோ
கஞ்செய்தபாணங்களினுடைய சுறுக்கும் இதற்கீடல்ல! ஆதலால் உன்

னையேமெச்சினேன் நீ கற்றிருக்கிற வில்வித்தையே வில்வித்தை உன்
னுடைய சவுரியபராக்கிரமம் இந்தப் பூலோகத்தில் ஒருவருக் காகிலு
முண்டோவென்று மெச்சிச்சொன்னான். அதுகேட்டு சுதர்ம்மனும்அ
ர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! நீயோ என்னை மெச்சுகிறவன் இனி
மேல் உன்னைச்சாக அடிக்கிறபோது உன்னைக்காப்பாற்றவேண்டுமெ
ன்று ஸ்ரீகிருஷ்ணபகவான்வருவார்- அந்தபகவானல்லவோ என்னு
டைய ஆண்மையைக்கண்டு மெச்சவேண்டும் அப்போதல்லவோ என
க்குச்சந்தோஷமுண்டாகும். ஆகையினால், அந்தபகவானையும் இன்ன
ஞ்சற்றுநேரத்தில் வரப்பண்ணுகிறேன் நீயும் அனேகயுத்தத்தில் கைக
ண்டிருக்கிறாயல்லவா! அந்த வில்வித்தையையெல்லாம் என்முன்னே
காண்பியென்று சொல்லி தன்னுடைய வில்லிலே ஒருசுழல்பாண மெ
ன்கிற திவ்யாஸ்திரத்தை எடுத்துதொடுத்துப் பிரயோகம் பண்ணினா
ன். அந்த அஸ்திரமானது திவ்வுதிவ்வுமென்றுசுழன்றுக்கொண்டுஓடி
வந்து அர்ச்சுனனுடையரதத்தின்பேரில் விழுந்தது, அந்த அர்ச்சுன
னுடைய ரதசாரதியும் தலையுடைந்து செத்தான் அதுவல்லாமலும்அந்
த அஸ்திரமகிமையினால் அர்ச்சுனனுடைய ரதமானது கறகறவென்
கிற ஓசையுடனே குலாலனுடைய சக்கரஞ்சுழல்வதுபோல குதிரைக
ளோடுஞ்சுழலத்தலைப்பட்டது, அந்தசுழலினால் அர்ச்சுனன் மகாபயங்
கரமடைந்து தன் கையிலிரா நின்ற காண்டீபத்தைத்தேரின்பேரில்வை
த்துவிட்டு கொடிஸ்தம்பத்தைக்கெட்டியாகக் கட்டிப்பிடித்துக் கொ
ண்டு ரதத்தை நிறுத்துகிறதற்குச் சக்தியில்லாமல் பிரம்மித்து நின்று
தன்னுடைய இஷ்டதெய்வமான (ஸ்ரீகிருஷ்ணபகவானை) இருதயகம
லத்தில்நினைத்து ஓய் துவாரகாபுரிவாசா- புண்ணியபுருஷா- வசுதேவ
தனயா- தேவகிநந்தனா- மாதவா- வைகுந்தவாசா- ஜநார்த்தனா• அப்
பிரமேயா- விருஷ்கேசா- கோபிகாரமணா· ருக்மிணிமனோகரா- புரு
ஷோத்தமா- ஹரி ஹரீ - கோவிந்தா-முகுந்தா- கேசவா- ஸ்ரீகிருஷ்
ணா-வாசுதேவா-வாரும் வாரும் நான் அனாதையாய் சகலசேனைகளையு
ம் பறிகொடுத்துவிட்டு தனியே ஒண்டியாய் அகப்பட்டு நிற்கின்றேன்
என்னுடைய சரீரத்தில் பிராணன் நிற்கவில்லை, ஓய் கோபாலமூர்த்தீ;
நான்தேவரீரைவிட்டு வந்த அன்றுமுதல் இதுபரியந்தமும் எந்த இட
த்திலும் ஒரு அபஜயங்கண்டதில்லை தேவரீரில்லாத பிழைப்பும் ஒருபி
ழைப்போ! ஓய்சுவாமீ! நீர்சீக்கிரமாகவந்து என்னைக்காப்பாற்றிரக்ஷி
யும் ரக்ஷியுமென்று முறையிடுகிறபோது, சகலபுவன கர்த்தாவாகியும்
சர்வஜீவதயாபரனாகியும்- சர்வாந்திரியாமியாகியும்- சர்வபரிபூரணரா
கியும்- சர்வவியாபகராகியும்- விளங்கப்பட்ட (ஸ்ரீமன்நாராயணமூர்
த்தியே) பாரதயுத்தநிமித்தம் ஒருவடிவம்போல எழுந்தருளி ஸ்ரீகிரு
ஷ்ணதேவரென்று பெயர்வைத்துக்கொண்டு அஸ்தினாபுரத்தில் தர்ம
மபுத்திரரோடு பேசிக்கொண்டிருக்கிற அந்தகிருஷ்ணபகவானுடைய
செவியினிடமாக அர்ச்சுனராஜனுடைய முறையானது கேட்டவளவி

ல் அந்தபகவானுந் திடீக்கிட்டெழுந்திருந்து தர்ம்மபுத்திரருக்குந்தெரியவொட்டாமல் அவிடத்தி லிருக்கிறதுபோலவே மாயா விநோதமாய்ப்புறப்பட்டு மனோவேகத்திலும் அதிவேகமாக நடந்து காதுகளில் அணிந்திருக்கின்ற (நவரத்நகுண்டலங்கள்) தளதளவென்று நாலுதிக்குகளிலும் பிரகாசிக்கவும், தலைமுடியில் செருகிக் கொண்டிருக்கிறமயிற்பீலிகள் அசைந்தாடவும், கழுத்திலிடமாகத் தரித்திருக்கின்ற முத்துமாலைகள் நவரத்நமாலைகள் ஒன்றோடொன்று சிக்குப்படவும்புஜங்களில் தரித்திருக்கின்ற வாகுவலயங்கள் தகத்தகாயமாய்ப் பிரகாசிக்கவும், புஜத்தின்பேரில்போட்டுக்கொண்டிருக்கின்றபீதாம்பரத்தொங்கலானது நழுவி நிலத்தில்விழவும், முகாரவிந்தத்தில் முத்துகளைப்போல் குறுவேர்வுபிரகாசிக்கவும், அரையிலும்திருவடிகளிலும் அணிந்திருக்கின்ற- மணிகள்- தண்டைகள்- சதங்கைகள்- கணீல் கணீலென்றுசப்திக்கவும், வருகின்றவேகத்தினால் பூமிகிடுகிடு வென்று நடுங்கவும் வயிற்றிலடக்கி யிருக்கின்ற சமஸ்த அண்ட கோடிகளுங் குலுங்கவும், இப்படிஅனந்த கோலாகலமாகவந்து சேர்ந்து சக்கரம்போற் சுழலுகின்ற அர்ச்சுனராஜனுடைய ரதத்தின்பேரில் நின்றுகொண்டு அர்ச்சுனராஜனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீ பயப்படாதே இதோநான் வந்திருக்கிறேன் நீதேவர்கள்ராக்ஷதர்கள் முதலானவர்களுக்கும் பயப்படாதவீராதிவீரனுச்சுதே; அப்படிப்பட்ட சுத்தவீரனாகிய நீ இன்றையதினம் இந்தசுதர்ம்மனால் சிக்குப்பட்டு பிர்ம்மித்துநிற்கின்றாயோ நல்லது நீ பயப்படவேண்டாமென்று அபயாஸ்தங்கொடுத்து அந்தபகவானானவர் அர்ச்சுனனுடைய ரதத்தைச்! சுழலவொட்டாமல் மிதித்து பூமியின்பேரில்நிறுத்தி அர்ச்சுனராஜனிடத்திற்கு வந்து அவனைமார்போடுதழுவிக்கொண்டு அவனுடைய சரீரமுழுதுந் தமது திவ்வியாஸ்தங்களினாற்றுடைத்து ஓய் அர்ச்சுனா! உனக்குஇத்தனை ஆபத்து வந்துநேரிட்டதோ உன்னுடைய சேனைகளெல்லாம் மடிந்து போய் விட்டதோவென்று சொல்ல.

அதுகேட்டு அர்ச்சுனராஜனும் ஓய்ஐயா! கிருஷ்ணா! தேவரீரிருந்தால்எனக்கு ஒருஆபத்தும்வராது தேவரீரில்லாமற்போனபடியினால்இப்படிப்பட்ட ஆபத்துநேரிட்டது, இனிமேல்என்னுடைய சவுரியபராக்கிரமத்தைப்பாரும் அந்தசுதர்ம்மனையும் அவன் சேனைகளையும் ஒருநொடிக்குள்ளே கண்டதுண்டம் பண்ணிவிடுகிறேனென்று சொல்லிதன்னுடைய காண்டீபத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ரதத்தின்பேரில் உச்சாகத்துடனே நின்றான். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவானுந்தேரைவிட்டிழிந்து குதிரைகளிடத்திற்குவந்து அந்தக்குதிரை களின்பேரில் தைத்திருக்கின்ற அஸ்திரங்களையெல்லாம் பிடுங்கியெறிந்துசரீரமுழுதுந் தடவிக்கொடுத்துஅதுகளின் ஆயாசத்தைத் தீர்த்து எப்போதும்போல் குதிரைகளைரதத்திற்பூட்டி தம்முடைய வலதுகையிற்சவுக்கை பிடித்துக்கொண்டுரதத்தின்பேரிலேறிசாரத்தியஞ்செய்

யும்படி உள்க்கார்ந்தருளினார். அதுகண்டு ஆகாசமார்க்கத்தில் நிற்கின்
றமுப்பத்துமுக்கோடி தேவர்களும் அநேகமாயிரந் தோத்திரஞ்செ
ய்து ஓய்புராணபுருஷா! கபடநாடகசூஸ்த்ராவதாரீ! தேவரீர் இந்த அ
ர்ச்சுனன்பேரில் வைத்தகிருபைஎங்கள்பேரில் வைக்கலாகாதோ! அது
வுமல்லாமல் தேவரீர் ஒருபுத்திரனைப்பெற்று சாம்பமூர்த்திக்குச் சா
ரத்தியஞ்செய்யும்படி அமர்த்திவைத்து நீர் இந்த அர்ச்சுனனுக்குச்சா
ரதியாய் அமர்ந்தீரோவென்று அநேகவிதமாகக்கொண்டாடி பாரிசா
தபுஷ்பங்களை அந்தபகவானுடைய சிரசின்பேரில்சலசலவென்று வரு
ஷித்தார்கள், அப்பொழுது அர்ச்சுனனும் தன்னுடைய காண்டீபத்தை
க்குணத்தொனிபண்ணி தேவதத்தமென்கின்ற சங்கத்தையும் வாயினி
டமாகவைத்து பம் பம்மென்றுபூரித்தான் அதின்மேல் அந்தரதத்திற்சார
தியாய்எழுந்தருளியிருக்கின்றஸ்ரீகிருஷ்ண பகவானும் தம்முடைய
பாஞ்சஜன்னியமென்னும் சங்கத்தைத் தாமரையையொத்தவாயினி
டமாகவைத்து அண்டகடாகங்களுமதிரும்படி முழக்கியருளினார் துவ
சமாகிவிளங்குகின்ற அனுமாரும்ஆகாவென்று அஷ்டகாசம் ப
ண்ணினார் ரதத்திற்பூட்டியிருக்கின்ற குதிரைகளும் அனுமானித்தது
கள். இந்தப்படியாக அர்ச்சுனராஜன் மகாசந்தோஷ உச்சாகத் துட
னேசுதர்ம்மன் பேரில்எதிர்த்துநிற்க.

அதுகண்டு சுதர்ம்மனுஞ்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்துதலையை
அசைத்து ஓய் அர்ச்சுனா! நீ பதறவேண்டாம் நீ மகாவீராதிவீரன்முப்
பத்துமுக்கோடி தேவர்களையும்தேவேந்திரனையுங் கெலித்தவன் கால
கேயநிவாதகவசாளென்கிற ஒன்பதுகோடிராக்ஷதவீரர்களையும் கொ
ன்றுஜெயம்பெற்றவன் (ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனோடும்)போ
ராடிஅவரைஜெயித்து அவரிடத்தில் பாசுபதாஸ்திரம்பெற்றவன் பீஷ்
மாசாரியார் துரோணாசாரியார்முதலானவர்களோடும்போராடிஜெய
ம்பண்ணினவன். சித்திரசேனனென்கிற கந்தர்வனுடனே போராடிக்
கெலித்தவன் இப்படிஅநேகயுத்தத்தில் கைகண்டசூரனீயல்லவோ! அ
துவல்லாமலும் உன்னிடத்தில் அக்கினிதேவன் கொடுத்த அக்ஷயதூணீ
ரமிருக்கின்றது, அந்தவலிமையினால் என்பேரில்அநேகபாணங்களைப்
பிரயோகஞ்செய்தாய் அதுகளையெல்லாம் நான்கண்டித்துவிட்டேன்
ஆகலால், அதனால்ஒருபிரயோசனமுமில்லை இனிமேல்இத்தனைபாண
த்தினால் என்சிரசைக் கண்டிக்கிறேனென்று பிரதிஜ்ஞைபண்ணென்று
சொல்லிவிட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து 'ஓய்புண்டரீகாக்ஷா ம
கானுபாவா! தேவரீர் இந்தஅர்ச்சுனனுக்குச்சகாயமாய் வந்ததனால்இவ
ன்என்னை யென்னசெய்யமாட்டுவான், அதுவல்லாமல் தேவரீர் இந்த அ
ர்ச்சுனனுடைய ரதத்தின்பேரிலிருக்கிறீர் என்னுடையஇருதய கமல
த்திலுமிருக்கிறீர் ஆனபடியினால் ஓய்சுவாமீ! பக்தவத்சலா! பரமதயா
ளா! நான் இந்தஅர்ச்சுனனை ஜெயிக்கமாட்டேனோ சொல்லுமையா
வென்றுநமஸ்காரம் பண்ணினான். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானு

ம்சுதர்ம்மனைப்பார்த்து ஓய்சுதர்ம்மா! நீயே ஜெயிக்கப்போகிறாய்பய ப்படவேண்டாமென்றுசொன்னார் அந்தவார்த்தையை அர்ச்சுனராஜ ன்கேட்டுமெத்தவும் கிலேசப்பட்டு ஜயாகிருஷ்ணா! தேவரீர் என்னு டையபக்ஷமாயிருந்துஎன்பகையாளியைப்பார்த்து நீயே ஜெயிக்கப் போகிறாயென்று எப்படிசொல்லுகிறீர் அப்போதுஎனக்கு அபஜெ யமோஇப்படிப்பட்ட நடக்கைகளுக்கோ நானும்மைஅழைப் பித்த துசொல்லுமையா வென்றுகேட்கஅதற்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் சிரித் து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்கிரீட்டி! நானப்படிசொன்னேனென்று நீ சந்தேகப்படவேண்டாம் நீயுஞ்செயிக்கப்போகிறாய் நானிருக்கும் பொழுது உனக்கு ஒருகுறைவுவருமோ? கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் ஒருதேரின்மேலிருந்தால் அவர்களுக்குமுன்னே எதிர்த்துநின்றவ ர்களும் நிர்வகிக்கமாட்டாரென்பது பிர்ம்மாதிதேவர்களுக்குந் தெரி யாதோ! அதை நீயறியமாட்டாயோ! ஆதலால்உனக்கு அபஜெயம்வ ருகிறதில்லை யென்றுசொல்ல,அந்தவசனங்களை அர்ச்சுனராஜன்கேட்டு மகாசந்தோஷித்தனாய் உச்சாகத்துடனே நின்று அந்தசுதர்ம்மனைப் பார்த்து அர்ச்சுனராஜன்சொல்லுகிறான்.

ஓய்ராஜகுமாரகா! என்னுடையவார்த்தையைக்கேளும் அஃதெ ன்னவென்றால் பிர்ம்மாதிதேவர்கள் உனக்குச்சகாயமாகவந்த பொழு திலும் அவர்களையெல்லாம் அதப்பண்ணி உன்னுடையசிரசையும் மூ னறுபாணத்தினால் ஒருக்ஷணப்பொழுதில் கண்டித்துவிடுகிறேன் அப் படிசெய்யாவிட்டால் நான்இதுவரையில் செய்தபுண்ணியங்களனைத் தும்அசுராதிகளுடைய பங்காகிஎன்னுடைய கீர்த்திகளெல்லாம் பூமி யின்பங்காகி நானும்என்சந்ததியிலுள்ளவர்களும் கங்காதீரத்தில் கா ராம்பசுவைக்கொன்றவர்கள் போகிறகதியிலும்போகக்கடவோ மெ ன்றுமகத்தாகிய சபதம்பண்ணினான். அதுகேட்டுசுதர்ம்மனுஞ் சிரித் து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! நீ பிரயோகஞ்செய்கிறமூன் றுபாணத்தையும் நான்கண்டித்துவிடுகிறேன். அப்படிகண்டிக்காவி ட்டால்நான்செய்த புண்ணியங்களெல்லாம் அசுராதிகளுடைய பங்கா கி நானும் என்னுடையசந்ததியிலுண்டான பிதிர்க்களும் கொடிதாகி யநரகத்தில் விழக்கடவோமென்று சபதம்பண்ணினான் - அப்பொழு து ஆகாசமார்க்கத்தில்-இயக்கர்!கின்னரர்-கிம்புருடர்.கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர், ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர்கள்,முதலான மு ப்பத்துமுக்கோடிதேவர்களும் தேவேந்திரனும்வந்திருந்துஅர்ச்சுன ராஜன்செய்தபிரதிக்ஞையையும்சுதர்ம்மன் செய்த பிரதிக்ஞையையும் கேட்டுஆச்சரியப்பட்டுஒருவர்ஒருவரைப்பார்த்துஓய்!தேவர்களே! இந் த அர்ச்சுனராஜனும் சுதர்ம்மனுஞ்செய்துக்கொண்டசபதவார்த்தைக ளைக்கேட்டீர்களோ! அதுவுமல்லாமல் அர்ச்சுனராஜனுடைய ரதத்தி லும் ஸ்ரீகிருஷ்ணதேவர் எழுந்தருளியிருக்கிறார். இந்தசுதர்ம்மனுடை யமனோரதத்திலும் அந்தபகவானே எழுந்தருளியிருக்கின்றார். அத

லால், இவர்களிருவரும் பத்தர்களானபடியினால் இவர்களில் எவனைக் கெலிப்பிப்பாரோ அதுதெரியவில்லை, எல்லாஞ் சற்றுநேரத்தில்தெரியவருகிறதென்றுபேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது சுசர்மனும் கோபதீப்தனாய் ஆக்கிரகித்து தன்னுடையவில்லினிடமாகக் காளகூடவிஷத்திற்குச்சமானமான ஆயிரந் திவ்வியபாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அந்தபாணங்களானது அதிதீக்ஷண்யமாய் ஒன்றோடொன்று உராய்ந்துக்கொண்டுவந்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய இரண்டுபுஜத்திலும் இரண்டு பாணந்தைத்துப் பிற்புறத்தில் உருவிப்போய்விட்டது, மற்ற பாணங்களெல்லாம் அர்ச்சுனராஜனுடைய ரதத்தைச்சூழ்ந்து கொண்டு அந்த ரதத்தைநாலாறுவிரற்கடைப்பிரமாணத்தில் கொண்டுபோய்விட்டுவிட்டது, அதுகண்டு அர்ச்சுனராஜனும் மஹா ஆக்ருஷித்துடனே ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! கிருஷ்ணமூர்த்தி! இப்பொழுது நம்முடையரதத்தைப்பின்னுக்குப் போகவொட்டாமல் முன்னுக்குத் தள்ளிசெவ்வையாக நிறுத்துமென்றுசொன்னான். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனராஜனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! பிரதிக்கினைபண்ணுகிறதற்கு பேச்சுகள்பேசுகிறதற்கும் துராத்தனஞ் செய்கிறதற்கும் காரியங்கொண்டுபோகிறதற்கும் நீயே எஜமானாயிருக்கிறாய் நடந்துசாகிறதற்கும் தெப்பல்படுகிறதற்கும் காரியங்களைச்செவ்வை படுத்துகிறதற்கும் என்னைஏற்படுத்தியிருக்கிறாய் பளா! பளா! இதுநன்றாயிருக்கிறதென்றுமனவருத்தங்கொண்டவர்போலச்சொல்லியருளினார், அந்தவார்த்தைகளைக்கேட்டு அர்ச்சுனராஜனும் சிரித்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! எங்கள்குலதெய்வமே தேவரீருடைய திருமேனியில் பாணம்பட்டதோ அதனால் தேவரீருடையசரீரம் வலிக்கின்றதோ நல்லது ஆகட்டும் பக்தஜனங்களை ரக்ஷிக்கிறது இன்னங் கொஞ்சத்திலிருக்கின்றதோ அல்லாமலும் தங்களுக்கு எத்தனை ஆபத்துகள்வந்து சம்பவித்தாலும் அதைப் பாராமல் தம்மைநம்பினபேர்களுக்கு ஒருஆபத்தும்வரவொட்டாமல்பாதுகாத்து ரக்ஷித்தருளுவது பெரியோர்களுடைய கடமையாகுமென்று மெத்தவும்இரக்கமாகச்சொன்னான்.

அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் புன்சிரிப்பாகச்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! நீ இப்பொழுதுசற்றாகிலும்யோசித்துப்பாராமல் பதட்டமாகப் பிரதிக்கினை செய்துவிட்டாயே அப்படிமுடிக்காவிட்டால் உங்கள்சந்ததியிலுண்டான பிதிர்க்களெல்லாரும் அதோகதியில் விழுவார்களே! அதற்குஎன்ன செய்யலாம் அல்லாமலும் அந்தசுசர்மனுடைய சிரசைமூன்றுபாணத்தினால் கண்டித்துவிடுகிறேனென்று சபதம்பண்ணிக்கொண்டாயே அப்படிகண்டிக்கமாட்டுவாயோ! அல்லது அவனைக்கண்ணெடுத்துப் பார்க்கமாட்டுவாயோ அவன்மஹா வீராதிவீரன் சத்தியசந்தனன் தர்மசொரூபன் ஏது

பத்தினிவிரதனுச்சுதேஅப்படிப்பட்ட மஹா புருஷனை நீ எப்படி கொல்லமாட்டுவாய் அதுவுமல்லாமல்ஸ்ரீகயிலாசபதியாகிய (பரமசிவனவர்) தம்முடையபத்தனென்று நினைத்துஉனக்குச்சகாயமாய் சகலபூதகணங்களுடனே எழுந்தருளிவந்தாலும் அல்லது தேவேந்திரனவன் தன்னுடைய புத்திரனென்று நினைத்துஉனக்குச் சகாயமாய் சகலதேவகணங்களுடனே புறப்பட்டுவந்தாலும் அல்லதுநம்முடைய மச்சினனுச்சுதேயென்று உனக்குச்சகாயமாய் என்னுடைய பலத்தையெல்லாங்கொடுத்தாலும் நீ அந்தசுதர்மனுடைய சிரசைக் கண்டிக்கமாட்டாய் இப்படியிருக்க, நீயும் யோசனைபண்ணாமல் என்னோடுஞ் சொல்லாமல் விருதாவாகப்பதறி பிரதிக்கினைசெய்துக் கொண்டாயென்றுசொல்லியருளினார். அதுகேட்டு அர்ச்சுனராஜனும்சிந்தாக்கிராந்தனாய்விசாரப்பட்டு தன்கையிலிருந்த காண்டீபத்தைத் தேரின்பேரில் போட்டுவிட்டு இரண்டுகைகளையும் அஞ்சலியாகக் கூப்பிநின்று அந்த தேவனைப்பார்த்து ஓய்கிருஷ்ணா-துவாரகாபுரிவாசா-தேவகிநந்தனா வசுதேவகுமாரகா-வாசுதேவா - கம்ஸசம்ஹாரா - கயிலாசபதி மித்திர-கௌரீசகோதரா - ஹரீமுகுந்தா, கோபாலா, கோவிந்தா, ருக்மிணிமனோகரா-வனமாலிகாபரணா; சங்குசக்கிராயுதா-தாமோதரா - கேசவா என்னை ரக்ஷியும்ரக்ஷியும் நான் அறியாமல்சபதம் பண்ணிவிட்டேனாதலால் அந்தசபதத்தைமுடித்து என்னைரக்ஷிக்கவேண்டும் பக்தவத்சலாவென்று தோத்திரஞ்செய்து அந்தகிருஷ்ணபகவானுடைய திருவடிக்கமலங்களில் அடியற்றமரம்போல் விழுந்து எனக்கு அபயாஸ்தங்கொடுத்தருளவேண்டும் சுவாமீயென்று வெகுநேரம் வேண்டிக்கொண்டான். அதுகண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் திருவுளமிரங்கிச்சந்தோஷகரமாய் அந்தஅர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீயேஜெயிக்கமாட்டுவாய் நீபயப்படவேண்டாம் நான்வந்துகுறுக்கே விழுந்தமட்டும் அந்தகாரியம் நிறைவேறாமற்போனால் உலகத்தில்எனக்கு அபகீர்த்தியல்லவோ ஆதலால்நானே முன்னின்று உன்னுடைய பிரதிக்கினையைமுடித்து வைக்கிறேன் எழுந்திருந்துகாண்டீபத்தை யெடுத்து பாணத்தைப் பிரயோகம் பண்ணென்று உறுதிவார்த்தையாகத் திருவாய்மலர்ந்தருளினார்.

அதுகேட்டு அர்ச்சுனராஜனும் சந்தோஷகரமாய் எழுந்துநின்றுஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய்சுவாமீ!ஜநார்த்தனா! இப்பொழுது அடியேன்செய்த பிரதிக்கினைதேவரீர் செய்தபிரதிக்கினை யல்லவாமேலும் அடியேன்பெறுகின்ற ஜெயாபஜெயங்கள் தேவரீருடைய ஜெயாபஜெயங்களே யல்லாமல்வேறல்லவே யென்றுபிரியவசனமாகச் சொல்லி அந்தபகவானுடைய அனுமதியின்பேரில்மஹாஉச்சாகத்துடனேமுகாரவிந்தமானது சந்திரவிம்பம்போலபிரகாசிக்கத்தக்கதாகநின்றுதன்னுடைய தூணீரத்திலிருக்கிற அதிதீக்ஷண்யமான ஒரு திவ்வியபாணத்தையெடுத்து அக்கினிதேவன் கொடுத்தருளிய காண்டீப

த்திலிடமாகவைத்து அபிமந்திரித்து சுதர்ம்மனுடைய கழுத்துக்கு நேராகக்குறிவைத்துப்பிடித்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா கிருஷ்ணமூர்த்தி! இதோ பாணந் தொடுக்கிறேன் பாருமென்று சொல்ல, அதுகண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப் பார்த்து ஓய் அர்ச்சுனா! இந்தபாணம் வெட்டுண்டுபோம் இதற்குப்பலன்போதாது நான் இதற்குப் பலனுண்டாகச்செய்கிறேன் அஃதெப்படியென்றால்.

முன்புதேவேந்திரனானவன் கோபாலர்கள்பேரில் கோபித்துக் கொண்டு ஏழுநாள்பரியந்தம் இரவும் பகலும் கல்மழையைப் பெய்வித்தான். அப்பொழுது அந்தகோபாலர்களெல்லாரும் அதற்குச்சகிக்கமாட்டாமல் - பசுக்கள் - கன்றுகள் - பிள்ளைகளுடனும் தத்தளித்து மகா பிரயாசமடைந்து என்னைக்குறித்து வேண்டிக்கொண்டார்கள் - அந்தச்சமயத்தில் அவர்களுக்குச்சகாயமாயிருந்து கோவர்த்தன கிரியை ஒருவிரலிலெடுத்துக்குடையாகப்பிடித்து அவர்களையெல்லாங்காத்துரக்ஷித்தேன் அந்தபுண்ணியத்தையெல்லாம் இந்தபாணத்துக்குக் கொடுத்தேன் ஆதலால் இப்பொழுது சந்தேகப்படாமல் பிரயோகம் பண்ணென்றுசொல்லியருளினார்; அதுகேட்டு அர்ச்சுனனும் அப்படியே நல்லதென்று அந்தபாணத்தை அதிதேவதா பிரதிதேவதா மந்திரங்களுடனே அபிமந்திரித்துப் பிரயோகம்பண்ணினான். அந்தபாணமானது காளகூடவிஷம்போல மகா உக்கிராகாரத்துடனே பார்க்கப்பயங்கரமாய் கறகறவென்றுகுமுன்று இரைச்சலிட்டுக்கொண்டுசுதர்ம்மனுடைய கழுத்திற்குநேராக வருகையில் அதுகண்டு சுதர்ம்மனும் கைகொட்டிச் சிரித்து இந்தபாணமானது மகாமகிமையுடனே வருகிறதென்று சொல்லி தன்னுடைய தூணீரத்திலிருந்த அதிதீக்ஷண்யமான ஒருதிவ்வியபாணத்தையெடுத்துதன் கையிற்பிடித்திராநின்ற வில்லினிடமாகத்தொடுத்து ஏகமனதாயிருந்துகொண்டு நான் இந்தசரீரமெடுத்தநாள் முதல் இதுபரியந்தமும சத்தியந்தவறாமலும், பிதாவாக்கியங்கடவாமலும், இருந்தது மெய்யானால் இந்தபாணமானது அந்த அர்ச்சுனன் பிரயோகஞ்செய்தபாணத்தைக் கண்டித்துவிடக்கடவதென்றுசொல்லிப் பிரயோகஞ்செய்தான். அதுவும் மகாவேகத்துடனே திகுதிகுவென்று எரிந்துக்கொண்டுவந்து அர்ச்சுனன் விட்டபாணத்தை இரண்டுதுண்டமாய்க் கண்டித்துவிட்டது. அதுகண்டு அர்ச்சுனனும் சிந்தாக்கிராந்தனாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! தேவகிநந்தனா! தேவரீருடைய அனுமதியின்பேரில் நான்லக்ஷியம்வைத்துப்பிரயோகஞ்செய்த பாணமானது விருதாவாகவெட்டுண்டு விழுந்துபோச்சுதேயென்று மனஸ்தாபமாகச்சொல்ல. அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் கிரீடீ! உனக்குப்பாணம் போய்விட்டதென்கிற விசாரமிருக்கின்றது, எனக்குப்புண்ணியம்போய்விட்டதென்கிற விசாரமிருக்கின்றது, இதற்குநாமெ

ன்னசெய்யலாம் ஆனாலுமாகட்டும் இன்னமும் ஒருபாணத்தை யெடுத்துப் பிரயோகம் பண்ணென்று சொல்லியருளினார்.

அதுகேட்டு அர்ச்சுனராஜனும் மகாரோஷத்துடனேவேறொரு கொடூரமான அஸ்திரத்தையெடுத்து காண்டீபத்தினிடமாகத் தொடுத்து ஸ்ரீகிருஷ்ணபகவானுக்குக்காண்பித்தான். அந்தபகவானும் சற்றுநேரம் யோசனைபண்ணி அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! இந்த அஸ்திரமும் வெட்டுண்டுவிழுந்துபோம். ஆயினும் நான் இதற்குப்பலனுண்டாக்கிவைக்கிறேன் அஃதெப்படியென்றால், பூர்வத்தில் நான் பரசுராம அவதாரமெடுத்துப் பஞ்சாசத்கோடி பூமண்டலத்தையும் என்னுடைய வசமாக்கிக்கொண்டு பின்பு அந்தப்பூமண்டலத்தைக்கசியப்பிர்ம்மாவுக்குத்தாரைவார்த்துக்கொடுத்தேன் அந்தபுண்ணியத்தை இந்தபாணத்துக்கு தத்தஞ்செய்துவிட்டேன். இப்பொழுது நீசந்தேகப்படாமல் பிரயோகம்பண்ணென்று சொல்லியருளினார்.

அதுகேட்டு அப்படியேநல்லதென்று அர்ச்சுனராஜனுஞ் சந்தோஷகரமாய் அந்தபாணத்தை அபிமந்திரித்துப் பிரயோகம் பண்ணினான் அந்தபாணமானது காலாக்கினிபோலவும் வடவாமுகாக்கினிபோலவும் திகுதிகுவென் றெரிந்துகொண்டு நெருப்புப் பொறிகள் பறக்கும்படிஅதிவேகமாய் இரைச்சலிட்டுவருகையில்அதுகண்டு சுதர்ம்மனும் ஒருதீக்ஷண்யமான பாணத்தையெடுத்து தன்னுடைய கோதண்டத்தினிடமாகத்தொடுத்து நான் என்னுடைய பிதாவையேதெய்வமென்று கருத்தில் நினைத்திருப்பதும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகராகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்தியைச் சதாகாலமும் என்மனதில் தியானம்பண்ணிக்கொண்டிருப்பதும் உண்மையானால் இந்தபாணமானது அர்ச்சுனராஜன் பிரயோகஞ்செய்த பாணத்தைக் கண்டித்து விடக்கடவதென்று பிரயோகம்பண்ணினான். அதுவும்மஹா உக்கிரத்துடனே இரைச்சலிட்டுக்கொண்டு சிவசுப்பிரமண்யக்கடவுளுடைய கையிலிராநின்ற சத்திவேலைப்போலவும்,பிர்ம்மதண்டம்போலவும்; அதிவேகமாகவந்து அர்ச்சுனராஜன்விட்டபாணத்தை இரண்டுதுண்டமாகக் கண்டித்துவிட்டு அதனோடும்போகாமல் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய வலதுபுஜத்தில்தைத்துப்பிறகேயுருவிப்பெரியோர்களை நோகப்பண்ணினவன் அதோகதியில் விழுவானென்பதுபோல அந்தபாணமானது பூமியிலுருவிப்போய்விட்டது, அதுகண்டு அர்ச்சுனராஜன் துக்காக்கிரந்தனாய் மெத்தவும் விசாரப்பட்டு ஸ்ரீகிருஷ்ணதேவரைப்பார்த்து ஐயா! கிருஷ்ணமூர்த்தி! நான் பிரயோகஞ்செய்த பாணமெல்லாம் விருதாவாய்ப்போய்விட்டதேஅதுவுமல்லாமல்பிரதிக்ஞைபண்ணிக்கொண்ட மூன்றுபாணத்தில் இரண்டுபாணம்போய்விட்டது இன்னம் ஒருபாணமிருக்கின்றது, அதினாலாகிலும் சுதர்ம்மனுடைய சிரசைக்கண்டிக்கும்படி செய்யவேண்டும் சுவாமீ யென்று விண்ணப்பஞ் செய்தான். அந்த வார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீகிருஷ்ண

தேவரும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா; உனக்குப் பாணங்கள் போய்விட்டதென்றும், பிரதிஞை நிறைவேற வில்லையென்றும்விசார மாயிருக்கின்றது, எனக்குச் சரீரமுழுதும் நோகின்றதென்றும், புண்ணியமெல்லாம் விருதாவில் போய்விட்ட தென்றும், விசாரமாயிருக்கின்றது, ஆனாலுமாகட்டும் இன்னமும் ஒரு பாணத்தை யெடுத்துப் பிரயோகம் பண்ணென்று சொல்லி யருளினார். அதுகேட்டு அர்ச்சுன ராஜனும் அப்படியே நல்லதென்று பர்வதமுதலானதுகளையுந் துளைக்கப்பட்டதாகியும் தகத்தகாயமாய் மிகுந்தகூர்மையுள்ளதாகியு மிருக்கப்பட்ட மெத்தவும் மகிமையுள்ள ஒருதிவ்யபாணத்தையெடுத்துகாண்டீபத்திற்றொடுத்து ஸ்ரீகிருஷ்ண பகவானுக்குக் காண்பித்தான். அதுகண்டு அந்தபகவானும் சுதர்ம்மனைக் கொல்ல வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா; நான் முன்பு ஸ்ரீராமாவதாரமெடுத்தபொழுது ஏகபத்நிவிரதனாயிருந்து ராவண சம்ஹாரம்பண்ணி தேவர்களுக்குச் சகாயம் பண்ணினேன் அந்தபுண்ணியமெல்லாம் இந்த பாணத்திற்குத் தத்தஞ்செய்தேன் அதுவுமல்லாமல் அப்பொழுது பதினோராயிரம் வருஷம் ராஜ்யபரிபாலனம் பண்ணி- கோதானம்- பூதானம்- கன்னிகாதான முதலான மகாதானங்கள் பண்ணின புண்ணியங்களையும் இந்த பாணத்திற்குத் தத்தஞ்செய்தேனென்று சொல்லி பின்னையும் தேவதைகளையும் இந்திரன் முதலான அஷ்டதிக்குப் பாலகர்களையும் அந்தபாணத்தைப் பாதுகாக்கும்படி ஆவாகனம்பண்ணி அந்தபாணத்தினுடைய நுனியில் பிர்ம்மதேவனை ஆவாகனம்பண்ணி மத்தியில் தன்னுடைய சக்தியைநிறுத்தி அடியில் ருத்திரமூர்த்தியை ஆவாகனம் பண்ணி வெகு மகிமை யுண்டாக்கி ஓய் அர்ச்சுனா! நீ சந்தேகப்படாமல் பிரயோகஞ்செய்வாயாக இந்தபாணமானது சம்சயமில்லாமல் சுதர்ம்மனுடைய சிரசைக் கண்டித்து விடுமென்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதுகேட்டு அர்ச்சுனனும் சரீரம்புளகிக்கத் தக்கதாகிய மகாசந்தோஷமடைந்து அந்தபாணத்தை அதிதேவதா பிரதிதேவதா மந்திரங்களுடனே அபிமந்திரித்து சுதர்ம்மனுடைய சிரசுக்குச் சரியாய்ப்பிடித்துப்பிரயோகம்பண்ணினான். அதுவும்காண்டீபத்திலிருந்துவிடுபட்டுபூமியாகாசமெங்கும்நிறைந்துஅநேகமாயிரம் இடிகளுடனும் மின்னல்களுடனும்பளிச்சுபளிச்சென்றுமகாதளதளப்புடனே பிர்ம்மாண்டகடாகங்களும்பிளக்கத்தக்கதாகஎரிந்துபுகைந்துஜடஜடவென்கிற தொனியுடனே நெருப்புப்பொறிகளைவாரியிறைத்துக்கொண்டு நாராயணாஸ்திரத்திற்கும்பிர்ம்மாஸ்திரத்திற்கும் சக்ராயுதத்திற்கும் சூலாயுதத்திற்கும் பாசுபதாஸ்திரத்திற்கும் மிஞ்சினதாய் மிகுந்த உக்கிராகாரத்துடனே சுதர்ம்மனுடைய சிரசு எங்கே எங்கே யென்று சமீபித்து வருகையில் ஆகாசவாசிகளாகிய தேவேந்திராதி தேவர்க ளெல்லாரும் பயந்துநின்றார்கள். அப்பொழுது சுதர்ம்மனும் அந்த பாணத்தைக்

கண்டுசிரித்து இந்தபாணம் அநேக மகிமையுடனே அதிகுரூரமாய் வருகின்றது, அப்படிவந்தாலு மென்னவென்றுசொல்லி தனனுடையவில்லினிடமாக ஒருபாணத்தைத்தொடுத்து அபிமந்திரித்து நான்கு நீரமெடுத்ததுமுதல் இதுபரியந்தமும் ஏகபத்தினி விரதனாயிருப்பதும் என்னுடைய ஸ்திரீயைத்தவிர மற்றஸ்திரீகளை யெல்லாம் ஸ்ரீகிருஷ்ணபகவா னுடைய பிராணநாயகி யாகிய ஸ்ரீருக்மிணி தேவியைப் போலக்காண்பதும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய உபய பாதங்களை எந்நேரமும் இடைவிடாமல் தியானித்துக் கொண்டிருப்பதும் சிநேகருக்கு வஞ்சனை துரோகஞ் செய்யாமலிருப்பதும் அந்தகிருஷ்ணபகவானுடைய பக்தஜெனங்களுக்குத் தொண்டுசெய்வதும் உண்மையானால் இந்தபாணமானது அதோவருகின்ற பாணத்தைக் கண்டிக்கக்கடவதென்று சொல்லிப் பிரயோகம்பண்ணினான். அதுவும்புறப்பட்டு அதிவேகமாய் மகாகுரூரத் துடனேவந்து அர்ச்சுனராஜன் பிரயோகம்பண்ணின பாணத்தை இரண்டுதுண்டமாகக் கண்டித்துத் தள்ளிவிட்டுபின்னையும் அந்தபாணமானது அதிவேகமாகவந்து சுதர்ம்மன் இருக்கிறத்திற்கு ஸ்தானம் உண்டாக்கிவைத்ததென்று சொல்லும்படியாக ஸ்ரீகிருஷ்ணபகவா னுடைய மார்பையுந் துளைத்துக் கொண்டு போய்விட்டது.

அதுகண்டு அர்ச்சுனராஜனும் சிந்தாக்கிரந்தனாய்மெத்தவும்பிரலாபித்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணதேவரும் அர்ச்சுனனைப் பார்த்துஓய்அர்ச்சுனா! நீ பயப்படவேண்டாம் சுதர்ம்மனுடையசிரசைஅந்தபாணமே கண்டிக்கின்றது நீ சற்றுநேரம்பார்த்திருவென்று சொல்லியருளினார். அதுகேட்டுஅர்ச்சுனனுந் துக்கந்தீர்ந்துசந்தோஷகரமாயிருந்தான் அந்தச்சமயத்தில்முன்புசுதர்ம்மனுடையபாணத்தினால்வெட்டுண்டுவிழுந்துபோன அர்ச்சுனனுடையபாணத்தின் அடிதுணிக்கையானதுகருடனைப்போலஎழும்பிறிவ்வுறிவ்வுமென்று அதிதீக்ஷண்யமாகவந்து மகரகுண்டலங்களும் மாணிக்ககிரீடமும் விளங்கத் தக்கதாகச்சந்திர விம்பம்போற்பிரகாசித்துக் கொண்டிருக்கின்றசுதர்ம்மனுடையசிரசைக் கண்டித்துப்போய்விட்டது. அப்பொழுது அந்தச்சிரசானது அதிகவேகமாய் ஆகாசமார்க்கத்திலெழும்பி ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து-ஹரீ-ஹரீ-கோவிந்தா - ஹச்சுதா-பரந்தாமா விஸ்வரூபா-விருஷீகேசா -அகிலாண்டகோடி-பிர்ம்மாண்டநாயகா-அநாதரக்ஷகா-அப்பிரமேயா-பக்தஜனபரிபாலகா-பரமபுருஷா-கோபிகாவல்லபா-குஞ்சரரக்ஷகா-ருக்மிணிமநோகரா-ஓய்சுவாமீ! ரக்ஷியும்ரக்ஷியுமையாவென்று முறையிட்டுக்கொண்டுவந்து அந்தபகவா னுடைய ஸ்ரீபாதாரவிந்தங்களில்விழுந்தது அப்படிசுதர்ம்மனுடைய சிரசானதுஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருவடிக்கமலங்களில் வந்துசேர்ந்தபின்பு அவனதுசரீரத்திலிருந்து சுயம்பிரகாசமாகிய ஒருஜோதி யானதுவெளிப்பட்டுவந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய திவ்ய சரீரத்திற்

புகுந்து அவரது திருமேனியில் அபின்னமாகக்கலந்துவிட்டது.

அதுகண்டு தேவேந்திராதிதேவர்களெல்லாரும் மகாஆச்சரியகரமாய்சந்தோஷிப்பட்டு அந்தஹரியினுடையமகிமையை பிர்ம்மதேவன்முதலானவர்களும் அறியமாட்டார்களென்றுசொல்லி ஸ்ரீகிருஷ்ணபகவான்பேரில் பாரிசாதபுஷ்பங்களைச் சலசலவென்றுவருஷித்தார்கள். தேவதுந்துபியும் திம்திம்மென்றுமுழங்கியது, அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் தம்முடையதிருப்பாத கமலங்களில் விழுந்த சுதர்ம்மனுடைய சிரசைத்தமது திவ்யாஸ்தங்களினால் எடுத்து அந்த முகாரவிந்தத்தைப் பீதாம்பரத்தினாற்றுடைத்து சுதர்ம்மனுடையபக்திவிசுவாசத்திற்கு அநேகவிதமாய்க்கொண்டாடி அந்தச்சிரசை அர்ச்சுனராஜனுடைய கையிலேகொடுத்தருளினார். அர்ச்சுனராஜனும் அந்தசிரசைப்பார்த்து மெத்தவும் துக்காக்கிராந்தனாய் தாபந்திரியப்பட்டுதிரும்பவும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடையதிவ்வியாஸ்தத்திற்கொடுத்தான். அந்தபகவானும் அதைக்கையினால்வாங்கி அம்சத்துவஜ மஹாராஜனுடைய தேரின்பேரில்போட்டருளினார். அதுகண்டு அம்சத்துவஜமகாராஜனும் சிந்தாக்கிராந்தனாய் சுதர்ம்மனுடைய சிரசைக்கையிலெடுத்துக்கொண்டு ஆ!குமாரகா! சத்தியசந்தனே! நீ அர்ச்சுனனுடையபாணத்தினால் வெட்டுண்டுவிழுந்தாயோ! ஸ்ரீமகாவிஷ்ணுவினுடையதிருவடிக்கமலங்களில் ஐக்கியமாகிப்போய்விட்டாயோ! ஆ! புத்திரசிகாமணியேயென்று விசாரப்பட்டுதிரும்பவும் அந்தச்சிரசை ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ரதத்தின்பேரில்போட்டுவிட்டுமகாதுக்காக்கிராந்தனாயிருந்தான். அதுகண்டு அந்தபகவானும் அந்தச்சிரசைதம்முடையதிவ்யாஸ்தங்களினாலெடுத்து அதைப்பார்த்து இந்தச்சிரசானது சூரியார்ப்பிதமாகக் கடவதென்றுஆகாசத்தில் விட்டெறிந்தார் அப்பொழுது அந்தச்சிரசானது கிருஷ்ணபகவானுடைய திருவுளப் பிரகாரம்அதிக வேகமாகப்போய் சூரியமண்டலத்திற்புகுந்து சூரியபகவானுடனேகலந்து போய்விட்டது.

கேட்டீரோ ஜெனமேஜெயமஹாராஜாவே! அந்தசுதர்ம்மனுடையபாக்கியமேபாக்கியம் எப்படிப்பட்ட தபோதனர்களுக்கும் அந்த பகவானுடைய திருவடிக்கமலங்களைக்கண்டு தரிசிப்பது அருமையாயிருக்கும். அப்படியிருக்க, சுதர்ம்மனென்பவன் அந்தபகவானுடைய திருமேனியில் அபின்னத்துவமாகக் கலந்துபோனால்அவனுடையபாக்கியத்தைநாம் எப்படி அளவுபடுத்திச் சொல்லப்போகிறோமென்று சொல்லி ஜெயமுனீந்திரரானவர் அப்பால்நடந்தசரித்திரத்தைச்சொல்லுகின்றார்.

கேளுமையா! ஜெனமேஜெயபூபாலகா! இந்தவிதமாகச் சுதர்ம்மன்விழுந்ததைப்பார்த்து அம்சத்துவஜமகாராஜனானவன்மிகவும்பிரலாபித்து விசாரப்பட்டுக்கொண்டிருந்தான். அதுகண்டு இரண்டாவது புத்திரனாகிய சுதர்த்தனென்கிறவன் தன்னுடையபிதாவாகிய அம்ச

த்துவஜ மஹாராஜனிடத்திற்குவந்துவிழுந்துசாஷ்டாங்கமாக தெண்டனிட்டெழுந்துநின்று ஓய்ஐயா! தேவரீர்இப்படிவிசாரப்படலாமோ என்தமையனை சுதர்ம்மன்வீராதிவீரனாய் ரணக்களத்திநின்று யுத்தஞ்செய்து தேவேந்திராதிதேவர்களெல்லாரு மெச்சும்படி தான்பண்ணினபிரதிக்கினையை நிறைவேற்றி அகண்டிதவீரபராக்கிரமனாய் ஸ்ரீகிருஷ்ணபகவான்செய்த புண்ணியங்களையெல்லாம் வியர்த்தமாக்கி அவருடைய மகிமையினால் வெட்டுண்டுவிழுந்து அவரது திருமேனியிற்கலந்துபோனான். அந்தசிரசும்சூரியார்ப்பிதமாய் சூரியபகவானுடன் ஐயிக்கியமாய்விட்டது. அப்படிப்பட்ட மஹானுபாவனாகிய என்தமையனைக்குறித்து நீர் விசாரப்படவேண்டாம் தேவரீர் இப்பொழுது எனக்குச் செலவுகொடுத்தனுப்பும் நான்போய்அந்தகிருஷ்ணார்ச்சுனர் இருவர்களையும் ஜெயித்துவருகிறேனென்று அநேகவிதமாய் வேண்டிக்கொண்டான், அதுகண்டு அம்சத்துவஜமஹாராஜனும்சற்றேமனந்தெளிந்து தன்குமாரனாகிய சுதர்த்தனையணைத்து மார்போடுதழுவிக்கொண்டு அப்பா!புத்திரரத்தினமே! உன்னுடையமனோபீஷ்டப்பிரகாரம் ரணக்களத்திற்போய் யுத்தம்பண்ணென்றுசெலவு கொடுத்தனுப்பினான். அதுகேட்டுசுதர்த்தனும் நல்லதென்று பிதாவினிடத்தில்விடைபெற்றுக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டு நவரத்தினமயமான ஒருதிவ்வியரதத்திலேறிக்கொண்டு காலாக்கினி ருத்திரனைப்போல சண்டப்பிரசண்டனாய் எரிந்துவிழுந்து அஷ்டகாசம் பண்ணிகுமுகுமுவென்று வில்லைக்குணத்தொனிசெய்து அந்தவில்லி...மாகப் பர்வதமுதலானதுகளையும் தொளைக்கத்தக்கதாகிய அநேகமாயிரந்திவ்விய பாணங்களைப்பிரயோகம்பண்ணிஅர்ச்சுனராஜனுடைய சேனைகளையெல்லாம் சின்னபின்னமாய் கண்டதுண்டங்களாய் பொடிபொடியாய்க் குப்பல்குப்பலாய் தூள் தூளாகச்செய்து ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் கால்மாடு தலைமாடாய்ச் சாய்த்துக்கொண்டு எங்கேபார்த்தாலுஞ் சுதர்த்தனாய்த்திரிந்து சக்கிராகாரமாய்ச்சுழன்று மகாஆக்ருஷித்துடனே வருகிறபோது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் கண்டுதலையை அசைத்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா! கண்டாயோ! இதோவருகிறவீராதிவீரன் சுதர்ம்மனைப்பார்க்கிலும் சவுரியபராக்கிரமத்திலும் வில்வித்தையிலும் அதிக வல்லபத்தையுடையவன் அதுவுமல்லாமல், விஷ்ணுபக்தியுடையவன் - சற்சனபரிபாலகன் - துர்ச்சனகண்டிதன் - மகாதானவினோதி - இப்படிப்பட்ட குணாதிசயங்களையுடையஇவனை ஜெயிக்கிறதற்கு (ஸ்ரீகயிலாசபதியாகியசாம்பவமூர்த்தியினாலுமுடியாது) இப்படிப்பட்ட வீராதிவீரன் முன்னே நீஎதிர்த்துநின்று எத்தனைபிரதிக்ஞைபண்ணினாலும் நிறைவேறமாட்டாது அவன்வருகிறஉக்கிராகாரத்தைப்பார்த்தால்உன்னையும்என்னையும்நல்ல பூசைபண்ணுவான் போலத்தோற்றுகின்றது. ஆதலால்இந்தவேளையில்இவன்முன்னேநில்லாமல் நம்முடையரதத்தைத்திருப்பிக்கொண்டு

அப்புறம் தூரத்திற் போய் மறைந்திருந்தால் இரண்டுபேரும் பிழைக்கலாம் நாம் ஜீவனுடனே பிழைத்திருந்தால் அநேகஞ் சுகங்களையடையலாமென்று சொல்ல அந்தவார்த்தைகளைக்கேட்டு அர்ச்சுனனும் சம்மதப்படாமல் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! கிருஷ்ணதேவரீர் இப்படிச் சொல்லுவானேன் என்னுடைய பாணாக்கினியினால் இந்த ராஜகுமாரனைப் பஸ்மீகரப்படுத்திவிடுகிறேன் நீர் ஏன் இப்படிப்பட்ட யோசனை பண்ணுகிறீர் இதோ சற்றுநேரத்தில் என் வில்வித்தையைக் காண்பிக்கிறேன் நீர் பார்த்து மெச்சப்போகிறீர் ஆகையினால் பின்னுக்குத் திருப்பவேண்டாம் ரதத்தை முன்னுக்கு நடத்துமென்று சொல்ல அதுகேட்டு அர்ச்சுனனைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ் சிரித்து ஓய் அர்ச்சுனா! நீ பயித்தியங்கொண்டு பேசுகிறாய் நான் சொல்லுகிற வார்த்தை உனக்கு என்றைக்கும் பரிகாசமாயிருக்கின்றது, அப்படி யோசனை பண்ணவேண்டாம் இந்த உக்கிரத்தைத் தப்பித்துக்கொண்டு பிற்பாடு அவனுடனே எதிர்த்துப்போராடலாம் இப்பொழுது அவனுடைய குரூரதிருஷ்டியின் முன் ஹரிஹரப்பிர்ம்மாதிகளும் நின்று ஈடுசெய்யமாட்டார்களே! நீயோ நின்று ஈடுசெய்கிறவன் ஆகையினால் ரதத்தைத் திருப்பிக்கொண்டு போகிறேனென்று சொல்ல, அதற்கு அர்ச்சுனராஜனும் சம்மதப்பட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய் பரமபுருஷா! உம்முடைய வார்த்தைக்கு எதிரிருக்கின்றதோ உமது திருவுளப் பாங்கின் படியே ரதத்தைத் திருப்புகிறதாகக் காண்பியாமல் பின்னுக்குத் தானே ஓடிப்போகிற சேனைகளை மடக்குகிறதுபோல ரதத்தைக் கொண்டுபோமென்று சொல்ல; அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ண தேவரும் அர்ச்சுனராஜனுடைய ரதத்தைத் திருப்பி மூன்று யோசனை தூரத்திற் கொண்டுபோய் நிறுத்திவைத்துக்கொண்டிருந்தார்.

அந்தவேளையில் சுதர்த்தனும் தன் கைகொண்டமட்டும் பாணங்களைப்பிரயோகம் பண்ணி அர்ச்சுனனுடைய சேனைகளையெல்லாம் உருவந்தெரியவொட்டாமற்செய்து பூதப்பிரேத பசாசகணங்களுக்கும் டாகினி சாகினிகளுக்கும் நாய் நரி கூளி கழுகுகளுக்கும் உதிரமாமிசங்களினால் திருப்தியடையப்பண்ணுவித்து பிரளயகால ருத்திரனைப்போலவும் அகோரவீரபத்திரனைப் போலவும் பிரவேசித்து எந்த இடத்திலும் அர்ச்சுனனைத்தேடிக் காணமற்படிக்கு தன்னைக் கண்டு ஓடிப்போகிற சேனைகளையெல்லாம் ஓட வேண்டாமென்று கையமர்த்தி நிறுத்தி அந்த சேனைகளைப் பார்த்து ஓய் சேனைகளே! ஓய் ராஜாக்களே! கேட்டீர்களோ! என் பகையாளியாகிய அர்ச்சுனன் எங்கேயிருக்கிறான் அவனைக்காண்பியுங்கோள் அக்கினிதேவன் நிமித்தமாய்க் காண்டாவனத்தைத் தகனம்பண்ணுவித்து முப்பத்து முக்கோடி தேவர்களோடும் போராடினவீரனைக் காண்பியுங்கோள் காலகேய நிவாதகவசாளென்கிற ராக்ஷதவீரர்களைக் கெலித்து தேவேந்திரனுடைய அர்த்தாசனத்திலிருந்த தனஞ்சயனைக் காண்பியுங்

கோள் (ஸ்ரீகயிலாசபதியாகியசாம்பவமூர்த்தியோடு)பாசுபதாஸ்திரத்
துக்காகக் கட்டிப்புரண்ட வீராதிவீரனைக் காண்பியுங்கோள்பாரதயு
த்தத்தில் பீஷ்மாசாரியார் துரோணாசாரியார்முதலானசுத்தவீரர்களு
டனே எதிர்த்துப் போராடினகிரீட்டியைக் காண்பியுங் கோள் அவ
னெங்கே யிருக்கிறான் அவனை என் கண்குளிரப்பார்க்கவேண்டுமென்
றுசொல்லிக்கொண்டு வந்துமூன்றுயோசனை தூரத்திலிருக்கின்றஅர்ச்
சுனராஜனைக்கண்டு புன்சிரிப்பாகச்சிரித்து ரதத்தின்பேரில் ஒன்றுந்
தெரியாதவனைப் போலிருக்கிறஸ்ரீகிருஷ்ண தேவரைப்பார்த்து ஓய்ஜ
நார்த்தனா - ருக்மிணிமனோகரா - ஓய்சுவாமீ - தேவரீர் என்னகாரியஞ்
செய்தீர் நவரத்நத்தைக்கொடுத்து ஈச்சங்காயை வாங்கிக் கொண்டது
போலதேவரீர் சம்பாதித்தபுண்ணியங்களை யெல்லாம்வியர்த்த மாக்கி
என் தமையனுடையசிரசைவாங்கிக்கொண்டீர் அதனால்உமக்குவந்தபிர
யோசனமென்ன அதைச்சொல்லுமையா வென்றுசொல்லி பிற்பாடு
அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீசெய்தவேலைக்குஉன்னை கொஞ்
சத்திலேவிடுகிறதில்லை, நீஎங்கேதப்பிப்போகவிருக்கிறாய்என் தமைய
னைக்கொன்றபழிக்குப் பழிவாங்காமற்போவேனா! சற்றுநேரம் பத
றாமல்ஓடிப்போகாமல் என்முன்னே நில்லு உன்னைக்கண்டிக்கிறேனெ
ன்றுசொல்லி சுதர்த்தனனவன் மகாஆக்கிரவியாக்கிரமதிக்குரோதனா
கத்தன்னுடைய வில்லைக்குணத்தொனிபண்ணி அநேகமாயிரம்அதிதீ
க்ஷண்யமான பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து இரு நூ
றுபாணத்தினால் அர்ச்சுனனுடையசரீரமுழுதுஞ் சல்லடைக்கண்களா
கத்துளைத்து ரத்தமயமாக்கினா னூறுபாணத்தினால்ஸ்ரீகிருஷ்ணபகவா
னுடைய மார்பையும் பத்தலாகக்கிழித்து துவசமாகி விளங்குகின்ற
அநுமாருடைய கெர்வத்தையுமடக்கி எண்பது பாணத்தினால் குதிரை
களையுஞ் சிவந்தநிறமாக்கி அர்ச்சுனனுடைய ரதத்தை மிஞ்சிவரவொ
ட்டாமல் சிக்குப்படுத்திவிட்டு சிங்கநாதம்பண்ணினான்.

அதனால் அர்ச்சுனன்மிகவுநொந்து ரோஷிதாம் பிராக்ஷகனாய்க்
காலாந்தகனைப்போல ஆக்கிரகித்துநின்று அநேகமாயிரம் பாணங்க
ளையெடுத்து தன்னுடைய காண்டீபத்தினிடமாகத்தொடுத்துச்சுதர்த்
தன்பேரில் பிரயோகம் பண்ணினான். அதுகண்டு சுதர்த்தனனும் மகா
கோபதீப்தனாய் எரிந்துவிழுந்து அர்ச்சுனராஜன் பிரயோகஞ்செய்
த பாணங்களையெல்லாம் நடுபாதியில் கண்டித்துவிட்டு கிருஷ்ணார்ச்
சுனர்களிரண்டுபேரையும் கால் கைகள் ஆடவொட்டாமலும் ரதத்தை
நடத்தவொட்டாமலும் பிரம்மிக்கப்பண்ணினான் - அதனால் ஸ்ரீகிரு
ஷ்ணபகவானும் மெத்தவும் ஆயாசமடைந்து அர்ச்சுனனைப்பார்த்து
ஓய் அர்ச்சுனா! நீ அசட்டையா யிருக்கவேண்டாம் சாக்கிரதையாயி
ருந்து போராடி இந்த துன்மார்க்கனைக்கொல்லென்று சொல்லியரு
ளினார். அதுகேட்டு அர்ச்சுனனும் உக்கிராகாரனாய்ப் பற்களை நெற
நெறவென்று கடித்து மீசை படபடவென்று துடிக்கும்படி தன்னு

டைய காண்டீபத்தைக்குணத்தொனிபண்ணி சூரியகிரணங்களைப்போ
ல அதிதீக்ஷண்யமாய் விளங்குகின்ற குரூரபாணங்களை தொடுத்துப்பி
ரயோகஞ்செய்து சுதர்த்தனுடைய ரதசாரதியையுங் குதிரைகளையும்
நோகப்பண்ணி சுதர்த்தனையுஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்து ரத்த
மயமாக்கினான் அதனால் சுதர்த்தனும் மிகுந்தபிரயாசமடைந்து பூமி
யில்நிற்கமாட்டாமல் தன்னுடைய ரதத்தைச்சாரதி குதிரைகளுடனே
ஆகாசமார்க்கத்தில் கொண்டுபோய் நிறுத்திக்கொண்டு அவிடத்திலி
ருந்து தன்னுடைய வில்லினிடமாக அநேகமாயிரம் பாணங்களைத்
தொடுத்து திவ்வு திவ்வுமென்று ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்க ளிருவர்பேரி
லும் பிரயோகம்பண்ணுகையில் அர்ச்சுனனும் மகா ஆக்ருஷித்துட
னே எதிர்த்துநின்று சுதர்த்தனுடைய பாணங்களையெல்லாம் துச்சப்
படுத்தி அவன்பேரிலும் அநேகமாயிரம் பாணங்களைப் பிரயோகஞ்
செய்தான். அதுகளையெல்லாஞ் சட்டைபண்ணாமல் மிஞ்சினவனாய்
ராமலஷ்மணர்கள் பேரில் பாணப்பிரயோகஞ்செய்த மேகநாதனைப்
போலவும் சுதர்த்தனென்கிற மேகமானது விடுபட்டு சரவருஷம்வரு
ஷிக்கிறது போலவும்கிருஷ்ணார்ச்சுனர்இருவர்பேரிலும்பாணவருஷங்க
ளை வருஷித்தான், அதுகண்டு அர்ச்சுனனும் மகாரோஷித்துவேஷித்
துடனே சுதர்த்தனுடைய பாணங்களையெல்லாங் கண்டித்துவிட்டுபி
ன்னையும் அநேகமாயிரம் பாணங்களைத் தண்டோபதண்டமாய்ப்பிர
யோகஞ்செய்கிறபோது சுதர்த்தனும் பயப்படாமல் சஞ்சலப்படா
மல் எதிர்த்துநின்று மகாகோபதீப்தனாய் எரிந்துவிழுந்து தன்னு
டைய கோதண்டத்தினிடமாக ஒருதிவ்வியபாணத்தைத் தொடுத்துப்
பிரயோகம்பண்ணினான். அதுவும் வடவாமுகாக்கினிபோல திகுதிகு
வென்று எரிந்துக்கொண்டு வந்து அர்ச்சுனனுடைய மார்பிலேதைத்
து முதுகி லுருவிப்போய்விட்டது, அதனால் அர்ச்சுனனும் மெத்தவு
ம் ஆயாசத்தை யடைந்தான்.

அப்பொழுது சுதர்த்தன் பின்னையும் தன்னுடைய வில்லினிட
மாக பிர்ம்மசக்கிரமென்கிற ஒருகுரூரபாணத்தை எடுத்துத் தொடுத்
துப்பிரயோகம்பண்ணினான். அதுவும் அதிவேகமாய் திவ்வுதிவ்வுமெ
ன்கிற சத்தத்தினுடனே வந்து அர்ச்சுனனுடைய ரதத்தின்பேரில்தா
க்கின வளவில் அந்தரதமானது ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களிருவருடனும்
துவசமாகிய அனுமாருடனும் குடை கொடிச்சீலைகள் குதிரைகள் வ
ண்டில்களுடனும் கிறுகிறுவென்று குயவனுடைய சக்கரம்போலச்சு
ழலத்தலைப்பட்டது. அதுகண்டு தேவேந்திராதிதேவர்களெல்லாரும்
சுதர்த்தனுடைய சவுரியபராக்கிரமத்திற்குமெச்சி சந்தோஷிப்பட்டா
ர்கள். அப்படி அண்டகடாகங்களும் அதிரத்தக்கதாக அர்ச்சுனனுடை
ய ரதமானது சுழலுகிறபொழுது அதனால் பூமியானது அறுப்புண்டு
பாதாளபரியந்தம் பள்ளமாய் அந்தப்பள்ளத்தில் கிருஷ்ணார்ச்சுனர்க
ளுடனும் குதிரைகளுடனும் அந்தரதமானது இழிந்து அனுமக்கொ

டிமாத்திரம் மேலேநின்றது, அதுகண்டு அவசமாகிய அனுமாரும் மகாகோபங்கொண்டு இப்படிப்பட்ட ஆபத்துவேளைக்கு உதவிசெய்யாமல் நாம் என்னகாரியத்திற்கு இருக்கின்றோமென்று சீக்கிரமாக நிலத்திற்குதித்து தன்னுடைய வாலைவளர்த்தி அந்தரதத்திற்கு மூன்றுசுற்றாகச் சுற்றிக்கொண்டு இரண்டுகால்களையும் பூமியிலூன்றிக்கொண்டு ரதம் பூமியிலிறங்காமல கெட்டியாய் இழுத்துப்பிடித்துக் கொண்டிருந்தார். அந்தச்சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீ சும்மாயிராமல் துன்மார்க்கனாகிய சுதர்த்தன்பேரில் பாணப்பிரயோகம்பண்ணென்றுசொல்ல, அதுகேட்டு அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! ஜநார்த்தனா! என்னுடையநாவு வறளுகின்றது, தலையைச்சுழற்றுகின்றது; சரீரம் நடுங்குகின்றது, இந்தச்சுழற்சி நிற்கட்டுமென்று சொன்னவளவில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! எனக்கும் அப்படிப்பட்ட பிரயாசமாகத்தான் இருக்கின்றதென்று சொல்லியருளினார் - அதிலே அந்தபாணத்தினுடைய சுறுக்கு அடங்கி மெதுவுபட்டது, அது தெரிந்து அனுமாரும் ரதத்தைத்தூக்கியெடுத்துப்பூமியின்பேரில் செவ்வையாக நிறுத்தினார். அதற்கு ஸ்ரீகிருஷ்ணபகவானும் சந்தோஷமடைந்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! இந்த அனுமந்தன் மெத்தநல்லவன் சற்சனன் உபகாரி மகாவித்துவான் இவன் பூர்வத்தில் ஸ்ரீராமமூர்த்திக்குச் சகாயமாயிருந்து ராவணாதிராக்ஷதர்களையெல்லாஞ் சங்கரித்துகீர்த்திபெற்றமகானுபாவன் இப்போது நமக்குச் சகாயமாயிருந்து பூமியில் முழுகிப்போகிற ரதத்தையும் எடுத்துவைத்த மகாபுருஷன் இவன்நம்முடையபிராணசிநேகனென்று சொல்லி அநேகவிதமாகக் கொண்டாடி அனுமானை மார்போடு தழுவிக்கொண்டார். அனுமாரும் அந்தபகவானுக்கு நமஸ்காரம்பண்ணி அவரதுசெலவுபெற்றுக்கொண்டு முன்போலவே கொடியினிடமாகப் போய்விளங்கியிருந்தார். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனை எச்சரிக்கை பண்ணி, சுதர்த்தன்பேரில் பாணப்பிரயோகஞ்செய்யும்படி உத்தரவுசெய்தருளினார் அதுகேட்டு அர்ச்சுனனும் நல்லதென்று தன்னுடைய காண்டீபத்தைக்குணத்தொனிபண்ணி அதிதீக்ஷண்யமான பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து ஆகாசவீதியினிடமாக நிற்கின்ற சுதர்த்தனுடைய ரதத்தைச் சாரதி குதிரைகளுடனேபொடிபொடியாகத் தூம்சப்படுத்திவிட்டு அவனையும் பங்கஞ்செய்தான் அதற்குச்சுதர்த்தனும்பயப்படாமல்பூமியிற்குதித்து வேறே ஒரு தேரிலேறிக்கொண்டு அர்ச்சுனராஜனுடனே எதிர்த்தான், அதுகண்டு அர்ச்சுனராஜனும் தன்னுடைய காண்டீபத்தைக் குமுகுமுவென்று குணத்தொனிபண்ணி அதனிடமாக ஒரு திவ்விய பாணத்தையெடுத்துப் பிரயோகஞ் செய்யும் பொழுது அந்த அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! உன்னிடத்தில் அக்கினிதேவன் கொடுத்

யிளழுந்தருளி விநாயகர் - வீரபத்திரர்-சண்டேஸ்வரர்-நந்திகேஸ்வரர்-சுப்பிரமணியர் - பிருங்கிரிஷிமுதலான சிவகணங்கள்புடைசூழ்ந்துவரவும்பிர்ம்மாதி தேவர்கள்சேவித்துநிற்கவும் நாரதர்முனீஸ்வரர்கள் ஸ்தோத்திரம் பண்ணவும் ஊர்வசிரம்பை முதலான தேவஸ்திரீகளும் உருத்திரகணிகையர்களும் பரதநாட்டியஞ் செய்யவும் இது முதலான சகலசம்பிரமத்துடனே கருடபகவானுக்கெதிர்ப்பட்டு அந்த கருடன் கையிலெடுத்துக்கொண்டு போகின்றசுதர்த்தனுடையசிரசைப் பார்த்துதம்மோடுகூடவருகின்றபிருங்கிரிஷியை அழைத்து ஓய் பிருங்கீ! அதோ சுதர்த்தனென்கிற பக்தனுடைய சிரசைக் கருடனெடுத்துக்கொண்டுபோகிறான் நீ போய்அதைவாங்கிக்கொண்டுவாவென்று கட்டளையிட்டருளினார்.

அதுகேட்டு பிருங்கிரிஷியும் அப்படியேநல்லதென்று அதிசீக்கிரமாகநடந்து கருடனைக்கண்டு ஓய்கருடா! நீ போகவேண்டாம்நீகொண்டுபோகின்றசிரசைஎன்கையிற்கொடுத்துவிட்டுப்போவென்றுசொல்ல,அந்தவார்த்தைகளைக்கேட்டு கருடபகவானுந் திரும்பிப் பார்த்து புன்சிரிப்பாகச்சிரித்து நாம்இந்தச்சிரசை இந்தநட்டுவனுக்குக்கொடுக்கப் போகின்றோமோவென்றுதன்னுடைய செட்டைகளினால்விசிறினார் அதிலுண்டானகாற்றினாலடிபட்டு வெசாறிபிருங்கிரிஷியும் பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்து சற்றுநேரத்தில்தெளிந்தெழுந்திருந்துவந்து சாம்பவமூர்த்திக்குத் தெண்டனிட்டு ஓய் தேவாதிதேவா! நான் அந்தக்கருடனுடைய செட்டையினாலடிபட்டு நொந்துதப்பிப்பிழைத்துவந்தேனென்று சொன்னார் - அந்தவார்த்தையைக் கேட்டு பார்வதாதேவியும் புன்னகைகொண்டு சாம்பவமூர்த்தியைப்பார்த்து ஓய்பிராணவல்லபா! இந்தபிருங்கியை எம்மாத்திரஞ்சேவகனென்றுநினைத்தீர் ஒருபக்ஷியின்கையினாலடிபட்டுநொந்து அதனுடனே எதிர்த்துப் போராடமுடியாமல் வெசாறி ஓடிவந்துவிட்டான் பார்த்தீரோ ஆகையினால் துனக்கு எம்மாத்திரஞ் சேவகமுண்டோ சேவகர்களுக்கும் அம்மாத்திரஞ் சேவகமுண்டு அஃதெப்படியென்றால். தேவரீருக்கு ஆபரணங்களோ சர்ப்பங்கள் மாலைகளோ எலும்புகள்சிரசில் தரித்திருப்பதோ திரிலோகங்களிலும் பிரவேசிக்கின்றநதிகள், அரையிலுடுக்கின்றவஸ்திரமோ புலித்தோல், புஜத்தின் பேரிலணிகின்றபச்சவடமோ யானைத்தோல் சரீரமுழுதும் பூசுகின்றசுகந்தமோ விபூதி தாளிதம்- எந்நேரமும் உட்கொள்ளுகிறதோ கஞ்சாபஸ்பம், ஏறுகின்ற வாகனமோ எருது எப்போதும் இருக்கின்றஸ்தானமோ சர்வசூன்யமயானபூமி பக்கத்திற்சேவிக்கின்றவர்களோ பூதப்பிரேதபசாசகணங்கள், சாப்பிடுகின்றதோ ஆலகாலவிஷம் இப்படிப்பட்டவைபவத்தையுடையஉமக்குச் சேவகவீரமுண்டோவென்று பரிகாசவார்த்தையாகச்சொன்னாள். அந்தவசனங்களையெல்லாங்கேட்டு சாம்பவமூர்த்தியும் புன்சிரிப்பாகச்சிரித்து தம்முடையகுமாரனாகிய சுப்பிரமணியக் கட

வனை அழைத்து ஓய்குமாரகா! நீ அதிசீக்கிரத்திற்போய் அந்தகருடனெடுத்துக்கொண்டுபோகின்ற சிரசைவாங்கிக் கொண்டு வாவென்று கட்டளையிட்டனுப்பினார்.

அதுகேட்டு சுப்பிரமணியரும் நல்லதென்று மயில்வாகனரூடராய்எழுந்தருளி வேலாயுதத்தைக் கையிற்பிடித்துக்கொண்டுமகா உக்கிராகாரத்துடன் நடந்துபோய் கருடனைக்கண்டு ஓய்கருடா! நீஅந்த சிரசைக்கொண்டுபோக வேண்டாம்நில்லு நில்லென்றுசொல்ல, அதுகேட்டு கருடபகவானுந் திரும்பிப்பார்த்து நாம் நமது ஆண்டவனுடையகட்டளையைத்தள்ளி இந்தச்சிரசை இவனிடத்திற்கொடுக்கப் போகிறோமோ வென்று அதிசீக்கிர மாகநடக்க அதுகண்டு சுப்பிரமணியக்கடவுளும் மகா ஆக்ருஷித்துடனே கியாவென்று அட்டகாசம் பண்ணினார். அந்தஅதிர்ச்சியினால் கருடபகவானுந் திகிலடைந்து திசைதடுமாறி பிரயாகைதீர்த்தத்திற்குச்செல்லுகின்ற வழிதப்பி வெகுதூரந்திரிந்துவேசாறி பிரயாகை நதியைக்காணாமல் அலைந்து அந்தசுதர்த்தன் செய்த புண்ணியபலத்தினால் பிரயாகையைக் கண்டுகருடபகவான்சந்தோஷித்து சீக்கிரத்தில் அந்தநதியினிடமாக சுதர்த்தனுடையசிரசை எறிந்துவிட்டு அதிவேகமாகத் தன்னிருப்பிடத்திற்குப் போய்விட்டார். அதுகண்டு சுப்பிரமணியக்கடவுளும் தண்ணீரில் விழப்போகிற அந்தச்சிரசைசெட்டியாகப்பிடித்து எடுத்துக்கொண்டு வந்துசாம்பவமூர்த்தியினிடத்தில் ஒப்புவித்தார்சாம்பவமூர்த்தியும் அந்தச்சிரசைத் தமதுதிவ்விய ஹஸ்தத்திலேந்திக்கொண்டு பார்வதா தேவியைப்பார்த்துஓய்பிராணநாயகி! இந்தச்சிரசைப்பார்த்தாயோ இந்தசுதர்த்தன்முன்சென்மத்தில் நமக்குப்பயபக்தி விசுவாசத்துடன் அன்புசெய்தவன் அதுவுமல்லாமல் இவன்விஷ்ணுவினுடைய பக்தன் வீராதிவீரன்சத்தியசந்தனன் இவனுடைய ஜீவனானது ஸ்ரீகிருஷ்ணதேவருடன்கலந்துபோய்விட்டது, ஆதலால் நான் இந்தச்சிரசைத் தரித்துக்கொள்ளுகிறேனென்று தமதுமார்பினிடமாகத் தரித்திருக்கின்ற சிரமாலிகையில் நடுநாயகமாகத்தரித்து மகாசந்தோஷித்துடனே சகலபூதகணங்களுடனும் ரிஷிகணங்களுடனும் ஸ்ரீகயிலாசபர் வதத்திற்கெழுந்தருளினார்.

இவிடத்தில்கிருஷ்ணார்ச்சுனர்களிருவர்பேரிலும் தேவேந்திராதிதேவர்கள் பாரிசாதபுஷ்பங்களைச் சலசலவென்றுவருஷித்தார்கள் அப்பொழுது கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் தேவதத்த மென்னுஞ் சங்கத்தையும் பாஞ்சசன்னியத்தையும் பம்பமென்றுமுழக்கஞ்செய்தார்கள். துவசமாகி விளங்குகின்ற அனுமாரும் அட்டகாசம் பண்ணினார். ரதத்திற்பூட்டியிருக்கின்ற குதிரைகளும் எழாரவங்களைச் செய்தது அந்தவேளையில் அம்சத்துவஜமஹாராஜனும் தன்னுடையபுத்திரர்களாகியசுதர்மனும் சுதர்த்தனும்ரணகளத்தில் மடிந்து போனதைக்கண்டுதுக்காக்கிராந்தனாய் விசாரப்பட்டு சற்றுநேரத்தில் மனந்தெளிந்

னுதயிரியம்விடாமல் நம்முடையகுமாரர்கள் மோக்ஷபதத்தைப் பெ
ற்றார்கள். அவர்களைக்குறித்து நாம்விசாரப்படவேண்டிய காரணமெ
ன்னவிருக்கின்றதென் றெண்ணிக்கொண்டு கிருஷ்ணார்ச்சுனர்கள் பே
லின்எரிந்துவிழுந்து மகாகோபதீப்தனாய் என்பலகையாளியான அந்த
அர்ச்சுனனைக் கண்டித்துஎன்மனோதுக்கத்தைநிவிர்த்திசெய்துக்கொ
ள்ளுகிறேனென்று ஒருதேரிலேறிக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ப்புற
ப்பட்டு ரணக்களத்தைநோக்கி வருகையில் அதுகண்டுஸ்ரீகிருஷ்ணபக
வானும் அர்ச்சுனனுடனேகூட சீக்கிரமாகத்தேரைவிட்டிழுந்து அம்
சத்துவஜ மஹாராஜனுக்கு எதிர்க்கொண்டு நடந்தார். அதுகண்டு அ
ந்தராஜனும் கோபத்தைவிட்டு சந்தோஷித்துடனே தன்னுடையர
தத்தைவிட்டிழிந்து எதிரேவந்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபக
வானும்அம்சத்துவஜ மஹாராஜனையணைத்துமார்போடுதழுவிக்கொ
ண்டுஐயா! உம்முடைய புத்திரர்களிருவரும் விருதாவாக யுத்தகளத்
தில்மடிந்து போனார்களேயென்று தாமும் விசாரப்பட்டுபிற்பாடு ஸ்ரீ
மந்நாராயண மூர்த்தியுடனே கலந்துபோனவர்களைக்குறித்துநீர் வி
சாரப்படவேண்டாமென்று அந்தராஜனுடைய துக்கத்தையும் நிவிர்
த்திசெய்து சந்தோஷிப்பித்துவைத்தார். அதுகண்டுஅர்ச்சுனனும் அ
ந்தராஜனைத் தழுவிக்கொண்டு சிநேகம் பண்ணிக்கொண்டான் அப்
பொழுது அம்சத்துவஜ மஹாராஜனும்சந்தோஷகரமாய் தன்னுடை
யபட்டணத்திலிருந்து அநேககாணிக்கை கப்பங்களையும் அஸ்வமேத
க்குதிரையையும் அழைப்பித்து. ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்க ளிருவரிடத்தி
லும்ஒப்புவித்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதத்தில்விழுந்து நம
ஸ்காரம்பண்ணியெழுந்துநின்று அந்தபகவானைப்பார்த்துஐயா! கிருஷ்
ணமூர்த்தி! அடியேன் தேவரீருடைய பாததரிசனையைப் பிரத்தியக்ஷ
மாகக்கண்டு களிப்பதற்குஎதுவில்லாமல் நெடுநாளாய் எப்பொழுது
கிடைக்குமென்கிற தாபந்திரியத்துடன் சதாகாலமும் தேவரீருடைய
பாதத்தையே தியானித்துக்கொண்டிருந்தேன் அங்ஙனமிருக்க, இந்
த அஸ்வமேதக்குதிரையானது விடுபட்டுவந்ததென்கிற சேதிதெரிந்
தவளவில் இதைநாம்பிடித்துக்கட்டி அர்ச்சுனனையும்தோசப்பண்ணி
னால்அவனிமித்தமாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளிவருவார் அது
முன்னிலையில் அவரைக்கண்டு தரிசனம்பண்ணி நம்முடைய கோரிக்
கையை ஈடேற்றிக்கொள்ளலாமென்று தீர்க்கயோசனைசெய்து இந்தக்
குதிரையைப்பிடித்துக் கட்டிவைத்தேன் இப்பொழுதுதேவரீ ருடை
யபாததரிசனையைக் கண்டமாத்திரத்தில் என்னுடையஜென்மம் சாப
ல்லியமாச்சுது. என்கோரிக்கையும் ஈடேறிவிட்டதென் றுஅநேகவித
மாகத்தோத்திரம்பண்ணினான். அந்தவார்த்தைகளையெல்லாம் தோத்
திரப்பிரியராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானும் சந்தோஷமாகக்கேட்டுதிரு
வுளங்கூர்ந்து அம்சத்துவஜ மஹாராஜனைப்பார்த்து ஓய்ராஜேந்திரா!
நான் அஸ்தினாபுரத்திற்குப்போகவேண்டி நீ உம்முடையசேனை சமு

த்திரர்களுடனேகூட அர்ச்சுனனுக்குச் சகாயமாயிருந்து அஸ்வமே தக்குதிரையைப் பாதுகாத்துக்கொண்டு போகவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்டு அம்சத்துவஜ மஹாராஜனும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய்சுவாமீ! அடியேன்தேவரீருடையஉத்தரப்படிபோய் அஸ்வமேதக்குதிரையைப் பாதுகாத்துக் கொண்டுவந்து தர்ம்மபுத்திரருடையயாகத்தை நிறைவேற்றிவைக்கிறே னென்றுசொல்லிபின்னையும் ஒருவர்க்கொருவர்சமாதானமாய்அநேகவிதங்களாகப் பேசிக்கொண்டிருக்கையில் முன்புயுத்தகளத்தில் மூர்ச்சையடைந்திருந்த-விஷிவகேது-பிரத்தியுமனன்-நீலத்துவசன்-எவ்வர்ணுசுவன்; மேகவர்ணன், கிருதவர்ம்மன் முதலானவர்களும் மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு நமஸ்காரம்பண்ணிசந்தோஷ கரமாயிருந்தார்கள்.

பின்னையும் ரதகஜதுரகபதாதிகளாகிய சதுரங்கசேனைகளும்மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்தனகள். அப்பொழுது அம்சத்துவஜமகாராஜனவர் கிருஷ்ணார்ச்சுனர்களிருவரையும் சகலதுராதுரைகளையும் சகலசேனைகளோடும் சம்பகாபுரத்திற்கு சகலசம்பிரமத்துடன் அழைத்துக்கொண்டுபோய் ஸ்நானம்பண்ணுவித்து போஜனமுதலான உபசரணைகள்செய்வித்து அஞ்சுநாள்மட்டுக்கும் தன்னுடைய அரமனையில் மகாபிரியத்துடன் உபசரித்துக்கொண்டிருந்தார். அதின்பிறகு ஸ்ரீகிருஷ்ணபகவான் அம்சத்துவஜமஹாராஜனிடத்திலும் அர்ச்சுனனிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு தாருகனைநினைத்து ரதத்தைக்கொண்டுவரும்படி சொல்லி அந்தரதத்தின்பேரிலெழுந்தருளி அஸ்தினபுரத்திற்குப் போய்சேர்ந்து தர்ம்மபுத்திரனைக்கண்டு தெண்டனிட்டு அவரும் நீ யெங்கே போயிருந்தீரென்று கேட்க நாம்பின்னையெங்கும்போகவில்லை யமுனாதீர்த்தத்திற்குவிலாசமாகப்போயிருந்தோமென்றுசொல்லி விட்டு அவரிடத்தில் தானேயிருந்தருளினார். இவிடத்தில் அர்ச்சுனராஜன் மறுபடியும் இரண்டுநாள்மட்டுக்கும் அம்சத்துவஜராஜனுடைய பட்டணத்தில் சகலசேனைகளோடும் மகாவைபவத்துடனேயிருந்து பிற்பாடு மறுநாள் யுத்தசன்னத்தனாய் ரதாரூடனாய்ப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு அஸ்வமேதக்குதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பிறகே அம்சத்துவஜராஜன்முதலான சகலதுராதுரைகளுடனும் நடந்தான்.

கேட்டீரோ ஜெனமேஜெயபூபாலகா! இந்தவிதமாய் சுதர்ம்மனும் சுதர்த்தனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுடன் கலந்துபோன திவ்வியசரித்திரத்திரத்தைஎவர்களானாலும்பயபக்தி விசுவாசத்துடனேயிருந்து எந்தெந்த கோரிக்கையை விரும்பிக்கேட்கின்றார்களோ அவர்களுக்கு அந்தந்த கோரிக்கைகளைக்கொடுத்து ஸ்ரீகிருஷ்ணபகவான் ரக்ஷித்தருளுவாரென்று ஜெயமுனீந்திரரானவர் திருவாய்மலர்ந்தருளி அப்பால் நடந்த சரித்திரத்தைச்சொல்லத்தொடங்கினார்.

கேளுமையா ஜெனமேஜெயமஹாராஜாவே! இந்தப்பிரகாரம் அர்ச்சுனமஹாராஜான் சர்வாடம்பரத்துடனேசண்பகாபுரத்தைவிட்டுப்புறப்பட்டு அப்பால் நடக்கும்பொழுது அஸ்வமேதக்குதிரையானது நடந்து-வனங்கள்-வனாந்தரங்கள்-காடுகள்-செடிகள் - மலைகள்-குன்றுகள் முதலானதுகளையுந்தாண்டி அப்புறம் கௌரிதேவி வனத்திற்குப்போய் அவிடத்தில் ஒருதடாகத்தைக்கண்டு அதிலிறங்கி தண்ணீர் குடித்தவளவில் ஆண்குதிரையாயிருந்த அந்த அஸ்வமேதக்குதிரையும் பெண்குதிரையாகிநின்றது, அதுகண்டு அர்ச்சுனராஜனும் இது என்னவிபரீதமென்றுநினைத்து விசாரப்பட்டுக் கொண்டிருக்க, அந்தக்குதிரையானது மறுபடியும் வேறொரு தடாகத்திலிறங்கி தண்ணீர்குடித்து வேங்கைப்புலியாகிநின்று, சேனைகள்பேரில் சீறிவந்தது, அதுகண்டு அர்ச்சுனராஜனும் திகிலடைந்து விசாரப்பட்டு இது என்ன ஆச்சரியமாயிருக்கின்றது நாம் வழியில் பட்டபாட்டைப்பார்க்கிலும் இதுமெத்தவும் சங்கடமாய்வந்துநேரிட்டது, நாம் இந்தவேங்கைப்புலியின்பேரில் பாணப்பிரயோகஞ்செய்வோமாகில் அஸ்வமேதக்குதிரையாகிய இந்தப்புலியும் இறந்துபோகுமே இதற்கு என்னசெய்கிறதென்று மெத்தவும் தாபந்திரியப்பட்டு ஸ்ரீகிருஷ்ணதேவனை நினைத்து ஓய் துவாரகாபுரிவாசா! தேவகிநந்தனா! கோபிகாரமணா! ஓய்சுவாமீ! இந்தப்புலியை முன்னிருந்ததுபோல அஸ்வமேதக்குதிரையாக்கி ரக்ஷிக்கவேண்டுமென்று அநேகவிதமாகத்தோத்திரம்பண்ணினான். அப்படித்தோத்திரம்பண்ணுகிறஅர்ச்சுனனுடைய வார்த்தையை அஸ்திநாபுரத்திலிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்டுச் சிரித்து பக்தனாகிய அர்ச்சுனன் நினைத்தபிரகாரம் ஆகக்கடவதென்று ஆசீர்வாதஞ்செய்தருளினார் அதனால் அந்தப்புலியும் எப்பொழுதும்போல ஆண்குதிரையாச்சுதென்று ஜெயமுனீந்திரர்சொல்ல, அதுகேட்டு ஜெனமேஜெயமஹாராஜாவும் ஆச்சரியப்பட்டு ஜெயமுனீந்திரனைப் பார்த்து ஓய் முனிநாதா! அந்த இரண்டு தடாகத்திலும் என்னவிநோதமிருந்தது, அதைச்சற்றேதெரியச்சொல்லவேண்டுமென்று கேட்டவளவில் ஜெயமுனீந்திரர் திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேளுமையா ஜெனமேஜெயமஹாராஜாவே! அந்த வனத்தில் பார்வதாதேவியாரும் சாம்பவமூர்த்தியைத் தனக்குப் புருஷனாகவேண்டுமென்று நினைத்து தவஞ்செய்துக்கொண்டிருக்கும்பொழுது அவிடத்தில் உக்கிரசேனனென்கிற ஒருராக்ஷதன்வந்து பார்வதாதேவியினுடைய சவுந்தரியத்தைப்பார்த்து உலகமாதாவென்று நினையாமல் ஒருபெண்ணாகநினைத்து மோகாந்தகாரனாய் துர்ச்செய்கையைக் கருதினான். அதுதெரிந்துபார்வதாதேவியாரும்மகாகோபங்கொண்டு அந்த துன்மார்க்கனாகிய ராக்ஷதனைப் பெண்வடிவமாகப் பண்ணிவிட்டு பின்னையும் இன்றுமுதல் இந்தவனத்திலுள்ள தடாகத்தில் எண்பத்துநான்கு லக்ஷஞ் சீவராசிகளில் பிறந்துள்ள ஆண்சீவர்கள்வந்து த

ண்ணீர்குடித்தால் பெண்சீவர்களாகப் போகக்கடவதென்று சாபமிட்டருளினார். அந்தச்சாபத்தினால் அர்ச்சுனன்விட்ட அஸ்வமேதக்குதிரையானது அந்தத்தண்ணீர்குடித்தவுடன் பெண்குதிரையாகிவிட்டது அப்பால் அந்தக்குதிரையானது மறுபடியும் வேங்கைப்புலியான சரித்திரத்தையுங்கேளும், அஃதெப்படியென்றால், அலக்கிரனென்கிற பிராமணன் ஒருவன் தீர்த்தயாத்திரைசெய்யும்படி நினைத்துப் பிரவேசித்து அங்கங்கேயுண்டான புண்ணியதீர்த்தங்கள்தோறும் முழுகிக்கொண்டுவந்து அந்தகௌரிதேவிவனத்திலும் ஒருசுனையைக் கண்டு அந்தச்சுனையில் ஸ்நானம்பண்ணவேண்டுமென்று நினைத்து அதிலிறங்கி ஸ்நானம் பண்ணுகையில் அதிலிருந்து கொடூரமான முதலைவந்து அந்தப்பிராமணனைப்பிடித்துக்கொண்டு மகாகஷ்டப்படுத்த அதனால் அந்தப்பிராமணன் மெத்தவும் பிரயாசமடைந்துசரீரநொந்து வேசாறி அவனது நல்வினையினால் அந்தமுதலையின்பிடியை மெள்ளத்தப்புவித்துக்கொண்டு கரையில்வந்து மகா ஆக்ருஷித்துடனே இன்றுமுதல் எவர்களாகிலும் இந்தச்சுனையில் இறங்கினாலும்தண்ணீர் குடித்தாலும் புலியாகக்கடவதென்று சாபமிட்டான், அதனால் அஸ்வமேதக்குதிரையானது அந்தச் சுனையினிடத்தில் தண்ணீர்குடித்து வேங்கைப்புலியாகிப் பின்பு ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய கிருபாகடாக்ஷத்தினால் எப்போதும்போல ஆண்குதிரையாச்சுது. கேட்டீரோ ஜனமேஜயமஹாராஜாவே! அப்பால் அர்ச்சுனராஜன் அவிடத்திலிருந்து குதிரையைவிட்டு தானும் சகலசேனாசமுத்திரங்களுடனே புறப்பட்டு ரதாரூடனாய் நடக்கும்பொழுது அந்தத்திசையிலுள்ள மனிதர்களில் மிருகஜாதியைப்போல ஒருவருக்குந்தெரியாத பாஷைகளைப்பேசிக்கொண்டு நான்குசிரசும் மூன்றுசிரசும்- நான்குபாதமும்-மூன்றுபாதமும்-உள்ளவர்களாய் விசித்திரரூபமாய்ச்சிறிது பேரிருக்க, அவர்களைக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டு அப்பால்நடக்கையில் அங்கே சிறிதுபேர்கள் பிரம்மாண்டமான ஒருபெரிய ஆலாவிருக்ஷத்தின்மேலிருந்து சம்சாரம் பண்ணிக்கொண்டு மிருகஜாதிகளுக்குப் பயந்து பூமியிலிறங்காமலிருப்பதையுங் கண்டு அதிசயித்துக்கொண்டு அப்பால் அநேகதூரம் நடந்து பெண்மலையாளத்திற்குச் சமீபமாகப் போகும்பொழுது அஸ்வமேதக்குதிரையானதுவிடுபட்டு அந்தப்பட்டணத்திற்குள்ளே போய்நுழைந்தது அதுசேதியை வேவுகாரஸ்திரீகள்தெரிந்து ஓடிவந்து ராஜநீதி வழுவாமலும் ஒரு ஆண்பிள்ளைகள் இல்லாமலும் மதனமஞ்சரியென்கிற சேனாபதியுடனே சிங்காசனத்திலுள்க்கார்ந்து இருபத்தாறாயிரம் ரதங்களும் ஐம்பதினாயிரம் யானைகளும்-லக்ஷங்குதிரைகளும்- அநேகமாயிரம் பெண்சேனைகளும்புடைசூழத்தக்கதாக இருந்து அந்தப்பெண்மலையாளத்தை அரசாக்ஷிசெய்துக்கொண்டுவருகின்ற பிரலாவதி யென்னும் பெயருடையபெண்ணரசியைக்கண்டு தெண்டனிட்டு ஓ அம்மா! இன்றையத்தினம் நம்

றுதயிரியம்விடாமல் நம்முடையகுமாரர்கள் மோக்ஷபதத்தைப் பெ
ற்றார்கள். அவர்களைக்குறித்து நாம்விசாரப்படவேண்டிய காரணமெ
ன்னவிருக்கின்றதென் றெண்ணிக்கொண்டு கிருஷ்ணார்ச்சுனர்கள் மே
லிலெறிந்துவிழுந்து மகாகோபதீப்தனாய் என்பவகையாளியானை அந்த
அர்ச்சுனனைக் கண்டித்துஎன்மனோ துக்கத்தைநிவிர்த்திசெய்துக்கொ
ள்ளுகிறேனென்று ஒருதேரிலேறிக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ப்புற
ப்பட்டு ரணகளத்தைநோக்கி வருகையில் அதுகண்டுஸ்ரீகிருஷ்ணபக
வானும் அர்ச்சுனனுடனேகூட சீக்கிரமாகத்தேரைவிட்டிழுந்து அம்
சத்துவஜ மஹாராஜனுக்கு எதிர்க்கொண்டு நடந்தார். அதுகண்டு அ
ந்தராஜனும் கோபத்தைவிட்டு சந்தோஷித்துடனே தன்னுடையர
தத்தைவிட்டிழிந்து எதிரேவந்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபக
வானும்அம்சத்துவஜ மஹாராஜனையணைத்துமார்போடுதழுவிக்கொ
ண்டுஐயா! உம்முடைய புத்திரர்களிருவரும் விருதாவாக யுத்தகளத்
தில்மடிந்து போனார்களேயென்று தாமும் விசாரப்பட்டுபிற்பாடு ஸ்ரீ
மன்நாராயண மூர்த்தியுடனே கலந்துபோனவர்களைக்குறித்துநீர் வி
சாரப்படவேண்டாமென்று அந்தராஜனுடைய துக்கத்தையும் நிவிர்
த்திசெய்து சந்தோஷிப்பித்திவைத்தார். அதுகண்டுஅர்ச்சுனனும் அ
ந்தராஜனைத் தழுவிக்கொண்டு சிநேகம் பண்ணிக்கொண்டான் அப்
பொழுது அம்சத்துவஜ மஹாராஜனும்சந்தோஷிகரமாய் தன்னுடை
யபட்டணத்திலிருந்து அநேககாணிக்கை கப்பங்களையும் அஸ்வமேத
க்குதிரையையும் அழைப்பித்து. ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்க ளிருவரிடத்தி
லும்ஒப்புவித்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதத்தில்விழுந்து நம
ஸ்காரம்பண்ணிஎழுந்துநின்று அந்தபகவானைப்பார்த்துஐயா! கிருஷ்
ணமூர்த்தி! அடியேன் தேவரீருடைய பாததரிசனையைப் பிரத்தியக்ஷ
மாகக்கண்டு களிப்பதற்குஎதுவில்லாமல் நெடுநாளாய் எப்பொழுது
கிடைக்குமென்கிற தாபந்திரியத்துடன் சதாகாலமும் தேவரீருடைய
பாதத்தையே தியானித்துக்கொண்டிருந்தேன் அங்ஙனமிருக்க, இந்
த அஸ்வ மேதக்குதிரையானது விடுபட்டுவந்த தென்கிற சேதிதெரிந்
தவளவில் இதைநாம்பிடித்துக்கட்டி அர்ச்சுனனையும்தோசப்பண்ணி
னால்அவனிமித்தமாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளிவருவார் அது
சமயத்தில் அவரைக்கண்டு தரிசனம்பண்ணி நம்முடைய கோரிக்
கையை ஈடேற்றிக்கொள்ளலாமென்று தீர்க்கயோசனைசெய்து இந்தக்
குதிரையைப்பிடித்துக் கட்டிவைத்தேன் இப்பொழுதுதேவரீருடை
யபாததரிசனையைக் கண்டமாத்திரத்தில் என்னுடையஜென்மம் சாப
ல்லியமாச்சுது. என்கோரிக்கையும் ஈடேறிவிட்டதென் றுஅநேகவித
மாகத்தோத்திரம்பண்ணினான். அந்தவார்த்தைகளையெல்லாம் தோத்
திரப்பிரியராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானும் சந்தோஷமாகக்கேட்டுகிரு
பைகூர்ந்து அம்சத்துவஜ மஹாராஜனைப்பார்த்து ஓ்ராஜேந்திரா!
நான் அஸ்திநாபுரத்திற்குப்போகவேண்டி நீ உம்முடையசேனாசமு

த்திரங்களுடனேகூட அர்ச்சுனனுக்குச் சகாயமாயிருந்து அஸ்வமேதக்குதிரையைப் பாதுகாத்துக்கொண்டு போகவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்டு அம்சத்துவஜ மஹாராஜனும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய்சுவாமீ! அடியேன்தேவரீருடையஉத்தரப்படிபோய் அஸ்வமேதக்குதிரையைப் பாதுகாத்துக் கொண்டு வந்து தர்ம்மபுத்திரருடையயாகத்தை நிறைவேற்றிவைக்கிறே னென்றுசொல்லிபின்னையும் ஒருவர்க்கொருவர் சமாதானமாய்அநேகவிதங்களாகப் பேசிக்கொண்டிருக்கையில் முன்புயுத்த களத்தில் மூர்ச்சையடைந்திருந்த-விஷ்வகேது-பிரத்தியுமனன்-நீலத்துவசன்-எவ்வர்ணுசுவன்; மேகவர்ணன், கிருதவர்ம்மன் முதலானவர்களும் மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு நமஸ்காரம்பண்ணிசந்தோஷ கரமாயிருந்தார்கள்.

பின்னையும் ரதகஜ துரகபதாதிகளாகிய சதுரங்கசேனைகளும்மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்தனுகள். அப்பொழுது அம்சத்துவஜமகாராஜனனவர் கிருஷ்ணார்ச்சுனர்களிருவரையும் சகலதுராதுரைகளையும் சகலசேனைகளோடும் சண்பகாபுரத்திற்கு சகலசம்பிரமத்துடன் அழைத்துக்கொண்டுபோய் ஸ்நானம்பண்ணுவித்து போஜனமுதலான உபசரணைகள்செய்வித்து அஞ்சுநாள்மட்டுக்கும் தன்னுடைய அரமனையில் மகாபிரியத்துடன் உபசரித்துக்கொண்டிருந்தார். அதின்பிறகு ஸ்ரீகிருஷ்ணபகவான் அம்சத்துவஜமஹாராஜனிடத்திலும் அர்ச்சுனனிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு தாருகனைநினைத்து ரதத்தைக்கொண்டுவரும்படி சொல்லி அந்தரதத்தின்மேலெழுந்தருளி அஸ்திநாபுரத்திற்குப் போய்ச்சேர்ந்து தர்ம்மபுத்திரனைக்கண்டு தெண்டனிட்டு அவரும் நீரெங்கே போயிருந்தீரென்று கேட்க நாம்பின்னையெங்கும்போகவில்லை யமுனாதீர்த்தத்திற்குவிலாசமாகப்போயிருந்தோமென்றுசொல்லி விட்டு அவரிடத்தில் தானேயிருந்தருளினார். இவிடத்தில் அர்ச்சுனராஜன் மறுபடியும் இரண்டுநாள்மட்டுக்கும் அம்சத்துவஜராஜனுடைய பட்டணத்தில் சகலசேனைகளோடும் மகாவைபவத்துடனேயிருந்து பிற்பாடு மறுநாள் யுத்தசன்னத்தனாய் ரதாரூடனாய்ப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு அஸ்வமேதக்குதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பிறகே அம்சத்துவஜராஜன்முதலான சகலதுராதுரைகளுடனும் நடந்தான்.

கேட்டீரோ ஜெனமேஜெயபூபாலகா! இந்தவிதமாய் சுதர்ம்மனும் சுதர்த்தனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுடன் கலந்துபோன திவ்வியசரித்திரத்திரத்தைஎவர்களானாலும்பயபக்தி விசுவாசத்துடனேயிருந்து எந்தெந்தகோரிக்கையை விரும்பிக்கேட்கின்றார்களோ அவர்களுக்கு அந்தந்த கோரிக்கைகளைக்கொடுத்து ஸ்ரீகிருஷ்ணபகவான் ரக்ஷித்தருளுவாரென்று ஜெயமுனீந்திரரானவர் திருவாய்மலர்ந்தருளி அப்பால் நடந்த சரித்திரத்தைச்சொல்லத்தொடங்கினார்.

கேளுமையா ஜெனமேஜெயமஹாராஜாவே! இந்தப்பிரகாரம் அர்ச்சுனமஹாராஜான் சர்வாடம்பரத்துடனே சண்பகாபுரத்தைவிட்டுப்புறப்பட்டு அப்பால் நடக்கும்பொழுது அஸ்வமேதக்குதிரையானது நடந்து-வனங்கள்-வனாந்தரங்கள்-காடுகள்- செடிகள் - மலைகள்-குன்றுகள் முதலானதுகளையுந்தாண்டி அப்புறம் சௌரிதேவி வனத்திற்குப்போய் அவிடத்தில் ஒருதடாகத்தைக்கண்டு அதிலிறங்கி தண்ணீர் குடித்தவளவில் ஆண்குதிரையாயிருந்த அந்த அஸ்வமேதக்குதிரையும் பெண்குதிரையாகிநின்றது, அதுகண்டு அர்ச்சுனராஜனும் இது என்னவிபரீதமென்றுநினைத்து விசாரப்பட்டுக் கொண்டிருக்க, அந்தக்குதிரையானது மறுபடியும் வேறொரு தடாகத்திலிறங்கி தண்ணீர்குடித்து வேங்கைப்புலியாகிநின்று, சேனைகள்பேரிற்சீறிவந்தது, அதுகண்டு அர்ச்சுனராஜனும் திகிலடைந்து விசாரப்பட்டு இது என்ன ஆச்சரியமாயிருக்கின்றது நாம் வழியில் பட்டபாட்டைப்பார்க்கிலும் இதுமெத்தவும் சங்கடமாய்வந்துநேரிட்டது, நாம் இந்தவேங்கைப்புலியின்பேரில் பாணப்பிரயோகஞ்செய்வோமாகில் அஸ்வமேதக்குதிரையாகிய இந்தப்புலியும் இறந்துபோகுமே இதற்கு என்னசெய்கிறதென்று மெத்தவும் தாபந்திரியப்பட்டு ஸ்ரீகிருஷ்ணதேவனை நினைத்து ஓ துவாரகாபுரிவாசா! தேவகிநந்தனா! கோபிகாரமணா! ஓ சுவாமீ! இந்தப்புலியை முன்னிருந்ததுபோல அஸ்வமேதக்குதிரையாக்கி ரக்ஷிக்கவேண்டுமென்று அநேகவிதமாகத்தோத்திரம்பண்ணினான். அப்படிதோத்திரம்பண்ணுகிறஅர்ச்சுனனுடைய வார்த்தையை அஸ்திநபுரத்திலிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்டுச் சிரித்து பக்தனாகிய அர்ச்சுனன் நினைத்தபிரகாரம் ஆகக்கடவதென்று ஆசீர்வாதஞ்செய்தருளினார் அதனால் அந்தப்புலியும் எப்பொழுதும்போல ஆண்குதிரையாச்சுதென்று ஜெயமுனீந்திரர்சொல்ல, அதுகேட்டு ஜெனமேஜெயமஹாராஜாவும் ஆச்சரியப்பட்டு ஜெயமுனீந்திரனைப் பார்த்து ஓ முனிநாதா! அந்த இரண்டு தடாகத்திலும் என்னவிநோதமிருந்தது, அதைச்சற்றேதெரியச்சொல்லவேண்டுமென்று கேட்டவளவில் ஜெயமுனீந்திரர் திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேளுமையா ஜெனமேஜெயமஹாராஜாவே! அந்த வனத்தில் பார்வதாதேவியாரும் சாம்பமூர்த்தியைத் தனக்குப் புருஷனாகவேண்டுமென்று நினைத்து தவஞ்செய்துக்கொண்டிருக்கும்பொழுது அவிடத்தில் உக்கிரசேனனென்கிற ஒருராக்ஷதன்வந்து பார்வதாதேவியினுடைய சவுந்தரியத்தைப்பார்த்து உலகமாதாவென்று நினையாமல் ஒருபெண்ணாகநினைத்து மோகாந்தகாரனாய் துர்ச்செய்கையைக் கருதினான். அதுதெரிந்துபார்வதாதேவியாரும்மகாகோபங்கொண்டு அந்த துன்மார்க்கனாகிய ராக்ஷதனைப் பெண்வடிவமாகப் பண்ணிவிட்டு பின்னையும் இன்றுமுதல் இந்தவனத்திலுள்ள தடாகத்தில் எண்பத்துநான்கு லக்ஷஞ் சீவராசிகளில் பிறந்துள்ள ஆண்சீவர்கள்வந்து த

ண்ணீர்குடித்தால் பெண்பிள்ளைகளாகப் போகக்கடவதென்று சாபமிட்டருளினான். அந்தச்சாபத்தினால் அர்ச்சுனன்விட்ட அஸ்வமேதக்குதிரையானது வந்துதண்ணீர்குடித்தவுடன் பெண்குதிரையாகிவிட்டது அப்பால் அந்தக்குதிரையானது மறுபடியும் வேங்கைப்புலியான சரித்திரத்தையுங்கேளும், அஃதெப்படியென்றால், அலக்கிரனென்கிற பிராமணன் ஒருவன் தீர்த்தயாத்திரைசெய்யும்படிநினைத்துப் பிரவேசித்து அங்கங்கேயுண்டான புண்ணியதீர்த்தங்கள்தோறும் முழுகிக்கொண்டுவந்து அந்தகௌரிதேவிவனத்திலும் ஒருசுனையைக் கண்டு அந்தச்சுனையில் ஸ்நானம்பண்ணவேண்டுமென்றுநினைத்து அதிலிறங்கி ஸ்நானம் பண்ணுகையில் அதிலிருந்து கோரமான முதலைவந்து அந்தப்பிராமணனைப்பிடித்துக்கொண்டு மகாகஷ்டப்படுத்த அதனால் அந்தப்பிராமணன் மெத்தவும் பிரயாசமடைந்துசரீரநொந்து வேசாறி அவனது நல்வினையினால் அந்தமுதலையின்பிடியை மெள்ளத்தப்புவித்துக்கொண்டு கரையில்வந்து மகா ஆக்ருஷித்துடனே இன்றுமுதல் எவர்களாகிலும் இந்தச்சுனையில் இறங்கினாலும்தண்ணீர் குடித்தாலும் புலியாகக்கடவதென்று சாபமிட்டான், அதனால் அஸ்வமேதக்குதிரையானது அந்தச் சுனையினிடத்தில் தண்ணீர்குடித்து வேங்கைப்புலியாகிப் பின்பு ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய கிருபாகடாக்ஷத்தினால் எப்போதும்போல ஆண்குதிரையாச்சுது. கேட்டீரோ ஜனமேஜயமஹாராஜாவே! அப்பால் அர்ச்சுனராஜன் அவிடத்திலிருந்து குதிரையைவிட்டு தானும் சகலசேனைசமுத்திரங்களுடனே புறப்பட்டு ரதாரூடனாய் நடக்கும்பொழுது அந்தத்திசையிலுள்ள மனிதர்களில் மிருகஜாதியைப்போல ஒருவருக்குந்தெரியாத பாஷைகளைப்பேசிக்கொண்டு நான்குசிரசும் மூன்றுசிரசும்- நாலுகுபாதமும்-மூன்றுபாதமும்-உள்ளவர்களாய் விசித்திரரூபமாய்ச்சிறிது பேரிருக்க, அவர்களைக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டு அப்பால்நடக்கையில் அங்கே சிறிதுபேர்கள் பிரம்மாண்டமான ஒருபெரிய ஆலாவிருக்ஷத்தின்மேலிருந்து சம்சாரம் பண்ணிக்கொண்டு மிருகஜாதிகளுக்குப் பயந்து பூமியிலிறங்காமலிருப்பதையுங் கண்டு அதிசயித்துக்கொண்டு அப்பால் அநேகதூரம் நடந்து பெண்மலையாளத்திற்குச் சமீபமாகப் போகும்பொழுது அஸ்வமேதக்குதிரையானதுவிட்டுபட்டு அந்தப்பட்டணத்திற்குள்ளே போய்நுழைந்தது அதுசேதியை வேவுகாரஸ்திரீகள்தெரிந்து ஓடிவந்து ராஜநீதி வழுவாமலும் ஒரு ஆண்பிள்ளைகள் இல்லாமலும் மதனமஞ்சரியென்கிற சேனாபதியுடனே சிங்காசனத்திலுள்க்கார்ந்து இருபத்தாறாயிரம் ரதங்களும் ஐம்பதினாயிரம் யானைகளும்-லக்ஷங்குதிரைகளும்- அநேகமாயிரம் பெண்சேனைகளும்புடைசூழத்தக்கதாக இருந்து அந்தப்பெண்மலையாளத்தை அரசாக்ஷிசெய்துக்கொண்டுவருகின்ற பிரலாவதி யென்னும் பெயரையுடையபெண்ணரசியைக்கண்டு தெண்டனிட்டு ஓ அம்மா! இன்றையத்தினம் நம்

முமையபட்டணத்திற்குள் அர்ச்சுனமஹாராஜன் விட்ட அஸ்வமேத
க்குதிரையானதுவந்து நுழைந்தது அதைப் பிடித்துக்கட்டுகிறதோ
விட்டுவிடுகிறதோவென்று கேட்டார்கள். அதுகேட்டு அந்தப்பிரலா
வதியும் தன்னுடைய சேனாதிபதியாகிய மதன மஞ்சரியுடனே ஆலோ
சனை செய்து அவர்களைப்பார்த்து அர்ச்சுனராஜனுடைய சாமர்த்தி
யம் எம்மாத்திரம் அதுநமக்குத்தெரிந்தேயிருக்கின்றது நீங்கள்போ
ய் அந்தக்குதிரையைப்பிடித்துக்கட்டிவிட்டு நம்முடைய சேனைகளெ
ல்லாம் யுத்தஞ்செய்வதற்கு ஆயுத்தப்படும்படி பறையறைவியுங்கோ
ளென்று செலவுகொடுத்தனுப்பினாள்-

பிரலாவதியுத்தம்

அதுகேட்டு அப்படியேநல்லதென்று அந்தவேவுகாரஸ்திரீகளும்
அதிசீக்கிரமாகவந்து அஸ்வமேதக்குதிரையைப்பிடித்துப் பட்டணத்
திற்கட்டிவைத்து பிற்பாடு சகலசேனைகளும் ஆயுதங்களுடனே இன்
றைபத்தினம் யுத்தத்திற்கு ஆயுத்தமாகப்புறப்பட்டுவரவேண்டுமென்
றுபறைபறைவித்தார்கள். அதுசேதியைக்கேட்டுநம்ராஜனுக்கிஷ்டப்ப
டியே நடக்கவேண்டுமென்று அந்தப்பட்டணத்திலுள்ள ரதகெஜது
ரகமுதலானதுகளுடனே சகல பெண்சேனைகளும் யுத்தசன்னத்தரா
ய்ப் பட்டணத்தை விட்டுப்புறப்பட்டுவெளியேவந்துதண்டு விட்டிறங்
கினார்கள், பிரலாவதியென்கிற பெண்ணரசியானவள் மதனமஞ்சரியெ
ன்கிறசேனாதிபதிமுதலான சகலபெண்சேனைகளுடனேயும் அநேகச
ஸ்திர அஸ்திரங்களை தொடுப்பித்துக்கொண்டு யுத்தப்பிரமுகியாய் ரதா
ரூடியாய்ப்புறப்பட்டுவெளியேவந்து தண்டுடனே சேர்ந்து ரணபேரி
கையறைவித்தாள். இப்படியிருக்க அவிடத்தில் அர்ச்சுனராஜனும் கு
திரை பிடிபட்டுப் போனசேதியைக் கேட்டுமகாகோபத்துடனேசக
லசேனைகளோடும் அதிசீக்கிரமாகவந்து அந்தப்பெண்சேனைகளை எதிர்
த்துநின்று அநேகமாயிரம்பாணங்களைப்பிரயோகஞ்செய்து அந்தச்
சேனைகளையெல்லாம் கைகால் ஆடவொட்டாமல் சின்னபின்னப்படு
த்த அதுகண்டு அந்தப்பெண்சேனைகளும் தங்கள் தங்களுடைய வில்
லுகளை வளைத்து அளவிறந்த பாணங்களைத் தொடுத்துப் பிரயோ
கஞ்செய்து அர்ச்சுனராஜனுடைய சேனைகளையெல்லாம் சின்னபின்
னமாகக்கண்டித்து நோகப்பண்ணினார்கள். அதில் சிறிது பெண்கள்
இரண்டுயோசனை மூன்றுயோசனை நீளமாய்வளர்ந்திருக்கின்ற தங்க
ளுடைய ஸ்தனங்களின் கச்சுகளை அவிழ்த்துவிட்டு மச்சகூட்டங்கள்
பேரில் வலைக்காரன் வலைவிசிறுகிறதுபோல அர்ச்சுனன்சேனைகளை வி
சிறி அடித்துஒவ்வொரு அடிக்கு ஆயிரம்இரண்டாயிரஞ்சேனைகளைப்
பொடியாக்கித் தள்ளினார்கள். இப்படிநானா விதமாக அர்ச்சுனனு

டையசேனைகளை அந்தப்பெண்சேனைகள் சூழ்ந்துகொண்டு துரத்தி
அடித்து மூலைக்குமூலைஒதுக்குகின்றதைக்கண்டு ஹம்சத்துவஜ ராஜ
ன் முதலானவீராதி வீரர்களெல்லாம் வெட்கப்பட்டு தலைசாய்த்துக்
கொண்டார்கள் - அப்படி அர்ச்சுனனுடைய சேனைகளெதிர்த்து நின்
றுயுத்தஞ்செய்து நிர்வகிக்கமாட்டாமல் பின்னுக்கு இடைந்து போ
கின்றதைக்கண்டு பெண்சேனைகளெல்லாருங்கைகொட்டிச் சிரித்துசிம்
ஹநாதங்கள் அட்டகாசங்கள் பண்ணிக்கொண்டு மிகுந்துவந்து அர்ச்சுன
ராஜன்பேரி லெதிர்த்தார்கள். அதுகண்டு அர்ச்சுனனும் ஆச்சரியப்ப
ட்டுஇது என்னவிபரீதம் நாம் இப்படிப்பட்ட யுத்தத்தை ஒருநாளு
ங்கண்டதுமில்லை கேட்டதுமில்லை இதுமகா வேடிக்கையாயிருக்கின்
றது நாம்பெண்டுகள்பேரில் பாணப்பிரயோகஞ் செய்கின்ற தெப்
படி நல்லது நாமேபோய் எல்லாச்சேதியுந் தெரிந்துகொள்ளலாமெ
ன்று ஆலோசித்து தன்னுடையரதத்தைப்பிரலாவதிபேரில் அதிவேக
மாகத்துரத்தி அவளைப்பார்த்து ஓய் பெண்ணரசி! நீ எங்களுடனே
எதிர்த்துச் சண்டைபண்ணமாட்டுவாயோதேவேந்திராதி தேவர்கள்மு
தலானபேர்களும் எங்கள்முன்னே எதிர்த்து நிற்கமாட்டார்களே! நீ
யோ நிற்கின்றவள் ஆதலால் நீ சண்டைபண்ணவேண்டாம்சமாதான
மாய்க்குதிரையைக்கொண்டுவந்து ஒப்பிவித்து சுகமாய் உன்னுடைய
பட்டணத்திற்குப் போவென்றுசொன்னான், அதுகேட்டு அந்தப்பி
ரலாவதியும் புன்சிரிப்பாகச்சிரித்து அர்ச்சுனராஜனுடையசவுரியபரா
க்கிரமத்தையும் சௌந்தரியத்தையுங் கண்டுமோகித்து ஓய்கிரீடீ!
நீர் நல்லவார்த்தைசொன்னீர் நாங்கள் உங்கள்முன்னேஎதிர்த்து நிற்க
மாட்டோமென்றுநினைத்தீரோ! அப்படிநினைப்பதைவிட்டுவிடும்உம்
மைப்பார்த்தால் எனக்குச் சண்டைபண்ணுகிறத்திற்கு மனமில்லைஆ
கையால் நான் இரண்டுவார்த்தையாகச்சொல்லுகிறேன் கேளும்அவை
யென்னவென்றால் இப்பொழுது சர்வாடம்பரத்துடனே என்னைக்க
லியாணம்பண்ணிக்கொண்டு என்னுடனேகூடிச் சகலபோகங்களையும்
அனுபவித்திருந்து பிறகு என்னுடையசேனைகளையும் சீர்மைபூமிகளை
யும்பண்டிபண்டாரங்களையும்உம்முடையவசம்பண்ணிக்கொண்டுஅப்
பால் அஸ்வமேதக்குதிரையையும் நடத்திப்பூமிப்பிரதக்ஷணஞ் செய்
வித்து சந்தோஷிகரமாய் தர்மபுத்திரர்செய்கின்ற யாகத்தை நிறை
வேற்றிவையும் அப்படிசெய்யமனமில்லாவிட்டால் என்னுடனேஎதிர்
த்துப்போராடி என்னைஜெயித்துக் குதிரையை விடுவித்துக்கொண்டு
போமென்று சொன்னாள். அதுகேட்டு அர்ச்சுனனுஞ்சிரித்துபிரலாவ
தியைப்பார்த்து ஓய்பிரலாவதி! நீ நல்லவார்த்தைசொன்னாய் நான்வ
ந்தகாரியமென்ன அஸ்தினபுரத்தில்என் தமையனாராகிய தர்மபுத்தி
ரர் யாகதீக்ஷையைக்கைக்கொண்டிருக்க அதைநினையாமல் நான்இவி
டத்தில் உன்னைக்கலியாணம்பண்ணிக்கொண்டு உன்னோடுகூடிச் சகல
போகபோக்கியங்களையும் அனுபவித்துக்கொண்டிருப்பது தர்மம

மோ அதுகூடாது நீ குதிரையைக்கொண்டுவந்து ஒப்புவித்தாலாச்சுது இல்லாவிட்டால்சண்டைக்குவாவென்றுசொல்ல, அதுகேட்டுபிரலாவதியும் கோபித்து தன்னுடையவில்லினிடமாகச் சிறிதுபாணங்களைத் தொடுத்து அர்ச்சுனன்பேரில் பிரயோகம்பண்ணினாள். அர்ச்சுனனும் கோபங்கொண்டு தன்னுடையகாண்டீபத்தில் அநேகபாணங்களைப்பிரயோகித்து அந்தபாணங்களையெல்லாம்நடுபாதியில்கண்டித்துத்தள்ளிபின்னையும்மூன்று திவ்விய பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து பிரலாவதியினுடைய மார்பிலேதைக்கும்படிசெய்தான்.

அதனால் அவளும்நொந்து மகரோஷித்துடனே ஏழுபாணங்களைத்தொடுத்துப்பிரயோகித்து அர்ச்சுனனுடைய மார்பில் தைக்கும்படிசெய்து அட்டகாசம்பண்ணினாள். இந்தவிதமாக வெகுநேரம் அர்ச்சுனராஜனும்பிரலாவதியும்ஒருவர்க்கொருவர்தோர்வையடையாமல் சிங்கமுஞ்சிங்கமும் எதிர்த்ததுபோலெதிர்த்துப்போராடுகிறபோது அர்ச்சுனராஜனும் ஒருமோகனாஸ்திரத்தை எடுத்துத்தொடுக்க அதுகண்டு அவளும் ஒருதிவ்வியபாணத்தைத்தொடுத்துப்பிரயோகித்துஅர்ச்சுனனுடையகாண்டீபத்திற்றொடுத்த அந்த அஸ்திரத்தைஇரண்டு துண்டமாகக்கண்டித்துவிட்டாள். அதைக்கண்டுஅர்ச்சுனராஜனும் அவளுடைய சாமர்த்தியத்திற்குமெச்சி பின்னையும்மகாரோஷித்துடனே அநேகமாயிரம் குரூரபாணங்களை எடுத்துத் தொடுக்கப்போகையில் ஆகாசவாணியுங்கண்டு சலீலென்றுநகைத்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய்அர்ச்சுனா!வீராதிவீரா! நீ இவளுடனே எத்தனைநாள் போராடினாலும் அவள்பின்னிடுகிறவளல்ல; நீயேன்விருதாவாகப்போராடுகின்றாய்இவள் மெத்தவல்லமையுள்ளவள் மந்திரதந்திரங்களில் மிஞ்சினவள் ஆகையினால் நீ இவளுடனே சிநேகம்பண்ணி இவளைக் கலியாணம்பண்ணிக்கொண்டு இவள்மனதைச் சந்தோஷிப் படுத்திவைத்து உன்னுடையகுதிரையை மெள்ளவிடுவித்துக்கொண்டு போவென்று சொல்ல அந்தவார்த்தையைக்கேட்டு தனக்குத்தானே ஆலோசனைசெய்துஇதுவும்மெய்தானென்றுநினைத்து தன் கையிற்பிடித்திருந்த காண்டீபத்தை ரதத்தின்பேரில்வைத்துவிட்டு அந்த பிரலாவதியைப்பார்த்து ஓய் பெண்ணரசி! உனக்கும்நமக்கும் துவேஷம்வேண்டாம் இந்நேரம் உன்னுடைய வில்வித்தையைத் தெரியவேண்டிப் போராடினேனல்லாமல்வேறல்ல! ஆதலால் இத்தமட்டுக்கும் சண்டையைநிறுத்திசமாதானமாய் உன்னுடையமனோபீஷ்டப்படியே உன்னைக்கலியாணஞ்செய்து ரதிகேளியில் உன்மனதைச்சந்தோஷிப்படுத்திவைக்கிறேனென்றுசொல்ல! அந்தவார்த்தையைக்கேட்டு அவளும்சந்தோஷமடைந்துதன்னுடையசேனைகளையெல்லாம் அனுப்பிவைத்துப் பட்டணமுழுதும் நன்றாயலங்கரிக்கும்படி திட்டம்பண்ணினாள்.

அவர்களும் அந்த உத்தாரப்படியேபோய் சகலசம்பிரமத்துடன்பட்டணமுழுதும் குபேரனுடைய அளகாபுரியைப்போலநவரத்தி

னமயமாயலங்கரித்து பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கத்தக்கதாக சர்வாடம்பரத்துடனே பிரலா வதியினுடைய கலியாணபேரிகை யறைவித்தார்கள். அப்பொழுதுபிரலாவதியும்மதனமஞ்சரியென்கிற சேனாபதியுடனும் சகலசேனைகளுடனும்மகாவைபவத்துடனே அர்ச்சுனராஜன் அம்சத்துவஜராஜன் முதலானராஜகூட்டங்களையும் சேனாசமுத்திரங்களையும் பட்டணத்திற்குள்ளே அழைத்துக்கொண்டுபோய் அவரவர்களுக்குத்தகுந்தவிடுதிகள்விடுவித்துப்போஜனமுதலானசர்வஉபசாரங்களும்நடப்பித்துவைத்தாள்-பிற்பாடுபிரலாவதியும் நல்லசுபமுகூர்த்த லக்கினத்தில்அர்ச்சுனராஜனைக்கலியாணஞ்செய்துக்கொண்டு அன்றைதினம் சகலசம்பிரமத்துடனேசப்பிரமஞ்சத்தின்பேரில் அர்ச்சுனராஜனோடு கூடியகாலீலாவிநோதமாகச் சகலசவுக்கியங்களையும் அனுபவித்திருந்து பொழுதுவிடிந்தபின்புபிரலாவதியும்சந்தோஷித்து அர்ச்சுனராஜனுக்குவெகுமானமாகஉன்னதமான ஆடையாபரணங்களும் நவரத்நங்களும்கொடுத்து அஸ்வமேதக்குதிரையையும் சிறிதுஸ்திரீஜனங்களையும் கூட்டியனுப்பிநாங்களும் தர்மபுத்திரர்செய்கிறயாகத்திற்கு வருகிறோமென்றுசொல்ல, அதுகேட்டுஅர்ச்சுனராஜனும் பிரலாவதியைப்பார்த்து ஓபெண்ணே! நீயும் உன்னுடையசேனைகளும் யாகத்திற்குவந்துசேரவேண்டுமென்று உபசாரமாகச்சொல்லி அவ்விடத்தில் செலவுவாங்கிக்கொண்டு அந்தப்பெண்மலையாளத்தை விட்டுப்புறப்பட்டுக் குதிரையைவிட்டு அந்தக் குதிரையின்பிறகே அர்ச்சுன மஹாராஜனானவன் ரதாருடனாய் சகலராஜகூட்டங்களுடனும் ரதகஜ துரகபதாதிகளாகிய சதுரங்கபலசேனைகளுடனும் நடந்தான்.

பீஷணன் யுத்தம்

அப்பால்அந்தக்குதிரையானதுவடக்குமுகமாகத்திரும்பிமேற்குசமுத்திரகரையோரமாகநடந்துபகாசுரன்பிள்ளையான பீஷ்ணனுடையபட்டணத்திற்குச் சமீபமாகவந்தது. அதுகண்டு அங்கிருந்தராக்ஷதர்கள் அந்தக்குதிரையைப்பிடித்துக்கொண்டுபோய் தங்கள்ராஜனாகிய பீஷ்ணனிடத்தில் ஒப்புவித்தார்கள். அப்பொழுது அந்த பீஷ்ணனும் குதிரையினுடைய லலாடத்தில்விருதாவொளியாகக்கட்டியிருக்கின்றபட்டத்தை வாசித்துப்பார்த்து சந்தோஷிப்பட்டு இந்தக் குதிரையின்பின்னேவருகிறவன் என்பகையாளியாகிய வீமசேனனுடைய தம்பியல்லவா! ஆகையினால் நானவனுடனே போராடி ஜெயிக்கிறேனென்றுஆக்ருஷித்துடனே அதிசீக்கிரமாக எழுந்திருந்து தன்னுடையரதகஜதுரகபதாதிகளான ராக்ஷதசேனைகளோடும் ராக்ஷதப்ஸ்திரீகளோடுஞ்சண்டைக்கு ஆயத்தமாகப்புறப்பட்டு பட்டணத்திற்குவெளியே வந்

துதண்டுவிட்டிறங்கினான். அவிடத்தில் அர்ச்சுனராஜனும்இந்தசங்கதி
களெல்லாம்குதிரையின்பிறகேவந்தசேவகர்களால்கேள்விப்பட்டு அம்
சத்துவசன்-நீலத்துவசன், அனுசாலுவன் -எவ்வர்ணசுவன்- விஷ்வகே
து-பிரத்திபுமனன் - அனிருத்திரன்-சாத்தகி-கிருதவர்ம்மன் - மேகவ
ர்ணன் முதலான ராஜவர்க்கங்களுடனும் சகலசேனா சமுத்திரங்களுட
னும் அதிகவேகமாகவந்து ரணபேரிகை யறைவித்துராக்ஷதகூட்டங்க
ளுடனேஎதிர்த்துப்போராடி மகாரோஷித்துவேஷிங்களுடனே நானா
விதபாணங்களினாலும்பலவகைஆயுதங்களினாலும்இரண்டுலக்ஷம்ராக்ஷ
தசேனைகளையுந் தும்சப்படுத்திச் சின்னாபின்னப் படுத்தும்பொழுது
அதுகண்டு ராக்ஷதஸ்திரீகளும்மிஞ்சி உலக்கைகளைக்கையி லெடுத்துக்
கொண்டு ராஜகூட்டங்கள்பேரில்விழுந்து ரதங்களையெல்லாம் பொடி
பொடியாக்கி ஆனைகளையெல்லாம் துண்டந்துண்டமாக்கிக் குதிரைக
ளையெல்லாம் சின்னாபின்னமாக்கிக் காலாள்களையெல்லாம்-கால்வேறு
கைவேறு. தலைவேறாகக் கண்டித்து இந்தப்பிரகாரம்அர்ச்சுனராஜனு
டைய நால்வகைச்சேனைகளையும் அதம்பண்ணி எங்கே பார்த்தாலும்
ராக்ஷதஸ்திரீகள் மயமாய்ச்சுழன்று இருந்து தும்சப் படுத்துகிறபோ
து அர்ச்சுனனுடைய சேனைகளெல்லாரும் அவர்களுக்குமுன்னே நி
ன்று நிர்வாகம்பண்ணமாட்டாமல் மனங்கலங்கி மகாபயமடைந்து நா
ன்குதிக்கிலுஞ்சிதறி ஓடிப்போனார்கள். அதைக்கண்டு அர்ச்சுனராஜன்
முதலான துராதுரைகளெல்லாரும் எதிர்த்துநின்று அவரவர்களுடை
யவில்லைக்குணத்தொனி பண்ணி அநேகமாயிரம் பாணங் களைப்பிர
யோகஞ்செய்தார்கள். அதுகளையெல்லாம்எவ்வளவுஞ்சட்டை பண்ணா
மல் அந்தராக்ஷதஸ்திரீகளெல்லாரும்மிஞ்சிப்போராடுகின்றதை அர்ச்சு
னராஜனுடைய ரதத்திற்கொடியாக விளங்குகின்ற அனுமாரானவர்க
ண்டு இது என்ன விபரீதமென்று சற்றுநேரம்ஆலோசனைசெய்து நாம்
இந்தச்சமையத்தில் முனைந்து போராடாவிட்டால் நம்முடைய சே
னைகள் நிற்கமாட்டாதென்று நினைந்து அதிசீக்கிரத்தில்ரதத்தை விட்டு
மகாகோபத்துடனே தொப்பென்று பூமியிற்குதித்து அஷ்டதிசைக
ளும்செவிடுபடும்படி அட்டகாசம்பண்ணி தம்முடைய வாலைவளர்த்
திக்கையிலேபிடித்துக்கொண்டு ராக்ஷதஸ்திரீகளைப்பார்த்து ஓய்ராக்ஷ
தஸ்திரீகளே! நீங்கள்பதறுதீர்கள்! பதறுதீர்கள் உங்களுடைய வமிசத்
திற்குயமனான அனுமந்தனென்று என்னைஅறியுங்கோள் இதோயமத
ண்டத்தைப்போலவும் வஜ்ராயுதத்தைப்போலவும் காள கூடவிஷத்
தைப்போலவும்வடவாமுகாக்கினியைப்போலவும்காட்டுத்தீயைப்போ
லவும் சூரியகிரணத்தைப் போலவும் பிரகாசிக்கின்ற என்னுடையவா
லைப்பார்த்தீர்களோவென்று காண்பித்துவாலைவிசிறிஅடித்துஒவ்வொ
ரு அடிக்கு நூறுபேர்இருநூறுபேர் விழுந்திறக்கும்படி செய்தும்
நச்சுநச்சாய்ப் பண்ணிக்கடித்தும் இடித்தும் தள்ளியும் கிள்ளியும்
உதைத்தும், சதைத்தும்; சீறியும், மீறியும், முட்டியும், குட்டியும், இழு

த்தும், கிழித்தும், முறித்தும்; பறித்தும், தூக்கிஎறிந்தும், மிதித்தும் இந்தவிதமாய் அனுமாரானவர்மகாஆக்ருஷித்துடனேசண்டப்பிரசண்டனாய எதிர்த்துநின்றுவடவாமுகாக்கினியானது சமுத்திரசலத்தைக்கிரகித்ததுபோல ராக்ஷதஸ்திரீகளில் ஒருத்தியாகிலுந்தப்பிப் பிழைத்துஒடிப்போகவொட்டாமல் மடக்கிக்கொண்டு எல்லாரையும் பூமிக்கிரையாகச்செய்துவிட்டு எப்பொழுதும்போல அனுமாரானவர்அர்ச்சுனனுடைய கொடியினிடமாகப்போய் விளங்கியிருந்தார்.

அதுகண்டு அர்ச்சுனனுடைய சேனைகளெல்லாம் மகாசந்தோஷிகரமாய் அஷ்டகாசங்கள்சிங்கநாதங்கள் பண்ணிக்கொண்டுவந்துராக்ஷதசேனைகள்பேரி லெதிர்த்தார்கள். அப்பொழுது அம்சத்துவஜன் முதலான பிரமுகாளும் எதிர்த்து குரூரமாகிய அளவிறந்த பாணங்களைப் பிரயோகஞ்செய்து ராக்ஷதசேனைகளை யெல்லாம் சின்னபின்னமாகக்கண்டித்துத்தள்ளி பூதப்பிரேதகணங்களுக்குத் திருப்தியாகவிருந்துசெய்வித்தார்கள். அதுகண்டு அந்தராக்ஷதர்களெல்லாம் பின்னிடாமல் முனைந்து மகாஉக்கிராகாரத்துடனே ஆனைகள் பேரிலும் புலிகள்பேரிலும், கரடிகள்பேரிலும், நாய்கள்பேரிலும்; காக்கைகள்பேரிலும், பருந்துகள்பேரிலும், மற்றுமுண்டான அநேகஜீவஜெந்துக்கள்பேரிலும் ஏறிக்கொண்டு எமகிங்கிலியர்களைப் போல- கத்தி-சூலம்- கதை- சக்கரம்- பரசுபட்டையம்- அங்குசம்- பிண்டிபாலம் முதலானமுப்பத்திரண்டு ஆயுதங்களையும் அர்ச்சுனனுடைய சேனைகள்பேரில் றிவ்வுறிவ்வுமென்று பிரயோகம் பண்ணிவருத்தினார்கள். அதுகண்டு அர்ச்சுனராஜனுந் தன்னுடைய காண்டீபத்தைக் குணத்தொனி பண்ணி அதிதீக்ஷண்யமான அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்து ராக்ஷதர்கள்விட்ட அஸ்திரங்களையெல்லாம் பஸ்மீகரப்படுத்தி அவர்களையுஞ்சின்னபின்னமாகக்கண்டித்து கால்மாடு தலைமாடாய் கால்வேறு கைவேறு-உடல்வேறு-எலும்புவேறு - சதைவேறாகப்பண்ணி ஒருவரையாகிலும் தப்பிப்போகவொட்டாமல் தும்சட்படுத்திவிட்டு கியாவென்று சிங்கநாதம்பண்ணினன். அதுகண்டு பீஷ்ணனுந்தன்னுடையரதத்தை அர்ச்சுனராஜன்பேரில் தூரத்தி அநேகமாயிரங் குரூரபாணங்களைப் பிரயோகஞ்செய்து அர்ச்சுனனுடையமார்பையும்பத்தலாகக்கிழித்து சாரதிகுதிரைகளையும் நோகப்பண்ணி கொடியாகிய அனுமாரையும் பத்தலாக்கி அத்துடனேபோகாமல் அம்சத்துவஜனுடையமார்பையுங்கிழித்து நீலத்துவஜனையும் பிரமிக்கப்பண்ணி எவ்வர்ணசுவனையும் கால் கை ஆடவொட்டாமற்செய்து அனுசாலுவனையுஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்து விஷ்வகேதுவைவட்டும் ரத்தமயமாக்கி பிரத்தியுமனனுடைய தலையையும் உடைத்து சாத்தகியினுடைய புஜங்களையுங்கிழித்து கிருதவர்மனையும் பதாதிகேசபரியந்தம் தொளைத்துவிட்டு மேகவர்ணனையும் ஏழில்குழியென்று ரத்தங்கக்கப்பண்ணி இந்தவிதமாக பீஷ்ணனவன் அதிகரோஷித்துவேஷித்துடனே அர்

ச்சுனன் முதலான சூராதூரர்களையுஞ் சிக்கப்படுத்துகையில் அர்ச்சு
னராஜனும் ஆக்கிரவியாக்கிரம நிக்ருரோதனைக் கோபங்கொண்டும
கா உக்கிராகாரனாய் தன்னுடைய காண்டீபத்தினிடமாக அநேகபாண
ங்களைத்தொடுத்து பீஷ்ணனுடைய சாரதி குதிரைகளையுங்கொன்று
ரதத்தையுஞ் சக்கை சக்கையாகப் பேர்த்தெறிந்து அந்த ராக்ஷதனை
யுஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான், அதற்கும் அவன் எவ்
வளவும் பயப்படாமல் ஆகாயத்திலெழும்பி மேகமண்டலத்தில் மறை
ந்து சற்றுநேரத்திற்குள்ளே அவனுடையமாய்கையினாலேமுப்பத்து
முக்கோடிதேவர்களையும் உண்டாக்கி அக்கினிபகவான் முதலான திக்
குப்பாலகர்களையும் உண்டாக்கி அந்தபீஷ்ணனுந் தேவேந்திரனைப்
போல வெள்ளையானையின்மேரி லேறிக்கொண்டு சகலதேவர்களுந்தன்
னைச் சேவித்துவரத்தக்கதாக வஜ்ராயுதத்தைக் கையிலேபிடித்துக்
கொண்டு அர்ச்சுனராஜன்முதலான பிரமுகாளுக்கு முன்பாகவந்துநி
ன்று அவர்களைப்பார்த்து ஓ மானிடவர்களே! நாங்கள் தேவர்கள்நா
ங்களும் ராக்ஷதர்களும் தாயாதிகளானபடியினால் எங்களுக்குள் ஒருவ
ருக்கொருவர் போராட்டமிருந்தபோதிலும் நாங்கள் அன்னியருக்கு
மாத்திரம இடங்கொடுக்கிறதில்லை நீங்கள் எங்களுடைய தாயாதிகளை
க்கொன்றுவிட்டபடியினால் நாங்கள் அவர்களுக்குப் படைத்துணையா
யிருந்து உங்களைக்கண்டிக்கிறதற்குவந்தோம் இதோசற்றுநேரத்தில்
பாருங்களென்றுசொல்லிஅந்தமாயாதேவர்கள்சகலமான சஸ்திரஅஸ்
திரங்களையுந்தொடுத்துப்பிரயோகஞ்செய்தார்கள், அதுகண்டு அர்ச்
சுனராஜனுந் திடுக்கிட்டு சற்றுநேரம் ஆலோசனைசெய்து இதுராக்ஷ
தமாயையேயல்லாமல் உண்மையான தேவர்களல்லவென்று நிச்சயித்
துக்கொண்டு தன்னுடைய காண்டீபத்தைவளைத்து ஒருகந்தர்வாஸ்தி
ரத்தை எடுத்துத்தொடுத்துப் பிரயோகம்பண்ணினான். அந்த அஸ்திர
மானது புறப்பட்டு கிறுகிறுவென்று சுழன்றுக்கொண்டுவந்து முப்ப
த்து முக்கோடி மாயாதேவர்களையும் திக்குப்பாலகர்களையுந்தேவேந்
திரனையுந்துரத்தி அடித்து அந்தமாயாவிலாசங்களையெல்லாம் ஒரு
க்ஷணநேரத்தில் அதம்பண்ணிவிட்டது, அதுகண்டுஉண்மையானதே
வேந்திராதிதேவர்களும் மனங்கலங்கி தம்மைப்போல வடிவெடுத்து
ப்போன மாயாதேவர்களைக்கண்டித்த அஸ்திரமானது தங்கள்பேரி
லும் எதிர்த்து எங்கேவருகின்றதோவென்று மகாபயங்கரமடைந்து
மேகமண்டலத்தில் மறைந்துபார்த்துக்கொண்டிருந்தார்கள், அந்தச்
சமயத்தில் சூரியபகவானும் நமதுசுற்றத்தார்களெல்லாரும் பயந்து
ஒளித்துக்கொண்டார்களே இனிநாம் மாத்திர மிருந்தால் அந்த அஸ்
திரமானது நம்முடைய பேரிலு மெதிர்த்து எங்கேவருகின்றதோ
வென்று பயந்து ஒளித்துக்கொண்டதுபோலமேற்குத்திசையில்அஸ்
தமானமாகினார் அப்பொழுது செய்தநன்றியறியாத நிர்மூடர்களா
கிய அஞ்ஞானிகளின் இருதயம்போல பூத இருளானது உலகமுழுது

ம் மூடிக்கொண்டது அந்த இருட்டு வேளையில் பீஷணனும் மகா ஆக்ருஷித்துட்டனே அந்தகாரகவசம் தொடுத்துக்கொண்டு அந்தரவீதியில் நின்று தன்னுடைய மாயையினாலே புலிகள்- கரடிகள்- ஓணான், உடும்புகள்- முதலான மிருகஜாதிகளையுஞ் சிருஷ்டித்து அர்ச்சுனராஜனுடைய சேனைகள்பேரில் ஏவினான். அதுகளையெல்லாம் அர்ச்சுனராஜனுங்கண்டித்துவிட்டு பீஷணனைக்காணாமல் பிரமித்து தன்னுடைய காண்டீபத்தினிடமாக நாராயணாஸ்திரத்தைத்தொடுக்கவேண்டுமென்று நினைத்தமாத்திரத்தில் மேகவர்ணனும் அதுதெரிந்து அர்ச்சுனராஜனைப்பார்த்து ஐயா! கிரீட்டீ! தேவரீர் இந்த துன்மார்க்கனுக்காக நாராயணாஸ்திரத்தை எடுத்துத்தொடுக்கவேண்டாம் சின்னமுளையைக் கிள்ளிப் போடுகிறதற்குப் பெரியகோடாலிவேண்டுமோ! ஆதலால் எனக்குச்செலவுகொடுத்தனுப்பும் நான்போய் அந்த துன்மார்க்கனைக்கொன்று வருகிறேனென்றுசொல்ல அதுகேட்டு அர்ச்சுனராஜனும் அப்படியே நல்லதென்று செலவுகொடுத்தனுப்ப அந்தமேகவர்ணனும் தினகராஸ்திரத்தைத்தொடுத்து கோதண்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஆகாசமார்க்கத்திலெழும்பி பீஷணன் தொடுத்துக்கொண்டிருக்கிற அந்தகார கவசத்தைப்போக்கடித்து அவனுடனே எதிர்த்து இரண்டுபேரும் போராடுகிறபோது பீஷணனுடைய தெப்பையினால் நொந்து மேகவர்ணனும் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்து சற்றுநேரத்தில் தெளிந்து எழுந்திருந்து ஆகாசத்திலெழும்பி மறுபடியும் அந்த பீஷணனுடனே எதிர்த்து இரண்டு பேரும் கையினால்போராடி அங்கேயிருந்து பூமியில்வந்து ஒருவர்க்கொருவர் சமமாகக் குத்தியும் வெட்டியும் சலிப்படைந்து இரண்டுபேரும் மூர்ச்சையாகிவிழுந்தார்கள். அதில் பீஷணனும் சற்றுநேரத்தில் மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து ரதாரூடனாய் அர்ச்சுனனிடத்திற்போய் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! உன் தமையனான வீமசேனனானவன் வயிற்றுச் சோற்றுக்காக என் தகப்பனைக் கொன்றானல்லவோ? நான் இப்பொழுது உன்னைக்கொன்று அந்தப்பழியை தீர்த்துக்கொள்ளுகிறேன் நீ சாக்கிரதையாய் நின்று போராடென்று சொல்ல அந்த வார்த்தைகளைக்கேட்டு அர்ச்சுனராஜனும் கோபித்து அந்த ராக்ஷதனைப்பார்த்து ஓய் பீஷணா உன் தகப்பனை என் தமையன் கொன்றானல்லவோ அந்தமுறைமை தப்பாமல் உன்னை நான் கொல்லவேண்டும் ஆதலால் நீ எச்சரிக்கையாயிருந்து போராடென்றுசொல்ல அந்தச்சமயத்தில் ஒருமாயா சந்நியாசிவந்து அர்ச்சுனராஜனைப்பார்த்து ஆசீர்வாதம் பண்ணினான் அதுகண்டு அர்ச்சுனராஜனும் யதார்த்த சந்நியாசியென்று நினைத்து இரண்டு கைகளையுங் கூப்பிதெண்டன் சுவாமீயென்று நமஸ்காரஞ்செய்தான். அதுகண்டு அந்த மாயா சந்நியாசியும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீ என்னதெண்டம் போட்டாய் நீ பயித்தியக்காரவேலைசெய்துவிட்டாய் அஃதென்னவென்று கேட்பாயாகி

ல் நீ குதிரையின்பிறகே வந்துவிட்டாயல்லவோ உடனே ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் சுதர்ம்மனும்- சுதர்த்தனும் சண்டைபண்ணின விடத்திற் குவந்துவிட்டாரல்லவோ அந்தச்சமயமறிந்து துரியோதனாதிகளென் கிற ராக்ஷதர்கள் அஸ்தினாபுரத்திற்குப்போய் தர்ம்மராஜாவையும் து ரௌபதையையும் எடுத்துக்கொண்டு எங்கேயோ போய் விட்டார்கள்.

அதிசேதியை ஸ்ரீகிருஷ்ணதேவன் கேள்விப்பட்டுவந்து அவர்க ளைத் தேடிக்கொண்டுதிரிகிறார் அப்படியிருக்கும் போது என்னயாக ம் என்னகுதிரை என்னசண்டை மேலும் இந்தராக்ஷதன் மகாநுன் மார்க்கன் இவனுடனே என்னபோராட்டம் இந்தச் சண்டையைவிட் டு உன் தமையனையுந் துரௌபதையையுந் தேடப் போவென்று சொல் ல, அர்ச்சுனராஜனும் அந்த மாயாசந்நியாசி யினுடைய வார்த்தை யைக் கேட்டுக் கலீலென்று நகைத்து இதுராக்ஷத மாயை யென்று நி னைத்து அந்தமாயா சந்நியாசியை இரண்டு துண்டமாகக் கண்டித்து விட்டு அப்பால் அந்தபீஷ்ணனுடனே எதிர்த்துச்சற்றுநேரம் போரா டிகடைசியில் அவனுடைய சாரதியையுங் குதிரைகளையும் கண்டித்து ரதத்தையும் பொடியாக்கிப் பின்பு ஒருதிவ்விய பாணத்தினால் பீஷ் ணனுடைய சிரசையுங் கண்டித்துத்தள்ளி பிற்பாடு தேவதத்தத்தை எ டுத்து வாயினிடமாகவைத்துப் பம்பம் மென்று அஷ்ட திசைகளுஞ் செவிடுபடும்படியூதினான். அதுகண்டு மற்றராஜாக்களனைவரும் அவர வர்களுடைய சங்கங்களை யெடுத்து ஊதினார்கள். அப்பொழுது அங் கேதப்பியிருந்த ராக்ஷதசேனைக ளெல்லாரும்பயந்து ஓடிப்போய் வி ட்டார்கள். அதன்பிறகு அர்ச்சுனராஜனும் அம்சத்துவஜன் முதலான பிரமுகாளுடனேயும் சதுரங்கபல சேனைகளுடனேயும் அந்தப் பட்ட ணத்தினுள் பிரவேசித்து ராக்ஷதர்களுடைய அரமனைகளெல்லாம் சே னைகளுக்குக் கொள்ளைகொடுத்து பீஷ்ணனுடைய அரமனையி லிருந் தஅபரிமிதமானதிரவியங்களையெல்லாம்எடுப்பித்துப்பொதிப்பொதி யாகக்கட்டி எழுநூறு ஆனைகள்பேரிலும் பதினாயிரங் குதிரைகள்பே ரிலும் போட்டு காலாள்கள்பேரிலும் எடுப்பித்து அஸ்தினாபுரத்தி ற்கு அனுப்பிவைத்து பிற்பாடு அஸ்வமேதக்குதிரையை விட்டு அதின் பிறகே அர்ச்சுனராஜனானவன் ரதாரூடனாய் சகலசேனா சமுத்திரங்க ளும் புடைசூழ்ந்துவரத்தக்கதாக நடக்கும்போது அந்தக் குதிரையா னது பாண்டியநாட்டுக்குச் சமீபத்திலிருக்கிற மணிபுரமென்னும் ப ட்டணத்துக் கோட்டைவாசற்படி யோரத்தில் பச்சென்றபுல்லைக் கண் டு மேய்ந்துகொண்டிருந்தது கேட்டீரோ ஜெனமேஜெயமஹாராஜா வே! அந்தமணிபுரமான தெப்படிப்பட்டதென்றால்,இந்திரநீலரத்தின த்தினால் கல்லுகளடுக்கி தங்கத்தினாற் சேறுசெய்து- அரமனைகள்- ஆஸ் தானங்கள்- மெத்தைகள்- மேடைகள்கட்டி விளங்கப்பட்டது, குடிக ள்வசிக்கின்றவீடுகளும் நவரத்தின மயமாகவும் சுவர்ணமய மாகவும் சகலவேடிக்கைகளுடனேயும் விளங்கப்பட்டது அதல்லாமலும் கோ

புரங்களுடைய உயர்ச்சியைக்கண்டு சூரியபகவானும் பக்கமாகச்சாய்ந்துபோவார். அவ்வகைப்பட்ட விச்சித்திரங்களுடனே விளங்குகின்ற மணிபுரத்தை அர்ச்சுனராஜன் கண்டு அம்சத்துவஜராஜனைப் பார்த்து ஓய்ராஜேந்திரா! இத்தனைசம்பிரமத்துடனே பிரகாசிக்கின்ற இந்தப் பட்டணத்திற்கு அரசன் யாவன் அவன் பெயரென்ன அவன் எவ்வளவுசாமார்த்தியமுள்ளவன் அதுகள் உமக்குத் தெரிந்திருக்குமல்லவோ சற்றேசொல்லுமென்றுகேட்க அதுகேட்டு அம்சத்துவஜனும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் கிரீடீ! இந்தப்பட்டணம் மணிபுரமென்னும் பெயரையுடையது, இதற்கு அரசன் வீராதிவீரனானபப்பிரவாகன் அவன் மகாசவுரியபராக்கிரமமுள்ளவன் அவன் உம்முடைய குமாரன்தான் அஃதெப்படியென்றால்.

நீர்தீர்த்தயாத்திரைவந்தபொழுது பாண்டியராஜன் குமாரத்தியான சித்திராங்கதையினிடத்தில் உமக்குப்பிறந்தவன் மகாவீரஉத்தண்டன் ஆகையினால்தம்முடையகுதிரையானது அவனுடையபட்டணத்திற்குள்போகாமற்போனாலாச்சுது, அப்படியில்லாமற்போய் நமது குதிரை அவன்கையிலகப்பட்டுக்கொண்டால் அப்புறம் ஸ்ரீசயிலாபதியாகிய பரமசிவன்வந்தபோதிலும்குதிரையை விடுவிக்ககூடாதென்றுசொல்லிக்கொண்டு நடக்கையில்அதற்குள்ளே அவிடத்தில் பப்பிரவாகன் சேனாதிபதியான சுமுத்திரியென்கிறவன் சாரிமார்க்கமாய்கோட்டைவாசல் ஓரமாய்வருகிறபோது அஸ்வமேதக் குதிரையைக்கண்டு ஆச்சரியப்பட்டு அதைப்பிடித்துக்கொண்டு கோட்டைக்குள்ளே கொண்டுபோய் நவரத்தினகசிதமான மண்டபத்தில் சகலராஜ கூட்டங்களுடனே கொலுவாயிருக்கின்ற பப்பிரவாகனைக் கண்டு தெண்டனிட்டு ஐயா! ராஜநந்தனா! இந்தக்குதிரையானது நமதுகோட்டை வாசலின் ஓரத்தில்வந்து புல்லைமேய்த்துக்கொண்டிருந்தது,அதைக்கண்டுநான்பிடித்துவந்தேனென்றுசொன்னான். அதுகேட்டு பப்பிரவாகனும் சிம்மாசனத்தைவிட்டு எழுந்திருந்துவந்துகுதிரையினுடையலலாடத்திற்கட்டியிருக்கின்றவிருதாவொளியைவாசித்துப்பார்த்து தலையையசைத்து புன்சிரிப்பாகச்சிரித்து சேனாபதியைப்பார்த்து ஓய் சுமுத்தீ! இது ஆருடையகுதிரையென்றிருக்கிறாய்என்னுடைய பெரியதகப்பனாராகிய தர்மபுத்திரரானவர்யாகஞ்செய்ய நினைத்து அவர்விட்டகுதிரையாகும். இந்தக்குதிரையின்பிறகே அகண்டித வீரபராக்கிரமசாலியான என் தகப்பனாராகிய அர்ச்சுனமஹா ராஜன்வருகிறார் நானும்அவரைப்பார்க்கவேண்டுமென்றுநெடுநாளாய்க்கோரிக்கொண்டிருந்தேன் அந்தக்கோரிக்கை இன்றையத்தினம் ஈடேறியதென்று சந்தோஷிகரமாய்ச்சொல்லிக்கொண்டிருக்க, அதிலேமேற்குத்திசையில் சூரியபகவான் அஸ்தமானமாகினார். அப்பொழுது பப்பிரவாகனும் தன்னுடைய சேனாதிபதியைப்பார்த்து ஓய் சுமுத்தீ! இப்பொழுது அஸ்தமானமாகிவிட்டதே ஆதலால் ராத்திரிப்பொழுதுக்கு இந்தக்கு

திரையைப் பத்திரமாகதம்முடைய குதிரைலாயத்தில் கட்டிவைபொழுதுவிடிந்தபின்பு என்தகப்பனிடத்தில் குதிரையைக் காணிக்கையாகக்கொண்டுபோய்வைத்து அவரைச்சந்தோஷிப்படுத்தி அழைத்துக்கொண்டுவந்து இந்தமணிபுரத்தை அவருக்கேபட்டங்கட்டிவைத்து நான் அவரைச்சேவித்துக் கொண்டிருக்கவேண்டும். ஆதலால் நீ அதிஜாக்கிருதையாய் காணிக்கையாகக்கொண்டுபோகிறதற்கு அநேகமாயிரந்தங்கத்தட்டுகளில் பட்டுபட்டாவளிகளும் நவரத்தின ஆபரணங்களும் மாணிக்கப்பதக்கங்களும் - முத்துத்தாழ்வடங்களும் - கந்தபுஷ்பபரிமளமாலைகளும் - கர்ப்பூரதாம்பூலமும் - நல்லருசிகரமானபழவகைகளும் - தேங்காய்களும் - பால் - தயிர் - நெய்களும் - பணியாரவகைகளும் - இன்னமுண்டான உசித வஸ்துக்களும் முஸ்தீது பண்ணி இதுவல்லாமல் பதினெட்டுவித மேளவாத்தியங்களையும் நாட்டியப்பெண்களையும் ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையும் ராத்திரிக்குத்தானே எச்சரிக்கையாய் ஆயுத்தப்படுத்திவை யென்று உத்தாரம்பண்ணியனுப்பினான்.

அதுகேட்டு சுமுத்தியும் அப்படியேநல்லதென்றுபோய் சகலவஸ்துக்களையும் சேனைகளையும் முஸ்தீதுபண்ணிவைத்தான். பின்புமறுநாள் காலமே பப்பிரவாகனும் எழுந்திருந்து நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு சர்வாலங்கிருதனாய் சகலசேனைகளுடனும் சகலவஸ்துவாகனாதிகளுடனும் அஸ்வமேதக் குதிரையுடனும் முஸ்தீதாகப் புறப்பட்டு மணிபுரத்தைவிட்டு வெளியேவந்து பதினெட்டுவகைமேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கத்தக்கதாக சர்வாடம்பரத்துடனேவந்து இதற்குமுன்னமே குதிரை பிடிபட்டுப்போச்சுதென்றுசேதிகேட்டு மகாகோபங்கொண்டு யுத்தத்திற்கு ஆயுத்தமாயிருக்கின்ற அர்ச்சுனமகாராஜனைக்கண்டு அவருக்குத் தான்கொண்டு வந்த குதிரைமுதலான சகலவஸ்துக்களையுங்காணிக்கையாகவைத்து சாஷ்டாங்கமாகவிழுந்து தெண்டனிட்டு இரண்டுபாதங்களையுங் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு ஒப்ஜபா! சவுரியபராக்கிரமரான தேவரீருடைய குதிரையென்றறியாமற் பிடித்துக்கொண்டு பின்புவிருதா வோளியை வாசித்துப்பார்த்துத் தெரியவந்ததனால் உம்முடையபாதத்திற் கொண்டுவந்துஒப்புவித்தேன் இந்தப்பிழையைத்தேவரீர் மன்னித் தருளவேண்டும். அல்லாமலும் பிள்ளையானவன் தகப்பனுக்கு எத்தனைகுறைசெய்தாலும் பொருத்தருள வேண்டியதல்லாமல் கோபிக்கக்கூடாதல்லவா! அதனால்தேவரீர் புத்திரனாகிய என்பேரில்குறைவைபாமல்கிருபாநிருஷ்டிவைத்து நான்கொண்டுவந்த வஸ்துக்களையுங் கைக்கொண்டு என்னையும் என்னுடையசீர்மைபூமிகளையும் உம்முடைய ஆதீனப்படுத்திக்கொண்டு என்பேரில் துவேஷமில்லாமல் ரக்ஷித்தருளவேண்டுமென்று அநேகவிதமாகத் தோத்திரம்பண்ணுகிறபோது அம்சத்துவஜமகாராஜனும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! புத்திரன்

பேரில் துவேஷிம்வேண்டாம் தயவுசெய்துரக்ஷிபுமென்று வெகுபிரி
யவசனமாகச் சொல்லவும்பிள்ளையும் - விஷியகேது-பிரத்தியுமனன்
அனுசாளுவன் - எவ்வர்ணுசுவன் - நீலத்துவசன் முதலான ராஜாக்
களும் அர்ச்சுனனைப்பார்த்து பப்பிரவாகன்பேரில் கோபம்வேண்
டாம் சிநேகமாகின்றதே நல்லதென்று அநேகவிதமாகச் சொல்லவும்
அவர்கள் சொல்லையுங்கேளாமல் தேவர்களாலும் விதிமுறையைத்
தள்ளக் கூடாதபடியினால் அர்ச்சுனராஜனும் ஆக்ருஷித்துடனேபப்
பிரவாகனைக்காலினால் உதைத்துத்தள்ளிவிட்டு அவனைப்பார்த்து அடா
பப்பிரவாகா! நீ ஒரு க்ஷத்திரியனோ! குதிரையைப் பதட்டமாகப் பி
டித்துக்கொண்டு பின்பு அநேகஞ்சேனைகள் வந்திருக்கிறதைக்கண்டு
பயந்து சரணமடையவந்தாயோ! நீ ஒருசேவகனோ! நீஎனக்குப் பி
றந்தவனென்றுசொன்னாயே! நீஎனக்குப்பிறந்தவனல்ல! உன்னுடை
யதாயார் உன்னை வைசியனுக்குப்பெற்றிருக்கவேண்டும் அப்படியில்
லாமல் நீ எனக்குப்பிறந்திருந்தால் உனக்குச் சவுரியபராக்கிரமமுண்
டாயிருக்காதோவென்றுசொன்னான்.

அந்தவசனங்களையெல்லாம் பப்பிரவாகன்கேட்டு மகாகோபதீ
பிதனாய் அர்ச்சுனராஜனைப்பார்த்து ஐயா! குந்திநந்தனா! தேவரீர் எத்
தனையானாலும் இப்படிப்பட்டவசனங்களைச் சொல்லலாகுமோ!சற்று
கிலும்எண்ணிப்பாராமல் என்தாயாரையுந் தூஷிக்கலாகுமோ!ஆனால்
நான்வைசியனுக்குப்பிறந்ததும் க்ஷத்திரியனுக்குப் பிறந்ததும் இன்
னஞ்சற்றுநேரத்தில் தெரியவருகின்றது, ஆதலால்உம்முடைய சேனை
களையெல்லாம் சண்டைக்குமுஸ்தீதுபண்ணிக்கொள்ளுமென்றுசொ
ல்லிஅஸ்வமேதக்குதிரையையும் காணிக்கைகப்பங்களையும் மணிபுரத்
திற்கு அனுப்பிவிட்டுதன்னுடையசேனாதிபதியான சுமுத்திரையழை
த்துஓய்சுமுத்தி! நீபோய்நம்முடையசேனைகளையெல்லாம்யுத்தத்திற்
குஆயுத்தப்படுத்திவையென்றுகட்டளையிட்டனுப்பிவிட்டுபின்பு பப்
பிரவாகனும் தேரின்பேரி லேறிக்கொண்டு மதுராபுரிக்குப் போய்
தனது இஷ்டதேவதையானசொக்கநாதருடைய கோயிலுட்புகுந்து
அந்தசுவாமிக்குப்பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணிபூசைசெய்துஇரண்
டுகையையுஞ்சிரசின்பேரில் அஞ்சலியாகவைத்துக்கொண்டுஅந்தசொ
க்கலிங்கத்தைப்பார்த்து அநேகவிதமாகத் தோத்திரம்பண்ணி அப்
பால் உலகமாதாவான மீனாக்ஷியம்மன் கோயிலுக்குப் போய்பிரத
க்ஷண நமஸ்காரம்பண்ணி பூசைநைவேத்தி யங்கள்செய்து முடித்து
கைகளைக்கட்டிக்கொண்டு அந்தமகாதேவியைப்பார்த்து ஓய் அம்மா!
மஹாதேவி! சச்சிதானந்தி! சங்கரீ சாம்பவி - சர்வஜீவதயாபரீ- சர்
வலோகரக்ஷகி - மகேஸ்வரீ - கங்காதரீ - நீலகண்டாயீ - நிர்மலீ - சதுர்
வேதவந்திபநாயகி-மஹாபரமேஸ்வரீ - சாலோகசாமீப- சாரூப சாயு
ஜ்யகாரணி - நாராயணீ-மாதங்கீ - வாராகி - பர்வதராஜபுத்ரீ - பக்தவ
த்சலீ - பரமதயாளீ - திரிசூலி - ஸ்ரீ அகிலாண்ட கோடிபிரம் மா

ண்டநாயகி - துஷ்டநிக்கிரகி - சிஷ்டபரிபாலனி - அடியேனைரக்ஷியும்ரக்ஷியும்! அடியேனுக்குவந்துசம்பவித்த ஆபத்தைத்தீரும் அம்மாவென்று இப்படி அநேகவிதமாகத்தோத்திரஞ்செய்தான். அதுகண்டு அந்தமகாதேவியும் மனமகிழ்ந்து பப்பிரவாகனைவாரும்பிள்ளாயென்றுசமீபத்திலழைத்து தன்னுடையவிபூதியை நெற்றியிலே தரித்து சகலயிடைகளும் பரிகாரமாக வேண்டுமென்று ஆசீர்வாதம் பண்ணி பின்னையும் பப்பிரவாகனைப்பார்த்து அப்பா! நீமுன்னதாகப் புறப்பட்டு சண்டைக்குப்போவாயாகில் உனக்கு முன்னமே நானும் உனக்குத்தெரியாமல்வந்திருந்து அர்ச்சுனனுடைய சேனைகளையெல்லாங்கண்டிக்கிறேன் பயப்படாதேயென்று ஆசரித்து அப்பொழுதே அந்தமஹாதேவியும் வெள்ளைக்குதிரையின்மேரில் ஏறிக்கொண்டுமுப்பத்திரண்டு ஆயுதங்களையுந்தாங்கிக்கொண்டு பிநாகபாணியாய் பூதவேதாளகணங்களுடனே புறப்பட்டு பப்பிரவாகனுடனே நடந்து அவன் கண்ணுக்குத்தெரியாமல்மாய்கையாய்மறைந்துபோனாள்.

பப்பிரவாகன் யுத்தம்

பப்பிரவாகனும்மனோஉச்சாகசந்தோஷித்துடனே நவரத்தினமயமானதேரிலேறிக்கொண்டு தன்னுடையசேனைகளின் சமீபத்தில்வந்து தனது சேனாதிபதியாகிய சுமுத்திரியைப்பார்த்து நீங்கள் இப்பொழுதுபின்னிடாமல் யுத்தம்பண்ணுங்கோளென்று உத்தரவுபண்ணினான். அதுகேட்டு சுமுத்திரியும் அப்படியேநல்லதென்று ஏழுகோடிரதத்தையும் ஒரு அர்ப்புதம் யானைகளையும், இரண்டுஅர்ப்புதம் குதிரைகளையும், மூன்றுஅர்ப்புதங் காலாள்களையும், காலசக்கிரவியூகம்போல அணிஅணியாகவகுத்துரணபேரிகைவெண்சலப்பேரிகை முதலானதுகளை அண்டகடாகங்களுமதிரும்படியறைவித்தான் பப்பிரவாகனும் தன்னுடைய சேனைகளுக்குமுன்பாக யுத்தசன்னத்தனாய் கனகரத்தினமயமான தேரின்மேலேறிக்கொண்டு மஹா உக்கிராகாரத்துடனே நின்றான்.

அப்பொழுது அர்ச்சுனனும் அதுதெரிந்து தன்னுடைய சேனைகளையெல்லாம் க்ஷணமாத்திரத்தில் அர்ச்சுனனுடையசேனைகளும் பப்பிர வாகனுடைய சேனைகளும் எதிர்த்து ஒருவர்க்கொருவர் மகாரோஷித்துவேஷங்களுடனே போராடுகிறபோது ரதக்காரர்களுடனே ரதக்காரர்களெதிர்த்து அவரவர்களுடைய வில்லைவளைத்து அநேகமாயிரந் திவ்வியபாணங்களைப்பிரயோகஞ்செய்து போராடினார்கள் ஆனைக்காரர்களுடனே ஆனைக்காரர்களெதிர்த்து ஒருவர்க் கொருவர் ஆக்ருஷித்துடனே சஸ்திர அஸ்திரங்களினாற் போராடினார்கள். குதிரைக்காரர்களுடனே குதிரைக்காரர்களெதிர்த்துகத்திகளினால் ஒருவர்

கிகொருவர் வெட்டிக்கொண்டு போராடினார்கள் காலாள்களுடனே காலாள்களெதிர்த்துசத்தி.சூலம் - கதை,தோமரம்,பிண்டிபாலம்முதலானமுப்பத்திரண்டு ஆயுதங்களினாலும் போராடினார்கள்.அப்படிபோராடுகிறபோது இரண்டுசேனைகளிலும் அநேகஞ்சேனைகள் மடிந்துவிட்டது. எங்கேபார்த்தாலும் பிணமலைகளாகக்குவிந்து ரத்த வெள்ளம் ஆறுகப்பெருகி யோடியது அதுகண்டு பப்பிரவாகனுந் தன்னுடையரதத்தைத் தூண்டி அர்ச்சுனனுடையசேனைகளையெல்லாங் கண்டதுண்டங்களாக்கும்பொழுது அனுசானுவன் கண்டு கோபதீப்தனாய் எரித்துவிழுந்துதன்னுடையரதத்தைத்தூண்டிவில்லைக்குணத்தொனிபண்ணி அநேகமாயிரம்பாணங்களைப் பிரயோகஞ்செய்து பப்பிரவாகனுடையமார்பிலேதைக்கும்படிசெய்தான். அந்தவருத்தத்தைப் பப்பிரவாகன் எவ்வளவுஞ் சட்டைபண்ணாமல் ஒரு திவ்வியபாணத்தை எடுத்துப்பிரயோகஞ்செய்து அனுசானுவனை நோகப்பண்ணி மேலும் அநேகமாயிரம்பாணங்களை எடுத்துவில்லினிடமாகச்சந்தித்து எய்கிறபோது அந்த பாணங்கள்வந்து சுறுக்குசுறுக்குமென்று தைக்க அதனால் அனுசானுவனும் நிர்வகிக்கமாட்டாமல் மிகவும் நொந்து ரதத்தின்பேரில்விழுந்து மூர்ச்சையடைந்தான். அதுகண்டு பிரத்தியுமனனும் மகாரோஷித்துடனே பப்பிரவாகன்பேரில்ரதத்தைத்தூண்டிதன்னுடையவில்லிலே அதிதீக்ஷண்யமான பாணங்களைப் பிரயோகஞ்செய்து பப்பிரவாகனைநோகப்பண்ணி சாரதியையுங் குதிரைகளையும் ரத்தமயமாக்கி ரதத்தையும் அப்புறம் இப்புறம் போகவொட்டாமல் சிக்குப்படுத்தி பின்னையும் அநேகம் அஸ்திரங்களைப் பிரயோகம் பண்ணினான் அதுகளையெல்லாம் பப்பிரவாகனும் ஒரு அர்த்த சந்திரபாணத்தினால் நடுவாதியில்கண்டித்துவிட்டு பின்னையும் சூரியகிரணங்களைப்போல் அதிதீக்ஷண்யமான அநேகம்பாணங்களைத் தொடுத்துப் பிரயோகம்பண்ணினான். அதுகளும் ஒன்றோடொன்றுஉராய்ந்துகொண்டு நெருப்புப்பொறிகளைக் குமில்குமிலென்றுகக்கிக்கொண்டு அதிவேகமாகவந்து பிரத்தியுமனனுடைய சரீரமுழுதும் சுறுக்கு சுறுக்குமென்று தைக்கும்போது ஸ்ரீ ஹரிகுமாரனாகிய பிரத்தியுமனனும் ஆயாசமடைந்து தயிரியம்விடாமல் ஆக்கிர வியாக்கிரமநிக்குமோ தனைப் பல்லுகளை நெறநெற வென்று கடித்துக் கொண்டு வில்லைக் குணத்தொனி பண்ணி அந்த வில்லிலே காளகூட விஷத்தையொத்த அநேகம்பாணங்களைச் சந்தித்துப் பிரயோகம்பண்ணி பப்பிரவாகனுடைய சாரதியையும் குதிரைகளையும் அதஞ்செய்து ரதத்தையுஞ் சக்கைசக்கையாகப் பேர்த்தெறிந்து பப்பிரவாகனையும் கால்கையாடவொட்டாமல் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான்.அதனால் பப்பிரவாகனும் மிகவும்நொந்து மூர்ச்சையடைந்தான். சேனைகளெல்லாருஞ் சிதறி ஓடிப்போனார்கள் அப்பொழுதுபிரத்தியுமனன் மிஞ்சி தன்னுடைய ரதத்தைச் சக்கிராகாரமாய்த் திருப்பிக்கொண்டு

பப்பிரவாகனுடைய சதுரங்கபல சேனைகளையுஞ் சின்ன பின்னமாகக் கண்டித்து எங்கேபார்த்தாலும் பிணமலைகளாகக் குவிக்கும்போது சேனைகளெல்லாம் நாலு மூலையிலும் ஓட்ட மெடுக்கத்தலைப்பட்டதுகள். அதுகண்டு பிரத்தியுமனன் ஓடிப்போகின்றவர்களையும் ஓடவொட்டாமல் மடக்கிமடக்கிக் கொல்லுகையில் பப்பிரவாகனும் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து மகாகோபதீப்தனாய் எரிந்துவிழுந்துவேறே ஒரு தேரிலேறிக்கொண்டு வில்லைக் குணத்தொனி பண்ணி ஓடிப்போகின்ற தன்னுடைய சேனைகளையெல்லாம் பயந்து போகாதீர்களென்றுகையமர்த்தி நிறுத்தி பிரத்தியுமனனுடனே எதிர்த்துப் போராடி தன்னுடைய பாணக்கினியினால் அவனைநோகச்செய்து அவனதுரதத்தையும் பொடிபொடியாகச்செய்துவிட்டான்.

அதுகண்டு பிரத்தியுமனன் வேறே ஒரு தேரில் ஏறிக் கொள்ள அதனையும் பொடியாக்கி விட்டான். அதனால் பிரத்தியுமனனும் கோபதீப்தனாய் வேறேஒரு தேரிலேறி வில்லைவளைத்துக் குணத்தொனி பண்ணி அதிதீக்ஷ்ண்யமான பாணங்களைப் பிரயோகஞ்செய்து பப்பிரவாகனுடைய கைவில்லைக்கண்டித்து அவனதுரதத்தையும் பொடியாக்கிவிட்டான். அவன்மறுபடியும் ஒருதேரிலேறினான். அதனையும்பொடியாக்கி விட்டான். அப்படி நூறுதேர் மட்டும் பொடி பொடியாய் வெட்டுண்டு மகமேருவைப் போல குப்பல் குப்பலாகக் குவிய அதுகண்டு கடைசியில் ஒருதேரிலேறி வில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அளவிறந்த பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து பிரத்தியுமனனுடைய சரீரமுழுதும் சதைசதையாகப் பேர்த்தெறிந்து அவனதுரதத்தையும் தூளாக்கிவிட்டான். அப்பொழுதுபிரத்தியுமனனுங் கோபங்கொண்டு பாதசாரியாய் ஒருகதாயுதத்தை எடுத்துக்கொண்டு ஓடிவருகையில் பப்பிரவாகனும் ஒரு கதாயுதத்தை எடுத்துக்கொண்டு வந்து இரண்டுபேரும் எதிர்த்து மகா ரோஷித்துடனே போராடி பின்னையும் சத்தி- சூலம்- சக்கரம்- கட்கம்- தோமர முதலான ஆயுதவகைகளினாலும்வெகுநேரம்போராடி கடைசியில் ஒருவர்க் கொருவர் ஈட்டிகளினால் குத்தியும்- வெட்டியும்- இடித்தும்- அடித்தும்- தட்டியும்- முட்டியும்- உதைத்தும்- சதைத்தும்- இப்படி நானாவிதமாகப் போராடி இரண்டுபேரும் மூர்ச்சை யடைந்தார்கள். அதிலே பப்பிரவாகன் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து ஒருதேரிலேறிக்கொண்டுஉக்கிராகாரனாய் தன்னுடையவில்லைக்குணத்தொனிபண்ணி அர்ச்சுனனுடையசேனைகள்பேரில் கவிந்துபாணங்களை ப்ரயோகித்து சேனைகளையெல்லாம்கால்மாடுதலைமாடாகச்செய்யும்போது அம்சத்துவசராஜனுங் கண்டுஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அர்ச்சுனராஜனை நம்பிடத்தில் ஒப்புவித்துப்போயிருக்க நாம்இப்படிபார்த்துக்கொண்டிருக்கிறது தர்மமல்லவென்று தன்னுடையதேரைத் தூண்டிபப்பிரவாகன்பேரில் அநேகம்பாணங்களைப் பிரயோகம்பண்ணி அவனதுசார

தியைக் கண்டித்தான். சாரதி இறந்துபோகவே ரதத்தைக் குதிரைகள் இழுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டது. அதுகண்டு அம்சத்துவஜனும் பப்பிரவாகன் சேனைகள்பேரில் விழுந்து ரதங்களைப் பிளந்தும் குடைகளையறுத்தும் கொடிக்கம்பங்களை வெட்டியும் வில்லுகளைக் கண்டித்தும் குதிரைகளைக்கொன்றும் ரதச்சாரர்களை அதம்பண்ணியும் ஆனைகளைக்கொன்றும்மாவெட்டியர்களைத்தள்ளியும்ரவுத்தர்களைத்தட்டியும் காலாள்களைக் கண்டதுண்டஞ்செய்தும் கவசங்களைக்கிழித்தும் கிரீடங்களையுடைத்தும் சத்திகளைநறுக்கடித்தும்கதைகளைத்துண்டித்தும் தோமரங்களைத்துண்டித்தும் இப்படி சின்னாபின்னப்படுத்தி எங்கேயார்த்தாலும் ரத்தப்பிரவாகமாய்ப் பூதவேதாளகணங்களுக்குத் திருப்திசெய்வித்து ஒரு நொடிக்குள் ஒருஅக்குரோணிசேனைகளைத் தும்சப்படுத்தி விட்டான். அதிலே பப்பிரவாகனும் வேறே ஒரு சாரதியை அமர்த்திக் கொண்டு யுத்தசன்னத்தனாய் மகாரோஷத்துடனேவந்து அம்சத்துவஜனுடனே எதிர்த்து அநேகந்திவ்வியபாணங்களைப் பிரயோகித்து அவன் கையில்வில்லையுங் கண்டித்துசாரதியையுந் துண்டித்து குதிரையையும் அதம்பண்ணி தேரையும்பத்தலாகப்பிளந்து அந்தராஜனுடைய மார்பிலும் ஒன்பது குரூரபாணங்களைத்தைப்பிக்க அதனால் அவன் மெத்தவும் நொந்து தேரின்பேரில் விழுந்து மூர்ச்சையடைந்தான் அதுகண்டு எவ்வர்ணாசுவன் குமாரனாகிய சுவேகனென்கிறவன் மகாரோஷத்துடனேவந்து பப்பிரவாகனுடனே எதிர்த்து பாணப் பிரயோகம் பண்ணுகையில் அதுகண்டு பப்பிரவாகனுங் கோபங்கொண்டு தன்னுடையவில்லிலே அதி தீக்ஷண்யமான பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து சுவேகனுடைய தேரையும் சாரதியையும் குதிரைகளையும் தும்சம்பண்ணி அவன் கையில்வில்லையுங்கண்டித்து கவசத்தையும்அறுத்து பின்னையும் ஒரு திவ்வியபாணத்தினால் சுவேகனுடைய சிரசையுங்கண்டித்துவிட்டான்.

அதுகண்டு எவ்வர்ணாசுவனும் தன்குமாரனைக் கொன்றுவிட்டானேயென்று ஆக்கிரகித்து தன்னுடைய ரதத்தைத்தூண்டி சிறிது பாணங்களைப் பப்பிரவாகன் பேரில் பிரயோகம் பண்ணினான். அதுகளையெல்லாம் பப்பிரவாகன் கண்டித்து ரோஷித்துவேஷனாய்த் தன்னுடையவில்லிலே பயங்கரமானபாணங்களைச் சந்தித்து எவ்வர்ணாசுவனை வியர்த்தனாகநோகப்பண்ணி அவனை மூர்ச்சையாய் விழத்தள்ளி அப்பால்நீலத்துவஜனுடனே போராடி அவனையும் மூர்ச்சையாய் விழத் தள்ளிபின்னையும் கிருதவர்ம்மன் சாத்தகி அனிருத்திரன் மேகவர்ணன் முதலான துரைகளையெல்லாம் ரத்தமயமாக்கி மூர்ச்சையாய் விழத்தள்ளிபின்னையும் காலாந்தகனைப்போலச் சீறிவிழுந்து அர்ச்சுனனுடைய சேனைகளையெல்லாம் பாய்க்கிடையாய் விழத்தள்ளி அர்ச்சுனன் பேரிலும் எதிர்த்துவருகையில் அதுதெரிந்து அர்ச்சுனனும் சிந்தாக்கிரந்தனாய் விசாரப்பட்டு ஓ குமாரகா! விஷ்வகேதர் இந்த பப்பிரவாக

னுடையசவுரியபராக்கிரமத்தைப்பார்த்தாயோ! நாம்இரண்டுபேர்மாத்திரம்தப்பியிருக்கிறோம் மற்றவர்களெல்லாம் விழுந்துவிட்டார்கள். நாமும்மடிந்துபோகிறவேளைவந்து சம்பவித்தது தர்ம்மபுத்திரர்செய்கிற யாகமும் நிறைவேறாமல் விக்கினமாய்ப்போகின்றதே இதுவரையில் சமுத்திரமெல்லாந்தாண்டி இப்போது சிறியகால்வாயினிடத்தில் முழுகலாச்சுதே இதற்கென்னசெய்யலாம் ஒய்குமாரகா! நீதர்ம்மபுத்திரருக்குப் பிரியகுமாரனாகையால் நீ சண்டைபண்ணவேண்டாம் நீ அஸ்தினபுரத்திற்குப்போய் தர்ம்மராஜாவையும்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையுஞ் சேவித்துக்கொண்டு சுகமாயிரு நான் இவனுடனே போராடி இவனைஜெயித்து குதிரையைக்கொண்டுவந்துசேருகிறேன். இல்லாவிட்டால் ரணக்களத்தில் மடிந்தாகிலும் வீரசொர்க்கத்தை யடைகிறேன்! இதல்லாமல் தர்ம்மபுத்திரருடையபாக்கியம் எப்படியிருக்கின்றதோ அவருக்கு அதிர்ஷ்டமில்லைபோலத்தோற்றுகின்றது. ஒய்விஷ்வகேதா! நான் என்னசெய்வேனென்று அர்ச்சுனன் விசாரமாகச் சொல்ல அதுகேட்டு விஷ்வகேதுவும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய்! ஐயா! நீர் இப்படி யோசிக்கவேண்டாம் நான் இருக்கும்போது உமக்கு என்னகுறையிருக்கின்றது நீர் இப்போது எனக்குச்செலவுகொடுத்தனுப்பும் நான்போய் ஒருநிமிஷத்திற்குள் அந்ததுன்மார்க்கனைக்கண்டித்துவருகிறேன் பாருமென்று சொல்லி விஷ்வகேதுவும் அர்ச்சுனனிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு யுத்தசன்னத்தனாய் தேரின்மேலேறி வில்லைக்குணத்தொனிபண்ணி பப்பிரவாகனுடனே எதிர்த்து ரோஷித்துடனே திவ்வியபாணங்களினால் அவனை நோகவெய்தான் அதற்கு அவன் எவ்வளவும்பயப்படாமல் கோபதீப்தனாய் ஆக்கிரகித்து தன்னுடைய தேரைச்சமீபமாகத்தூண்டி தன்னுடைய வில்லிலே கோடையிடிக்குச்சமானமானபாணங் களைப் பிரயோகித்து விஷ்வகேதுவினுடைய சரீரமுழுதும் ரத்தமயமாக்கி சாரதியையும் குதிரைகளையுநோகப்பண்ணி அவன்கைவில்லையுங்கண்டித்து கியாவென்று சிங்கநாதம்பண்ணினான்.

அதற்குப்பின்வாங்காமல் விஷ்வகேதுவும் வேறே ஒருவில்லையெடுத்துக்குணத்தொனிபண்ணி கோபத்துடனே தன்னுடைய வில்லினிடமாக விஷங்களைக்கக்குகின்ற அதிதீக்ஷண்யமான பாணங்களை அநேகமாகத்தொடுத்துப் பப்பிரவாகனுடைய பாதாதிகேசபரியந்தஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்து ரத்தமயமாக்கி குடையையும் அறுத்துசாரதியையுங் குதிரைகளையுங் கொன்று ரதத்தையுஞ்செக்கைசெக்கையாகப்பேர்த்தெறிந்து ஆச்கிரவியாக்கிரம நிக்குரோதனாய் காலாக்கினிருத்திரனைப்போலஆக்கிரகித்து சிங்கநாதம் பண்ணினான்.

அதனால் பப்பிரவாகன்மெத்தநொந்து தயிரியத்தை விடாமல்வேறே ஒரு தேரிலேறி இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிகள் பறக்கத்தக்கதாக ஆக்ருஷித்துதன்னுடைய வில்லிலே வாய்வாஸ்திரத்

த்தை எடுத்துத் தொடுத்துப்பிரயோகம்பண்ணினான். அதுவும் அதிவேகமாகவந்து விஷ்வகேதுவினுடையரதத்தைக்குப்பென்று ஆகாசத்திற்கிளப்பிவிட்டது, அப்போது தேவர்களெல்லாம் விஷ்வகேது செத்தானென்றுசொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது விஷ்வகேதுவினுடைய ரதமும் ஆகாயத்தில் சக்கரம்போலச்சுழன்று பூமியில்விழுந்து சாரதிகுதிரைகளுடனே பொடியாகிப் போய்விட்டது, அதுதெரிந்து விஷ்வகேதுவும் தரையில்நேர்ப்பாகக்குதித்து மகா உக்கிராகாரனாய் வேறே ஒருதேரிலேறி வில்லை எடுத்துக்குணத்தொனி பண்ணி அந்தவில்லினிடமாக ஒருசுழல்பாணத்தைத் தொடுத்துப்பிரயோகம்பண்ணினான். அதுவும் காளகூடவிஷம்போல அக்கினிஜ்வாலையைவீசிக்கொண்டுவந்து பப்பிரவாகனுடையதேரை ஆகாசத்திற்கிளப்பிவிட்டது, அந்தரதமும் சூரியபகவானைக்கண்டு உம்முடையபேரனாகிய விஷ்வகேதுவும் பப்பிரவாகன் கையினால் இறந்துபோகிறானென்று யோகக்ஷேமங்களைச் சொல்லப்போனதுபோல சூரியமண்டலத்தைச்சேரப்போய் அந்த அனலினால் பக்கென்று எரிந்து சாம்பலாய் விழுந்துவிட்டது, பப்பிரவாகனும் பூமியில்விழுந்து ரத்தங்களைக்குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு மூர்ச்சையடைந்து சற்றுநேரத்தில் மீனாக்ஷியம்மையாருடைய ஆசீர்வாதத்தினால் தப்பிப் பிழைத்து மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து கோபதீப்தனாய் வேறே ஒருதேரிலேறிவில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக திவ்வியபாணங்களைத்தொடுத்துப் பிரயோகம் பண்ணினான். அதுகளும் கிருஷ்ணசர்ப்பம்போலவும் காலாக்கினியைப்போலவும் ஜ்வாலையை வீசிக்கொண்டுவந்து விஷ்வகேதுவினுடையமார்பில்தைத்து முதுகிலுருவிப்போய்விட்டது, இப்படிபப்பிரவாகனும் விஷ்வகேதுவும் ரோஷித்துவேஷித்துடனே (ஸ்ரீராமமூர்த்தியும்- இராவணனும்) எதிர்த்தாற்போலவும்-குமாரஸ்வாமியும்-தாருகாசூரனும்- எதிர்த்தாற்போலவும் தேவேந்திரனும் விருத்திராசூரனும் எதிர்த்தாற்போலவும் எதிர்த்து ஒருவர்க்கொருவர் செயிக்கவேண்டுமென்கிற அபேக்ஷையினால் பின்வாங்காமல் அஞ்சுநாள் ராத்திரியும் பகலும் போராடினார்கள். அதில் பப்பிரவாகனும் மிஞ்சி விஷ்வகேதுவினுடைய ரதத்தைச்சாரதிகுதிரைகளுடனே பொடிபொடியாக்கி கவசத்தையும் பத்தலாகக்கிழித்து சரீரமுழுதுஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்துவிட்டுவிஷ்வகேதுவைப்பார்த்து ஓய் அண்ணா! விஷ்வகேதா; நீ மகாவீராதி வீரனாகையால் என்னுடனே அஞ்சுநாள்மட்டுக்கும்போராடினாய் இப்போது நான் உன்னைக்கண்டிக்கிறேன் நீ உன்னுடைய இஷ்டதெய்வமான ஸ்ரீகிருஷ்ணபகவானைத்தியானம்பண்ணிக்கொள் உன்தகப்பனாகியகர்ணமகாராஜனை என்தகப்பனாகிய அர்ச்சுனன் கபடமாய் ரதத்தை எடுக்கட்டுமென்றுசொல்லும்பொழுதே அதைக்கேளாமல் கொன்றுவிட்டான் அப்படி நான் அநியாயம்பண்ணுகிறதில்லை, இன்னமும் உனக்குவே

ண்டிய சஸ்திர அஸ்திரங்களைக்கொடுக்கிறேன் அதுகளை நீ வாங்கிக்
கொண்டு சண்டைபண்ணென்றுசொல்ல, அதுகேட்டு விஷ்வகேதுவு
ம் ஆக்கிரகித்து-தோமரஞ்-சத்தி-சூலங்-கதை-இதுகளை றிவ்வுறிவ்வு
மென்று எடுத்துப்பிரயோகம்பண்ணினான்.

அதுகளையெல்லாம் பப்பிரவாகன்கண்டித்துவிட்டு மகாகோப
த்துடனே தன்னுடைய வில்லிலே ரவுத்திராஸ்திரத்தைஎடுத்துத்தொ
டுத்து அதிதேவதா பிரதிதேவா மந்திரங்களுடனே அபிமந்திரித்துப்
பிரயோகம்பண்ணினான் அதுவும் நெருப்புப் பொறிகளைக் கக்கிக்
கொண்டு பகபகவென்று எரிந்துக்கொண்டு தேவர்களெல்லாம் பயப்
பட்டுப்பார்த்துக்கொண்டிருக்க. அதிவேகமாகவந்து கிரீட மகரகுண்
டலங்களுடனே விளங்குகின்ற விஷ்வகேதுவினுடைய சிரசைக்கண்டி
த்துப்போய்விட்டது. அப்போது அந்தச்சிரசானது ஆகாசமார்க்கத்
திலெழும்பி ஹரீ ஹரீ- கோவிந்தா-கிருஷ்ணா- கேசவா-வரதா-பக்த
வத்ஸலா-பரமபுருஷாவென்று முறையிட்டுக்கொண்டு அர்ச்சுனனுடைய
பாதத்தில் வந்து விழுந்தது, அதுகண்டு அர்ச்சுனனும் சாவுக்குச்சரி
யானமூர்ச்சையடைந்து மகாவிசாரத்துடனே அந்தசிரசைப்பார்த்
து ஆ! குமாரகா! வீராதிவீரா! ஆ! சவுரியப்பிரதாபா! ஆ! அகண்டி
தவீரபராக்கிரமா! ஆ! தயிரியபுருஷா! ஆ! புத்திரசிகாமணி! நீ எங்
கே ஒளித்துப்போனாய் என்னை ஒருவனாக அனாதையைப்போல் விட்
டுப்போனாயே! நான் உன்னைப்பிரிந்திருந்து எப்படி நிர்வகிப்பேன்
நான் எந்தமுகங்கொண்டு அஸ்தினாபுரத்திற்குப்போவேன் தர்மபுத்
திரராஜனவர் விஷ்வகேது எங்கேயென்றுகேட்டால் நான் என்னசொல்
லுவேன் வீமசேனன்கேட்டால் நான் என்னசொல்லுவேன் என்தா
யாகிய குந்திதேவியாரும் தன்குமாரனான கர்ணன் இறந்துபோனத்
திற்கு விசாரமடைந்து தன்குமாரனுக்குக்குமாரனான விஷ்வகேது
இருக்கிறானென்று அந்த துக்கத்தைவிட்டு கர்ணனைப்போல உன்னை
ப்பார்த்துக்கொண்டிருந்தாளே அவளுக்குநான் என்னசொல்லுவே
ன். ஆ! வீராதிவீரா! வீரப்பிரதாபா அஸ்வமேதக்குதிரையினிமித்த
ம் எவ்வளவோ சத்துருவனுடனே போராடிக்கெலித்து குதிரையைக்கொண்டு
வந்து ஒப்புவித்து என்பிறகே இத்தனைநாள் வரைக்கும் குதிரையை
க்காப்பாற்றிக்கொண்டுவந்த மகானுபாவனாகிய நீ ரணக்களத்தில் சத்
துருவினுடைய கையினால் வெட்டுண்டுவிழுந்தாயோ! இனிநான் என்
னவென்று நிர்வாகம் பண்ணப்போகிறேன் ஆ! புத்திரகாவென்று அர்
ச்சுனனும் வெகுவாய்ப்பிரலாபித்து அழுகிறபோது அதுகண்டு பப்
பிரவாகன் சிரித்து தன்னுடைய ரதத்தைச் சமீபமாகக்கொண்டு வந்
து நிறுத்தி அர்ச்சுனனைப்பார்த்து ஐயா! குந்திநந்தனா! இப்பொழுது
வைகிடன் பிள்ளைபண்ணின சவுரியத்தைப்பார்த்தீர்களோ! நான் இன்
னமும் ராஜவர்க்கங்களுடைய கிரீடங்களையுடைத்து அந்தரத்நங்களை
யெல்லாம் விஷ்வகேதுவினுடைய சிரசில்போட்டுக்கொண்டு விக்கி

றைபம்பண்ணுகிறேன் இனி தேவரீர் ஒருத்தருமிருக்கிறீர் எங்கள் தாயார் சித்திராங்கதையை வேசியென்றும் தாசியென்றும் தூஷித்தபடியினால் அந்ததோஷமே உமக்கு இப்படிப்பட்ட ஆபத்து வந்து சம்பவித்தது; இனியேன் யோசனை பண்ணுகிறீர் தர்ம்மபுத்திரர்செய்கிற யாகமும் நிறைவேறப்போகுதோ? இன்னமும் நீர் குதிரையைவிடுவித்துக்கொண்டுபோக இருக்கிறீரோவென்று பரிகாசமாகச் சொல்ல, அந்தச்சொல்லெல்லாம் அர்ச்சுனனுடைய செவியினிடமாக நாராசங்காய்ச்சிவிட்டதுபோல நுழைந்துமகாகோபதீப்தனாய் விஷ்வகேதுவினுடைய தலையை ரதத்தின்பேரில்வைத்துவிட்டு காண்டீபத்தைக்குணத்தொனிபண்ணி உக்கிராகாரனாய்ப்பப்பிரவாகனைப்பார்த்து அடா பயலே! துன்மார்க்கா; ஏன் அடா தலைகீழாய்விழுகிறாய் நீ கையிலாகாத சிலரைக்கொன்றோமென்று கெர்வித்திருக்கிறாய் அந்தகெர்வத்தை இப்போது வெளிப்படுத்தி வைக்கிறேன் சற்றுநேரத்தில் பாரடாவென்று தன்னுடைய காண்டீபத்தில் அநேகந் திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்து பப்பிரவாகனுடைய ரதத்தைக்கண்ணுக்குத்தெரியவொட்டாமல் மறைத்து அவனது சேனைகளெல்லாங் கண்டதுண்டங்களாக்கி எங்கேபார்த்தாலும் பிணமலைகளாகக்குவித்தான்.

அதுகண்டுபப்பிரவாகனும்ஆக்கிரவியாக்கிரமதிக்குரோதனாய்தன்னுடையவில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அளவிறந்த அர்த்தசந்திரபாணங்களையும் அக்கினியாஸ்திரங்களையும் ஏராளமாகத் தொடுத்துப்பிரயோகித்து அர்ச்சுனன் விட்டபாணங்களையெல்லாம் நடுபாதியில்கண்டித்துவிட்டுஅவனது சாரதிகுதிரைகளையும்ரத்தமயமாக்கி அநுமானையுங் கெர்வமடக்கி அர்ச்சுனனையுங்கால்கைகள்ஆடவொட்டாமல் மெத்தவும்நோகப்பண்ணி அவனது சரீரமுழுதுஞ்சல்லடைக்கண்களாகத்துளைத்து உதிரமயமாக்கி சிங்கநாதம்பண்ணினான் அப்பொழுது அர்ச்சுனனும் ஆயாசமடைந்து கங்காதேவியினுடைய சாபம் சமீபித்திருக்கிறபடியினால் மிகுந்தபயத்துடனே காண்டீபத்தைக்கைசோரவிட்டு முன்பின்தோற்றாமல்சும்மாவிருந்து நாம் முப்பத்துமுக்கோடிதேவர்களையுங்கெலித்தோம்அப்போதும்இத்தனை ஆயாசமும் பயமுமில்லையே இப்போது இவன்கையிலே ஒண்டியாய் அநாதையைப்போல சிக்கிக்கொண்டுமடியுங்காலநேரிட்டதே இதற்குஎன்னசெய்கிறதென்று நினைந்து மறுபடியும் தயிரியம்விடாமல் ரோஷித்துடனே காண்டீபத்தையெடுத்துக் குணத்தொனிபண்ணி எப்படியும் என்பகையாளியைக்கொல்லுகிறேனென்று அந்தகாண்டீபத்தினிடமாக அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்து அதற்குவாய்வு மந்திரத்தை ஜெபித்து பிரயோகம்பண்ணினான். அதுவும்விருதாவாய் பப்பிரவாகனுடைய பாணத்தினால்வெட்டுண்டுபோய்விட்டது. பின்னையும் ஒரு அந்தகாரமான அஸ்திரத்தைஎடுத்துத்தொடுத்து அதற்குச்சூரியமந்திர

த்தைஉச்சரித்துப்பிரயோகம்பண்ணினான். அதுவும்வியர்த்தமாக அங்கனேவெட்டுண்டுபோய்விட்டது, இப்படி அர்ச்சுனனும் அநேகந்திவ்வியாஸ்திரங்களை எடுத்துத்தொடுத்து விருதாவாய் அஸ்திர பலன்களையெல்லாம்போக்கடித்து வெறிகொண்டவன்போலகங்காதேவி சாபத்தினால் மெய்மறந்து முன்பின்தோற்றுமல் பிரமைகொண்டு ரதத்தின்மேலில் காண்டீபத்தைநழுவவிட்டுச் சும்மாவிருந்தான்.

அப்போதுரத்தமழை பொழிந்தது, எலும்புகள்விழுந்தது, ஆந்தைகள் கூகாவென்று கூப்பிட்டது சுழல்காற்றடித்தது, சூரியனும் மழுங்கினதுபோலத்தோன்றியது, நக்ஷத்திரங்களுதிர்ந்தது, இப்படி அநேகமான அவசகுனங்களை யெல்லாங்கண்டு அர்ச்சுனன் மெத்த வருத்திலடைந்து ஸ்ரீகிருஷ்ணதேவரை நினைந்து துக்கப்பட்டான் அதுதெரிந்துபப்பிரவாகனும் அர்ச்சுனனைப்பார்த்துஓய்ஐயா! இந்திரபுத்திரா; நீர் என்சும்மாவிருக்கிறீர், பாணந்தொடும்உம்முடையவல்லபத்தையறிகிறேன் நீர்என்தாயாரைத்தூஷித்தபடியினால்உம்முடையமேலில்எனக்குதயவுண்டாகவில்லை ஆதலால்நான் இப்போது உம்மைக்கண்டிக்கிறேன்பாரும்மென்று சொல்லிஉக்கிரத்துடனேதன்னுடைய வில்லைத்துணைத்தொனிபண்ணி பாணங்களைத்தொடுத்துப்பிரயோகித்து அர்ச்சுனனுடைய சாரதியையும் இரண்டுதுண்டமாக்கி எட்டுக்குதிரைகளையுங்கண்டித்து அநுமாருடையமார்பையும் பிளந்துரதத்தையுஞ்செக்கைசெக்கையாகப் பேர்த்தெறிந்து பிற்பாடுதன்னுடைய தூணீரத்தில் கையிட்டெடுக்க சுவாலாஎன்கிற அஸ்திரங்கையிலகப்பட்டது அதை எடுத்து கோதண்டத்தினிடமாகத்தொடுத்து அதிதேவதாபிரதிதேவதாமந்திரங்களுடனே அபிமந்திரித்து அர்ச்சுனனுடைய சிரசுக்குச்சரியாய் லக்ஷியம்வைத்துப்பிரயோகம்பண்ணினான். அதுவும்வில்லிலிருந்து விடுபட்டு அதிவேகமாய்நெருப்புப்பொறிகளைக்கக்கிக்கொண்டுபுகைகளுடனும் ஜடஜடவென்கிறதொனியுடனும்எறிந்து கொண்டுகாலாக்கினியைப்போலவும்காளகூடவிஷத்தைப்போலவும்அண்டகடாகங்களெல்லாம் அதிரத்தக்கதாகவரும்பொழுதுதேவர்களெல்லாம் நடுக்கமடைந்துஓய்கிருஷ்ணா - துவாரகாபுரிவாசா-தேவகிநந்தனா உன்பத்தனான அர்ச்சுனனைக்காப்பாற்றி ரக்ஷியுமென்றுமுறையிட்டார்கள். தேவேந்திரனும் துக்காக்கிராந்தனாய் அர்ச்சுனனைப்பார்த்துஆ! காண்டீபபாணீ; ஆ! கிரீட்டி! ஆ! தனஞ்சயா! ஆ; புத்திரகா வென்று வாய்விட்டலறினான். அப்பொழுதுபப்பிரவாகனுடையசேனைகளெல்லாம் சிங்கநாதங்கள் அட்டகாசங்கள் செய்தார்கள்.

இப்படிப்பட்ட உக்கிரத்துடனே மகா உற்பாதமாய்அந்த அஸ்திரமானதுவந்து கிரீடமகரகுண்டலங்களுடனே கூடிச் சந்திரவிம்பம்போலப் பிரகாசிக்கின்ற அர்ச்சுனராஜனுடைய சிரசைக்கண்டித்துப்போய்விட்டது. அப்போது அந்தச்சிரசானது ஆகாசத்தில்குப் பென்று எழும்பி ஹரீ ஹரீ - கிருஷ்ணா கோபிகாரமணா - கோவிந்தா-

சிசுபால்மர்த்தனு - தேவேந்திரவந்தியா - கம்ஸ, சம்மாரா - காளிங்கநிர்த்தனு ருக்மிணீமனேகரா - சுவாமியென்று முறையிட்டுக்கொண்டு பூமியில்வந்து விழுந்தது அதுகண்டு பப்பிரவாகனும் மகா சந்தோஷித்துடனே சரீரம்புளகிக்கத்தக்கதாக வெற்றிச்சங்கத்தை வாயினிடமாகவைத்துப் பம்பமென்றுபூரித்து மனேச்சாகத்துடனே ஜெயபேரிகை யறைவித்துசகலசேனைகளுஞ் சூழ்ந்துவரும்படிபிரயாணப்பட்டு பதினெட்டுவகை மேளவாத்தியங்களு முழங்கத்தக்கதாக ரதாரூடனுய் சகலவேடிக்கைகளுடனே தன்னுடைய மணிபுரமென்னும் பட்டணத்திற்கு வந்துசேர்ந்தான். சேனைகளெல்லாரும்சந்தோஷிகரமாய் அவரவர்களுடைய அரமனைக்குப்போய்ச்சேர்ந்தார்கள். அதற்கு முன்னமே சித்திராங்கதையும் அவள் சக்களத்தியாகிய உலுவசியும் மனமகிழ்ச்சி யடைந்தவர்களாய் நமதுபுத்திரனுகிய பப்பிரவாகன் தகப்பனுகிய அர்ச்சுன னிடத்திற்குப் போயிருக்கிறனே இனிஅவரைச் சந்தோஷமா யழைத்துக்கொண்டு வருவான் நாம் அவரைக் கூடிச் சகலசவுக்கியங்களையும் அனுபவிக்கலாமென்று நினைந்து இருவர்களும் மகா அபேக்ஷையாய் திவ்விய வஸ்திரா பரணங்களை யலங்கரித்து கந்தபுஷ்ப பரிமளாதிகளை அணிந்துக் கொண்டு அர்ச்சுனராஜனுடைய வரவுபார்த்துக் கொண்டிருக் கையில் இடிவிழுந்தது போல அர்ச்சுனனிறந்தா னென்று கேட்டவளவில் இரண்டுபேரும் மூர்ச்சித்துவிழுந்து பூமியிற்புரண்டு புரண்டழுது சகல ஆபரணங்களையும் கழற்றி எறிந்து புஷ்பமாலைகளை யெல்லாம் வாங்கிஎறிந்து தலைமயிரைவிரித்து துக்கசாகரத்தில் முழுகினவர்களாய் கண்ணீராருய்ப்பெருகியோடக் கோவென்று அழுகிறபோது அந்தப் புரத்து ஸ்திரீகளெல்லாருங் கூடவந்து இழவுகொண்டாடினர்கள்.

அதுகேட்டு பப்பிரவாகனுந் தன்னுடைய அரமனையை விட்டு அந்தப்புரத்திற்குப்போய் தாயாரைக்கண்டு நமஸ்காரம்பண்ணிஓய் அம்மா! பாக்கியவதீ நீ அழுகிறகாரியமென்ன நான் ஜெயத்துடனே வந்தபொழுது உனக்கென்னகுறையிருக்கின்றது நீ சந்தோஷமாயிருக்கவேண்டாமோதாயேஎன்றுசொல்ல அதுகேட்டுசித்திராங் கதையும் கண்ணீர்ஆருய்ப்பெருகும்படியாக மகாஉக்கிரத்துடனேபுத்திரனைப்பார்த்து அடாபாதகா நீ ஒருசந்தோஷமாய் வந்தாயோ தகப்பனைக்கொன்ற பிதாத்துரோகி என்னவேலை பண்ணினுய் தகப்பனைக்கொல்லவோ வில்வித்தைகற்றுக்கொண்டாய் ஒருவனுந்திரத்திலுள்ள மூங்கிற்புதல்கள் தனக்குத்தானே ஒன்றேடொன்றுஇழைந்து நீருய்ப்போகிறதுபோலஉன் தகப்பனையுங்கொன்று நீயும் நீருய்ப்போகச்செய்தாய் ஆ துரோகி! இப்போது என்னை என் புருஷனிடத்திற்கொண்டுபோய்விட்டால்நானும் அக்கினிப்பிரவேசம் பண்ணி அவருடனே சேர்ந்து போகிறேனென்று சொல்லுன். அதுகேட்டு நாககன்னி யாகிய உலுவசியும் சித்திராங்கதையைப்பார்த்து ஓய்! அக்கா! பாக்கியவ

தீ! நான் இரண்டுநாளைக்குமுன்னே ஒருகனவுகண்டேன்- அஃதென்னவென்றால் நான் சிங்காரவனத்திற்குப்போய் புஷ்பமாலையைக் கழுத்திற்போட்டுக்கொண்டு உல்லாசமாகத்திரிகிறபோது அந்தபுஷ்பமாலை அறுந்து விழுந்ததுபோலக் கனவுகண்டு திடுக்கென்று எழுந்திருந்துபார்க்கையில் எனதுமாங்கல்யசூஸ்திரம் அறுந்துவிழுந்தது, அப்போதே இதுஎன்னவிபரீதார்த்தமென்று நினைத்திருந்தேன் அதுமெய்யாச்சுது இனிமேல் நாம் அக்கினிப்பிரவேசம்பண்ணுகிறதே நிச்சயமென்றுசொல்லி பப்பிரவாகனைப்பார்த்து அடா துன்மார்க்கா! பிதாவைக்கொல்லப்பிறந்ததுரோகி! புருஷனில்லாதபெண்சாதிக்குவஸ்திராபரணங்கள் என்னத்திற்கு நீபிறந்து தாய்மாரை அமங்கலிகளாகச்செய்தாய் இனி அதைப்பேசுகிறதினால்பிரயோசனமென்ன எங்களைஎங்கள்புருஷனிடத்தில் கொண்டுபோய்விட்டுவிடென்றுசொல்லிஉலூவசியுஞ் சித்திராங்கதையும் வெகுதுக்கத்துடனே அழுதுகொண்டுகண்ணீராறாய்ப்பெருக தலைமயிரைவிரித்து மார்பிலறைந்துக் கொண்டு மணிபுரத்தைவிட்டு ரணக்களத்திற்குப்போனார்கள்.

அப்பொழுது பப்பிரவாகனும் பயங்கரத்துடனே துக்காக்கிராந்தனாய் கண்ணீராறாய்ப்பெருக அழுதுகொண்டு நான் இப்படி வருமென்று கொஞ்சமாகிலும்எண்ணிப்பாராமல்பிதாவைக்கொன்றுவிட்டேனேஇதற்குஎன்னசெய்கிறதென்று பிரலாபித்துக்கொண்டுரணக்களத்திற்குப்போய்சேர்ந்தான். அதற்குமுன்னமே சூரியபகவானும்தன்புத்திரனாகிய அர்ச்சுனன் இறந்துபோனதைக்குறித்து ஸ்நானம்பண்ணுகிறத்திற்குப்போனதுபோலமேற்குத்திசையில் அஸ்தமனமாகினார். அப்பொழுது அஞ்ஞானிகளுடைய இருதயம் போலகாடாந்தகாரமான இருளானதுஎங்குமூடிக்கொண்டது, அந்த இருட்டுவேளையில் சித்திராங்கதையும் உலூவசியும் அழுதுக்கொண்டு ரணக்களத்திற்குவந்து அர்ச்சுனனுடைய சரீரத்தையுஞ்சிரசையுங்காணாமல்தேடிவெகுநேரம் அலைச்சல்பட்டு பின்புதலையைக்கண்டுகையிலெடுத்துக்கொண்டு சரீரத்தையும்பார்த்து மேலேவிழுந்துபுரண்டு மூர்ச்சையாய்க்கிடந்து திரும்பவும்எழுந்திருந்து மார்புடனேயணைத்துகட்டிப்புரண்டுமுட்டிக்கொண்டுபின்னையும் அந்தச்சிரசைமார்புடனே சேர்த்து முகத்தைத்துடைத்து ஆ!பிராணநாயகா? ஆ: புண்ணியபுருஷா!ஆ!பிராணவல்லபா! நீர் எங்கேயொளித்தீர்ஆ!அகண்டிதவீரபாராக்கிரமா! உன்சவுரியமென்ன! உன்பிரதாபமென்ன! உன் வில்வித்தையென்ன! இதுகளை யெல்லாம் எங்கே யடக்கிவிட்டீர் காலகேய நிவாதகவசாளென்கிற ஒன்பது கோடி ராக்ஷதர்களையும் இரணியபுரவாசிகளான அறுபத்தாறுகோடிராக்ஷதர்களையும் ஜெயித்தஅஸ்திர சஸ்திரங்களெல்லாம் எங்கே ஒளித்துப்போய்விட்டது, பீஷ்மர்-துரோணர்- கிருபர்-அசுவத்தாமர்-கர்ணன் -சல்லியன்-இப்படிப்பட்டபிரபுசாருடனே

எதிர்த்துப்போராடின வில்வித்தையை எங்கேமறந்து போய்விட்டீர் என்னகாரியம்பண்ணினீர் ஒருபாலன்கையில்ஒண்டியாய்அநாதையைப்போல சிக்கிக்கொண்டு புழுதியில்விழுந்துபுரளுகிறீர் இதுஉமக்குத்தருமமோ! எங்களாசையைத்தீர்க்கவொண்ணாதோ; நாங்கள் நீர்வருகிறீரென்றுவிருப்பங்கொண்டு சந்தோஷகரமா யிருந்தோமே; அப்படியிருக்க, எங்களைஒண்டியாகவிட்டு நீர்மாத்திரம் தனித்துப்போகலாமோ; ஆ! கல்யாணகுணசம்பன்ன; ஆ!தனஞ்சயா; ஆ! கிரீட்டி! நீர் பத்துதிக்கிலுஞ்செயம்பெற்ற திவ்வியபுருஷராச்சுதே; அப்படிப்பட்ட நீர்எங்களை இப்படிஅழுதுகொண்டிருக்கவைத்து ஒண்டியாய்ப்போகலாமோவென்று புலம்பி பின்னையும் விஷிவகேதுவினுடைய சிரசைக்கண்டு ஆ!குமாரகா;மடிந்தாயோவென்றுவெகுவாய்ப் பிரலாபித்து தங்கள்மனதைத்தாங்களே தேற்றிக்கொண்டு இனிஆலசியமென்ன; அக்கினிப்பிரவேசம் பண்ணுகிறதேகாரியமென்று துணிந்துபப்பிரவாகனைப்பார்த்து அடாபிதாத்துரோகி; உன்மனமானது பெற்றதகப்பனைக்கொல்லுகிறத்திற்கு எப்படி துணிந்தது, உன்முகத்தைப் பார்க்கலாமோவென்றுதுஷிக்க, அவர்களைப்பார்த்து பப்பிரவாகனும்ஓ அம்மாநான்தகப்பனென்றுதெரிந்துஅஸ்வமேதக்குதிரையுங்காணிக்கைகப்பங்களும் கொண்டுபோய்வைத்து பாததரிசனம் பண்ணி அடைக்கலம். ஐயா! என்னைக்காப்பாற்றிரக்ஷியுமென்று வெகுவாய்வேண்டிக்கொண்டேன் அதற்குஎன்னைஉதைத்துத்தள்ளிவிட்டார். அதுகண்டு பின்னையும்வெகுநேரம் வேண்டிக்கொண்டேன் அதையும்பாராமல் அங்கிருந்தராஜாக்களெல்லாரும்சொன்னசொல்லையுங்கேளாமல் ஆக்ருஷிமாய் என்னைப்பார்த்து அடாபயலே நீ எனக்குப்பிறந்தவனல்ல; உன்னை உன்தாயார்வைசியனுக்குப்பெற்றாளென்று விபரீதமாகச்சொன்னார். அதனால் எனக்குக் கோபம்பிறந்து சண்டை செய்தேனென்று அழுதுகொண்டுசொல்ல, அதுகேட்டு உலுவசியும் சித்திராங்கதையும் விசாரப்பட்டு குமாரனைப்பார்த்துஅப்பா!உனக்குஇன்னம் அழுகையா நல்லதுஎங்களுக்குஅக்கினிவளர்த்திவை யென்றுசொல்லினார்கள். அப்படியே பப்பிரவாகனும்மந்திரிகளுக்குஉத்தரவு பண்ணி அகிற்கட்டைகளும் சந்தனக்கட்டைகளும் வண்டில்களில் அழைப்பித்து நூறடிவிசாலம்பரப்பி கர்ப்பூரக்கட்டிகளும் சாம்பிராணிக் கட்டிகளும் பொதிபொதியாகப்போட்டு நெய்க்குடங்களும் எண்ணெய்க்குடங்களும் விஸ்தாரமாகஅழைப்பித்து அக்கினியைமூட்டிபிர்ம்மாண்டகடாகபரியந்தம் கொழுந்துவிட்டு திகுதிகுவென்றுபுகைந்துஎரியும்போது அதுகண்டுபப்பிரவாகனும் ஆலோசனைசெய்து தகப்பனையுந்தாய்மாரையுங்கொன்ற மகாபாதகனாகிய நான் இருக்கலாகாது ஆதலால், நானேமுதன்மையாக விழுகிறேனென்றுஅந்தஅக்கினியை மூன்றுதரம் பிரதக்ஷணம்பண்ணி உயரஎழும்பி குதிக்கப்போகின்ற சமயத்தில் உலுவசியும் விசாரப்பட்டு சித்திராங்கதையைப் பார்த்து

அடிஅக்கா பாக்கியவதீ; நாம் புருஷனையுமிழந்து கடைசியில்பிள்ளையுமிழந்துபோகலாச்சுது; ஆகையால் நமதுபுருஷனை எப்படியாகிலும்பிழைக்கப்பண்ணிக் கொள்ளுவோமென்றுசொல்லிபப்பிரவாகனைப்பார்த்து நீ அக்கினியில்விழவேண்டாம் உன் தகப்பனை நான் பிழைக்கப்பண்ணுகிறேனென்றுசொல்ல, அதுகேட்டுபப்பிரவாகனும் மாதாவினுடையசொல்லைக் கடவாமல் வந்து உலுவசியைப் பார்த்துதாயே! என்னைஏன் அக்கினிப்பிரவேசமாகவேண்டாமென்று சொன்னையென்றுகேட்க, உலுவசியும்புத்திரனைப்பார்த்து ஓய் குமாரகா! நாங்கள்புருஷனை யிழந்ததுமல்லாமல் உன்னையுமிழந்து எப்படி நிர்வகிக்கப்போகிறோம் நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நான் என்னுடையதகப்பனுக்குச்சொல்லியனுப்பி மிருதசஞ்சீவிரத்தினமும்அமிர்தகலசமும் அழைப்பித்து உன் தகப்பனைப்பிழைக்கப் பண்ணுகிறேன் நீசந்தேகிக்கவேண்டாமென்றுசொல்ல, அதுகேட்டுபப்பிரவாகனும்ஆனந்தசமுத்திரத்தில்முழுகினவனாய்சந்தோஷமடைந்திருந்தான்.

அப்பொழுது உலுவசியும்நாககுமாரனானபுண்டரீகனென்கிறதன்சேவகனையழைத்து தன்காதிலணிந்திராநின்ற பொன்னோலையைக்கழற்றி அடையாளமாகக்கொடுத்து மாங்கல்யசூஸ்திரத்தையுங்கொடுத்து ஓய்புண்டரீகா! நீ பாதாளலோகத்திற்கு அதிசீக்கிரமாகப்போய் என்பிதாவாகிய ஆதிசேஷனைக்கண்டு இவிடத்தில்நடந்த சவிஸ்தாரமெல்லாஞ்சொல்லி அர்ச்சுனராஜனைப் பிழைக்கப்பண்ணுகிறத்திற்கு மிருதசஞ்சீவிரத்தினமும்அமிர்தகலசமும்வாங்கிவரச்சொன்னேனென்றுசொல்லி சீக்கிரத்தில் வாங்கிக்கொண்டுவாவென்றுசொல்ல. அவனும் அப்படியேநல்லது அம்மாவென்றுசொல்லி பின்னையும்உலுவசியைப்பார்த்து ஓய் அம்மா! அர்ச்சுனனுடைய சிரசையும் சரீரத்தையுங்காத்துக்கொண்டிருக்கிறது உங்களுடையகடமை சஞ்சீவிகொண்டுவருகிறது என்னுடைய கடமையென்றுசொல்லிவிட்டு மனோவேகத்திலும் அதிவேகமாசப்புறப்பட்டு பூமியைக்கண்டு-அதல-விதல-சுதல-நிதல-ரசாதல-தராதல-பாதாளமென்கிற சப்தலோகங்களையுங் கடந்து அப்பால் அநேகமாயிரம் நாககுமாரர்களுடனும் -வாசுகி- தக்ஷகன்-கார்க்கோடகன்-மூர்க்கன்-திருதராஷ்டிரன் முதலான நாக மந்திரிகளுடனும் (ரத்நகசிதமான)சிங்காதனத்திலெழுந்தருளி ஆயிரம் பணாமுடிகளும் பிரகாசிக்கத்தக்கதாக கொலுவாயிருக்கிற ஆதிசேஷனைக்கண்டு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டெழுந்துநின்று ஐயா! மகானுபாவா; நாகேந்திரா; தேவரீருடையகுமாரத்தியண்டையிலிருந்து வந்தேன் இதோ அந்த அம்மாள்கொடுத்த பொன்னோலையும்மாங்கல்யசூஸ்திரமும் பார்த்தீர்களாவென்றுகொடுத்து பின்னையும் அந்த நாகராஜனைப்பார்த்து ஐயா! நாகாதிபா; அஸ்தினாபுரத்தையாளுகிற தர்மபுத்திரரானவர் அஸ்வமேதயாகம்பண்ணநினைத்துக் குதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பிறகே அர்ச்சுனனையனுப்பினார்.

அந்தக்குதிரையானது மணிபுரத்துக்குச் சமீபமாகவந்துகண்டு பப்பிரவாகனும் அந்தக்குதிரையைப் பிடித்துக்கட்டி அர்ச்சுனராஜனுடனே எதிர்த்துசண்டைபண்ணி ரணக்களத்திலே புத்திரபவுத்திராதிகளுடனும் அநேகராஜவர்க்கங்களுடனும் அந்த அர்ச்சுனராஜனைக்கண்டித்துவிட்டான்.

ஆகையினாலே உலுவசியுந் துக்கப்பட்டுபொன்னோலையை அடையாளமாகக்காண்பித்து அறுந்துவிழுந்துபோன மாங்கல்யசூஸ்திரத்தையும் எப்போதும்போல் அணியத்தக்கதாக அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு மிருதசஞ்சீவி ரத்தினமும் அமிர்தகலசமும்வாங்கிவரச் சொன்னாளென்றுசொல்ல, அதுகேட்டு ஆதிசேஷனும் ஆச்சரியப்பட்டுபுண்டரீகனைப் பார்த்து ஓய்புண்டரீகா! நீசொல்லுகிறசேதியெனக்குச்சந்தேகமாயிருக்கிறது அர்ச்சுனனாவதேது அவன்பிள்ளைபப்பிரவாகன்கையில் மடிவதாவதேது அவன்வீராதிவீரன் விஷ்ணுபக்தன் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனோடு போராடி பாசுபதாஸ்திரம் பெற்றவன் அப்படிப்பட்ட ரணரங்கசூரனைப் பப்பிரவாகன் கொன்றானென்றால் எனக்கு உண்மையாகத் தோற்றவில்லையென்று சொல்ல அதுகேட்டு புண்டரீகனும் ஐயா! சேஷாதிபா! தேவரீர் சொன்னபடியே அர்ச்சுனன் வீராதிவீரன்தான் அவன் எதினால் இறந்து போனானென்றால் கெங்காதேவி சாபம் சமீபித்தபடியினால் இப்படி முடிந்ததென்றுசொல்ல அதுகேட்டு ஆதிசேஷனும் அப்படியானால் மெய்தானென்று சம்மதித்து நமது குமாரத்திக்கு மாங்கல்ய முண்டாகச்செய்கிறதே நமக்குத்தருமமென்று சொல்லி மிருதசஞ்சீவி ரத்தினமும் அமிர்தகலசமுங் கொடுத்தனுப்பும்படி சம்மதித்தான். அதுதெரிந்து திருதராஷ்டிர னென்கிற நாகமந்திரியும் ஆதிசேஷனைப் பார்த்து ஐயா! சேஷாதிபா? நீர் என்னவேலை செய்ய நினைக்கிறீர் நீர் செய்கிறவேலை எனக்குச் சம்மதமில்லை அஃதெதினாலென்றால் இந்த புண்டரீகன் சொல்லைக்கேட்டு அமிர்தகலசத்தையும் மிருதசஞ்சீவிரத்தினத்தையுங் கொடுத்து பூலோகத்திற்கு அனுப்பலாமோ! அல்லவென்று அனுப்பினால் அதுகள்மறுபடியும் நமது லோகத்திற்குவருமோ அதல்லாமலும் நமக்குக்கருடனால் பயமின்றியிருக்கத் தக்கதாக பிர்ம்மதேவர் நிடமித்துக் கொடுத்திருப்பதை நாம் ஒருத்தருக்குக்கொடுக்கலாமோ! இதுகள் இருக்கின்றதினாலல்லவோ நமது லோகத்திற்குக் கருடன்வராமலிருக்கிறான் இதுகளை நீர் கொடுத்துவிட்டால் கருடன் கேள்விப் பட்டுவந்து நம்மை யெல்லாங் கொல்லுவான் அப்போது நாம் எல்லாரும் நீர்ப்பாம்பு போல விழுந்து கிடக்க வேண்டும் நம்மைக் கண்டவர்க ளெல்லாரும் தடிஎடுத்து அடித்துக் கொல்லுவார்கள்.

அதல்லாமல் அர்ச்சுனனைப் பிழைக்கப்பண்ணுகிறத்திற்கு இது போகவேண்டுமோ! கபடநாடகசூஸ்த்ராவதாரியான ஸ்ரீகிருஷ்ணபக

வானிருக்கிறார் அவராலாகாத காரியமிருக்கின்றதோ? பூர்வத்தில்பிர்ம்மதேவரானவர் பசுக்களையுங் கன்றுகளையுங் கோபாலர்களுடைய பிள்ளைகளையுங் கொண்டு போய் ஒருவருஷம் ஒளித்துவைத் திருந்தான். அது தெரிந்து அவர்கள்வீடுகள்தோறும் பசுக்களாகவும் கன்றுகளாகவும் பிள்ளைகளாகவும் இருந்து ஒருவர்க்குந் தெரியவொட்டாமல் லீலாவினோதம் பண்ணின மகா புருஷன் அங்கேயிருக்கும் பொழுது அர்ச்சுனனுக்கு ஒருநாளுங்குறைவு வருகிறதில்லை ஆதலால் என்சொல்லை நம்பி இந்தபுண்டரீகனைச் சும்மாபோகச் சொல்லுமென்றுசொல்ல அதுகேட்டு ஆதிசேஷனும் மெய்தானென்று சந்தோஷப்பட்டு புண்டரீகனுக்குச்சொல்லியனுப்ப புண்டரீகனும் நல்லதென்று பூலோகத்திற்குவந்து உலுவசியையும் பப்பிரவாகனையுங்கண்டு அங்கே நடந்த விர்த்தாந்தமெல்லாஞ் சொல்ல, அதுகேட்டு பப்பிரவாகனுங் கோபங்கொண்டு அந்த ஆதிசேஷனானவன் தான் பூமியைச்சுமக்கிறேனென்று கெர்வித்திருக்கிறானல்லவா! அவன் பூமியைச் சுமக்காமற் போனாலும்போகட்டும் அவனுடைய கெர்வத்தைச் சற்று நேரத்தில் அடக்கிவைக்கிறேன் என்னுடைய பாணத்தினால் நாகங்களையெல்லாஞ் சாம்பலாக்கிவிடுகிறேன் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவன் ஒருவேளை என்னுடைய ஆபரணங்களைக் கண்டிக்கின்றாயா வென்று சண்டைக்கு வந்தாலும் என்னுடைய புஜபலத்தினால் அந்தருத்திர மூர்த்தியையும் பூசை பண்ணி அவரது ஆபரணங்களை யெல்லாஞ் சின்னாபின்னப் படுத்துகிறேனென்று பப்பிரவாகனும் ஆக்கிரவியாக்கிரம நிக்குரோதனாய் நவரத்நகசிதமான ஒரு தேரின்பேரி லேறிக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டு ரதகஜதுரகபதாதிகளையுங் கூட்டிக்கொண்டு புண்டரீகனைப் பாதாளலோகத்திற்கு வழிகாட்டும்படி அவனை முன்னதாக நடத்திக்கொண்டுபோய்ச் சேர்ந்து அவிடத்தில் தண்டுவிட்டிறங்கிரணபேரிகைவெண்கலப்பேரிகைமுதலானதுகளை முழக்குவித்துவெற்றிச்சங்கத்தைஎடுத்துப் பம்பம்மென்று பூரித்தான்.

ஆதிசேஷன் யுத்தம்.

அந்தச்சத்தத்தைக்கேட்டு ஆதிசேஷனும் திகிலடைந்து மனங்கலங்கி சண்டைக்கு ஆயுத்தப்பட்டு பப்பிரவாகன் வந்துவிட்டானே அவன் இனிநம்மைக் கொல்லாமல் விடமாட்டான் அதற்குநாம் என்ன செய்யப்போகிறோமென்று விசாரப்பட்டு இந்த திருதராஷ்டிரன் குரூரகர்ம்மியாய் நாம்கொடுக்கப்போகிற மிருதசஞ்சீவிரத்தினத்தையும் அமிர்த கலசத்தையும் கொடுக்கவேண்டாமென்று தடுத்தனாலல்லவா! இத்தனை விபரீதம்வந்து நேரிட்டதென்றுநினைந்து மந்திரிகளைப் பார்த்து ஓய்மந்திரிகளே நீங்கள் சண்டைக்குப் போங்கோளென்று

கோபமாகச்சொல்ல, அதுகேட்டு தக்ஷகன் கார்க்கோடகன் திருதரா
ஷ்டிரன் முதலான நாகமந்திரிகளெல்லாருங்கூடி அந்தபப்பிரவாகன்
எம்மாத்திரம் அவனை நம்முடைய விஷாக்கினியினால் தகித்து விடலா
மென்று ஒருவர்க்கொருவர் வலிமையாகப்பேசிக்கொண்டு அவரவர்கள்
சேனைகளுடனே புறப்பட்டு யுத்தசன்னத்தர்களாய் வந்து பப்பிரவா
கனுடனே எதிர்த்தார்கள் அதுகண்டு பப்பிரவாகனுடைய சேனைக
ளெல்லாம் மகா ஆக்ருஷித்துடனே எதிர்த்து அதி தீக்ஷண்ய மாகிய
சஸ்திர அஸ்திரங்களினால் நாகசேனைகளை யெல்லாந் துண்டந் துண்ட
மாய்ச் சின்னபின்னப்படுத்துகையில் அதற்கு நாககுமாரர்கள் பின்
னிடாமல் ரோஷித்துவேஷங் களுடனே தங்களுடைய விஷாக்கினியி
னால் ரதங்களையும் ரதக்காரர்களையும் பஸ்மீகரப்படுத்தி ஆனைகளையும்
ஆனைப்பாகர்களையும் அதம்பண்ணி குதிரைகளைச் சாம்பலாக்கி ரவுத்
தர்களைக்கொன்று காலாள்களையெல்லாம் பொடியாக்கி இந்தவிதமா
க நாககுமாரர்கள் மிஞ்சி பப்பிரவாகனுடைய சேனைகளை யெல்லாந்
தும்சப்படுத்தும்பொழுது சேனைகளெல்லாரும் பின்வாங்கி ஓடத்த
லைப்பட்டார்கள். அதுகண்டுபப்பிரவாகனும்ரோஷதாம்பிராக்ஷகனாய்
வில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அக்கினியைப்போ
ல அதிதீக்ஷண்யமான பாணங்களையெடுத்துப் பிரயோகித்து நாகங்க
ளுடைய பணமுடிகளைப்பிறி மாணிக்கங்களையுதிர்த்து வாய்களைக்கி
ழித்து விஷங்களையடக்கி துண்டந்துண்டமாகக்கண்டித்து நாகசே
னைகளையெல்லாம் அதமாக்கிவிட்டான்

அதுகண்டுதிருதராஷ்டிரன் முதலானமந்திரிகளெல்லாரும்ஓடி
ப்போகிறநாகசேனைகளையெல்லாம் ஓடவேண்டாமென்று நிறுத்திமெ
றுபடியும் அவர்களைச்சண்டைக்கனுப்பி தாங்களும் ஆக்ருஷித்துட
னே வந்து பப்பிரவாகனுடைய சேனைகளுடனே எதிர்த்துநின்றார்க
ள். அதில்திருதராஷ்டிரனும் பப்பிரவாகனைப்பார்த்து ஓய்ராஜகுமார
கா! நீ உன்தகப்பனைக்கொன்றுவிட்டு திரும்பவும் அவனைப் பிழைக்க
ப்பண்ணலாமென்று நினைத்துவந்தாயோ! அது எனக்குச் சம்மதமல்
ல உன்தகப்பனைக்கொன்றுவிட்டதே எனக்கு மெத்தவுஞ் சந்தோஷ
மாயிருக்கின்றது நீ திரும்பவும் எழுப்பலாகாது அஃதெதினாலென்
றால் நீ உங்கள்குலத்திலேமுன்பின் னடந்தவழக்கப்படிசெய்தாய் நீ
நூதனமாக ஒன்றுஞ்செய்யவில்லை அஃதெப்படியென்றால் உன் தகப்
பனாகிய அர்ச்சுனனானவன் பாரதயுத்தத்தில் சண்டைசெய்துவஞ்சனை
யினால் பிதாவுக்குச்சரியான கர்ணமகாராஜனைக்கொன்றான். அதல்லா
மலும் பீஷ்மர் துரோணர் கிருபர் முதலானவர்களையும் பெரியோர்
களென்று சற்றாகிலும் எண்ணிப்பாராமல் கொன்றுவிட்டான். ஆகை
யினால் உன்தகப்பன் செய்தபிரகாரம் நீயுஞ் செய்தாய் இதுநல்லகாரி
யந்தான் இதுவுமல்லாமல் பூலோகத்தின்கண் பிதாவானவன் எந்தப்ப
டி நடந்தானோ எந்தப்படிகீர்த்திவகித்துக்கொண்டானோ அந்தப்படி

யே புத்திரனானவன் நடக்கவேண்டுமென்று தர்ம்மசாஸ்திரங்களுஞ் சொல்லுகின்றது ஆதலால் நீயும் அந்தப்படி நடந்துகொண்டாய் அதைக்குறித்து உனக்கும்விசாரம்வேண்டாம் நீ சுகமாகப்போய்அஸ்தினாபுரத்திற்குப்பட்டாபிஷேகனாய் சந்தோஷகரமாய் ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருவென்று சொன்னான்.

அதுகேட்டு பப்பிரவாகனும் புன்சிரிப்பாகச்சிரித்து திருதராஷ்டிரனைப்பார்த்து ஓய்! நாகமந்திரியே? நீர்சொன்னவார்த்தை மெய்யேயாம் தகப்பன்செய்தபடி பிள்ளைசெய்யவேண்டுமென்று சொன்னதும் உண்மைவசனந்தான் அஃதெதன்னவென்றால் பூலோகத்தில் எங்கள் தாயாதியாகிய திருதராஷ்டிரனானவன் எங்களுக்கு உரிமையாகிய பாதி ராஜ்யத்தைக்கொடாமல் அட்டிசெய்தபடியினால் என்தகப்பனாகிய அர்ச்சுனராஜன் தன்னுடைய பாணக்கினியினால் அவனுடையவம்சத்தையெல்லாம் வேரறுத்து அஸ்தினாபுரத்தையுங் கொள்ளைகொண்டான் அந்தமுறைமையினால் நானும் உன்னுடையவம்சத்தையெல்லாம் என்னுடையபாணக்கினியினால் வேரறுத்து மிருதசஞ்சீவிரத்தினத்தையும்அமிர்தகலசத்தையும்ஆதிசேஷனிடத்தில் வாங்கிக்கொண்டு போகிறேன் சற்றேபார்த்துக்கொண்டிருவென்று சொல்லி தன் வில்லினிடமாக அனந்தமாயிரம் பாணங்களைப் பிரயோகம் பண்ணி அந்த திருதராஷ்டிரன் முதலான நாகமந்திரிகளெல்லாரையும் உதிரமயமாக்கி மெத்தவும் நோகப்பண்ணினான் அதற்கு அந்த நாகமந்திரிகளும் பின்வாங்காமல் தங்கள்சேனைகளோடும் சேர்ந்து விஷங்களைக்கக்கிக்கொண்டு அந்தவிஷாக்கினியினால் பப்பிரவாகனுடையசேனைகளையெல்லாங் கொல்லுகையில் அதுகண்டு பப்பிரவாகனும்ஆக்கிரவியாக்கிரம நிக்கிரோதனாய் மீசைபடபடவென்று துடிக்கும்படி பற்களைநெறநெறவென்று கடித்துக்கொண்டு வில்லைக்குணத்தொனிபண்ணிஅந்த வில்லினிடமாக ஒரு நாகாஸ்திரத்தை எடுத்துத் தொடுத்துப் பிரயோகம் பண்ணினான். அந்த அஸ்திரத்தில் அநேகமாயிரங் கலைமான்கள்பிறந்து அந்தசர்ப்பங்களையெல்லாம் கண்டதுண்டஞ் செய்தும் மிதித்தும் கிழித்தும்- அடித்தும்- கடித்தும்- இந்தவிதமாய்க் கொல்லுகிறபோது அந்தசர்ப்பங்களெல்லாம் பயந்து பாதாளத்தி லிராமல் உயரஎழும்பி வரத்தலைப்பட்டது அதுகண்டு பப்பிரவாகனுந் தன்னுடைய வில்லினிடமாக ஒரு கிருதாஸ்திரத்தை எடுத்துத்தொடுத்துப்பிரயோகம் பண்ணினான். அந்த அஸ்திரத்தில் கோடானுகோடி பருந்துகள் கூளிகள் டேகைகள்பிறந்து உயர எழும்பி வருகிற சர்ப்பங்களையெல்லாம் உரித்து வாழைப்பழம்போலவிழுங்கத்தலைப்பட்டது அதுகண்டு அந்தசர்ப்பங்களெல்லாம் நாமெங்கேபோய் ஒளிப்போமென்று மனோதுக்கத்துடனே புதறுகளிலும் பொந்துகளிலும் நுழைந்துக்கொள்ள அதுதெரிந்து பப்பிரவாகனும் ஒரு நீலகண்டாஸ்திரத்தை எடுத்துத் தொடுத்துப் பிரயோகம்பண்ணினான். அந்தஅஸ்

திரத்தில் அநேகமாயிரம் மயில்கள்பிறந்து நாகசர்ப்பங்களையெல்லா
ம்விழுங்கத்தலைப்பட்டது. அதுதெரிந்து அந்தசர்ப்பங்கள் திரும்பவு
ம்வளைகளிலும் சுவரின்பிளவுகளிலும் நுழைந்துக்கொள்ள அப்பொ
ழுது பப்பிரவாகனும் தன்னுடைய வில்லினிடமாக மூஷிகாஸ்திரத்
தையெடுத்துத்தொடுத்துப் பிரயோகம்பண்ணினான்.

அதில் அளவிறந்த கீரிப்பிள்ளைகள்பிறந்து சந்துகளிலும் பொந்
துகளிலும் போய் ஒளிக்கின்றசர்ப்பங்களையெல்லாம்துண்டந் துண்ட
மாகக்கண்டிக்கத்தலைப்பட்டது, அதற்கு நிர்வகிக்கமாட்டாமல் சர்ப்
பங்களெல்லாம் சவலையடைந்து நாம் பூமியிலிருந்தாலும் கலைமான்
களுடைய உபத்திரவம் பொறுத்து முடியவில்லை ஆகாசத்திலெழும்
பினாலும் பருந்துகள் கூளிகளுடைய உபத்திரவம் பொறுத்து முடி
யவில்லை அல்லவென்று புதறுகளில் பொந்துகளில் நுழைந்துக்கொ
ண்டாலும் கீரிப்பிள்ளைகள் இழுத்திழுத்துக்கொல்லுகின்றது; இனி
நாம் எந்த இடத்திற்போயிருப்போமென்று ஆலோசித்து வளைகளி
லும் துளைகளிலும் புகுந்துக்கொண் டிருந்ததுகள். அதுகண்டு பப்
பிரவாகனும் சிரித்து தன்னுடையவில்லிலே மதுவாஸ்திரத்தை எடுத்
துத்தொடுத்துவிட்டான். அதில் மேகங்கள் பிறந்து ஒரு சாமபரியந்
தம் ஆனைத்தும்பிக்கையி லிருந்து ஜலம்விழுவதுபோல தேன்மழை
யைப்பொழிந்தது பின்னையும் பப்பிரவாகன் பிபீலிகாஸ்திரத்தையெ
டுத்துத்தொடுத்துவிட்டான். அதில் அனந்தமாயிரம் சிற்றெறும்புகள்
கட்டெறும்புகள் பேயெறும்புகள் பிறந்து அந்தத் தேனுடனே கலந்
துசர்ப்பங்களைச்சூழ்ந் துகொண்டுசாம்பலாகஎரித்துவிட்டது; அதனா
ல்இறந்ததுபோகநின்றசர்ப்பங்களெல்லாம்பயந்து ஒடிவந்துஆதிசே
ஷனைக்கண்டுதெண்டனிட்டுஐய்ஐயா! அனந்தபுருஷா!எங்களைக்காப்பா
ற்றி ரக்ஷியும் இப்பொழுது பப்பிரவாகனுடைய பாணமானது எங்க
ளை எந்தவிடத்திலும் நிற்கவொட்டாமல் துரத்திக்கொண்டுவருகின்ற
து நாங்கள் எங்கேபோயிருப்போம் என்னசெய்யப்போகிறோம்அந்
ததுன்மார்க்கனான திருதராஷ்டிரன்சொன்னவார்த்தைக்குத் தேவரீர்
செவிகொடுத்தபடியினால் எங்களுக்கு இத்தனை ஆபத்துகள் வந்துசு
ம்பவித்தது, நாகசேனைகளெல்லாம் மடிந்துபோய்விட்டது, ஆதலா
ல் தேவரீர் இப்போதாகிலும் எங்கள்பேரில் தயவுசெய்து மிருதசஞ்
சீவி ரத்தினத்தையும் அமிர்தகலசத்தையும்பப்பிரவாகனுக்குக் கொ
ண்டுபோய் கொடுத்து எங்களைக்காப்பாற்றி ரக்ஷியுமையாவென்றுவே
ண்டிக்கொள்ள அந்தவார்த்தைகளையெல்லாம் ஆதிசேஷன்கேட்டு திகி
லடைந்து திருதராஷ்டிரன்பேரில் எரிந்துவிழுந்து நாம்முன்னே தா
னே புண்டரீகன்கையிற் கொடுத்தனுப்பாமற் போனபடியினால் இத்
தனை அவமானம் வந்ததென்று அதிசீக்கிரமாக எழுந்திருந்து மிருத
சஞ்சீவிரத்தினமும் அமிர்தகலசமும் எடுத்துக்கொண்டு அதுவுமல்லா
மல் பப்பிரவாகனுக்கு வெகுமானமாய் மாணிக்கக்கிரீடமும் ரத்தின

பரணங்களும் மாணிக்கப்பதக்கங்களும் எடுத்துக்கொண்டுவந்துபப்பிரவாகனைக்கண்டு தான்கொண்டுவந்த வஸ்துக்களையெல்லாம் அவனுக்கு முன் காணிக்கையாகவைத்து அவனை மார்போடுதழுவிக்கொண்டு ஐயா! பப்பிரவாகனே! நாங்கள் உன்னுடைய பராக்கிரமத்தையறியாமல் எங்களுடைய அஞ்ஞானத்தினால் அபசாரம்பண்ணினோம்.

அந்தப்பிழையைப்பொறுத்து உன்னுடையகோபத்தை யடக்கி எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்றுவேண்டிக்கொள்ள அதுகண்டு பப்பிரவாகனுஞ் சிரித்து ஆதிசேஷனைப்பார்த்து ஐயா! பாட்டா! அடிமேலடியடித்தால் அம்மியும் நகருமென்று உலகத்தார் வழக்கமாகச்சொல்லுகின்றவார்த்தையானது இப்போது உங்களிடத்தில் நிஜமாச்சுதென்று பரிகாசமாகச்சொல்லி பின்னையும் ஆதிசேஷனுக்கு நமஸ்காரம்பண்ணி அவருடைய ஆசீர்வாதமுங்கைக்கொண்டு சகல சேனாசமேதனாய் அந்த ஆதிசேஷன் முதலான நாகசேனைகளுடனும் புறப்பட்டு பாதாளலோகத்தைவிட்டு பூலோகத்திற்குப்போகையில் அதுதெரிந்து திருதராஷ்டிரனென்கிற நாகமந்திரியானவன் முன்னே நினைத்த மச்சரம் விடாமல் அதிசீக்கிரமாகத் தன்னுடைய வளவிற்குவந்து தன்குமாரர்களாகிய துர்ப்புத்தியென்கிறவனையும் துர்ப்பாவனென்கிறவனையும் அழைத்து ஓய் குமாரர்களே' நீங்களிருவரும் என்னுடைய வார்த்தையை மறுத்துவிடாமல் அதிவேகமாய் பூலோகத்திற்குப்போய் ரணக்களத்தில் விழுந்துகிடக்கிற அர்ச்சுனராஜனுடைய சிரசை எடுத்துக்கொண்டு கருடன்வராத இடமாகப் பார்த்து ஒளித்துவைத்திருங்கோள் நீங்கள் அப்படிசெய்வீர்களானால் அர்ச்சுனராஜன் பிழைக்கமாட்டான். அந்த அர்ச்சுனன் பிழையாதவகைக்கே என்னாலாகிய தந்திரயுக்திகள் அநேகமாகச்செய்தேன் அதுகளெல்லாம்வீணாகிப்போய்விட்டது. அதோபார்த்தீர்களோ! ஆதிசேஷன்முதலான நாகசேனைகளெல்லாரும் பப்பிரவாகனுடனே சமாதானமாய்சேர்ந்துக்கொண்டு பூலோகத்திற்குப்போகிறார்கள். நானும் அவர்களோடுசேர்ந்துபோகவேண்டும் ஆதலால் அதற்குமுன்னமே நீங்கள்போய் உங்களுக்குச்சொன்னபடி செய்யுங்கோளென்றுசொல்லிவிட்டு திருதராஷ்டிரனும் சீக்கிரமாகப்போய் ஆதிசேஷனுடனே கூடிக்கொண்டுநடந்தான். அந்த துர்ப்புத்தி துர்ப்பாவனென்கிற இரண்டுபேரும்தங்களுடையபிதாவின் சொற்படியே பூலோகத்திற்கு அதிவேகமாகவந்துதங்களுடைய மாய்கையினால் ஒருவருக்குந்தெரியவொட்டாமல் அர்ச்சுனனுடைய சிரசை எடுத்துக்கொண்டு கருடன்வரக்கூடாத இடமாகப்பார்த்து சத்தசமுத்திரத்திற்கு அப்புறத்தில் பக்தப்பிரியமகாமுனீந்திரருடைய ஆசிரமத்திற்கொண்டுபோய் ஒளித்துவைத்திருந்தார்கள்.

அர்ச்சுனன்இறந்ததலைக்காண்க-ஸ்ரீகிருஷ்ணதேவர் (எழுந்தருளியது-)

இவிடத்தில் இப்படியிருக்க, அங்கே அஸ்திநாபுரத்தில் குந்தாதேவியானவள் ஒருகனவுகண்டெழுந்திருந்து மகா துக்காக்கிரந்தியாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் சயனித்திருக்கிற பள்ளியறைக்குப்போய் அந்தபகவானைத் தட்டி எழுப்பி ஓய்கிருஷ்ணா! நான் இன்றையத்தினம் என்றுங்காணாத ஒருபொல்லாதகனவு கண்டேன் அஃதென்னவென்றால் உன்மைத்துனனாகிய அர்ச்சுனனானவன் தலையின்மேலெண்ணெயிட்டுக்கொண்டு சரீரமுழுதும் சாணியைப்பூசிக்கொண்டு சிகப்புவஸ்திரமும் சிகப்பு சந்தனமுந்தரித்துக்கொண்டு கழுதையின்பேரிலேறிக்கொண்டு தெற்குமுகமாய்ப்போறது போலக்கண்டேன் ஓய்சுவாமீ! அர்ச்சுனனுக்கு ஏதோ ஆபத்துநேரிட்டதுபோலிருக்கின்றது. எனக்கொன்றுந்தோற்றவில்லை என் வயிற்றைக்கலக்குகின்றது, மனத்திகிலாயிருக்கின்றது, ஓய் ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகாவென்று சொல்ல, அந்தவார்த்தைகளையெல்லாம் கபடநாடக சூஸ்ராவதாரியான ஸ்ரீகிருஷ்ணபகவானுங்கேட்டு தம்முடைய ஞானதிருஷ்டியினால்பார்த்து, ஆ! ஆ! அர்ச்சுனனுக்கு மோசம்வந்ததென்றுதெரிந்து அர்ச்சுனனுடைய சங்கதியை சீக்கிரத்திற்போய் அறியவேண்டுமென்று கருடாழ்வானை அழைப்பித்து அந்தக்கருடாழ்வான்பேரில் தாமும் - வீமசேனனுங் குந்திதேவியும்-அசோதையும்- தேவகிதேவியாருமாகஏறிக்கொண்டு அதிவேகமாக ஒருநொடிக்குள்ளே மணிபுரத்திற்குச் சமீபமாக வந்து கருடாழ்வானை விட்டிழிந்து அந்தஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் வீமசேனன் குந்திதேவி தேவகிதேவி அசோதை இவர்களுடனே புறப்பட்டு ரணக்களமுழுதுஞ் சுற்றிப்பார்க்கும்பொழுது வீமசேனனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து ஐயா! கிருஷ்ணா! இதுஎன்னகாரணம் எனக்கு ஒன்றுந்தெரியவில்லை, பிரமித்தாற்போலிருக்கின்றதென்றுசொல்ல- அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் வீமசேனனைப் பார்த்து ஓய்வீமசேனா! இதுயுத்தகளம் அதோ மணிபுரமிருக்கின்றது அந்தப்பட்டணத்தை யரசாக்ஷிசெய்கின்ற பப்பிரவாகன்தான் நம்முடையகுதிரையைப்பிடித்துசகலசேனைகளையும் அதம்பண்ணி அதுவுமல்லாமல் விஷ்வகேதுவையும் அர்ச்சுனனையுங்கொன்றுவிட்டான் அதோபார்த்தாயோ! பிரத்தியுமனன் முதலான துரைகளெல்லாரும்மூர்ச்சையாய் விழுந்துகிடக்கிறார்களென்று பின்னையும் அந்தபகவான் ரணக்களமுழுதுஞ்சோதித்துக்கொண்டுவருகையில் அதுதெரிந்து சித்தராங்கதையும் உலூவியும் கண்ணீர் ஆறாய்ப்பெருகும்படி கோவென்றசத்தமாய் அழுதுகொண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதத்தில் வந்துவிழுந்து நமஸ்காரம்பண்ணி அப்பால் குந்திதேவியையு

ம் தேவகி தேவியையுங்கண்டு அவர்களுடைய பாதத்திலும் வந்துவிழுந்து நமஸ்காரம்பண்ணி அழுதார்கள். அதுகண்டு அவர்களுங்கோவென்று முறையமிட்டழுதார்கள்,

அப்போது ஸ்ரீகிருஷ்ண பகவானும் வீமசேனனும் அர்ச்சுனனுடைய சரீரத்தைக் கண்டு மூர்ச்சையாய் விழுந்து சற்றுநேரத்தில் தெளிந்து அதில் ஸ்ரீகிருஷ்ணதேவரானவர் அர்ச்சுனனைப்பார்த்து ஆ! வீராதிவீரா; ஆ! வீரப்பிரதாபா! ஆ! தோழா! ஆ! அர்ச்சுனா! நீ எங்கேயடங்கினாய் எங்கேபோயொளித்தாய் நீ என்னுடனே பேசப்போகாதோ! இதுவரையில் நீ ஒருநாளும் இப்படிப்பட்ட ஆபத்தையடைந்ததில்லையே நீ இல்லாமலிருக்கிறது சூரியனில்லாத பகல்போலவும் சந்திரனில்லாத ராத்திரிபோலவும் தாமரையில்லாத தடாகம்போலவும் அரசனில்லாத பட்டணம்போலவும் பாழடைந்திருக்கின்றதே நீ வீரலக்ஷுமியுடனே போகித்துக்கொண்டிருக்கிறாயே! இது உனக்குஞாயமாயிருக்கின்றதோ! சுபத்திரையுடனும் துரௌபதையுடனும் போகிக்கலாகாதோ! உன்னுடையதாயாரும் உன்னுடையஸ்திரீகளும் உன்னைக் காணாமல் எந்நேரமும் அழுகின்றார்களே! நீ வந்து அவர்களுடைய துக்கத்தை நிவர்த்தி செய்ய மாட்டாயோ! உனக்கு அந்தபாபியான கங்காதேவியினுடையசாபம் எப்படிவந்துநேரிட்டது, உன்னுடைய வில்வித்தை எங்கே அடங்கிவிட்டது, ஓய்மைத்துனாவென்று அநேக விதமாகச் சொல்லி இரண்டுகண்களாகிய தாமரைகளிலும் ஜலமானது தாரைதாரையா யொழுகும்படி அழுகிறது கண்டு வீமசேனனும் மனோதைரியம் விடாமல் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பார்த்து ஓய் திருட்டுகிருஷ்ணா! நீர் லோகநாடகநடிக்கின்றீர்நீர் அழுகிறதைப் பார்த்தால் எனக்கு மெத்தவும் ஆச்சரியமா யிருக்கின்றது, அர்ச்சுனன்பிழைக்க வேண்டுமென்கிற எண்ணம் உமக்கிருக்குமானால் அர்ச்சுனாவாவென்று ஒருதரம் அழைப்பீராகில் அர்ச்சுனனும் நித்திரைசெய்தவன்போல எழுந்துவருவான் அதற்கு எவ்வளவுஞ்சந்தேகமில்லை நீர் பிடித்தகாரியம் முடியாமற்போகுமோ; நீர் வேண்டுமென்றால் மலையைத் துரும்பாக்குவீர் துரும்பை மலையாக்குவீர் உம்முடையமகிமையைத் தேவேந்திராதி தேவர்களாலும் அறியக் கூடாதென்றால் என்னால் அறியக்கூடுமோ இதுவுமல்லாமல் முன்னே சந்திபனென்கிற ஒரு பிராமணப்பிள்ளையை அழைப்பித்துக் கொடுத்த உமக்கு இந்த அர்ச்சுனனை அழைப்பிக்கிறது அருமையோ ஆகையினால் இந்தலோகநடனத்தைவிட்டு உமதுபக்தனான அர்ச்சுனனை எழுப்பிவிடும் சுவாமீயென்று வீமசேனன்சொல்ல அந்த வார்த்தைகளை யெல்லாங் கேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவரும் புன்சிரிப்பாகச்சிரித்து வீமசேனனைப் பார்த்து ஓய்வீமசேனா! உன்னுடைய எண்ணம் அப்படிக் கிருந்தால் அந்தப்படியே நடக்குமென்று சொல்லி அப்பால் விஷ்வகேதுவினுடைய சிரசையும் சரீரத்தையும் பார்த்து முட்டிக் கொண்டு அழுகின்

றகுந்திதேவிமுதலான ஸ்திரீஜனங்களுடைய துக்கத்தைத் தணித்து பிற்பாடு அங்கிருக்கின்ற சேனைகளால் அவ்விடத்தில் நடந்த சேதிகளையெல்லாஞ் சவிஸ்தாரமாகக்கேட்டுத் தெரிந்துகொண்டு இருட்டுவேளையானபடியினால் அர்ச்சுனனுடைய சிரசைத்தேடிக் காண்கிறதற்குக்கூடாமல் ஆலோசித்துக் கொண்டிருக்கும்பொழுது தேவேந்திரனானவன் தன்புத்திரனாகிய அர்ச்சுனன் தலையைக் கண்டெடுத்துவந்து உதயகிரியின்மேல் வைத்தானோவென்று சொல்லும்படியாகச் சூரியபகவானும் உதயமாகினார்.

அந்தச்சமயத்தில் பப்பிரவாகனும் ஆதிசேஷன்முதலான நாகசேனைகளுடனே சகலமேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கத்தக்கதாக மகாவைபத்துடனே வந்து கிருஷ்ணபகவான்முதலானவர்களைக்கண்டு சந்தோஷித்து மகாபயபக்திவிசுவாசத்துடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யண்டைக்குவந்து அவருடையதிருப்பாதத்தில்விழுந்து கோவென்றழுது பின்னையும் அந்தபகவானைப்பார்த்து ஓய்கோபாலசூடாமணி! தேவரீருடைய சந்நிதானத்திற்கு முன் பிதாத்துரோகியாகிய நான்வந்துநிற்கின்றேனாதலால் தேவரீருடைய திவ்யாஸ்தத்திலிடமாகவிளங்குகின்ற சக்கிராயுதத்தினால் என் சிரசைக்கண்டித்து ரக்ஷியும் ஐயாவென்று தாபந்திரியத்துடனேசொல்ல அந்தவார்த்தைகளையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்டுமனமிரங்கி பப்பிரவாகனை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு ஓய் பப்பிரவாகா! நீ விசாரப்படவேண்டாம் உன்பேரில் ஒருகுற்றமுமில்லை அந்த கங்காதேவினுடைய சாபத்தினால் இப்படிவந்து நேரிட்டதென்றுசொல்லி ஆதரனைசெய்தருளினார்; பின்பு பப்பிரவாகனும் வீமசேனனுடைய பாதத்தில்விழுந்து நமஸ்காரஞ்செய்து ஐயா! புண்ணியபுருஷா! தகப்பனைக்கொன்றபாதகனாகிய என்னுடைய தலையை உம்முடைய கதாயுதத்தினால் உடையுமென்று விசாரமாகச்சொல்ல அதுகேட்டு வீமசேனனும் பப்பிரவாகனை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு முகத்தைத்துடைத்து ஓய் புத்திரா நீ என்விசாரப்படுகிறாய் உன்னால் ஒருகாரியமும் நடக்கவில்லையேயென்றுபிரியவசனமாகச்சொல்லி துக்கத்தைத்தீர்த்தான் அப்பொழுது ஆதிசேஷன் வந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக்கண்டு நமஸ்காரம் பண்ணி ஓய் புராணபுருஷா! கோபிகாரமணா! அச்சுதாவென்று சஹஸ்ரநாமங்களாலும் அநேகவிதமாகத் தோத்திரஞ்செய்து தான்கொண்டுவந்த மிருதசஞ்சீவிரத்தினத்தையும் அமிர்தகலசத்தையும் அந்தபகவானுக்கெதிரேவைத்து ஓய் புருஷோத்தமா இந்தக்ஷணமே அர்ச்சுனனையும் விஷ்வகேதுமுதலான சேனைகளையும் எழுப்பி ரக்ஷியும் ஐயாவென்று விண்ணப்பஞ்செய்தான்.

அதுகேட்டு அந்தபகவானும் அப்படியேநல்லதென்று சம்மதித்து அர்ச்சுனனுடைய சிரசைத் தேடிக் காணாமல் ரணக்களம் முழுதுஞ்சோதித்துப்பார்த்து இல்லையென்று நிச்சயம்பண்ணிக்கொண்டு அர்ச்

சுனனுடையதலை எங்கேபோய்விட்டதோ எவர்களெடுத்துக்கொண்டு
போனார்களோ என்னகாரணமோ நாம் இனி அர்ச்சுனனைக் காணப்
போகிறோமோவென்று தாபந்திரியமாகச் சொல்லுகிற ஸ்ரீகிருஷ்ண
பகவானுடையவார்த்தைகளை ஆதிசேஷனும்வீமசேனனுங்கேட்டுஸ்ரீகி
ருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா ஜநார்த்தனா! தேவரீர் என்னயோ
சனை செய்கிறீர் அந்தத்தலை எங்கேயிருந்த போதிலும் உம்முடைய
மகிமையினால் அழைப்பிக்கவேண்டுமென்றுசொல்ல.

அதுகேட்டு அந்தபகவானும் அப்படியேநல்லதென்று அங்கிரு
க்கின்றசகலசேனைகளும் அறியத்தக்கதாக அவர்களைப்பார்த்து நான்
நித்திய பிரமசாரியாயிருப்பது உண்மையானால் அர்ச்சுனனுடைய த
லையானது எங்கேயிருந்தபோதிலும் இங்கேவரக்கடவ தென்று பிரதி
ஜ்ஞைசெய்தவளவில் சத்தசமுத்திரங்களுக்கும் அப்புரத்திலிருந்த அர்
ச்சுனனுடையதலையும் கிறுகிறுவென்று ஆகாசமார்க்கத்தி லெழும்பி
ஓய்! கிருஷ்ணா! வாசுதேவா - கேசவா - பரமாத்துமா - பரந்தாமா -
அப்பிரமேயா-ஹரீமுகுந்தா-அடைக்கலம் அடைக்கலமென்றுமுறை
யிட்டுக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதத்தில்வந்துவிழுந்த
து அவிடத்தில் அந்தச்சிரசை எடுத்துக்கொண்டுபோய் ஒளித்துவைத்
திருந்தநாககுமாரர்களிருவருடையதலையும்ஆயிரஞ்சுக்கலாகவெடித்த
து இவிடத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானும் தம்முடையபாதத்தில் வந்துவி
ழுந்த அர்ச்சுனனுடையசிரசைக்கையிலெடுத்துக்கொண்டுதமதுபீதா
ம்பரத்தினால் முகத்தைத்துடைத்து சிகையைமுடிந்துமீசையைத் தி
ருத்திகிரீடத்தையும் நன்றாயமர்த்தி பிற்பாடு அந்தச்சிரசைஅர்ச்சுனனு
டையசரீரத்திற் பொருந்தத்தக்கதாகப் பொருத்திவைத்து அந்தச்ச
ரீரத்தின்பேரில் அமிர்தத்தைத்தடவிமிருதசஞ்சீவிரத்தினத்தினாலொரு
தரம் துடைத்தமாத்திரத்தில் அர்ச்சுனராஜனானவன் ஆபாசமாய் மூர்ச்
சித்திருந்தவன் எழுந்திருந்தாற்போல எழுந்திருந்தான். பின்பு விஷ
வகேதுவினுடையசிரசையும் அவன்சரீரத்திற்பொருத்திவைத்து மிரு
தசஞ்சீவிரத்தினத்தினால் துடைத்தமாத்திரத்தில் விஷவகேதுவும் எ
ழுந்திருந்தான் அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும்அந்தமிருதசஞ்
சீவிரத்தினத்தைத் தமது திவ்வியாஸ்தத்தினாற் பிடித்துக்காண்பித்த
மாத்திரத்தில் ரணக்களத்தில் அடிபட்டுநொந்துமூர்ச்சையாய்விழுந்
துகிடக்கின்ற - பிரத்திமனன் - அனுசாளுவன் - எவ்வர்த்துசுவன் நீல
த்துவசன் - அம்சத்துவசன் - சாத்தகி - கிருதவர்ம்மன் - மேகவர்ணன்
சுவேகன்முதலான துராதுரைகளெல்லாரும் எழுந்திருந்தார்கள். பின்
னையும் ரதகஜதுரகபதாதிகளெல்லாம் எழுந்திருந்ததுகள்.

அப்பொழுது தேவர்களெல்லாம் புஷ்பவருஷம் பொழிந்தார்க
ள் தேவதுந்துமியும் திம்திமென்றுமுழங்கியது, குளிர்ந்தகாற்றடித்
தது பின்னும் நல்லசகுனமாச்சுது, அந்தவேளையில் விஷவகேதுவும்
வில்லையெடுத்துக் குணத்தொனிபண்ணி ஆக்கிரமியாக்கிரமதிக்குபோ

துருகப்பற்களைப் படபடவென்றுகடித்துக்கொண்டு அதிகோபத்துடனே பப்பிரவாகனைப்பார்த்து அடா பப்பிரவாகா! உன்னைநான் கொல்லாமல்விடுவேனோ! என்னுடையபாணக்கினியினால் உன்னைப் பஸ்மீகரப்படுத்துகிறேனென்றுசொல்லி முனையும்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவான்கண்டுசிரித்து விஷ்வகேதுவைப் பார்த்து ஓய் விஷ்வகேதா! போதும்போதும் சும்மாவிருசண்டையைநிறுத்து அந்தப்பப்பிரவாகன் அன்னியனோ! அவனும்உன்னைப்போல அர்ச்சுனனுடைய குமாரனல்லவோ! விதிவலியை ஒருவராலும் தள்ளிநடக்கக் கூடாமையினால் இப்படிக்குவந்துநேரிட்டது. இனிமேல் சண்டைபண்ணவேண்டாம் சமாதானமாய்த்திரும்பென்றுசொல்ல, அந்தவார்த்தையைக் கேட்டு விஷ்வகேதுவும் மதங்கொண்டயானையானது அங்குசத்தினால் அடங்கிநிற்பதுபோல குரோதத்தைத்தணித்து அடங்கிநின்றான். அப்பொழுது அர்ச்சுனனும் விஷ்வகேதுவும் எழுந்திருந்து பயபக்தி விசுவாசத்துடனே ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கும் வீமசேனனுக்கும் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைக்கைக்கொண்டு பிற்பாடு குந்திதேவியையும் தேவகிதேவியையும் அசோதையையுங்கண்டுதெண்டனிட்டார்கள். அவர்களும் இவர்களை எடுத்துமார்போடுதழுவிக்கொண்டு ஆசீர்வாதம்பண்ணினார்கள்பிரத்தியுமனன் அனிருத்திரன்முதலான ராஜகுமாரர்களெல்லாரும் வந்துமகாபயபக்தி விநயத்துடனே ஸ்ரீகிருஷ்ணபகவான் - வீமசேனன் - குந்திதேவி தேவகிதேவி - அசோதை - இவர்களுக்கு நமஸ்காரம்பண்ணி இவர்களுடைய ஆசீர்வாதத்தைக்கைக்கொண்டார்கள் -

அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாருடைய அனுமதியின் பேரில் ஜெயபேரிகைமுறைவித்து பதினெட்டுவகை மேளவாத்தியங்களும்தாம்தாமென்று முழங்கத்தக்கதாக ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளுடனும் - அம்சத்துவஜன் - நீலத்துவஜன் முதலான ராஜவர்க்கங்களுடனும் ஆதிசேஷன் முதலான நாகசேனைகளுடனும் கிருஷ்ணார்ச்சுனர்களுடனும் பப்பிரவாகனனவன் ரதாரூடனாய் ரணக்களத்தைவிட்டுப் புறப்பட்டு மணிபுரத்திற்குவந்துசேர்ந்து சகல சம்பிரமத்துடனே அவரவர்களுக்குத்தகுந்த விடுதிகள்விடுவித்து ராஜாக்களுக்கெல்லாம் வெவ்வேறு விசித்திரமானவிடுதிகள் விடுவித்து அதின்பிறகு ஸ்ரீகிருஷ்ணபகவான் - அர்ச்சுனன் - வீமசேனன் ஆதிசேஷன் இவர்கள்நால்வரையுங் கொலுமண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நவரத்நபீடங்கள் போடுவித்து அவர்களை அதன்மேலுட்க்காரவைத்து தான் கீழேஉட்க்கார்ந்திருந்தான். அப்பொழுது ஆதிசேஷனானவன் அர்ச்சுனன் தலையிறங்கிக்கொண்டிருக்கின்றதைக் கண்டு அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நீ யேன்விசாரப்படுகிறாய் உன்குமாரன்தானே உன்னோடெதிர்த்து யுத்தம்பண்ணினவன் அன்னியனல்லவே! கைவிரல்வந்துகண்ணிற்பட்டால் திரும்பவும் அந்தக்

கைவிரலைத் தறித்துப்போடுகிறவர்களுண்டோ ஆகையினால் உன்குமாரனும் நீர் பேசவில்லையென்று துக்காக்கிராந்தனாய் இமோர்ப் பர்வதத்திற்குப்போய் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுகிறேனென்று ஆலோசனையாயிருக்கிறான் அப்படி நீர் கோபமாயிருக்கலாகாது. பூலோகத்தில் பிள்ளையானவன் தகப்பனுக்கு ஒருகுற்றஞ்செய்தால் அதைப் பொறுத்து ரக்ஷிக்கிறது பிதாவினுடைய கடமையல்லவோ! ஆதலால் நீர் கோபத்தைத்தணித்து உம்முடையகுமாரனை ஆதரணைசெய்து ரக்ஷியுமென்றுசொல்ல. அதுகேட்டு அர்ச்சுனனும் நம்முடையபிள்ளையினால் நமக்கு இத்தனை அவமானம்வந்ததேயென்று வெட்கத்துடனேயிருக்க அதுதெரிந்து பின்னையும் ஆதிசேஷனானவன் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! ஜநார்த்தனா! அச்சுதா-வரதா-புருஷோத்தமா தேவரீர் இப்படிக்கு உபேக்ஷையாயிருந்துபார்த்துக்கொண்டிருப்பது தர்மமாயிருக்கின்றதோ அப்படி செய்யவேண்டாம் அர்ச்சுனனையும்பப்பிரவாகனையும் உறவுபண்ணிவையுமென்றுசொல்ல அதுகேட்டு அந்தபகவானும் நகைத்து ஆதிசேஷனைப்பார்த்து ஓய் அனந்தா! நாம் ஒரு வார்த்தைசொன்னால் யாருங்கேட்க மாட்டார்கள். இதோ எல்லாருக்கும்பெரியவர் வீமசேனனிருக்கிறார். அவரையல்லாமல்ஒரு காரியமும்நடக்கமாட்டாது அவரேகாரண கர்த்தர் நமக்கொன்றுந் தெரியவராது ஆகையால் சகலநன்மைதீமைகளும்அவருக்கே யல்லாமல்நமக்குயத்தத்தென்னவென்று சொல்லியருளினார்.

அந்தவார்த்தைகளையெல்லாம் வீமசேனன்கேட்டுச்சிரித்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! தேவகிநந்தனா! நீர் என்னைப் பரிகாசம்பண்ணவோவந்தீர்! உம்மால் ஆகாதகாரியம் ஒன்றுண்டோ ஓய்கபடநாடகசூத்ராவதாரீ நீர் அப்படி சொல்லாமல் அர்ச்சுனனுடையகோபத்தைத்தீர்த்து பப்பிரவாகனை ரக்ஷித்தருளுமென்றுசொன்னான். இந்தவார்த்தைகளையெல்லாம் பப்பிரவாகன்கேட்டு மகாதுக்காக்கிராந்தனாய் பிதாத்துரோகியாகிய நாம்பூமியிலிருக்கலாகாது நமக்குமகத்தாகியபாதகம்வந்து சம்பவித்தது ஆதலால்இந்தச் சரீரத்தை வைத்திருக்கப்படாது இது காரியத்திற்கு இமோர்ப்பர்வத மட்டுக்கும்போகவேண்டுமோ இவிடத்தில்தானே ஜீவனைவிட்டுவிடுகிறதுயுக்தமென்று நிர்மானித்து அவிடத்தில்தானே தர்ப்பயாசனம் பரப்பிஅதன்பேரில் உள்க்கார்ந்துக்கொண்டுபிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளப்போம்பொழுது அதுதெரிந்து ஆதிசேஷனும் ஸ்ரீகிருஷ்ணபகவானும்வீமசேனனும்திடுக்கென்று எழுந்துஓடிவந்து பப்பிரவாகனைப் பிடித்துக்கொண்டு அவனுடையதுக்கத்தைத்தீர்த்து அவனை அழைத்துக்கொண்டுபோய் அர்ச்சுனனுடையபாதத்திற்போட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! உன்கோபத்தைவிட்டு உன்குமாரனை ஆதரணைபண்ணென்றுசொல்ல அதுகேட்டு அர்ச்சுனனானவன் தனக்குள்ளிருந்த கோபத்தையும் வெட்கத்தையும்

விட்டுவிட்டு சந்தோஷகரமாய் பப்பிரவாகனையெடுத்து மார்போடுதழுவிக்கொண்டு ஓய்குமாரகா! பப்பிரவாகா இத்தனைவிபரீதமும் கங்காதேவிசாபத்தினால் வந்ததேயல்லாமல் வேறல்ல! இதனால் எனக்குக்கீர்த்தியேயல்லாமல் அபகீர்த்தியல்ல! நீ இதைககுறித்து விசாரப்படவேண்டாம் சந்தோஷமாயிருவென்றுபிரியவசனமாகச்சொல்ல. அதுகேட்டு பப்பிரவாகனும் சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கினவனாய்ப்பிதாவினுடைய அனுமதியின்பேரில் ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலானவர்களுக்கெல்லாம் போஜனமுதலான சர்வஉபசாரங்களும் நடப்பித்துபிற்பாடு நாட்டியப்பெண்களையும் பதினெட்டுவகைமேளவாத்தியங்களையும் அழைப்பித்து சகலமானபேருக்கும் பொழுது போக்கிக்கொண்டிருக்கும்படி திட்டம்பண்ணினான்.

இந்தப்பிரகாரம் ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனராஜனுடனேகூடமணிபுரத்தில் ஐந்துநாளிருந்து ஆறுநாள்காலமே அந்தபகவானானவர் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! நான் அஸ்தினாபுரத்திற்குப்போகவேண்டும்எனக்குச்செலவுகொடுத்தனுப்பென்று கேட்டருளினார். அதுகேட்டு அர்ச்சுனனும் அந்தபகவானைப்பார்த்து ஐயா! கிருஷ்ணா! நான் இனிமேல் ஒருநிமிஷமாகிலும்தேவரீரைவிட்டுப் பிரிந்து அப்புறம் இப்புறம்போகமாட்டேன் தேவரீர்என்னிடத்தில்தானேயிருக்கவேண்டும் ஆதலால்என் தமையனாகியவீமசேனமகாராஜனை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பிவையுமென்றுசொல்லஅதுகேட்டு, அந்தபகவானும் வீமசேனனையழைத்து ஓய் வீமசேனா! நீஅஸ்தினாபுரத்திற்குப்போய் தர்ம்மபுத்திரனண்டையில் பத்திரமாய்க் காத்துக்கொண்டிருவென்றுசொல்லியனுப்பஅதுகேட்டு வீமசேனனும் அப்படியே நல்லதென்றுசம்மதித்து தேவகிதேவி-குந்திதேவி-அசோதை-உலுபசி-சித்திராங்கதை-இவர்களெல்லாரையும் ரதத்திலேற்றிக்கொண்டுதர்ம்மபுத்திரருக்குக்காணிக்கையாக இரண்டாயிரம் ஒட்டகத்தின்பேரில்நவரத்தினங்களை யெடுப்பித்துக்கொண்டுகிருஷ்ணார்ச்சுனர்களிடத்தில்செலவுபெற்றுக்கொண்டு அஸ்தினாபுரத்திற்குப்போனான். பிற்பாடு ஆதிசேஷனும் கிருஷ்ணார்ச்சுனர்களிடத்தில் செலவுவாங்கிக்கொண்டு நாகசேனைகளுடனே பாதாளலோகத்திற்குப்போனான்.

அப்பொழுது அர்ச்சுனமஹாராஜனானவன் கிருஷ்ணபகவானுடைய அனுமதியின்பேரில் பப்பிரவாகன் விஷ்வகேது அம்சத்துவஜன்முதலான துரைகளுடனேயும் ரதகஜ துரகபதாதிகளாகிய சதுரங்கபலசேனைகளையும் பிரயாணப்படுத்தி அந்தமணிபுரத்தையும்மந்திரிகள்வசத்தில் ஒப்புவித்து அஸ்வமேதக்குதிரையையும் வீதி மார்க்கமாகப் பூசைபண்ணி முன்னதாகநடத்தி தானும் ஸ்ரீகிருஷ்ணபகவானுடனேயுத்தசன்னத்தனாய் ரதாரூடனாய்ப்புறப்பட்டு பதினெட்டு வகை மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கத்தக்கதாகமகாவுச்சாகத்துடனே நடந்தான்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜாவே! அப்பால் அந்தக்குதிரையானது தஸ்னிச்சையாக நடந்துகாடுகள்-செடிகள் - வனங்கள்-வனாந்திரங்கள்-கடந்துவடதிசைநோக்கி ரத்தினபுரமென்கிறபட்டணத்திற்குச் சமீபமாகவந்தது அவிடத்தில்அந்தப் பட்டணத்தைப் பரிபாலனம்பண்ணுகின்றவன் மயூரத்துவஜமகாராஜனென்னும் பெயரையுடையவன் மகாவீராதிவீரன் - வீரப்பிரதாபன்-சத்தியசந்தனன் - கனவிலும்பொய்சொல்லாதவன்-அரியக்கிமறவாதவன்-துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனன்-அஷ்ட அயிஸ்வரியங்களும் நிறைந்துள்ளவன்ஷோடசமகாதானகெம்பீரன்-அப்படிப்பட்ட ராஜாதிராஜனானவன் அஸ்வமேதயாகஞ்செய்ய நினைத்து தான்யாகதீக்ஷையைக்கைக்கொண்டு குதிரையைப்பூசைபண்ணிவிட்டு அந்தக்குதிரையின் பிறகேவீராதிவீரனான தன்புத்திரனாகிய தாமரைத்துவசனையனுப்பி அதிசீக்கிரத்தில்பூமிப்பிரதக்ஷிணஞ்செய்வித்துக்கொண்டுவரும்படிகட்டளையிட்டனுப்ப அந்தப்படியேதாமரைத்துவஜனானவன் நகுலத்துவசனென்கிறசேனாதிபதியுடனும் ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளுடனும் ரணரங்கசூரனாய்ப்புறப்பட்டு அந்தக்குதிரையின்பிறகேநடந்து அங்கங்கே அந்தஅஸ்வமேதக்குதிரையைப்பிடித்தெதிர்த்தவர்களெல்லாம்போராடிக்கெலித்து காணிக்கைகப்பங்களைப் பெற்றுக்கொண்டு பூமிமுழுதும் பிரதக்ஷிணம்பண்ணிமுடித்து தன்னுடைய ரத்தினபுரத்திற்குச்சமீபமாகவந்து தண்டுவிட்டிறங்கினான். அந்தஅஸ்வமேதக்குதிரையும்ரத்தினபுரத்துக்கோட்டைவாசலிலோரமாய்ப்பச்சென்றபுல்லைக்கண்டு மேய்ந்துகொண்டிருந்தது அப்பொழுது அர்ச்சுனனுடைய குதிரையும்வந்து தாமரைத்துவஜனுடைய குதிரையைக்கண்டு சேரப்போச்சுது அதுகண்டுதாமரைத்துவஜனுடையகுதிரையும் அர்ச்சுனராஜனுடையகுதிரையைக்கண்டுசேரவந்து அதின்முகத்துடனே முகத்தைவைத்துமுகந்துக்கொண்டுஎழாரவங்களைச்செய்தது,

அதுகண்டுதாமரைத்துவஜனும்நகுலத்துவஜனைப்பார்த்துஇதேது அஸ்வமேதக்குதிரை இதுஎங்கேயிருந்துவந்ததென்றுசொல்ல அதுகேட்டுநகுலத்துவஜனும் அந்தக்குதிரையின் சமீபமாகப்போய் குதிரையைப் பிடித்துக்கொண்டுவந்து தாமரைத்துவஜனிடத்தில் ஒப்புவித்தான். அப்பொழுது தாமரைத் துவஜனும் அந்தக்குதிரையினுடைய லலாடத்திற் கட்டியிருக்கின்ற விருதா வொளிலையை வாசித்துப் பார்த்துபுன்சிரிப்பாகச்சிரித்து தலையையசைத்து! சேனாதிபதியைப் பார்த்து ஓய் சேனாதிபதியே! இந்த அதிசெயத்தைக் கேட்டாயோ! அஃதென்னவென்றால், அஸ்தினாபுரத்தை யரசாக்ஷிசெய்கின்ற தர்மராஜாவானவர் பயித்தியம்பிடித்து தானேவீராதிவீரனென்று கெர்வித்து அஸ்வமேதயாகஞ்செய்து முடிக்கநினைத்து குதிரையைவிட்டிருக்கிறான் அந்தராஜன் இனிமேல் யாகம்பண்ணிமுடிக்கிறது தெய்வத்திற்கேதெரியும் அதுவுமல்லாமல்இந்தக்குதிரையின்பிறகே யுத்தசன்னத்த

றுய்வருகிறவன்! மேட்டானமேட்டியாகிய அர்ச்சுனனும் அவன்நமது குருஸ்வாமியாகியகோபாலகிருஷ்ணமூர்த்திக்குமைத்துனனும் ஆகையால் நாம் அந்த அர்ச்சுனனைமடக்கிக்கொண்டு சாக அடித்துநோகப்பண்ணினால் அவனுக்குச்சகாயமாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் வந்தருளுவார்நாம் அவரைப்பிடித்துக்கொள்ளலாம் இன்றையதினமல்லவோ நம்முடைய எண்ணம் நிறைவேறியது, அதல்லாமலும் இந்ததண்டுடனேகூட அர்ச்சுனன்மகனான பப்பிரவாகனும்வருவான் அவனைப்பலசாலியென்று சிலர் சொல்லுவார்கள் ஆனாலுமாகட்டும் இந்தக்குதிரையைக்கொண்டுபோய் நம்முடைய தண்டுடனே கூட கட்டி வையென்றுசொல்ல, அதுகேட்டு அந்த சேனாதிபதியும் தாமரைத் துவஜனைப்பார்த்து ஐயா! ராஜநந்தனா! அந்த அர்ச்சுனனெம்மாத்திரம் அவனைச்சட்டைபண்ணி தேவரீர் அவனுடனே சண்டைபண்ண வேண்டுமோ! அப்படி நீர் யோசிக்க வேண்டியதில்லை அவன் இவிடத்திற்கு வருவானாகில் அவனையும் அவன் சேனைகளையும் என்னுடையபாணாக்கினியினால் நானேகண்டித்துவிடுகிறேன் நீர் அதற்கு எவ்வளவுஞ் சந்தேகிக்கவேண்டாம் அல்லது அந்தப்பப்பிரவாகனை மகாபலசாலியென்று மதித்திருக்கிறீரோ! அவன்வந்தாலென்ன! அவன் நம்முடைய நாடகசாலைப்பெண்களில் புஷ்பாஞ்சாலியென்பவளுக்கு வருஷத்திற்கொருதிரம் ரத்தினங்கொண்டுவந்து கொடுக்கிறவனல்லவோ! அவன் எம்மாத்திரம் அவன் நமக்கு ஈடானவனோவென்றுசொல்ல, அதுகேட்டு தாமரைத் துவஜனும் சந்தோஷித்து தனதுசேனாதிபதியைப் பார்த்து ஓய் நகுலத்துவஜா; நமக்கே ஜெயகாலமிருக்கின்றது நீ சீக்கிரத்தில் குதிரையைக்கொண்டுபோய் பத்திரப்படுத்திவிட்டு நமதுசேனைகளையெல்லாம் யுத்தஞ்செய்கிறதற்கு முஸ்தீது பண்ணி வையென்று கட்டளையிட்டனுப்பினான்.

தாமரைத் துவஜன்யுத்தம்.

அதுகேட்டு நகுலத்துவஜனும் அப்படியே நல்லதென்று குதிரையைக்கொண்டுபோய் கட்டிவைத்துவிட்டு தங்களுடைய சேனைகளையெல்லாம் எச்சரிக்கைபண்ணி அர்த்தசந்திரவியூகமாக நிறுத்திவைத்து ரணபேரிகை யறைவித்துச் சண்டைக்கு முஸ்தீதா யிருந்தான். இங்கே அர்ச்சுனராஜனுங் குதிரைபிடிபட்டுப்போன சேதியைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவா னுடனேசொல்ல, அவரும் ஆலோசனை செய்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! இப்போது நமது குதிரையைப்பிடித்துக்கொண்ட தாமரைத்துவஜமஹாராஜனோ மெத்தவும்பலவந்தன் அவன் தர்மசொரூபன் சத்தியசந்தனன் விஷ்ணுபக்தன் வீராதிவீரன் அவனை ஜெயிக்கமுடியாது ஆகையினால் அவனுடனே எவ்விதத்திலாகிலுஞ் சிநேகம்பண்ணி குதிரையைமீட்டுக்கொள்ள வேண்டு

மேயல்லாமல் சண்டையினால் குதிரையை மீட்டுக்கொள்ளக் கூடாதென்றுசொல்ல; அதுகேட்டு அர்ச்சுனனும் அந்த பகவானைப் பார்த்து ஐயா! கிருஷ்ணமூர்த்தி! அப்படியானால் நாமேபோய் எங்கள்குதிரையை விட்டுவிடென்றுபிரியவசனஞ் சொல்லுகிறது வீரத்தன்மையோ சுவாமீ யென்று தடுத்துச் சொல்ல, அதுகேட்டு கிருஷ்ண தேவனும் ஓய் அர்ச்சுனா, நாம் அப்படிபகையாளிக்குப் பிரியவசனஞ் சொல்லவேண்டியதில்லை, நாமும் பின்னிடாமல் சண்டை பண்ணலாம் நீயும் ஹரிபக்தியுள்ளவனல்லவோ; நீயுங்கெலிக்கிறாயென்றுசொல்லி விஷ்வகேதுவையழைத்து ஓய் விஷ்வகேதா நீ நமது சேனைகளை யெல்லாம் சண்டைக்குமுஸ்தீதாக வியூகங்கட்டி நிறுத்தென்று கட்டளையிட்டருளினார். அதுகேட்டு விஷ்வகேதுவும் அந்தப்படியே சேனைகளைக்கூட்டிக்கிருத்தி வியூகமாகநிறுத்திவைத்து பிரத்தியுமனனையும் அனுசாருவனையும் பக்ஷிக்குக்கண்களாகநிறுத்தி அம்சத்துவஜனையும் நீலத்துவஜனையும் கால்களாகநிறுத்தி எவ்வர்ணசுவனையும் டப்பிரவாகனையுஞ் செட்டைகளாய்நிறுத்தி - சாத்தகி- கிருதவர்ம்மன் -மேகவர்ணன் இவர்களைவாலாகநிறுத்தி ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களைக் கெர்ப்பத்தில்நிறுத்தி தானும் உக்கிராகாரனாய் பக்ஷிக்கு மூக்காகநின்று ரணபேரிகை வெண்கலப்பேரிகை முதலானதுகளையும் சகலலோகங்களும் நடுங்கத்தக்கதாக முழக்குவித்தான்.

அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப் பார்த்து ஓய் அர்ச்சுனா! நான் உனக்குச்சாரதியா யிருக்கவோ! ரதிகனா யிருக்கவோ சொல்லென்றுகேட்க அதற்கு அர்ச்சுனனும் அந்த பகவானைப் பார்த்து ஐயா! தேவரீர் ரதிகனாய்த்தானே யிருமென்றுசொல்ல அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் தாரகனை நினைத்தருளினார். அதுதெரிந்து அந்தக்ஷணமே தாரகனும் சகலசஸ்திர அஸ்திர முஸ்தீதுகளுடனே வைகுண்டரதத்தைக்கொண்டுவந்து நிறுத்தினான். அதுகண்டு அந்தபகவானும் அந்தரதத்திலேறிக்கொண்டு தமது பாஞ்சசன்னியத்தையெடுத்துப் பம்பம்மென்று ஊதியருளினார். அந்தசத்தத்துடனே அர்ச்சுனனும்தனது தேவதத்தத்தையெடுத்து அண்டகடாகமதிரும்படி முழக்கஞ்செய்தான் அந்த ஓசைகளினால் அர்ச்சுனனுடையசேனைகளெல்லாம் சந்தோஷிகரமாய் மகா உச்சாகத்தைப் பொருந்தினார்கள். தாமரைத்துவஜனுடைய சேனைகளெல்லாம் உச்சாகமடங்கி திகிலடைந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும் மகாசந்தோஷித்துடனே சார்ங்கமென்கிற வில்லையெடுத்துத் தமது திவ்வியாஸ்தத்தினாற் பிடித்துக் குணத்தொனிபண்ணி தம்துரதத்தைச்சகலசேனைகளுக்கு முன்னதாகத் தாமரைத்துவஜன்பேரில் நடத்தியருளினார். அதுகண்டு தாமரைத்துவஜனுஞ் சிரித்து அந்ததேவனுக்கு மனோபூஜையாய் அர்க்கிய பாத்தியமுதலானசர்வவுபசாரங்களுஞ் செய்துதன்னுடைய ரதத்தைச் சமீபமாகத்துரத்தி அந்தபகவானைப்பார்த்து

ஜயா; ருக்மிணிமனோகரா சத்தியபாமைவல்லபா கோபிகாரமணா-தேவகிநந்தனா- பரமபுருஷா- ஓ ஸ்வாமீ; நில்லும் நில்லும் ஏன் இத்தனை துரிதமாய் வருகிறீர் நீர் என்னை அறியீரோ அறியமாட்டீரோ இப்போது என்னுடைய பாணக்கினியென்கிற துளசியினால் உம்மைப்பூசைபண்ணுகிறேன் சற்றுநேரம் பதறாமல் நில்லும் அந்த அர்ச்சுனன் எப்படிபோகிறானோ நீர் எப்படிபோகிறீரோ பார்ப்போம் உம்முடைய பாணமானது என்னை என்னசெய்யக்கூடும் அதைநான் சற்றே அறிகிறேனென்று சொல்லிக்கொண்டிருக்கையில் அர்ச்சுனனுடைய சேனைகளெல்லாரும் மனோச்சாகசந்தோஷகெம்பீரத்துடனே ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு முன்னதாகப்போய் தாமரைத்துவஜனுடைய சேனைகள் பேரில்விழுந்து அதிகோரமான யுத்தம்பண்ணினார்கள்,

அதுகண்டு தாமரைத்துவஜனும் ஆக்கிர வியாக்கிரம நிக்குரோதனைப் தன்னுடைய கோதண்டத்தைக்கையிலெடுத்து குமுகுமுவென்று குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அநேகமாயிரம்பாணங்களைச் சந்தித்துப் பிரயோகஞ்செய்து அர்ச்சுனனுடைய சேனைகளையெல்லாஞ் சின்னாபின்னமாகக்கண்டித்து ரத்தப்பிரவாகமாக்கித் துரத்திவிட்டான். அதுகண்டு அம்சத்துவஜனும் நீலத்துவஜனும் ரோஷதாம்பிராக்ஷர்களாய் தங்களுடைய ரதத்தைத் தாமரைத்துவஜன் பேரில் துரத்தி அநேகமாயிரம் பாணங்களைப் பிரயோகம் பண்ணினார்கள் அதற்கு தாமரைத்துவஜனானவன் எவ்வளவுஞ் சஞ்சலப் படாமல் தன்னுடைய வில்லினிடமாக அளவிறந்த நாராசங்களைத் தொடுத்து அவர்கள் விட்டபாணங்களை யெல்லாம் தும்சப்படுத்தி அவர்களுடைய சரீரமுழுதுஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்துச் சதைசதையாகப் பெயர்த்தெறிந்தான். அதனால் அவர்கள்மெத்தவுங் கஸ்திப்பட்டு ரதத்தின்பேரில்விழுந்து மூர்ச்சையடைந்தார்கள்.

அதுகண்டு அனுசாளுவனும் கோபதீப்தனாய்எரிந்துவிழுந்துதாமரைத்துவஜனைப்பார்த்து ஓய் ராஜகுமாரகா! நில்லுநில்லென்றுசொல்லிதன்னுடைய ரதத்தைத்துரத்தி அநேகமாயிரம் குரூரபாணங்களை எடுத்துத்தொடுத்துவிவ்வுவிவ்வுமென்றுபிரயோகம்பண்ணினான். அதுகண்டு தாமரைத்துவஜனும் தன்பேரில் வந்துவிழுந்த பாணங்களையெல்லாங்கண்டித்துத்தள்ளி உடனே ஆயிரம்பாணங்களைப்பிரயோகம்பண்ணி அனுசாளுவனுடைய சரீரமுழுதும் தைக்கும்படிசெய்ய அதற்கு அவன் நிர்வாகம்பண்ணமாட்டாமல் தேரைவிட்டுப் பூமியிற் குதித்து ஒடிப்போனான் அதுதெரிந்து சாத்தகி கிருதவர்மமன் மேகவர்ணன் இவர்கள் மூன்றுபேரும்வந்து சண்டப்பிரசண்டர்களாய்அக்கிரகித்து தங்களுடைய தேரைத்தூண்டி வில்லைவளைத்துப் பாணங்களைப்பிரயோகித்து தங்களுடைய தூணீரத்தில் பாணமில்லாமல் போகத்தக்கதாக எங்கேபார்த்தாலும் பாணமயமாக நிரப்பினார்கள், அந்தபாணங்கள் அதிவேகமாகவந்து சுறுக்குசுறுக்குமென்று தாமரைத்

துவஜனுடைய சாரதிகுதிரைகள்பேரில்தைத்து ரத்தமயமாக்கிவிட்டு அவனையும் வருத்தும்பொழுது அதனால் தாமரைத்துவஜன் மெத்தவும்நொந்து காலாக்கினிருத்திரனைப்போலச் சீறிவிழுந்து அநேகமாயிரம் பாணங்களைஎடுத்து வில்லினிடமாகத்தொடுத்துப்பிரயோகம்பண்ணி அந்தமூன்றுபேருடைய ரதங்களையும்பொடியாக்கிஅவர்களுடைய கைவில்லையுங்கண்டித்து பின்னையும் அவர்களுடைய மார்பினிடமாகத் தைக்கும்படி பத்துநாராசங்களை எடுத்துப் பிரயோகம்பண்ணினான்.

அதுகளும்திருதிருவென்றுவடவாமுகாக்கினிபோலஎரிந்துக்கொண்டுவந்துமூன்றுபேருடையமார்பிலும்பட்டுமுதுகிலுருவிப்போய்விட்டது, அதனால் அவர்கள்மெத்தவும்நொந்து தலைவிரிகோலமாய் ஒருவர்போனவழி ஒருவர்போகாமல் அந்தமூன்றுபேரும் ஓடிப்போய்விட்டார்கள். அதுகண்டுபிரத்தியுமனனும்அனிருத்திரனும்மகாகோபதீபர்களாய் இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிகள் குபீல்குபீலென்றுபறக்கும்படியாக ஆக்ருஷித்துடனேவந்து தாமரைத்துவஜனைப்பார்த்து ஓய்ராஜகுமாரகா! நீ பிஞ்சவேண்டாம்நில்லுநில்லு உன்னை இன்னஞ்சற்றுநேரத்தில் இந்தப்பூமிக்குப்பலியிடுகிறோமென்றுசொல்லி வில்லைவளைத்து அநேகமாயிரம்பாணங்களைப்பிரயோகித்து தாமரைத்துவசனுடைய ரதத்தைக்கண்ணுக்குத் தெரியவொட்டாமல் சரகூடங்கட்டினதுபோல மறைத்துஅஷ்டகாசஞ்செய்துநின்றார்கள். அதுகண்டு தாமரைத்துவசனுங் காலாக்கினிருத்திரனைப் போலச் சீறிவிழுந்து சூரியகிரணங்களைப்போல அதிதீக்ஷண்யமாய் விளங்குகின்ற பாணங்களைஎடுத்து வில்லினிடமாகச் சந்தித்துப் பிரயோகம்பண்ணி அந்தஇரண்டுபேருடையகைவில்லையும் ஒடித்து அவர்கள்சரீரமுழுதும் ஊசிநாட்டஇடமில்லாமல்சல்லடைக் கண்களாகத் துளைத்துமார்பையும் பத்தலாகக்கிழிக்க அதனால்மெத்தவும்நொந்து அந்தஇரண்டுபேரும்வாயினாலும் நாசியினாலும்ரத்தங்களைக்குபீல்குபீலென்றுகக்கிக்கொண்டுதேரின்பேரில்மூர்ச்சையாய்விழுந்துவிட்டார்கள் அதுகண்டு பப்பிரவாகனும் மிகுந்தகோபாந்தகனாய்ஆக்கிரகித்துபல்லுகளைநெறநெறவென்றுகடித்துக்கொண்டு மீசைகள்படபட வென்றுதுடிக்கும்படியாகத்தன்னுடைய ரதத்தைத்தாமரைத்துவஜன் பேரில்அதிவேகமாகத்துரத்தி மகாஉக்கிராகாரனாய்அந்தராஜகுமாரனைப் பார்த்து அடாதாமரைத்துவஜா! என்னடா நீ தலைகீழாய்விழுகிறாய்இப்போது ஓடிப்போகாமல் நின்று என்னோடேபோராடென்றுசொல்லிதன் கையிலிராநின்றவில்லைவளைத்துக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அதிதீக்ஷண்யமான அநேகபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்து தாமரைத்துவஜனுடையதேரைச் சாரதி குதிரைகளுடனே பொடிபொடியாக்கி அவன்கையிலிராநின்ற வில்லைக் கண்டித்துகவசத்தைக்கிழித்துமார்பையும்பத்தலாக்கினான் அதனால்தாமரைத்

துவஜனும்மிகுந்த ஆயாசமடைந்துஎவ்வளவும்பின்னிடாமல் வேறே
ஒருதேரிலேறிக்கொண்டுமற்றொருவில்லைஎடுத்துக்குணத்தொனிபண்
ணிஅநேகமாயிரம் குரூரபாணங்களைத்தொடுத்துப்பிரயோகஞ்செய்
துப்பிரவாகனுடைய சாரதியையுங்குதிரைகளையுங்கொன்று அவன்
கைவில்லையுங்கண்டித்துகவசத்தையுங்கிழித்துபின்னையும் அந்தப்பப்
பிரவாகனைப்பார்த்து அடாபப்பிரவாகா! நான்இந்தக்ஷணமேஉன்னை
க்கொன்றுவிடுவேன் அப்படிசொல்லாமல்விட்டுவிட்டதுஎதினாலென்
றால்எங்களுடையநாடகசாலைப் பெண்களில்புஷ்பாஞ்சாலியென்கிற
பெண்ணுக்குவருஷத்திற்கொருதரம் ரத்தினங்கள்கொண்டுவந்துகொ
டுக்கிறவனாகையால் மன்னித்துவிட்டேனென்றுசொல்லி சரீரமெல்லா
ஞ்சலதசலதயாகப்பேர்த்தெறிந்து அவனைக்கைகால்ஆடவொட்டாமல்
பிரம்மிக்கப்பண்ணினான்.

அதனால்பப்பிரவாகனும் மிகுந்தஆயாசத்தையடைந்துமகா வெ
ட்கத்துடனே கைகால்களை உதறிக்கொண்டு நிர்வாகம்பண்ண மாட்டா
மல்ஓடிப்போனான். அதுகண்டு தாமரைத்துவஜனும் அர்ச்சுனன்பே
ரில்முனைந்து நடக்கையில் அதுதெரிந்து கர்ணன்குமாரனான விஷ்வ
கேதுவும் ஆக்கிரகித்து தன்னுடையரதத்தைக்குறுக்கே துரத்தி அந்
தவீரனைப்பார்த்து அடா தாமரைத்துவஜா! நீ எங்கேபோகிறாய் சற்
றேநில்லு நில்லென்று அதட்டிதன்னுடையவில்லிலேகோடையிடிக்கு
ச்சமானமான அநேகபாணங்களைத்தொடுத்து அதிவேகமாகப் பிர
யோகம்பண்ணி தாமரைத்துவஜனுடையரதத்தைச் சாரதி குதிரைக
ளுடனே அதம்பண்ணி அவனதுகைவில்லையுங்கண்டித்து மார்பையும்
பத்தலாகக்கிழித்துவிட்டான். அதுகண்டு தாமரைத்துவஜன் உடனே
ஒருரதத்திலேறினான் அதையும்விஷ்வகேதுகண்டித்துவிட்டான்பின்
னையும் ஒருரதத்திலேறினான் அதையுங் கண்டித்துவிட்டான். இப்படி
நூறுரதமட்டுக்கும் விஷ்வகேதுகண்டிக்க, அதனால் தாமரைத் துவஜ
ன்மெத்தவும்வருத்தமடைந்து வேறே ஒருதிவ்வியரதத்தின் பேரிலே
றிக்கொண்டு வில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லினிடமாக அக்
கினிப்பொறிகளைக் கக்குகின்றபாணங்களை அபரிமிதமாகத் தொடுத்
துவிஷ்வகேதுவினுடையமார்பிலேதைத்து முதுகிலுருவிப்போகும்
படிபிரயோகித்து அவன் ஏறியிருக்கின்ற ரதத்தையும் பொடியாக்கி
அவன்கைவில்லையும்ஒடித்து கவசத்தையுங்கிழித்தான் அதனால் விஷ்வ
கேதுமெத்தவும்நொந்து அடியற்றமரம்போல ரதத்தின்பேரில்விழு
ந்து மூர்ச்சையடைந்தான். அப்பொழுது தாமரைத்துவஜன் மகாஉ
க்கிராகாரனாய் தனதுவில்லினிடமாக அக்கினிக்குச் சமானமான பா
ணங்களைத்தொடுத்துஎங்கேபார்த்தாலும் சரவருஷம்பொழிவித்தது
போலப்பிரயோகஞ்செய்து வேறொருரதத்தின்பேரிலேறிக்கொண்டு
அந்தசதுரங்கபலசேனைகளையெல்லாம் சின்னபின்னமாய்க் கண்டித்
து அதம்பண்ணும்போது அந்தசேனைகளெல்லாம்பயந்தோடிப்போ

ய் அர்ச்சுனனிடத்திற் சரணமடைந்து அர்ச்சுனனைப்பார்த்து ஐயாகிரீ
டீ! எங்களைக்காப்பாற்றி ரக்ஷியும் ரக்ஷியும் ஐயாவென்று முறையிட்
டார்கள். அதுகேட்டு அர்ச்சுனனும் அவர்களுக்கு அபயாஸ்தங்கொ
டுத்துபிற்பாடு ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே கூடவந்து தாமரைத்துவ
ஜன்பேரிலெதிர்த்து காண்டீபத்தைக்குணத்தொனிபண்ணி அதனிட
மாக தேவேந்திராதிதேவர்கள்கொடுத்த திவ்வியபாணங்களைத்தொடு
த்துப்பிரயோகம்பண்ணினான். அதுகளையெல்லாம் தாமரைத்துவஜ
னானவன் மிஞ்சிவரவொட்டாமல் நடுவாதியில்பஸ்மீகரப்படுத்திவிட்டு
பின்னையும் தன்னுடையஅஸ்திரங்களினால் கிருஷ்ணார்ச்சுனர்களிருவ
ருடையசரீரத்தையும் வசந்தகாலத்தில் புஷ்பித்தவனமுருக்கு விருக்ஷ
ம்போலச்செய்து மெத்தவும்நோகப்பண்ணினான்.

அதனால் அவ்விரண்டுபேரும் மிகுந்தபிரயாசமடைந்து காற்று
ந்தீயுங்கூடினதுபோல மகாஉக்கிராகாரனாய்த்தங்களுடைய அஸ்திரங்க
ளினால் தாமரைத்துவஜனுடைய சீரமுழுதும் ரத்தமயமாக்கினார்கள்
இப்படி அர்ச்சுனனும் தாமரைத்துவஜனும் எழுநாள் இராத்திரியு
ம்பகலும்போராடினார்கள். அப்படிபோராடுகிறபோது அர்ச்சுனனும்
தாமரைத்துவஜனுடைய ரதத்தைப்பொடியாக்கினான். அவன்பின்னை
யும் ஒருதேரின்பேரிலேறினான், அதையும் அர்ச்சுனன்பொடி யாக்கி
விட்டான்; அதுகண்டு தாமரைத்துவஜனும்மகாகோபங்கொண்டு அர்
ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! பளாபளா நீ மெத்தவுங்கெட்டிக்கா
ரன்தான் நானுன்னைமெச்சினேனென்றுசொல்லி அதி சீக்கிரத்தில்
வேறொருதேரிலேறிக்கொண்டுவில்லைக்குணத்தொனிபண்ணிஅந்தவி
ல்லினிடமாக இரண்டு அர்த்தசந்திரபாணத்தைத் தொடுத்துப்பிரயோ
கம்பண்ணி அர்ச்சுனனுடைய காண்டீபத்திலும் ஸ்ரீகிருஷ்ணபகவா
னுடைய சார்ங்கத்திலுங்கட்டியிருக்கின்ற நாணியை அறுத்தெறிந்தான்
அதுகண்டு அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணபகவானும் ஒருவர்முகத்தை ஒ
ருவர்பார்த்துக்கொண்டிருக்கையில் தாமரைத்துவஜனும்தேரைவிட்டு
ப்பூமியிற்குதித்து ஓடிவந்து கோழிக்குஞ்சைப் பருந்தடைந்து கொ
ண்டுபோகிறதுபோல அர்ச்சுனனைத்தேரோடேதூக்கிக்கொண்டுஆகா
சவீதியிற்போய்நின்று கிறுகிறுவென்று அந்தரதத்தைச் சக்கிராகார
மாய்சுழற்றிப் பூமியில்விட்டெறிந்தான். அதுவுஞ்சுழன்றுகொண்டுவ
ருகிறபோது ஸ்ரீகிருஷ்ணபகவான்கண்டு திகிலடைந்து ஆ! ஆ! மோச
ம்வந்ததேயென்று கொப்பென எழுந்திருந்து அந்தத்தேருக்குநேரா
ய்நின்று தம்முடையதிவ்வியாஸ்தத்தை நீட்டிப் பூமியில்விழப்போ
கின்ற தேரைப்பிடித்து எப்பொழுதும்போலநிறுத்தியருளினார் அது
கண்டு தாமரைத்துவஜனுஞ்சிரித்து அந்தப்பகவானைப்பார்த்து ஓய்
திருட்டுகிருஷ்ணா! நீர் இப்படிசெய்யலாமோ! இப்படிப்பட்ட பக்ஷ
பாதகம்பண்ணலாமோ! ரணக்களத்தில் என்கையில் அர்ச்சுனன் விழுகி
றான். நான் அவன்கையில்விழுகிறேனென்று நீர் சும்மாயிராமல் அர்ச

சுனனுக்குச் சகாயம்பண்ணினீர் இது உமக்கு நியாயமோ? பூர்வகாலத்தில் வேதங்களைத்திருடிக்கொண்டுபோன சோமுகாசுரனிமித்தம் ஒருமீனாகப்பிறந்து அவனைக் கொன்றவர் நீரல்லவோ? அதுவுமல்லாமல் தேவர்களும் ராக்ஷதர்களுங்கூடிப்பால்சமுத்திரத்தில் அமிர்தங்கடையும் போது மந்தரகிரியானது சமுத்திரத்தில் முழுகிப்போகவொட்டாமல் ஆமையாகப்பிறந்து மலையைச்சுமந்தவர் நீரல்லவோ? இரணியாக்ஷனானவன் பூமியைப்பாயாகச்சுருட்டிக் கரத்திலிடுக்கிக்கொண்டு பாதாளலோகத்திற்போய் ஒளித்துவைத்துக்கொண்டபோது ஒருபன்றியாகப்பிறந்து அவனைக்கொன்று பூலோகத்தைஎப்பொழுதும்போலநிலைநிறுத்திவைத்தவர் நீரல்லவோ! இரணியனானவன் ஹரிநமோஸ்துஎன்றவர்களையுஞ் சொல்லவொட்டாமல் அடக்கி இரணியநமோஸ்து என்றவர்களையுஞ்சொல்லும்படி பயமுறுத்திவைத்துக்கொண்டு மகாகெர்வத்துடனே யிருக்குங்காலத்தில் அவன் பிள்ளையாகிய பிரகலாத ஆழ்வானையும் அங்ஙனேசொல்லென்றுசொல்ல. அந்தமகானுபாவன் அப்படிசொல்லாமல் ஹரிநமோஸ்து என்றுதிடசித்தமாகச்சொல்ல அதுகேட்டு மெத்தவும்கோபங்கொண்டு நீ சொல்லுகின்ற ஹரிஎந்த இடத்திலிருக்கிறானென்று இரணியன்கேட்க தூணிலும் துரும்பிலும் மற்றுமுள்ள எந்தஇடங்களிலும் பிர்ம்மாமுதல் பிபீலிகாபரியந்தமுள்ள சகலஜீவர்களிடத்திலும்சர்வவியாபகனாய் சர்வாந்திரியாமியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றானென்றுசொல்ல.

அப்படிசொல்வாயானால் இந்தத்தூணிலும் இருப்பானோவென்றுஇரணியனானவன் தன்னுடையகையினால் ஒங்கி அறைந்தமாத்திரத்தில் அந்தபாகவதசிகாமணியாகிய பிரலாத ஆழ்வானிமித்தம் அந்தத்தூணினிடத்தில் நரசிங்கமாகப்பிறந்து இரணியனைச்சங்கரித்து பிரகலாதஆழ்வானை ரக்ஷித்தருளினவர் நீரல்லவோ! அதுவுமல்லாமல் திரிலோகத்தையும் ஒருகுடைநிழலின்கீழ் அரசாக்ஷிசெய்த மாவலிச் சக்கிரவர்த்தியினிடத்திற்குப் பிரமசாரியாகப்போய் மூன்றடிநிலம்தானமாகக்கேட்டுவாங்கி அவன்குடியைக்கெடுத்தவர் நீரல்லவோ? இன்னமும்கார்த்திகை வீரியார்ச்சுனனிமித்தம் பரசுராமனாகப் பிறந்து பூமியெல்லாம் நிர்மூலம்பண்ணினவர் நீரல்லவோ! இதுவுமல்லாமல் ஸ்ரீராமனாகப்பிறந்து குரங்குகளைச்சேனையாகக்கூட்டிக் கொண்டு ராவணாதி ராக்ஷதர்களையெல்லாம்வேரறுத்தவர் நீரல்லவோ? கடைசியில் கோபாலகிருஷ்ணனாகப்பிறந்து இடைச்சிகள்வீடுதோறும் பால் தயிர்வெண்ணெய்களைத்திருடியுண்டு இன்னம் அம்மானாகியகஞ்சன்முதலான அநேகராக்ஷதர்களைக்கொன்று மகாகீர்த்திப்பிரகாசத்தையடைந்து அந்த கீர்த்தியையெல்லாம் இப்போது இந்த அர்ச்சுனனுக்குச்சாரத்தியம்பண்ணி போக்கடித்துக்கொண்டீரோ! உம்முடையதிருட்டுக்குணம் எப்போதும் போகிறதில்லையே! நல்லதுஉம்மைநான் கொஞ்சத்திலே விடுகிறதில்லையென்றுசொல்ல; அந்தவார்த்தைகளையெல்லாம்ஸ்ரீகிருஷ்

ணபகவானானவர் தோத்திரமாகக்கொண்டு திருவுளமகிழ்ந்துபிற்பாடு கோபங்கொண்டவர்போல தமது திருப்பாதத்தினால் தாமளாத்துவஜனை உதைத்துதமது கையிற்பிடித்திராநின்றகதையினால் அவன் தலையின்மேலில்அடித்தார். அந்தஅடியினால் தாமளாத்துவஜனும் பூமியில் விழுந்துமூர்ச்சையடைந்து சற்றுநேரத்தில் தெளிந்தெழுந்திருந்து வேறேஒரு ரதத்திலேறிக்கொண்டு வில்லைக்குணத்தொனி பண்ணிஅர்ச்சுனராஜனுடனே எதிர்த்துநின்றான். அப்பொழுதுஅர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! கிருஷ்ணா! தேவீர்ரதிகனாயிருப்பதைவிட்டு எனக்குச் சாரதியாயிருந்து குதிரைகளை ஓட்டுவீரானால் நானிந்ததுன்மார்க்கனை அவசியங்கண்டிக்கிறேனென்றுசொல்ல, அதுகேட்டு அந்தபகவானும் அப்படியேசம்மதித்துதமது வைகுண்டரதத்தைக்கொண்டுபோம்படி தாரகனுக்குச் சொல்லிவிட்டு முடிக்கோலைக்கையிற்பிடித்துக்கொண்டுபார்த்தனுடைய ரதத்திலேறி அந்தரதத்திலிருக்கின்றசாரதியைப்போகச்சொல்லி தாம் உள்க்கார்ந்துக்கொண்டு சவுக்கினால் குதிரைகளைஅதட்டி அந்தரதத்தை நடத்தியருளினார்.

அப்பொழுது அர்ச்சுனனுந் தன்னுடைய காண்டீபத்தைக் குணத்தொனிபண்ணி அதிலே அநேகமாயிரந் திவ்விய பாணங்களைத் தொடுத்துப்பிரயோகித்து தாமளாத்துவஜனை மெத்தவுங்கஸ்திப்படுத்தி ஒரு பாணத்தினால் அவன்சாரதியினுடைய சிரசைக் கண்டித்து பத்துப்பாணத்தினால் அவனதுரதத்தையும்பொடியாக்கினான். அதுகண்டு தாமளாத்துவஜனும்மகாகோபதீப்தனாய் எரிந்து விழுந்து பளா! பளா! நன்றாயிருந்ததென்று கறுவிக்கொண்டு வேறே ஒருதேரிலேறிவில்லைக்குணத்தொனிபண்ணி அந்தவில்லிலேசூரியகிரணங்களைப்போல அதிதீக்ஷண்யமானபாணங்களைத்தொடுத்துப் பிரயோகித்து கிருஷ்ணார்ச்சுனர்களிருவருடைய சரீரத்தையுஞ்சதைசதையாகப்பேர்த்தெறிந்து எங்கேபார்த்தாலும் ரத்தவெள்ளமோடும்படி செய்துவிட்டான், அதனால் அந்தபகவானுடைய திருமேனியானது மெத்தவும் இளைப்படைந்து இனி அர்ச்சுனனுடைய கையினாலிவனைக்கெலிக்க முடியாது நாமேகொல்லவேண்டுமென்று நிச்சயித்து தம்முடைய சக்கிராயுதத்தை நினைத்தருளினார். அப்படி நினைத்த மாத்திரத்தில் கோடிசூரியப்பிரகாசமாய் விளங்குகின்ற அந்தசக்கிராயுதமானது வந்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய கையில்நின்றது அதுதெரிந்துகிருஷ்ணமூர்த்தியானவர் அந்தசக்கரத்தை தமது வலக்கரத்திற்றாங்கிக்கொண்டு இவனைக்கொல்லுகிறேனென்று மலையைவிட்டுக் குதித்தோடிவருகின்ற ஒருசிங்கம்போல தேரைவிட்டுக்குதித்து ஓடிவருகிறவேகத்தினால் வயிற்றிலடங்கியிருக்கின்ற பிரம்மாண்டகடாகங்களெல்லாங் குலுங்கினது பூமியெல்லாங் கிடுகிடுவென்று நடுங்கினது. இந்தப்படி ஓடிவருகின்ற கோலாகலத்தைக்கண்டு தாமளாத்துவஜன்சிரித்து தா

னுந் தேரைவிட்டுக்குதித்து அந்தபகவானுக்கெதிரே நடந்துவந்து அவரைப்பார்த்து ஓ பரந்தாமா வாரும்வாரும் ஏதோ உம்முடைய சுறுக்கைப்பார்ப்போமென்று சொல்லி தாமரைத்துவஜனானவன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை அசையவொட்டாமல் கெட்டியாகப்பிடித்துக் கொண்டான், அதுதெரிந்து அர்ச்சுனனும் மகாகோபத்துடனேதன துகாண்டீபத்தில் ஒருபாணத்தைத் தொடுத்து கிருஷ்ணமூர்த்தியினுடைய திருமேனியிற்படவொட்டாமல் தாமரைத்துவஜன்பேரில்பிரயோகம்பண்ணினன். அதுகண்டு தாமரைத்துவஜனும் மகாகோபத்துடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை வலதுபக்கத்தி லிடுக்கிக்கொண்டு ஓடிவந்து அர்ச்சுனனைத்தூக்கி இடதுபக்கத்தி லிடுக்கிக்கொண்டுஆகாசமார்க்கத்திலெழும்பி இரண்டுகக்கத்தையும் அமுக்கும்பொழுது அதனால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் மெத்தவும் வருத்தமடைந்து இனி நம்மால் இவனை ஜெயிக்கமுடியாது லகுவாய்த்தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று இரண்டுகண்களையும் மூடிக்கொண்டு கைகாலசைக்காமல் ஒருபிரதமையைப் போலிருந்தார். அதுதெரிந்து அர்ச்சுனனும் அப்படியேயிருந்தான். அதுகண்டு தாமரைத்துவஜன் அந்த இரண்டு பேரையும் பார்த்து இவர்களிறந்துபோனார்கள் இனிமேல் இவர்களால் காரியமில்லையென்று பூமியின்மேலெறிந்துவிட்டுஇரண்டு அஸ்வமேதக் குதிரையையும்பிடித்துக்கொண்டு நகுலத்துவஜனுடனே ;கலத்து ரத்தினபுரத்தைச்சேர்ந்து தன்னுடைய பிதாவாகியமயூரத்துவஜமகாராஜனண்டைக்குப்போனான்,

கேட்டீரோஜெனமேஜெயமகாராஜாவே! அப்போது சூரியபகவானும் தாமரைத்துவஜனுடைய சவுரியபராக்கிரமத்திற்குப் பயந்து ஒளித்துக்கொண்டதுபோல மேற்குத்திசையில் அஸ்தமனமாகினார். அப்பால் அர்ச்சுனன்சேனைகளுடையமுகவிலாசமொடுங்கினதுபோலதாமரைகளெல்லாம் மூடிக்கொண்டது, எங்கேபார்த்தாலும் காடாந்தகாரமான இருள்நிறைந்து கம்மிக்கொண்டது, அந்தவேளையில் தாமரைத்துவஜன்போய் தன்னுடையபிதாவைக்கண்டு அவருக்குப்பிரதக்ஷிண நமஸ்காரம்பண்ணி எழுந்துநின்று கைகளைக்கட்டி வாய்பொத்திக்கொண்டு அவரைப்பார்த்து ஓ ஐயா! பரமபுருஷா! தேவரீருடைய அஸ்வமேதக்குதிரையைவிட்டுப் பூமிப்பிரதக்ஷணஞ்செய்வித்துக்கொண்டுவருகையில் அஸ்தினபுரத்தையாளுகின்ற தர்மபுத்திரர் விட்ட அஸ்வமேதக்குதிரைவந்தது; அதைக்கண்டுநான்பிடித்துக்கட்டிவைத்தேன் அதையறிந்து ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் சகலசேனாசமேதர்களாய் என்பேரில் எதிர்த்துவந்து இதுவரையிலும் போராடினார்கள் நான் அவர்களுடைய சேனாசமுத்திரங்களையெல்லாம் துவம்சப்படுத்திவிட்டு அந்த கிருஷ்ணார்ச்சுனர்களுடனே போராடி அவர்களிருவரையும் பிடித்துக்கொண்டு தேவரீரிடத்திற்கு வருவோமென்று நினைத்துவருகையில் அவர்களிறந்துபோனார்கள், அதுதெரி

ந்துநாஸ் அவர்களைரணக்களத்திலெறிந் துவிட்டுகுதிரையைமாத்திரம் பிடித்துக்கொண்டுநமதுசேனைகளுடனேவந்தேனென்றுசொல்ல

அதுகேட்டு அந்தராஜனனவன் புத்திரன்பேரில் கோபித்துக்கொண்டு அடாபயித்தியக்காரா! நீ என்னவேலைசெய்துவந்தாய் விருதாவான காரியஞ்செய்தாயே ஒருகொப்பரிகையுடனேதிரவிடம் அகப்பட்டால் அந்தத்திரவியத்தை இறைத்துவிட்டு கொப்பரிகையை மாத்திரம் எடுத்துக்கொண்டுவந்ததுபோலவும் அமிர்தத்தைவிட்டு விஷத்தைக்கொண்டுவந்ததுபோலவும் அந்த அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகரான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை விட்டு விட்டு இந்தக்குதிரையை ஏன்பிடித்துக்கொண்டுவந்தாயென்றுதூறி பின்னையும் தன்குமாரனைப்பார்த்து ஓய் குமாரகா! நீ போய் அந்தபகவானைப்பொழுதுவிடிந்தபின்பாவது இவிடத்திற்கு அழைத்துக்கொண்டுவா நான் அவரைப் பூசைபண்ணுகிறதற்குவேண்டிய பூஜா திரவியங்களும் காணிக்கைகப்பங்களும் நவரத்தினங்கள் முதலான சகல வஸ்துக்களும் மூஸ்தி துபண்ணிவையென்றுசொல்லி திட்டம்பண்ணியனுப்பி விட்டு பிற்பாடு அந்த மயூரத்துவஜமகாராஜனும் எப்போது பொழுதுவிடியப்போகின்றதென்றுயாகசாலையிலிருந்து வழிபார்த்துக்கொண்டிருந்தான். அங்கேதாமிராத்துவஜன்கையினாலடிபட்டு மூர்ச்சையாய்விழுந்துகிடந்த ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் மூர்ச்சைதெளிந்துமெள்ள மெள்ளக்கண்களைத்திறந்து தாமிராத்துவஜன் போனானோ இல்லையோவென்று தலையை எடுத்துப்பார்த்தவளவில் அவனையும் அவன்சேனைகளையும் காணாதபடியினால் குதிரையைப் பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குப்போய்விட்டானென்று நிச்சயம்பண்ணிக்கொண்டு எழுந்திருந்து ஒருவருக்கொருவர் சரீரத்தைத்தடவி துடைத்துக்கொண்டு பின்பு அர்ச்சுனனானவன் தன்சேனைகள் மடிந்துபோனதையும் தனக்குவந்து சம்பவித்த ஆபத்தையும் அஸ்வமேதக்குதிரையைப்பிடித்துக்கொண்டுபோனதையும் நினைத்துவிசாரப்பட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! ஜநார்த்தனா! பார்த்திபோ! தேவரீரிருந்தும் எனக்குவந்த ஆபத்துகளோ பட்டுமிதமில்லை என்னுடைய சேனைகளெல்லாம் மடிந்துபோய்விட்டது குதிரையும் பிடிபட்டுப்போச்சுது, தர்மபுத்திரர் செய்கிறயாகமும் நிறைவேறாமற்போய்விட்டது, எனக்கோவென்றால் மிகுந்த ஆயாசமாயிருக்கின்றது, பேசுகிறதற்கே சக்கியமில்லை நான் என்னசெய்வேன் சுவாமீயென்றுசொல்ல.

அதுகேட்டு அந்ததேவனும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! உனக்கு குதிரைபோச்சுதென்றும் சரீரமெல்லாங் காயமாச்சுதென்றும் என்னுடனேசொல்லி விசாரப்படுகிறாயே நான் என்னுடைய துக்கத்தை ஆருடனேசொல்லி யாற்றப்போகிறேன் நானிதுவரையிலும் அநேகயுத்தத்திற்போராடி அனந்தமாயிரஞ் சஸ்திர அஸ்திரங்களினாலும் நொந்திருக்கிறேன் இப்படிப்பட்ட பிரயாசமடைந்ததில்

லை முன்பு பாரதயுத்தத்திலே உனக்குச்சாரத்தியம் பண்ணினபொழுது பீஷ்மர் துரோணர் முதலான பிரமுகாளுடைய பாணங்களினாலும் நொந்திருக்கிறேன் அப்போது இவ்வளவு வருத்தங்கண்டதில்லை இப்பொழுது சரீரமுழுதுங்காயமாச்சுது மனஞ்சிதறிப் போய்விட்டது எழுந்து நடக்கிறதிற்கெஜீவனில்லைஎன்னுடைய துக்கத்தைஎன்ன சொல்லப்போகிறேன் விஜயாவென்றுசொல்ல. அதுகேட்டு அர்ச்சுனனும் மகா உக்கிராகாரனாய் அந்தபகவானைப்பார்த்து ஓய் அநுதரக்ஷகா! தேவரீருடைய திருமேனியை இத்தனை உபத்திரவம் பண்ணின அந்த துன்மார்க்கனை இந்தக்ஷணமே கொன்று அஸ்வமேதக் குதிரையையும் விடுவித்துக்கொள்ளுகிறேன் சற்றே அவனுடைய பட்டணத்தைக் காண்பியும் ரதத்தை நடத்துமென்று ஆக்ருஷிபாகச் சொல்ல. அதுகேட்டு கிருஷ்ணமூர்த்தியும் புன்சிரிப்பாகச்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா; அந்ததாமரைத்துவஜனைப் பரமசிவனாலும் பிரமனாலும்- அக்கினிதேவனாலும்-வாய்வுபகவானாலும் - ஜெயிக்கமுடியாது அப்படிப்பட்ட சாமர்த்தியபுருஷனை உன்னால் ஜெயிக்கமுடியுமோ நீ அவனுடையபலத்தை இன்னம் அறியவில்லையோ அவன் தர்ம்மசொரூபன் -சத்தியசந்தன் ஹரிகிருபையுள்ளவன்- அவன்பிதாவோவென்றால் அவனைப்பார்க்கிலும்பரமோத்தமன்- தர்மஞானி-ஹரிபூஜாதுரந்தரன் அவனுடையபட்டணமோவென்றால் ஸ்ரீவைகுந்தம் போலநித்தியகலியாணமாய் ஹரியினுடையபிரதாபத்துடனே விளங்கப்பட்டது அப்படிப்பட்டவர்களைஎதிர்த்து நிற்கிறத்திற்கு என்னாலுமாகாது அவனுடையமகிமையை உனக்குஅறியப் பண்ணுகிறேன் வாவென்றுசொல்லி தாம்ஒருசந்நியாசிபோல கோபிசந்தனத்தினால் நெற்றியில்ஊர்த்த பிண்டந்தரித்துதலையிலேசகலாத்துகுல்லாய்போட்டுக்கொண்டு அதன்பேரில்காவிவஸ்திரங்கட்டிக்கொண்டு அரையில் நார்மடிகட்டிக்கொண்டு தோளின்பேரில் ஒருஉத்தரீகத்தைப்போட்டுக்கொண்டுகழுத்திலே துளசிமாலையைத்தாழ்வடமாகத் தரித்துக்கொண்டுகக்கத்திலே பஞ்சாங்கபுத்தகம்பிடித்துக்கொண்டு கையிலே தண்டுகோல்பிடித்துக்கொண்டு பாதத்திலேபாதக்குறடுதரித்துக் கொண்டு தொண்ணூற்றொன்பது வயதுள்ளபெரியசந்நியாசியாகி அர்ச்சுனனையும்பிரமசாரியாக்கி அவனிடத்தில்பூசைப்பெட்டியும் மடிசஞ்சியும் அங்கவஸ்திரமுங்கொடுத்து அவனையுஞ்சிஷனாக அழைத்துக் கொண்டு அந்தபகவானானவர் பொழுதுபோன ஒருஜாமத்தின்பிறகுரத்தினபுரத்திற்குள்ளேபோய் கடைவீதியில்நின்றுவேடிக்கைபார்க்கும்பொழுது அங்கேபுஷ்பமாலைவிற்கிற ஒருபெண்ணானவள் நல்லபுஷ்பமாலையைக்கையிற்பிடித்துக்கொண்டிருக்க,

அதைக்கண்டு ஒருபுருஷன்வந்து அந்தஸ்திரீயைப்பார்த்து ஓய் அம்மா! பாக்கியவதி! உன்கையிலிருக்கிற புஷ்பமாலையைப்பார்த்தவுடனே லக்ஷ்மீகடாக்ஷமுண்டானபுருஷன் எப்படிசந்தோஷியடை வா

னே அப்படிப்பட்டசந்தோஷம் எனக்குண்டாயிருக்கின்றது. இந்த
புஷ்பமாலை லக்ஷ்மீகடாக்ஷம்போலவே யிருக்கின்றதென்று சொல்ல
அதுகேட்டு அந்தபாக்கியவதியும் அந்தபுருஷனைப்பார்த்து ஐயா இந்
தப்புஷ்பமாலையும் உம்முடையமார்புக்குச் சரியாயிருக்கிறபடியினா
லஉம்மைப்பார்த்தால் வைசந்தி வனமாலிகாபரணராகிய ஸ்ரீமஹாவி
ஷ்ணுவைப்போலிருக்கின்றதென்று சொன்னாள். அந்தவார்த்தைகளை
க்கேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானனவர் அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்
சுனா! இந்தஸ்திரீபுருஷாள் பேசினவார்த்தைகளைக்கேட்டாயோ எத்த
னை ஆனந்தமாயிருக்கின்றது கொள்ளல்விற்றல் முதலான இடங்களிலு
ம்இப்படி ஹரிநாமஸ்மரணையே பிரகாசிக்குமானால்மற்ற இடங்களி
லெப்படியிருக்குமென்றுசொல்லி அப்புறம் சிலதூரம் போகையில்
அங்கே ஒரு உப்பரிகையின்பேரில் ஒருஸ்திரீபுருஷர்கள் சங்கீதம்பாடி
க்கொண்டிருக்கும்போது அந்தபுருஷனானவன்ஸ்திரீயைப்பார்த்துஓ
ய்நாயகி! நீ பாடுகிறஸ்திரீ! ராகத்திற்குமலையானாலும்உருகிப்போகும்
என்செவிகளுக்கு மகா இன்பமாயிருக்கின்றதென்றுசொல்ல. அதற்கு
அந்தஸ்திரீயும் நாயகனைப்பார்த்து ஓய்நாதா! உன்னுடையஇருதயத்
திற்சதாகாலமும் பகவானேயிருந்துவிளங்குகின்றபடியினால்நான்பா
டுகின்றஸ்திரீராகமும்உமக்குப்பிரீதியாயிருக்கின்றதென்று சொன்னா
ள் அந்தவசனங்களையுங்கிருஷ்ணபகவான்கேட்டு அர்ச்சுனனைப் பார்த்
துஓய்அர்ச்சுனா! இவர்கள்பேசுகின்றதையுங்கேட்டாயோவென்று சொ
ல்லிஅப்புறம் இரண்டடிதூரம் நடந்துபோகையில் அங்கேஒரு மே
டையின்பேரில் ஒரு ஸ்திரீயும்புருஷனும் கேளிவிலாசமாய் சம்போ
கசவுக்கியங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும்போது புருஷனான
வன் நாயகியைப்பார்த்து ஓய்பெண்ணே! உன்னுடையஸ்தனியத்து
நுனியில் கறுத்திருக்கின்றபடியினால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர்உன்
னுடைய ஸ்தனியத்துநுனியில்விளங்குகின்றபாவனைபோலிருக்கின்
றது அல்லாமலும்உன்னுடையதலைமயிரிலும் அந்தபகவான் விளங்கு
கின்றதுபோலிருக்கின்றதென்றுசொல்ல அதற்கு அந்தஸ்திரீயானவ
ள்புருஷனுடைய இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டு ஓய் நாதா!
உம்முடைய அஸ்தத்தில் பத்மரேகைசங்கரேகைக ளிருக்கின்றபடியா
ல் நீ ரெனக்கு மகாவிஷ்ணுவுக்குச்சரியென்றுசொன்னாள்.

அந்தவார்த்தைகளையுங் கிருஷ்ணபகவான்கேட்டுசந்தோஷித்து
அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா! சம்போகவேளையிலும் ஸ்ரீ ஹ
ரியை மறவாமலிருக்கிறார்களே மற்றவேளையில் எப்படி யிருப்பார்க
ளோ அதைநீயேயறிந்து கொள்ளென்றுசொல்லி அப்பால்சிலதூரம்
நடந்துபோகையில் அந்தபகவானனவர் அர்ச்சுனனைப்பார்த்து ஓய்கி
ரீடீ! ஸ்ரீவைகுந்தத்திற்குச்சரியான இந்தப்பட்டணத்திலுள்ள பிரஜை
களே யிப்படியிருப்பார்களானால் இதை அரசாக்ஷி செய்கின்ற அரசன்
எப்படியிருக்கவேண்டும் இந்தப்பட்டணத்தில் மகாலக்ஷ்மீசமேதரா

கஅந்தவிஷ்ணுவே குடியிருக்கிறார் இப்படிப்பட்ட மகிமையுள்ள ரா
ஜனை நாம் எப்படிஜெயிக்கிறதென்று சொல்லிக்கொண்டு அந்தராத்
திரிமுழுதும் அந்தப்பட்டணமெல்லாஞ்சுற்றி அங்கங்கேயுண்டான வி
னோதவிச்சித்திரங்களைக்கண்டு சந்தோஷித்துக்கொண் டிருக்கையில்
சூரியபகவானும் கிழக்குத்திசையில் உதயமாகிறார் அதுதெரிந்துகிரு
ஷ்ணார்ச்சுனர்களிருவரும் பட்டணத்திற்குவெளியே நர்மதா தீர்த்த
த்திற்குவந்து காலோசிதமானகர்மானுஷ்டானஜபதபங்களை முடித்
துக்கொண்டு எப்போதும்போல் ஸ்ரீகிருஷ்ணபகவான் பிராமண சந்
நியாசியாகவும் அர்ச்சுனன் பிரமசாரியாகவும் வேஷங்கொண்டு புறப்
பட்டுவந்து அந்தநர்மதாநதிக்கரையில்யாகசாலையேற்படுத்திஅதினி
டமாகஇருந்துயாகதீக்ஷையைவகித்து ஸ்ரீமன்நாராயண மூர்த்தியை
மனதினிடமாகநிறுத்தி இரண்டுகண்களையும்மூடி தியானம்பண்ணிக்
கொண்டிருக்கின்ற மயூரத்துவஜமகாராஜனையும் அவன்குமாரனாகிய
தாமரைத்துவஜனையுங்கண்டு அவர்களுக்குச்சமீபமாகப்போய் ஸ்ரீகிரு
ஷ்ணபகவானவர்தமது அபயஹஸ்தத்தைநீட்டி தீர்க்காயசல்துவஜா சரீர
மல்து விஜபால்துவென்று ஆசீர்வாதஞ்செய்தருளினார்.

அதுகேட்டு அந்தராஜனும் கண்ணைவிழித்துப்பார்த்து அந்தப
கவானுக்கு நவரத்தினபீடம்போடுவித்து அதன்பேரில்அவரை எழுந்
தருளப்பண்ணி தான்கீழேநின்றுகொண்டுஅந்ததேவனைப்பார்த்து ஓ
ய்சுவாமீஇது நியாயமோ நான்நமஸ்காரஞ்செய்தபிறகு நீர் ஆசிர்வா
தம்பண்ணவேண்டுமெல்லாமல் இப்படி செய்யலாமோ சுவாமீயென்று
சொல்ல. அதுகேட்டுஅந்ததேவனும்மயூரத்துவஜனைப்பார்த்துஓய்ரா
ஜேந்திரா, நாம் ஒருகாரியமாய்வந்துஉமக்கு ஆசீர்வாதம்பண்ணினோ
ம் அதனால் தோஷமில்லையென்றுசொல்ல. அதுகேட்டு அந்தராஜனு
ம் அவரைப்பிரதக்ஷணம்பண்ணி பக்திவினயத்துடனே அர்க்கியபா
த்தியமுதலான உபசாரங்களினாற்பூசித்து நமஸ்காரஞ்செய்துஅனேக
விதமாகத்தோத்திரம்பண்ணி அஞ்சலியஸ்தனாய்நின்றுஅந்ததேவனை
ப்பார்த்து ஓய்புருஷா நீர் எந்தவூர்உம்முடையநாமமென்ன நீர் என்
னகாரியமாய் என்னைக்குறித்துவந்தீர் அதைச்சொன்னால் நான் அந்த
க்காரியத்தை ஆகப்பண்ணுகிறேன் சுவாமீயென்றுகேட்க அதுகேட்டு
கபடநாடகசூஸ்த்ராவதாரியான பிராமணசந்நியாசியும் அந்தராஜனை
ப்பார்த்து ஓய்ராஜேந்திரா! நாம் தர்மபுரமென்கிற பட்டணத்தி
ற்குடியிருக்கிறது நம்முடையபெயர் கிருஷ்ணனென்றுசொல்லுவா
ர்கள் நமக்கு இந்தச்சிஷனும் ஒருபிள்ளையுமுண்டு அந்தப்பிள்ளைக்கு
உம்முடையபுரோகிதரான ஹரிதாசுதேவசாஸ்திரியாருடைய குமார
த்தியைக்கேட்கும்படி அந்தப்பிள்ளையை அழைத்துக்கொண்டு இந்த
ச்சிஷனுடனேகூட உம்முடையபட்டணத்தைநோக்கிக் காட்டுவழியா
கவருகையில் ஒருசிங்கமானது ஓடிவந்து எங்களிருவரையும்விட்டு வி
ட்டு என்பிள்ளையைமாத்திரம் பிடித்துக்கொண்டு திண்ணப் போச்சு

து அதுகண்டுநான்பயந்து அந்தச்சிங்கத்தைப்பார்த்து ஓய்சிங்கராஜ
னே! என்பிள்ளையைவிட்டுவிடு உனக்குவேறே இரைகொடுக்கிறேன் எ
னக்குப்புத்திரசந்தானங்கொடுத்துரக்ஷியென்று அனேகவிதமாக வே
ண்டிக்கொள்ளுகையில் அதற்கு அதுவந்து நம்மைப்பார்த்துஓய்பி
ராமணோத்தமா! உனக்கு ஒரேபிள்ளையென்றும்அதற்குப்பதில்இரை
கொடுக்கிறேனென்றும் நீவேண்டிக்கொள்ளுகிறாயல்லவோநல்லது இ
ந்தச்சிறுபிள்ளையைத்தின்றால் தான் எனக்குவாடபெண்ணஎன்பசி தீ
ருகிறதேகாரியம் ஆகலால் எனக்குவேறொருவர் மாமிசம் வேண்டாம்
இரத்தினபுரத்தையாளுகின்ற மயூரத்துவஜமகாராஜனுடையபாதி
சரீரத்தை அறுத்துக்கொண்டுவந்து கொடுத்தாயானால்நான்உன்பிள்
ளையைவிட்டுவிடுகிறேனென்றுசொல்ல.

அதற்கு நான் அப்படியேகொண்டுவந்துதருகிறேனென்றுசொ
ல்லிவிட்டு உம்மிடத்திற்குவந்துஆசீர்வாதம்பண்ணினேன் நீரும்கேட்
டதைத்தருகிறேனென்றுசொன்னீராதலாலும் நீர் சத்தியசந்தனானதா
லாலும் நான்கோரிவந்ததைக்கொடுத்து என்பிள்ளையை விடுவித்து
என்னைச்சந்தோஷிப்படுத்துமென்றுசொல்ல. அதுகேட்டு அந்தராஜ
னும் பிராமணசந்நியாசியைப்பார்த்து ஓய்சுவாமீ! தேவரீருடைய கு
மாரனை ரக்ஷிக்கிறநிமித்தம் என்சரீரத்தைப்பகவானுக்குப் பிரீதிசெய்
கிறேனென்றுசொல்லி அப்பொழுதே அந்த ரத்தினபுரத்தைத் தாம
ரைத்துவஜனுக்குப் பட்டாபிஷேகம்பண்ணுவித்து தான் பரிசுத்தனா
ய் யாகசாலைமண்டபத்தில்வந்து கிழக்குமுகமாய்உள்க்கார்ந்துகொண்
டு அனேகமாயிரம் பிராமணர்களுக்குத் தான தர்மங்கள் செய்வித்து
ஸ்ரீமகாவிஷ்ணுவை இருதயகமலத்தில் தியானித்துக்கொண்டு அதிக
சந்தோஷித்துடனே அந்தபிராமண சந்நியாசியைப் பார்த்து ஓய்சு
வாமீ! என்சரீரத்தை ரம்பத்தினாலறுத்துக்கொண்டு போமென்று
சொல்லஅதிலே அந்தராஜனுடையபத்னியாகிய குமுத்துவதி தேவி
யார்வந்து அந்தசந்நியாசியைப்பார்த்து ஐயா! பிராமணோத்தமா.தே
வரீர்என்புருஷனுடைய சரீரத்திற்பாதிசரீரமல்லவோகேட்டீர் அப்படி
வேண்டாம் என்னையேகொண்டுபோய் அந்தசிங்கராஜனுக்கு இரையா
கக்கொடுமென்றுசொல்ல.

அதுகேட்டு அந்தபகவானும் குமுதவதியைப்பார்த்து ஓய் அம்
மா! அந்தசிங்கராஜன்சொன்னது.புருஷனுடையசரீரத்திலும்இடப்பு
றம்பெண்பாகமாயிருக்கும் அதைவிட்டுவலப்புறத்தைக் கொண்டுவா
வென்று சொல்லியிருக்க பிரத்தியக்ஷமாய்ஸ்திரீயையே கொண்டு போ
வேணுமால் அதுசம்மதிக்குமாவென்றுசொல்ல. அதுகேட்டு தாமரை
த்துவஜனும் அவரைப்பார்த்து ஓய்சுவாமீ! தகப்பனுக்குஆபத்துவந்
தபோது பிள்ளையானவன் காப்பாற்றவேண்டுமாதலால்என்னைக்கொ
ண்டுபோய் அந்தச்சிங்கத்திற்குக் கொடுமென்றுசொல்ல. அதுகேட்
டு அந்தப்பகவானும் தாமரைத்துவஜனைப்பார்த்து ஓய்ராஜநந்தனா நீங்க

ள் அந்தச்சிங்கராஜன் சொன்னவார்த்தையைச் செவ்வையாகக்கேளுங்
கள் அஃதென்னவென்றால்.

அந்தராஜாவானவன் பிள்ளையையொருபுறத்திலும் பெண்சாதியை
ஒருபுறத்திலும் உள்க்காரவைத்துக்கொண்டு அவர்களும் சஞ்சலப்ப
டாமல் தானும் சஞ்சலப்படாமல் சந்தோஷித்தர்களாய் ஒருமனதா
யிருந்து பாதிசரீரத்தைப்பருத்துக்கொடுக்க, அதை நீர்வாங்கிக்கொ
ண்டுவந்தால் நான் எற்றுக்கொள்ளுவேன் இல்லாவிட்டால் எனக்கு
வேண்டாமென்று சொல்லியதென்றுசொல்ல. அந்தவார்த்தை யைக்
கேட்டுமயூரத்துவஜனும் பிராமணோத்தமரைப்பார்த்துஒய்சுவாமீதே
வரீர்கருத்தின்படியே நடப்பிக்கிறேன் நீங்கள் அவர்கள்வார்த்தையை
க்கேளாமல் தயவுபண்ணுமென்று இரக்கமாகச்சொல்லி பின்புபெண்
சாதியையும் பிள்ளையையும்பார்த்து நீங்கள்ஒன்றுக்கும்யோசனை பண்
ணாமல் என்பாதிசரீரத்தை அறுத்துக்கொடுங்கோளென்றுசொல்ல அ
துகேட்டு அவர்களும் அப்படியே நல்லதென்று சம்மதித்து ஏகம
னதாய் பகவானைத்தியானித்துக்கொண்டு பிர்ம்மாதி தேவர்களெல்லா
ரும் ஆகாசவீதியில்நின்று இதுஎன்ன ஆச்சரியமென்று பார்த்துக்
கொண்டிருக்க,குமுத்துவதிபாரும் தாமரைத்துவஜனும்இரண்டுபக்க
த்திலிருந்து ரம்பத்தை எடுத்து ராஜனுடையசிரசின் பேரில்வைத்து
ஹரீஹரீ கோவிந்தா உனக்கே அர்ப்பிதமென்று சொல்லி இரண்டு
பேரும் ரம்பத்தைப்பிடித்துக் கறகறவென்று நெற்றிமட்டுக்கும்
அறுத்தார்கள், அப்போது இடதுகண்ணிலிருந்துஜலமானது தாரா
தாரையாயொழுகியது, அதுகண்டு பிராமணர்கோபித்து சீஷனை அ
ழைத்து இந்தப்பாவியினிடத்தில் தானம்வாங்குகிறத்திற்கு என்னை அ
ழைத்துக்கொண்டுவந்தாய்போதும் போதுமென்றுதண்டினால் அங்
கேயிருக்கிறவர்கள்பேரில்விசிறி பஞ்சாங்கத்தை எறிந்துவிட்டு மகா
கோபத்துடனேஎழுந்துபோகிறபோதுகுமுத்துவதியும்தாமரைத்து
வஜனுங்கண்டு அறுக்கின்றதைநிறுத்தி பிராமணோத்தமர் கோபித்துக்
கொண்டு போகிறகாரியம் என்னவென்றுராஜனுடனேசொல்ல அந்த
ராஜனுங்கண்ணைவிழித்துப்பார்த்து மந்திரிகளுடனேசொல்லி அனுப்
பிஅப்பிராமணரை அழைப்பித்துஒய்சுவாமீ!தேவரீர்கோபித்துக்கொ
ண்டுபோகிறகாரியம் என்னவென்றுகேட்க அதற்கு அந்தபகவானும்
ராஜனைப்பார்த்து ஒய்ராஜனே நீஅழுதுகொண்டுதானங்கொடுத்தால்
எனக்குவேண்டியதில்லை உனக்குப்பெண்சாதிபிள்ளைகள்பேரில் ஆசை
யிருந்தால் முன்னமே இல்லையென்றுசொல்லலாகாதோவென்று சொ
ல்ல,அதற்குஅந்தராஜனும் ஒய்சுவாமீ நான் துக்கப்பட்டால் இரண்
டுகண்களினும் ஜலம்வடியாதோ என்கண்ணைப்பாரும் இடது கண்ணி
ல் மாத்திரம்வடிகின்றது, அஃதேனென்றால் வலதுபுறமாத்திரம்பகவ
த்பிரீதியாகின்றதே நமக்கு அந்தபாக்கியங் கிடைக்கவில்லையே யென்
று இடதுபுறந் துக்கப்படுகின்றதென்றுசொல்லி பின்னையும்அந்த தே

வனைப்பார்த்து ஓ சுவாமி! எப்படியாகிலும் தயவுபண்ணி என்னுடை
ய தானத்தைக்கைக்கொண்டு ரக்ஷியுமையாவென்றுவேண்டிக்கொள்ளு
கின்ற பரமபாகவத சிரேஷ்டனாகியுஞ் சத்தியசந்தனாகியும் தர்ம்ம
சொரூபனாகியும் விளங்குகின்ற அந்தராஜனுடைய பக்திக்குமெச்சி ஸ்ரீ
கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப்பார்த்து ஓ பக்தா! இவனுடைய
பக்திவிநயத்தைக்கண்டாயோவென்று எச்சரித்து ரம்பத்தைவாங்கி
எறிந்துவிட்டு தமது திவ்வியாஸ்தத்தினால் அந்தராஜனுடைய சிரசைச்
சேர்த்துப்பிடித்தமாத்திரத்தில் அந்தச்சிரசு எப்போதும்போ லொ
ட்டிக்கொண்டது.

அப்பொழுது அந்தபகவானும் திவ்வியமங்களவிக்கிரகமாய்க்கோ
டிசூரியப்பிரகாசத்துடனே சங்குசக்கிராயுதபாணியாய்சதுர்ப்புஜங்க
ளும் வைசந்திவனமாலிகையும் கவுஸ்துவாபரணமும் பிரகாசிக்கும்
படிபிரசன்னமாய் விளங்கியருளினார் பிரமசாரியும் அர்ச்சுனனென்
அதுகண்டு அந்தராஜனும் பெண்சாதிபிள்ளையுடனே அதிக சந்தோ
ஷகரமாய் இரண்டுகண்களிலும் ஆனந்தபாஷ்பம் பொழியத் தக்கதா
கப் புளகாங்கிதனாய் அந்ததேவனுக்குப்பிரதக்ஷணம்பண்ணிசாஷ்டா
ங்கதெண்டன் சமர்ப்பித்து வேதவாக்கியங்களினால் அநேகவிதமாகத்
தோத்திரம்பண்ணி பிர்ம்மாதிதேவர்களுடைய இருதயகமலத்தில் வா
சமாயிருக்கப்பட்ட அவரது ஸ்ரீபாதாரவிந்தங்களை கந்தபுஷ்பதீபதூ
பநைவேத்தியமுதலான உபசாரங்களாற் பூசைபண்ணி அந்தத்தீர்த்த
த்தைத் தன்னுடைய சிரசிலே பிரோக்ஷித்துக்கொண்டு அந்தபகவா
னைப்பார்த்து ஓ சுவாமீ! இன்றைக்கல்லவோ என்னுடைய கோரிக்
கை யீடேறிற்று நானுங் கிருதகிருத்தியனாகினேனென்று சொல்லி
அப்பால் அர்ச்சுனனையும் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு ஓ புண்
ணிய புருஷா! நான் என்னுடைய சீர்மை பூமிகளையும் பண்டிபண்டா
ரங்களையும் அஸ்வமேதக்குதிரையையும் தர்ம்மபுத்திரருக்கே கொடுத்
தேன் அவரைச்சுகமாய் இரண்டு அஸ்வமேதயாகம்பண்ணச் சொல்லு
ம் எனக்கு இந்தயாகபலனைப்பார்க்கிலும் அதிகபலன்கிடைத்ததென்
றுசொல்லி அப்பால் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களையும் அவிடத்திலிருந்த
பப்பிரவாகன் முதலானவர்களையும் சகலசேனைகளுடனே பட்டணத்
திற்குள்ளே அழைத்துக்கொண்டுபோய் சகலசம்பிரமத்துடனே மூ
ன்று நாள்வைத்துக்கொண்டிருந்து பிறகு நாலாநாள் காலமே இர
ண்டு அஸ்வமேதக்குதிரைகளையும் விட்டு அதின்பிறகு ஸ்ரீகிருஷ்ணார்ச்
சுனர்களும் மயூரத்துவஜனும்- தாமரைத்துவஜன்- அம்சத்துவஜன்-
நீலத்துவஜன் - பப்பிரவாகன் - விஷ்வகேது முதலான துரைகளு
ளும் ரதாரூடர்களாய் புறப்பட்டு சதுரங்கபலசேனைகளுடனே நட
ந்தார்கள்.

அப்பால் அந்தக்குதிரைகளானது-காடுகள் - மேடுகள் - வனங்க
ள் -வனாந்தரங்கள் - மலைகள்- குகைகள் - ஆறுகள் - நதிகள் - பட்டணங்

கள்-சீர்மைகள்-பூமிகள்- இதுகளை யெல்லாந்தாண்டி அநேகந்தூரம் போய் அங்கே சரஸ்வதிபுரமென்கிற பட்டணத்திற்குச் சமீபமாகப் போய்ச்சேர்ந்தது, அந்தப்பட்டணத்தைப் பரிபாலனம்பண்ணுகின்ற வீரவர்ம்மமகாராஜனானவன் அந்தக்குதிரைகள்வந்ததும் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்கள் வந்ததும் வேவுகாரர்களால்கேள்விப்பட்டுதன்மருமகனாகிய எமதர்ம்மராஜனுடனும் சதுரங்கபலசேனைகளுடனும்ஆயுதவகைகளுடனே சண்டைக்கு முஸ்தீதாகப் புறப்பட்டுபட்டணத்திற்கு வெளியேவந்து தண்டுவிட்டிறங்கி அஸ்வமேதக் குதிரைகளைப் பிடித்துக் கட்டிவிட்டு யுத்தசன்னத்தனாயிருந்தான்.

வீரவர்ம்மன் யுத்தம்.

இவிடத்தில் குதிரை பிடிபட்டுப்போனசேதியை அர்ச்சுனராஜன் தண்டுக்குள் பப்பிரவாகன் தெரிந்து கோபதீப்தனாய்ப் தன்னுடைய ரதத்தை அதிவேகமாகத் தூரத்திக்கொண்டு தன்னுடைய சேனைகளுடனே வீரவர்ம்மனுடைய தண்டுக்கெதிராக வந்துசேர்ந்துவீரவர்ம்மனைப்பார்த்து ஓய்வீரவர்ம்ம! எங்கள்குதிரைகளை விடுகிறாயோ அல்லது என்பாணாக்கினிக்கு இரையாகிறாயோவென்றுகேட்க, அதுகேட்டு வீரவர்ம்மனுங் கோபங்கொண்டு பப்பிரவாகனுடைய சேனைகள் பேரில்விழுந்து காலாக்கினி ருத்திரனைப்போல எதிர்த்துச் சின்னாபின்னப்படுத்தும்போது விஷ்வகேது முதலான துரைகளெல்லாரும் வந்து பப்பிரவாகனுடனே கலந்துகொண்டு வீரவர்ம்மனுடைய சேனைகள்பேரில்எதிர்த்து தங்கள் தங்களுடைய வில்லுகளைத் துக்குணத்தொனி பண்ணி அநேகமாயிரம் பாணங்களைப்பிரயோகஞ்செய்து சதுரங்கபல சேனைகளுடனேயும் தும்சப்படுத்தினார். அதனால் வீரவர்ம்மனுடைய சேனைகள்நின்று நிர்வகிக்க மாட்டாமல் ஓடத்தலைப்பட்டது, அதுகண்டு எமதர்ம்மராஜனுங் கோபங்கொண்டு கதாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அர்ச்சுனனுடைய சேனைகள்பேரில்விழுந்து நாசப்படுத்தும் போது அர்ச்சுனனுடைய சேனைகளெல்லாம் நின்று நிர்வாகம்பண்ண மாட்டாமல் நாலுதிக்கிலுஞ்சிதறி ஓடிப்போனார்கள். அதுகண்டு அர்ச்சுனராஜன் மெத்தவுந்திகிலடைந்து ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! கிருஷ்ணா! அதோ பார்த்தீரோ ஒருமகாபுருஷன் கையிலேஒரு கதாயுதத்தை ஏந்திக்கொண்டு மகா உக்கிரத்துடனே நமது சேனைகள்பேரில் விழுந்து அதம்பண்ணுகிறான் அவனுக்கு முன்னே நாம் நிர்வகிக்கிறதாய்த் தோற்றவில்லை எனக்குமெத்தவும் பயங்கரமாயிருக்கின்றது; ஆதலால் அந்தப்புருஷன் யாவன் அதை எனக்குச்சற்றே தெரியச் சொல்ல வேண்டும் ஐயாவென்றுகேட்க அதுகேட்டு அந்தபகவானும் அர்ச்சுனனைப் பார்

த்து ஓய் அர்ச்சுனா அந்தப்புருஷன் வீரவர்ம்மனுடைய மருமகனான எமதர்ம்மராஜன் அந்த எமதர்ம்மராஜன் வீரவர்ம்மனுக்குமருமகனாதலால் அவனை ஜெயிக்கக்கூடாது அதுவல்லாமலும் அந்த வீரவர்ம்மனென்றால் கனவிலும் பொய் சொல்லாதவன் சத்தியமே ஜெயமென்று நம்பியிருக்கிறவன். (ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய) பாதபத்மங்களை எப்போதும் இடைவிடாமல் தியானம் பண்ணுகிறவன் அந்தப் புண்ணியபுருஷனானவன் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து தாரைவார்க்கின்ற ஜலமானது கால்வாய்களாயோடிப் பூமியிலுள்ள பயிர்களுக்குப் போய்ப்பாயும் ஆகையால்அந்தராஜனை நாம் சண்டையினால் ஜெயிக்கமுடியாது மெள்ளச்சினேகம்பண்ணி நமது குதிரையைவிடுவித்துக்கொள்ள வேண்டுமென்றுசொல்ல.

அதுகேட்டுஅர்ச்சுனனும்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்துஜயா ஜநார்த்தனா;இந்தஎமதர்ம்மராஜனானவன்வீரவர்ம்மனுக்குமருமகனானவிதமெப்படி அதைச்சற்றே தெரியச் சொல்லுமையாவென்றுகேட்க அதற்கு அந்தபகவானும் அர்ச்சுனனைப் பார்த்து ஓய்கிரீடீ! அந்த வீரவர்ம்மனுக்கு மாலினியென்னும் பெயரையுடைய ரூபலாவண்ணியமுள்ள ஒருபெண்ணுண்டு அந்தப்பெண்ணானவள் எமதர்ம்மராஜனே தனக்குப்புருஷனாக வேண்டுமென்று நினைத்து அநேகந்தானதர்ம்மங்கள் ஜெபதபங்கள் விரதஹோமங்கள்முதலானதுஞ் செய்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் அவிடத்திற்கு நாரதமுனீஸ்வரர்வந்துஅந்தப்பெண் செய்யப்பட்டபூசனையைக் கைக்கொண்டுஅந்தப்பெண்ணைப்பார்த்துஓய் பெண்ணே நீவிவாகம்பண்ணிக்கொண்டுசகலபோகபோக்கியங்களையும் அனுபவிக்கிறகாலமாச்சுதே அதைவிட்டுவிட்டுஇப்படி விரதங்களை அனுஷ்டித்துக்கொண்டு காலம்போக்குகின்ற விதம் என்னவென்றுகேட்க. அதுகேட்டு மாலினியும் நாரதருக்கு நமஸ்காரம்பண்ணி ஐயா!முனிநாதா!எனக்கு எமதர்ம்மராஜன் புருஷனாக வேண்டுமென்று நினைந்து இப்படிவிரதங்களைச் செய்துக்கொண்டிருக்கிறேனென்றுசொல்ல, அதற்கு நாரதமுனிவர் சந்தோஷப்பட்டு மாலினியைப்பார்த்து ஓய்மாலினி! அப்படியானால் நான் உன்கருத்தின்படியே அனுகூலம்பண்ணிவைக்கிறேனென்றுசொல்லிஅவள்கையில் செலவுவாங்கிக்கொண்டு எமபுரத்திற்குப் போய்எமதர்ம்மராஜனைக் கண்டு அவனிடத்தில்பூசைகொண்டு அந்தஎமதர்ம்மராஜனைப்பார்த்து ஓய்எமதர்ம்மராஜனே; பூலோகத்தில் வீரவர்ம்மனுடையகுமாரத்தியாகிய மாலினியென்கிறவள் உனக்குப் பெண்சாதியாகவேண்டுமென்று நினைந்து அநேகந்தானதர்ம்மங்கள் விரதஹோமங்கள் செய்துக் கொண்டிருக்கிறாள். ஆகையால் நீர் அவிடத்திற்குப்போய் அவளைப்பாணிக்கிராணஞ்செய்துகொண்டுசகலசவுக்கியங்களையும்அடையுமென்றுசொல்ல. அதுகேட்டு எமதர்ம்மராஜனும் நாரதரைப்பார்த்து ஐயா நாரதமுனிவரே! நானப்படியே செய்கிறேன் உம்முடையவார்த்தைதட்டித்

தள்ளி நடக்கிறதில்லையென்றுசொல்ல, அதுகேட்டு நாரதரும் சந்தோஷமாய் எமராஜனிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு தம்முடைய ஆசிரமத்திற்குப்போய்விட்டார். அதின்பிறகு எமதர்ம்மராஜனும் அந்தப்பெண்ணுக்கெதிரே பிரசன்னமாகவந்து நின்றுஎன்னவரம் வேண்டுமென்றுகேட்க. அதுகண்டு அந்தமாலினியும்எமராஜனுக்குச்சாஷ்டாங்கநமஸ்காரம்பண்ணி தேவரீர் எனக்குப்புருஷனாகின்ற வரம்வேண்டுமென்றுகேட்க அதற்குஅந்தஎமனும் அப்படியேநல்லதென்று சம்மதித்துவீரவர்ம்மனுடைய அனுமதியின்பேரில் மாலினியைக்கலியாணஞ்செய்துக்கொண்டு பின்பு மாமனாராகிய வீரவர்ம்மனைப்பார்த்து எனக்குச்சந்தோஷமாச்சுது உமக்கு என்னவரம் வேண்டுமென்று கேட்க அதற்கு வீரவர்ம்மனுஞ் சந்தோஷித்து மருமகனைப்பார்த்து ஓய் ஐயா; உன்னுடையகிருபையினால்எனக்குச்சகலபாக்கியங்களுங் குறைவில்லாமலிருக்கின்றது ஆனால் ஒன்றுண்டு அஃதென்னவென்றால் நான் ஹரியினிடத்தில் பக்தியுள்ளவனாயிருந்து மரணதிசையில் ஸ்ரீமன் நாராயணாவென்கிற சத்தத்துடனே ஜீவன்விடவேண்டும் அதுவல்லாமல்என் சரீரமுள்ள பரியந்தமும் நீர் என்னிடத்தில்தானே யிருந்து எனக்குவந்தஆபத்துக்களைத்தீர்க்க வேண்டுமென்றுவரங்கேட்க அதற்குஎமராஜனுஞ் சந்தோஷப்பட்டு அப்படியேநல்லதென்று சம்மதித்துவரங்கொடுத்து அன்றுமுதல் இதுபரியந்தமும்மாமனார் வீட்டில் தானேதன்னுடையஸ்திரீயுடனேகூடிச் சகலசவுக்கியங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறானென்று சொல்லிக்கொண்டிருக்கையில்அதில்வீரவர்ம்மனும் மகாஉக்கிராகாரனாய்த் தன்மருமகனாகியஎமராஜனைமுன்னதாகநடத்தித் தன்னுடையரதத்தையும் பின்னே தூரத்திவில்லையெடுத்துக் குணத்தொனிபண்ணி அளவிறந்த பாணங்களைப் பிரயோகஞ்செய்து அர்ச்சுனனுடைய சேனைகளையெல்லாஞ் சிதறப் படுத்துகையில் அதுகண்டு மயூரத்துவஜன் - தாமரைத்துவஜன் - பப்பிரவாகன் - அம்சத்துவஜன் - நீலத்துவஜன் - விஷ்வகேது - பிரத்தியுமனன் - அனுசாலுவன் - எவ்வர்ணசுவன் - மேகவர்ணன் - கிருதவர்ம்மன் அனிருத்திரன் - சாத்தகி முதலானசுத்தவீரர்களெல்லாம்வந்து வீரவர்ம்மன்பேரில்எதிர்த்து மகாரோஷத்து வேஷங்களுடனே தங்கள் தங்களுடையவில்லைவளைத்து அநேகமாயிரம் பாணங்களைத் தொடுத்துப்பிரயோகம் பண்ணினார்கள். அதுகளையெல்லாம் வீரவர்ம்மன் கண்டித்துத்தள்ளி பின்னையும் தன்னுடையவில்லினிடமாகஒவ்வொருத்தருக்குஐந்துவிழுக்காடு அளவிறந்தபாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து தன்பேரிலெதிர்த்த ராஜாக்களையெல்லாஞ் சற்றுநேரத்தில்மகாகஷ்டப்படுத்தி மூர்ச்சித்துவிழும்படிசெய்து சதுரங்கபல சேனைகளையுஞ்சிதற அடித்து பிற்பாடு அர்ச்சுனன்பேரில் தன்னுடைய ரதத்தைநடத்தினான். அதுகண்டு அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓ புண்டரீகாக்ஷா! நீர் சண்டைசெய்யவேண்டியதில்லை,

எனக்குச் சாரதியாயிருந்து குதிரைகளைமாத்திரம் நடத்துமென்றுசொல்ல, அதற்கு அந்தத்தேவனும் அப்படியேநல்லதென்று சம்மதித்து அர்ச்சுனனுடைய தேரின்பேரில் உள்க்கார்ந்துகுதிரைகளை அதட்டித் தேரை நடத்தியருளினார்.

அப்பொழுது, அர்ச்சுனனுங் காண்டீபத்தைக் குணத்தொனிபண்ணி அதிலே திவ்வியபாணங்களைத் தொடுத்துவீரவர்ம்மன் பேரில் பிரயோகம்பண்ணினான். அதுகளையெல்லாம்வீரவர்ம்மன்கண்டித்து விட்டு தன்னுடையவில்லிலே அநேகமாயிரங்குரூரபாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்து கிருஷ்ணார்ச்சுனர்களிருவரையும்நோகப் பண்ணி சரீரமுழுதும்ரத்தமயமாக்கி கைகால்ஆடவொட்டாமல் செய்துகுதிரைகளையெல்லாஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்துகொடியாகிய அனுமாரையும்நோகப்பண்ணி கியாவென்றுஅட்டகாசம்பண்ணினான். அதனால் ஸ்ரீகிருஷ்ணபகவான்மெத்தவும்நொந்து அர்ச்சுனனால் சாரமில்லையென்றுதெரிந்துகொடியாகிய அனுமாரைப்பார்த்து எச்சரிக்கைபண்ணி ஓ வாயுகுமாரகா! நீ கொடியைவிட்டிழிந்து இந்த வீரவர்ம்மனை அதம்பண்ணென்றுசொல்ல. அதுகேட்டுஅனுமாரும் தேரைவிட்டுப் பூமியிற்குதித்துமகா உக்கிராகாரமாய்வந்து தன்னுடையவாலினால் வீரவர்ம்மனுடைய தேரைச்சுற்றி எடுத்துக்கொண்டு ஆகாசமார்க்கத்திலெழும்பிப்போனார். அப்பொழுதுவீரவர்ம்மனும் அனுமாருக்குத்தெரியாமல் பூமியில்லகுவாய்க்குதித்து ஓடிவந்து அர்ச்சுனனுடையதேரைத்தூக்கி எடுத்துக்கொண்டு ஆகாசத்திலெழும்பி இடதுகையினால் அந்தத்தேரைத்தூக்கிக்கொண்டு வலதுகையினால் அனுமாருடையநெற்றியின்பேரிலறைந்தான். அதனால் அனுமாரும்பூமியில்விழுந்துமூர்ச்சையடைந்தார் அப்பொழுதுதங்களுடைய ரதத்தைப்பிடித்துக்கொண்டிருக்கிற வீரவர்ம்மன்தலையின்பேரில் தமது திருப்பாதத்தைநீட்டி ஸ்ரீகிருஷ்ணபகவான் உதைத்தருளினார். அந்தஉதையோடே சாம்பவமூர்த்திகாலினால் உதைபட்டுவிழுந்தஎமதர்ம்மராஜனைப்போல பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனுடையரதத்தைப்பூமியிற்கொண்டு வந்துநிறுத்தினார். வீரவர்ம்மனுடையசாரதியும் தன்னுடையரதத்தைக்கொண்டுவந்து பூமியில்நிறுத்தினான், அதிலேவீரவர்ம்மனும்மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து அந்தபகவானுடையபாதம் பட்டபடியினால் அஞ்ஞானநீங்கி மெய்ஞ்ஞானம்பெற்று மகாபயபக்திவிசுவாசத்துடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியண்டைக்குவந்து நமஸ்காரம் பண்ணி இரண்டுகைகளையும் அஞ்சலிபாகச்சிரசின்பேரில்வைத்துக்கொண்டு அந்தபகவானைப்பார்த்து ஓ புண்ணியபுருஷோத்தமா! துவாரகாபுரிவாசா - ஜநார்த்தனா - கஜேந்திரவரதா - சுவாமீயென்றுஅநேகவிதமாகத்தோத்திரம்பண்ணி பிற்பாடு முனீஸ்வரர்களுடனேயிருந்து அநேககாலந்தவஞ்செய்தாலுங்கிடையாத தேவரீருடையசரணாரவிந்தத்தை

க்கண்டேன் இப்போதுதான் என்னுடைய கோரிக்கைகூடிற்று நா
ன் இந்தக்குதிரைகளினால் வெகுலாபம்பெற்றேன் இதுவே எனக்குப்
போதும் இந்தக்குதிரைகளைப்பிடித்துக் கட்டினலாபம் ஒன்றுக்குஆ
யிரம்பங்காகக்கிடைத்தது அல்லாமலும் மஞ்சாசத்கோடி பூமண்டல
த்திற்கு அரசனானலும்உம்முடையபாதாரவிந்தத்தைக்கண்டசந்தோ
ஷித்திற்கு ஈடல்ல! நான்வேண்டுமென்றால் இந்த அர்ச்சுனன்முதலா
னராஜாக்களைக்கெலிக்கிறது அருமையல்ல! தேவரீருடையபாதாரவி
ந்தத்தைக்கண்டதே எனக்குப்போதுமென்று சொல்லி வீரவர்ம்மனு
னவன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குக்காணிக்கையாக ஐம்பதினாயிரம்வெள்
ளையானையும் அஸ்வமேதக் குதிரைக்கானபஞ்சலக்ஷணமுள்ளஎண்பதி
னாயிரங்குதிரைகளும் நாலாயிரம்ஸ்திரீஜனங்களும் ஒன்பதுமலைப்பி
ரமாணம் நவரத்நராசிகளுங்கொண்டுவந்துசமர்ப்பித்து அர்ச்சுனனை
யும் ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு பிற்பாடு ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களை
யும் மயூரத்துவஜன் தாமரைத்துவஜன்முதலான துரைகளையும் சகல
சேனைகளையும்தன்னுடையபட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுபோ
ய் சர்வாடம்பரத்துடனே மூன்றுநாள்வரைக்கும் வைத்திருந்து பிற்
பாடுநாலாநாள் காலமே அஸ்வமேதக்குதிரைகள் இரண்டையும் விட்
டு அதுகளின்பிறகே கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் ரதாரூடர்களாய்ப்
புறப்பட்டு வீரவர்ம்மன்கொடுத்தகாணிக்கைகளைப்பொதிபொதியா
க அஸ்தினாபுரத்திற்கு அனுப்பிவிட்டு வீரவர்ம்மன் - மயூரத்துவஜன்
அம்சத்துவசன் - பப்பிரவாகன்முதலான சுத்தவீரர்களுடனே சகல
சேனைசமேதர்களாய் சரஸ்வதிபுரத்தைவிட்டு பதினெட்டுவகை மேள
வாத்தியங்களும் தாம்தாமென்றுசகலலோகங்களு மதிரும்படிமுழங்
கத்தக்கதாக நடந்தார்கள்,

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜாவே! அப்பால்அந்தக் குதி
ரைகளானது அநேகம் பூமிகள்கடந்துபோய் அப்புறம் ஐந்துயோச
னையகலமுள்ள ஒருபிர்ம்மாண்டமானமடுவிலிழிந்து நீந்தி அந்தக் க
ரையிலே போய்ச்சேர்ந்தது அந்தக்குதிரைகளின்பின்னாக நடந்தஸ்ரீகி
ருஷ்ணார்ச்சுனர்கள்முதலானசகலசேனைகளும் அந்தமடுவினிடத்தில்வ
ந்துசேர்ந்து குதிரைகளையுங்காணமல் தாங்களும் அந்தமடுவைக்கடக்
கமாட்டாமல் ஆலோசனைபண்ணிக்கொண்டிருக்கையில் அதிலேவீரவ
ர்ம்மனானவன் அநேகபடகுகளையும் ஓடங்களையும் அழைப்பித்துஸ்ரீ
கிருஷ்ணார்ச்சுனர்கள்முதலானவீரர்களையுஞ்சேனைகளையுமேற்றிக்கொ
ண்டுஇரண்டுநாழிகைக்குள் அக்கரையேபோய்ச்சேர்ந்து குதிரைகளை
யும்பார்க்குமளவில் அவிடத்திலுங்குதிரைகளைக்காணமல் அர்ச்சுனனா
னவன் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஐயா! ஜநார்த்தனா! நமதுகுதி
ரைகள் எங்கேபோய்விட்டதோ தெரியவில்லை இதற்கெப்படியென்று
விசாரப்படுகிறபோது பிர்ம்மகுமாரனான நாரதமகாமுனிவர் நாராய
ணா! நாராயணாவென்று! வீணைபாராயணம் பண்ணிக்கொண்டுவந்துமு

ன்னேநின்றார், அதுகண்டு ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் எழுந்திருந்து நமஸ்காரம்பண்ணி அந்தமுனீஸ்வரனை ஒருபொற்பீடத்தில் உட்க்காரவைத்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய்கிரீடீ! நமதுகுதிரைகள்போனசங்கதி இவரைக்கேட்டால் தெரியுமென்று சொல்ல. அப்படியே அர்ச்சுனனும் நாரதரைப்பார்த்து ஓய் ஐயா! முனிநாதா எங்கள்குதிரைகளானது இந்தமட்டுக்குந்தப்பிவந்து இந்தமலைவைத்தாண்டினவளவில் எப்படியோமாய்கையாய்ப்போய்விட்டது அதுகள் எங்கேயிருக்கின்றது அதைச்சொல்லவேண்டுமென்றுகேட்க. அதற்கு நாரதரும் கிருஷ்ணார்ச்சுனர்களைப்பார்த்து ஓய்நரநாராயணர்களே! உங்களுடையகுதிரைகளைக்குந்தலதேசத்தைப்பரிபாலனம்பண்ணுகின்ற சந்திரகாசமஹாராஜனென்பவன் பிடித்துக் கட்டிவிட்டான் அவனை உங்களால் ஜெயிக்கமுடியாது மயூரத்துவஜன் தாமரைத்துவஜன் - வீரவர்ம்மன் - பப்பிரவாகன் - அம்சத்துவஜன் முதலானவீரர்களுடனேபோராடினதுபோலல்ல! அவனுடையமகிமை யானது ஆதிசேஷசயனத்திற் பள்ளிகொண்டிருக்கின்ற ஆதிநாராயணமூர்த்திக்கேதெரியவரும் அதுவல்லாமலும் மனுமாந்தாதிசிபி அரிச்சந்திரன் முதலான ராஜாக்களைப்பார்க்கிலும் இவனுடையமகிமைஆயிரம்பங்கதிகமாயிருக்கும் அது எப்படியென்றால்.

நாரதமகாமுனிவர் - அர்ச்சுனராஜனுக்கு - சந்திரகாசமஹாராஜன் (வரலாறு கூறுதல்,)

அதற்கொருகதையுண்டு அஃதென்னவெனில், கோளுகைதேசத்தை யாளுகின்ற கோளுகை மகாராஜனுக்கு அநேககாலம்புத்திரசந்தானமில்லாமல் அதன்பிறகு அளவிறந்ததானதர்ம்மங்களைச்செய்து பெரியோர்களை அனுசரித்திருந்தபடியினால் அவர்களுடையஆசீர்வாதத்தினால் அந்தராஜனுக்கு மூலாநக்ஷத்திரத்தில்ஒருபிள்ளைபிறந்தது அதுகண்டு அந்தராஜனும் மகாசந்தோஷித்தனாய் சர்வசாஸ்திரசம்பன்னர்களான பிராமணோத்தமர்களை அழைப்பித்து அவர்களைப்பூசைபண்ணி ஓய்சுவாமிகளே! இந்தப்பிள்ளைக்குச் சாதகர்ம்மம் விதித்துச்சொல்லவேண்டுமென்றுசொல்ல! அதுகேட்டுஅவர்களும் அந்தராஜனைப்பார்த்து ஓய்ராஜேந்திரா! இந்தப்பிள்ளை பிறந்தலக்கினம் ஆகாது மாதாபிதாக்களுக்கு மரணமுண்டாகும் ராஜ்யத்திற்கு ஆணிவரும் சகலசம்பத்துகளும் சத்துருக்கள் பங்காகிப்போம் இந்தப் பிள்ளையோவென்றால் மகாயோகசாலியாய் விஷ்ணுபக்தனாய்ப்பிரம்மாதிதேவர்களாலும் ஜெயிக்கக்கூடாத சாமர்த்திய புருஷனாய் மஹாகீர்த்திப்பிரதாபத்துடனேயிருப்பான் ஆகையினால் இந்தப்பிள்ளையை நீங்கள்பரிகரித்துவிட்டீர்களானால் சுகமாயிருப்பீர்களென்று சொல்ல அதுகேட்டு அந்தராஜனும்பிராமணர்களைப்பார்த்து ஓய் ஐபமாரே! நீங்

கள்இந்தப்பிள்ளையைக்கொல்லச்சொல்லுகிறீர்களோ நாங்கள்போனாலும்போகட்டும் அப்படிசெய்கிறதில்லையென்றுசொல்ல அதற்குஅந்தப்பிராமணர்களும் ராஜனைப்பார்த்து உங்கள் இஷ்டமென்றுசொல்ல; அதுகேட்டு ராஜனும் தலையையசைத்து அவர்களைப்பார்த்து ஓய் ஐயமாரே! நாங்கள்நெடுநாளாய்புத்திரனில்லாமலிருந்து இப்பொழுதுஉங்களுடைய பூஜாபலத்தினால்கிடைத்தபிள்ளையைக்கொன்று எங்களைப்பிழைத்திருக்கச்சொல்லுகிறீர்களோ நாங்களிறந்துபோனாலும்நல்லதே அந்தப்பிள்ளைமாத்திரம் தீர்க்காயுசுடையவனாயிருந்தால் அந்தக்கீர்த்தியேபோது மென்றுசொல்லி அந்தப் பிராமணர்களுக் கெல்லாந் தக்ஷணைதாம்பூலங்கொடுத்துச் சந்தோஷமா யனுப்பிவிட்டுபிற்பாடுசெய்யவேண்டியமுறைமைப்படி புத்திரோச்சவங்களைச் செய்வித்துஅந்தப்பிள்ளையை நாளொருமேனியும்பொழுதொருவர்ணமுமாய்அதிகசெல்வத்துடனே வளர்க்கின்றகாலத்தில்ஆறுமாசத்தினுள் அந்தராஜன்பேரில் மறுமண்டலத்தரசனான ரசிவிந்தனென்கிறவனும் மிலேச்சராஜாக்களும் எதிர்த்துவந்து போராடி அந்தராஜனைக் கொன்றுபட்டணத்தையுங்கொள்ளைகொண்டார்கள். அப்பொழுது அவன்பெண்சாதியும் புருஷனோடுகூடவே இறந்துபோனாள். அந்தப்பிள்ளையை இரண்டுதாதிகளெடுத்துக்கொண்டு குந்தலதேசத்திற்குப்போய் ஒரு பிராமணன்வீட்டிற்சேர்ந்து ஒருபுரந்திண்ணையிலிருந்து அவர்களுக்குநல்லவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அன்புவரும்படியிருந்து ஒருதாதியானவள் அந்தப்பிள்ளையைப் பாதுகாத்துக்கொண் டிருக்க மற்றொருதாதியானவள் அந்தப்பட்டணத்திற்போய் சகல பதார்த்தங்களையும் யாசகம்பண்ணிக்கொண்டுவந்து தினந்தோறும் அந்தப் படியேகாலத்தைக்கழித்துக்கொண்டு அந்தப்பிள்ளையைச்சுகமாய் வளர்த்துக்கொண்டு வருகையில் ஒருவருஷமாச்சுது அதிலேஒரு தாதிமரணமடைந்தாள் பிற்பாடு மற்றொரு தாதியானவள் அந்தப்பிள்ளையைப் போஷித்துக் கொண்டுவருகையில் அவளும் ஆறுமாதத்தில் மரணமடைந்தாள். அதின்பிறகு அந்தப்பிள்ளைக்கு வேறே திக்கில்லாதபடியினால்அந்தவீட்டு அம்மையாரும் விசாரப்பட்டு மகாதயவுடனே தன்பிள்ளைகளில் இதுவுமொருபிள்ளையாய் நினைத்துப் போஷித்துக்கொண்டுவந்தாள் அந்தப்பிள்ளையும் அஞ்சுவயதாய் வளர்ந்து சிலபிராமணப்பிள்ளைகளுடனே கூடி விளையாடிக்கொண்டு அவர்கள் படிக்கின்றவேத சாஸ்திரங்களைத் தானும் படித்துக்கொண்டு பட்டணத் திற்போய் வீடுகள்தோறும் அமுதுபடியாசகம்பண்ணிக் கொண்டுவந்து அந்தஅம்மையார்கையில்கொடுக்க, அந்தஅம்மையாருந் தயவுடனே பேதமில்லாமல் தன்பிள்ளையைப்போல் போஷித்துக்கொண்டுவருகிறகாலத்தில் ஒருநாள் அந்தப்பிள்ளையானது சிறுபிள்ளைகளுடனே சேர்ந்து வீதியிலேதிரிந்து விளையாடிக்கொண்டிருக்கையில் அந்தகுந்தலதேசத்தையாளுகின்ற குந்தலராஜனுக்குப்பிள்ளையில்லாமல்தன்

னிடத்திலிருக்கும் துஷ்டபுத்தியென்கிற மந்திரி குமாரனான மதன னென்கிறபிள்ளையைத் தன்னிடத்தில்வைத்துக்கொண்டு சர்வ அதிகாரமும் பண்ணுவித்துக்கொண்டிருப்பான். அதுகண்டு அந்த துஷ்டபுத்தியும் மகாசந்தோஷசித்தனாய் ராஜாவினிடத்திற்கு ஒரு வேளை போயிருந்துமற்ற வேளையெல்லாந் தன்னுடைய வீட்டில் தானே சுகமாயிருப்பான்.

இப்படியிருக்கின்ற நாளில் ஒருநாள் தெருத்திண்ணையின் பேரில் அந்தமந்திரியும் சகலசம்பிரமத்துடனே கேளிவிலாசமாய் உள்க்கார்ந்திருக்கும்போது தெருவில்விளையாடுகின்ற அந்தராஜகுமாரனைப்பார்த்து அங்கிருந் தவர்களை யழைத்து இந்தப்பிள்ளை யாருடைய பிள்ளை இதுமகாலக்ஷணங்களுடனும் ராஜ அமிசையுடனும் விளங்குகின்றது இந்தப் பிள்ளையினுடைய சவிஸ்தாரம் என்னவென்று கேட்க அதுகேட்டு அவர்களும் அந்த மந்திரியைப் பார்த்து ஓய் ஐயா! இதுகோளுநகைராஜனுடையபிள்ளை அவனுடையபட்டணத்தைப்பகையாளிகள்கைக்கொண்டு அவனையுங்கொன்றுவிட்டபடியினால் இரண்டு தாதிமார்கள் இந்தப் பிள்ளையையெடுத்துக்கொண்டுவந்து எல்லம்பட்டுலு என்கிறபிராமணன் வீட்டிலிருந்துகொண்டு போஷித்து வருங்காலத்தில் அவர்களும் இறந்து போனார்கள். அதின் பிறகு அந்தவீட்டு அம்மையார் எடுத்துப்போஷித்து வருகின்றாள். இந்தப் பிள்ளையும் பட்டணத்தில் முஷ்டிஎடுத்துக் கொண்டுபோய் அந்த அம்மையார் கையில் கொடுக்க. அந்த அம்மையாருந் தன் பிள்ளைகளி லொன்றாய் இந்தப் பிள்ளையையும் போஷித்து வருகிறாளென்று சொல்ல. அதுகேட்டு துஷ்டபுத்தியும் ஆலோசனைசெய்து இந்தப்பிள்ளை யிருந்தால் நமக்குக் கேடுவரும் ஆகையினால் இதை உபாயத்தினால் கண்டித்துப் போடவேண்டுமென்று நினைத்துகோசிங்கிகளென்கிறவர்களை அழைப்பித்து அவர்களுக்குச் சிறிது திரவியத்தைக்கொடுத்து அந்தப்பிள்ளையைக் காண்பித்து நீங்கள் இந்தப்பிள்ளையை உபாயமாகக் காட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்க் கொன்றுவிட்டு வாருங்களென்று செலவுகொடுத்தனுப்ப. அவர்களும் மந்திரியினுடைய சொல்லைத் தள்ளப் போகாதென்று மகாபிரசாதமென்று மந்திரியினிடத்திற் சிலவுவாங்கிக்கொண்டு அப்புறம்போ யிருந்து சமயம்பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தப்பிள்ளையும் மறுநாள்காலமே எழுந்திருந்து நதிக்குப் போய்ஸ்நானம்பண்ணி ஒருசிறியசாளக் கிராமத்தை வைத்துப் பூசை பண்ணி ஜபதபங்களை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவரும்போது அந்தகோசிங்கிகள்கண்டு அந்தப் பிள்ளையின் சமீபத்தில்வந்து ல்துவாய் பேச்சைக் கொடுத்து அழைத்துக் கொண்டே காட்டுக்குப் போய் அங்கேஉள்க்காரவைத்து வெட்டுகிறத்திற்குக் கத்தியைஉருவிக் கொண்டார்கள். அதுகண்டு அந்தப் பிள்ளையானவன் பயந்து சாளக்கிராமத்தைவிழுங்கி ஹரீ ஹரீகிருஷ்ணா! நாராயணா- வாசுதேவா- அச்

சுதா- பரந்தாமா- பரமபுருஷா வென்று ஸ்ரீமன் நாராயணமூர்த்தியை த்தியானம்பண்ணினான்.

அதுகண்டு அவர்களும் மனமிரங்கி தயவுபிறந்து இந்தப் பாலகன்பேரில் ஒருகுற்றமுமில்லையே! இவன் நல்ல சவுந்தரிய முள்ளவனாயிருக்கின்றானே இவனை நாம் எப்படிகண்டிக்கிறது அந்த துஷ்டபுத்தியும் கெட்டமதிநினைத்து நரகத்தில்விழுந்தால் நாமுங்கெட்டமதிநினைக்கிறதோவென்று சொல்லி உருவினகத்தியை உறையில் போட்டுவிட்டு அந்தச்சிறுவனுக்கு உபசாரம்பண்ணி அவனுடைய காலின் சுண்டுவிரலை மாத்திரம் அறுத்துக்கொண்டு அந்தப் பாலனை அவிடத்தில் விட்டுவிட்டு அவர்கள்போய் துஷ்டபுத்தியைக்கண்டு கொன்று விட்டு வந்தோமென்றுசொல்லி சுண்டுவிரலையுங் காண்பித்தார்கள். அதுகண்டு துஷ்டபுத்தியுஞ் சந்தோஷப்பட்டு அவர்களுக்கு வெகுமதி பண்ணியனுப்பிவிட்டிருந்தான். அப்பால் அந்தக் காட்டினிடத்தில் அந்தப் பிள்ளையானவன் மகாபயங்கரத் துடனும் கால்வேதனை யுடனும் ராமா- கேசவா- கோவிந்தா- ஜநார்த்தனா- நாராயணா வென்று தோத்திரம்பண்ணிக்கொண்டு விசாரமாயிருக்கையில் அவிடத்தில் கொங்கண தேசாதிபதியான கொங்கணராஜாவானவர் வேட்டைக்காரர்களுடனே கூடி வேட்டைவிளையாடுகிறத்திற்கு அந்தவனத்திற்குவந்து அங்கேபிரலாபித்துக்கொண்டிருக்கிற சிறுபிள்ளையின் குரலைக்கேட்டு தயவுபிறந்து சமீபமாகவந்து அந்தபிள்ளையைப் பார்த்து ஓய்புத்திரகா! நீ யாருடையகுமாரன் உன்பெயரென்ன நீயேன் வியசனப்படுகிறாயென்றுகேட்க, அதற்கு அந்தபிள்ளையும் ராஜனைப் பார்த்து ஐயா! நான் அனாதை என்னுடைய தாயுந் தகப்பனுமிறந்துபோனார்கள் எனக்கு ஒருவருந்திக்கில்லை அந்தப் பரப்பிர்ம்ம சொரூபமே எனக்குத் துணை எனக்கு இன்னம் பெயரிடவில்லை, நான் இந்தக்காட்டில் வருகிறபோது காலிலே ஒருபெரிய கல்பட்டு சுண்டுவிரலை அடித்துக் கொண்டுபோச்சுது அதற்கு வியசனப்படுகிறேனென்று சொல்லி பின்னையும் அந்தராஜனைப்பார்த்து ஐயா! என்னை இந்தக் காட்டிலுள்ள புலி முதலான மிருகங்கள் ஆதரணைபண்ணுகின்றது பக்ஷிகளெல்லாம் அதுகளின் இறகினால் வெய்யிலை மறைக்கின்றதென்றுசொல்ல, அதுகேட்டு அந்தராஜன் மெத்தவு மகிழ்ச்சியடைந்து நாம் புத்திரனில்லாமல் வியசனப்படுகிறோமென்று பகவான் கட்டளையிட்டருளினானென்று தனக்குத்தானே சந்தோஷப்பட்டுக் கொண்டு அந்தப் பிள்ளையைப் பார்த்து அப்பா! புத்திரகா! எனக்குப்பிள்ளையில்லை நீ எனக்குப்பிள்ளையாயிருக்கிறாயா வென்றுகேட்க அதற்கு அவனும் அப்படியே யிருக்கிறேனென்றுசொல்ல, அதுகேட்டு அப்பொழுதே அந்தராஜனும் அவனை அழைத்துக்கொண்டுபோய் தன்னுடைய பட்டபு தேவியாகிய சந்திராவதியினிடத்தில் ஒப்புவித்தான். அந்த ராஜ பத்தினியும் அவனைப்பெற்ற பிள்ளையைப் பார்க்கிலும் மிகுந்த அருமையாய் புத்

திரோச்சவமுதலானதுகளும் பண்ணுவித்து சந்திரகாசனென்னும் பெயர்வைத்து வித்தியாப்பியாச முதலானதுஞ் செய்வித்து சகலசம்பிரமத்துடனே அந்தராஜனும் சந்திராவதியும் வளர்த்துவருங்காலத்தில் சந்திரகாசனும் மாதாபிதாக்களிடத்தில் மகாபயபக்தி விநயத்துடனே நடந்துகொண்டு வில்வித்தை முதலானதுகளிலும் அதிகசாமார்த்தியமுள்ளவனாய் பதினாறுவயதளவும் வளர்ந்து பிற்பாடுஅங்கங்கேயுள்ள ராஜாக்களிடத்திற்கு யுத்தசன்னத்தனாய்ப் போய் சண்டைபண்ணி அவர்களைக்கெலித்து அவர்களிடத்தில் காணிக்கை கப்பங்கள் பெற்றுக்கொண்டுவந்து பிதாவினிடத்தில் ஒப்புவித்து பிதாவின் கையினால் அநேகமாயிரம் பிராமணர்களுக்கு தானதர்ம்மங்கள் பண்ணுவித்து தானும் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியினிடத்தில் அந்தரங்க பக்தனாயிருந்து பூததயவுடனே அநாதைகளையெல்லாம் ஆதரித்துக்கொண்டுதிக்குவிஜய துரந்தரனாய் பெரியோர்களுடைய ஆசீர்வாதமுள்ளவனாயிருக்குங்காலத்தில் அந்தக் கொங்கணராஜனுந் தன்பிள்ளையினால் கிடைத்திருக்கிற திரவியங்களைக்கண்டு இதுசேதியைத் துஷ்டபுத்தியறிந்தால் அவன் குந்தலராஜனுக்குச் சொல்லுவானே அதுகேட்டு அந்தராஜனும் நமக்கு வருஷாவருஷங் கப்பணங்கட்டுகிற கொங்கணராஜனுக்கு இவ்வளவுதிரவியம் எங்கேயிருந்து வந்ததென்று ஆலோசித்துப்பொருமையினால் நமது பட்டணத்தின்பேரில் தண்டெடுத்து வந்தாலும் வருவானேயென்று தனக்குள்ளேதானே யோசித்துக்கொண்டு பிரபலமாயிராமல் முன்னிருந்ததுபோலவே அடக்கமாயிருந்துகொண்டு புத்திரனைப் புகழ்ந்துகொண்டாடி சிலசேவகர்களையழைத்து அவர்கள்கையில் குந்தலமகாராஜாவுக்கு வெகுமானமாகச் சிறிது வாகனவஸ்துக்கள் முதலான திரவியங்கள் கொடுத்து பின்னையுந் துஷ்டபுத்தியென்கிற மந்திரிக்குஞ் சிறிது காணிக்கை கப்பங்களுங் கொடுத்தனுப்பினான்.

அவர்களும் அப்படியே கொண்டுபோய் அந்தராஜனிடத்திலும் மந்திரியினிடத்திலுங் கொடுக்க, அதுகண்டு அவர்கள் அந்தச் சேவகர்களைப்பார்த்து ஒய்சேவகர்களே! இதேது ஆச்சரியகரமாயிருக்கின்றது, அந்தராஜன் கப்பணங்கட்டுகிறதே மகாபிரயாசமா யிருக்குமே அத்தன்மைப் பட்டவனுக்கு இத்தனை அயிஸ்வரியம் எங்கேயிருந்து வந்ததென்றுகேட்க, அதற்குஅந்த சேவகர்களும்ஐயா! அந்தராஜனுடையகுமாரன் தேசங்கள்தோறும்போய் திக்குவிஜயம்பண்ணி சம்பாதித்துக்கொண்டுவந்தான். ஆகையினால்உங்களுக்குவெகுமானங்கொடுத்தனுப்பினானென்றுசொல்ல. அதுகேட்டு துஷ்டபுத்தியாகிற மந்திரியும்அவர்களைப்பார்த்து ஒய் சேவகர்களே! அந்தராஜனுக்குப் பிள்ளையில்லையே பிள்ளையெப்படி வந்ததென்றுகேட்க, அதற்கு அவர்களும் மந்திரியைப்பார்த்துஐயா! எங்கள்ராஜனென்னவர் வேட்டைக்குப்போன இடத்தில்காட்டிலே ஒரு பிள்ளையைக்கண்டெடுத்துக் கொண்டு வந்து

சந்திரகாசனென்று பெயரிட்டுவளர்த்துக்கொண்டானென்றுசொல்லி, அதற்குமந்திரியும்ஆலோசனைபண்ணிகாட்டிலேபிள்ளையைக் கண்டெடுத்தானென்று சொல்லுகிறதேது நாம்முன்னே கோசிங்கிகளுக்குச் செலவு கொடுத்தனுப்பினோமே அவர்கள்கொண்டு போய் காட்டில் கொல்லாமல்விட்டுவிட்டு விரஜமாத்திரங்கொண்டுவந்துகாண்பித்தார்கள்போலிருக்கிறது நாம் எல்லாம் அங்கேபோய் அறிய வேண்டியதென்றுநினைத்து ராஜனிடத்திற்போய் ஐயாராஜேந்திரா! நான்கொங்கணதேசத்திற்குப்போய் அவிடத்துச் சேதிகளெல்லாந் தெரிந்து வருகிறேனென்று அந்தராஜனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டுசதுரங்கபலசேனைகளுடனேபுறப்பட்டு கொங்கணதேசத்திற்கு வந்தான். அதையறிந்துகொங்கணராஜனும் எதிர்கொண்டுபோய்ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு சகலபரிவாரங்களுடனேயும் அவனைஅரமனைக்கு அழைத்துக்கொண்டுபோய் சகலசம்பிரமத்துடனே வெகுமானங்கள் பண்ணினான். அப்பொழுதுசந்திரகாசனும்வந்து துஷ்டபுத்தியைக்கண்டு தெண்டனிட்டான். அந்த துஷ்டபுத்தியும் சந்திரகாசனைப் பார்த்து இந்தப்பிள்ளை யாதென்றுகேட்க பிள்ளைவந்தசவிஸ்தாரமெல்லாம் பூர்வோத்தரமாகக் கொங்கணராஜன்சொல்ல. அதுகேட்டு துஷ்டபுத்தியும் தாம்கோசிங்கிகளிடத்தி லொப்புவித்துக் கொல்லும்படி செலவுகொடுத்தனுப்பின பிள்ளைதானென்று நிச்சயம்பண்ணிக்கொண்டுஇந்தப்பிள்ளையினுடையசவுரியபராக்கிரமத்தைநமதுராஜன்கேள்விப்பட்டால் தன்னுடையகுமாரத்தியையுங் கொடுத்து ராஜ்யத்தையும்பட்டாபிஷேகஞ் செய்துவைப்பானே அப்புறம் நம்முடையபிள்ளைக்கு ஒன்றுமில்லாமற்போகின்றதேயென்று வியசனப்பட்டு இப்பொழுதுதானே இவனைக்கொன்றுவிட்டால்நல்லதென்று ஆலோசித்துக்கொண்டு அங்கிருந்தபடியேஒருகடிதாசியழைப்பித்து அதில்தன் புத்திரனாகிய மதனனுக்குஎழுதுகின்றான் அஃதெப்படியென்றால்சிரஞ்சீவிகுமாரனாகிய மதனன்பார்த்துக்கொண்டு இந்தக்கடிதாசியைக் கொண்டுவருகின்ற சந்திரகாசனுக்கு அதிசீக்கிரத்தில்விஷத்தைக்கொடுத்துக்கொல்லவேண்டியது. இதற்குஅட்டிபண்ணவேண்டாம்இப்படிக்கு துஷ்டபுத்திகையெழுத்து என்றுவிவரமாயெழுதி ஒருவருக்குந்தெரியவொட்டாமல் மடித்து அரக்குமுத்திரைபோடுவித்துசந்திரகாசனை அழைத்துஅப்பா!சந்திரகாசா!இந்தக்கடிதாசியைக்கொண்டுபோய் என்புத்திரனாகிய மதனனிடத்திற்கொடுத்துவிட்டுவா பின்னை எவர்களிடத்திலுங் கொடுக்கவேண்டாமென்றுசொல்ல. அதுகேட்டுச் சந்திரகாசனும் அப்படியேநல்லது ஐயாவென்று அந்தக்கடிதாசியை இரண்டுகையினாலும்வாங்கிக்கொண்டு ஒருகுதிரையின் பேரிலேறிக்கொண்டு தன்பட்டணத்தைவிட்டுப்புறப்பட்டு நடந்துகுந்தலதேசத்திற்குச்சமீபத்திலிருக்கிற ஒருசிங்காரவனத்திலிறங்கி அங்கே ஒருமரத்தில்குதிரையைக்கட்டிவிட்டு ஆயாசமாயிருந்தபடியினால்சந்திரகாந்த

ச்சாலையில் குளிர்ந்தகாற்றிலேபடுத்துக்கொண்டு நித்திரைபோய்விட்டான். அப்பொழுது அந்தப்பட்டணத்திலிருந்து ராஜகுமாரத்தியான சண்பகாவதியும்மந்திரி குமாரத்தியான விஷையையும்சிறிது கன்னிகைகளுடனே கேளிவிலாசமாய்ப்புறப்பட்டு அந்தச்சிங்கார வனத்திற்குவந்து அங்குள்ள ஒருதாமரைத்தடாகத்தில் ஜலக்கிரீடை பண்ணி அவிடத்திலுண்டான நல்லபுஷ்பங்களைப்பறித்து முடித்துக் கொண்டுபழங்களையறுத்துச் சாப்பிட்டுக்கொண்டு மகா உல்லாசத் துடனே அந்தவனத்திலுள்ள சகலவேடிக்கைகளும்பார்த்துக்கொண்டுபின்புஒருமண்டபத்தில்வந்துசண்பகாவதிமுதலான அந்தகன்னிகைகளெல்லாம்படுத்துக்கொண்டுநித்திரைபோனார்கள். அவர்களில்மந்திரிகுமாரத்தியானவிஷையென்கிறவள்மாத்திரம்நித்திரை பண்ணாமல்எழுந்திருந்து உலாவிக்கொண்டிருக்கையில்சந்திரகாந்தச்சாலையில்சயனித்திருக்கின்றசந்திரகாசனைக்கண்டு அவனுடைய சவுந்தரியத்தைப்பார்த்து மோகங்கொண்டுஇப்படிப்பட்ட ரூபலாவண்ணிய முள்ளபுருஷனை யல்லவோ நாம்சேரவேண்டுமென்று நினைந்து அவனுடையசமீபத்திற் போய்முகத்தைப்பார்க்கும்போது அவன்போட்டிருக்கின்ற உத்தரீயத்தில் முடிந்திருக்குங் கடிதாசியைக்கண்டு அதை அவிழ்த்து கடிதாசியைக் கையிலெடுத்து தன்னுடையவிரலினால் அந்தமுத்திரையைவாங்கி அப்புறம்வைத்துவிட்டுகடிதாசியைவிரித்துவாசித்துப்பார்க்கையில் அதில்விஷத்தைக்கொடுத்துக் கொல்லும்படிதன் தகப்பனானவன் தமையனுக்குஎழுதியிருக்கிறானென்று தெரிந்துகொண்டு தலையையசைத்து தன்தகப்பனுடையபுத்தியைக்குறித்துதூஷித்துஇந்தமகானுபாவனைக்கொல்லவொட்டாதவயணஞ்செய்து நாம் இவனையே கலியாணம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்று நிச்சயித்துஅந்தக்கடிதாசியில்விஷமென்கிற அக்ஷரத்தைமாற்றிவிஷையைக்கொடுக்கிறதுஎன்கிற அக்ஷரத்தைப் போட்டு எப்போதும்போல் அதைமடித்து முத்திரைவைத்துஅவன் உத்தரீயத்தில் தானே முடிந்துவிட்டு மண்டபத்திற்குப்போய்சண்பகாவதியையும் அந்தக்கன்னிகை களையும் எழுப்பிக்கொண்டுபட்டணத்திற்குப்போய்விட்டாள்.

அப்பால்சந்திரகாசனும் சற்றுநேரத்தில் நித்திரை தெளிந்தெழுந்திருந்து அந்ததாமரைத்தடாகத்திலிறங்கி கைகால்சுத்திசெய்துமறுபடியுங் குதிரையின்பேரிலேறிக்கொண்டு பட்டணமேபோய் சேர்ந்து ராஜவீதியிற்போகையிலெதிரேவருகிற மந்திரிகுமாரனைக் கண்டு அங்கிருக்கிறவர்களைப்பார்த்து அதோ வருகிறவர் யாரென்றுகேட்க, அதற்கு அவர்களும் மந்திரிகுமாரனாகியமதனனென்றுசொல்ல. அது கேட்டுசந்திரகாசனுங் குதிரையைவிட்டிழிந்து மதனனுக் கெதிரே போகையில் அதுகண்டுமதனனும் இதோவருகிற ராஜகுமாரன் யாவனென்றுபார்க்கும்போதுசந்திரகாசனுங்கடிதாசியைக் கொண்டுபோய்கொடுத்தான். மதனனும் அதைவாங்கிவாசித்துப்பார்த்துச்சந்தோஷி

மடைந்துகுந்தலராஜனிடத்தில் அழைத்துக்கொண்டுபோய்சந்திரகாசனுடைய சவிஸ்தாரமெல்லாஞ்சொல்லி தன்தகப்பனெழுதியிருக்கிற கடிதாசியையுங்காண்பித்தான். அதுகண்டுஅந்தராஜன்மெத்தவுஞ்சந்தோஷமடைந்து மதனனைப்பார்த்து ஓய்மதனா! இந்தப்பிள்ளைக்கு என்னுடையபெண்ணைக்கொடுத்துக் கலியாணஞ்செய்விக்கவேண்டுமென்கிற விருப்பமிருக்கின்றது, ஆதலால் முன்னமே உன்னுடையதங்கையைக்கொடுத்துக் கலியாணம் பண்ணிவையென்றுசொல்லி யனுப்ப அப்படியேமதனனுஞ் சந்திரகாசனைத் தன்னுடைய அரமனைக்கழைத்துக்கொண்டுவந்து அன்றையதினமே நல்லமுகூர்த்த மிருக்கிறபடியினாலுஞ் சந்திரகாசனுடையநல்வினை ஒத்துக்கொண்டபடியினாலும்சகலசம்பிரமத்துடனே சந்திரகாசனுக்குவிஷயையைக் கலியாணஞ்செய்துவைத்து பிறகு தன்னுடையதகப்பனிடத்திற்கு விஷயையினுடைய கலியாணசேதியும் எழுதியனுப்பினான்.

அதற்குமுன்னமே துஷ்டபுத்தி என்கிறமந்திரியும் இதுவரையில்சந்திரகாசன் மரணமடைந்திருப்பானென்று சந்தோஷ மடைந்து கொங்கணராஜனைப்பிடித்து விலங்குபோட்டு அந்தப்பட்டணத்தையெல்லாங்கொள்ளைகொண்டு பிரயாணமாய்ப்புறப்பட்டு பாதிவழியில்வருகிறபோது மதனனனுப்பினவோலையைச்சேவகர்கள் கொண்டுவந்துகொடுக்க அதைவாங்கிவாசித்துப்பார்த்துஐயையோ. நாமொருநினைவுநினைத்தால் தெய்வமொருநினைவுநினைத்ததேயென்று திகிலடைந்து சற்றுநேரத்தில் தன்மனதைத்தானே தேற்றிக்கொண்டு அந்தக்கொங்கணராஜனைப்பார்த்து ஐயா! நான் உம்முடையமனதைச்சோதிக்கவேண்டி யிப்படிசெய்தேன் அதைமனதில் வைக்கவேண்டாமென்றுஉபசாரஞ்சொல்லி விலங்கையும்விடுவித்து கொள்ளை கொண்ட பொருள்களையுங்கொடுத்து நீர்சுகமாய்உம்முடையபட்டணத்திற்குப் போமென்றுசொல்லி லகுவாயனுப்பிவிட்டுதன்னுடையசேனைகளுடனேகுந்தலதேசத்திற்கு வந்துசேர்ந்து தன்னுடைய அரமனைக்குட்போய்நுழைந்தான் அதுகண்டுமருமகனுங்குமாரத்தியும்வந்துதெண்டனிட்டார்கள். அவர்களைஆசீர்வாதம்பண்ணிதன் குமாரத்தியைப்பார்த்து ஓய்அம்மா!மகளே!உனக்குஇந்தபுருஷன்பேரில் சம்மத மிருக்கின்றதல்லவோவென்றுகேட்க. அதற்குஅந்தவிஷயையும் பிதாவைப்பார்த்து ஐயா!தேவரீருடைய அனுக்கிரகத்தினால் இந்தப்புருஷன்பேரிலெனக்கு அபேக்ஷையிருக்கின்றதென்றுசொல்ல. அதுகேட்டு அப்புறம்தன்னிடத்திற்குவந்து தெண்டனிட்டகுமாரனைக்கண்டு ஆசீர்வாதம்பண்ணி அவனைப்பார்த்து ஓய்குமாரகா! நானொருகாரியம் எழுதியனுப்பினால் நீ யொருகாரியஞ் செய்தாயே அது என்னவென்று கேட்க.

அதுகேட்டு மதனனுந்திகிலடைந்து பிதாவைப்பார்த்து ஐயா! தேவரீரொழுதினபடிக்கு நடந்தேனேயல்லாமல் வேறில்லையே யென்

றுதசப்பனெழுதியனுப்பிய கடிதாசியைக் கொண்டுவந்துகொடுக்க
அதைவாங்கி வாசித்துப்பார்த்து தலையையசைத்து இது நம்முடைய
கையெழுத்துத்தானே இதுஇப்படிவந்துநேரிட்டதென்ன! ஆனாலு
ம்நாம் மறந்து எழுதினோமோ எப்படியோவென்று மனதில் நினைந்
துமகாவிசனத்துடனே முன்பின்னொன்றுந் தோற்றாமல் நாம்நினைத்த
காரியமெல்லாம் விருதாவாய்ப்போச்சுதே இதற்குஎன்னசெய்வோம்
இந்தச்சந்திரகாசன் இவிடத்திலிருந்தால்நம்முடையராசன் தன்பெ
ண்ணையுங்கொடுத்து ராஜ்யத்தையும் அவனுக்கேபட்டாபிஷேகஞ்செ
ய்துவைப்பான் அப்பால்நம்முடைய புத்திரனுந்தள்ளுண்டுபோவா
ன் ஆகையினால்இவனை உயிரோடுவைக்காமல்உபாயத்தினால்கண்டித்து
விடவேண்டுமென்று ஆலோசித்து அந்தக்கோசிங்கிகளை அழைப்பித்
து ஓய் துன்மார்க்கர்களே! சிலநாளைக்குமுன் நாம் ஒருசிறுபிள்ளையைக்
கொல்லும்படி உங்களுக்குச்சொல்லியனுப்பினால்நீங்கள் அப்படிசெ
ய்யாமல்சூதுசெய்துகாட்டிலே உயிரோடேவிட்டுவிட்டுவந்தீர்கள் அந்த
க்குற்றத்திற்கே உங்களை ஆக்கினைபண்ணவேண்டியது அதைநாம்மன்
னித்தோம்இப்போதாகிலும் நமதுசொல்லைத்தள்ளாமல் இந்தப்பட்
டணத்திற்குப்புறம்பாக இருக்கின்ற பத்திரகாளியினுடைய கோயிலி
னிடத்தில்இன்றுஇராத்திரி பதினைந்துநாழிகைவேளையில் நீங்களிருந்
துகொண்டுஅப்போது அவிடத்தில்வருகின்றவனை முன்பின் யோசித்
துப்பாராமல்கண்டித்து விடுங்கோளென்றுதிட்டஞ்செய்துஅவர்களு
க்குச்சிறிதுதிரவியங்களை வெகுமானமாகக்கொடுத்தனுப்பினான் அவ
ர்களும்அதற்குச்சம்மதித்து துஷ்டபுத்தியினிடத்திற் செலவுபெற்று
க்கொண்டுஅந்தப்பத்திரகாளியம்மன்கோயிலினிடத்திற்போய் ஆர்வ
ருகிறார்களோவென்று மிகுந்த எச்சரிக்கையாய்க் கத்தியை யுருவிக்
கொண்டுமுஸ்தீதாகஇருந்தார்கள்.

இவிடத்தில் துஷ்டபுத்தியும் தன்மருமகனான சந்திரகாசனை ய
ழைத்து ஓய்சந்திரகாசா! நாம்ஒரு அந்தரங்கமான ரகசியஞ்சொல்லு
கிறோம் அதைஎன்குமாரன் முதலானவர்களும் அறியப்படாது அஃ
தென்னவென்றால், இந்தப்பட்டணத்திற்கு வெளியேயிருக்கிறபத்திர
காளியம்மனுக்கு வருஷத்திற்கொருதிரம்பூசைகொடுத்து நமஸ்காரம்
பண்ணிவருவேன் அதனால் எனக்குச்சகலசம்பத்துகளும் உண்டாச்சு
து, நான் இப்படிபூசைபண்ணுகிறது என்குமாரன் முதலானவர்களும்
அறியமாட்டார்கள். அந்தநினைவு இன்றையத்தினம்வந்தது, ஆகையா
ல் இன்றையத்தினம் ராத்திரிபதினைந்துநாழிகைக்குமேல் கந்தபுஷ்ப
அக்ஷதைகளும் பண்டபலாதிகளும் எடுத்துக்கொண்டுபோய்பூசைப
ண்ணுகிறதற்கு எனக்குத்தள்ளாது என்மகளோவென்றால்ராஜாவினு
டைய அரமனையிலிருக்கிறாள் அவளுக்குப் போகக்கூடாது ஆகையி
னால்எனக்குப்பதிலாய் நீபோய்பூசைசெய்துவாவென்றுசொல்ல அது
கேட்டுச்சந்திரகாசனும் மெய்யாகநினைந்து அரமனைக்குப் போனான்

அதிலேசூரியபகவானும்அஸ்தமானமாகினார். அப்பொழுதுசந்திரகா
சனும் ஸ்நானம்பண்ணி ஜபதபங்களைமுடித்துக்கொண்டு மகாபரிசு
த்தனாய் தனதுமாமனா ரிட்டகட்டளைப்படியே தங்கத்தட்டுகளில்பூஜா
திரவியங்களைஎடுத்துக்கொண்டு தனியேபுறப்பட்டு அந்தஇருட்டு வே
ளையில் பட்டணத்துவீதியே போகும்பொழுது அங்கேகுந்தல மகா
ராஜனிடத்திற்கு காலவமகாரிஷியென்கிறவர் வந்தருளினார். அந்தமு
னீஸ்வரருடைய வரவுகண்டு குந்தலராஜனும்சிம்மாசனத்தைவிட்டெ
ழுந்திருந்து எதிரேபோய் அழைத்துக்கொண்டுவந்து ஒருநவரத்தின
பீடத்தில் உள்க்காரவைத்து அந்தமகாரிஷிக்கு அர்க்கியபாத்திய
முதலானவைகளால் பூசைபண்ணி அவரைப்பார்த்து ஓய்ஐயா! முனி
நாதா! அடியேனுடையமனதில் ஒருசந்தேகமிருக்கின்றது அஃதென்
னவென்றால், அடியேனுக்கு ஒருமாசமாய்கைகால்கள் அசந்துபோகி
ன்றது, சரீரந்தளர்ந்துவருகின்றது, மனங்கலக்கமாயிருக்கின்றது,மு
ன்பின் ஒன்றுந்தோன்றவில்லை, சூரியனைப் பார்த்தால் வளையலோடு
போலமழுங்கிக் காணுகின்றது, என்சரீரநிழலைப்பார்த்தால் சிரசுமாத்
திரமில்லாமல் முண்டமாத்திரங்காணுகின்றது, அந்த முண்டத்திலும்
அநேகரந்திரங்கள்தோன்றுகின்றது ஆகையினால் இந்தராஜ்யத்தின்
பேரில் எனக்குச்சற்றாகிலும் விருப்பமில்லை,அப்படியிருக்கின்றபடி
யால் தேவரீர் அடியேனுடைய கருத்தைத்திருத்தி கிருத கிருத்தியனா
க்கிரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்.

அதுகேட்டு காலவமஹாரிஷியும் அந்தராஜனைப்பார்த்து கேளாரு
மையா குந்தலபூபாலகா! பூலோகத்தில் மனிதர்மரணமடையுங்காலத்
தில்காணப்படுகின்ற அவசகுனங்களைச் சொல்லுகிறோம் அஃதெப்ப
டியென்றால். மனிதர் நடக்கும்போது அவர்கள்நிழல் அவர்களுக்குத்
தெரியாமலிருந்தால் ஒருவருஷத்தில் மரணமடைவார். சூரியப்பிரகா
சம்மழுங்கினதுபோலக்கண்டவர்கள் பத்துமாசத்தில் மரணமடைவா
ர். ஒருபுருஷன் நடக்கும்போது சிரசானது இரண்டுபிறிவாகப் பிறிந்
துதோன்றினால் அவன் எட்டுமாசத்தில் மரணமடைவான். ஒருபுருஷ
ன் சொப்பனதசையில் குரங்குகளையுங் கழுதைகளையுங்காண்பானாகில்
அவன் ஆறுமாசத்தில்மரணமடைவான். ஒருபுருஷனுடைய சமீபத்தி
ல்ஆந்தைகளாவது நாய்களாவது வந்துசுத்துமாயின்அந்தப்புருஷன்
இரண்டுமாசத்தில் மரணமடைவான் ஒருபுருஷனுடைய கண்களுக்கு
முன்னேதோற்றுகின்றதுகளெல்லாம் பலவாகிச்சிதறித் தோற்றுமா
கில்அவன் ஒருமாசத்தில் மரணமடைவான். ஒருபுருஷன்ஸ்நானம்ப
ண்ணிவஸ்திரத்தைஎடுத்துத் துடைத்துக்கொள்ளுமுன்னே மார்பில்
ஈரமில்லாமற் சுவறிப்போகுமாகில் அவன்பதினைந்துநாளையில்மரண
மடைவான் ஒருவன் எண்ணெய்த்தலையுடனே சிவப்புப்பூவை முடித்து
க்கொண்டு தெற்குமுகமாய்ப் போகிறதுபோலக்கனவுகண்டால் அவ
ன்பத்துநாளையில் மரணமடைவான். தீபம்பிரகாசமாய் எரிகிறபோ

துஅந்தப்பிரகாசம்துண்டித்துப்போகிறதுபோலக் கனவுகண்டால் அவன் அஞ்சுநாளையில் மரணமடைவான். பக்ஷிகள்வந்துமுகத்திலே கொத்தினால் அவன் நாலுநாளையில் மரணமடைவான். ஒரு புருஷன் தன்னுடைய காலடி தனக்குத் தெரியாமற் காணுவானாகில் அவன் இரண்டு நாளையில் மரணமடைவான். கறுத்தசரீரத்தோடு தலையைவிரித்துக்கொண்டு ஒருஸ்திரீயானவள்வந்து தன்பிடரியிலே குத்தினாற்போலக்கனவுகண்டால் அவன் ஒருமாசத்தில் மரணமடைவான். இன்னம் இப்படிப்பட்ட அவசகுணங்கள் அநேகவிதங்களுண்டு அதுபோல்நீரும் அவசகுணங்களைக் கண்டீரல்லவா? ஆகையால் இன்று முதல் ராஜ்யத்தினுடைய ஆசையை விட்டு காட்டுக்குப் போய் மரவுரியுடுத்திக்கொண்டு சருகு ஜலபக்ஷணம் பண்ணிக்கொண்டு சர்வேஸ்வரனை நோக்கித் தவஞ்செய்து புண்ணிய லோகத்தை யடையுமென்று சொல்ல, அதுகேட்டு குந்தலராஜனும் சந்தோஷப்பட்டு அப்பொழுதுதானே தன்னிடத்திலிருக்கிற மந்திரிகுமாரனை அழைத்து ஓய் மதனா! இந்த ராஜ்யத்தை உன்மைத்துனனாகிய சந்திரகாசனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவித்து நான் தபசியாகப்போக வேண்டும் ஆதலால் உன்மைத்துனனை அதிசீக்கிரமாயழைத்துக் கொண்டுவாவென்றுசொல்லியனுப்ப, அதுகேட்டு மதனனும் தன்னுடைய அரமனைக்குவந்து சந்திரகாசனைத் தேடிக்காணாமல் பட்டண முழுதுந் தேடித்திரிந்து ராஜவீதியில் வருகையில் அங்கே ஒரு தங்கத்தட்டில் பூஜாதிரவியங்களை எடுத்துக்கொண்டு பத்திரகாளியம்மன் சந்நிதியைநோக்கிப்போகின்ற சந்திரகாசனைக்கண்டு ஓய் ராஜகுமாரா! குந்தலராஜனானவர் உனக்கு ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்க நினைத்துஅழைத்துவரச் சொன்னாரென்று சொல்ல, அதுகேட்டுச் சந்திரகாசனும் சந்தோஷப்பட்டு மைத்துனனைப்பார்த்து ஓய்மதனா! உன்னுடைய பிதாவானவர் பத்திரகாளிகோயிலுக்கு வருஷித்திற் கொருதரம்போய்பூசைபண்ணுகிறதென்றும் இன்றையத்தினம்போகிறதிற்கு தனக்குச் சரீரப்பிரயாசமா யிருக்கின்றதென்றுஞ் சொல்லி என்னையனுப்பிப் பூசைசெய்துவரும்படி கட்டளையிட்டார். ஆதலால் நான் பிரயாணப்பட்டுப் போகும்போதே இத்தனை அயிஸ்வரியம் வந்ததல்லவா? ஆகையினால் நான் அதிசீக்கிரத்திற்போய் அந்தமஹா தேவியைப் பூசித்துவருகிறேனென்று சொல்ல அதுகேட்டு மதனனும் சந்திரகாசனைப்பார்த்து ஐயா! ராஜநந்தனா! அவிடத்திலே ராஜனானவர் சீக்கிரப்படுத்துகின்றபடியினால் நீர் ராஜனிடத்திற்குப்போம் நான்போய் அந்த அம்மனைப் பூசித்து வருகிறேனென்றுசொல்ல, அதற்குச்சந்திரகாசனுஞ் சம்மதித்து தன் கையிலிருந்த தங்கத்தட்டை மதனன் கையில் கொடுத்தனுப்பிவிட்டு அதிவேகமாய்வந்து குந்தல ராஜனைக் கண்டு நமஸ்காரம்பண்ணி அந்த முனிநாதனுக்கும் பயபக்தி விநயத்துடனே பிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்து அவர்களுக்கு முன்பாக

கைகட்டிக்கொண்டு நின்றான்.

அதுகண்டு குந்தலராஜனுஞ் சந்தோஷமடைந்து அந்தக்ஷண மே தன்னுடைய குமாரத்தியான சண்பகாவதியை யழைத்துச் சந்தி ரகாசனுக்குக் கலியாணம் பண்ணுவித்து தன்னுடைய குந்தலபுரத் தையும் அவனுக்கே பட்டாபிஷேகஞ் செய்வித்து சகலசேனைகளையும் அவன் வசத்திலொப்புவித்து தன்னுடைய முத்திரை மோதிரத் தை யும் அவன் கையிற்கொடுத்து விட்டு அந்தராஜனவர் காலவமகாரி ஷியுடனே கூடிக்கொண்டு தவசுக்குப்போய் விட்டார். இப்பால் சந் திரகாசமஹாராஜனும் சந்தோஷித்துடனே அன்றுராத்திரியில் சண் பகாவதியுடனே சகலசவுக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டிருந் தான். அங்கே மதனனும் அதிவேகமாய்நடந்து பத்திரகாளியம்மன் கோயிலுக்குப்போய்அந்தமஹாதேவியினுடைய சமீபமாக வந்துநி ன்றுபூசைசெய்யும்படி ஆயுத்தப் படுகிறபோது அது தெரிந்துஅந்தக் கோசிங்கிகள்வந்து முன்பின்யோசித்துப் பாராமல் அவர்களுடைய கையிலிருந்த கத்தியினால் நாலைந்து துண்டமாய் வெட்டிப் போட்டு அவ்விடம்விட்டு பட்டணத்திற்குள்ளேவந்து துஷ்டபுத்தியைக் கண்டு அவனுடனே சொல்லிப்போனார்கள், அதுகேள்விப்பட்டு துஷ்டபுத் தியாகிய மந்திரியுஞ் சந்தோஷமடைந்து இந்தராஜ்யம் இனி நம்மு டையவசமாகிவிட்டது, இனிஎவர்களும் நமக்கெதிரில்லையென்று உள் ளேபூரித்து மகாஉச்சாகத்துடனே யிருந்து அது பரியந்தமும் தன் குமாரனாகிய மதனன் வீட்டுக்கு வாராமையைப் பற்றி அரமனையில் விசாரிக்கும்பொழுது குந்தலராஜனுஞ் சந்திரகாசனுக்குப் பட்டாபி ஷேகஞ்செய்வித்து சண்பகாவதியையுங் கலியாணம்பண்ணிக் கொடுத் துதபசுக்குப்போய் விட்டானென்கிறசேதியறிந்து திகில் பட்டுநம்மு டையகுமாரன் எங்கேபோனான் ராஜாவினிடத்தி லிருந்தவன் காணா மற் போகவேண்டிய காரணமென்ன கோயிலுக்குப் பூசைபண்ணப் போன சந்திரகாசன் அரமனையில் மகா வைபவத்துட னிருக்கின்றா னே கோசிங்கிகள் கையினால் வெட்டுண்டு விழுந்தவன் இன்னானென் றுதெரியவில்லையே நாம் இதையாரிடத்திற் சொல்லிக் கொள்ளுகிற தென்று தனக்குத்தானே விசாரப்பட்டுக்கொண்டு பட்டணத்திற்குப் புறம்பிலிருக்கின்ற பத்திரகாளியம்மன் கோயிலண்டைக்கு ஒருதீவட் டிவெளிச்சத்துடனே போய்ப்பார்த்து அங்கே வெட்டுண்டு கிடக்கிற வன் தன் குமாரனென்று தெரிந்து ஐயோ! மகனே! நீயோ வெட்டு ண்டுவிழுந்தாய் நாமொருநினைவு நினைத்தால் தெய்வம் ஒரு நினைவு நி னைத்துவிட்டதே இதற்கு நான் என்னசெய்வேனென்று வெகுவாகப் பிரலாபித்து அழுது இனி நம்முடையபிள்ளையை யிழந்து நாம்பூமி யிலிருக்கின்றதா நாமும் இறந்துவிடுகிறதே உத்தமமென்று அந்தது ஷ்டபுத்தியென்கிற மந்திரியும் அங்கிருந்த ஒரு குத்துக் கல்லின் மே தில் தலையை யுடைத்துக் கொண்டு செத்தான். அதிலே சூரியபகவா

னுங் கிழக்குத்திசையில் சந்திரகாசனுடைய கீர்த்திப் பிரகாசம் போலப் பிரகாசித்தருளினார்.

அப்பொழுது சந்திரகாசனும் பள்ளியறையைவிட்டெழுந்திருந்து நித்தியகர்மானுஷ்டான ஜபதபங்களை முடித்துக்கொண்டு அரிபூசை- குருபூசை- தேவதாபூசைகள்செய்து அநேகம் பிராமணர்களுக்கு தானதர்ம்மங்கள்கொடுத்து பிற்பாடு அரமனையைவிட்டுப் புறப்பட்டு சகலசம்பிரமத்துடனே சகலசேனைகளும் புடைசூழ்ந்துவரத்தக்கதாகக் கொலுமண்டபத்திற்கு வந்து நவரத்ந கசிதமான சிங்காசனத்தின்பேரிலுள்க்கார்ந்து அந்தச்சபையிலுள்ள மந்திரிபிரதானிகளைப்பார்த்து துஷ்டபுத்தியென்கிற பெரியமந்திரியும்அவன் குமாரனாகியமதனனும்வந்துசேராமையினால்அங்கிருந்தபொற்றடிக்காரனையனுப்பிஅவர்களைத்தேடிஅழைத்துக்கொண்டுவரும்படி உத்தாரம்பண்ணினான். அவர்கள்போய்அரமனையிலும்பட்டணத்திலுந்தேடிக்காணாமல் பட்டணத்திற்குப் புறம்பாகவிருக்கின்ற பத்திரகாளியம்மன்கோயிலினிடத்திற்போய்அவர்களிருவரும்செத்துக் கிடப்பதைப்பார்த்து அதிசீக்கிரத்தில்வந்து சந்திரகாச னிடத்திற்சொன்னார்கள். அதுகேட்டுச் சந்திரகாசனுந் திகிலடைந்து வெகுவாகப்பிரலாபித்து குந்தலராஜனுக்குப்பின்புசந்திரகாசனென்கிறவன் அரசனாயிருந்துபூர்வீகமாயிருந்த மந்திரிகளைக்கொல்லுவித்தானென்கிற அபகீர்த்தி யுண்டாச்சுதே! இதற்கென்னசெய்யப்போகிறோம் இந்தஅபகீர்த்திக் காளாயிருப்பதைப்பார்க்கிலும் அந்தப்பத்திரகாளியம்மன் கோயிலினிடத்திற்போய் ஜீவனைவிட்டுப் புண்ணியலோகத்தைச் சேருகிறதே கீர்த்தியென்று நிர்க்கயோசனைசெய்து சகலசேனைகளையும் நிறுத்திவிட்டு அந்தச் சந்திரகாசன்மாத்திரந் தனியேபுறப்பட்டுப் பத்திர காளியம்மன்கோயிலுக்குப்போய் அங்கேவிழுந்துகிடக்கிற மதனனையுந் துஷ்டபுத்தியையுங்கண்டு விசாரப்பட்டு மகா தயிரியத் துடனே நின்று அந்தபத்திரகாளியம்மனைப்பார்த்து சஹஸ்ரநாமங்களாலும் அநேகவிதமாகத்தோத்திரம்பண்ணி அந்தஅம்மனுக்குப் பிரீதியாய் தன்னுடைய சந்திராயுதத்தையுருவிக்கொண்டு தன்சரீரத்திலிருந்த மாமிசத்தையெல்லாம் அறுத்துக் குப்பலாய் போட்டு கடைசியில் தன்னுடைய சிரசை வெட்டிவைக்கும்படி ஆயுத்தமாய் அந்தச் சந்திராயுதத்தைக் கழுத்தின்பேரில்வைத்தான். அதுகண்டு அந்தமஹாபரமேஸ்வரியும் பயந்து நடுநடுங்கிச் சந்திரகாசனுக்கெதிரே பிரத்தி யக்ஷமாகி நின்று அவன் கையிலிருக்கிறசந்திராயுதத்தைக்கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஏய் குமாரகா! சந்திரகாசா! உன்னுடைய தயிரியத் திற்கு மெச்சினேன் இனி உனக்குவேண்டிய வரத்தைக்கேளென்று சொல்ல அதுகேட்டுச் சந்திரகாசனுஞ் சந்தோஷித்து தன்கையிலிருந்த சந்திராயுதத்தைஉறையில்போட்டுவிட்டுஅந்தமஹாதேவிக்குப்பிரதக்ஷிண நமஸ்காரங்கள்பண்ணி அநேகவிதமாகக்கொண்டாடி அந்ததேவியை

ப்பார்த்து ஓய் அம்மா! சகலலோகநாயகி! சர்வஜீவதயாபரீ! துர்க்கே! கௌமாரீ; திரிபுரசுந்தரீ! இதோ உன்னுடைய சந்நிதானத்தில் வெட்டுண்டு கிடக்கிறவர்களை எழுப்பித்தர வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதற்குஅந்தமகாதேவியுஞ் சந்திரகாசனைப்பார்த்து ஓய்குமாரகா! இந்தத் துஷ்டபுத்தி யானவன் உன்னை அநேக விதத்திலுங் கொல்லநினைத்தவனாதலால் அவனையெழுப்பவேண்டாம் அவன்குமாரனைமாத்திரம்எழுப்பி விடுகிறேனென்றுசொல்ல அதுகேட்டுச் சந்திரகாசனும் அந்தஅம்மனைப்பார்த்து ஓய்அம்மா! அவன்என்ன செய்தாலுஞ் செய்யட்டும் எனக்குமாத்திரம் அபகீர்த்தி வராமற் படிக்கு அவனையும்எழுப்பித்தரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள; அதற்கு அந்தமஹாதேவியுஞ் சந்தோஷமடைந்து தன்னுடைய விபூதியையள்ளிஅவர்களிருவர் மேலுந்தெளித்து இவர்களிருவரும் எழுந்திருக்கக்கடவதென்று ஆசீர்வாதம்பண்ணினமாத்திரத்தில் துஷ்டபுத்தியும் மதனனும் நித்திரைதெளிந்து எழுந்திருந்தவர்கள் போலெழுந்திருந்தார்கள் அப்பொழுது துஷ்டபுத்தியும் தன்னெதிரே நிற்கின்ற சந்திரகாசனைக்கண்டு வெட்கப்பட்டு அவனைத்தழுவிக்கொண்டு அப்பாசந்திரகாசா! உன்மகிமையை யறியாமல் என்னுடைய அஞ்ஞானத்தினால் இதுவரையிலும் உனக்குஅநேகந்துன்பங்களைச்செய்வித்தேன் அதுகளையெல்லாம் பொறுத்துஎன்னை ரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதற்குசந்திரகாசனும் துஷ்டபுத்தியைப்பார்த்து ஓய்ஐயா! நீர் எத்தனைகாரியஞ்செய்தாலும் என்னைஎன்னசெய்யும். அரிபக்தியுள்ளவர்களுக்கு ஒருநாளுங்குறைவு வருகிறதில்லையென்று சொல்லிமைத்துனனையும்மாமனையும் ஆதரணைபண்ணி அரமனைக்கு அனுப்பிவிட்டு அந்தமஹாதேவிக்கு மறுபடியும் பிரதக்ஷிணநமஸ்காரம்பண்ணி அந்தஅம்மனிடத்தில் சகலவரங்களையும் பெற்றுக்கொண்டுபட்டணத்திற்குவந்து கொலுமண்டபத்திலிருக்கிற சிம்மாசனத்திலுள்க்கார்ந்து துஷ்டபுத்தி மதனன்முதலான மந்திரிபிரதானிகளுடனே கொலுவாயிருந்துகொண்டு பட்டணத்திலுள்ளஜனங்களையெல்லாம்அழைப்பித்து அவர்களைப்பார்த்து ஹரிபக்தர்களாகவும்ஹரிபூஜாதுரந்தரர்களாகவும் இருக்கும்படி கட்டளையிட்டு அப்படி நடவாதபேர்களை ஆக்கினை பண்ணுவிப்போமென்று பறைபறைவித்து அந்தச் சந்திரகாசமஹாராஜனானவன் சத்தியசந்தனாய் சகலஜனங்களையும் தன்னைப்போலப் போஷித்துக்கொண்டு சொப்பனத்திலும் பொய்சொல்லாமல் குடிகளுக்குப் பத்துக்கொன்பது பங்குவிழுக்காடு கொடுத்து தான்ஒருபங்குவிழுக்காடு வாரம் எடுத்துக்கொண்டுதர்ம்மசொரூபனாய் தன்னுடையசத்தியத்தினால் தனது ராஜ்யத்தில் மாதமும்மாரிபெய்வித்து சகலபயிர்களையும் அபிவிர்த்தியாய் விளைவித்துக்கொண்டு ஒருகாலத்திலும் குடிகளுக்குத் துன்பம்வரவொட்டாமல் பாது

காத்துக்கொண்டு பிர்ம்மாதிதேவர்க்களும் தன்னுடைய கீர்த்தியை
மெச்சும்படி அநேகம் யாகங்கள் எக்கியங்கள் ஹோமங்கள்பண்ணி
பிராமணபூசையும் தேவபூசையும் வழுவாமற்செய்துகனவிலும் ஹரி
யைமறவாமல் சண்பகாவதி விஷயை என்கிற இரண்டுதேவிமாருடனு
ங்கூடிச்சகலசவுக்கியங்களையும் அனுபவித்துக்கொண்டு குந்தலதேச
த்தைப்பரிபாலனஞ் செய்கின்ற சந்திரகாசமஹாராஜனானவன் உங்க
ளுடைய குதிரைகளைப் பிடித்துக்கட்டிவிட்டு உங்களுடனே போராட
நினைத்திருக்கிறான் நீங்களும் அந்தராஜனை இந்தராஜாக்களிலொன்றா
ய்நினைத்துச் சண்டைபண்ணி குதிரைகளை விடுவித்துக் கொள்ளுவோ
மென்றுநினைத்தீர்களானால் உங்களால் முடியாது, ஆகையினால் லகு
வாய் அந்தராஜனைச்சிநேகம்பண்ணி குதிரைகளை விடுவித்துக்கொண்
டு அஸ்தினாபுரத்திற்குப்போய்தர்ம்மபுத்திரர்செய்கிறயாகத்தை நிறை
வேற்றிவையுங்களென்று சொல்லி பிற்பாடு அந்தநாரதமுனிவரானவர்
ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு தன்னுடைய
ஆசிர்மத்திற்குப்போய்விட்டார்.

அதன்பின்பு கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும்தங்கள் மனதிலிருந்த
சந்தேகந்தீர்ந்து சந்தோஷித்தர்களாய் சகலதுராதுரைகளுடனும்
சதுரங்கபலசேனைகளுடனும் அவிடத்திலிருந்துரதாரூடர்களாய்ப்பு
றப்பட்டுநடந்து குந்தலதேசத்திற்குச்சமீபமாகப்போய் தண்டுவிட்
டிறங்கினார்கள் அங்கே அதற்கு முன்னமேதானே அந்தஅஸ்வமேதக்
குதிரைகளிரண்டும் குந்தலதேசத்தைச்சேர வருகையில்சந்திர காசம
ஹாராஜனானவன் வேவுகாரர்களால் கேள்விப்பட்டு அந்தக் குதிரைக
ளைப்பிடித்துவரச்சொல்லி அர்ச்சுனராஜன்விட்டகுதிரையி னுடைய
நெற்றியிலிருக்கின்ற விருதாவொளியைவாசித்துப்பார்த்துபுன்சிரிப்
பாகச்சிரித்து இந்தக்குதிரையின்பின்னே வருகிறவன் சாம்பவமூர்த்
தியையுங் கெலித்த மேட்டான மேட்டியாகியகிரீட்டியாம் அப்படிப்
பட்ட ரணரங்க சூரனை இன்றையத்தினம் ரணக்களத்திலே அறிகிறே
ன் அவன் நம்மையெல்லாம் பெண்டுகளாக்கினானே அவனுடையஆண்
பிள்ளைத்தன்மையை இப்போது அறிகிறேனென்று ஆக்கிரகித்துபற்
களைநெறநெறவென்றுகடித்து கண்களில் நெருப்புப்பொறிகள் பறக்
கவும், புருவங்கள்தெறிக்கவும், மீசைபடபடவென்று துடிக்கவும், அ
திககோபத்துடனே அங்கிருந்தசேவகர்களையழைத்து அந்தக்குதிரை
களிரண்டையும் குதிரைச்சாலையில் கட்டிவைக்கும்படி திட்டம் பண்
ணி அந்தக்ஷணத்திலேதானே சந்திரகாச மஹாராஜனானவன்யுத்தசன்
னத்தனாய் நவரத்தினமயமான தேரிலேறிக்கொண்டுமந்திரிபிரதானி
கள்-சாமந்தர்கள் - குமாரவர்க்கங்கள்-பந்துவர்க்கங்கள் - மகுடவர்த்
தனர்கள் - கிரீடாதிபதிகள் - தண்டநாயகர்கள் - சேனாபதிகள் முத
லானதுராதுரைகளும் சதுரங்கபலசேனைகளும் புடைசூழ்ந்துவரத்த
க்கதாகப்புறப்பட்டு வெண்கலப்பேரிகை ரணபேரிகை முதலானபறி

னெட்டுவகை மேளவாத்தியங்களுந் தாம்தாமென்றுமுழங்க அட்டகா
சங்கள் பண்ணிக்கொண்டு பட்டணத்திற்குவெளியேவந்து தண்டுவிட்
டிறங்கிச்சகலசேனைகளையும் அணிஅணியாகநிறுத்தி அந்தச்சேனைகளு
க்குமுதன்மையாய் சந்திரகாச மஹாராஜனும் எமதர்ம்ம ராஜனைப்
போலபார்க்கப்பயங்கரமாய் ஆக்ருஷித்துநின்றான். அதுகண்டுதேவ
ர்க்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு இந்தச்சந்திரகாசன் விஷ்ணு பக்த
ன்வீராதிவீரன் இவனைத்திருஷ்டித்துப்பார்க்கிறதற்கு நம்மாலு மா
காது அப்படியிருக்க, இந்த அர்ச்சுனன் எந்தவிதத்திலுங் கெலிக்கப்
போகிறான் குதிரைகளையும்எப்படிவிடுவித்துக்கொள்ளப்போகிறான்
தர்ம்மபுத்திரரும் எந்தவிதத்தில்யாகம்பண்ணி நமக்கு அவிர்ப்பாகங்
கொடுக்கப்போகிறார் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய தந்திரங்கள் எங்கே
நடக்கப்போகின்றது இதை நம்பவேண்டியதில்லை யென்று தங்கள்த
ங்களுக்குள்ளே எண்ணங்கொண்டு பயப்பிராந்தரானார்கள்,

கேட்டீரோ ஜெனமேஜெயமஹாராஜாவே! அப்படி பார்க்கப்
பயங்கரமாய் முனைந்துநிற்கின்றசந்திரகாசமஹாராஜனுடையசேனை
களை அர்ச்சுனன்கண்டு ஆச்சரியப்பட்டு நாம்இந்தராஜனை எப்படிகெ
லிக்கப்போகிறோம் நாரதமுனிவர்சொன்னதெல்லாம் மெய்யாயிருக்
கின்றதேயென்று பயந்து உச்சாகபங்கமாய் நாம் இன்றையத்தினம்
இந்தராஜன் கையில் தப்பிப்பிழைக்கப்போகிறோமோவென்று சிந்தா
க்கிராந்தனாய் சூரியனைக்காணாததாமரைபோல முகம்வாடி நின்றான், அ
ப்படிமுகம்வாட்டமாய்நிற்கின்ற அர்ச்சுனனைப்பார்த்து அகிலாண்ட
கோடி பிர்ம்மாண்டநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுஞ் சிரித்துத்த
லையசைத்து ஓய்கிரீட்டீ! நீயேன் தயிரியத்தைவிட்டாய் நாம்இரு
க்கும்பொழுது உனக்கென்ன குறையிருக்கின்றது, நீ ஒன்றுக்கும்அ
ஞ்சவேண்டாம் உச்சாகமாய்நின்று காண்டீபத்தைவளைத்து அஸ்திரங்
களைப்பிரயோகஞ்செய். நாம்அந்தச்சந்திரகாசனைக் கெலிப்போமெ
ன்று அர்ச்சுனனைஉச்சாகப்படுத்தி அந்த பகவானவர் புன்சிரிப்புட
னேமுடிக்கோலினால் குதிரைகளையதட்டி அர்ச்சுனனுடைய தேரைச்
சந்திரகாசனுக்கு நேராகநடத்தியருளினார். அதுகண்டுஅர்ச்சுனனும்
ஸ்ரீகிருஷ்ணதேவரைப்பார்த்துஐயா! ஜநார்த்தனா!தேவரீர்ரதத்தைமா
த்திரமெதுவாய்நடத்தும் இதோபாணங்களைப் பிரயோகிக்கிறேனெ
ன்றுசொல்ல, அதுகளையெல்லாஞ் சந்திரகாசன்கண்டுசிரித்து ஆனந்
தசமுத்திரத்தில்முழுகிச் சகலஉக்கிரமுமடங்கி இந்தபகவானே அர்ச்சு
னனுக்குச் சாரதியாயிருந்து அடிமைத்தொழில் செய்யும்போது நா
ம்இந்தஅர்ச்சுனனுக்கு அடிமையல்லவா! ஆகையினால் நாம்அர்ச்சுன
னுடனேபோராடவேண்டியதென்ன! நமக்குஅதனால்வருகிறபிரயோ
சனமென்ன! இகபரசவுக்கியங்களைக்கொடுத்து ரக்ஷிக்கப்பட்ட தேவ
னைவிட்டுவிட்டு வீணானகாரியத்தை நாமேன் செய்யவேண்டுமென்று
நினைந்து அதிகசந்தோஷித்துடனே தன்கையி லெடுத்தவில்லைத் தே

மின்பேரிலிருந்துவிட்டு கவசத்தைக்கழற்றிப்போட்டுத் தேரைவிட்டு
ப்பூமியிற்குதித்து ஓடிவருகையில் அதைகண்டு அந்தபகவானும்புன்சி
ரிப்புடனே தேரைவிட்டிழிந்து பூமியின்பேரில் நின்றருளினர். அப்
பொழுது தர்ம்மசொரூபனுன சந்திரகாசனும்வந்து அந்தபகவானை
க்கண்டு பிரதக்ஷணஞ்செய்து சாஷ்டாங்க தெண்டனிட்டெழுந்துநி
ன்றுகைகளைச்சிரசின்பேரில் அஞ்சலியாக வைத்துக்கொண்டு அந்ததே
வனைப்பார்த்து ஓ! தேவாதிதேவா! புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா!
ஆபத்பாந்தவா! அனுசரக்ஷகா! கோவிந்தா! கோபாலா! கோபிகாரம
ணு! தேவகிநந்தனு! பரந்தாமா! விஸ்வரூபா! ஜெய்சுவாமீ! என்னைரக்ஷி
யும் ரக்ஷியும் இந்தச் சமுசாரமென்கிற மாயாசமுத்திரத்தில் முழுகி
மோக்ஷமாகியகரையைக்காணுமல் வருந்துகின்ற அடியேனுக்கு தேவ
ரீருடைய திருவடியாகிய தெப்பத்தைத்தந்து கரையேற்றி ரக்ஷியும்ர
க்ஷியும் உமதுகிருபாநோக்கத்தினுற்பார்த்தருளும் இன்றைக்கல்லவோ
என்னுடையகோரிக்கை யீடேறிற்று இன்றைக்கல்லவோ என்னுடை
யபூஜாபலம்பலித்தது, என்னுடையகீர்த்திப்பிரகாசம் பூலோகமுழு
தும்நிறைந்தது, இன்றல்லவோ பரமசுகத்தைப்பெற்றேன் என்னுடை
யஜென்மசாபல்லியமாச்சுது, தேவரீருடையதிருஷ்டியாகிய அங்குசம்
பட்டமாத்திரத்தில் மனமாகியகாட்டில் சஞ்சரிக்கின்ற பாவமாகியஆ
னைக்கூட்டங்களெல்லாம்மடிந்துவிழுமே அப்படிப்பட்டமகிமையை
யுடையகபடநாடக சூத்ராவதாரியான முகுந்தா ரக்ஷியும். ரக்ஷியும்
பசுவானதுகன்றுகளைப் போஷிக்கிறதுபோல்பக்தஜனங்களைப் போ
ஷிக்கின்றதயாநிதி ரக்ஷியும் ரக்ஷியும். உம்மைக்கண்டமாத்திரத்தில்என்
னுடையசரீரம் குளிர்ந்தது, பிரமானந்த மேலிட்டது, அதல்லாமலு
ம்நான் காணவேண்டியிருக்கின்ற பாக்கியத்தினுலல்லவோ அந்த தர்
ம்மபுத்திரரும் அஸ்வமேதயாகம்பண்ணநினைத்தார். இந்த அர்ச்சுன
ராஜனும் தேவரீரால்சகலபிரதிஷ்டையும்பெற்றுன் இவனுடைய புண்
ணியந்தான் எப்படிப்பட்டதோ தெரியாதென்றுசொல்லி திரும்பவு
ம் அந்தபகவானுக்குப்பிரதக்ஷிண நமஸ்காரம்பண்ணி பிற்பாடு அர்ச்சு
னனையும் ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு வீரவர்ம்மன் முதலானராஜா
க்களையும் சதுரங்கபலசேனைகளையும் ஆதரணைசெய்து அந்தக்ஷணத்தி
லேதானே பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தாம் தாமென்று
முழங்கத்தக்கதாக கிருஷ்ணர்ச்சுனர்கள் முதலான சகலசேனைகளையும்
பிரயாணப்படுத்திக்கொண்டு தன்னுடைய சேனைகளுடனே குந்தல
தேசத்திற்கு அழைத்துக்கொண்டுவருகையில் தேவர்களெல்லாருங் க
ண்டுசந்தோஷிப்பட்டு சந்திரகாசனுடைய பக்திக்கு மெச்சி சந்திர
காசன்பேரில் பாரிசாதபுஷ்பங்களைச் சலசலவென்று வருஷித்தார்க
ள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும் புன்சிரிப்புடனே அர்ச்சு
னனைப்பார்த்துக் கண்சைகைபண்ணி ஓ! அர்ச்சுனு! நாம்இருவரும்ந
ல்லபூஜாபலன்பண்ணினபடியினுல் இன்றைக்குத்தப்பிப் பிழைத்தோ

ம்இனிமேல் நமக்கு ஒருவரும் எதிரில்லையென்றுசொல்லி மகாசந்தோஷத்துடனே நடந்து சகலதுராதுரைகளுடனும் சேனைகளுடனும் குந்தலபுரத்தைச்சேர்ந்து அந்தச்சந்திரகாசமஹாராஜனுடைய அனுமதியினால் சர்வாடம்பரத்துடனே அந்தப் பட்டணத்தில் மூன்றுநாளிருந்தார்கள்-

அப்பால் நாலாநாள்காலமே சந்திரகாசனும் அஸ்வமேதக் குதிரைகளையுஞ் சிறிதுதிரவியங்களையுங் கிருஷ்ணார்ச்சுனர்களுக்குக்காணிக்கைகளாகக்கொடுத்தனுப்பிவைத்து பிறபாடுசகலசேனைகளையும்பிரயாணப்படும்படி உத்தரவுபண்ணி தன்னுடையபட்டணத்தையும்மந்திரிமார்கள்வசத்தில் ஒப்புவித்துதானும்ரதாரூடனாய்சதுரங்கபலசேனைகளுடனே புறப்பட்டுவந்து அர்ச்சுனனுடையசேனைகளுடனேகலந்துகொண்டான். அதுகண்டு அர்ச்சுனனும் அஸ்வமேதக் குதிரைகளிரண்டையுமவிட்டு அதுகளின்பிறகே கிருஷ்ணமூர்த்தி சமேதனாய்சந்திரகாசன்-வீரவர்ம்மன் -மயூரத்துவஜன்-தாமரைத்துவஜன் - அம்சத்துவசன் - நீலத்துவஜன் - எவ்வனாசுவன்-பப்பிரவாகன் - அனுசாருவன்-பிரத்தியுமனன் - அனிருத்திரன் - விஷ்வகேது-மேகவர்ணன் சாத்தகி - கிருதவர்ம்மன்முதலான துராதுரைகளுடனும் சதுரங்கபலச்சேனைகளுடனும் ரதாரூடனாய்ப்புறப்பட்டுமகாஆடம்பரத்துடனே பூமியானது கிடுகிடுவென்று நடுங்கத்தக்கதாகநடந்தான். அப்பால்அந்தக்குதிரைகளானது வடக்குநோக்கி அநேகந்தூரம்நடந்துகாடுகள் செடிகள் - சீர்மைகள்-பூமிகள்-வனங்கள் - வனாந்தரங்கள் - மலைகள் குகைகள் - அக்கிராரங்கள் - பட்டணங்கள் - ஆறுகள்-நதிகள்-தேசங்கள் ராஜ்யங்கள் - சாலைகள்-சோலைகள் - இதுகளெல்லாங் கடந்துபோகையில் அங்கங்கேயிருக்கிற அரசர்களிற்சிறிதுபேர்அந்த அஸ்வமேதக்குதிரைகளைக்கண்டு பயந்து நடுநடுங்கினார்கள். சிறிதுபேர் பயப்பிராந்தர்களானார்கள். சிறிதுபேர் தங்கள்தங்கள் விருதுகளைவாங்கியெறிந்தார்கள். சிறிதுபேர் அந்தத்துரைகளையெல்லாம் திருஷ்டித்துப் பார்க்கமாட்டாமல் விலகிப் போனார்கள். சிறிதுபேர் அந்தக்குதிரைகளுக்குத் தெண்டனிட்டார்கள். சிறிதுபேர் காணிக்கைகப்பங்களைக் கொண்டுவந்துகொடுத்து ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களைக் கண்டார்கள். சிறிதுபேர் அந்தக்குதிரைகளையும் அர்ச்சுனனுடைய சேனைகளையுங்கண்டுபயந்து ஓடிப்போனார்கள்.

கேட்டீரோஜெனமேஜெயமஹாராஜாவே! இப்படி அர்ச்சுனனுடைய சேனைகளானது சமுத்திரம்புரண்டுவருகிறதுபோல் எங்கும் பரவிநடக்கையில் அதுகண்டு எவ்வகைப்பட்ட ராஜாக்களும்திருஷ்டித்துப் பார்க்கமாட்டாமல் ஓடிப்போனார்கள். சந்திரகாசனைக்கூட வணங்கப்பண்ணிக்கொண்ட அர்ச்சுனராஜனுக்கு இனி எந்தலோகத்திலும் எதிராளிகளில்லையென்று சிறிதுபேர் சொல்லிக் கொண்டார்கள். அர்ச்சுனனுடைய சேனைகள் நடக்கிற அதிர்ச்சியினால் பூமிதேவியும்ந

அந்தராஜாக்களுஞ்சிரித்தார்கள். அர்ச்சுனனுங்கலீலென்றுசிரித்து அந்தமுனிவரைப்பார்த்து ஒய் முனிநாதா! நீர்நல்ல விசேஷஞ்சொன்னீர் உம்மைப்பார்க்கிலும் அந்தப்பிர்ம்மாக்களுக்கு ஆயசுகொஞ்சமோ அதைச்சொல்லுமென்றுகேட்க, அதுகேட்டு அந்தமுனிநாதனுஞ்சிரித்து அர்ச்சுனனைப் பார்த்து ஒய்கிரீட்டி! அந்தப் பிர்ம்மாக்களுடைய ஆயஸைச்சொல்லுகிறோம் அஃதெப்படியென்றால்.

கிரேதாயுகம்-திரேதாயுகம்-துவாபரயுகம்-கலியுகம் - என்கிறசதுர்யுகங்கள் ஒருதரம்திரும்பினால் மஹாயுகமென்றுபெயர் அப்படிப்பட்ட மஹாயுகம்ஆயிரங்கொண்டது ஒருநாள் அப்படிப்பட்ட நாள் பதினைந்துகொண்டது ஒருபக்ஷம் அப்படிப்பட்ட பக்ஷம் இரண்டுகொண்டது ஒருமாதம் அப்படிப்பட்டமாதம் ஆறுகொண்டது ஒருரிது அப்படிப்பட்டரிது இரண்டுகொண்டது ஒருவருஷம் அப்படிப்பட்டவருஷம்நூறுகொண்டதுபிர்ம்மாவுக்குச்சரியானகாலம். அப்பொழுது சகலபிரபஞ்சங்களும் ஜலப்பிரளயத்தினால் நாசமடைந்துபோம். அப்போது ஆதிமூலமாகியஸ்ரீமன்நாராயணமூர்த்தியானவர் ஒருசிறுபிள்ளையாய் தம்முடைய உதரத்தில் சகலபிரபஞ்சங்களையும் அடக்கிக்கொண்டிருப்பார். இந்தப்படி நூறுமஹாவருஷம் ஜலப்பிரளமாயிருக்கும்போது அந்தமஹாபுருஷன் உத்தாரப்படிதுவாதசாதித்தர்கள்பிறந்து அந்தச்சலங்களைவற்றடித்து எப்போதும்போல பூமண்டலத்தைதிருப்பிப்பார்கள். இப்படி இருபது பிர்ம்மாக்களைக்கண்டேனென்றுசொல்ல, அதுகேட்டு அர்ச்சுனனும் ஆச்சரியப்பட்டு அந்தமுனிவரைப்பார்த்து ஒய் முனிநாதா! அப்படி பிர்ம்மாக்களும் மடிந்துபோய் சத்தசமுத்திரமும் ஒன்றாகக்கோர்த்துக்கொண்டு பிரளயமாயிருக்குமென்றுசொன்னீரே! அந்தமஹாப்பிரளயஜலத்தில் நீரெப்படியிருந்தீர் அதையும் எனக்குத்தெரியச் சொல்லவேண்டுமென்றுகேட்க அதற்கு அந்தமுனீஸ்வரருஞ்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்து ஒய் புண்ணியபுருஷா! நூறுமஹா வருஷபரியந்தம் ஜலப்பிரளயமாயிருக்கும்போது அந்தஜலத்தின்மேரில் ஆதிகர்த்தாவாகிய பகவான் ஒருசிறுபிள்ளையாய் சகலலோகங்களையும் தம்முடையகுக்ஷியில்வைத்துக்கொண்டு சற்றாகிலும் ஆயாசம் இளைப்பில்லாமல் ஒரு ஆலிலையின்மேரில் பள்ளிகொண்டிருப்பாரென்று சொன்னேனல்லவோ? நானும் அந்தப்பிரளயகாலத்தில் பயப்படாமல் ஜலத்தின்மேரில் மிதந்துபோய் அந்தப்பகவானிடத்திற் சேர்ந்து அவருடைய பாதாரவிந்தங்களைக் கெட்டியாசப் பற்றிக்கொண்டிருந்து திரும்பவும் அவருடைய அனுக்கிரகத்தினால் பிர்ம்மாக்கள்பிறந்து உலகங்களைச்சிருஷ்டித்தால் நானும் இந்த இடத்தில்வந்துசேர்ந்து தவஞ்செய்வேன் அப்படி இருபது பிர்ம்மப்பிரளயத்திற்கும் அந்தப் பகவானுடையகிருபையினால் தப்பிப்பிழைத்தேன் அந்தபகவான் ஆரென்றும் அவர் எங்கேயிருப்பாரென்றுங் கேட்கிறாயோ! அவர் இங்கேதானேயிருக்கி

ரூர் அவர் இங்கே எந்தஇடத்தில் இருக்கிறாரென்றுகேட்கிறாயோ; ஆனால் அதையுஞ் சொல்லுகிறேன் அஃதெப்படியென்றால்.

உனக்குப்பந்துவாகியும், சிநேகராகியும், மைத்துனராகியும், சாரதியாகியும், ஆப்தராகியும், ஆசாரியராகியும், தெய்வமாகியு மிருக்கப்பட்டகபடநாடகசூஸ்த்ராவதாரியான இந்தக் கிருஷ்ணமூர்த்திதான் அப்போதும் ஆலிலையின்மேற் பள்ளிகொண்டிருந்தவர் இப்போதும் இவ்விடத்தில் நம்மிலொருவராய் ஒன்றுமறியாதவரைப்போலிருக்கிறார் இதுகளையெல்லாம் அவரையேகேட்டுத்தெரிந்து கொள்ளென்றுசொல்ல, அதுகேட்டு அர்ச்சுனனும் சந்தோஷித்தனாய் அந்தப்பகவானைப்பார்த்து ஐயா; கிருஷ்ணா! இந்தமுனீஸ்வரர்சொன்ன வசனங்களெல்லாம் மெய்தானோவென்றுகேட்க; அதற்கு அந்தபகவானுஞ்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்து ஓய் அர்ச்சுனா; இவர்சொன்னவசனங்களெல்லாம்மெய்யே அந்தக்காலத்தில் நாம்சிறுபிள்ளையாயிருந்து உலகங்களையெல்லாம் ரக்ஷித்ததுமெய்யே அதுபொய்யல்ல வென்றுசொல்ல அதுகேட்டு அர்ச்சுனனும்நடுநடுங்கி அந்தப்பகவானுக்குப் பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டெழுந்து நின்று அந்தநாதனைப்பார்த்து ஓய்பரந்தாமா-பக்தவத்சலா- ஓய்சிநேகா-மைத்துனா-ஓய்சுவாமி! உம்முடைய மகிமையை பிர்ம்மாதி தேவர்களாலும்அறியப்படாதேயென்று அநேகவிதமாகக் கொண்டாடினான். அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ்சிரித்து அந்தமுனீஸ்வரனுக்கு நமஸ்காரம்பண்ணி ஓய்புண்ணியபுருஷா! உம்முடையதிவ்விய சொரூபத்தைக்கண்டமாத்திரத்தில் எங்களுக்குச்சந்தோஷமுண்டாச்சுது நாங்கள்பரமபவித்திரர்களானோமென்றுசொல்ல. அதுகேட்டு அந்தமுனிநாதருஞ்சிரித்து அர்ச்சுனனைப்பார்த்து நாமொருசிறியகதைசொல்லுகிறோம்அதையுஞ்சாவதானமாய்க்கேள் அஃதெவ்வனமென்றால்.

நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பிறந்து இறந்துபோன இருபதுபிர்ம்மாக்களில் பதினோராம்பிர்ம்மாவானவர் சிருஷ்டிகர்த்தாவாயிருக்கும்போது அவர்என்னிடத்திற்கு வந்து என்னைப்பார்த்து நீர் அநேகநாளாய் தவஞ்செய்கிறீரே நீர் என்னவரம்வேண்டித்தவஞ்செய்கிறீர் உம்முடையதவத்திற்கு மெச்சிப்பிரத்தியக்ஷமாய்வந்தேன் ஆகையால் உமக்குவேண்டியவரத்தைக்கேளும் நான் தருகிறேனென்றுசொன்னார். அந்தவார்த்தையைக்கேட்டுச்சிரித்து அந்தப்பிர்ம்மாவைப்பார்த்து ஓய் சதுர்முகப்பிர்ம்மாவே! நீர்என்னவார்த்தைசொன்னாய் நீ எனக்குவரங்கொடுக்கிறேனென்று சொன்னாயல்லவோ! நீஅற்பஆயசுள்ளவன் நீயோ எனக்குக்கர்த்தன் நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உனக்குமுன்னே பத்துப்பிர்ம்மாக்கள் பிறந்து சிருஷ்டிகர்த்தர்களாயிருந்து இறந்துபோனார்கள். அவர்களிலே நீயுமொருவன்தானே நீ இன்னம் இரண்டுமூன்றுநாளையில்இறக்கப்போகிறாய் அப்படியிருக்க, நீயோ எனக்கு வரங்கொடுக்கிறவன் உன்னுடைய

லோகத்திற்குப்போவென்றுசொல்ல, அதுகேட்டுஅந்தப்பிர்ம்மாவுஞ் சிரித்து என்னைப்பார்த்து உனக்குப்பயித்தியம்பிடித்து நல்லவார்த்தைசொன்னாய் என்னைப்பார்க்கிலும் வேறேஒருதெய்வமுண்டோ இந்தப்பதினாலுலோகங்களுக்கும் நானே சிருஷ்டிகர்த்தாவாய் எண்பத்துநாலுலக்ஷம் ஜீவகோடிகளுக்குந் தெய்வமாய்சகல தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் வரங்களைக் கொடுக்கின்றவனா யிருக்கும் போது என்னையல்லாமல் வேறேஒருதேவன்வந்து உனக்கு வரங் கொடுக்கப்போகிறானோ பார்ப்போமென்றுசொல்லிக்கொண்டிருக்கும்போது கேளீரோ நரநாராயணர்களே! அந்தவேளையில் பூமியானது படாவென்றுவெடித்து அதிலிருந்து ஒருபேய்க்காற் றுண்டாகிப் பிரளயகாலத்துச்சண்டமாருதம்போலெழும்பிஇப்படிவாரித்துக் கொண்டிருக்கிற எங்களிருவரையுந் தூக்கிக்கொண்டுஇந்தஅண்டத்தைவிட்டுவேறொரு அண்டத்திற்கொண்டுபோய்விட்டது. அங்கேஒருசிம்மாதனத்தில் அஷ்டமுகப்பிர்ம்மாவானவர் சகலதேவர்களுடனுங் கொலுவாயிருந்தார் அவர் எங்களிருவரையும்பார்த்து நீங்களார் நீங்களெங்கேயிருந்துவந்தீர்கள் நான்சிருஷ்டிகர்த்தாவாயிருந்து சகலலோகங் களையும் நிருமித்தேன் நீங்கள் என்சிருஷ்டிக்குள் அகப்படவில்லையே உங்களைப்பார்த்தால் விந்தைரூபமாய்க் காணுகின்றதேயென்றுகேட்க. அது கேட்டுச்சதுர்முகப்பிர்ம்மாவுஞ்சிரித்து அந்தஅஷ்டமுகப் பிர்ம்மாவைப்பார்த்து ஐயா நான்சதுர்முகப்பிர்ம்மாவாயிருந்து சகலலோகங்களையுஞ்சிருஷ்டிக்கப்பட்டவன் இவன்என்னுடையசிருஷ்டியி லகப்பட்டசீஷனென்றுசொல்ல.

அதுகேட்டு அந்தஅஷ்டமுகப்பிர்ம்மாவுஞ் சிரித்துஓய் பிரஷ்டர்களே நீயோ பிர்ம்மா அதுபொய்வார்த்தை நானேபிர்ம்மா நீங்களிருவரும் என்னுடையசீஷர்களென்று தர்க்கித்துக்கொண்டிருக்கையில்அவிடத்திலும் அந்தக்காற்றுண்டாகிவந்து எங்கள்மூன்றுபேரையும்அடித்துக்கொண்டுபோய் வேறொருஅண்டத்தில்விட்டது அவிடத்தில் பதினாறுமுகமுள்ள பிர்ம்மாவானவர்சகலதேவர்களுடனும்சிம்மாதனத்தின்பேரில் கொலுவாயிருந்தார். அந்தப்பிர்ம்மாவானவர் எங்கள்மூன்றுபேரையும்பார்த்துஇதேது ஆச்சரியகரமாயிருக்கின்றது நீங்களார்விந்தையாயிருக்கிறீர்கள் உங்களில் ஒருவர் எட்டுத் தலையாகவும் ஒருவன் நாலுதலையாகவும் ஒருவன்சந்நியாசியாகவுமிருக்கிறீர்கள் நீங்கள்என்சிருஷ்டிக்குளகப்படவில்லையே நீங்கள்யாவரென்றுகேட்க அது கேட்டு அஷ்டமுகப்பிர்ம்மாவும் அவனைப்பார்த்துஐயாநான் அஷ்டமுகப்பிர்ம்மா நான் சகலலோகங்களுக்குஞ்சிருஷ்டிகர்த்தா இந்தமூன்றுபேரும் என்னுடையசீஷர்களென்றுசொல்ல அதுகேட்டுஅந்தப்பதினாறுமுகப்பிர்ம்மாவுஞ்சிரித்து நீங்களோபிர்ம்மாக்கள் அதுபொய் வார்த்தை நானேசகலலோகங்களுக்குஞ் சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்ம்மா என்னைப்பார்க்கிலும் வேறேஒருபிர்ம்மாவில்லை நீங்களெல்லாரும்

ன்னுடையரிஷிகளென்று வாதித்துக்கொண்டிருக்கையில் அவிடத்தி
லும் அந்தக்காற்றுண்டாகி எங்களைந்துபேரையும் அடித்துக்கொண்டு
போய்வேறொரு அண்டத்தில்விட்டது அவிடத்தில் அறுபத்துநான்கு
தலையுள்ள பிர்ம்மாவிருந்து அவரும்அப்படியேசொன்னார். அவிடத்தி
லும் அந்தக்காற்றுண்டாகிவந்து எங்கள்ஆறுபேரையும்அடித்துக்கொ
ண்டுபோய் வேறொருஅண்டத்தில்விட்டது, அவிடத்தில் நூற்றிருபத்
துநாலுதலையுள்ள பிர்ம்மாவிருந்து அவரும்அப்படியேசொன்னார். அ
விடத்திலும் அந்தக்காற்றுண்டாகி எங்கள் ஏழுபேரையும் அடித்துக்
கொண்டுபோய் வேறொருஅண்டத்தில்விட்டது, அவிடத்தில் ஐம்பது
தலையுள்ளபிர்மமாவிருந்து அவரும அப்படியேசொன்னார். அவிடத்தி
லும் அந்தக்காற்றுண்டாகி எங்கள்எட்டுபேரையம் அடித்துக்கொண்
டுபோய் வேறொருஅண்டத்தில்விட்டது அவிடத்தில் ஐந்நூறுமுகப்
பிர்ம்மாவிருந்து அவரும் அப்படியேசொன்னார். அவிடத்திலும அந்
தக்காற்றுண்டாகி எங்கள்ஒன்பதுபேரையும் அடித்துக்கொண்டு போ
ய்வேறொரு அண்டத்தில்விட்டது. அவிடத்தில் ஆயிரமுகப்பிர்ம்மா
வானவர் நவரத்நமயமானசிம்மாசனத்தின்மேரில்கொலுவாயிருந்து
கொண்டு முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்
ரிஷிகளும் தன்னைச்சேவித்துநிற்கவும நாலுவேதங்களும் ஆறுசாஸ்தி
ரங்களும் புருஷிரூபமாகநின்று சேவித்துநிற்கவும் மகாசப்பிரமத்து
டனேயிருந்து எங்கள் ஒன்பதுபேரையும்பார்த்து நீங்கள்யாவர் நீங்க
ள் இவிடத்திற்குஎன்வந்தீர்கள் உங்களை இதுவரையிலும்நான்கண்டதி
ல்லையே நீங்கள் என்னவேண்டி வந்தீர்களென்று கேட்கஅவரைப்பார்
த்துஅந்தஎட்டுப்பேர்களுஞ்சிரித்து ஐயா! எங்களுடைய கெர்வத்தினா
ல்நாங்களித்தனை தூரம்வந்தோம் நீர்தானோ லோககர்த்தாவாகியபிர்
ம்மாநீர்தானோ! சகலலோகங்களையும் சகலசராசரங்களையும் உண்டாக்
கினவரென்றுகேட்க, அதுகேட்டு அவரும்சிரித்து அந்தஎட்டுப்பேர்க
ளையும்பார்த்து ஓய்புண்ணியபுருஷர்களே இந்தலோகத்திற்கு நீங்களு
ங்கர்த்தர்களல்ல நானுங்கர்த்தாவல்லஉங்களுக்குமெனக்கும்கர்த்தாவா
கியபரமேஸ்வரனானவர் தன்னுடையலீலாவிபூதியினால்சகல அண்டங்
களையும் உண்டாக்கினார் அவருடையஆக்கினையினால் நான்இந்தலோக
ங்களெல்லாம் நிர்மாணம்பண்ணிசகலலோகங்களையும்சிருஷ்டித்தே
ன் அந்தஅகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகரான பராபரவஸ்துவா
கியஸ்ரீமன் நாராயணமூர்த்தியே சகலதேவர்களுக்கும் சகலலோகங்க
ளுக்கும் சகலராஜாக்களுக்குங்கர்த்தன் அவருடைய திருவிளையாட்டி
னால்நித்தமாய் நீங்களும் நானும் இந்தஅண்டங்களைச்சிருஷ்டிக்கக்கர்த்
தர்களானோமென்றுசொல்ல. அதுகேட்டு எட்டுப்பேர்களுஞ் சந்தோ
ஷிப்பட்டு ஆயிரமுகப்பிர்ம்மாவுக்குத் தெண்டனிட்டார்கள். அதுக
ண்டு அவரும் அவர்களையெடுத்து மார்போடுதழுவிக்கொண்டு அவர்க
ளுக்குத்தகுந்த வெகுமானங்கொடுத்தனுப்பினார். அப்பொழுது அந்

ருகாரியமுநடக்கவில்லை சகலமுந்தேவரீருடைய அனுக்கிரகத்தினல் இந்தமட்டும்நடந்தேறிவந்தது இனிமேலுந்தேவரீரிலாயல்லாமல் அணுவளவும் அசையமாட்டாதென்றுசொல்ல அதுகேட்டு அந்தநாதனுஞ் சந்தோஷமடைந்து அர்ச்சுனனைப்பார்த்து ஓப்கிரீட்டீ! இப்போது நாம் நம்முடைய பட்டணத்தைச்சேரவந்தோமல்லவோ! நம்முடைய தண்டிலே அநேகம்வீராதிவீரர்களான மகுடவர்த்தனர்கள் வருகின்றார்கள் முனிசிரேஷ்டராகிய பகதலப்பிரிய மூனீந்திரரும் வருகின்றார் ஆகையினல் நான் அஸ்தினபுரத்திற்குப்போய் தர்ம்மபுத்திரனைக்கண்டு இவிடத்துச்சங்கதிகளெல்லாம்தெரியப்படச்சொல்லி மறுபடியும்இந்தராஜாக்களுக்குஎதிராகவரவேண்டுமாதலால் நான்முன்னதாகப்போகிறேன் நீயும் இந்தராஜகூட்டங்களுமாய் இந்தச்சேனைகளுடனேகூடிக்கொண்டு மெள்ளமெள்ள நடந்து நாளையதினம் அஸ்தினபுரத்திற்குவந்துசேருங்கோளென்றுசொல்லி அர்ச்சுனனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு அந்தப்பகவானுந்தனியேபுறப்பட்டு ரதத்தின்பேரிலேறிக்கொண்டு நடந்தருளினர்.

அப்பால் அர்ச்சுனராஜனனவன் அஸ்வமேதக் குதிரைகளுடனும் ராஜவர்க்கங்களுடனும் பகதலப்பிரிய மூனீந்திரருடனும் சகலசேனசமேதனாய்நடந்து அஸ்தினபுரத்திற்குச்சமீபத்திலிருக்கிறஒருசிங்காரவனத்தினிடமாகவந்து தண்டுவிட்டிறங்கினன். அப்பொழுதுசூரியபகவானும்மேற்குத்திசையில்அஸ்தமானமாகினர். அங்கேஸ்ரீகிருஷ்ணபகவானும் அதிவேகமாகநடந்து அஸ்தினபுரஞ்சேர்ந்துயாகமண்டபத்தில் யாகதீக்ஷையை வகித்துக்கொண்டிருக்கிற தர்ம்மபுத்திரனைக்கண்டு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டருளினர் அதுகண்டு தர்ம்மபுத்திரரும் சந்தோஷகரமாய் அந்தபகவானை யெடுத்து மார்போடு தழுவி ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு வெகுவாய் உபசரித்து அந்ததேவனை ஒரு (நவரத்ந) சிங்காதனத்தின்பேரில் உள்க்காரவைத்துக் கொண்டு அவரைப்பார்த்து ஓப் கிருஷ்ண! சுவாமீ! உம்மைக்கண்டு நெடுநாளாச்சுதே நீர் சகலகாரியங்களையும் ஜெயம் பண்ணிக்கொண்டு வந்தீரோ! சித்திராபர்வமுஞ் சமீபித்திருக்கின்றதே அர்ச்சுனன் எங்கேயிருக்கிறன் குதிரை எங்கேயிருக்கின்றது, தேவரீர் மாத்திரம் தனித்து வந்தகாரணமென்ன! அதைச்சொல்லுமையாவென்றுகேட்க அதுகேட்டு அந்தப்பகவானும் தர்ம்மநந்தனனைப்பார்த்து புன்சிரிப்பாகச் சிரித்து தாம்போய்வந்த சேதிகளெல்லாஞ் சவிஸ்தாரமாகச்சொல்லி பின்னையும் அவரைப்பார்த்து ஐயா! தர்ம்மநந்தன! அர்ச்சுனனனவன் இரண்டுஅஸ்வமேதக்குதிரைகளுடனும் வீராதிவீரர்களான அநேகமகுடமண்டலீகர்களுடனும் சகலசேனசமேதனாய் நமதுபட்டணத்திற்குச் சமீபமாக இருக்கின்ற சிங்காரவனத்தில் தண்டுவிட்டிறங்கியிருக்கின்றான் உம்முடையபாக்கியத்தை நானென்னவென்று அளவுபடுத்திச்சொல்லுவேன் நீர் நினைத்தகாரியம் முடியசமற்போகுமோ

உமக்குப் பலசாலிகளான வீமார்ச்சுனர்களிருக்கும்போது என்ன குறையிருக்கின்றதென்றுசொல்லிப்பின்னையும் அந்தராஜனைப்பார்த்து ஐயா நாளையதினம் நாம் சிறிதுபேருடனே நடந்துபோய் அர்ச்சுனனுடனேவருகிற ராஜாக்களை யெல்லாம் எதிர்கொண்டு அழைத்துவரவேண்டுமென்றுசொல்ல, அதுகேட்டுதர்ம்மபுத்திரரும் அதிகசந்தோஷித்துடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயா! கோபாலகுடாமணி! தேவரீர்எனக்குஅபயஹஸ்தங்கொடுத்துரக்ஷிக்கிறேனென்றுகங்கணங்கட்டிக்கொண்டிருக்கும்போது எனக்கு என்னகுறை யிருக்கின்றது; சகலமுங் காலமே பேசிக்கொள்ளலாம் இப்பொழுது ஆலசியமாயிராமல் அந்தப்புரத்துக்குப் போமென்றுசொல்ல; அதுகேட்டுகிருஷ்ணமூர்த்தியும் அப்படியே அந்தப் புரத்திற்குப்போய் அத்தையாராகிய குந்திதேவியைக்கண்டு தெண்டனிட்டு தாம்போய்வந்த சேதிகளெல்லாஞ் சவிஸ்தாரமாகச்சொல்லி அங்கிருந்துவந்து திரௌபதையையுஞ் சுபத்திராதேவியையுங் கண்டு அவர்களிடத்திலுஞ் சொல்லிவிட்டு அப்பால் தம்முடைய அரமனைக்குப்போய் தமதுதாயாகியதேவகிதேவியாரையும் அசோதையம்மையாரையுங் கண்டு அவர்களுக்கு நமஸ்காரம்பண்ணி அவர்களிடத்திலும் தாம் போய்வந்த சேதிகளைச்சொல்லி சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிற்பாடு ருக்குமணி சத்தியபாமைமுதலான ஸ்திரீகளையுங்கண்டு ஆதரணைபண்ணி அதின்பிறகு ஸ்நானஞ்செய்து சந்தியானுஷ்டான ஜபதபங்களை முடித்துக்கொண்டு அந்தப்புரத்திற்குப்போய் மகாசம்பிரமத்துடனே ஷட்சவை பதார்த்தவகைகளோடும் போஜனம்பண்ணி எழுந்திருந்துகைகால் சுத்திபண்ணிக்கொண்டு கர்ப்பூரதாம்பூலந் தரித்துக்கொண்டு சுகந்தபுஷ்ப பரிமளாதிகளை யணிந்துக்கொண்டு சந்தோஷகரமாய் சிறிது நேரம் கேளிக்கைவிநோதங்கள் பார்த்துக்கொண்டிருந்து பிற்பாடுபள்ளியறைக்குட்போய் புஷ்பசரங்களினு லலங்கரித்திராநின்ற சப்பிரகூடமஞ்சத்தின்பேரில் பவளித்துக்கொண்டு ருக்குமணி சத்தியபாமை இவர்களிருவரும் பாதம்பிடிக்கவும் மற்றையஸ்திரீக ளெல்லாரும் வெண்சாமரை - ஆலவட்டம் - மயில்விசிறி முதலானது களைக்கையிலேந்திக்கொண்டு அனந்தவித சயித்திய உபசாரங்கள் செய்யவும் அந்தப்பகவானவர் இப்படிப்பட்ட வைபவத்துடனே பரமயோகநித்திரைசெய்தருளினார்.

அதிமேல்சற்றுநேரத்தில் சூரியபகவானும் கீழ்த்திசையில் உதயமாகினார். அதுகண்டு தடாகங்களிலுள்ளதாமரைகளெல்லாமலர்ந்தது சகலஜீவராசிகளுக்கும் ஆனந்தமுண்டாச்சுது, அதற்கு முன்னமே ஸ்ரீகிருஷ்ணபகவானும் நித்திரைதெளிந்தெழுந்திருந்துகாலோசிதகாரியமான நித்தியகர்ம்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டுபோஜனகிருத்தியங்களையுந்தீர்த்துக்கொண்டு அரமனையைவிட்டுப் புறப்பட்டுவந்து தம்பியார்களுடனும் மந்திரிமார்களுடனும் பிரதானிக ளு

டனும் மகுடவர்த்தனர்களுடனும் தருக்கண்மார்களுடனுங் கொலு மண்டபத்தில் (நவரத்ந) கசிதமான சிம்மாசனத்தின் பேரில்கொலுவாயிருக்கின்ற தர்ம்மபுத்திர மஹாராஜாவைக்கண்டு தெண்டனிட்டு அவருடைய ஆசிர்வாதத்தைக்கைக்கொண்டு அவர்போடுவித்த ரத்நசிம்மாதனத்தின்பேரிலுள்க்கார்ந்து அந்த தர்ம்மபுத்திரரைப்பார்த்து ஐயா! தர்ம்மநந்தனே! நமது அஸ்வமேதக்குதிரைகளானது இந்நேரம்நம்முடையபட்டணத்திற்குச்சமீபமாகவருமே! அதுகளின்பிறகே அர்ச்சுனனும் மற்றுமுண்டானமகுடமண்டலாதிபர்களும் வருகின்றார்களே நாமுஞ்சிறிதுபேர்களுடனே எதிர்க்கொண்டுபோய் அவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டுவரவேண்டியிருக்கின்றதேஅதற்கு ஆலோசனைசெய்து எவர்களையனுப்பவேண்டுமோ அவர்களை அனுப்பிவையுமென்றுசொல்ல, அதுகேட்டு தர்ம்மநந்தனருஞ் சிரித்து கபடநாடக ரூஸ்த்ராவதாரியான ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து அநேகவிதமாகத் தோத்திரம் பண்ணி அவரைக்கொண்டாடிஓய்சுவாமீபூதேவிநாயகா தேவரீர் லோகநடனஞ்செய்கிறீரோ! உம்மைப் பார்க்கிலும்ஆப்தரானவர்கள் நமக்கு ஆரிருக்கின்றார்கள்எங்களுக்கு மைத்துனரும்சிநேகிதரும் ஆப்தரும் ஆசாரியரும் தெய்வமும்தேவரீரேயாகையால் நீரேஎங்கள்பேரில்கிருபைவைத்து வீமசேனன் - நகுலன் - விதுரன் - சஞ்சயன்-கிருபாசாரி - இவர்களையும்உம்முடனேகூட அழைத்துக்கொண்டுபோய் அர்ச்சுனன்முதலான அந்த ராஜாக்களையெல்லாம்அழைத்துக்கொண்டுவாருமையாவென்று அநேகவித வுபசாரமாகச்சொல்ல, அதுகேட்டு அந்தப்பகவானுஞ் சந்தோஷகரமாய் அந்தச்சபையைவிட்டெழுந்திருந்து தர்ம்மபுத்திரர் உத்தாரப்படி வீமசேனன்முதலானவர்களைப் பிரயாணப்படுத்தி அவர்களையெல்லாந்தம்முடனேகூட ரதாரூடர்களாயழைத்துக்கொண்டு தாமும் ரதாரூடராய் சிறிதுசேனைகளுடனே பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தாம்தாமென்றுமுழங்கத்தக்கதாக அஸ்தினபுரத்தைவிட்டுப் புறப்பட்டு நடந்து அப்பால்சிறிதுதூரம்போகையில் தங்களுக்கெதிராக வருகிற அர்ச்சுனராஜன்முதலான சகலராஜவர்க்கங்களையுஞ்சேனைகளையுங் கண்டுஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு யோகக்ஷேமங்களை விசாரித்துக்கொண்டு மகாசந்தோஷகரமாய்இரண்டுசேனைகளும் ஒன்றாகக்கூடிக்கொண்டு மகாவையபவத்துடனே நல்சுபமுகூர்த்தவேளையில்அஸ்தினபுரத்திற்குட்புகுந்து சத்தசமுத்திரங்களும் புரண்டுவந்தது போல சதுரங்கபலசேனைகளுடனும் நடக்கின்றவேகத்தினால் எழும்புகின்ற பாததூளிகள் ஆகாசமுழுதும்பரவிசூரியனைமறைக்கும்படியாகநடந்துபட்டணத்துவீதியில் வருகிறபோது அவிடத்திலிருக்கப்பட்ட பிராமண ஸ்திரீகள் ராஜஸ்திரீகள் முதலானவர்களெல்லாம் தங்கள் தங்கள் உப்பரிகையின்பேரிலும் மேடையின் பேரிலும்திண்ணையின் பேரிலும் தலைவாசற்படியிலும் இருந்துகொண்டு மங்கள வாழ்த்து

கர்ப்பாடிக்கொண்டு அநேகமாயிரந்தங்கத்தட்டுகளில் முத்தாலத்தி பவளாலத்தி ரத்நாலத்தி கர்ப்பூராலத்தி முதலானதுகளைக் கையிலேந்திக்கொண்டு அர்ச்சுனனைப்பார்த்து ஆ வீராதிவீரா! ஆவீரபராக்கிரமா! ஆ புண்ணியபுருஷா! ஆசுபத்திராமனோகரா! உனக்கு எந்தத்திசையிலும் ஜெயம் பொருந்தக்கடவது உன்னுடையகீர்த்திப்பிரதாபந் திரிலோகங்களிலும் பிரகாசிக்கக்கடவதென்று ஆசீர்வாதம்பண்ணி சகல திஷ்டிகளுஞ்சகலதோஷங்களும் பரிகாரமாகக்கடவதென்று ஆலத்திகள்சுற்றி விஷ்வகேதுமுதலானவர்களுக்கும் அப்படியேசெய்து அதுகளைக்கொண்டுபோய்ப் பட்டணத்திற்குப்புறம்பாயெறிந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட சம்பிரமத்துடனே அர்ச்சுனராஜனவன்சகலராஜவர்க்கங்களுடனும் சதுரங்கபலசேனைகளுடனும் பட்டணத்து வீதியில்நடந்துபோய் அரமனைக்குச்சமீபத்தில்வந்து ரதத்தை விட்டிழிந்து விஷ்வகேதுபிரத்தியுமனன் முதலானவர்களும் சிறிதுராஜாக்களும் கைலாகுகொடுக்கும்படி பாதசாரியாய்நடந்து ஆஸ்தானமண்டபத்திற்குவந்து அவிடத்தில்கொலுவாயிருக்கின்ற தர்ம்மபுத்திரமஹாராஜாவைக்கண்டு அவருக்குப்பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணினான் அதுகண்டு தர்ம்மபுத்திரமஹாராஜாவும் சந்தோஷித்தராய் தம்பியாகிய அர்ச்சுனனைஎடுத்து மார்போடணைத்துக் கொண்டு ஆசீர்வாதம்பண்ணினார். அப்பால்விஷ்வகேது மேகவர்ணன் முதலானகுமாரர்களெல்லாரும்வந்து பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணினார்கள். அவர்களையும் அப்படியேஎடுத்துமார்போடணைத்துக்கொண்டு ஆசீர்வாதம்பண்ணினார். அதின்பின்பு அர்ச்சுனனும் மேகவர்ணன் விஷ்வகேதுமுதலானவர்களைக்கூட அழைத்துக்கொண்டு அந்தச்சபையிலிருந்த பெரியோர்களைக்கண்டு தெண்டனிட்டு அவர்களுடையஆசீர்வாதத்தையும்பெற்றுக்கொண்டு அப்பால்அந்தப்புரத்துக்குப் போய் குந்திதேவி காந்தாரி முதலானதாய்மார்களுக்குநமஸ்காரம் பண்ணி அவர்களுடைய ஆசீர்வாதத்தையுங்கைக்கொண்டு அப்பால் துரௌபதையையுஞ் சுபத்திரையையுங்கண்டு ஆதரணைபண்ணிருக்குமிணிசத்தியபாமைமுதலான ஸ்திரீஜனங்களையுங்கண்டு தன்னுடையயோக க்ஷேமங்களையெல்லாஞ்சொல்லிக்கொண்டிருந்தான்.

இங்கேவீமசேனமகாராஜன் அந்த அஸ்வமேதக் குதிரைஇரண்டையும் பிடித்துக்குதிரைலாயத்திற்கொண்டுபோய் தங்கச்சங்கிலியினாற்கட்டிவைத்து தர்ம்மபுத்திரமகாராஜனிடத் திற்குவந்து சேர்ந்தான் அந்தச்சமயத்தில்பகதலப்பிரீய முனீஸ்வரரும்அந்தச்சபையில்வந்து சேர்ந்தார் அப்பொழுதுதர்ம்மபுத்திரமகாராஜாவும் பகதலப்பிரீய முனீந்திரனைக்கண்டு சிம்மாசனத்தைவிட்டுத்திக்கென்றெழுந் திருந்து நாலடிதூரம்நடந்துவந்து அந்தமுனீஸ்வரருக்குப் பிரதக்ஷிணநமஸ்காரங்கள்செய்து சர்வஉபசாரத்துடனே அழைத்துக்கொண்டு போய் நவரத்நகசிதமான ஒருசிம்மாசனத்தின் பேரில் புலியாசனம் பரப்பி

அதின்மேரில்அந்தமுனிநாதனை யெழுந்தருளப்பண்ணிஅவருக்குஅர்
க்கியபாத்தியமுதலான உபசாரங்களினல்பூசைபண்ணிஅவரைப்பார்த்
துஅநேகவிதமாகக்கொண்டாடித் தோத்திரம்பண்ணினர். அப்பொ
ழுதுஸ்ரீகிருஷ்ணபகவானும் சாத்தகிகிருதவர்ம்மன் இவர்களுடனேவ
ந்துதர்ம்மபுத்திரனைக்கண்டு நமஸ்காரம்பண்ணிஅவருடையஆசிர்வா
தத்தைக்கைக்கொண்டு அந்ததர்ம்மபுத்திரர்தமக்குப்போடுவித்தரத்ந
சிம்மாதனத்தின்மேரில் உள்க்கார்ந்திருந்தார் அப்பொழுதுதர்ம்மபுத்
திரரும்பலபத்திரர்முதலான பெரியோர்களுடையவரவுகண்டெழுந்
திருந்து அவர்களுக்கும்வந்தனை வழிபாடுகள்செய்துஆதரணைபண்ணி
னர் அவர்களும் சந்தோஷகரமாய் தர்ம்மபுத்திரர்போடுவித்தசிம்மா
சனங்களின் மேரில்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடையசமீபத்தில்உள்க்கா
ர்ந்திருந்தார்கள் அப்பொழுது மகாசத்திரியசந்தனர்களான சந்திரகாச
ன்வீரவர்ம்மன்-மயூரத்துவஜன் - தாமரைத்துவஜன்முதலான வீராதி
வீரர்களெல்லாரும் அந்தச்சபையினிடமாக தாங்கள்கொண்டுவந்தகா
ணிக்கைகப்பங்களையெல்லாம் தர்ம்மபுத்திரமகாராஜாவுக்குமுன்னே
வைத்துஒவ்வொருவராய் தங்கள்தங்களுடைய பெயர்களைச்சொல்லிம
காபயபக்திவிநயத்துடனே அந்ததர்ம்மபுத்திர மகாராஜாவுக்குப்பிர
தக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாகவிழுந்துதெண்டனிட்டார்கள் அது
கண்டுதர்ம்மநந்தனருஞ் சந்தோஷித்தராய் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களை
ப்புகழ்ந்துகொண்டாடி அந்தராஜாக்களையெல்லாமெழுந்துமார்போ
டுதழுவி ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு அவரவர்களுக்கு வெவ்வேறே
ரத்நசிம்மாசனங்கள்போடுவித்து அவர்களையெல்லாம் அதின் மேரில்
உள்க்காரும்படி சொல்ல, அவர்களும் அந்தப்படியே ஸ்ரீகிருஷ்ணப
கவானுக்குச் சமீபத்தில்உள்க்கார்ந்தார்கள்.

அப்பொழுது பப்பிரவாகன் சயிந்தவன்குமாரன் இவர்களிருவ
ரும்வந்து நகுலசகாதேவர்களைக் கண்டுதெண்டனிட்டு பலராமருக்
குநமஸ்காரம்பண்ணி அந்தப்புரத்திலிருக்கின்ற தாய்மாருக்கும் பா
ட்டியாருக்கும் நமஸ்காரம்பண்ணி அவர்களுடையஆசீர்வாதங் களை
யுங்கைக்கொண்டு மறுபடியுங் கொலுமண்டபத்திற்குவந்து உள்க்கார்
ந்தார்கள் அப்பொழுது கபடநாடக சூஸ்த்ராவதாரியான ஸ்ரீகிருஷ்
ணபகவானானவர் அந்தமகாசபையிலுள்ள சகல ஜனங்களும் கேட்கு
ம்படி அவிடத்திலிருக்கின்ற விசித்திரவீரியன் குமாரனான திருதரா
ஷ்டிரனைப்பார்த்து ஒப் திருதராஷ்டிரபூபாலகா! அதோ இருக்கின்ற
வர் சாக்ஷாத்விஷ்ணு அமிசையினற்பிறந்தவர் தர்ம்மசொரூபர் சத்தி
யசந்தனர் அகண்டிதவீரபராக்கிரமர் திவ்வியகுணசுந்தரர் இவர்தான்
குந்தலதேசத்தைப் பரிபாலனஞ்செய்யப்பட்ட சந்திரகாச மகாராஜ
னென்பவர். அப்பால் அதோ இருக்கிறவர் வீராதிவீரர் சத்தியசொரூ
பர்எமதர்ம்மராஜனுக்குத் தம்முடைய குமாரத்தியைச்சலியாணம் ப
ண்ணிக்கொடுத்துக் கீர்த்திப்பிரதாபம்பெற்றவர் தர்ம்மத்தினல்தேவ

ர்க்களையெல்லாம் மெய்ப்பித்தவர் அஷ்டாயிஸ்வரிய சம்பன்னர் மகா
தானவிநோதர் விஷ்ணுபக்தர் அவர்தான் சரஸ்வதிபுரத்தைப்பரிபால
னம்பண்ணுகின்ற வீரவர்ம்மமகாராஜனென்பவர். அப்பால்அதோ இ
ருக்கிறவர் சதாகாலமும் தானதர்ம்மங்களைச் செய்யப்பட்டவர் புத்தி
ரபவுத்திர களத்திராதிகளான பிரதாபத்தையுடையவர் தான் யாகஞ்
செய்யநினைத்து பூமிப்பிரதக்ஷிணஞ் செய்துவந்த அஸ்வமேதக்குதி
ரையைத் தர்ம்மபுத்திரருக்குக் காணிக்கையாகக் கொடுத்தவர் எனக்
குப் பாதிசரீரத்தைத் தானமாகக் கொடுக்கநினைத்து பெண்சாதிபி
ள்ளையினுடையகையினால் கண்டபரியந்தம் அறுப்புண்டு மகாகீர்த்தி
ப்பிரதிஷ்டையைப் பெற்றமஹானுபாவர் விஷ்ணுபக்தியிலுயர்ந்தவ
ர்விஷ்ணுபூஜாதுரந்தரர்சகலபோகபோக்கியங்களையுமுடையவர் அவ
ர்தான் ரத்தினபுரத்தைப் பரிபாலனம்பண்ணுகின்ற மயூரத்துவஜம
காராஜனென்பவர். அப்பால் அதோ இருக்கிறவர் வீராதிவீரர் மயூர
த்துவஜ மகாராஜாவினுடைய குமாரர் சத்துருபயங்கரர்சாம்பவமூ
ர்த்திக்குச்சரியான பராக்கிரமமுள்ளவர்எங்களுடைய குதிரையைப்பி
டித்துக்கட்டிவிட்டு எங்களுடையசேனைகளை யெல்லாஞ் சின்னபின்ன
ப்படுத்தி அர்ச்சுனனையும் என்னையும் நன்றாய்ப்பூசைபண்ணி எங்களி
ருவரையும் பூமியில் மூர்ச்சையாய்விழத்தள்ளி அஸ்வமேதக் குதிரை
யைப்பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குப்போனபிறகு நாங்களும்
கபடப்பிராமண வேஷங்கொண்டுபோய் அந்தராஜனைக்கண்டோம அ
ப்படிப்பட்டமகாபுருஷனாகிய தாமராத்துவஜனென்பவர். அப்பால்
அதோ இருக்கிறவன்மகாபலசாலி வீராதிவீரன் அகண்டிதவீர பராக்
கிரமன்பொறுமையும் பூததயாளமும் சத்தியமுமுள்ளவன் சவுரியத்தி
ல்தேவேந்திராதிதேவர்களையெல்லாம் மெய்ப்பித்தவன் பிதாவாகிய
அர்ச்சுனனையும்ரணக்களத்தில்ஜெயித்து திரும்பவும் நாகலோகத்திற்
குப்போய் ஆதிசேஷனுடையசேனைகளையெல்லாஞ்சின்னபின்னப்ப
டுத்தி அவனதுகெர்வத்தையடக்கி அவனிடத்திலிருந்த மிருதசஞ்சீவி
ரத்தினத்தையும் அமிர்தகலசத்தையும்வாங்கிக்கொண்டுவந்து அர்ச்சுன
ன் விஷ்வகேதுமுதலான வீரர்களையெல்லாம்பிழைக்கப்பண்ணுவித்த
ரணரங்கசூரன் அந்த அர்ச்சுனனுக்குவந்த ஆபத்து இந்தப் புத்திரனா
ல்வந்ததல்ல கங்காதேவியினுடையசாபத்தினால் அப்படிசம்பவித்தது
தகப்பனைப்பார்க்கிலும் வில்வித்தையில் அதிகமானவன் பாண்டியரா
ஜனுக்குப்பேரன் சித்திராங்கதையினுடையகுமாரன் அவன்தான் மணி
புரத்தைப்பரிபாலனம் பண்ணுகின்றபப்பிரவாகனென்பவன். அப்பா
ல் அதோ இருக்கின்றவர்விஷ்ணுபக்தாக்கிரேஸ்வரர்மகாதான விநோத
ர்சவுந்தரியத்தினால்மன்மதனைப்பழித்தவர்பொறுமையினால்பூமிதேவி
யைவென்றவர் சத்தியத்தினால் ஸ்ரீராமனைப்பார்க்கிலும் அதிகமானவர்
ஜனரக்ஷணையினால் ருக்குமாங்கதனைப்பழித்தவர் இவர்தான், சண்பகா
புரத்தைப்பரிபாலனம்பண்ணுகின்ற அம்சத்துவஜமகாராஜனென்ப

வர்தான் அவனுடையபாக்கியத்தை என்னவென்று வர்ணித்துச்சொல்லுவேன் அஃதென்னவென்றால் அவனுடையபுத்திரர்களாகியசுதர்ம்மனும்சுதர்த்தனும் மகாவீராதிவீரர்களாய்நின்றுசண்டைசெய்து அர்ச்சுனனுடையசேனைகளையெல்லாங் கண்டதுண்டம்பண்ணி என்னையும் அர்ச்சுனனையும் நன்றாய்ப்பூசைபண்ணி கடைசியில் இரண்டுபேரும் மடிந்துபோனார்கள். அதில் சுதர்ம்மனுடைய சிரசானது சூரியபகவானுடனே அபின்னமாகக்கலந்துவிட்டது சுதர்த்தனுடைய சிரசானது ஸ்ரீகயிலாசபதியான சாம்பவமூர்த்தியினுடைய மார்பிலணிந்திராநின்ற சிரமாலிகைக்கு நடுநாயகமாகிவிட்டது அப்படிப்பட்ட சுபுத்திரர்களைப்பெற்றுக் கீர்த்திப்பிரதாபம்பெற்றவர். அப்பால் நீலத்துவஜன்முதலான சகலமான ராஜாக்களையும் அந்தப் படியே அவரவர்களுடைய சவுரியபராக்கிரமங்களையும் பேரையும் ஊரையும் வெவ்வேறாகப் பிரித்துச்சொல்லி அந்தச்சபையினிடத்தில் எழுந்தருளி யிருக்கின்ற பகதலப்பிரீய முனீந்திரரைப்பார்த்து அவரையும் அந்தத் திருதராஷ்டிரனுக்கு நன்றாய்க்காண்பித்து ஒய்ஐயா! திருதராஷ்டிர பூபாலகா! அதோஎழுந்தருளியிருக்கின்ற முனீஸ்வரருடைய மகிமையைப் பிர்ம்மாதி தேவர்களாலும் அளவிட்டுச்சொல்லிமுடியாது அவர்மகா பெரியவர் அநேகநாளாய் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியை நோக்கித் தபசுசெய்துக்கொண்டிருக்கிறவர் இருபது பிர்ம்மாக்கள்பிறந்து இறந்துபோனதையுங் கண்களாரப் பார்த்துக் கொண்டிருந்தவர் காமம்- குரோதம்- லோபம்- மோகம்- மதம்- மாற்சரியமென்கிற ஆறுபகைகளையும் வென்றவர்-மெய்- வாய்- கண்- மூக்குச்- செவியென்னும் பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம்பண்ணினவர் ஆதிமூலமாகிய பராபரவஸ்துவை இருதயகமலமாகிய மனையில் சதாகாலமுங்குடியாகவைத்துக்கொண்டு போஷிக்கப்பட்டவர் திவ்வியமங்களவிக்கிரக பராக்கிரமமுடையவர் நிர்மலமான மனதையுடையவர் அப்படிப்பட்ட மகத்துவமுள்ள இந்தபகதலப்பிரீயமுனீந்திரரானவர் தர்ம்மபுத்திரருடைய பாக்கியத்தினாலும் நாமெல்லாரும் பண்ணின புண்ணிய வசத்தினாலும் இவிடத்திற்கு எழுந்தருளியிருக்கிறார்.

இனிமேல் தர்ம்மநந்தனர் செய்யப்போகிறயாகத்திற்கு ஒருகுறைவுமில்லையென்று சொல்லி பின்னையும் அந்தத் திருதராஷ்டிரனைப்பார்த்து ஐயா! ராஜேந்திரா! அதோ இருக்கிறவன் இப்போது நாம் சொல்லிக்கொண்டுவந்தராஜாக்களுடைய புஜபலத்திலும் சவுரியபராக்கிரமத்திலும் தயிரியத்திலும் குணாதிசயத்திலும் மிஞ்சினவனாய்சத்துரு பயங்கரனாய் ரணரங்கசூரனாய் அநேகயுத்தங்களிற் கைகண்டவனாய் மகாபலசாலியாயிருக்கப்பட்டவன் அவன் உம்முடைய குமாரத்தியான துர்ச்சேலையினுடைய குமாரன். உமக்குப்பேரன் அவன்தான் சிந்துதேசத்தைப் பரிபாலனம்பண்ணுகின்ற விருதசத்திரனென்பவன் அவனைப்பார்த்தீரோ வென்று பரிகாசவார்த்தையாகச்சொல்லி அந்

துப்பகவான் சிரித்தருளினர் அந்தவார்த்தையைக்கேட்டு அர்ச்சுனரா
ஜனும் மற்றுமுண்டான மகாராஜாக்களுங்கலீலென்று நகைத்தார்கள்
அதுகண்டு திருதராஷ்டிரனுஞ் சம்சயப்பட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானை
ப்பார்த்து ஐயா! அதை எனக்குநன்றாய்த் தெரியச்சொல்லுமென்று
கேட்க அதற்கு அந்தப்பகவானுஞ்சிரித்து அவனுடைய சேதிகளெல்
லாஞ் சவிஸ்தாரமாகச்சொல்லியருளினர். அதுகேட்டு திருதராஷ்டி
ரனுந் தர்ம்மபுத்திரர் முதலானவர்களுஞ் சம்சயந்தீர்ந்து சந்தோஷ
மடைந்தார்கள். அப்பொழுது சாயங்காலவேளையானபடியினல் தர்
ம்மராஜாவானவர் ஸ்ரீகிருஷ்ணபகவானுடனும் தம்பிமார்களுடனும்
சந்திரகாசன்முதலான ராஜாக்களுடனும் எழுந்திருந்துபோய் சந்தி
யானுஷ்டான ஜபதபங்களை முடித்துக்கொண்டு திரும்பவுங் கொலு
மண்டபத்திற்குவந்து சிம்மாசனத்தின்மேலி லுள்க்கார்ந்து ஆடல்பா
டல்முதலான கேளிக்கைபார்த்து சந்தோஷப் பட்டுக் கொண்டு சூரி
யாஸ்தமனமான பத்து நாழிகைமட்டும் சகலசேனைகளுடனும் பொ
ழுது போக்கிக்கொண்டிருந்து பிற்பாடு தர்ம்ம புத்திர மஹாராஜா
வானவர் கொலுமண்டபத்தை விட்டெழுந் திருந்து அரமனைக்குப்
போய் ஸ்ரீகிருஷ்ணபகவானுடனும் தம்பிமார்களுடனும் சந்திரகாச
ன்முதலான ராஜவர்க்கங்களுடனும் உள்க்கார்ந்து ஷட்சுவை பதார்த்
தங்களுடனே நல்ல திவ்விய போஜனம் பண்ணி கைகா லலம்பிக்
கொண்டு அவரவர்களுக்குத் தகுந்தமுறைமைப்படி கர்ப்பூரதாம்பூல
மும் சுகந்த பரிமளாதிகளுங் கொடுத்து நடப்பித்து தாமும் தாம்பூ
லந்தரித்துக்கொண்டு அதின்பிறகு கிருஷ்ணபகவான் சந்திரகாசன்மு
தலானவர்களுக்கெல்லாம் வெவ்வேறே விடுதிகளமர்த்திவைத்து அவர்
களைப்போய் படுத்துக்கொள்ளும்படி செலவுகொடுத்தனுப்பி விட்டு
தாமும் தம்முடைய பள்ளியறைக்குப்போய் சயனித்துக்கொண்டார்
உடனே சூரியபகவானும் கிழக்குத்திசையில் உதயமாகினர். அதற்கு
முன்னமே தர்ம்மபுத்திரரும் நித்திரை தெளிந் தெழுந் திருந்து கா
லோசிதகாரியமான நித்தியகர்ம்மானுஷ்டான ஜப தபங்களை முடித்
துக்கொண்டு போஜனகிர்த்தியத்தையுந் தீர்த்துக் கொண்டு சர்வாலங்
காரபூஜிதராய் தம்பிமார்களெல்லாரும் பக்கத்தில் நின்றுசேவிக்கவும்
மந்திரிகள் பிரதானிகள் சூழ்ந்துவரவும் வித்துவான்கள்புகழ்ந்துகொ
ண்டாடவும் பொற்பிரம்புக்காரர்கள் பராமரிக்கைபண்ணவும் இப்ப
டிப்பட்ட சம்பிரமத்துடனே கொலுமண்டபத்திற்குவந்து நவரத்ந
கசிதமான சிம்மாசனத்தின்மேலி லுள்க்கார்ந்து கொலுவாயிருந்தார்.
அப்போது திருதராஷ்டிரனும் சஞ்சயனும் விதுரனும் வந்து தர்ம்
மபுத்திரருடைய ஆசரணையைப்பெற்று ஒரு புறத்திலுள்க்கார்ந் திருந்
தார்கள். ஸ்ரீகிருஷ்ணபகவானும் அவருடைய குமாரர்களும்வந்து தர்
ம்மபுத்திரருக்கு நமஸ்காரம்பண்ணி அர்ச்சுன ராஜனுடைய சமீபத்
திலுள்க்கார்ந்திருந்தார்கள். பப்பிரவாகன் விஷ்வகேது மேகவர்ணன்

இவர்களெல்லாரும்வந்து பிதாக்களுக்கு நமஸ்காரம்பண்ணிஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையுஞ் சேவித்து ஒருபுறத்திலுள்க் கார்ந்தார்கள். சந்திரகாசன் வீரவர்ம்மன் மயூரத்துவஜன் தாமரைத்துவஜன் அம்சத் துவஜன் எவ்வர்ஞுசுவன் அனுசாளுவன் நீலத்துவஜன்முதலான ராஜாக்களெல்லாரும் தங்கள் தங்கள் விருதுகளுடனும் மந்திரி பிரதானிகளுடனும்வந்து ஸ்ரீகிருஷ்ணபகவான் தர்ம்மபுத்திரர் திருதராஷ்டிரன் இவர்களுக்கு நமஸ்காரங்கள்பண்ணி தங்களுக்குப்போடுவித்த ஆசனத்தின்பேரில் தர்ம்மராஜாவைச் சூழ்ந்து உள்க்கார்ந் திருந்தார்கள். அப்போது பரமபவித்திர ராகிய பகதலப்பிரிய முனீந் திரரானவர் அந்தக்கொலுமண்டபத்திற்கு எழுந்தருளிவந்தார் அதுகண்டு அங்கிருந்த கிருஷ்ணபகவான் தர்ம்மபுத்திரர் முதலான ராஜாக்களெல்லாருந்திக்கென்றெழுந்திருந்து மகா பயபக்தி விசுவாசத் துடனே நாலடி தூரம் எதிர்க்கொண்டுபோய் அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து அவரை அழைத்துக்கொண்டுவந்து பொற்பீடத்திலெழுந்தருளச்செய்து அந்தமுனீஸ்வரரை அர்க்கியபாத்தியமுதலான உபசாரங்களினல் பூசித்து மகாசந்தோஷகரமாய் அவரவர்களுடைய சிம்மாசனத்தின் பேரிலுள்க்கார்ந்திருந்தார்கள். அப்போது மகாரிஷிகளாகிய பிர்ம்மரிஷிகளும் தேவரிஷிகளும் ராஜரிஷிகளும் தபோதனர்களும்அந்தக்கொலுமண்டபத்திற்குவந்தார்கள். அவர்கள்யாவரென்றால், வியாசமுனிவர்- நாரதமுனிவர்- பர்வதரிஷி- மார்க்கண்டேயர்- வான்மீகமுனிவர்- காலவாகனர்- வர்ச்சண்டா கௌசிகர்- பராசர்- உத்திரியர்- வசிஷ்டபகவான் -விஸ்வாமித்திரர்-கௌதமர்- வியாக்கிர மயாதர்- ஜமதக்கினிரிஷி- பாரத்துவாசர்- கவுணசர்- வித்திமேயர்- சவுபரி மூனீந்திரர்- பிருகுமகாரிஷி- உத்தாலகர்- சாலிகேந்திரர்- வாமதேவர்- ஆங்கீரசர் மதங்கர்- முதலானமகாரிஷிகளும் இன்னம் மற்றுமுண்டான பிர்ம்மரிஷிகளும் தேவரிஷிகளும் ராஜரிஷிகளும் அது வல்லாமல் வாயுவுபக்ஷணிகர்களாகியும் சருகுஜலபக்ஷணிகர்களாகியும் பஞ்சாக்கினிமத்தியினின்று அகோரதவஞ்செய்கின்ற மகாத்துமாக்களாகியும் விளங்கப்பட்ட முனீஸ்வரர்களும் கூட்டமாகக்கூடி எழுந்தருளிவந்தது கண்டு தர்ம்மபுத்திரரானவர் சந்தோஷமடைந்து ஸ்ரீகிருஷ்ண பகவானுடனும் தம்பிமார்களுடனும் மந்திரிபிரதானிகளுடனும் விதுரசஞ்சயர்களுடனும் சிம்மாசனத்தைவிட்டுத் திடுக்கிட்டெழுந்திருந்து அந்த ரிஷிகணங்களுக்கு எதிர்க்கொண்டுபோய் அவர்களுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள்பண்ணி அவர்களை அழைத்துக்கொண்டுவந்து நவரத்நசிம்மாசனங்கள்போடுவித்து அதுகளின்பேரில் அவர்களை யெல்லாம் எழுந்தருளும்படி தர்ம்மபுத்திரரும் பயபக்தி விநயத்துடனே கைகளைக்கட்டிக்கொண்டுநின்று அவர்களைப்பார்த்து விண்ணப்பஞ் செய்தார். அதுகண்டுவியாசபகவான் முதலான ரிஷிகணங்க ளெல்லாரும் சந்தோஷப்பட்டு தர்ம்மபுத்திரருடைய சுஞுசியத் தையும் பக்தியி

சுவாசத்தையும் பிரபாவத்தையும் வர்ணித்துக் கொண்டு அவிடத்தில் அதற்குமுன்னமேவந்து எழுந்தருளியிருக்கின்ற பகதலப்பிரீய முனீந்திரனைக்கண்டு அந்தரிஷிகணங்களெல்லாரும் அவருக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள்பண்ணி சந்தோஷித்தர்களாய் அந்த முனீஸ்வரருடைய உத்தரவின்பேரில் தங்கள்தங்களுடைய ஆசனத்தின் மேலெழுந்தருளியிருந்தார்கள்.

கேட்டீரோஜெனமேஜெயமகாராஜாவே! அப்பால் தர்ம்மபுத்திரரானவர் வியாசபகவானைப்பார்த்து ஐயா முனிநாதா! அடியேன் செய்தபுண்ணியவசத்தினால் தேவரீர் சகலமான ரிஷிகணங்களுடனும் எழுந்தருளிவந்திருக்கிறீர் தேவரீருடைய உத்தாரப்படிக்கு அஸ்வமேதக்குதிரையும் பூமிப்பிரதக்ஷிணஞ்செய்துவந்துசேர்ந்தது ஆகையால் இனிதாமசப்படுத்தாமல் என்னுடையகையினால் இந்தயாகத்தைநிறைவேற்றிவையும் சுவாமீயென்று விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு வியாசபகவானுஞ் சந்தோஷப்பட்டு தர்ம்மபுத்திரனைப்பார்த்து ஓய்தர்ம்மநந்தனா! இதுவரையில் நீர் நினைத்தகருமங்களெல்லாம் உம்முடையதர்ம்மகுணத்தினால் நடந்தேறி வந்ததேயல்லாமல் மற்றொருவராலும்நடந்தேறவில்லை ஆகையால் இதற்குமேலும் ஒருதாழ்வில்லையினி சாங்கயாகயாகத்தைச் செய்யுமென்றுசொல்லி அந்த வியாசபகவானானவர் தாமெழுந்தருளியிருந்த ஆசனத்தைவிட்டெழுந்திருந்து வசிஷ்டர்முதலான ரிஷிகணங்களுடனும் சந்திரகாசன் முதலான ராஜகூட்டங்களுடனும் தர்ம்மபுத்திரர் வீமார்ச்சுன நகுலசகாதேவர்களுடனும்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாருடனும் பகதலப்பிரீய முனீந்திரருடனும் அந்தக்கொலுமண்டபத்தைவிட்டுப் புறப்பட்டுநடந்து யாகசாலையிற் பிரவேசித்து ரிஷிகணங்கள்முதலான சகலமானபேர்களையும் உள்க்காரும்படி உத்தாரம்பண்ணி தாமும் ஒருதர்ப்பாசனத்தின்பேரி லுள்க்கார்ந்துக்கொண்டு அங்கிருந்தவலாளர்களால் அந்தயாகசாலையைநவரத்தினங்களினால் அலங்காரம்பண்ணுவித்து முத்துக்களாலும்பவளங்களாலும்கோலங்களிடுவித்துதங்கத்தினாற்செய்தவாழைமரங்களை நிறுத்துவித்துகாராம்பசுவின்சாணத்தினாலுஞ்சந்தனத்தினாலும் பூமியைமெழுகப்பண்ணிநிலக்கண்ணாடிகள்கட்டிவித்துகர்ப்பூரதீபங்களேற்றுவித்துஇப்படிசர்வாலங்காரமுஞ்செய்வித்துபின்புயாகத்திற்குவேண்டியசமித்துமுதலான ஓமவஸ்துக்களெல்லாம் வீமன் அர்ச்சுனன் விதுரன் சஞ்சயன் இவர்கள் கையினால் அழைப்பித்துக்கொண்டு அதின்பிறகு தர்ம்மபுத்திரருக்குந் திரௌபதாதேவிக்கும் ஸ்நானம்பண்ணுவிப்பதற்கு கங்காதீர்த்தம் வேண்டுமே யென்று வசிஷ்டபகவானுடனும்பகதலப்பிரீய முனீந்திரருடனும்ஆலோசனைசெய்து அங்கிருந்தவர்களில் அறுபத்துநாலு தொம்பதிகளை யேற்படுத்தி அறுபத்துநாலு வெள்ளை யானைகளையும் அழைப்பித்து அவர்களை யெல்லாம் அந்த யானைகளின் பேரி லேறிக்கொண்டு தங்கக்குடங்களை யெடுத்து

க்கொண்டுபோய் கங்காதீர்த்தங் கொண்டு வரும்படி வியாசபகவான்
உத்தாரம்பண்ணியருளினார்.

அந்தத்தொம்பதிகள் ஆராரென்றால் ஸ்ரீகிருஷ்ணபகவானும் ரு
க்குமணிதேவியும், அர்ச்சுனராஜனும் சுபத்திராதேவியும் வீமசேன
னும் நீலவர்ணன்தேவியும், பிரத்தியுமனனும், ரதிதேவியும், பலபத்தி
ரரும், தேவகிதேவியாரும், விஷ்வகேதுவும் மதனமஞ்சரியும், எவ்வ
ர்ணசுவனும், பிரபாவதியும், அம்சத்துவஜனும் கோகிலா தேவியும்
மயூரத்துவஜனும் குமுத்துவதி தேவியும், வீரவர்ம்மனும் குயில்
மொழியாளும், சந்திரகாசனும் சண்பகாவதியும், ஆங்கீரசமுனிவரும்
அனுசூயாதேவியும், வசிஷ்டபகவானும் அருந்ததியும், இப்படி அரு
பத்துநான்குதொம்பதிகளும்புறப்பட்டு அவரவர்கள்கையில் தங்கக்கு
டங்களையேந்திக்கொண்டுவெள்ளையானையின்மேலேறிக்கொண்டுபோ
ய்கங்கைக்கரையிற்சேர்ந்து ஆனைகளைவிட்டிழிந்து ஒவ்வொருத்தராய்
அவரவர்களுடைய பத்தினிமார்களுடனே நதியிலிழிந்து ஸ்நானம் ப
ண்ணி ஜபதபங்களைமுடித்துக்கொண்டு சூரியபகவானுக்கு அர்க்கிய
ங்கொடுத்து தங்களுடையநேமநிஷ்டைகள் முடிந்தபின்பு தங்கக்குட
ங்களில் அந்தகங்கா சலத்தைப் பூரணமாக முகந்துகொண்டு கரை
மேல்வந்து திரும்பவும் அவரவர்களுடைய யானைகளின்பேரில் ஏறிக்
கொண்டு அஸ்திநபுரத்தைநோக்கிப் புறப்பட்டு நாகசுரம் பிள்ளாங்
குழல் வேணுநாதம்சங்கீதமேளமுதலான பதினெட்டுவிதவாத்தியங்க
ளும் வெண்கலப்பேரிகை ஜெயபேரிகைதவளமுரசுமுதலானவைகளு
ம் அண்டகடாகங்களெல்லாமதிரத் தக்கதாகதாம்தாமென்று முழங்கவு
ம்சந்திரவம்சத்து மஹாராஜாவாகிய தர்ம்மபுத்திர மஹாராஜாவான
வர்அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறாரென்று திருச்சின்னம் பணி
மாறவும் தேவதாஸ்திரீகளிலும் அதிகசவுந்தரியத்தை யுடையநாடகப்
பெண்கள் பரதநாட்டியம்பண்ணிக்கொண்டுவரவும் சிறிதுபெண்கள்
வெண்சாமரை மயில்விசிறி ஆலவட்டமுதலானதுகளையெடுத்து உப
சாரம்பண்ணிக்கொண்டுவரவும் பாட்டகர்கள்புகழ்ந்துகொண்டாடவு
ம்பதிவிரதாஸ்திரீகளெல்லாம் மங்களங்கள் பாடிக்கொண்டு கந்தபுஷ்
பஅக்ஷதைகளைவாரியிறைத்து ஆசீர்வாதம்பண்ணவும் இப்படிப்பட்
டவைபவத்துடனே அந்தத்தொம்பதிகளெல்லாரும் யாக சாலைக்குச்
சமீபமாகநெருங்கிவரும்போது கேட்டீரோஜெனமேஜெய பூபாலகா
அந்தவைபவங்களையெல்லாம் நாரதமுனிவர்கண்டு மனம்பொறாதவ
ராய்விசனமடைந்துநமக்கு நாரதாகலகப்பிரியாவென்று பேர்வைத்
திருக்க நாம்சும்மாயிருக்கலாமோ! நமக்குஇந்தவைபவத்தினால் வரு
கிறபிரயோசனமென்ன! கலகமுண்டானால் சந்தோஷமா யிருக்கும்
இவிடத்தில்கலகம்பண்ணலாமென்றால் ஒருசந்துமில்லையே! இதற்கென
ன்னசெய்யலாமென்று சற்றுநேரம்தனக்குத்தானே ஆலோசனைபண்
ணியுடனே அதற்கு யோசனையிரிந்துமகாசந்தோஷமாய்சிரித்த முக

த்துடனே அந்தயாகசாலையைவிட்டுப்புறப்பட்டு ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய அரமனைக்குள் நுழைந்து சத்தியபாமையினுடைய வீட்டினிடத்திற்போய்நின்றார். அதுகண்டு சத்தியபாமையுந்திடுக்கிட்டெழுந்திருந்து மகாபயபக்திவிசுவாசத்துடனே அந்த முனிவருக்கு எதிராக வந்துதெண்டனிட்டு அவரை அழைத்துக்கொண்டு போய்ஒரு (நவரத்ந) பீடம்போடுவித்து அதின்பேரில் அந்தநாரதமுனிவரை யெழுந்தருளப்பண்ணி அவருக்கு அர்க்கியபாத்தியமுதலானவைகளால்பூசைபண்ணிபிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து அநேகவிதமாகத் தோத்திரம்பண்ணிக்கொண்டு எதிரே நின்றாள். அதுகண்டுநாரதருஞ்சத்தியபாமையைப்பார்த்து ஓய்சத்தியபாமா! நீ பூர்வகாலத்தில்என்னுடனே ஒருரஹஸியவசனஞ்சொல்லியிருந்தாயே அதைஇப்போது சோதித் தறியலாமென்றுவந்தேன் அஃதென்னவென்றுகேட்பாயானால்.

என்புருஷனை ஸ்ரீகிருஷ்ணபகவான் என்பேரில் பிரியமாயிருக்கிறார் என்னைவிட்டுவிட்டு எவர்களிடத்திலுமிருக்கமாட்டார் எந்தக்காரியங்களுக்கும் என்னையே அழைத்துக்கொண்டுபோவார் க்ஷணப்பொழுதாகிலும் என்னைவிட்டுப் பிரியமாட்டார் இந்தப் பதினாறாயிரத்தொருநூற்றிரண்டு ஸ்திரீகளிடத்தில் வைத்திருக்கின்ற இஷ்டத்திலும் என்னிடத்தில் அதிகஇஷ்டம்வைத்திருக்கிறார் அல்லும்பகலும் அறுபதுநாழிகையும் என்னிடத்தில்தானே வாசமாயிருக்கிறாரென்றுசொல்லியிருந்தாயல்லவோ! அந்தவார்த்தையை இதுவரையிலும் மெய்தானென்றெண்ணி இருந்தேன் அதுஇன்றைத்தினம் பொய்யாகிவிட்டது இப்படிப்பட்ட பொய்வார்த்தையைப் பெரியோர்களிடத்திற்சொல்லலாமோவென்றுசொல்ல அதுகேட்டுச் சத்தியபாமையும் நாரதமுனிவரைப்பார்த்து ஐயா பிர்ம்மகுமாரா இப்போது தேவரீர்சொன்ன வார்த்தையெல்லாம்மெய்தான் அதற்குச்சம்சயமென்ன? நான் ஒருநாளும்பொய்சொல்லுகிறதில்லையென்றுமறுபடியுஞ்சொல்லஅதற்குஅந்தநாரதருஞ் சத்தியபாமையைப்பார்த்து ஓய் அம்மா பாக்கியவதி! நான்திருஷ்டாந்தமாய்ப்பார்த்து வந்திருக்கும்போதே இப்படிஇரட்டித்துச்சொன்னால் உன்னுடையசொல்லை எப்படிநம்புகிறது உன்பேச்செல்லாம் அபத்தந்தான் அதெப்படியென்றால் தர்ம்மபுத்திரருக்கும் திரௌபதாதேவிக்கும் ஸ்நானம்பண்ணுவிக்கும்பொருட்டு வியாசமுனிவரானவர் அறுபத்துநாலுதம்பதிகளை ஏற்படுத்தி அவர்களெல்லாம் ஒவ்வொருதங்கக்குடங்களையெடுத்துக்கொண்டு வெள்ளையானையின்பேரிலேறிக்கொண்டுபோய் கங்காதீர்த்தங்கொண்டுவரும்படி கட்டளையிட்டனுப்பினார். அதிலே உன்புருஷனாகிய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியையும் ஒருவராய்ஏற்படுத்தினபடியால் அவரும் ருக்குமிணிதேவியாருடனே மகாசந்தோஷகரமாய் வெள்ளையானையின்பேரி லேறிக்கொண்டுபோய் அந்தக்கங்காநதியில் இரண்டுபேரும் ஸ்நானம்பண்ணி நல்லவஸ்திராபரணங்களையலங்கரித்துக்கொண்டு தங்கக்குடத்தில்தீர்த்த

முகந்துகொண்டு மகாஆடம்பரத்துடனே அதோவருகிறார் அவருக்
குஉன்பேரில்மோகமுண்டானால் உன்னை அழைத்துக்கொண்டுபோக
மாட்டாரோ இதனால் உன்னுடைய ஆசையும்அவருடையஆசையும் ந
ன்றாய்த்தெரிந்துவிட்டது இப்படியே அவர் நாள்தோறும்நடந்துவரு
கிறார். அதுஉனக்குக்கொஞ்சமாகிலுந்தெரியவில்லை அதைப்பார்த்து
வந்ததுமுதல் எனக்குமனது பதைக்கின்றது நல்லது இனிமேலாகிலு
ம்அவர் உன்னிடத்திற்குவந்தால்கொஞ்சத்தில்விட்டுவிடாமல் அவிடத்
திற்குத்தானே போவென்றுசண்டைபண்ணு மம்மாவென்று சகாய
மாய்ச்சொல்லுகிறவனைப்போல் கலகப்பிரியசிகாமணியாகிய நாரதர்
சொல்ல. அதுகேட்டு நாரதனைப்பார்த்துசத்தியபாமையுஞ் சிரித்துஓ
யீஐயா! நாரதமுனீந்திரா! தேவரீர்என்னைப் பொய்வார்த்தை சொன்
னாயென்றுசொன்னீரல்லவா? நான்ஒருக்காலும்பொய்சொல்லுகிறதி
ல்லை தேவரீர்பேசுகிறபேச்செல்லாம் அபத்தம் பெரியோர்கள் பொய்
சொல்லுகிறதினால் குற்றமில்லைபோலிருக்கின்றது இப்பொழுதுஎன்
புருஷனை ஸ்ரீகிருஷ்ணபகவான்என்சக்களத்தியாகிய ருக்குமிணிதே
வியுடனே மகாசம்பிரமமாய் வெள்ளையானையின்பேரிலேறிக்கொண்
டுபோய் கங்காதீர்த்தங் கொண்டுவருகிறாரென்றுசொன்னீரோ! இதுநி
ஜமோ. நல்லது உம்முடையவார்த்தைபொய்யென்றும்என்னுடையவா
ர்த்தைபொய்யென்றுந்தெரிந்துகொள்ளலாம் இப்படித்தானே பூர்வத்
திலும்என்னை ஒருதிரம்ஏமாற்றினீர்அப்படி இப்போதும் மோசம்ப
ண்ணவந்தீரோ! ஆகட்டும்வாருமையாவென்று அந்தமுனீஸ்வரனை உள்
க்கூட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனாளென்றுஜெயமுனீந்திரர்சொ
ல்ல. அதுகேட்டு ஜனமேஜயமகாராஜனுஞ்சிரித்து சந்தோஷசித்த
னாய் அந்தமுனீந்திரனைப்பார்த்து ஓய்ஐயா! ஜெயமுனீந்திரா! பூர்வத்
தில் சத்தியபாமையம்மனை நாரதமுனிவர் என்னமோசம் பண்ணினா
ர். அதையும் எனக்குத் தெரியச்சொல்லுமையா வென்றுகேட்க. அத
ற்கு ஜெயமுனீந்திரரும் அந்தராஜனைப்பார்த்துஓய்ராஜேந்திரா! பூர்வ
காலத்தில் துவாரகாபுரியில் சத்தியபாமையம்மையானவள்தன் புருஷ
னாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னிடத்தில்தானே எப்போதுமிருக்க
வேண்டுமென்றுநினைந்து பதினைந்து நாள்மட்டுக்கும் ஒருநோன்பு
நோற்கும்போது இந்தநாரதமுனிவர் அதற்குப்புரோகிதராயிருந்து
வேதமந்திரங்களைச்சொல்லி அந்நோன்பை நிறைவேற்றிவைத்தபிறகு
சத்தியபாமையுஞ் சந்தோஷமடைந்து அந்தமுனீஸ்வரனுக்குப்பூசை
நமஸ்காரங்கள்பண்ணி பிற்பாடு அவரைப்பார்த்து ஓய்நாரதமுனீந்தி
ரா! தேவரீர் எனக்குப்புரோகிதராயிருந்து என்னுடைய விரதத்தைவி
க்கினமில்லாமல் நிர்விக்கினமாய் நிறைவேற்றிவைத்தபடியால் அந்த
விரதபலன் எனக்குசித்தியாகும் பொருட்டு உமக்கு தக்ஷிணை தாம்பூ
லங்கொடுத்து உம்முடைய மனதைச்சந்தோஷப்படுத்தவேண்டும் ஆ
கையால் தேவரீருக்குஇஷ்டமானவஸ்துக்களெதுவோ அதைக்கேட்டா

ஸ்தருகிறேன்சுவாமீயென்று சொன்னமாத்திரத்தில் அதுகேட்டு நாரதருஞ்சிரித்து சற்றுநேரம்ஆலோசித்து இதுவுமொருகாரியத்திற்கு நன்மைதானென்று நினைந்து அந்தஅம்மனைப்பார்த்து ஓய் சத்தியப்பிரஸ்தன் குமாரத்தியான சத்தியபாமையே நீ இப்போது கேட்கச்சொன்னபடி எனக்கு இச்சையானபொருளைக்கேட்பேனாகில் அந்தப்பொருள் எதுவாயிருந்தாலும் மறுதலியாமல் கொடுத்தால்மாத்திரமுனக்கு அந்தவிரதபலன்சித்தியாகும் இல்லாவிட்டால் அபலமாய்ப்போய்விடும் அதுவல்லாமலும்பெரியோர்களுக்குப்பொய் சொன்ன அபசாரமும்வந்துசேரும் அதுதெரியாமல் என்னபொருளைக்கேட்டபோதிலுந் தருகிறேனென்று உன்வாக்கினாற்சொல்லிவிட்டாயே அந்தப்படியே நான்கேட்டபொருளைத் தடையில்லாமற்கொடுக்கமாட்டுவாயோவென்றுகேட்க. அதற்குச்சத்தியபாமையுஞ்சிரித்து ஓய்ஐயா! நாரதமுனிவரே! என்னைப்பூலோகத்து ஸ்திரீகளில் ஒருத்தியாகநினைத்துக்கேட்கிறீரோ! அதுவுமல்லாமல்பொய்வார்த்தைசொல்லுகின்றவர்கள் இகபரதூஷணர்களாய் அந்தத்தில்ரவுரவாதிநரகத்திற்சேருவார்களென்கிற வேதப்பிரமாணத்தைத் தெரியாதிருந்தாலும் உலகத்தில்சாதாரணமாய்ப்பொய் சொன்னவாய்க்குப் போஜனங் கிடையாதென்றுசொல்லிக்கொள்ளுகிற வழக்கச்சொல்லையாகிலுங்கேட்டிருக்கமாட்டீரோ! ஆகையினால் உமக்குவேண்டுமென்ற பொருளைச்சம்சயப்படாமல் கேளுஞ்சுவாமீயென்று அந்த அம்மனும்இவர் எந்தப்பொருளைக்கேட்கப்போகிறார் பண்டிபண்டாரங்கள் ரொக்கரோஜனங்கள் சீர்மை பூமிகள்ஆனை குதிரைகள்ஸ்திரீஜனங்கள் முதலான பொருள்களில்எதையாகிலுங் கேட்கப்போகிறார் அதை நாம் கொடுக்கமாட்டாமோவென்று லேசாய்நினைத்து நாரதருடைய மனக்கருத்தை யறியாமற்சொன்னபோது அதுகேட்டு நாரதபகவானுஞ்சிரித்துஓய்அம்மா பாக்கியவதி! நீ எனக்கு அபேக்ஷையாகியபொருளைத் தருகிறேனென்றுவாக்குதத்தம் பண்ணிவிட்டாயல்லவா! ஆனால்சொல்லுகிறேன் அஃதென்னவென்றால் நான்பதினாலுலோகங்களிலும் எந்தவேளையும் ஓய்வில்லாமல் திரிகிறபடியால் சரீரப்பிரயாசமிகுந்து இரண்டு பாதங்களும்வலிகொண்டு ராத்திரிக்கெல்லாம் நித்திரைவாராமல் வருத்தப்படுகிறேன் ஆகையினால் ஒருசிறுபிள்ளையைச் சிஷியனாகச்சம்பாதித்துக்கொண்டால் ராத்திரிவேளையில்கைகால்பிடித்துக் கொண்டிருப்பானென்று நீடுநாளாய்ப் பூமிமுழுதுந்தேடிக்கொண்டு திரிகிறேன் எனக்குத்தகுந்தசிஷின் அகப்படவில்லை அப்படியிருக்கஇப்போதுஎன்னுடையபுண்ணியவசத்தினால் கேட்டபொருளைத்தருகிறேனென்று நீ வாக்குதத்தம் பண்ணினாயல்லவோ! ஆதலால்கெட்டிக்காரனாய் பலசாலியாய் திவ்வியசரீரனாயிருக்கின்ற உன்னுடையபுருஷனாகியஸ்ரீகிருஷ்ணனேதவனை நமக்கு தக்ஷிணையாகக்கொடுமென்றுகேட்க. அந்தவார்த்தையைக்கேட்டுச் சத்தியபாமையுஞ்சிரித்து ஓய்ஐயா! நாரதரே! நீர்ந

ல்லதக்ஷிணைகேட்டீர். அதற்கும் நான்பின்னிடாமல் உம்முடையகருத்தின்படியே தருகிறேனென்றுசொல்லி தன்னுடையபக்கத்திலிருந்த ஸ்ரீகிருஷ்ணதேவனைப்பார்த்து ஓய்பிராணநாதா தேவரீரைநாதருக்குத்தானமாகக்கொடுத்தேன் ஆதலால் நீரும்அவருக்குச்சிஷனாகப்போமென்றுசொல்ல, அதுகேட்டு அந்தக்கபடநாடகசூஷ்திராவதாரியும்புன்சிரிப்பாகச் சிரித்து ஓய்சத்தியபாமா! நான் இந்த நாரதருக்குச்சிஷனாகும்படிநேரிட்டது, என்னுடையபுண்ணியவசந்தான் ஆதலால் நான் உன்னுடையசொற்படியே செய்கிறேனென்று அந்த தேவனும் லோகநாடகந்தப்பி நடக்கக்கூடாத படியினால் அந்தமுனிவருக்குநமஸ்காரம்பண்ணி அவருக்குப் பின்னாகத் தொடர்ந்துநடக்க அதுகண்டுநாரதரும் தனக்குள்ளேதானே சந்தோஷிப்பட்டுக்கொண்டுநமக்கு இப்படிப்பட்ட சிஷன்திரிலோகங்களிலும் அகப்படமாட்டான் நமக்கு நல்லசிஷன் அகப்பட்டான் எப்படிப்பட்டதபோதனர்களுக்கும் அகப்படாதபுருஷன் நமக்கு அகப்பட்டானே நம்முடையபாக்கியமேபாக்கியமென்று மகிழ்ச்சியடைந்து தம்முடைய கிருஷ்ணாசலம்தண்டு கமண்டலம் ஜபமாலிகை இதுகளையெல்லாஞ் சிஷனாகிய அந்தக் கிருஷ்ணமூர்த்தினகையிற்கொடுத்து எடுத்துவரும்படி உத்தாரம் பண்ணி அந்தநாரதரும் நடந்துகொண்டிருந்தார்.

அப்பொழுதுசத்தியபாமையும் ஆலோசனை பண்ணி நாமென்ன வேலைசெய்துவிட்டோம் நம்முடைய புருஷனைவிட்டு நாம் எப்படி தனித்திருப்போம் புருஷனில்லாதபெண்களுக்கு என்ன சந்தோஷமிருக்கின்றது அந்த நாரதருங் கேளாதபொருளைக் கேட்டார் நாமுங் கொடுத்துவிட்டோம் சத்தியவசனமுந்தப்பக்கூடாது இதற்குஎன்ன செய்யலாம் அல்லாமலும் நம்முடையசக்களத்திகளான பதினாறாயிரத்தொருநூற்றிரண்டு பேர்களும் இந்தசேதியைக் கேட்டால் நம்முடனே போராடி விசாரப் படுவார்களே என்ன அனர்த்தம் பண்ணிக்கொண்டோம் ஹரிகிருஷ்ணா- கோவிந்தா- பக்தவத்சலா- பரமதயாளா- ஆதிமூலமேயென்று அந்தச்சத்தியபாமையும் விசாரப்பட்டுதன்னுடையமனதைத் தானேதேற்றிக்கொண்டு ஜவோலென்றெழுந்து முன்னே நடந்துபோகிற நாரதபகவானண்டைக்குவந்து அவருக்குப்பிரதக்ஷிண நமஸ்காரங்கள்பண்ணி அவரைப்பார்த்து ஒய்தயாநிதீ! நாரதமுனீந்திரா! தேவரீர்இப்போது நான் கோரிவந்த கோரிக்கையை ஈடேற்றும் நான்செய்த அபசாரத்தைப ன்னித்து ரக்ஷியும்நான்தேவரீருடைய மகத்துவத்தையறியாமல் மோசம்போனேன் என்மேரில் கிருபைசெய்து என்னுடையபுருஷனை எனக்குக் கொடுத்தனுப்பும் அவரால் உமக்கு என்னகாரியம் நடக்கப்போகிறது அவர் எங்களண்டையிலிருந்தால் எங்களுக்கு அநேககாரியங்களெல்லாம் நடக்கும் ஆகையினால் தானஞ்செய்தபொருளைத் திரும்பவுங் கேட்கிறேனென்றுதிருவுளத்தில் ஆயாசங்கொள்ளாமல்என்புருஷனை அனுப்பிவையும்

சுவாமீயென்று வெகுவாய்விசனப்படுகிற சத்தியபாமையைப் பார்த்து அந்தநாரதருஞ்சிரித்துசற்றுநேரம் ஆலோசனைபண்ணி இந்தக்கிருஷ்ணனையழைத்துக்கொண்டுபோனால் இவன் நமக்குஎன்னபணிவிடைசெய்யப்போகிறான் இவன் நமக்குத்தகுந்தசிஷனல்ல! இவனுடையபெருவயிற்றுக்கு நாம்எங்கேபோய்போஜனஞ்சம்பாதிக்கப்போகிறோம் ஆகையினால் இவனை உபாயதந்திரங்களைச்சொல்லி சத்தியபாமையின் பின்னே அனுப்பிவிட்டு இவனுக்குச்சரியான நிறையாய் தங்கத்தைவாங்கிக்கொண்டு போகலாமென்றுநினைந்து அந்தச்சத்தியபாமையைப்பார்த்து ஓய்அம்மா! பாக்கியவதீ! நீயேன் விசனப் படுகிறாய்சந்தோஷமாயிரு இந்தக்கிருஷ்ணனால் நமக்குஎன்னஆதாயம்இருக்கின்றது நீ தானங்கொடுத்தபடியினால் தள்ளப்போகாதென்று சம்மதித்து வாங்கிக்கொண்டேன் இனி அப்புறத்தே கொண்டுபோய் விற்றுப்போடுவேன் ஆதலால் அந்தத்திரவியத்தை நீ கொடுத்தபோதினும்உனக்கே கொடுத்துவிடுகிறேன் நீ அந்தகிருஷ்ணனுடைய நிறைக்குச்சரியாய்தங்கத்தைவைத்து நிறுத்துக்கொடுத்தால் வாங்கிக்கொண்டுபோகிறேனென்றுசொல்ல, அந்தவார்த்தையைக்கேட்டுச் சத்தியபாமையுஞ் சந்தோஷித்து ஓய்சுவாமீ! நான் அப்படியேதருகிறேனென்றுசம்மதித்து தன்னுடையஅரமனைக்குட்போய் ஒருபெரிய தராசைக்கொண்டுவந்துகொடுத்து அந்தத் தராசினுடைய ஒருதட்டில் ரொக்கமுதலான சகலமானஉடைமைகளையுங் கொண்டுவந்துவைத்து ஒருதட்டில் லோகநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை உள்க்காரவைத்து நிறுக்கும்போது அந்தக்கிருஷ்ண மூர்த்தியுஞ் சத்திய பாமையினுடைய பிரியத்தைக்கண்டு சந்தோஷித்தராய் இவளைப்பங்கப் படுத்தவேண்டுமென்று திருவுளத்தில்நினைத்து தாமிருந்ததட்டைப் பெருவிரலினால் அழுத்தினமாத்திரத்தில் அந்தத்தட்டானது கொஞ்சமாகிலும்உயரஎழும்பாமல் அப்படியேயிருந்தது, அதுகண்டுசத்தியபாமையும்ஆச்சரியப்பட்டு பின்னையுந் தன்னுடையஉடைமைகளையுந் தோழிமாருடைய உடைமைகளையுங் கழற்றிக்கொண்டுவந்து அந்தத் தட்டிலேவைத்தாள் அப்போதும் அந்தப்பகவான் உள்க்கார்ந்திருக்கிறதட்டானது எழும்பவில்லை அதுகண்டுசத்தியபாமையும் இதுவெல்லாம் ஸ்ரீகிருஷ்ணதேவருடைய திருவிளையாட்டென்றுநினைந்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு தன்னுடைய சக்களத்திமார்களிற் சிலபேர்களுடைய அரமனைக்குப்போய் அவர்களுக்கெல்லாம் அந்தசங்கதியைத் தெரிவித்து அவர்களுடைய உடைமைகளையும் ரொக்கங்களையும்வாங்கிக்கொண்டுவந்து அந்தத்தட்டிலேபோட்டாள். அப்போதும்அந்தத்தட்டானது முன்னிருந்ததுபோலிருக்க, அதுகண்டுசத்தியபாமையும் மிகுந்தவிசனமடைந்து மற்றசக்களத்திமார்களுடைய உடைமைகளையும் ரொக்கங்களையுங் கேட்டுவாங்கி ஆனைகள்பேரிலும் ஒட்டகங்கள் பேரிலும் எடுப்பித்துக்கொண்டு அவர்களையுங் கூட்டிக் கொண்டு வந்து

அந்தப்பொருள்களையெல்லாம் அந்தத்தட்டிலேபோட்டாள் அப்போ
தும் அந்தத்தட்டானது உயரஎழும்பாமலிருந்தது, அதுகண்டு சத்தி
யபாமையும் விசாரப்பட்டு இனிஎன்னசெய்வேனென்று தன்னுடை
யகையை நெரித்துக்கொண்டு கண்களில்ஜலமானது தாரைதரையாய்
வடியும்படியாகப் பிரலாபிக்கத்தொடங்கினாள். அதுகண்டு சாம்பவதி
காளிங்கி லக்ஷணைமுதலான பட்டஸ்திரீகளும் பின்னுமுண்டான ப
தினாராயிரத்தொருநூற்றிரண்டு தேவிமார்களும் மற்றுமுண்டானப
ரஜனங்களும் கோவென்றுபுலம்பி விசாரப்படத் தொடங் கினார்கள.
அவர்களிற்சிலர் சத்தியபாமையை நிந்தித்தார்கள். சிலர் நாரதமுனிவ
னை நிந்தித்தார்கள். சிலர் ஸ்ரீகிருஷ்ணதேவருடைய மாயாவிலாசமெ
ன்றெண்ணிக்கொண்டார்கள். இந்தக்கோலாகலங்களையெல்லாம்பார்த்
து ஸ்ரீகிருஷ்ணதேவரும் புன்சிரிப்பாகச்சிரித்துக்கொண்டு இன்னம்
இவர்களுடைய நினைவை அறிவோமென்று அந்தத்தட்டிலே தானே
அசையாம லுள்க்கார்ந்திருந்தார் அப்பொழுது அந்தப்புரத்தி லிரு
ந்த ஆதிலட்சுமியாகிய ருக்குமணிதேவியாரும் இந்தச்சவிஸ்தாரமெ
ல்லாந்தோழிமார்களால் கேள்விப்பட்டுவந்து தன்னுடைய சக்களத்தி
யான சத்தியபாமையை நிந்தித்து நாரதர்பண்ணின சூதுக்கும் ஸ்ரீகி
ருஷ்ணமூர்த்தியாருடைய தந்திரத்திற்குஞ் சந்தோஷப்பட்டு புன்சி
ரிப்புடனே அந்தசத்தியபாமை முதலான ஸ்திரீகளெல்லாரையும் அப்
புறத்தே விலகி யிருக்கச்சொல்லி தன்னுடையமனதில்ஒருபொருளை
உத்தேசம்பண்ணிக்கொண்டு பின்பு நாரதமுனிவரைப்பார்த்து ஓய்
முனீந்திரா! உமக்கு என்புருஷனுக்குச்சரியான நிறையுள்ள மகாவி
சேஷமான பொருளைக்கொடுக்கிறேன் நீர் சுகமாய் வாங்கிக்கொண்டு
போமென்றுசொல்லி அந்தலோகமாதாவாகிய ருக்குமணிதேவியாரு
ஞ்சிரித்து ஒருதொளசி தளத்தைக்கையிலெடுத்துக்கொண்டு அஷ்டா
க்ஷசரமந்திரத்தை உச்சரித்து அநேகமாயிரங்கணக்கில்லாத திரவியப்
பொதிகளைப்போட்டும் எழும்பாத அந்தத்தட்டின்பேரில்வைத்தாள்.
அதுகண்டு மகத்துக்கு மகத்தாகவும் அணுவுக்கு அணுவாகவும் விள
ங்குகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவானுஞ்சிரித்து அந்தத்துளசிதளம் தமக்கு
ப்பிரீதியானபடியினாலே சத்தியபாமைமுதலான தேவிமார் களுக்கு
முன் ருக்குமணிதேவியாரை மேன்மைப்படுத்தவும் நாரத முனிவரு
டையகபடத்தையடக்கவும் திருவுளத்தில்நினைந்து தம்முடைய பலத்
தையடக்கி தாம் எழுந்தருளியிருக்கின்ற தட்டைமேலெழும்பச்செய்
து துளசிதளமிருக்கின்றதட்டைக் கீழாகச்செய்துவிட்டார். அதுகண்
டு அந்தஸ்திரீகளெல்லாரும் ருக்குமணிதேவியை மெச்சிக் கொண்டா
டினார்கள். அப்பொழுது ருக்குமணிதேவியாரும் புன்சிரிப் புடனே
அந்தத்துளசிதளத்தையெடுத்து நாரதமுனிவருடைய கையிற்கொடுத்
துப் போய்வாருமென்றுசொல்லி அந்தநாரதருக்கு நமஸ்காரம்பண்
ணி அனுப்பிவிட்டு தன்னுடையபுருஷனை அழைத்துக் கொண்டு தன்

னுடைய அரமனைக்குப்போய்விட்டாள் அதுகண்டு சத்தியபாமைமுதலானதேவிமார்கள்விசனப்பட்டு நாமெல்லாரும் நம்பியிருக்க அந்தருக்குமணிதேவிவந்து ஏதோசூதுபண்ணி நமதுபுருஷனை அழைத்துக்கொண்டுபோனாள் நம்முடையபாக்கியம் இப்படி யிருந்து விட்டதென்றுசொல்லிக் கொண்டார்கள் நாரதமுனிவரும் அந்தத் துளசிதளத்தைத்தவாயில் போட்டுக் கொண்டு தம்முடைய ஸ்தானத்திற்குப் போய்விட்டார்.

கேட்டீரோ ஜெனமேஜெய மஹா ராஜாவேயென்று சொல்லி அப்பால் சத்தியபாமை வீட்டில் நடந்த சவிஸ்தாரத்தைச் சொல்லுகின்றார் கேளுமையா ராஜேந்திரா அப்படிசத்தியபாமையும்நாரதனைப்பார்த்து ஐயா நீர் பூர்வத்திலொருதரம்வந்து மோசம் பண்ணினதுபோல இப்போதும் ஏதோ மோசம் பண்ணவந்திருக்கிறீர் நல்லது எல்லாந்தெரியுமென்றுசொல்லி தன்னுடைய அரமனைக் குள்ளே அழைத்துக்கொண்டுபோனாள். அப்பொழுது சப்பிரகூட மஞ்சத்தின் மேரில் பவளித்துக்கொண்டு பீதாம்பரத்தினால் முக்கா டிட்டுக்கொண்டு குறுகுறுமென்று கொறக்கையிட்டு நித்திரைசெய்கிறது போலிருக்கின்ற அந்தக்கபடநாடக சூஸ்த்ராவதாரியான ஸ்ரீகிருஷ்ண தேவரானவர் நாரதர்சொன்ன கபடவார்த்தைகளெல்லாங்கேட்டுக்கொண்டிருந்து தனக்குள்ளேதானே சிரித்து அந்தநாரதமுனிவர்சமீபத்தில் வந்தபோது அதிகமாகக் கொறக்கைவிட்டுச் சற்றேபுரண்டு திரும்பிக்கண்ணைத்திறந்துபார்த்துஒன்றுந்தெரியாதவனைப்போல நாரதரோ வந்தாரென்று திடுக்கிட்டு மஞ்சத்தைவிட் டெழுந்திருந்து நமஸ்காரம்பண்ணி வாருமையாவென்று நாரதனை அழைத்து ஒருரத்ந பீடத்தின்மேரில் உள்க்காரவைத்து அந்தநாரதருக்கு அர்க்கியபாத்திய முதலான உபசாரங்களாற் பூசைபண்ணி அவனைவெகுவாகத் தோத்திரம் பண்ணிக்கொண்டாடினார். அதுகண்டுநாரதரும் தமக்குள்ளே தாமே சிரித்து சர்வாந்திரியாமியான இந்தப்பகவானுடையமகிமையை நம்மாலறியக்கூடுமோ? நாம் இவருடையமகிமையையறியாமல் இவிடத்திற்குவந்து வெட்கப்பட்டோம் இந்தப்பகவான் எந்த இடத்திலும் சர்வபரிபூரணராய் வியாபித்திருப்பா ரென்று தம்முடைய உள்ளத்திலெண்ணிக்கொண்டு சற்றுநேரம் அவிடத்தில் பேசிக்கொண் டிருந்து பிற்பாடு அந்தச் சத்தியபாமை ஸ்ரீகிருஷ்ணதேவர் இவர்களிருவரிடத்திலும் செலவுவாங்கிக்கொண்டு வெளியேவந்து அந்த நாரத ரானவர் இன்னமற்றுமுண்டானதேவிமார்கள் வீட்டிலும்நுழைந்து பார்க்கையில்ஒருவீட்டில்சாப்பிடுகிறதும் ஒருவீட்டில் பேசுகிறதும் ஒருவீட்டில்திருநாமந் தரித்துக்கொள்ளுகிறதும் ஒருவீட்டில் ஸ்நானம்பண்ணுகிறதுமாக அந்தத்தேவன் எந்த இடத்திலும் வியாபித்து அந்தந்தேவிமார்களுடைய இருதயத்தில் நம்முடையபுருஷன் நம்மைவிட்டுப்பிரிந்து எங்கேயும்போகிறதில்லையென்று நினைத் திருக்கும்படி

திருவிளையாடல்பண்ணிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ண பகவானைப் பார்த்து நாம் இவருடைய மகிமையைக் கொஞ்சமாகிலும் யோசித்துப்பாராமல் இவரிடத்தில்வந்து கலகம்பண்ணவந்தோம் நம்முடைய கலகம் இங்கே செல்லமாட்டாது வீணாகவந்து வெட்கப்பட்டோம் இனிமேல் இங்கேவரப் போகாதென்று நினைத்துக்கொண்டு மறுபடியும்தர்ம்மநந்தனருடைய யாகசாலைக்குவந்து விட்டார்கள்.

கேட்டீரோ ஜெனமேஜெய மஹாராஜாவே! இப்பால் அந்தத் தொம்பதிகள் அறுபத்துநால்வரும் வெள்ளையானையின் பேரிலேறிக்கொண்டு தங்கக்குடங்களிற் கங்காதீர்த்தத்தை ஏந்திக்கொண்டு மகாசம்பிரமத்துடனேவந்து யாகசாலையைச்சேர்ந்து ஆனைகளை விட்டிழிந்து அவரவர்கள்கொண்டுவந்த தீர்த்தக்குடங்களை வேதவியாசபகவானிடத்தில் ஒப்புவித்தார்கள். அதுகண்டு அந்தவியாசபகவானும் அந்தத்தங்கக்குடங்களையெல்லாம் மந்திரபூர்வகத்துடனே வாங்கியாகசாலைக்குள்ளேவைக்கச்சொல்லி ஒருபக்கத்தில் பதினெட்டுவகைமேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கவும்; ஒருபக்கத்தில் பிராமணர்களும் ரிஷியீஸ்வரர்களும் இருந்துகொண்டு வேதபாராயணம்பண்ணவும் இப்படிப்பட்டவைபவத்துடனே அந்தவியாசபகவானுனவர் பகதலப்பிரீயமுனீந்திரருடைய உத்தாரப்படிக்கு தர்ம்மபுத்திரரையும் திரௌபதைதேவியையும் அழைப்பித்து நல்லசுபமுகூர்த்தத்தில் அவர்களிருவரையும் கிழக்குமுகமாய் உள்க்காரவைத்துகங்காதீர்த்தத்தினால் இரண்டுபேருக்கும் ஸ்நானஞ்செய்வித்து நல்லவஸ்த்ராபரணங்களினால் அவர்களையலங்காரம்பண்ணி கந்தபுஷ்ப அக்ஷதைகளினால் சிங்காரித்து பிற்பாடு யாகசாலைக்குட்பிரவேசித்து அங்கே அத்திப்பலகையால் ஓராசனம்போடுவித்து அந்தஆசனத்தின்பேரில்தர்ம்மநந்தனரைத் திரௌபதாசமேதராய் உள்க்காரப்பண்ணிதர்ம்மபுத்திரருக்குத் தெர்ப்பையினால்பவித்திரம்போடுவித்து அந்தத் தர்ம்மநந்தனருடையகையினால் சகலசமித்துக்களையும் மந்திரபூர்வகத்துடனே யாகதண்டத்திற்போடுவித்து அப்பால்அக்கினிதேவனைப்பிரார்த்தனைபண்ணி அந்த யாககுண்டத்தில் நிறுத்தி அநேகமாயிரம் நெய்க்குடங்களை அழைப்பித்து அந்தநெய்கள் முழுதும்ஆனைத்தும்பிக்கையிலிருந்து ஜலம்பொழிகிறதுபோல தர்ம்மபுத்திரருடைய கையினால்அந்தஹோம குண்டத்தில் பொழிவித்து பஞ்சதிர வியங்கள் நவதானியங்கள் முதலான வஸ்துக்களையும் அந்த ஹோம குண்டத்தில் ஏராளமாய் நிறைவித்து வேதகோஷ்டமானது சமுத்திரகோஷ்டத்திலும் அதிகமாய் முழங்கப் பண்ணிவைத்துஅந்தச்சமயத்தில் வியாச பகவானும் பகதலப்பிரீய முனீந் திரரை அந்த யாகத் திரந்துப் பிர்ம்மாவாக்கி வசிஷ்டர் முதலான பிர்ம்மரிஷிகள் ஒன்பது பேரைச் சுத்தகரிஷியர்களான ரித்துவிசர்களாகச்செய்து சோமயாஜிகளாய் ஆறுரிஷிகளை ஏற்படுத்திவைத்து தாம் புரோகிதராகத்தவு

மியருடனே சகாயமாயிருந்துகொண்டு அஸ்வமேதயாகத்திற்கு எத்தனைவிதத்தினால் ஓமஞ்செய்விக்கவேண்டுமோ அத்தனை விதத்தினாலும் அந்தத்தர்ம்மநந்தனருடைய கையினால் ஹோமம்பண்ணுவித்தார்கள் அப்பொழுது அக்கினிதேவனும்மகாசந்தோஷகரமாய்அந்த ஹோமகுண்டத்திற் பிரகாசித்துவிளங்கினான். அந்தஹோமப் புகையானது ஆகாசமுழுதும்பரவிச் சொர்க்கலோகத்திலும்போய்ப்புகுந்தது அதுகண்டு தேவேந்திராதி தேவர்களெல்லாருஞ் சந்தோஷமடைந்து ஆகாசவீதியில் வந்துநின்றார்கள். இப்படிசகலவைபவங்களுடனே அந்த தர்ம்மநந்தனரும் வியாசபகவானுடையசொற்படிக்கு யாககுண்டத்திற் பிரகாசிக்கின்ற அக்கினியில்சமித்துமுதலானவஸ்துக்களையெல்லாம் ஆகுதிபண்ணிவைத்து பிற்பாடுவியாசபகவானுடையஉத்தரவின்பேரில் அஸ்வமேதக்குதிரையை வீமசேனனால் அழைப்பித்து அவிடத்தில் ஒருகாட்டுமுருக்கமரத்தை யழைப்பித்துஅதைச் சிற்பாசாரிகளால் இழைப்பித்து ரதமாகநிறுத்தி அந்தரதத்தைக் கந்தபுஷ்ப அக்ஷதைகளினால் பூசைபண்ணி பிற்பாடு எருக்கநாரா லாகிய கயிற்றினால் அஸ்வத்தை அந்தரதத்தில்கட்டிவைத்து அதின்பிறகு அந்தஅஸ்வத்தைத்தர்ம்மநந்தனரும் வேதமந்திரங்களினால் கந்தபுஷ்ப அக்ஷதைகளாற்பூசித்து இரண்டு கைகளையுஞ் சிரசின்பேரில் அஞ்சலியாகக்கூப்பிக்கொண்டு அந்தஅஸ்வத்தைப்பார்த்து ஓய் உத்தமஅஸ்வமே நீ என்னுடைய விண்ணப்பத்தைக்கேள் அஃதென்ன வென்றால் நான் இந்தஹோமாக்கினியில் உன்னைஆவாகம் பண்ணி தேவர்களுக்குப் பிரீதியாய் அவிர்ப்பாகங்கொடுத்து நான்பரிசுத்தனாகவேண்டும் அதுவல்லாமலும் நான் உன்னுடையசகாயத்தினால் திவ்விய சரீரத்தைப்பெற்றுக் கீர்த்திப்பிரதாபத்தை யடையவேண்டும் இப்படிசெய்தால் நீயும்உன்னுடைய அஸ்வதேகத்தைஇந்தஹோமாக்கினியிற் பிறிதிபண்ணுவித்து வேறேதிவ்வியசரீரத்தை பெற்று என்றைக்கும் அழிவில்லாதபதவியிற்சேருவாய்ஆகையால்நீசந்தோஷமாகஉத்தரம்பண்ணினால் நான்அப்படிசெய்கிறேன் இது உனக்குச் சம்மதமாயிருப்பதும்இல்லாததும் எனக்குத்தெரிவிக்கவேண்டும் ஓய் அஸ்வமேமேயென்றுசொல்ல. அதுகேட்டு அஸ்வமுஞ்சந்தோஷப்பட்டு இரண்டுசெவியும் அசைந்தாட முன்னங்காலிரண்டையும்உயரயெடுத்துக் கொண்டுபவளம்போற் பிரகாசிக்கிறவாயைத்திறந்து எழாரவங்களைச்செய்தது, அதினுடையஇரண்டுகாதின்வழிகளிலும் அமிர்தமானதுகுபீல்குபீலென்று தாரைதாரையாய்வடிந்தது, அதினுடையமுகமலர்ச்சியானது பூர்ணச்சந்திரவிம்பம்போற்பிரகாசித்தது. அதுகண்டு அந்தச்சபையிலிருந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலானவர்களெல்லாம் இது என்னகாரணமோவென்றுசொல்லிக்கொண்டார்கள். அந்தச்சமயத்தில் அங்கிருந்தநகுலராஜனானவன் அஸ்வலக்ஷணமும் அஸ்வத்தினுடைய இருதயமும் அஸ்வபாஷையும் அறிந்திருக்கிறவனாதலால் அந்த அஸ்வத்தி

னுடையசைகைகளெல்லாந்தெரிந்து சந்தோஷித்தனாய் அந்தச்சபை
யைப்பார்த்து ஓ பிர்ம்மரிஷிகளே! தேவரிஷிகளே! ராஜாக்களே இ
ந்தஅஸ்வத்தினுடைய கருத்தைக்கேளுங்கள் அஃதென்னவென்றால்
தர்மநந்தனரானவர் இந்த அஸ்வத்தைவேண்டி மனுவு பண்ணிக்
கொண்டகாரியத்தைப்பற்றி இந்த அஸ்வமும்தர்மநந்தனனைப்பா
ர்த்துசந்தோஷிப்பட்டு ஓ தர்மபுத்திரமஹாராஜாவே! தேவரீர்சொ
ன்னவார்த்தை எனக்குச்சந்தோஷமாச்சுது என்னுடைய வம்சமெல்
லாம்புண்ணியலோகத்தைப் பெறுகின்ற காலமுண்டாச்சுது ஆதலால்
தேவரீர்தாமசப்படுத்தாமல் என்பேரில் கிருபைசெய்து இந்தமஹா
மகுண்டத்தில் என்னைஆவாகனம்பண்ணிதேவர்களுக்குப்பிரீதியாய் அ
விர்ப்பாகங்கொடுத்து எம்மைரக்ஷித்து நீர் இந்தப் பூமண்டலத்திற்குக
மாயிருந்து கீர்த்திப்பிரதிஷ்டையை யடையும் நானும் சுவர்க்கலோக
த்திற்குப்போய்ச்சேருகிறேன் நீர் இப்போது இவ்வளவுஉபகாரம்பண்
ணிரக்ஷியுமையா வென்று சொல்லினதென்றுசொல்ல, அதுகேட்டு அந்
தச்சபையிலிருந்தவர்களெல்லாம் மிகுந்த சந்தோஷத்தை அடைந்து
நகுலனுடையசாமர்த்தியத்தைப் புகழ்ந்துகொண்டாடினார்கள்.

அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானும் நகுலராஜனைப்போய் தழு
விக்கொண்டு ஓ மைத்துனா! நீர் சகலபாஷைகளும் அறிந்திருக்கிறீரெ
ன்றுபரிகாசம்பண்ணினதுபோலக்கொண்டாடினார். அப்போது தர்
மநந்தனரும் தம்பியாகிய நகுலராஜனுடைய வல்லபத்திற்குமெச்சி
ச்சந்தோஷமடைந்து வியாசபகவானுடையஉத்தாரப்படி அந்தஅஸ்
வத்திற்கு தூபதீபங்கொடுத்து அநேகவிதமாகப்பூசைபண்ணி தோத்
திரநமஸ்காரங்கள்செய்துபிற்பாடு அந்தஅஸ்வதலைதக்கண்டிக்கும்படி
பீமசேனனைப்பார்த்து சைஞையாகச்செலவுகொடுத்தார். அந்தச்சம
யத்தில் அதினுடைய இரண்டுகாதிலுமிருந்து அமிர்தமானது குபீல்
குபீலென்று கெங்கையாய்வடிந்தது, அதுகண்டுபீமசேனனும்மகா
உச்சாகத்துடனேஎழுந்து நின்று அந்தச்சபையிலிருக்கின்றரிஷியீஸ்வ
ரர்களிடத்திலும்ஸ்ரீக்ருஷ்ணபகவானிடத்திலும் தர்மநந்தனரிடத்தி
லும் உத்தாரம்பெற்றுக்கொண்டு காட்டுமுருக்கமரத்தினாற் பண்ணி
னகத்தியைஉருவிக்கொண்டு அந்தஅஸ்வத்தினுடையசிரசில்வைத்து
ஒருதரம் ஓங்கிவீசினமாத்திரத்தில் அந்தஅஸ்வத்தினுடையசிரசானது
அறுபட்டுப் பூமியில்விழாமலும் உதிரம்வடியாமலும் அமிர்தம்வடி
யும்படி ஜீவ்வென்று ஆகாசவீதியிலெழும்பி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை
க்கொண்டாடிக்கொண்டு சூரியமண்டலத்திற்குச் சமீபமாகப் போய்
மறைவாய்ப்போய்விட்டது, அந்தஅதிசயத்தையெல்லாந்தேவகணங்
களும் ரிஷிகணங்களும் ராஜகணங்களுங்கண்டு ஆச்சரியப்பட்டு இந்த
அஸ்வத்தினுடைய பாக்கியந்தான் எப்படிப்பட்டதோவென்றுசொல்
லிசந்தோஷமடைந்தார்கள். ஆகாசவீதியில் தேவதுந்துமியும் திம்தி
மென்றுமுழங்கியது, தேவர்களுஞ் சந்தோஷகரமாய்ப் பாரிசாத

புஷ்பங்களைச்சலசலவென்று வருஷித்தார்கள். கந்தர்வர்கள் பாடினார்.
ஊர்வசிரம்பை மேனகை திலோத்தமை முதலான தேவஸ்திரீகளெ
ல்லாம்நடனம்பண்ணினார்கள். இந்திரன்முதலான தேவர்க்களெல்லா
ம்அவிர்ப்பாகம் வாங்கவேண்டுமென்கிற சந்தோஷத்தினால் உச்சாகத்
துடனே தேவதாமகோச்சவங்களை யெல்லாம் நடத்திவிட்டு எங்கேயி
ருசிப்போகின்றதோவென்றுஒருவர்க்கொருவர்முன்னிட்டுவந்து கண்
களைச்சிமிட்டாமல் தர்ம்மபுத்திரருடைய யாகசாலையைநோக்கிக்கொ
ண்டுநின்றார்கள். பிர்ம்மாருத்திரன்முதலானவர்களும் அந்தப்படியே
எச்சரிக்கையாய் வந்திருந்தார்கள். அப்போது கபடநாடகசூஸ்த்ராவ
தாரியான ஸ்ரீகிருஷ்ணபகவானும் தம்முடையபாகத்தைக் கொடாம
ல்எங்கே ஏமாற்றிவிடுகிறார்களோவென்று நினைத்து எல்லாருக்கு முன்
னுதாகப்போய் அஷ்டதிக்குப் பாலகர்களுடனேயிருந்துமகாராஜாக்கி
ருதையாய் தர்ம்மபுத்திரருடைய முகத்தையேபார்த்துக்கொண்டிரு
ந்தார்.

கேட்டீரோஜெனமேஜெயமஹாராஜாவே! அப்பால் தர்ம்மபுத்
திரருடைய உத்தரவின்பேரில் அந்த யாகசாலைக்குநடுவே முருக்கம
ரத்தில் எருக்கநாராலாகிய கயிற்றினால் கட்டியிருக்கின்ற அஸ்வத்தின்
சரீரத்திலுள்ளமாமிசத்தை பீமசேனனால் துண்டுந் துண்டமாய்வயிர
ம்போலும்பவளம்போலும்புஷ்பம்போலும் துண்டித்துதர்ம்மபுத்
திரர்கையிற்கொடுக்க, அவரும் அதுகளைவாங்கி வியாசபகவான்சொல்
லுகிறமந்திரபூர்வகத்துடனே வடவாமுகாக்கினிபோலதகத்தகாயமா
ய்ஆகாசபரியந்தம் கொழுந்துவிட்டுப் பிரகாசித்துஎரிகின்றஅக்கினி
யிற்போட்டுக்கொண்டிருந்தார். அக்கினிதேவனும் அதுகளைமகாபிரி
யமாய் ஏற்றுக்கொண்டுதம்முடையபக்கத்தில் ஒருகும்பலாகச்சேர்த்
தார். அதுகளிலிருந்துமகாதெய்வீகமான பரிமளமுண்டாச்சுது, அ
ப்போது தர்ம்மநந்தனரும் அந்த அஸ்வத்தினுடைய சரீரத்திலுள்ள
எலும்புகளையும் அப்புறம்இப்புறம் சேதமாய்ப்போக வொட்டாமல்
துண்டித்து அக்கினியிற்போட்டு முடிவில் சகலமுந்தேவதா பிரீதியா
க்கிச்சுவாகாவென்று ஹோமம்பண்ணினார், அந்தப்புகையானது ஆகா
யமட்டா யெழும்பிச்சுவர்க்கபூமியையுங்கடந்து அப்பால்பிர்ம்மலோ
கத்திலும்போய்நிறைந்தது, அப்போதுவியாசபகவானும்தர்ம்மபுத்
திரருடையகையினால் முறைமைப்படி சகலதேவர்க்களுக்கும் அந்த
அவிர்ப்பாகத்தைக் கொடுக்கும்படி உத்தேசித்துதம்முடையசமீபத்
திலிருக்கின்றபகதலப்பிரீயமுனீந்திரருடைய அனுமதியின்பேரில் மு
தலாவது சாம்பவமூர்த்தியை அழைக்க அதுகேட்டு அவரும்மகா சந்
தோஷகரமாய் சிவகணங்களுடனேபுறப்பட்டு விக்கினேஸ்வரர்குமா
ரஸ்வாமி நந்திகேஸ்வரர் பிருங்கிரிஷிமுதலானவர்களும் புடைசூழத்
தக்கதாககரிஷபவாகனருடனாய்வந்து அங்கே அக்கினிதேவன்வசத்திலி
ருக்கிறதம்முடையபங்காகிய அவிர்ப்பாகத்தைவியாசபகவா னெடுத்

துதர்ம்மபுத்திரருடையகையினாற்கொடுப்பிக்க, அதைஅந்தச்சாம்ப
வமூர்த்தியுஞ் சந்தோஷகரமாய் வாங்கிக்கொண்டு தர்ம்மபுத்திரரைப்
பார்த்துஇந்த தர்ம்மராஜாவானவர் எந்தநாளுஞ் சுகஜீவியாய் வாழ்
ந்திருக்கக்கடவரென்று ஆசீர்வாதம்பண்ணிவிட்டுதம்முடையஇடமா
கியஸ்ரீகயிலாசத்திற்கு எழுந்தருளிப்போனார்.
அப்பால்இரண்டாவது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையழைத்து அவருக்கும்
அந்தப்படியே அவிர்ப்பாகத்தையெடுத்துத்தர்ம்மபுத்திரருடையகை
யினால்கொடுப்பிக்க அதைஅவரும் வாங்கிக்கொண்டுசந்தோஷமாய்த
ர்ம்மபுத்திரரைப்பார்த்துஇந்தத்தர்ம்மநந்தனர் சதாகாலமும்பல்லா
ண்டு பல்லாண்டாய்வாழக்கடவரென்று ஆசீர்வாதம்பண்ணியருளினார்
அப்பால்மூன்றாவதுசத்தியலோகநாயகராணபிர்ம்மதேவரையழைத்
து அவர்பங்காகிய அவிர்ப்பாகத்தையெடுத்துத் தர்ம்ம நந்தனருடை
யகையினால்கொடுப்பிக்கஅதை அவரும்வாங்கிக்கொண்டுஆனந்தசித்த
ராய் தர்ம்மபுத்திரரைப்பார்த்து இந்தத் தர்ம்மபுத்திரர் என்னாளுஞ்
சிரஞ்சீவியாயிருக்கக்கடவரென்று ஆசீர்வாதம் பண்ணிவிட்டு தம்மு
டைய ஸ்தானமாகிய பிர்ம்ம லோகத்திற்கு அம்ச வாகன ரூடராய்
எழுந்தருளிப்போனார். இந்தப்பிரகாரம் பிர்ம்மா- விஷ்ணு- ருத்திர
ன்- என்கின்ற மும்மூர்த்திகளுக்கும் அவிர்ப்பாகங்கொடுத்து அவர்
களுடைய ஆசீர்வாதங்களையுந் தர்ம்மநந்தனர் கைக்கொண்ட பின்பு
வியாசபகவானும் சந்தோஷித்து இந்திரன்முதலான அஷ்ட திக்குப்
பாலகர்களையும் முறைமைப்படி வரிசைக்கிரமமாயழைத்து அவரவர்
களுடையபங்கை எடுத்து அவரவர்களுக்கு திருப்தியாகும்படி தர்ம்
மபுத்திரருடைய கையினாற் கொடுப்பித்து அவர்களை யெல்லாஞ் சந்
தோஷகரமாயனுப்பிவிட்டு பிறகு யக்ஷர்- கின்னரர்- கருடர்- காந்தர்
வர்- சித்தர்- வித்தியாதரர்- பன்னகர்- அசுவினிதேவதைகள்- ஏகாதச
ருத்திரர்கள்- துவாதசாதித்தர்கள்- நவக்கிரகங்கள்- நவப்பிர்ம்மாக்க
ள் -அஷ்டவசுக்கள்முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களையும்
அழைப்பித்து அவரவர்களுடைய பங்குப் பிரகாரம் அவிர்ப் பாகத்
தையெடுத்து தர்ம்மபுத்திரருடைய கையினால் அவரவர்களுக்குக்கொ
டுப்பித்து அவர்களையெல்லாஞ் சந்தோஷப்படுத்தி யனுப்பிவிட்டுயா
ககுண்டத்தில் ஆவாகனமாயிருக்கின்ற அக்கினிபுருஷனையும் அதிசச
ந்தோஷப்படுத்தி யனுப்பிவிட்டார் பிற்பாடு தர்ம்மபுத்திரரும் வெகு
சந்தோஷத்தையடைந்துதன் னுடையகையினால்அஸ்வமேதயாகத்தை
ச்செய்துமுடித்துப் பரமபவித்திரனாகப் பண்ணின வேதவியாசமு
னிவரையும்பூசைபண்ணி அவருக்குப்பிரதக்ஷிணை நமஸ்காரங்களைச்செய்
து அந்த முனீஸ்வரருக்குந் தக்ஷிணையாகத் தாம் அரசாக்ஷி செய்கின்ற
பூமிமுழுதுந் தாரைவார்த்துக்கொடுத்து அவரைச் சந்தோஷப் படுத்
திவைத்து பிற்பாடு யாககிருதவ்வியராகிய பகதலப் பிரிய முனீந்திர
ரையும் பூசைபண்ணி அவருக்குப் பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து

அவருக்குத்தக்ஷணையாகப் பத்துயானைகளும் இருபது அஸ்வங்களும் ஆயிரம்பாரந்தங்கமுங்கொடுத்து அவனைச்சந்தோஷிப்படுத்திவைத்து பிற்பாடு ரித்து விசர்க ளாகிய ஒன்பதுபேருக்கும் தக்ஷணையாகஒவ்வொருத்தருக்கு ஐந்து ஐந்துயானைகள் பத்து பத்துஅஸ்வங்கள் கோடிவராகன் இதுகளெல்லாங்கொடுத்து அவர்களைச்சந் தோஷிப் படுத்திவைத்து பிற்பாடு சோமபாதிகள் ஆறுபேருக்குந் தக்ஷணையாக எவ்வேழுயானைகள் பதினாலுகுதிரைகள் அறுபதுபாரந்தங்கம் இந்தப்பிரகாரங்கொடுத்து அவர்கள்மனதைச் சந்தோஷிப் படுத்திவைத்து பிற்பாடு மற்றரிஷிகளுக் கெல்லாம் தக்ஷணையாய் ஒவ்வொரு யானை ஒவ்வொருகுதிரை ஐந்துபாரந்தங்கம் இந்தப் பிரகாரமாகக் கொடுத்து அவர்களையெல்லாஞ் சந்தோஷிப்படுத்தி அதிற்சிறிது ரிஷியில் வசர்களுக்குத்தக்ஷணையாக ஒட்டகங்கள் தண்டிகைகள்கொடுத்து அதின் பிறகு பிர்ம்மக்ஷத்திரிய வைசியசூத்திரர்களாகிய நான்கு வருணத்தார்களுக்கும் ஆசைதணியத்தக்கதாக அநேக திரவியங்கள் ஆனைகள்! குதிரைகள், தாசி ஜனங்கள், நவரத்நங்கள் ,வராகன்கள், மோராக்கள் ஆபரணங்களும் போதும் போது மென்னத் தக்கதாகக் கொடுத்து தானம்பண்ணினார்.

அப்போது தேவர்களெல்லாம் ஆகாசவீதியில்நின்று தர்ம்மபுத்திரனைப்பார்த்துக்கொண்டாடி ஒய் தர்ம்மநந்தனு! உன்னுடையகீர்த்தியேகீர்த்தி உன்னுடையபிரதாபமேபிரதாபம் உன்னுடையதர்ம்மமேதர்ம்மம் உன்னுடைய பிரதிஷ்டையே பிரதிஷ்டையென்று புகழ்ந்துபாரிசாதபுஷ்பங்களைச் சலசலவென்று வருஷித்தார்கள். தேவதுந்துமியும் திம்திம்மென்றுமுழங்கியது அப்போது சகலமான பேர்களுந்தர்ம்மநந்தனனைக்கொண்டாடிச் சந்தோஷிப் பட்டார்கள். அப்போதுவியாசபகவானும் தர்ம்மராஜாவைப்பார்த்து ஒய் தர்ம்மநந்தனு! நீர் நமக்கு தக்ஷணையாகக்கொடுத்த பூமியெல்லாம் நமக்கென்ன செய்ய அந்தப்பூமிமுழுதும் நீரேகைக்கொண்டு அதற்குத் தகுந்தவிலையைக்கொடுமென்றுசொல்ல, அதுகேட்டு தர்ம்ம புத்திரரும் மகமேருவைப்போல திரவியத்தைக்கொண்டுவந்து குப்பலாய்ப்போட்டு இதைக்கைக்கொள்ளும் சுவாமீயென்று சொல்ல, அதுகண்டு வியாசபகவானுஞ் சந்தோஷிப்பட்டு தர்ம்மநந்தனனைமெச்சிக்கொண்டாடி அவரிடத்தில்வாங்கின திரவியத்தையெல்லாம் குந்தாதேவிக்குக் கொடுத்துவிட்டார். அந்த அம்மாளும் அந்ததிரவியங்களை யெடுத்துப்பிராமணர்களுக்குத் தானமாகக்கொடுத்துவிட்டாள் இப்படியாகத் தர்ம்மபுத்திரரும் அநேகமாயிரம்பேர்களுக்குத் தக்ஷணைகொடுத்து மூன்று அஸ்வமேதயாகபலனைப்பெற்று மகாசந்தோஷமாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து அநேகவிதமாகத் தோத்திரம்பண்ணி ஒய் ஜநார்த்தனு! ஒய் ஜகத்ரக்ஷகா- ஒய் ஜகநாதா- ஒய் சுவாமீ, நான் அஸ்வமேதயாகஞ்செய்துமுடித்ததும் கீர்த்திப்பிரதாபம் பெற்றதும். தே

வரீருடைய பரிபூரண கிருபையினு லல்லவோ வென்று வெகுவாகக் கொண்டாடி நமஸ்காரம்பண்ணினர். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவா னும் புஞ்சிரிப்பாகச்சிரித்து தர்ம்மராஜாவைப்பார்த்து ஓய் தர்ம்ம நந்தனு! நீரோன் இப்படிநம்மைக்கொண்டாடுகிறீர் நம்மா லொருகாரியமும் நடக்கவில்லை எல்லாம் இந்த வியாசபகவானுடைய அனுக்கிரகத்தினலும் ஸ்ரீமன்நாராயணமூர்த்தியினுடைய கிருபை யினலும் உம்முடைய தர்ம்மகுணத்தி னலும் நடந்ததென்று அந்த பகவான் சொல்ல, அதுகேட்டுச் சகலமான பேர்களுஞ் சந்தோஷிப் பட்டார்கள் அப்போது தர்ம்மநந்தனரும் ஆனந்தபரவசராய் ஸ்ரீகிருஷ்ணபகவா னுடனும் மற்றுமுண்டான ராஜாக்களுடனும்சற்றுநேரம்பேசிக்கொண்டிருந்து பிற்பாடு சகலமான பேர்களையுஞ் சந்தோஷிகர மாய்ப் போஜனம்பண்ணுகிறத்திற்கு வாருங்கோளென்று போஜன சாலைக்குள் அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கெல்லாம் கைகால்சுத்திபண்ணிக்கொள்ளுகிறத்திற்குப் பனிநீர்கொடுப்பித்துப் பிற்பாடு சகல பிராமணர்களுடனும் ரிஷிகணங்களுடனும் ராஜகூட்டங்களுடனும்மந்திரிபிரதானிகளுடனும், தண்டநாயகர்களுடனும், திருதராஷ்டிரன் சஞ்சயன் விதுரன்முதலானவர்களுடனும் தேவாதிதேவனான ஸ்ரீகிருஷ்ணபகவான் பலராமர் சாத்தகி கிருதவர்ம்மன்முதலானயாதவவீரர்களுடனும், பிள்ளைகள் பேரமார் தம்பிமார்களுடனும் தர்ம்மபுத்திரரானவர் மகாசம்பிரமத்துடனே போஜனம்பண்ண உள்க்கார்ந்தார்

கேளுமையா ஜெனமேஜெய மஹாராஜாவே! அதெப்படியென்றல்; மிகுந்தவெண்மையும் மூன்றுமுழவகலமும் நாலுமுழ நிகளமுமுள்ள தலைவாழையிலைகளைப்போட்டு அந்தஇலைகளின்பேரில் சந்தஜலந்தெளித்து பிற்பாடு முல்லையரும்புகள்போல வெண்மையுள்ள சன்னசம்பா அரிசிசாதத்தைப்பரிமாறி அந்தச்சாதமாகிய வெள்ளியமலைக்குப் பொன்மலையாற் சிகரம்வைத்ததுபோலஅந்தச்சாதத்தின் பேரில்துவரம் பருப்பைப்போட்டு அரைப்படி பசுநெய்க்கு நெய்விட்டு அந்த இலைகளைச்சுற்றிலும் ஷட்ருசிவகையாகிய ஆறுவகைப் பொரியலும் நான்குவகைக்கறியலும் இரண்டுவகைதப்பளமும் பதினெட்டுவகைபச்சடியும் ஐந்துவகை ஊறுகாய்களும் அதுவல்லாமல்பஞ்சகச்சாயமும் பணியாரவகைகளும் ஆமைவடைமுதலானதுகளும் நல்லருசிகரமான பழவகைகளும் சீனிச்சருக்கரைகற்கண்டு முதலானதுகளும் இளந்தோய்ச்சலாகிய தயிரும் பரமான்னமும் பரிமாறச் செய்து தர்ம்மநந்தனரானவர் ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலானபேர்களைப்பார்த்து நீங்கள் எல்லாரும் சந்தோஷிகரமாய் வேண்டினமட்டுக்கும் போஜனம்பண்ணுங்கோளென் றுஉபசாரமாகச்சொல்லிஅவர்களுக்குபோஜனம்பண்ணும்படிசெலவுகொடுத்து தாமும் அவர்களுடனே போஜனஞ்செய்து பிற்பாடு இளநீர் நீர்மோர் வெந்நீர் முதலானதுகளைவிரு

ப்பத்தின்படி அவரவர்கள் தாகத்துக்குச் சாப்பிட்டு மகர்சந்தோஷி
த்துடனே எழுந்திருந்து பன்னீரினால் சகலமானபேரும் கைகால்சுத்
திபண்ணிக்கொண்டு மகா ஆடம்பரமாய் முகமல்பட்டினாலாகிய திண்
டுகளின்பேரில் பில்லைத்தலையணைகளின்பேரில் சார்ந்துக்கொண்டுசுக
ந்தபுஷ்பபரிமளாதிகளையணிந்துக்கொண்டு கர்ப்பூரதாம்பூலம் போ
ட்டுக்கொண்டு ஒருவர்க்கொருவர் சந்தோஷமாய் பேசிக்கொண்டு நா
கசுரம் - புல்லாங்குழல் - துத்தி - திருச்சின்னம் - சங்கீதமேளம் - இது
முதலான பதினெட்டுவிதவாத்தியங்கள் முழங்கவும் வெண்பா - கலிப்
பா - கொச்சகப்பா - விருத்தப்பா - அகவற்பா - முதலான பலபாக்க
ளையுமெடுத்துச்சங்கீதவித்வான்கள்கல்லியாணி - பைரவி - கேதாரகௌ
ளமுதலான முப்பத்திரண்டுவித ராகங்களிலும் அதுகளுக்கிசைந்ததா
ளங்களிலுந் தொடுத்து யாழ் வீணை கின்னரமுதலான கருவிகளைக்
கொண்டு பாடவும் ரம்பை - யூர்வசிதிலோத்தமைக்குச சரியான நாட்
டிய ஸ்திரீகளெல்லாம் மகா அபிநயத்துடனே நாட்டியம் பண்ணவு
ம் வேடிக்கைபார்த்துக்கொண்டு மகா உல்லாசமாயிருந்தார்கள்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜாவே! அப்போது அவிடத்
தில் ஒருகீரிப்பிள்ளைவந்து அந்தச்சபையிலிருக்கின்றவர்களைப் பார்த்
து ஓய்சபையார்களே! இந்த தர்ம்மநந்தனர்செய்து முடித்த அஸ்வ
மேதயாகமானது பூர்வகாலத்தில் சத்துப்பிரஸ்தனென்கிற முனீஸ்வ
ரன்செய்தபொரிமாதானத்திற்குஈடல்ல! அஃதெப்படியென்றால் அந்
தச்சத்துப்பிரஸ்தனும் அவன்பெண்சாதியும்பிள்ளையும் மருமகளும்
ஒருவிரதமாய்பவர்ணமிகழித்தபிரதமைமுதற்கொண்டு அமாவாசைப
ரியந்தம் தினந்தோறும் உதயகாலத்தில் எழுந்திருந்து வயல்களுக்கு
ப்போய் சூரியாஸ்தமான மாகிறபரியந்தம்பூமியிலுதிர்ந்து கிடக்கின்
றநெல்களைப் பொறுக்கிக்கொண்டு வந்துசேர்த்து இரண்டு மரக்கா
லானவுடனே அன்றையத்தினம் அந்தநெல்லையுலர்த்தி அரிசியாகக்கு
த்தி பிற்பாடு அந்தஅரிசியைவறுத்தரைத்துமாவாக்கிஅந்தமாவைஐந்
துபங்காக்கி அதிதிக்குஒருபங்கைக்கொடுத்துமற்றநாலுபங்கை அந்த
நாலுபேருஞ்சாப்பிட்டு அதின்பிறகும் அந்தப்படியே பக்ஷ மட்டும்
நெல்லைப்பொறுக்கிக்கொண்டுவந்துசேர்த்து உபவாசமாயிருந்து அ
ந்தநெல்லை முன்சொன்னபடியேமாவாக்கி ஐந்துபங்காகப்பங்கிட்டு
ஒருபங்கை அதிதிக்குக்கொடுத்து மற்றநாலுபங்கையெடுத்துத் தாங்க
ள்சாப்பிடுவார்கள் இந்தப்படி அந்தமுனீஸ்வரன் நடந்துவருங்காலத்
தில்ஒருநாள் பக்ஷத்திினன்றுசேர்த்தநெல்லை உலர்த்திஅரிசியாக்கிவறு
த்தரைத்தால் குறுணிமாவாச்சுது அதை ஐந்துபங்காகப்பங்கிட்டு ஒ
ருபங்கை அதிதிக்குக்கொடுத்து அவனையனுப்பிவிட்டு பிறகுஅந்தநா
லுபேரும் வரிசையாய்உள்க்கார்ந்து இலைகளில் அந்தப்பொரிமாவை
ப்பரிமாறிக்கொண்டார்கள்அந்தச்சமையத்தில்அவிடத்தில்வேறேஒரு
அதிதிவந்தான் அவனைக்கண்டு சத்துப்பிரஸ்தமுனிவரும்எழுந்திருந்

து நமஸ்காரம்பண்ணி அவருக்குத் தன்பங்குமாவைக் கொடுத்தான். அதைவாங்கி அந்த அதிதியானவர்சாப்பிட்டு பசிநீங்கவில்லையே யென்றுசொல்ல. அதுகேட்டுச்சத்துப்பிரஸ்தமுனிவனும்நாமெனங்கே போவேமென்றுவிசாரப்படும்போது அவனுடைய பிள்ளைகண்டு ஓய்பிதாவே! நீரேன்விசாரப்படுகிறீர் நீர் விசாரப்படவேண்டாம் இதோஎன்னுடையபங்குமாவிருக்கின்றதென்று தன்பங்குமாவையு மெடுத்து அந்தஅதிதிக்குக்கொடுத்தான் அதைச்சாப்பிட்டும் அந்தஅதிதி யானவர்இன்னமும் என்பசிதணியவில்லையென்றுசொல்ல. அதைக்கேட்டுசத்துப்பிரஸ்தனும் ஐயா! அதிதியே! இன்னமுந்தேவரீருடைய பசிதீர வில்லையென்றுசொன்னால் நான் எங்கேபோய்க்கேட்கிறதென்று விசனப்படுகையில் அதைக்கேட்டிருந்த குணவதியான அவன்மரு மகளும் ஐயா! நீங்களேன் ஆலோசனைபண்ணுகிறீர் இதோ என்பங்குமாவிருக்கிறதென்று மாமனாராகியசத்துப்பிரஸ்தமுனிவனுக்கு தேறுதல்சொல்லிதன்பங்குமாவையுமெடுத்து அந்தஅதிதிகையிற்கொடுத்தாள் அதைவாங்கி அந்தஅதிதியானவர்சாப்பிட்டு சந்தோஷமடைந்து சத்துப்பிரஸ்தமுனிவனைப்பார்த்து ஓய்சத்தியசம்பன்ன! தர்மகுணாளா! நான் தர்மதேவன்! நான்உங்களுடைய இருதயத்தைச்சோதிக்க ஒருஅதிதியைப்போல்வந்தேன் இப்போது உங்களுடையதயாளகுணத்தை கண்டுமெச்சினேன் நீங்களெல்லாரும் இந்தச்சரீரத்துடனே இந்ததிவ்வியவிமானத்திலேறிக்கொண்டுசுவர்க்கலோகத்திற்குப்போங்கோள் இதோ விமானம்வந்திருக்கின்றதென்றுசொல்லி. அந்தஅதிதியானவர் மாய்கையாய்ப்போய்விட்டார். அப்போதுதானே தேவேந்திரனுடைய சாரதியாகிய மாதலியானவன் ஒருதெய்வவிமானத்தைக்கொண்டுவந்து அவர்களுக்குமுன்னே நிறுத்தி அந்தச் சத்துப்பிரஸ்தமுனிவனைப் பார்த்து ஓய்ஐயா! நீங்களெல்லாரும் இந்தவிமானத்தின்மேலேறுங்கோளென்றுசொல்ல, அதுகேட்டுச் சத்துப்பிரஸ்தமுனிவனும் சற்றுநேரம்ஆலோசனைசெய்துமாதலியைப்பார்த்து ஓய்தேவசாரதியே! என்னுடையவார்த்தையைக்கேள் பூலோகத்திலிருக்கப்பட்ட பிர்ம்ம க்ஷத்திரிய வைசியசூத்திரரென்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தார்களில்எவர்களாகிலும் ஒருவர் அவர்கள்செய்தபுண்ணியபலத்தினால் தெய்வலோகத்திற்குவந்துசேர்ந்து அவிடத்திலுண்டான தேவதா சவுக்கியங்களை யனுபவித்துக்கொண்டுதேவரிஷிகளுடனே கூடிக்கொண் டிருக்கும்போது சிறிதுநாளையில் தேவர்கள்வந்து நீங்கள்பண்ணின புண்ணியமெல்லாம் அனுபவித்துத்தீர்ந்தது, இனிமேல்பூலோகத்திற்குப் போங்கோளென்று அவர்களைப்பிடித்துப் பலவத்காரமாய்தலைகீழாய் விழும்படி பூமியிற்றள்ளிவிடுவார்களல்லவா! ஆகையினால் அப்படிப்பட்ட அற்பகாலசுகத்திற்கு நான்வரமாட்டேன் இன்னுஞ்சிலகாலம்இவிடத்திலேதானே வானப்பிரஸ்தனாயிருந்து கொண்டு தவஞ்செய்து என்றைக்கும் அழியாதபதவியான பிர்ம்மலோகத்தை யடைகிறேன் ஆத

லால், நீ இந்தவார்த்தையெல்லாந் தேவேந்திரனிடத்திற் போய்சொ ல்லென்றுசொல்ல. அதுகேட்டு மாதலியும் அப்படியே அந்தவிமான த்தைத்திருப்பிக்கொண்டு அமராவதி பட்டணத்திற்குப்போய் அந்த வார்த்தையெல்லாந் தேவேந்திரனுடனே சொன்னான். அதுகேட்டு தேவேந்திரனும் சத்துப்பிரஸ்தமுனிவனுடைய வார்த்தைக்குமெச்சி அந்தமாதலியைப்பார்த்து அப்படியானால் தர்ம்மதேவனுடையசொ ல்லுக்குப் பிசகுவரலாகுமோ? நல்லது நீபோய்அந்தச்சத்துப் பிரஸ் தமுனிவனைக் குடும்பத்துடனே விமானத்திலேற்றிக்கொண்டுசத்திய லோகத்திற் கொண்டுபோய் விட்டுவாவென்று செலவுகொடுத்தனுப்பி னான், அதுகேட்டு மாதலியானவன் மறுபடியும் பூலோகத்திற்கு வந் துசத்துப்பிரஸ்தமுனிவனைக்கண்டு தெண்டனிட்டு ஐயா! உங்களுடை யகருத்தின்படியேமேகவாகனனாகியதேவேந்திரன்செலவு கொடுத்தா ர்ஆதலால் தேவரீர்குடும்பத்துடனே அதிசீக்கிரத்தில் இந்த விமானத் திலேறிக்கொண்டு பிர்ம்மலோகத்திற்கு வாருங்கோளென்று சொல்ல அதுகேட்டுச் சத்துப்பிரஸ்தமுனிவருஞ் சந்தோஷித்துபெண்சாதிபி ள்ளைமருமகள்இவர்களுடனேகூட அந்த விமானத்தின் பேரிலேறிக் கொண்டு சகலதேவகணங்களும் புடைசூழ்ந்துவரத்தக்கதாகச்சத்திய லோகத்திற்குப்போனார். அதுதெரிந்து சத்தியலோகவாசிகளாகியதே வரிஷிகள் பிர்ம்மரிஷிகள் ராஜரிஷிகள்முதலானவர்களும்எதிரேவந்து சத்துப்பிரஸ்தமுனிவரை ஆலிங்கனம்பண்ணிக்கொண்டுமகாவைபவ த்துடனே பிர்ம்மலோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோனார்கள் அ ந்தஇந்திரசாரதியாகிய மாதலியும் அவர்களைக்கொண்டுபோய்பிர்ம்ம லோகத்தில்விட்டுவிட்டு விமானத்தைத் திருப்பிக்கொண்டு மறுபடியு ஞ்சுவர்க்க லோகத்திற்குப்போனான். செட்டியார்களே சபையார்களே! அந்தச்சத்துப்பிரஸ்தமுனிவன் தானம்பண்ணினபொரிமாவில்ஓர் அ ணுமாத்திரம் என்சரீரத்தில் விழுந்தபடியினால் என்னுடைய சரீரம் ஒருபுறம்பொன்னாச்சுது, மற்றஒருபுறமும் எப்போதுபொன்னாகு மோவென்று தர்ம்மபுத்திரர்செய்கிற யாகத்தைக் கேள்விப் பட்டுவந் தேன் இந்தயாகத்தினால் என்னுடையசரீரம் பொன்னாகாமற்போச்சு து ஆகையினால் அந்தச்சத்துப்பிரஸ்த முனிவன்செய்த தானத்திற்கு முன் இந்ததர்ம்மநந்தனர்செய்த தானஞ்சரியல்லவென்றுசொல்லி அ ந்தக்கீரிப்பிள்ளையானது அங்கேகிடக்கின்றஎச்சிலிலைகள்பேரில் விழுந் துபுரண்டு அதுகளால் ஒருபயனையும்பெறாமல் கடைசியில் ஸ்ரீகிருஷ் ணபகவான் போஜனம்பண்ணின இலைமேல் விழுந்துபுரண்டு இரண் டுபுறமும்பொன்னாகி மறுபடியும் அந்தச்சபைக்குவந்து இந்ததர்ம் மநந்தனர்செய்த தானமுஞ் சரிதானென்றுசொல்லிப் போய் விட்ட து, அதுகேட்டு தர்ம்மநந்தனரும்ஆச்சரியமடைந்து ஸ்ரீகிருஷ்ணமூ ர்த்தியைப்பார்த்து ஐயாகிருஷ்ணா! தேவகிநந்தனா! சிசுபாலமர்த் தனா! காளிங்கநிர்த்தனா! கம்சசம்மாரா!பக்தவத்சலா! பரமதயாளா! கோபி

காரமணு! கோவிந்தா! யாதவகுலேஸ்வரா! அந்தக்கீரிப் பிள்ளை சொல்லிப்போனவசனத்தை நன்றாய் ஆலோசித்துப்பார்க்குமிடத்தில் பக்ஷிகள் ஜலஜெந்துக்கள் முதலானஜீவவதைசெய்து தர்ம்மம் பண்ணுகிறதைப்பார்க்கிலும் தபோவிரதமார்க்கமே உத்தமமென்று தோற்றுகின்றதல்லவோ? அதல்லாமலும்பூர்வத்தில் அகஸ்தியமகாமுனிவரும்அன்னதானம்பண்ணி அதனால்அவரும்மகிமையைப்பெற்றார்.திலீபன் மாந்தாதாமுதலான மஹா ராஜாக்களெல்லாரும் அன்ன தானம் பண்ணி அதனால்மகிமையையடைந்தார்கள். ஆகையினால்பூலோகத்திலெவ்வகைப்பட்ட யாகங்கள் எவ்வகைப்பட்ட தானதர்ம்மங்கள் செய்கிறதைப்பார்க்கிலும் அன்னதானஞ்செய்கிறதே முக்கியமாய்க் காணுகின்றது இதுவல்லாமல் எந்ததானங்களிலும் அன்னதானமேயதிகமென்றும் அன்னதாதாசுகீபவாவென்றும்சர்வத்திரசாதாரணமாய்ச் சொல்லுகின்றார்கள். அல்லாதுஒருகாலத்தில் லக்ஷம்பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்விக்கும்போது பேரிகையானது சற்றேறஒருநிமிஷம் அடிபடும் அப்படிக்கிருக்க, நாம் இந்த அஸ்வமேதயாகஞ் செய்யத்தொடங்கினநாள்முதல இதுபரியந்தமும் ராத்திரியும்பகலும் இடைவிடாமல் அநேகமாயிரம் பேரிகைகள் அடிபட்டு முழங்கிக் கொண்டேயிருந்தது, நம்முடையயாகத்திற்குவந்த நான்குவர்ணத்தார் களிலெவர்களும்போஜன பக்ஷணங்களினாலும் வஸ்துவாகனங்களினாலுந்திருப்தியடையாமற் போனவர்களில்லை சகலமானபேர்களுந்திருப்தியடைந்தார்கள். இப்படிக்கெல்லாம் தேவரீருடைய கிருபா கடாக்ஷத்தினால்ஒருவிக்கினமுமில்லாமல்நிர்விக்கினமாய் நடந்தயாகத்தைஅந்தக்கீரிப்பிள்ளையானது மகா அற்பமாகச்சொல்லிப்போனகாரணமென்ன? அதுமெய்யானகீரிப்பிள்ளைதானோஅல்லதுஏதாகிலும்ஒருமுனிவரியினால் மாயாவடிவமாய்வந்தகீரிப்பிள்ளையோ! இதுகளையெல்லாம் விவரமாய் என்னுடைய சந்தேகந்தீரும்படி சொல்லுமையாவென்று கேட்க, அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுந் தர்ம்மநந்தனனைப் பார்த்துப் புன்சிரிப்பாகசிரித்து சற்றேதம்முடையஞானதிருஷ்டியினாலோசித்து ஐயா!தர்ம்மநந்தனா! இப்போதுஇந்தமகாசபையில் அச்சமில்லாமல்வந்து நீர்செய்தயாகத்தை அற்பமாகச்சொல்லிப்போனகீரிப்பிள்ளையை ஆரென்றுகேட்பிராகில் அதைச்சொல்லுகிறேன் அஃதெப்படியென்றால்—

பூர்வத்தில் ஜெமதக்கினியென்பவர் முன்வசித்திருந்த கோபத்தைவிட்டு சாந்தகுணத்தை வகித்துக்கொண்டிருந்தகாலத்தில் ஒருநாள்அவருடைய தகப்பனாருக்குத் திவசம்வந்தது, அன்றையதினம் ஒருபசுவினுடையபாலைப்பாத்திரத்தில்கறந்து கொண்டுவந்து ஓரிடத்திற்பத்திரப் படுத்திவைத்திருக்கும்போது அதுதெரிந்து கோப தேவனும் அவருடையபொறுமையைச்சோதிக்கவேண்டுமென் றெண்ணிஒருமனிதனைப்போல்வந்து அந்தப்பாலைக் குப்புறப் பூமியிற்கவிழ்த்து

விட்டான்! அதுகண்டு அந்தஜெமதக்கினியென்பவர்கோபித்துக்கொள்ளாமல் சாந்தமாயிருந்துவிட்டார். அதுதெரிந்து அவருடைய பிதுர்த்தேவதைகள் கோபங்கொண்டு நீ வியர்த்தமானசிரார்த்தம்பண்ணபடியினால் நீ கீரிப்பிள்ளையாகக்கடவாயென்று சாபமிட்டார்கள். அதுகேட்டு அந்தஜெமதக்கினியும்பயந்து அந்தப்பிதிர்த்தேவதைகளுக்கு நமஸ்காரம்பண்ணி ஐயா! பிதிர்க்களே! இந்தச்சாபம் எந்தக்காலத்தில் விமோசனமாகுமென்றுகேட்க அதுகேட்டு அவர்களும் அவனைப்பார்த்து பூலோகத்தில் எவர்களாகிலும்பண்ணினமகாதானத்தைக்கண்டு அற்பதானமென்றுசொல்லிநிந்திப்பாயானால்அந்தநாளில்இந்தச்சாபவிமோசனமாகிஉன்னுடையகீரிப்பிள்ளைரூபம்போமென்று சொல்லிப்போனார்கள். ஆகையினால்அந்தக்கீரிப்பிள்ளையானது இந்தமகாசபையில்பயப்படாமல்வந்து பெரிமாதனம்பண்ணினபிராமணனுடைய தர்ம்மத்திற்கு இந்தயாகஞ்சரியல்லவென்றுநிந்தனை செய்து தன்னுடையசாபத்தை விமோசனம்பண்ணிக்கொண்டுபோய்விட்டதென்று சொல்லியருளினார். அதுகேட்டு தர்ம்மபுத்திரருஞ் சந்தேகந் தீர்ந்து மகாசந்தோஷத்தையடைந்தார். மற்றுமுண்டானபேர்களுஞ்சம்சயந்தீர்ந்து ஆனந்தமாயிருந்தார்கள்.

கேட்டீரோ ஜெனமேஜெயபூபாலகா! இப்படிதர்ம்மபுத்திரரானவர் மகாசம்பிரமத்துடனே அஸ்வமேதயாகத்தைசெய்துமுடித்து சகலமானபேர்களுக்குந் திருப்தியாகும்படி அபரிமிதமான தக்ஷிணைகள் போஜனகிர்த்தியங்கள்முதலான சர்வஉபசாரங்களுஞ் செய்துமுடிந்தபின்பு அந்தத்தர்ம்மநந்தனரானவர் துரௌபதாதேவியுடனும் தம்பிமார்களுடனும் பந்துஜனங்களுடனும் எழுந்துநின்றுமகாபயபக்திவிநயத்துடனே பகதலப்பிரீயமுனீந்திரர் வேதவியாசர் மார்க்கண்டேயர் நாரதர்- வசிஷ்டர்முதலாக யாகத்திற்குவந்த ரிஷீஸ்வரர்களுக்கெல்லாஞ் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தார் அதுகண்டு அவர்களெல்லாஞ் சந்தோஷமடைந்து ஒருமுகமாய் நின்றுவேதமந்திரங்களைச்சொல்லி இந்த தர்ம்மபுத்திரர் எப்போதும் சகல சவுக்கியராய்த்தேவப்பிராமணவிசுவாசராய் மந்திரிபிரதானிகளுடனும் புத்திரபவித்திரகளத்திராதி சிநேகர்களுடனும் அபிவிர்த்தியுண்டாகி சுகஜீவியாய் வாழ்ந்திருக்கக்கடவனென்று ஆசீர்வாதஞ்செய்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு தர்ம்ம புத்திரர் முதலான ராஜாக்களிடத்திலுஞ் செலவுபெற்றுக்கொண்டு அந்த முனீஸ்வரர்களெல்லாரும் தங்கள்தங்களுடைய ஆசிர மத்திற்குப் போனார்கள். பகதலப்பிரீயமுனீந்திரரும் அந்தப்படியே அவர்களிடத்திலெல்லாஞ்செலவுவாங்கிக்கொண்டு திருப்பாற்கடல்மத்தியமாகிய சுவேததீபத்திற்குப்போய்விட்டார் அப்பால் இவிடத்தில் கிராமப்பிரதிஷ்டை செய்யும்படிநினைத்து சந்திரகாசன்- வீரவர்ம்மன்- மயூரத்துவஜன்- தாமரைத்துவஜன்- அம்சத்துவஜன்- நீலத்துவஜன்- எவ்வர்ணசுவன்-

அநுசாளுவன் - மேகவர்ணன் - முதலானமகாராஜாக்களும் தப்பிமார்களும் - திருதராஷ்டிரனும் - விதுரசஞ்சயர்களும் சர்வாலங்கிருதராய்ப்புறப்பட்டு ரதாரூடர்களாய்நடக்கவும்குந்திதேவி - தேவகிதேவி - ஹோளபதை - சுபத்திரை - ருக்குமணி - சத்தியபாமைமுதலான ஸ்திரீஜனங்களெல்லாரும் நவரத்நமயமான ரதங்களிலேறிக்கொண்டு நடக்கவும் பப்பிரவாகன் - விஷ்வகேது - மேகவர்ணன் - சயிந்தவனுடையகுமாரனான விருதசத்திரன் - பிரத்தியுமனன் - அனிருத்திரன் முதலானகுமாரவர்க்கங்களெல்லாங் குதிரைகளின் பேரிலேறிக் கொண்டு நடக்கவும் அதிற்சிறி துயாதவதுரைகளெல்லாம் மத்தகங்களின் பேரிலேறிக்கொண்டு நடக்கவும் மற்றுமுண்டான தண்டநாயகர்கள் சேநுதிபதிகள் பிரதானிகள் மந்திரிசாமந்திரிகள் தளவாய்கள் அக்குரோணிநாயகர்கள் இவர்களெல்லாம் வண்டிகளிலும் தண்டிகைகளிலும் ஏறிக்கொண்டுநடக்கவும் காலாள்களெல்லாம் பட்டாக்கத்திகள் ஈட்டிகள் வல்லயங்கள்முதலான ஆயுதங்களைக்கையிலிடமாகப்பிடித்துக் கொண்டு அணிவகுத்தாற்போல வரிசை வரிசையாய் நடக்கவும் இப்படிப்பட்ட சகலசம்பிரமத்துடனே தர்ம்மபுத்திர மகாராஜாவானவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியுடனும் பலராமருடனும் ரதாரூடராய்ப் புறப்பட்டு நால்வகைச்சேனைகளும் புடைசூழ்ந்துவரத்தக்கதாக தண்டுவிட்டுநடக்கும்போது வெண்கலப்பேரிகைகள் ஜெயபேரிகைகள் டமாக்கள் தப்பட்டைகள் திடுகு எக்காளை நாகசுரம் பிள்ளாங் குழல். பூரி- தவளச்சங்கு - மணித்தாளம் - மல்லரிமுதலான பதினெட்டுவித வாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கவும் ரம்பை யூர்வசி முதலான தேவதாஸ்திரீகளைப்பார்க்கிலும் அதிசுரூபலாவண்ணியமுள்ள அநேக மாயிரம்நாடகசாலைப்பெண்கள் குப்பல்கும்பலாய் வந்துதர்ம்மபுத்திர மகாராஜாவுக்கு முன்பாகநின்று மகா அபிநயத்துடனே பரத நாட்டியம் பண்ணிக்கொண்டுவரவும் காந்தர்வஸ்திரீகளிலும் அதிக சாமர்த்தியரான ஸ்திரீஜனங்கள் அந்ததர்ம்மபுத்திரருக்கு முன்னே வந்து நின்று தம்புரு, யாழ், கின்னரி, வீணை, ராவணுஸ்தம், முதலான கருவிகளை மீட்டிக்கொண்டு யாவருக்குஞ் சந்தோஷமுண்டாகும்படி வாணசுரங்களைப்பாடிக்கொண்டுவரவும் பாட்டகர்களெல்லாருங் கும்பல் கும்பலாய்வந்து தர்ம்மநந்தனனைப்பார்த்து ஓய் அஸ்திநாபுரேஸ்வரா! குந்திதனையா! அகண்டிதவீரபராக்கிரமா! ஆ! தர்ம்மபுத்திரா வென்றுபுகழ்ந்துகொண்டாடவும் திருச்சின்னங்களின் ஓசையாண்டு பூர்வத்தில் தர்ம்மந்தப்பாமல் பனிரெண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும்செய்துமுடித்து பிற்பாடு தர்ம்மமேஜெயமென்று பதினெட்டுநாள் பாரதயுத்தஞ்செய்து பீஷ்மர், துரோணர்; கிருபர், அஸ்வத்தாமர்; கர்ணன், சல்லியன், சயிந்தவன், பகதெத்தன், அலம்பன், துர்ச்சாதனன், விகர்ணன் முதலான மேட்டான மேட்டிகளாகியசுத்தவீரர்களையெல்லாம் ரணக்களத்திற்கொன்று விரஸ்ட்சுமியை

டைந்து கீர்த்திபெற்ற கிரீட்டியாகிய அர்ச்சுனராஜ னுடைய தமைய
னாகியவீராதிவீரர்வருகிறுரென்றும் அஷ்டதிசைகளிலுமுள்ளராஜாக்
களையெல்லாஞ்செயித்துபிதாவினுடையவார்த்தையைக்கடவாமல் ரா
ஜசூயயாகம்பண்ணிமுடித்துப் பிதாவுக்கு புண்ணியலோகங்கொடுத்த
புண்ணியபுருஷர்வருகிறுரென்றும் துன்மார்க்கரான கலிபுருஷவம்ச
னாகிய துரியோதனன்செய்த இம்சைகளையெல்லாஞ் சகித்துக்கொ
ண்டிருந்து கடைசியில் அந்தமகாபாவியாகிய துரியோதனனனவன்
றத்தனை கபடவஞ்சனைசெய்தபோதிலும் அதுகளையெல்லாம் நிவிர்த்
தியண்ணி தம்பியாகிய வீமசேனனுடைய கையினுல் அவனைக்கொல்
லுவித்த பராக்கிரமபுருஷர் வருகிறுரென்றும் வீராதிவீரரான அர்ச்
சுனராஜனையனுப்பிக் காலகேயநிவாதகவசாளென்கிற ஒன்பதுகோடி
ராக்ஷதவீரர்களை யெல்லாங்கொல்லுவித்து தேவேந்திராதிதேவர்களு
டைய பயந்தீர்த்து நிர்ப்பயமாக்கி ரக்ஷித்தமகானுபாவர் வருகிறுரெ
ன்றும் சகலஜீவகோடிகளுக்கும் மாதாபிதாக்களைப் போலிருந்தொ
ருநாளாகிலும் துக்கப்படவொட்டாமல் காப்பாற்றுகின்ற பரமதயா
ளர்வருகிறுரென்றும் பெரியோர்களிடத்தில் பயபக்திவிசுவாசமுள்ள
வராகியும ராஜநீதிவழுவாதவராகியுமிருந்து ராஜ்ய பரிபாலனம பண்
ணப்பட்ட தேவபோகதுரந்தரீகர் வருகிறுரென்றும ஸ்ரீகிருஷ்ண பக
வானுடைய சகாயத்தினுல் அஸ்வமேதக்குதிரையைவிட்டு அந்தக்குதி
ரையின்பிறகே மகாபராக்கிரமசாலியான அர்ச்சுனராஜனை யனுப்பி
அங்கவங்க- கலிங்க- காளிங்க காஸ்மீர- காம்போஜ- மிலேச்ச- மலை
யாள- பாஞ்சாள- மச்ச- பாண்டிய- சோழ- கர்னாடகமுதலான ஐம்
பத்தாறுதேசங்கள்தோறும அஸ்வமேதக்குதிரையைநடத்துவித்து
அங்கங்கே எதிர்த்துவந்த சந்திரகாசன் வீரவர்ம்மன் முதலான மகா
ராஜாக்களையெல்லாஞ் ஜெயிப்பித்து அவர்கள் கையினுல் அபரிமித
மானகாணிக்கை கப்பங்களைப்பெற்றுக்கொண்டு அவர்களையெல்லாந்
தம்முடையவசமபண்ணிக்கொண்டு மகா வைபவத்துடனே பகதலப்
பிரியமுனீந்திரர் வியாசர்வசிஷ்டர் முதலானமகாரிஷிகள் முன்னிலை
யில்அஸ்வமேதயாகஞ்செய்து முடித்து பிர்ம்மக்ஷத்திரிய வைசியசூத்
திரர்களாகிய நான்குவருணத்தார்களுக்கும ஆசை யடங்கத் தக்கதாக
தக்ஷிணைகள்கொடுத்து அன்னதானம சொர்ணதானமபூதானங்கோதா
னம கன்னிகாதானம வஸ்திரதானமுதலான ஷோடசமகா தானங்கள்
பண்ணி இகத்திலுமபரத்திலுங் கீர்த்திப் பிரதிஷ்டையைப் பெற்றதர்
ம்மசொரூபனுகிய அஸ்திநபுரத்தைப்பரிபாலனம் பண்ணுகின்ற தர்
ம்மபுத்திரமகாராஜாவானவர் வருகிறுரென்றும அஷ்ட திசைகளுஞ்
செவிடுபடுமபடி முழங்கவும வெற்றிச்சங்குகளும ஜெயம ஜெயமென்
றுமுழங்கவும பொற்பிரம்புக்காரர்கள் சேனைகளுக்கு முன்னே நின்
றுமகாதர்ம்மக்கியானராகிய தர்ம்மசொரூபர் பவனிவருகிறுர் விலகி
நில்லுங்கோளென்று (சந்தடிவிலக்கிக்கொண்டுவரவும) இரண்டுபக்க

த்திலும அனந்தமாயிரமபேர்கள் வரிசைவரிசையாய் நின்றுகொண்டு கர்ப்பூரதீவட்டிகள் பிடித்துக்கொண்டுவரவும ஆகாசத்தி லிருக்கின்ற தேவேந்திராதிதேவர்க்கள் மகாசந்தோஷித்துடனே பாரிசாத புஷ்பங்களைச்சலசலவென்று வருஷிக்கவும் குளிர்ந்தகாற்றுவீசவும் இப்படிப்பட்டவைபவத்துடனே தர்ம்மநந்தனர் கிராமப்பிரதிஷ்டை யாகப் பவனிவரும்போது சேனைவெள்ளங்கள் நடக்கின்ற அதிர்ச்சியினால் பூமியதிர்ந்து ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனானவர் இமோர்ப்பர்வதத்தில் உலகமாதாவாகிய உமையவளைத் திருக்கலியாணஞ்செய்துக் கொண்டகாலத்தில் அகத்தியமுனிவரும் அந்தத்திருக்கலியாணத் திற்குப் பொதியமலையைவிட் டெழுந்தருளிவந்தபோது உத்தரதிசையானது தாழ்ந்து தக்ஷணதிசையானது எப்படி உயர்ந்து நின்றதோ அப்படி போல நான்குதிக்கிலுமுள்ள ராஜகூட்டங்களெல்லாம் ஒருமுகமாய்த் திரண்டு நடக்கின்றபடியினால் அப்போது அஸ்தினபுரமானது சற்றேதாழ்ந்து நின்றது அப்படிதாழ்ந்துநின்றதெப்படி இருந்ததென்றால் முன்னால் அர்ச்சுனனானவன் நாரதமுனிவருடைய வாக்கியத்தைக்கடவாமல் தீர்த்தயாத்திரை பண்ணிவருகையில் துவாரகாபுரிக்கு வந்துசுபத்திரையைக்கண்டு கபடசந்நியாசிவேஷமாயிருந்து ஒருவரையுமறியாமல் சுபத்திரையைத் திருடிக் கொண்டுவந்து அஸ்தினபுரஞ் சேர்ந்துபிறகு ஸ்ரீகிருஷ்ணதேவ ரனுமதியினால் கலியாணம் பண்ணிக்கொண்டான். அதை யெல்லாம் பலராமர் கேள்விப்பட்டு மகா கோபங்கொண்டு அந்த துன்மார்க்கனாகிய அர்ச்சுனன் என்னையறியாமல் கபட சந்நியாசி வேஷம் போட்டுக் கொண்டிருந்து என் தங்கையைத் திருடிக் கொண்டு போனா னல்லவா! அவனை நான் கொல்லாமல் விடுகிற தில்லை யென்று மகா ஆக்ருஷித் துடனே வந்து என்னுடைய ஆயுதமாகிய கலப்பையினால் இந்த அஸ்தினபுரத்தைப் பேர்த்துச் சமுத்திரத்தில் தள்ளுகிறேனென்று சொல்லி தம்முடைய கலப்பையினுனியை அஸ்தின புரத்துக் கோட்டை வாசலி லூன்றின மாத்திரத்தில் அந்தக் கோட்டையினுடைய சிகரமானது ஒருபுரந் தலைகிழாகத் தாழ்ந்தது, அதிலே ஸ்ரீகிருஷ்ண பகவானுங் கேள்விப்பட்டு வந்து சமாதானஞ் சொல்லி பலராமருடைய கோபத் தைத் தணித்தார் அதில்பிறகு அவரும் கோபந்தணிந்து சாந்தமாய்க்கலப்பையை எடுத்துக்கொண்டு துவாரகைக்குப்போனார். அந்த அஸ்தினபுரம்எப்போதும்போல் சமமாய்நின்றது. அப்படி இப்போதும் சேனைகளாகியகலப்பையினால் தாழ்ந்தது, இந்தவிதமாய்தர்ம்மநந்தனர் சர்வாடம்பரத்துடனே கிராமப்பிரதிஷ்டைபண்ணி மறுபடியும் நல்ல சுபமுகூர்த்தத்தில் திரும்பி அஸ்தினபுரத்திற்குப்பிரவேசித்து அரமனைக்குவந்துசேர்ந்து ரதத்தைவிட்டிழிந்து சகலஆடம்பரங் களையும் நிறுத்தி அவர்களையனுப்பிவிட்டு விதுரசஞ்சயர்களினால் சந்திரகாசன் முதலாகியசகலமானராஜாக்களுக்கும்வெவ்வேறேவிடுதிகளமர்த்திவை

த்துதாம் தம்பிமார்களுடனும் ஸ்ரீகிருஷ்ணபகவானுடனும் அரமனை
க்குள்ளேபோனர். பிற்பாடுதர்ம்மநந்தனரும் மறுநாள் உதயத்திற்கு
முன்எழுந்திருந்து காலோசிதகாரியமான நித்தியகர்ம்மானுஷ்டான
ங்களைமுடித்துக்கொண்டு சர்வாஅலங்கிருதபூஜிதராய்ப் புறப்பட்டு-த
ம்பிமார்கள் -குமாரர்கள்-மந்திரிசாமந்திரிகள்-பிரதானிகள் பரிவாரங்
கள்புடைசூழ்ந்துவரத்தக்கதாககொலுமண்டபத்திற்குவந்துசேர்ந்து
(ரத்ந) சிம்மாதனத்தின்பேரில்உள்க்கார்ந்துகொலுவாயிருந்தார் அப்
போதுஸ்ரீகிருஷ்ணபகவானும் தம்முடைய நித்தியகருமங்களைமுடித்
துக்கொண்டு சர்வாலங்காரத்துடனேபுரப்பட்டுபலராமர்சாத்தகிமுத
லானயாதவவீரர்களுடனேகொலுமண்டபத்திற்குவந்துசேர்ந்து தர்
ம்மபுத்திரரைக்கண்டுசாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து அவர்போடுவித்த
(ரத்ந)சிம்மாதனத்தின்பேரிலுள்க்கார்ந்திருந்தார்- மற்றுமுண்டான
சந்திரகாசன்முதலான மகாராஜாக்களெல்லாரும் அவரவர்களுடைய
மந்திரிபிரதானிகளுடனேவந்து தர்ம்மநந்தனர் - பலராமர்ஸ்ரீகிருஷ்
ணதேவர்-இவர்களுக்குநமஸ்காரம்பண்ணி பிற்பாடு தர்ம்மராஜாவை
யுங் கிருஷ்ணமூர்த்தியையுஞ்சூழ்ந்து உள்க்கார்ந்தார்கள். அப்போதுச
ந்திரகாசன்முதலானமகாராஜாக்களெல்லாரும் ஸ்ரீகிருஷ்ணபகவானை
யும் தர்ம்மபுத்திரரையும்பார்த்துஐயா!லோகநாயகா! தர்ம்மபுத்திரா
நாங்களெல்லாரும் உங்களுடைய அனுக்கிரகத்தினால் யாகதரிசனைப
ண்ணி அதனால் நாங்கள் அநேகஞ்சென்மங்களில் அறிந்தும்அறியாம
லும்பண்ணினபாவங்களையெல்லாம் போக்கடித்துக்கொண்டு புண்ணி
யபுருஷர்களாய் கிருதார்த்தர்களாகிறோம் எங்களுடையவமிசத்தாரெ
ல்லாரும் புண்ணியலோகத்தை அடைந்தார்கள். அதற்குச்சம்சயமில்
லை நாங்களிவிடத்திற்குவந்துஒருவருஷகாலமாச்சுதே இதுவரையில் எ
ங்களுடைய தேசமெல்லாம் எப்படியிருக்கின்றதோ ஆதலால்நாங்கள்
எங்களுடையதேசத்திற்குப்போய்வருகிறோம்எங்களுக்குச் சந்தோஷ
கரமாய்ச் செலவுகொடுத்தனுப்புங்கோளென்று சொன்னார்கள். அது
கேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவரும்மெய்தானென்றுதர்ம்மநந்தனரைப் பா
ர்த்துஐயா! ராஜேந்திரா! இவர்களெல்லாரும் தங்கள்தேசங்களுக் குப்
போகவேண்டுமென்றுகேட்கிறபடியால் அவர்களுக்குச்செலவு கொடு
த்துஅனுப்பிவையுமென்றுசொல்ல. அதுகேட்டு தர்ம்மநந்தனரும்அ
ப்படியேநல்லதென்றுசம்மதித்து வெகுசந்தோஷத்துடனே ஸ்ரீகிரு
ஷ்ணபகவானுடைய அனுமதியின்பேரில் விதுரசஞ்சயர்களால்(நவர
த்ந) கிரீடங்கள்முதலான பூஷணவகைகளும் சால்வைகள்முதலான திவ்
வியவஸ்திரங்களும்வெகுவாயழைப்பித்துஅர்ச்சுனராஜனுடையகை
யினால் சந்திரகாசன்முதலான ராஜாக்களுக்கெல்லாம் வெகுமதிபண்
ணுவித்து அவர்களுடையமந்திரி - பிரதானிகள் முதலானசகலசேனை
களுக்கும்போதும்போதுமென்றுசொல்லத்தக்கதாக நல்லவஸ்திரா
பரணங்களைவெகுமானம்பண்ணுவித்து அதுவுமல்லாமல் ஒவ்வொரு

ராஜாக்களுக்கு மூன்றுவெள்ளையானைகளும்பஞ்சலக்ஷணங்களுமுள்ள
ஐந்து உத்தமாஸ்வங்களும் ஒருகனகதண்டிகையும் ஒருஜோடு வஜ்ரா
ங்கியும் இந்தப்பிரகாரம் அந்தமகாராஜாக்களுக்கெல்லாம் வெகுமா
னம்பண்ணி அவர்களுடையபட்டபுதேவிகளாகியராஜஸ்திரீகளெல்லா
ருக்கும்மாணிக்கத்தாழ்வடங்கள் - நவரத்தினச்சரடுகள் - நவரத்தினச்
சேலைகள் - முத்துரவிக்கைகள் - பச்சைக்கற்பாவாடைகள் - இதுகளெ
ல்லாம்வெகுமானம்பண்ணி அதுவுமல்லாமல்தண்டிகைகள் வண்டில்க
ள்மூடுபல்லக்குகள் முதலானவாகனாதிகளுங்கொடுத்து தர்ம்மபுத் திர
ரும்மகாசந்தோஷித்துடனேசகலமானவர்களுக்கும் பிரியவசனமாய்
உபசாரணைகள்சொல்லி அவர்களைச்சந்தோஷிப்படுத்தி வைத்து அவர்க
ளைப்பார்த்து ஓமகாராஜாக்களே நீங்களெல்லாரும் மகா புண்ணிய
வான்கள்மகாவீரபராக்கிரமசாலிகள் அப்படிப்பட்ட உங்களையெல்லாம்
இந்தஸ்ரீகிருஷ்ணபகவானுடைய மகிமையினால்நாங்கள்கண்டோம்நீங்
கள்எங்கள்பேரில்எப்போதும்கிருபைவைத்துப்போய்வாருங்கோளெ
ன்றுசொல்லிச் செலவுகொடுத்தனுப்பினார். அவர்களும்வெகுசந்தோ
ஷித்ததையடைந்து தங்கள்தங்கள்மந்திரிகள் பிரதானிகளுடனே கூடிக்
கொண்டு தர்ம்மநந்தனருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கும் பலபத்தி
ராமருக்கும்நமஸ்காரம்பண்ணிவீமார்ச்சுனர்முதலானபேர்களுக்கு
ம்வந்தனைபண்ணி குந்திதேவி-தேவகிதேவி-இவர்களிருவருக்கும் நம
ஸ்காரஞ்செய்து இவர்களெல்லாரும்சுகஜீவியாய்ப்போய்வாருங் கோ
ளென்றுசெலவுகொடுத்தனுப்ப. அந்தப்படியேசந்திரகாசன் முதலா
னமகாராஜாக்களெல்லாரும் அவரவர்களுடையவாகனங்கள் பேரிலே
றிக்கொண்டுதங்கள்தங்கள் சேனைகளுடனே அஸ்தினபுரத்தை விட்டுப்
புறப்பட்டுநடந்தார்கள். குமுத்துவதிபிரபாவதிசண்பகாவதிமுதலான
ராஜஸ்திரீகளெல்லாரும் குந்திதேவி தேவகிதேவிமுதலானவர் களுக்
கெல்லாம் வந்தனைவழிபாடுகள்செய்து அவர்களிடத்திற் செலவுவாங்கி
க்கொண்டு கனகதண்டிகைகள் மூடுபல்லக்குகள் முதலான வாகனங்க
ள்பேரிலேறிக்கொண்டு தங்கள்தங்களுடைய புருஷர்களுக்குப் பின்னு
க நடந்தார்கள் இப்படிசகல தேசத்துராஜாக்களும்வெண்கலப் பேரி
கைஜெயபேரிகை நாகசுரமுதலானபதினெட்டுவகைமேளவாத்தியங்க
ளுந்தாம்தாமென்றுமுழங்கத்தக்கதாக அஸ்தினபுரத்தை விட்டுப்புற
ப்பட்டுநடந்துவெவ்வேறுதண்டுகளாய்ப்பிரிந்து அவரவர்களுடைய ப
ட்டணங்களிற்போய்சேர்ந்தார்கள் இப்பால் அஸ்தினபுரத்தில் தர்ம்மபு
த்திரமகாராஜாவானவர் தமதுதங்கையாகிய துர்ச்சலைக்கும் அவள்கு
மாரனாகியவிருதசந்திரனுக்கும் ஆடையாபரணங்கள் ஆனைகள்குதிரை
கள்முதலானவஸ்துக்களெல்லாம்வெகுமானமாகக் கொடுத்து அவர்க
ளைப்பார்த்து நீங்கள் இனிமேல் சுகமாய்உங்களுடைய சிந்து தேசத்திற்
குப்போய் ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண் டிருந்து இவிடத்திற்
கும்சுபாசுபங்களுக்குவரப்போக இருங்கோளென்றுசெலவுகொடுத்த

னுப்பிவிட்டார். அவர்களும்ஸ்ரீகிருஷ்ணபகவான் தர்ம்மநந்தனர் முத
லானவர்களிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு தங்களுடையசிந்து தேச
த்திற்குப்போய்சேர்ந்து சுகமாயிருந்தார்கள். அப்போதுபப்பிரவாக
னும்சித்திராங்கதையும் உலுவசியும்அஸ்திநபுரத்திற்றானே அர்ச்சுன
ராஜனிடத்திலிருந்து சுகஜீவியாய்வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள் இந்
தப்பிரகாரம் ஐம்பத்தாறுதேசத்துராஜாக்களும் அவரவர்க ளுடைய
தேசத்திற்குப்போய் விட்டபின்பு ஸ்ரீகிருஷ்ணபகவானும்சாத்தகிபல
ராமர்முதலான யாதவவீரர்களுடனே பின்னையும்ஒருமாத வளாக்கு
ம்அஸ்திநபுரத்தில் தர்ம்மபுத்திரரிடத்தில்தானேசகலவேடிக்கைகளு
டனேயிருந்துபிறகுஒருநாள் அந்தப்பகவானனவர் தர்ம்மநந்தனரை
ப்பார்த்து ஓய்தர்ம்மநந்தனு! நாங்களெல்லாரும்இவிடத்திற்கு வந்து
நெடுநாளாச்சுதே அவிடத்தில் துவாரகாபுரியில் வசுதேவர்மாத் திரம்
ஒண்டியாயிருக்கிறாரோ பட்டணம்எப்படியிருக்கின்றதோ தெரியாது
நான் இங்கேதானேயிருந்துவிட்டால் அவிடத்துகாரியபாகங்க ளெப்
படிநடக்கும் அங்கும்இங்குமாயிருக்கவேண்டியது, ஆகையினால்இன்
றையத்தினம்எங்களுக்கு துவாரகாபுரிக்குப்போகும்படி செலவுகொ
டுத்தனுப்பிவையுமென்றுகேட்க, அதுகேட்டுதர்ம்மநந்தனரும் ஸ்ரீகி
ருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஐயாலோகநாயகா! தேவரீர்இன்னஞ் சி
லநாள் இவிடத்திலிருக்கலாகாதோ? ஆனாலும் இன்றையத்தினமாத்தி
ரம்இருங்கோளென்றுசொல்ல, அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் த
ர்ம்மநந்தனரைப்பார்த்து ஓய்தர்ம்மசுசீபா! நாம்இங்கேயிராமல் எங்
கேபோகிறோம் பத்துநாள்பொறுத்து மறுபடியும்வருகிறோம் இன்
றையத்தினம் நல்லநாளாயிருக்கின்றபடியினால் எங்களுக்குச் சந்தோ
ஷகரமாய்ச் செலவுகொடுத்தனுப்புமென்று பிரியவசனமாகச் சொல்
ல. அதுகேட்டு தர்ம்மநந்தனரும்அப்படியேநல்லதென்றுசம்மதித்து
ஸ்ரீகிருஷ்ணபகவான் பலபத்திரராமர்முதலானவர்களுக்கெல்லாம்போ
ஜனகிர்த்தியங்களைச் சம்பிரமமாய்நடப்பித்து தமதுதம்பியாகிய அர்
ச்சுனனுடையகையினால் அவர்களையெல்லாம் நல்லவஸ்திரா பரணங்
களினால் அலங்காரம்பண்ணுவித்து ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலானவர்
களுக்கும் தேவகிதேவியார்முதலான ஸ்திரீஜனங்களுக்கும்அநேகமா
னஉபசாரணைகள்சொல்லி அவர்களையெல்லாம்பிரியவசனங்களினால்சந்
தோஷிப்படுத்திவைத்து நீங்களெல்லாம்சுகஜீவியாய் துவாரகாபுரிக்கு
ப்போய்வாருங்கோளென்றுசெலவுகொடுத்து தர்ம்மநந்தனர் முதலா
னசகலமானபேர்களும் ஆஸ்தானத்தைவிட்டு எழுந்திருந்தார்கள். அ
ப்போது ஸ்ரீகிருஷ்ணபகவானும் தர்ம்மநந்தனர்முதலானபாண்டவர்
களிடத்திலும்குந்திதேவி, காந்தாரி, துரௌபதாதேவிமுதலானஸ்திரீ
ஜனங்களிடத்திலும் நாங்கள் துவாரகைக்குப்போய் வருகிறோமென்று
பிரியவசனமாகச்சொல்லிசெலவுபெற்றுக்கொண்டுதர்ம்மநந்தனர்மு
தலானசகலமானபேர்களும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திமுதலானவர்களுக்கு

வழிவிடும்படிபின்னேதொடர்ந்துநடக்கஸ்ரீகிருஷ்ணதேவரும்பலபத்
திராமர்சாத்தகி கிருதவர்மமன் முதலானயாதவவீரர்களுடனே மகா
சந்தோஷமாய் ரதத்திலேறிக்கொண்டுநடந்தார்- அப்போது தேவகி
தேவிருக்குமணிதேவி சத்தியபாமைமுதலானஸ்திரீஜனங்களெல்லாரு
ம்குந்திதேவி, காந்தாரி, துரௌபதாதேவி, சுபத்திராதேவிமுதலான
ஸ்திரீஜனங்களிடத்தில் செலவுவாங்கிக்கொண்டுகனகதண்டிகையி லும்
முத்துப்பல்லக்கிலும் ஏறிக்கொண்டு அந்தஸ்ரீகிருஷ்ணபகவான் முத
லான யாதவவீரர்களுக்குப்பின்னாகநடந்தார்கள்இப்படி ஸ்ரீகிருஷ்ண
பகவானும பலராமசமேதராய் யாதவவீரர்களுடனேகூட அஸ்தினபு
ரத்தைவிட்டுப்புறப்பட்டு மகாசம்பிரமத்துடனே தர்ம்மபுத்திரர்மு
தலானவர்களும பின்னே நடந்துவர ஒருகுரோசனையாகியஇரண்டுநா
ழிகைவழிதூரம்நடந்து அப்பால் ஒருவர்க்கொருவர் வந்தனை நமஸ்கா
ரங்களை ஆகரித்துக்கொண்டு இந்தமட்டும நீங்கள்நில்லுங்கோள் நீங்க
ள்வரவேண்டாம நாங்கள்போய்வருகிறோமென்று தர்மமநந்தனர் மு
தலானவர்களிடத்திற்செலவுபெற்றுக்கொண்டுநடந்து துவாரகாபுரிக்
குப்போய்ச்சேர்ந்து அவிடத்தில்ஸ்ரீகிருஷ்ணதேவருமபலபத்திரராமரு
மவேடிக்கையாய் தர்மமநந்தனர்செய்த யாகவிநோதங்களை ஒருவர்க்
கொருவர் பேசிக்கொண்டு சுகஜீவியாயிருந்தார்கள் அப்பால் அவிடத்
தில்தர்மமபுத்திரரானவர் தமபிமார்கள் பிள்ளைகள்பேரமார் மந்திரிபி
ரதானிகள் சாமந்திரிகள்முதலான சகலசேனைகளுடனும போய் ஸ்ரீகி
ருஷ்ணபகவான் முதலானவர்களைப்பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டு
மறுபடியும அஸ்தினபுரத்திற்குவந்து கொலுமண்டபத்தில்ரத்நசிம
மாதனத்தின்பேரில் உள்க்கார்ந்து தமபிமார்கள்முதலானசகலசேனை
களுடபுடைசூழ்ந்திருக்கத்தக்கதாகக்கொலுவிருந்துதர்ம்மமே ஜெய
மென்றுசதாகாலமும்தர்ம்மத்தையேசிந்தித்துக்கொண்டுதமமுடைய
பட்டணத்தில் மாதமும்மாரிபொழிந்துபயிர்பச்சைகள்நன்றாய்விளை
ந்து பலதானியங்களும அபிவிர்த்தியாய் பட்டணத்திலுண்டானசகல
குடிகளுஞ்செழித்து எந்தக்காலத்திலும துக்கமில்லாமல்நித்திய மங்
களசுகம்பாஜனங்களுடனேவாழ்ந்து. தர்ம்மநெறிதப்பாமல்நடந்துவ
ரும்படிசெய்வித்துமாதா பிதாக்களைப்போல் சகலசஜனங் களையும்
போஷித்துக்கொண்டுதம்முடையபட்டணத்தில்கலிபுருஷன்தொடரா
மல்தானதர்ம்மங்களையும்நடப்பித்துவீமார்ச்சுனர்முதலானதம்பிமா
ர்களுடனேசுகஜீவியாயிருந்து அஸ்தினபுரத்தைப்பரிபாலனம் பண்
ணிக்கொண்டிருந்தார்கேட்டீரோஜெனமேஜெயமகாராஜாவே! பிர்ம்
மக்ஷத்திரியவைசிய • சூத்திரர்களென்கிறநாலுவகைச்சாதியாகியஎந்த
ச்சாதியிற்பிறந்தவர்களானாலும் மிகுந்தஇழிவான பஞ்சமகுலத்தில்
பிறந்தவர்களானாலும் மகாபஞ்சபாதகங்களைச் செய்தவர்களானாலும்
ஒருதிரம்ஸ்ரீகிருஷ்ணாவென்றுதியானம்பண்ணிவேதசாரமான இந்தஅ
ஸ்வமேதபர்வமாகிய திவ்வியசரித்திரத்தில் ஒருசுலோகமாகிலும் ஒரு

சொல்லாகிலும்,ஒருஅக்ஷரமாகிலும்பயபக்திவிசுவாசத்துடனிருந்து எழுதினாலும்படித்தாலும் ஒரிவர்படிக்கக்கேட்டாலும் அவர்கள்முற்பிறப்பிற்செய்துள்ள மகாபாதகங்களெல்லாம்நீங்கிப்பரிசுத்தர்களாய்க்காசியில் கங்காநதியில் லக்ஷம்பிராமணர்களுக்கு அன்னதானம்பண்ணினபலனையும்நாலுபடிபால்கறக்கின்றலக்ஷங்கோதானம்பண்ணினபலனையும். கோடிகெஜதானம்பண்ணினபலனையும்மூன்று கோடி அஸ்வதானம் பண்ணினபலனையும்கோடிபிராமணர்களுக்குப்பூமிதானம்பண்ணினபலனையும்பெற்று ஸ்ரீமன்மகாலட்சுமிநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதாரவிந்தங்களுக்கிசைந்த அந்தரங்கபக்தியுடையவர்களாய் இகத்தில் சகலசுபசந்தோஷ சவுக்கியங்களும் புத்திரமித்திரகளத்திராதிகளும் தனகனகவஸ்துவாகனாதிகளும் ஆயுராரோக்கியங்களும் உண்டாயிருந்து பரத்திலும்தேவதாசம்போக சவுக்கியங்களை அனுபவித்துத் தீர்ந்து முடிவில் சாலோக சாமீப சாரூபமென்கின்ற மூன்றுபதவிகளுக்குமேலான நாலாம் பதவியாகிய சாயுஜ்யபதவியைப்பெறுவார்கள் இதற்குச் சந்தேகமில்லை, கேட்டீரோஜெனமேஜெயமகாராஜாவேயென்று ஜெயமுனீந்திரர்சொல்லியருளினார். அந்ததிவ்வியசரித்திரத்தை நாமும் உங்களுக்குக் கிருபையினாற் சொன்னோமென்று சூதபுராணிகர் சௌனகாதிமகாரிஷிகளுக்குச் சொல்லியருளினார் என்றவாறு.

அஸ்வமேதபர்வம

முற்றிற்று.

☞ முன்பதிப்பித்த பிரதியில் கதைகள் யேற்படுத்தாமையா[ல்] இப்பதிப்பில் கதைகளேற்படுத்தி அச்சிற்பதிப்பித்திருக்கின்றது.


தஞ்சாவூரு மஹாராஜா